மைய-மாநில அரசு உறவுகள் குறித்து
தமிழ்நாடு அரசின் கருத்துக்கள்
மற்றும்
நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா
ஆணைக்குழுவின்
வினாப்பட்டியலுக்கான
பதில்கள்

1985

மைய-மாநில அரசு உறவுகள் குறித்து
தமிழ்நாடு அரசின் கருத்துக்கள்

மற்றும்

நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியா
ஆணைக் குழுவின்

வினாப் பட்டியலுக்கான
பதில்கள்

©
தமிழ்நாடு அரசு
1985

அரசு அச்சகம், சென்னை-600 079

பொருளடக்கம்

		பக்கங்கள்
முதனிலை அறிக்கை—தொடக்கம்		1—10
பகுதி		
I	முன்னுரை	11—14
II	சட்டமியற்றுவது தொடர்பாக மத்திய—மாநில அரசுகளுக் கிடையேயுள்ள தொடர்புகள்	15—33
III	ஆளுநர் பணி	34—45
IV	நிருவாக உறவுகள்	46—54
V	நிதி தொடர்புகள்	55—102
VI	பொருளாதார—சமூகத் திட்டப் பணிகள்	103—112
VII	பல்வகை	113—134
பரிந்துரையின் சுருக்கம்		137—154
துணை வினாப் பட்டிகளும் பதில்களும்		155—173

முதனிலை அறிக்கை.

தொடக்கம்.

தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்கள் நிதிவாயில்களைப் பகிர்ந்தளிப்பதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், சட்டம், நிதி, ஏனைய துறைகளில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை பெறவும், உண்மையான கூட்டாட்சியை எய்தும் நோக்கத்துடனும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்து, திருத்த வேண்டியதன் அவசியம் குறித்து சட்டமன்றப் பேரவையிலும், பிற இடங்களிலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். மத்திய—மாநில உறவு தொடர்பாக, குறிப்பாக, சட்டம், நிருவாகம், நிதித் துறைகளில் மாநிலங்களுக்கு மேலும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டியதற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். எனவே, நீதிபதி சர்க்காரியாவைத் தலைவராகக் கொண்டு, மத்திய—மாநில உறவுகள் தொடர்பாக 1983 ஜூனில் மத்திய அரசால் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டதைத் தமிழக அரசு வரவேற்றுள்ளது.

2. கூட்டாட்சிக் கொள்கை என்பது, பொது வட்டார அரசுகள் ஒவ்வொன்றும் அதன் அமைப்புக்குள்ளேயே ஒருங்கிணைந்தும், தனித் தனியாகவும் இயங்கும் வகையில் அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ளும் முறையாகும் என்று K. C. வியர் விளக்கியுள்ளார். (கூட்டரசு—நான்காம் பதிப்பு—K. C. வியர்).

3. அமெரிக்காவில், மாநிலங்கள் அரசியலமைப்புக்களை தங்களிடமே வைத்துக் கொண்டுள்ளன. மாநிலத்தின் அதிகாரங்கள், ஓரளவிற்கே உள்ளன. சில அதிகாரங்கள், மாநிலங்களுக்கு மறுக்கப்படுகின்றன அல்லது கூட்டமைப்பு அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகாரங்கள் கொடுக்கப் பெற்றுள்ள ஓர் அரசே கூட்டமைப்பு அரசாகும். ஆஸ்திரேலியாவிலும் இதே நிலைதான், அதாவது எஞ்சியுள்ள அதிகாரம், அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், மாநிலங்களிடம் நிலைபெறுகிறது. சுவிட்ஜர்லாந்து அரசியலமைப்பில், அரசின் அதிகாரங்கள், அமெரிக்க அரசியலமைப்பைப் போன்று தேசிய, மண்டல (மாகாண) அரசுகளுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டரசிடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் மண்டல, மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. எனினும், மாகாணங்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் அவைகளைப் பொறுத்தவரையில் அவை அதனதன் அளவில் அதிக அதிகாரம் பெற்றுள்ளன. அவற்றிற்குப் பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :—(a) அவை குடியரசு அமைப்புகளைப் பெற்றிருக்க வேண்டும். (b) அவற்றின் அரசியலமைப்புகள், கூட்டாட்சி அமைப்பிற்கு முரணாக இருக்கக் கூடாது. (c) அவற்றின் அரசியலமைப்புகள், மக்கள் வாக்குகளைப் பெறுவதன் மூலம் மாற்ற அல்லது திருத்தத் தக்கனவாயிருக்க வேண்டும். ஸ்விட்சர்லாந்தில் சுயாட்சி உரிமை கருத்து இன்னும் நிலவுகிறது. எஞ்சியுள்ள அதிகாரங்களை மாகாணங்கள் இன்னமும் பெற்றுள்ளன.

4. இந்தியாவில் அரசியல் நிர்ணய சபையில், 13—12—1946 அன்று பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்த செயல் நோக்கத் தீர்மானத்தில், மாகாணங்கள், எஞ்சியுள்ள அதிகாரங்களுடன், சுயாட்சி உரிமை பெற்றவைகளாகத் திகழ வேண்டுமெனவும், மத்திய அரசிடம் நிலை பெற்றுள்ள அல்லது மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், அலுவல்கள் அல்லது மத்திய அரசிடம் இயல்பாக அல்லது குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ள அத்தகைய அதிகாரங்கள், அலுவல்கள் நீங்கலாக அரசு, நிருவாக அதிகாரங்கள், அலுவல்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது. பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்த நோக்கம் குறித்த தீர்மானம் வருமாறு :—

"(1) இந்தியா பூரண அதிகாரம் பெற்ற தனித்த குடியரசாக விளங்கவும் அதன் வருங்கால நிருவாகத்திற்கு அரசியலமைப்பு ஒன்றை வகுக்க வேண்டி தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்றும் அரசியல் நிர்ணய சபை உறுதியாக அறிவிக்கிறது என்றும்;

(2) அதில், தற்போது பிரிட்டிஷ் இந்தியா, அடங்கிய எல்லாப் பகுதிகள், தற்போது இந்திய மாநிலங்களாக அமைந்துள்ள எல்லைப் பகுதிகள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு வெளியேயுள்ள இந்தியாவின் பிற பகுதிகள், தனி குடியரசு நாடாகிய இந்தியாவுடன் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ள பிற மாநிலங்கள் அல்லது பகுதிகள் அனைத்தும் இந்திய யூனியனில் அங்கங்களாக விளங்கும் என்றும் ;

(3) மேற்கூறிய பகுதிகள், அவற்றின் தற்போதுள்ள எல்லைகளையோ அல்லது அரசியல் நிர்ணயசபை தீர்மானிக்கக் கூடியவாறான

எல்லைகளையோ கொண்டிருக்கும் என்பதோடு, அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்க அதிகாரங்களுடன் தன்னாட்சி உரிமை பெற்ற பகுதிகள் என்ற நிலையைப் பெற்று வைத்திருக்கும்; மத்திய அரசிடம் நிலைபெற்றுள்ள அல்லது மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அல்லது மத்திய அரசிடம் இயல்பாக நிலைபெற்றுள்ள அல்லது குறிப்பாகச் சாட்டப்படுகிற அளவில் நிலைபெற்றுள்ள அதிகாரங்கள், அலுவல்கள் ஆகியவற்றைத் தவிர பிற அதிகாரங்கள் அலுவல்கள் அனைத்தையும் கொண்டிருக்கும், என்றும்,

(4) தனியுரிமையாட்சியுடைய சுதந்திர இந்தியா அதனுடன் இணைத்து உருவாகப்பட்ட பகுதிகள் அரசின் அங்கங்கள் ஆகியவற்றின் அதிகாரங்களும் மக்களிடமிருந்து பெறப்படுகின்றன என்றும்;

(5) இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி கிடைப்பதற்கும், சட்டத்தின் முன் எல்லோருக்கும் சம அந்தஸ்தும், சம வாய்ப்பும் கிடைக்கச் செய்வதற்கும், சட்டத்திற்கும், பொது நீதிமுறைமைக்கும் உட்பட்டு பேச்சுரிமை, விரும்பும் சமயக் கொள்கையைக் கடைப் பிடிப்பதற்கும், வழிபடுவதற்கும், உரிய உரிமை, விரும்பும் வாழ்க்கைத் தொழிலை மேற்கொள்ளவும், உரிய உரிமை ஆகியவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதோடு, பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது என்றும்

(6) சிறுபான்மையினர், பின்தங்கிய வகுப்பினர், பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்குப் போதிய அளவு பாதுகாப்புக்கு வகை செய்யப்பட்டுள்ளது ;

(7) இதன் மூலம், நீதிக்கும், நாகரீக நாடுகளின் சட்டங்களுக்கும், இணங்க இந்திய குடியரசு ஆட்சிப் பகுதியில் ஒருமைப்பாட்டையும், நிலம், கடல், விண்வெளி ஆகியவற்றில் அதன் தனியுரிமை ஆட்சியின் உரிமைகளையும் பேணிப் பராமரித்துப் பாதுகாக்கப்படும் என்றும் ;

(8) இப் பழம்பெரும் நாடு, உலக அரங்கில் தனக்குரிய, சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது என்பதோடு, உலக அமைதிக்கும், மனித குல மேம்பாட்டிற்கும் தன்னாலியன்ற முழு ஒத்துழைப்பையும் மனமுவந்து நல்கி வருகிறது என்றும் தீர்மானம் கொண்டுவருகிறேன்.

5. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசிடம் அதிகாரங்களைக் குவித்துவிட்டது என்றும், மாநில அரசுகளை மத்திய அரசுக்கு உட்படுத்தும் போக்கு அதில் காணப்படுகிறது என்றும், அரசியல் நிர்ணய சபையில் 9—11 1948ஆம் நாளன்று உரையாற்றிய திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி தன் உரையில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய உரையிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் பகுதியை இது தொடர்பாக இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.

"வரைவு அரசியலமைப்புச் சட்டம் கூட்டரசு அமைப்பு முறையைக் கொண்டது என்று டாக்டர் அம்பேத்கார் கூறினார். இந்த அரசியலமைப்புச் சட்டம், மாநில அரசுகளுக்கு அதிகாரங்களை அளிப்பதைவிட மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்களை அளிப்பதாக உள்ளது என்பதை, இந்த அரசியலமைப்புச் சட்டத்தை கவனமாகப் படிக்கும் எவரும் காணலாம். சதவீதத்தில் என்னுடைய கருத்தைத் தெரிவிப்பதாயின் இந்த அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசுக்கு 75 சதவீத அதிகாரங்களையும், மாநில அரசுகளுக்கு 25 சதவீத அதிகாரங்களையும் அளிப்பதாக உள்ளது என்று கூறுவேன். மத்திய அரசு மிகவும் வலிமையுடையதாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி மதிப்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இவ்வாறு அதிக அளவிற்கு வலியுறுத்திக் கூற வேண்டிய தேவை ஏதும் உள்ளதென்று நான் கருதவில்லை. ஏனெனில், மத்திய அரசு வலிமை மிக்கதாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படையானதாகும். அதிலும் குறிப்பாக இந்நாட்டில் நிலவும் தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்த்தால் மத்திய அரசு வலிமை மிக்கதாக இருக்க வேண்டும் என்பது ஐயத்திற்கிடமில்லாததாகும். ஆனால், அளவுக்கு அதிகமாக மத்திய அரசை வலிமை மிக்கதாக ஆக்குகிறார்கள் என்று நான் அஞ்சுகிறேன். மத்திய அரசு வலிமை மிக்கதாக இருக்க வேண்டும் என்பதற்காக, மாநில அரசுகள் வலிமை குன்றியவையாக இருக்க வேண்டும் என்று பொருளல்ல. மத்திய அரசிடம் அதிக அதிகாரங்களைக் குவித்து, மாநில அரசுகளை மத்திய அரசுக்கு உட்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது. அவ்விதப் போக்கை நான் இதில் காண்கிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அரசியல் சட்டத்தை நடைமுறையில் செயல்படுத்தும்போது அதிக அதிகாரங்களை மத்திய அரசுக்கு அளிக்கும் நிலை, பிணக்குகள் ஏற்பட ஆதாரமாக அமையும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு சங்கிலித் தொடரின் வலிமை, வலிமை குன்றிய பகுதியைப் பொறுத்துத்தான் அமைந்துள்ளது என்பதையும், மாநில அரசுகளை போட்டி அரசு அமைப்புகளாகக் கருதக் கூடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். மத்திய அரசு, தன்

சக்திக்கு மேற்பட்ட அதிகாரங்களை வைத்துக் கொள்ள முயல்கிறது. மாநில அரசுகளின் அதிகாரங்களைக்கூட முதல் ஐந்து ஆண்டுகளுக்கு எடுத்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதைத் தற்காலிக விதித்துறையிலிருந்து எனக்குத் தோன்றுகிறது. பேராசிரியர் என். ஜி. ரங்கா (சென்னை—பொது) 9-11-1948 அன்று அரசியல் நிர்ணய சபையில் ஆற்றிய உரையில், வலுவான மத்திய அரசு என்ற முழக்கத்தில் தனக்கு சம்மதம் இல்லை என்றும், அது தேவையற்றது என்றும் அந்த நோக்கத்தில் செயல்படுவது உள்ளபடியே அபாயகரமானது என்றும், நோக்கங்கள் குறித்த தீர்மானத்தில் மாகாணங்களுக்கு எஞ்சிய அதிகாரங்கள் (Residual Powers) இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டதாகவும் குறிப்பிட்டார். அவர் ஆற்றிய உரையின் சம்பந்தப்பட்டப் பகுதி வருமாறு :

" மகாத்மா காந்தி அவர்கள் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று முப்பதாண்டுகளுக்கு மேலாகக் கூறி வருகிறார். காங்கிரஸ் காரர்கள் என்ற முறையில் அதிகாரங்களை பரவலாக்க வேண்டிய பொறுப்பு நமக்கும் உள்ளது. உள்ளபடியே அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்து இன்று உலகம் முழுவதும் நிலவி வருகிறது. அதற்கு மாறாக அதிகாரங்களை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புவோமானால், அது சோவியத் மயமாக்கல் (Sovietisation) மற்றும் சர்வாதிகார அமைப்பு முறையில்தான் சென்று முடியும். மக்களாட்சியாக அமையாது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். எனவே, வலுவான மத்திய அரசு என்ற முழக்கத்தில் எனக்கு சம்மதம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நவீன தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிக் கேற்ப மத்திய அரசு வலிமை வாய்ந்ததாக இருப்பதோடன்றி மேலும் மேலும் அதன் வலிமை பெருகத்தான் செய்யும். எனவே, மத்திய அரசை சிறப்பாக வலுவானதாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்கொண்டும் செயல்படுவது தேவையற்றது ; உண்மையில், அபாயகரமானதும்கூட. தொடக்கக் காலத்தில் நலம் நிறைவேற்றிய நோக்கங்கள் குறித்த தீர்மானத்தில் மாகாணங்கள் எஞ்சிய அதிகாரங்கள் படைத்தனவாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளோம். ஆனால், இரண்டாண்டு காலத்திற்குள்ளாக பொதுமக்களின் கருத்து அதற்கு எதிர்மாறாக மாறி மத்திய அரசிடம் அதிகாரங்களைக் குவித்து அதனை மிகவும் வலுப்படுத்த வேண்டும் என்ற கருத்து நிலவுவது போல அரசியலமைப்புச் சட்ட வரைவாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பொதுப் பட்டியலில் இத்தனைப் பொருள்கள் இருக்க வேண்டும் என்று நிச்சயமாக நான் கருதவில்லை. அன்றொருநாள் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்று நீங்கள் பொதுப் பட்டியலுக்குரியது என்று கருதுகின்ற ஒரு பொருள் இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் முற்றிலுமாக கூட்டாட்சிக்குரியப் பொருளாக மாறிவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே, எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசுக்கு விட நான் தயாராக இருந்தாலும், இந்த வரைவு அரசியலமைப்புச் சட்டம் விழைவதுபோல மாகாணங்களில் வலுவிழக்கச் செய்ய நிச்சயமாக நான் விரும்பவில்லை.

மத்திய அரசிடம் அளவுக்கு அதிகமாக அதிகாரங்களைக் குவித்து அதனை வலுப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய மிக முக்கியமான விளைவுகளில் ஒன்று அதிகாரங்களை மத்திய அரசிடம் கொடுப்பதல்ல. ஆனால், மத்திய செயலகத்திடம் கொடுப்பதுதான். மத்திய அரசின் தலைமைச் செயலகத்தில் உள்ள ஒரு கடைநிலை ஊழியர் அல்லது தபேதாரிலிருந்து அங்குள்ள செயலாளர் வரையில் ஒவ்வொருவருமே, தாம்தான் ஒரு மாகாணத்தின் முதலமைச்சரை விட மிக முக்கியமான நபர் என்றும் கருதிக் கொள்வர். மாகாணங்களின் முதல் அமைச்சர்கள் மத்திய அரசின் கவனத்தை ஈர்த்திட ஒவ்வொரு அலுவலமாக ஏறி இறங்க வேண்டிய நிலை ஏற்படும், தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு செயலாளர்களும் ஆற்றுகின்றப் பணிகளை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது ஒரு அமைச்சருக்கு எவ்வளவு கடினம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இத்தகைய சூழ்நிலைகளில், இந்த மாகாண அரசுகளை மத்திய அரசுக்கு அடிமைகளாக்கி மத்திய அரசின் தலைமைச் செயலகம் மற்றும் மத்திய அதிகார வர்க்கத்தினரின் தயவில் வைத்திருப்பது மிகவும் அபாயகரமானது."

திரு. எம். திருமலராவ் (சென்னை—பொது) 9-11-1948 அன்று அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றுகையில் மத்திய அரசு வலுவானதாக இருக்க வேண்டும் என்று கூறுவதனால் மாகாணங்கள் வலுவற்றதாய் இருக்க வேண்டும் என்ற பொருள் அல்ல என்றும், மாகாணங்கள் தங்களுக்குள் பல்வேறு கடமைகள நிறைவேற்ற இடமும் வகையில், அவையும் மத்திய அரசுக்குச் சமமாக வலுவானவையாக இருக்க வேண்டும் என்றும், மாகாணங்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கும், மத்திய அரசை வலுப்படுத்துவதற்கும், அவற்றிற்குப் போதிய நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் அவரது உரையின் சம்பந்தப்பட்டப் பகுதி வருமாறு :—

" நமக்கு வலுவானதொரு மத்திய அரசு வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் மத்திய அரசு வலுவானதாக அமைந்தால்

மாகாணங்கள் வலுவற்றிருக்க வேண்டும் என்று பொருளல்ல. மாகாணங்கள் தங்களுக்குள்ள பல்வேறு கடமைகளை ஆற்றவும் திட்டங்கள் தீட்டி நிறைவேற்றவும், அவையும் சம அளவில் வலுவானதாக இருக்க வேண்டியது அவசியம். மாகாணங்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கும், மத்திய அரசை வலுப்படுத்துவதற்கும் அவற்றிற்குப் போதிய நிதி ஆதாரங்கள் இருக்க வேண்டும்.

திரு. மெஹபூப் அலி பேக் சாஹிப் பாதூர் (சென்னை—முஸ்லீம்) 1948 நவம்பர் 9ஆம் நாளன்று அரசியல் நிர்ணய சபையில், ஆற்றிய தன் உரையில், கூட்டாட்சி முறை எளிதில் தனி அரசு அமைப்பாக மாற்றப்படலாம் என்பதை வரைவு அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள விதித்துறைகள் தெளிவாகக் காட்டுகின்றன என்று சுட்டிக் காட்டியுள்ளார். அவரது உரையின் தொடர்புடைய பகுதி கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

" அரசியலமைப்பைப் பொறுத்தவரை, வரைவு அரசியலமைப்பு சட்டத்தில் அடங்கியுள்ள அமைப்பை நான் ஒப்புக் கொள்ள முடியவில்லை. மத்திய அரசு வலுவுள்ளதாக இருக்க வேண்டும் என்று மக்கள் நினைப்பதாக தோன்றுகிறது ; மத்திய அரசு வலுவுள்ளதாக இருந்தாலன்றி, அது வலுவுள்ளதாக ஆவதற்கு மாகாணங்கள்—எப்போதும் தடையாக இருக்கும் என்பது தவறான கருத்தாகும். மாகாணங்கள் தன்னாட்சி உரிமையுடையதாக ஆக்கப்பட்டால், மத்திய அரசு வலுவற்றதாக ஆகிவிடும் என்று அர்த்தமாகாது. நாம் இங்கு என்ன காண்கிறோம் ? மாகாணங்கள் என்பவை பெருமை மிக்க மாவட்டக் குழுக்களே அன்றி வேறு அல்ல என்பதே என்னுடைய கருத்தாகும். 275ஆவது பிரிவைக் காண்க. நெருக்கடியின்போது அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசால் பரித்துக் கொள்ளப்படலாம். 226, 227, 229 பிரிவுகளைக் காண்க. எல்லா பொருட்கள் பற்றியும் மாகாணங்களுக்காக மத்திய அரசு சட்டம் இயற்றலாம். மத்திய அரசுப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றைக் காண்க. கூட்டாட்சி முறையை எடுத்துவிட்டு தனியொரு ஆட்சி முறையைக் கொண்டுவர விரும்பும் மத்திய அரசுக்கு அது எளிதாக முடியும் என்பதையே இவை அனைத்தும் காட்டுகின்றன. இந்த முறையிலான அரசு சர்வாதிகார அரசாக மாறும் அபாயம் தற்போது உள்ளது. வரைவு அரசியலமைப்பில் கண்டுள்ள அரசியலமைப்பு முறைக்கு இது அபாயத்தை விளைவிக்கும்.

திரு. கே. சந்தானம் (சென்னை—பொது) 1948 நவம்பர் 6ஆம் நாளன்று ஆற்றிய உரையில், பொதுப் பட்டியல் வேண்டுமா அல்லது மாற்று ஏற்பாடாக பொதுப் பட்டியல் குறைந்த அளவுக்கு வரையறுக்கப்பட வேண்டுமா என அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் அல்லது பொதுப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவரை மத்திய, மாகாண அரசுகளின் அதிகார வரம்பை அவர்கள் வரையறுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அவரது உரையின் பின்வரும் பகுதி இங்கே தொடர்புடையதாக இருக்கும்:—

" டாக்டர் அம்பேத்கார் இரட்டைக் கொள்கையைப் பற்றி பேசினார். நம்மிடம் இப்போது மூன்று பட்டியல்கள் உள்ளன. கூட்டாட்சி பட்டியல், மாகாணப் பட்டியல், பொதுப் பட்டியல், வரைவு தயாரிக்கும் குழு பொதுப் பட்டியலின் வரம்பை விரிவுபடுத்தியுள்ளது. பொதுப்பட்டியல் பற்றி நமக்கு அனுபவம் உண்டு. மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அது அகற்றி விடும். காலக்கிரமத்தில் கூட்டாட்சி அமைப்பில் கூட்டாட்சி பட்டியல் வளர்ந்து கொண்டே வருகிறது; பொதுப் பட்டியல் மறைந்து கொண்டே வருகிறது என்பது தவிர்க்க முடியாத அரசியல் போக்காக ஆகிவிடுகிறது ; ஏனெனில், குறிப்பிட்ட ஒரு சட்டமியற்றும் துறையில் மத்திய சட்டமன்றம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு விட்டால், மாகாண சட்டமன்றத்தின் அதிகார வரம்பு போய் விடுகிறது. எனவே, 10 அல்லது 15 ஆண்டுக் காலத்தில் பொதுப் பட்டியல் முழுவதும் கூட்டாட்சி பட்டியலுக்கு மாற்றப்பட்டு விடும் என நாம் கருதலாம். இதைத்தான் நாம் விரும்புகிறோமா? இது விரும்பத்தக்கதுதானா ? என்பதை நாம் தெரிவிக்க வேண்டும். அதை நாம் விரும்ப வில்லையானால், பொதுப் பட்டியல் குறைந்த அளவாக வரையறுக்கப்பட வேண்டும் அல்லது அப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட விஷயங்களைப் பொறுத்தவரை மத்திய மாகாண அரசுகளின் அதிகார வரம்பை வரையறுக்குமாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். "

அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள கூட்டாட்சி அமைப்பு 1963–க்கு முன் கடந்த 13 ஆண்டுகளாக மாநில அரசுகளின் மனதில் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும், மாநில அரசுகள் கையேந்தும் அமைப்புகளாக ஆகி வருகின்றன என்றும் முதலமைச்சர் டாக்டர் அண்ணா அவர்கள் 1963-ல் தெரிவித்தார். இதைப் பொறுத்தவரை பின்வரும் பகுதிகள் பொருத்தமுடையதாக இருக்கும் :—

6. பேரறிஞர் டாக்டர் அண்ணா அவர்கள் 1963, டிசம்பர் திங்களில் இராஜ்ய சபையில் ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறினார் :—

" நமது அரசமைப்பு கூட்டாட்சி அமைப்பாகும். அதனால்தான், அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள், கூட்டாட்சி அமைப்பை விரும்பினரேயல்லாமல் தனி அரசை விரும்பவில்லை. ஏனெனில், அரசியல் மேதைகள்

பலர், இந்தியா ஒரு பரந்த நாடு என்றும் அது ஒரு உபகண்டம் என்றும் பல்வேறு மக்கள் பழக்க வழக்கங்கள் மாறுபட்டவர்கள், வரலாற்றால் வேறுபட்டவர்கள் இங்கு ஒன்றாக வாழ்கின்றனர் என்றும் எனவே, தன்னாட்சி அமைப்பு கொண்ட அரசியல் அமைப்பை வகுக்க முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளனர். இந்த 13 ஆண்டுகளாக இயங்கிவரும் கூட்டாட்சிமுறை, மாநிலங்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்ற என்னுடைய புகாரை பி.எஸ்.பி. உறுப்பினர் திரு. குருபாத சுவாமியும ஏனையோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் அமைப்புகளாக ஆகி வருகின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். மாநிலங்கள் மிகவும் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன என்றும் அவற்றுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புவது இயற்கையே என்றும், அவர்கள் கருதுகின்றனர். நான் இங்கு எடுத்துக் கூற வேண்டியது என்னவெனில், மாநிலங்கள் மேலும் மேலும் அதிருப்தியடைந்து வருகின்றன என்பதும், அரசியலமைப்புச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்று மத்திய அரசு சிந்திக்க வேண்டியது அவசியமாகும் என்பதும் அவற்றின் கோரிக்கையாகும். அனைவரும் போற்றும் அரசியல் மேதையே என்னுடைய இக் கருத்துக்கு ஆதரவளித்துள்ளார். அமைச்சரவையில் இடம் பெறவோ, அதிலிருந்து விலகவோ முழுத் தகுதி பெற்றிருந்த மாண்புமிகு டி. டி. கிருஷ்ண மாச்சாரியை நான் குறிப்பிடுகிறேன். அரும்பெரும் தலைவரான பெரோஸ் காந்தியின் நினைவு நாளின்போது புதுடில்லியிலுள்ள ஒரு நிறுவனத்தின் 1962 டிசம்பர் 8ஆம் நாளன்று ஆற்றிய உரையில், அரசியலமைப்புச் சட்டத்தைப் பத்தாண்டுகளுக்கொருமுறை மறுபரிசீலனை செய்வதற்கான விதித்துறை ஒன்றை சேர்ப்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள் தவறி விட்டனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், இது மட்டுமல்லாமல், கூட்டரசு என்பதை உண்மையான கூட்டரசாகச் செயல்பட வேண்டுமெனில் பொது மக்களின் கருத்தும் ஆணித்தரமாக நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.''

''அவரது இயலாமையைக் கண்டு நான் வருந்துகிறேன். ஆனால் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென நான் வாதாடுகிறேன்; அம் மொழியின்பால் நான் கொண்டுள்ள பற்றின் காரணமாக நான் இதைச் சொல்லவில்லை. என் தாய்மொழியைக் காட்டிலும், ஆங்கில மொழிக்கு உயரிடத்தைத் தர வேண்டும் என்பதற்காக நான் இப்படிப் பேசவில்லை என்பதயும் நான் அவருக்குச் சொல்ல விழைகிறேன். ஆங்கில மொழி, அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் சமமாகப் பகிர்ந்தளிப்பதால் அம் மொழி மிகவும் சிறந்த தொடர் மொழியாக உள்ளது. இந்தியா பொது மொழி ஒன்றைக் கொள்ள வேண்டும் எனப் பலர் கூறுகின்றனர். இந்த அடிப்படை ஏற்றுக் கொள்ளப்படின், இந்திய மொழிகளில் ஒன்று மட்டுமே பொது மொழியாக இருக்க முடியும். இதில் எவருக்கும் ஐயமில்லை. இந்தியா, தன்னாட்சி பெற்ற நாடாகத் திகழுமாயின், இந்த வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். இந்தியா ஒரு கூட்டாட்சி அமைப்புடைய நாடாகும். இந்தியச் சமுதாயம் பல வகுப்பினரைக் கொண்டது. நம்முடைய அரசியல் அமைப்பு ஒரு கூட்டமைப்பாகும். பல வகுப்பினரையும், கூட்டாட்சி அமைப்பையும் கொண்ட நம் நாட்டில், ஒரு தனி மொழியை பொது மொழியாகக் கொள்ள எண்ணுவது, நியாயமற்ற நிலையை உருவாக்குவதோடு, சமூகத்தின் ஒரு சில பிரிவினருக்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும் என்று நான் கருதுகிறேன்.''

''மக்கள் தொகையில் 42 சதவீதத்தினர் இந்தி மொழியைப் பேசுவதால், இம் மொழியை ஆட்சி மொழியாகக் கொள்ள ஏற்றது என்று கூறப்பட்டது பரந்து விரிந்த இந்த இந்திய நாட்டில் இந்தி மொழி பேசும் இந்த 42 சதவீத மக்கள் இந்தியா முழுவதும் பரந்து காணப்படின் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் முறையானதாகவும் இருக்கும். ஆனால், இந்தி மொழி பேசும் இந்த 42 சதவீத மக்கள், ஒரே இடத்தில் அடுத்தடுத்துள்ள ஒரே பகுதியில் வாழ்கின்றனர். அவர்கள் இங்குமங்குமாக வெவ்வேறு இடங்களில் இல்லை. எனவே, இந்தி பேசும் 42 சதவீத மக்களை மட்டும் கருத்தில் கொண்டு பார்த்தோமானால், இந்தியாவில் ஒரு பகுதியில் வாழும் மக்களுக்கு மட்டுமே நிரந்தரமான அனுகூலத்தை நீங்கள் அளிக்க இயலும். ஏனையப் பகுதிகளில் வசிப்போருக்கு இது நிரந்தரமான பாதிப்பினை உண்டாக்கும். எனவே, இந்தி மொழி பேசும் 42 சதவீத மக்களை மட்டும் கருத்தில் கொள்ளக் கூடாது. இந்தி மொழி பேசுபவர்கள் மக்கள் தொகையில் 20 சதவீதத்தினராகயிருந்தாலும்கூட, அவர்கள் இந்தியா முழுவதிலும் பரந்திருப்பவர்களாயின் அனைத்து மொழிகளிலும், இந்தி மொழியை இமயம் முதல் குமரி வரை அனைவரும் அறிந்த ஒரு மொழியாக நாம் கூறலாம்.''

'' நமது மக்கட் தொகையில் 24 சதவீதத்தினருக்கு இந்தி தெரியும்; எனவே இந்தி ஆட்சி மொழியாகட்டும். என்னால் இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது; ஆனால் ஆதரிக்க இயலவில்லை. இதற்குப் பின்னணியில் அமைந்துள்ள வாதத்தினை என்னால் புரிந்து கொள்ள இயலுகின்றது. ஆனால் உத்திரப்பிரதேசம், பீகார்,

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் அடங்கிய கூட்டுப் பகுதியில் 42 சதவீதம் என்று வாதிடுதவன் பொருள் யாது? திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒருமுறை இந்தியா என்பது பாரதமாகும். அதாவது உத்திரப்பிரதேசமாகும். .... என்றார்.

நல்லது. நமது பிரதம மந்திரி ஆங்கிலம் தொடரும் என்றார். ஆங்கிலம் தொடர்கின்றது. எவ்வாறு? இந்தியுடன் இணைந்த ஆட்சி மொழியாகத் தொடரவில்லை. ஆனால் அரசு தீர்மானிக்கும் சில நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் பிரதம அமைச்சர் ஆங்கிலம் இணைந்த ஆட்சி மொழியாக இருக்குமென்று கூறியுள்ளார். பிரதம அமைச்சரின் உறுதிமொழியினை முழு அளவிற்குச் செயல்படுத்த வேண்டுமெனில், இந்த சட்ட முன்வடிவினைக் கைவிடுமாறு நான் உள்துறை அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில் மக்கள் மிகுந்த தைரியம் உடையவர்கள் என்பதனையும், இதனால் ஏற்படும் விளைவுகளையும் சந்திக்கத் தயாராகுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக தற்போதைய நிலையைத் தொடரும் வகையில் ஆங்கிலத்தை தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்கும் வண்ணம் அரசியல் சட்ட திருத்தம் ஒன்றினைக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அது அன்னிய மொழி என்ற காரணத்தால் நாம் அதனைத் தள்ளிவிட வேண்டுமென்று நினைக்காதீர்கள். எனவே மொழிப்பிரச்சினையை மறு மதிப்பீடு செய்யுமாறு உள்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்வதுடன் இது குறித்து மறுமதிப்பீடு செய்து முடிக்கும் வரையில், ஆங்கில மொழியினைத் தொடர்ந்து ஆட்சிமொழியாகத் தொடரும் வண்ணம் அரசியல் சட்ட திருத்தம் ஒன்றினைக் கொண்டுவருமாறு வேண்டுகிறேன்''.

பேரறிஞர் டாக்டர் அண்ணா அவர்கள் 1965 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாநிலங்கள் அவையில் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு :—

''எனவே, பதிநான்கு தேசிய மொழிகளும் ஆட்சிமொழியாகும் காலம் கனிந்து வரும் வரையில் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கும் வகையில் தற்போதுள்ள நிலையினுக்கு ஊறுவிளைவிக்கக்கூடாது. ஒன்றுபட்ட ஒரே இந்தியாவைக் காக்க பலமொழிக் கொள்கையே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகும். இந்தியின் மூலம் நீங்கள் இந்தியாவை துண்டாக்கவே முடியும். ஆனால் நீங்கள் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினால், இந்தியாவின் ஒரு பகுதி மற்றொரு பகுதியினை ஆதிக்கம் செலுத்தாத நிலையினை உருவாக்க விரும்பினால், பல லட்சக் கணக்கான மக்களின் இருதயத்திலேயும், எண்ணத்திலேயும் நியாயமான அச்சம் புகாவண்ணம் இருக்க விரும்பினால், இந்தியாவைப் பற்றி நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் பலமொழிப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்''.

7. பொதுவாக இந்தி பேசாத மக்களிடையேயும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களிடையேயும் இந்தி திணிப்பதை எதிர்த்து 1965 ஆம் ஆண்டில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. இப் போராட்டத்தில் பலர் உயிரிழந்தனர், இந்த கிளர்ச்சி தொடர்பாக பல்லாயிரக் கணக்கானோர் சிறை சென்றனர். தமிழகம் முழுவதுமே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. 1965ஆம் ஆண்டில் இந்தியை புகுத்தியது தேசிய ஒருமைப் பாட்டைப் பாதித்தது. இதன் பலனாக 1968ஆம் ஆண்டில் 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட்டது. இச் சட்ட முன்வடிவத் திருத்தத்திற்கான காரண நோக்க விளக்கத்தில், இந்தி பேசாத பகுதியினர் விரும்பும் வகையில் ஆங்கிலத்தை தொடர்ந்து ஆட்சி மொழியாக நீட்டிப்பது குறித்து காலஞ் சென்ற பிரதமரின் உறுதிமொழிகளுக்கு சட்டப்படிக்கான அங்கீகாரம் வழங்குவது குறித்து கருதிப்பார்ப்பது அவசியமென்று மத்திய அரசு தனியாகக் குறிப்பிட்டுள்ளது; மேலும் சில இனங்களில் விருப்பத்தின் அடிப்படையில் ஆங்கில மொழியுடன் சேர்த்து இந்தியையும் பயன்படுத்துவதென்று உத்தேசிக்கப்பட்டது. இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரையிலும் ஆங்கில மொழியானது தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டுமென்ற காலஞ்சென்ற பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் உறுதி மொழிக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்பதே இந்தி பேசாத பகுதி மக்களின் பொதுவான கோரிக்கையும் தமிழக மக்களின் தனிப்பட்ட கோரிக்கையும் ஆகும்.

ஆனால், இந்த அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்திற்குச் சொல்வடிவம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ஆட்சிமொழிச் சட்டத்தில் அதாவது 3 ஆம் பிரிவில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதனை நாடாளுமன்றத்தில் ஆதரிக்கக் கூடிய உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வாக்களித்து திருத்தலாம் அல்லது செல்திறனற்றதாக்கலாம். அந்த திருத்தத்தில்கூட, ''நியமன நாளிலிருந்து இந்தி மொழியுடன் ஆங்கில மொழியை தொடர்ந்து பயன் படுத்தலாம்''. என்ற சொற்றொடரில் '**பயன் படுத்தலாம்**' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது பல்வேறு பொருள் விளக்கம் அளிக்க அதாவது இது கட்டாயமானதா அல்லது விருப்ப உரிமையின்பாற்பட்டதா என்று விளக்கம் அளிக்க வழிவகுக்கிறது

8 1968ஆம் ஆண்டில் பேரறிஞர் டாக்டர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, ஆளுநர் உரையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது :—

''5. வேறுபட்ட கலாச்சாரத்தையும், வாழ்க்கை முறையையும் கொண்டுள்ள பல்வேறு மாநிலங்களைக் கொண்ட கூட்டாச்சி அமைப்பில், அந்தந்த மாநிலங்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இவற்றிற்கிடையே உண்மையான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் உள்ள பெரும் பிரச்சனையில் மொழிப் பிரச்சனையும் ஒன்றாகும்,,

மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையே யான பொறுப்புக்களைப் பொறுத்தமட்டில், நிதி வாயில்களைப் பகிர்ந்து கொள்வதிலுள்ள ஏற்றத் தாழ்வு மிகப் பெரிய கூட்டாட்சி அமைப்பில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே இருக்க வேண்டிய ஒரு சுமூகமான உறவைப் பாதித்துள் ளது. உண்மையான கூட்டாட்சி என்பது மத்திய அரசும், மாநில அரசுகளும் அவற்றிற்றின் பொறுப் புக்களை நிறைவேற்ற அவை போதிய அளவிற்கு நிதிவாயில்களைப் பெற்றிருக்க வேண்டும். மாநில அரசுகள் நிறைவேற்றக் கூடியனவாக இருந்து அரசி யலைமப்புச் சட்டத்தின்கீழ் வரக்கூடியவற்றைப் பொறுத்தமட்டில், மத்திய அரசிடமிருந்து விருப்ப உரிமையின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய கடன்கள், மானியங்கள். ஒரு முக்கிய பங்கை வகுக்க வேண்டும் .... கடந்த 15ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப் படையில், நிதி வாயில்களையும் அதிகாரங்களையும் மத்திய அரசும், மாநில அரசுகளும் பகிர்ந்துகொள்ள வேண்டியது சம்பந்தமான அரசியலைப்புச் சட்டத் தின் விதித்துறைகளை உயர்மட்ட நிலையில் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும் என்பதே என்னுடைய அரசின் உறுதியான கருத்தாகும். அத் தகைய ஆய்வை மேற்கொள்ள சிறிது காலம் பிடிக்கும். ஆய்வு வரம்புகளை, சம்பந்தப்பட்டவர் களுடன் கலந்தாலோசித்து கவனத்துடன் வகுக்க வேண்டியிருக்கும்''.

9. சட்டமன்றப் பேரவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதுகுறித்து உரையாற்றுகையில் பின் வருமாறு தெரிவித்தார் :—

'' கவர்னர் அவர்களுடைய உரையில் மத்திய அரசு-மாநில அரசு தொடர்பு நிலை திருத்தி அமைக்கப்பட்ட வேண்டுமென்ற கருத்தைத் திட்டவட்டமாக வைத் திருக்கிறார். கவர்னர் உரையில் நல்ல முறையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதால் இந்த உரைக்கு எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டது முறையாகும். அதை எடுத்துக்கொண்டு பேசுவது, அதனால் ஒருமைப் பாடு கெட்டுவிடும் என்று வாதாடினால், நான் வெளிப் படையாகச் சொல்கிறேன். ஒருமைப்பாடு மூடி மறைத்தால்தான் கெடுமே தவிர, இப்படி இப்படி கூடி வாழலாம், இப்படி இப்படி அதிகாரங்களைப் பங் கிட்டுக் கொள்ளலாம் என்பதில் வெளிப்படையான கருத்து ஏற்பட்டாலொழிய, மூடி மறைப்பதன் மூலம், திருக்குறளில் வருகிறபடி ஒரு குடத்திற்குள் பாம்பை விட்டு குடியிருப்பது எவ்வளவு கடினமோ, நமக்குள் இருக்கிற அதிகாரத் தொடர்புகளைப் பற்றி விவாதித்துத் திருத்திக் கொள்ளாமல் ஒருமைப்பாட்டைப் பற்றி பேசுவது நல்லது அல்ல, பலனும் தராது. அதை அடிப்படையாகக் கொண்டு மொழிப் பிரச்சினை பற்றி தீர்மானம் வந்தபோது திரு. ம. பொ. சி. அவர்கள். மத்திய அரசில் குவி திருக்கிற அத்தனை அதிகாரங்களும் பரவலாக்கப் படும் அளவுக்கு நிலைமை இருந்தால் இந்தப் பிரச் சினை தீரும் என்று விளக்கினார்கள். கவர்னர் அவர் களுடைய உரையிலே மாநில அரசுக்கும் மத்திய அர சுக்கும் இருக்கிற தொடர்புகள் திருத்தி அமைக்கப் பட வேண்டும், அதற்காக அரசியல் சட்டத்தைச் கூட ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டா டார்கள். இது முழுக்க முழுக்க இந்த அரசின் கொள்கை ஆகும்.

திரு. நம்பூதிரிபாத் அவர்கள் முதலமைச்சராக இருக் கும் கேரள மாநிலத்தில் இந்தக் கோரிக்கை வெகு வேக மாக வளர்ந்து கொண்டிருக்கிறது. முதலமைச்சர்கள் மாநாடு இரண்டு திங்களுக்கு முன் நடைபெற்றபோது, பொருளாதாரத்தில் இப்படி இப்படி அதிகாரங் களைப் பரவலாக்கலாம் என்ற ஒரு புத்தகத்தை திரு. நம்பூதிரிபாத் அவர்கள் வெளியிட்டு, அதை முதலமைச்சர்கள் மாநாட்டின் பரிசீலனைக்கு வைத் தார்கள். அதைப்போலவே வேறு பல இடங்களி லும், வேறு பல மாநிலங்களிலும் அந்த எண்ணம் பரவிக்கொண்டு வருகிறது. எனக்குத் தெரிந்த வரையிலும், அடுத்த 10 வருஷத்தில் மிக முக்கிய பிரச்சினையாக, எல்லா மக்கள் மனத்திலும் மேலோங்கி நிற்க இருப்பது இந்தப் பிரச்னைதான் என்று நிச்சயமாக உணருகிறேன். அப்படி நான் உணருகிற காரணத்தினால், உணர்ச்சியை முன் வைப்பவர் என்று மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் அப் படிப் பரவலாக்க வேண்டும் என்று கவர்னர் உரையில் இருப்பதை வலிவாக்க, இந்தி மொழி ஆட்சிமொழி யாக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிற கருத்தை இந்த அரசு மறுத்திருக்கிறது. அதுவும் கவர்னர் பேருரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு தவறான கருத்து, ஆனால் வலிவோடு பலரால் பின்பற்றப்படுகிறது. ஆங்கிலத்தில் சொல்லுவதா னால், 'தி இனெவிட்டபிலிட்டி ஆஃப் இந்தி' இந்தி எப்படியும் வந்தே தீரும். இந்தி தவிர்க்க முடி யாதது என்ற எண்ணத்தை நாமாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம். 'இனெவிட்டபிலிடி ஆஃப் இந்தி எப்படியும் வந்தே தீரும் என்ற பீதியை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. பொது மொழி தேவை என்று வாதாடப்படுமானால், அது யாருக்குப் பொது மொழி? எதற்காகப் பொது மொழி என்பதும் விளக்கப்பட வேண்டும், எனக்குத் தமிழ் தாய் மொழி என் நண்பர் ஹாண்டே அவர்களுக்குக் கன்னடம் தாய் மொழி, என் நண்பர் விநயகம் அவர்களுக்குத் தெலுங்கு தாய் மொழி என்று இருக்குமானால், மூன்று பேர்களுக்கும் சேர்ந்த ஒரு மொழி கன்னட மாகவோ, தமிழாகவோ தெலுங்காகவோ இருக்க முடியாது''.

(29—2—1968) '' அரசியலமைப்பின்படி, வளரும் வருவாய் வாய்ப்புகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு மாறாக, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற செலவினம் விரிந்து செல்லும் இயல்புடைய பரந்த பொறுப்புகள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

•

(6–3–1968) '' நான், 'நமக்கு', 'நமக்கு என்று சொல்லும்போது அருள் கூர்ந்து அரசியல் கட்சிகளை மறந்து—நிதிப் பிரச்னையைப் பொறுத்த மட்டில் ஒன்றுபட்டு மத்திய அரசோடு வாதாடுவதற்கு, போராடுவதற்குக்கூட அல்ல, நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் '.

(8–3–1968) '' எந்தப் பிரச்னைக்கு எந்தப் பரிகாரமாக இருந்தாலும் நாட்டின் ஒற்றுமைக்கு, இந்திய ஒற்றுமைக்கு கேடு வரக்கூடாது என்று குறிப்பிட்டார்கள், அதை மிக மிக வரவேற்கிறேன். அதை ஆதரிக்கிறேன். ஏதாவது குறைகளைச் சொல்லுகிறபோது, பிரிவினை கேட்கிறான், என்று எண்ணி விடக்கூடாது. அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படாமலும் நீக்கிக்கொள்ளும்படி நான் பலமுறை கூறி இருக்கிறேன். இன்னும் கூறுகிறேன், நாட்டின் ஒற்றுமை நாட்டினுடைய வலிவு இவ்வளவையும் வைத்து, இதன் அடிப்படையிலேதான் நான் பல பிரச்சினைகளை ஆராய்ந்துகொண்டு இருக்கிறேன். நாட்டில் வலிவு குறைக்கப்பட வேண்டும், அல்லது ஒற்றுமை அழிய வேண்டும் என்ற கருத்திலே கூறுவது அல்ல ''.

10. இந்திய அரசிலமைப்புச் சட்டத்தில் வகுக்கப் பட்டுள்ள அரசமைப்பானது, உரிய வயதடைந்த வாக்காளர்களைக்கொண்ட மக்களாட்சிமுறை அரசாகும் என்பதைக் குறிப்பிடலாம். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் வாக்குரிமை அடிப்படையில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள் ஆவர். சட்டமன்றப் பேரவையின் பெரும்பான்மை உறுப்பினரின் ஆதரவை பெறக் கூடியவரை, ஆளுநர், முதலமைச்சராக நியமிக்க வேண்டியுள்ளது. வேறுவகையில் சொல்வதானால், முதலமைச்சர் பொதுமக்களின் பிரதிநிதியாக திகழ்கிறார். அவர்தான் மாநிலத்தின் நிருவாக தலைவர் ஆவார். சட்ட மன்ற பேரவையின் பெரும் ஆதரவை பெற்றிருக்கும்வரை முதலமைச்சர் தொடர்ந்து பதவியில் இருக்க தகுதியுடையவர் ஆவார்.

11. ஆனால், கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள அனுபவத்தை வைத்து பார்க்கும்போது, அமைச்சரவையை நீக்கிவிட்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டுவர 356 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரம், தாறுமாறாகவும் அரசியல் உள்நோக்கத்துடனும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரிகிறது. மத்திய அரசு 356ஆம் பிரிவின் கீழான அதிகாரத்தை, இந்நாட்டில் மாநிலங்களுக்கெதிராக எண்பத்தி ஏழு முறை பயன்படுத்தியுள்ளது. பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நீக்கிவிட்டு, 356 ஆம் பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப் பட்டிருக்கும் சம்பவங்கள் 356ஆம் பிரிவை மத்திய அரசு வகைதொகையின்றி தன்னிச்சையாகப் பயன்படுத்தியுள்ளது என்பதை நன்கு விளக்கிக் காட்டும். அத்தகைய சம்பவங்கள் பாகம் IV. நிருவாக உறவுகள் என்பதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. அமைச்சரவையை நீக்கிவிட்டு பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொடுவரப்பட்டதானது எதிர் பாராத விளைவுகளை உருவாக்கியது. பெரும்பான்மை மக்களின் ஆதரவைபெற்ற அமைச்சரவையை தொடர்ந்து பதவியிலிருக்க அனுமதித்திருந்தால், அது தவிர்க்கப்பட்டிருக்கும். ஆந்திர பிரதேசத்தில், ஆளுநர் திரு. இராம்லால், திரு. என். டி. ராமராவ் அமைச்சரவையை நீக்கியது, மக்களாட்சி முறையை அழிக்கக்கூடிய ஒரு செயலாகும்.

12. இந்திய அரசியலமைப்பு ஓரளவிற்கு கூட்டாட்சி தன்மை வாய்ந்ததென்றும், அல்லது தனியாட்சி மாநிலங்களைக் கொண்ட ஒரு கூட்டு கூட்டாட்சி முறைதான் இந்தியா என்றும் தெரிவிக்கப்பட்டாலும், கடந்த 35 ஆண்டுகளில் இது தனி ஆட்சி தன்மையை பெற்றுவந்துள்ளது. மாநிலங்கள் கையேந்தி மானியம் பெறும் மாநகராட்சிகள், அல்லது நகராட்சிகள் அந்தஸ்துக்கு குறைக்கப்பட்டுள்ளன. இதனை அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் வகுக்கவில்லை. இந்திய நாடு, பல்வேறு கலாச்சாரத்தையும், பல்வேறு சமூகத்தையும், சாதி அமைப்புகளையும் பல்வேறு சமய, மொழிகளையும், மக்களையும் கொண்ட ஒரு நாடாகும். இந்திய நாடு பல மொழி பேசுபவர்களைக் கொண்ட ஒரு நாடாகும். ஒரு மொழி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் பேசக்கூடிய மொழியாக இருப்பினும், அதனை நாட்டின் ஏனைய மொழிகள்மீதும், மொழியினர் மீதும் திணிக்கவும் முடியாது. திணிக்கவும் கூடாது. சுதந்திரம் பெறுவதற்குமுன், ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த பிறகு '' இந்தி '' ஆட்சிமொழியாக ஆகியுள்ளது. ஆட்சி மொழிச் சட்டத்தின் கீழ், அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில நோக்கங்களுக்காக ஆங்கிலத்தை சட்டப்படி பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், அரசியலமைப்புச் சட்டம் அவ்வாறு ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக அங்கீகரிக்கவில்லை. ஆங்கிலம் எட்டாவது விவர அட்டவணையில் இடம் பெறவும் இல்லை. எட்டாவது விவர அட்டவணையில் ஆங்கிலம் இடம்பெற வேண்டும் என்றும், எட்டாவது விவர அட்டவணையிலுள்ள அனைத்து நாட்டின் ஆட்சி மொழியாகச் செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு கருதுகிறது. இந்தி பேசாத மக்கள் மாற்றத்தை விரும்பாத வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று நேரு அளித்த உறுதி மொழிக்கு அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்க வேண்டும். இதற்காக திருத்தம் ஒன்றின்மூலம் அரசியலமைப்புச்சட்டத்தில் பொருத்தமான விதித்துறை ஒன்றைச் சேர்க்க வேண்டும்.

13. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தவரும், அதன் தலைவருமான டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்

அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவர்களின் கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்துவரும் தலைவர். மேலே 4 முதல் 8 வரையிலான பக்கங்களில் பேரறிஞர் டாக்டர் அண்ணா அவர்களின் கொள்கை விவரிக்கப்பட்டுள்ளது. அக்கொள்கைகளையே அடிப்படைக் கொள்கையாக பின்பற்றுகிறது. இக் கொள்கைக்கு இணங்க, மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒருங்கிணைந்து, செயல்படவும், அரசியலமைப்புச் சட்டப்படியும் நிருவாக ரீதியிலும் உண்மையான கூட்டாட்சி மலரவும் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் உறுதியான கருத்தாகும். சட்டமியற்றுவது தொடர்பாகவும், நிதிவகையிலும் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்பதனாலேயே நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் எந்தவிதத்திலும் குறைவதை தமிழ்நாடு அரசு ஒருபோதும் விரும்பவில்லை.

இந்தியா ஒரே நாடு, எல்லாச் சூழ் நிலைகளிலும் இந்நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படவேண்டும். இந்நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அபாயம் ஏற்படும்போது தமிழ் நாடு அரசு வன்மையுடன் அந்த அபாயத்தை எதிர்க்கும் என்ற அடிப்படைக் கோட்பாடுகளின் பேரில்தான் தமிழ்நாடு அரசு கருத்து தெரிவிக்கிறது.

14. சத்பாலுக்கும் பஞ்சாப் மாநிலத்துக்குமிடையே நடைபெற்ற வழக்கில் (1982 ISCC 12) உச்சநீதிமன்றம் ''கூட்டரசு அமைப்பும் முழுமையான அதிகாரங்களும் ஒன்று சேர்ந்ததுதான் நம்முடைய அரசியலமைப்புச் சட்டமாகும்'' என்று தீர்ப்பளித்துள்ளது. மத்தியில் உள்ள ஆளுங் கட்சி, மாநிலங்களில் வேறு கட்சி ஆட்சியிலிருப்பின் அதனைக் கவிழ்ப்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முழுமையான அதிகாரங்களைப் பயன்படுத்துகிறது என்று தமிழ் நாடு அரசு கருதுகிறது.

15. இந்தியா உண்மையான கூட்டரசு அமைப்பாக ஆக்கப்பட வேண்டுமென்றும், அதில் மத்திய அரசும் மாநில அரசும் சமமான, தனித் தனியான கூட்டாளிகளாக இருக்க வேண்டுமென்றும், வரி விதிப்பு அதிகாரம் உட்பட சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசிடம் நிலை பெற்றிருக்க வேண்டுமென்றும், கரன்ஸி, வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு, குடியுரிமை போன்ற சில அதிகாரங்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு உறுதியான கருத்தைக் கொண்டுள்ளது. பேராசிரியர் கே. சி. வியர் (K.C. Wheare) கூறிய உண்மையான கூட்டரசு அமைப்புக் கொள்கையின்படி மைய, மாநில அரசுகள் தங்களுடைய அதிகார வரம்புக்குள் ஒருங்கிணைந்தும், தனித்தும் செயல்படும் வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். ஆனால் அமெரிக்காவில் உள்ளதை போன்று கூட்டரசு அமைப்பு நிலையை எய்த இந்தியாவில் தற்போதுள்ள சூழ்நிலையில் சில ஆண்டுகளாகும். அந்நிலை எய்தும்வரை, தற்போது மத்திய அரசிடம் உள்ள அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கும், சட்டமியற்றுதல், நிதி, நிருவாக துறைகளில் மாநில அரசுகள் அதிக சுயாட்சி பெறுவதையும் உறுதி செய்யும் வகையில் தற்போதுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

16. சட்டமியற்றுதல் துறையைப் பொறுத்த மட்டில் வரிவிதிப்பு அதிகாரம் உட்பட அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் நிலை பெற்றிருக்க வேண்டுமென்று தமிழ் நாடு அரசு கருதுகிறது.

31-A அல்லது 31-C பிரிவின் ஆய்வு வரம்புக்குள் வரும் எந்தவொரு சட்ட முன் வடிவையும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டியதில்லை. 31-A பிரிவின் வரம்பு நிபந்தனை, 31C பிரிவின் வரம்பு நிபந்தனை 200ஆம் பிரிவின் இரு வரம்பு நிபந்தனைகள், 201ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை ஆகியவை நீக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர் மாநிலச் சட்ட முன் வடிவு ஒன்றுக்கு 201ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்க மறுப்பதற்கான விதித்துறையும் நீக்கப்பட வேண்டும்.

சில சட்டமுன் வடிவுகளைப் பொறுத்த மட்டில் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வேண்டும் என்று வகை செய்யும் 304 (B) பிரிவின் வரம்பு நிபந்தனையும் நீக்கப்பட வேண்டும்.

தேசிய நலனை முன்னிட்டு மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு பொருள் குறித்து சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கின்ற 249ஆம் பிரிவு விட்டுவிடப்பட வேண்டும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் ஒப்புக்கொள்வதன் மூலம் சட்டமியற்ற, இச் சட்டத்தை மற்றொரு மாநிலமும் ஏற்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கும் 252 ஆம் பிரிவு விட்டுவிடப்பட வேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு சாராருக்கே உரியதாக இல்லாத வகையில் 252 (2) பிரிவின் விதித்துறைகள் திருத்தப்படவேண்டும். மத்திய அரசு இவ்விரு பிரிவுகளிலும் கூறியவாறு அதிகாரம் செலுத்த வேண்டியிருப்பின் மாநில அரசின் இசைவு பெறப்பட வேண்டும் என்ற வகையில் 154 (2) (B), 258 (2) ஆகிய பிரிவுகள் திருத்தப்பட வேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

பொது அதிகாரப் பட்டியலிலுள்ள சட்டமியற்றல் பற்றிய பதிவுகள் மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். பொது அதிகாரப்

பட்டியலில் தற்போது இடம் பெற்றுள்ள பதிவுகள், சட்டமியற்றல் தொடர்பான உறவுகள் என்பதன் கீழ் வினாப்பட்டிக்கான பதிலில் தெரிவித்தவாறு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

நிருவாக உறவுகளைப் பொறுத்த மட்டில் மத்திய அரசு, மாநில அரசுகளின் கடப்பாடு பற்றிக் குறிப்பிடும் 256ஆம் பிரிவும் சில இனங்களில் மத்திய அரசு மாநிலங்களைக் கட்டுப்படுத்த வகை செய்யும் 257ஆம் பிரிவு மாநிலங்களில் அரசியலமைப்பு நிருவாகம் செயல்படத் தவறினால் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும் 356ஆம் பிரிவு மத்திய அரசு பிறப்பித்த சட்டங்களுக்கிணங்கி நடக்கத் தவறும் சூழ்நிலைகளில் அல்லது அவற்றுக்கு செயல் வடிவம் கொடுக்கத் தவறும் சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி குறிப்பிடும் 365ஆம் பிரிவும் நீக்கப்பட வேண்டும் என்று தமிழ் நாடு அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

263ஆம் பிரிவு (பன்மாநிலக் குழு தொடர்பான விதித் துறைகள்) நீக்கப்பட வேண்டும்.

எம் மாநிலத்திலும் பழங்குடியினர் நலன் என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சம அக்கறை உள்ள ஒரு விவகாரம் என்பதால், 339 (2) பிரிவு நீக்கப்பட வேண்டும். ஆகவே, பழங்குடியினர் நலனை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று எம் மாநிலத்திற்கும் உத்திரவிட வேண்டிய அவசியமில்லை.

இந்தி மொழி பயன்படுத்தல், ஆங்கில மொழி பயன்படுத்துவதைக் குறைத்தல் முதலான உணர்ச்சி வயப்படும் விவகாரங்கள் குறித்து குடியரசுத் தலைவர் பிறப்பிக்கக் கூடிய உத்திரவுகள் மாநிலத்தின் கௌரவத்தையும் தனித் தன்மையையும் பாதிக்குமாகையால் 344 (6) பிரிவு நீக்கப்பட வேண்டும்.

350A பிரிவில் (தொடக்கப் பள்ளி நிலையில் தாய் மொழியில் கல்வி வசதிகள்) யாதொரு மாநிலத்திற்கும் குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பிப்பது தொடர்பான விதித் துறைகள் நீக்கப்பட வேண்டும்; சிறு பான்மை மொழி பேசும் பிரிவினருடைய குழந்தைகளின் தொடக்கப்பள்ளி நிலையில் தாய் மொழியில் கல்வி கற்பிக்கப் போதிய வசதிகள் செய்து கொடுப்பது மாநில அரசின் கடமையென்பதும், இதற்கு அத்துடன், குடியரசுத் தலைவரின் யாதொரு உத்தரவோ கட்டளையோ இல்லாமலே இக்கடமையை மாநில அரசு நேரிய முறையில் செயல்படுத்தும் என நம்பலாம் என்பதும்தான் இதற்குக் காரணங்களாகும்.

நிதிமுறை உறவுகளைப் பொறுத்த வரை, மாநில அரசு நிதி வகையில் மேலும் அதிக அளவில் சுயாட்சி உரிமை பெற்றிருக்க வேண்டும். மாநில அரசு நிதியுதவி பெறுகின்ற ஓர் அமைப்பாகவே இருந்து விடக்கூடாது. மாநில அரசின் வரி ஆதாரம் விரிவு படுத்தப்பட வேண்டும். கூட்டு நிறுவன வரியும், வருமான வரி மீதான மேல் வரியும் பங்கீட்டுக் கொள்ளத்தக்கவையாகவும், வருமான வரியைப் போன்று சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கென குறிப்பாக ஒதுக்கீடு செய்யப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும். 268ஆம் பிரிவின் கீழ் தீர்வைகள் விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மத்திய அரசானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 269ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள சில வரிகளை விதிக்காததற்குப் பதிலாக மாநிலங்களுக்குக் கணிசமானதொரு தொகையை வழங்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட விலைகளின் உயர்வு, உண்மையிலேயே வருவாயைக் குறைத்து, கிடைக்கின்ற வருவாய் ஆதாரங்களுக்கும் செலவுப் பொறுப்புக்குமிடையிலான இடைவெளியை அதிகப்படுத்துகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கும் போது, மத்திய அரசு வரிப் பங்கு அளவைப் பெருக்குவதன் மூலம் மேற்சொன்ன இழப்பு நிலையை ஈடு செய்யலாம்.

திட்டக் குழுவைப் பொறுத்த வரை, தற்போதுள்ள திட்டக் குழுவிற்குப் பதிலாக, மாநிலத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்; அவை, நிதிக் குழுவைப் போன்று சட்ட நெறிப்படி அமைக்கப்பட வேண்டும். தற்போதுள்ள திட்டக் குழு அரசியலமைப்புத் திட்ட வரையறைக்கு உட்பட்டதாக இல்லை; அது ஒரு கூடுதல் அரசியலமைப்பு அதிகார மன்றமாக இருக்கிறது. ஆகவே, அது தேவையில்லை.

மாநில அரசுகள் மேலும் தனித்துச் செயற்படும் வகையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். இதற்கென, புதியதோர் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட வேண்டும்; அதில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் சம எண்ணிக்கை கொண்ட பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும்.

17. மேலே விளக்கிய நிலையில், சர்க்காரியா கமிஷன் வெளியிட்டுள்ள வினா பட்டியலின் இணைப்புகளில் கேட்டுள்ளவாறு, தமிழ் நாடு அரசு தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறது.

இணைப்பு.

பகுதி 1.

முன்னுரை.

வினா 1.1

நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் ஆய்வுக் குழு கூறியபடி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கு கையில், நமது அரசியலமைப்புச் சட்டத்திற்கு வலுவான அடிப்படையாக அமையக் கூடியது, வலிமைமிகுந்த மத்திய அரசைக் கொண்ட கூட்டாட்சியமைப்பே என்பதை அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் பின்பற்றினர். பிற கூட்டாட்சியமைப்புகளில் சிறப்பு அம்சங்கள் பல இல்லாவிட்டாலும், கண்டிப்பாகச் சொல்லப் போனால், நமது அரசியலமைப்பை, கூட்டாட்சி யமைப்பு எனச் சொல்ல முடியுமா ?

வினா 1.2

கூட்டாட்சியமைப்பின் வாலாயமானக் கருத்தினை ஏற்றுக் கொள்வதன் மூலம், ஏழாவது விவர அட்டவணையைச் சேர்ந்த மூன்று பட்டியல்களில் உள்ள சட்டமன்ற அதிகாரங்களை மறு பங்கீடு செய்வது, மாநிலங்களின் மீது மேற்பார்வையிடும் அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுக்கின்ற சில விதித்துறைகளை (251, 256, 257 348, 349, 355, 356,357, 365 முதலியன போன்ற பிரிவுகளை) நீக்குவது, மாற்றியமைப்பது அல்லது அவற்றில் கணிசமான அளவுக்கு திருத்தம் செய்வது, மாநிலங்களுக்கென II ஆம் பட்டியலில் அதிக அளவு வரி வாயில்களை ஒதுக்குவது, அரசியலமைப்புச் சட்ட விவகாரங்கள் நீங்கலான ஏனையவற்றைப் பொறுத்தவரையில் உச்ச நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளும் முறையை நீக்குவது முதலியவற்றின் மூலம் மாநில அரசுகளுக்கு சுய ஆட்சி அனுமதிக்கப்பட வேண்டும் என அப்போது தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட இராஜமன்னார் குழு வலியுறுத்தியது. இக்கருத்தினை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா ?

வினா 1.3

பெரிதும் பல திறப்பட்ட மக்கள் வாழ்கின்றதுமான இந்திய நாட்டைப் பொறுத்தவரையில், நெருக்கடி காலங்களில் மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம் குவிந்திருக்க வேண்டியது அவசியமாக இருந்தபோதிலும், திறமை, சமத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சாதாரண காலங்களில் அதிகாரங்களையும், அலுவல்களையும் பிரதேச மற்றும் அலுவல் அடிப்படையில் கணிசமான அளவுக்கு பரவலாக்குவது அவசியமாகும். இதனை நீங்கள் ஏற்கிறீர்களா ? இந்த நிலையிலிருந்து பார்த்தால், அரசியலமைப்பில் எந்த அளவுக்கு உரியவாறு வகை செய்யப்பட்டிருக்குமென நீங்கள் கருதுகிறீர்கள் ?

வினா 1.4

வாலாயமான கூட்டாட்சி அமைப்பில், அதன் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள அந்தந்த அரசு ஆட்சி வரம்பிற்குள் மத்திய, மாநில அரசுகள் " ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதோடு, அவை தனித்தனி சுயேட்சை அரசுகளாகச் செயல்பட்டும் வருகின்றன ". இத்தகைய வாலாய கூட்டாட்சி அமைப்பானது, தற்போதைய உலகில் ஏட்டளவில் அல்லாமல் அவ்வாறு உண்மையாகவே எங்கேனும் இயங்கி வருகின்றனவா ?

வினா 1.5

இந்திய அரசியலமைப்பிலும் அதன் அலுவல்களிலும் சிறப்பு, அறிவு, அனுபவம், புரிந்து கொள்ளும் திறமை ஆகியவற்றைக் கொண்டுள்ள சிறப்பு வல்லுநர்கள் சிலர், பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர் ; அவையாவன :—

(a) மாறுபட்டுவரும் காலத்திற்கேற்ற சூழ்நிலையைச் சமாளிக்கும் பொருட்டு, அரசியலமைப்புச்சட்டம், அடிப்படையில் வலிமையுடையதாகவும் மாறக்கூடிய தன்மையுடையதாகவும் உள்ளது ;

(b) இடர்பாடுகள், விளைவுகள், பதட்ட நிலை, சச்சரவுகள் ஆகியவை மத்திய மாநில அரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ளதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பில் கணிசமான அளவுக்கு ஏற்பட்ட தவறுகள் காரணம் அல்ல ; ஆனால் இந்த உறவுமுறைகள், பல ஆண்டுகளாக அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மைத் தத்துவம் நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப இல்லாதிருந்ததே காரணமாகும் ;

(c) அரசியலமைப்புச் சட்டத்தில் கீழே கண்டவாறு ஏழும் திருத்தங்கள் எதுவும் செய்யாமலேயே இந்த இடர்ப்பாடுகள், சிக்கல்கள், விளைவுகள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணலாம் :—

(i) நிர்வாக நடைமுறைகள், நடவடிக்கைகள் சில முறையான சட்டங்கள் ஆகியவற்றை மாற்றுவதால், மத்திய மாநில அரசுகளின் ஒரு சில துறைகளில் மோதல் ஏற்படும் ;

(ii) மத்திய மாநில அரசு பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழுவின் (263 ஆம் பிரிவில் வகை செய்துள்ளவாறு) உதவி, ஆலோசனையுடன் செவ்விய முறையில் மரபுகளையும் நடைமுறைகளையும் உருவாக்குதல்.

இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீரா ? ஆமெனில் இது தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன ?

வினா 1.6

நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிப்பது மிகவும் இன்றியமையாதது என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? ஆமெனில் இம் முடிவினை எய்தும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் என்னென்ன விதித்துறைகள் உங்கள் கருத்துப்படி உருவாக்கப்பட்டுள்ளன?

வினா 1.7

ஒரு நாட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் மத்திய-மாநில அரசுகளுக்கும் உள்ள பொறுப்புகள் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தில் நியாயமான விதித்துறைகள் உள்ளனவா? இது தொடர்பாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 256, 257, 354 முதல் 357 வரை, 365ஆம் பிரிவுகளை நீங்கள் காணலாம்.

வினா 1.8

நாடாளுமன்றமானது சட்டமியற்றுவதன்மூலம் பின்வரும் பணிகளை ஆற்ற வேண்டுமென அரசியலமைப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவு கூறுகிறது; அவையாவன:—

(a) ஒரு மாநிலத்திலிருந்து ஒரு பிரதேசத்தைப் பிரித்தோ, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பாகங்களை இணைத்தோ, ஒரு பிரதேசத்தை ஒரு மாநிலத்துடன் சேர்த்தோ புதிய மாநிலம் ஒன்றை உருவாக்குதல்;

(b) ஒரு மாநிலத்தின் பரப்பை அதிகரித்தல்;

(c) ஒரு மாநிலத்தின் பரப்பைக் குறைத்தல்;

(d) மாநில எல்லைப் பகுதிகளை மாற்றியமைத்தல்;

(e) மாநிலத்தின் பெயரை மாற்றுதல்;

இந்த பிரிவு குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? ஆமெனில், இந்த விதித்துறையில் என்ன திருத்தம் செய்ய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

விடை

வரிசைப்படி வினாக்களுக்கு விடை அளிப்பதற்குப் பதிலாக, வினாப்பட்டியலின் உண்மை நோக்கத்தை கருத்தில் கொண்டு, பகுதி I-ல் உள்ள வினாக்களுக்கு விடையளிக்க அரசு விரும்புகிறது.

நமது அரசியலமைப்பின் வலுவான அடிப்படையாக அமையக்கூடியது வலிமைமிக்க மத்திய அரசைக் கொண்ட கூட்டாட்சி அமைப்பே என்றிருந்தபோதிலும், அதுபோன்ற வெளிப்படையான கருத்து, நமது அரசியலமைப்பின் செயற்பாட்டில் தெரியவில்லை; மேற்கு வங்காள மாநிலத்திற்கும் மத்திய அரசிற்கும் இடையே நடைபெற்ற (AIR 1963 SC 1241) வழக்கில் அரசியலமைப்பு உண்மையில் ஒரு கூட்டாட்சி அமைப்பு அல்ல என்று உச்ச நீதிமன்றம் சரியாகக் கூறியது. நீதிபதி. சுப்பாராவ் எடுத்துக்கூறிய ஏற்பாட்டினை நாம் பின்பற்றுகின்றோம். "குறிப்பிட்டதொரு அரசியலமைப்பு, கூட்டாட்சி அமைப்புக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளதா, இல்லையா என்பதை நிச்சயித்தறிவதற்கு மத்திய, மாநில அரசுகள் ஒவ்வொன்றும், அவ்வவற்றிற்கு வரையறுத்துள்ள அதிகார வரம்பிற்குள் சுதந்திரமாகச் செயல்படுகின்ற வகையில், அதிகாரங்களைப் பிரித்துக்கொடுக்க மேற்சொன்ன அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறதா என்பதை பரிசீலிப்பதே சரியான முறை" என்று மேற்சொன்ன நீதிபதி கூறினார். மத்திய அரசின் உறுப்புகளாகிய மாநிலங்கள், மத்திய அரசிற்குக் கீழ்ப்படிந்து இருக்கும் வகையில் வலுவான மத்திய அரசு அமைய வேண்டுமென்று ஆக்கப் பூர்வமான வகையில் தொடர்ந்து முயற்சி எடுக்கப்பட்டு வருவதால், நாட்டின் பல பாகங்களின் பல சூழ்நிலைகளில் வாழ்கின்ற மக்கள், கூட்டாட்சி அமைப்புக் கொள்கையிலிருந்து பிறழ்ந்து நடந்து வருவதாகக் கருதுகின்றனர் என அனுபவத்திலிருந்து தெரியவருகிறது. இந்திய கூட்டாட்சியமைப்பு செயல்பாட்டில் உள்ள நிச்சயமற்ற, நன்கு தெரியக்கூடிய மாறுபாடுகள் காரணமாக, இந்திய அரசியலமைப்பானது வலுவான மைய அமைப்புடன் கூடிய கூட்டமைப்பாகும் என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் விவரித்துள்ளார். மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அவ்வவற்றின் துறைகளில் அரசு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதில்தான் உண்மையான கூட்டாட்சி அமைகிறது. கூட்டாட்சி அமைப்பு என்பது, ஒரு நாட்டை ஆளுகின்ற சிக்கலான அரசு அமைப்பே என "டைசி" விளக்கியுள்ளார்... வேற்றுமையில் ஒற்றுமை காணவும், மத்திய அரசின் அதிகாரக் குவியலை பரவலாக்கவும், தேசிய உணர்வை வட்டார உணர்வுடன் சேர்க்கவும், கூட்டாட்சி அமைப்பானது முயற்சிக்கிறது. கூட்டாட்சியமைப்பின் அமைந்துள்ள வட்டார மனப்பான்மையானது, ஒரே சமயத்தில் அதிகாரக் குவியலையும் அதிகாரப் பிரிவினையையும் காட்டுகிறது.

நமது அரசியலமைப்பில் உள்ள அடிப்படை அமைப்பு கூட்டாட்சியமைப்பு என்று கூறப்பட்டபோதிலும் பிற அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படாத சில விதித்துறைகளினால் நம் அரசியலமைப்பானது ஓரளவுக்கு தனியாட்சியாகவே அமைவதற்கு வகை செய்கிறதே தவிர கூட்டாட்சி அமைப்பாக அமையவில்லை. 256, 257, 356, 365, 200, 201 ஆகிய பிரிவுகளும் 31(C), 31(A) (1), 254 (2), 304 (B) ஆகிய வரம்பு நிபந்தனைகளும் நமது அரசியலமைப்பானது உண்மையில் கூட்டாட்சி அமைப்பல்ல என்று மக்களும் சட்ட நடுநிலையாளர்களும் (ஜூரிஸ்ட்) தெரிவிக்கும் கருத்திற்கு ஆதரவாக இருக்கின்றன.

கூட்டாட்சி மாநிலமானது, தேசிய ஒற்றுமையையும் அதிகாரத்தையும் மாநில உரிமைகளையும் சமமான நோக்குடன் பார்ப்பதற்குரிய அரசியலமைப்பாக அமைய வேண்டும் ; அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அமெரிக்க நாட்டிற்குக் கொடுக்கப்படாத அல்லது கொடுக்க மறுத்த அதிகாரங்கள், முறையே அமெரிக்க நாட்டிற்கு அல்லது அந்நாட்டு மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனவாக 10ஆம் திருத்தம் வகை செய்கிறது. மத்திய, மாநில அரசுகளிடையேயுள்ள பொதுவான அரசியலமைப்பின்கீழ் அதிகாரங்களை பிரித்துக் கொடுப்பதன் மூலம், தேசிய ஒற்றுமையை மாநிலச் சுதந்திரத்துடன் ஒப்பிடச் செய்யலாம். இந்த கருத்திலிருந்துதான் முற்றிலும் வளர்ச்சி பெற்ற கூட்டாட்சியமைப்பில் தலையாய பண்புகள் மூன்று பிறந்தன ; அவையாவன : அரசியலமைப்பின் உயர்நிலை, மாநில அரசுகளிடையே வரையறுக்கப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல் ; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத்தை எடுத்துக் கூறுபவர்களாக நீதிமன்றங்கள் செயல்பட அவற்றிற்கு அதிகாரம் அளித்தல் ஆகியன. ''எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்'' என்ற கொள்கையை மதிக்க வேண்டுமென்று வெறுமனே எதிர்பார்ப்பது போதாது. அதனை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். கொள்கையளவில் மட்டுமே வைத்திருக்கக்கூடாது.

ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு முன்பு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவந்த பயனற்ற பிரிவுகள் சிலவற்றை பிரயோகித்ததால், மாநிலங்களின் சுயாட்சி எவ்வாறு பறிக்கப் பட்டுள்ளது என்பது குறித்து இவ்வரசு இந்த அறிக்கையில் விரிவாகப் பரிசீலித்துள்ளது. எனவே, நமது அரசியலமைப்புச் சட்டம் நிச்சயமாகக் கூட்டரசு அமைப்பு முறைதான் என கூற இயலாது என்பதோடு நம் அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டிப்பான விதித்துறைகள் இருப்பதாலும் ஏனைய கூட்டரசு அமைப்பு முறைகளில் காணாத, வேண்டாத சில விதித் துறைகளை வசதிக்கேற்ப நலம் பிரயோகிப்பதாலும் மற்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் இருக்கின்ற நல்ல அம்சங்கள் நம் அரசியலமைப்பில் இல்லாத காரணத்தால் நம் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள கூட்டாட்சி கோட்பாட்டின் ஆணிவேர் மெதுவாக ஆட்டம் கண்டு வருவதாக நாம் எண்ணுவதற்கு இவையாவும் வழிவகுக்கின்றன என்பது தெளிவாகிறது. பகுதி II '' சட்டமன்ற உறவுகள், '' பகுதி IV '' நிருவாக உறவுகள் '' ஆகியவை குறித்து பரிசீலிக்கும்போது சட்டமியற்றுவது தொடர்பாக பிரிவுகளில் அல்லது மூன்று பட்டியல்களின் பதிவுகளிலுள்ள அதிகாரங்களை மீண்டும் பிரித்துக் கொடுப்பது பற்றி இவ்வரசு விரிவாகப் பரிசீலித்துள்ளது. வரியின் மூலம் கிட்டும் வருவாயை அதிக அளவில் மாநிலங்களின் 11ஆம் பட்டியலில் ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்தமட்டில், பகுதி V '' நிதித் தொடர்பு '' குறித்து ஆய்வு செய்கையில் எங்களது சிறந்த கருத்துக்களை நாங்கள் தெரிவித்துள்ளோம். ாநிலம் கவனிக்கவேண்டிய, அதன் அதிகார வரம்பிற்குட்பட்டவற்றைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு நடந்துகொள்ளும் விதம் பற்றி உணரப்படுகிறது. மாறிவரும் சூழ்நிலைகளின் கீழ், கூட்டரசு அமைப்பு முறையின் மூலம் செயல்படுத்தப்பட்ட கொள்கையளவிலான தடைகள் தகர்க்கப்பட்டு, மத்திய-மாநில அரசுகளின் அதிகாரங்கள் ஒன்றுக்கொன்று மாறிவருவதை திரு. செட்டல்வாடு சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய-மாநில உறவுகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள், பிரச்சினை, பதட்ட நிலை ஆகியவற்றிற்கு நாம் வகுக்கும் செயல் திட்டத்திலுள்ள குறைபாடுகளும் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் தற்போதுள்ள அடிப்படை அமைப்புமே காரணங்களாகும் என்று அரசு கருதுகிறது. மாநில சுயாட்சி மத்திய அரசின் ஆதரவில் இருக்க அனுமதிக்க இயலாது. அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மைத் தத்துவம் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் தங்களுக்கு சுயாட்சி கிடைத்துள்ளதாக நம்பிக்கொண்டிருப்பது சரிந்து வருகிறது. ஏனெனில், அதனை செயல்படுத்த இயலாது. பின்வரும் அத்தியாயங்களில் நாம் விவாதிக்கின்றபோது, நல்ல பாரம்பரியத்தையும் நடைமுறைகளையும் வகுத்துக்கொள்வது உகந்தது என்றும் அரசியலமைப்பில் அவசியமான இடங்களில் விதித்துறைகளை தக்கவாறு திருத்துவதன் மூலம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே உள்ள பதட்டத்தையும், பிணக்கையும் நீக்கி இருவருக்குமிடையே நல்லுறவை வளர்ப்பதன் வாயிலாக நாட்டை வளம்பெறச் செய்ய உள்ள தருணம் இதுவேயாகும் என்று கருத்துத் தெரிவித்துள்ளோம். 265ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட வேண்டிய ஆலோசனைக் குழு கருத்து வேறுபாட்டுடன் உருவாக்கப்பட்டால் அது பயனற்றதாகிவிடும் என்றும் நாங்கள் தெரிவித்துள்ளோம். ''நிருவாக உறவுகள் '' குறித்த அத்தியாயத்தை ஆய்வு செய்கையில், இதுபற்றி நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

யாதொரு மாநிலத்திலிருந்து ஒரு வட்டாரத்தை பிரித்து அல்லது இரண்டு அல்லது மூன்று மாநிலங்களை ஒன்றாக இணைத்து அல்லது அம் மாநிலங்களின் பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து அல்லது யாதொரு மாநிலத்தின் ஒரு பகுதியுடன் ஒரு வட்டாரத்தை இணைத்து ஒரு புதிய மாநிலமாக அமைகவும் அல்லது யாதொரு மாநிலத்தின் பரப்பளவை அதிகரிக்கவும் அல்லது யாதொரு மாநிலத்தின் பரப்பளவைக் குறைக்கவும் அல்லது யாதொரு மாநிலத்தின் பரப்பளவின் எல்லைகளை மாற்றவும் யாதொரு மாநிலத்தின் பெயரை மாற்றவும் அரசியலமைப்புச் சட்டத்தின் 3ஆம் பிரிவின்படி, நாடாளு மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச சட்ட முன்வடிவு யாதொரு மாநிலத்தின் பரப்பளவை, எல்லைகளை அல்லது

பெயரைப் பாதிப்பதாக இருந்தால், சம்பந்தப் பட்ட மாநிலம் அதன் கருத்தைத் தெரிவிப்பதற் காக அந்தச் சட்ட முன்வடிவு குடியாட்சித் தலைவ ரால் அம்மாநிலச் சட்ட மன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும். அரசியலமைப்புச் சட்டத் தில் சொல்லப்பட்டுள்ளது என்னவென்றால் இது குறித்து அம் மாநிலச் சட்ட மன்றத்தின் கருத்துக் களை அறுதியிட்டுத் தெரிந்து கொள்வதற்கு மட்டுமே, இது அனுப்பி வைக்கப்படும். 3ஆம் பிரி வின்படியுள்ள இத் திட்டம் கூட்டாட்சி முறைக்கு குந்தகமாயுள்ளது. எந்த மாநிலத்தின் பரப்பளவு, எல்லைகள், அல்லது பெயர் மாற்றப்படுவதால் பாதிப்புக்குள்ளாகிறதோ அந்த மாநிலம் இந்தச் சட்ட முன் வடிவுக்கு இசைவு தெரிவித்தாலன்றி மற்றபடி, நாடாளு மன்றத்தில் சட்ட முன் வடிவு எதுவும் கொண்டு வரப்படக் கூடாது. எனவே, நாடாளுமன்றத்தில் சட்ட முன் வடிவு கொண்டு வருமுன்னர் ஒரு முன் நிபந்தனையாக, சம்பந்தப் பட்ட மாநிலத்தின் இசைவு பெற வேண்டும் என்கிற வகையில் 3ஆம் பிரிவு திருத்தியமைக்கப் படலாம்.

அரசியலமைப்பு விவகாரங்களைத் தவிர, உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளும் நடைமுறையை நீக்குவது நியாயமான கருத்தாகும்; ஏனெனில் இது போன்ற நடைமுறை அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்திலுள்ளது. இதைப் பொறுத்தவரையில் அமெரிக்க அரசிய லமைப்புச் சட்டத்தின் விதித்துறைகளை நாம் பின்பற்றினோமானால், பின்னர் அமெரிக்க கூட்டமைப்பு நீதிமன்றங்கள் தொடர்பான அனைத்து விதித்துறைகளையும் இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தில் நாம் கொண்டு வரவேண்டி யிருக்கும். அப்படிக் கொண்டுவந்தால் நாட்டினை பல நீதித்துறை மாவட்டங்களாகப் பிரித்து, மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாவட்ட கூட்டமைப்பு நீதிமன்றத்தை உருவாக்கவேண்டும். இதன் பிறகு, சர்க்கியூட் நீதிமன்றம் ஒன்றை உருவாக்க வேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கை யிலான நீதித் துறை மாவட்டங்கள் மீது அதிகார வரம்பு கொண்டதாக இந்த நீதிமன்றம் இருக்கும். இந் நீதி மன்றங்களுக்கெல்லாம் தலைமையாக உச்ச நீதிமன்றத்தை அமைக்கலாம் இதைத் தவிர, அமெரிக்க நாட்டில் உள்ளதைப் போன்று, அரசியலமைப்புச் சட்ட விவகாரங்கள் அனைத்தையும் முடிவு செய்ய உச்ச நீதிமன்றத்தில் ஒன்பது அல்லது பதினோரு நீதிபதிகளைக் கொண்ட ஆயம் இருத்தல் வேண்டும். கூட்டரசு அமைப்பு முறை நீதிமன்றங்களைப் பொறுத்த மட்டில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இது போன்ற திருத்தம் செய்யப்பட்டால், அமெரிக்க நாடுகளில் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள உச்ச நீதிமன்றங்கள் செயல்படுவது போல, மாநிலத்தில் தற்போதுள்ள ஒவ்வொரு உயர் நீதி மன்றமும் உச்ச நீதிமன்றமாகப் பணியாற்ற முடியும். எனவே, அமெரிக்க நாடுகளில் கூட்டரசு அமைப்பு முறை நீதிமன்றங்களைப் போன்று, நமது கூட்டரசு அமைப்பு முறை நீதி மன்றங்களின் அமைப்பிலும் பெரும் மாற்றங்களைச் செய்தாலன்றி, அரசியலமைப்புச் சட்ட விவகாரங் களைத் தவிர, மற்ற பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் உச்ச நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்துகொள்ளும் நடைமுறையை நீக்குவது பயனற்ற ஒன்றாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து 20 ஆண்டுகள் தொடர்ந்து ஒரே அரசியல் கட்சி ஆதிக்கம் செலுத்தியதன் விளைவாக மாநில அரசுகளுக்கு மகிழ்ச்சியற்ற, எரிச்சலூட்டுகின்ற நிலை எவ்வாறு ஏற்படுகின்றதோ அதே போன்று இத்தகைய நிலை மத்திய அரசுக்கும் நல்லதல்ல என்றும், இதன் விளைவாக இந்திய கூட்டரசு அமைப்பு முறையில் விரும்பத்தகாத சுமையை ஏற்படுத்தும் நிலை உருவாகின்றது என்றும் மூதறிஞர் திரு. கே. சந்தானம் அவர்கள் சரியாகக் கூறினார்.

வினாப்பட்டியலின் ஏனையப் பகுதிகள் குறித்து நாங்கள் தெரிவித்துள்ள கருத்துகள் பரிந்துரை களின் அடிப்படையில் இது போன்ற பரிந்துரைகள் நம் அரசியலமைப்புச் சட்டத்தில் எடுத்துக்கொள் ளப்பட்டால், இந்த அரசியலமைப்புச் சட்டம் உண்மையான ஒரு கூட்டரசு அமைப்பு முறையாக விளங்கும் என்று அரசு கருதுகிறது.

பகுதி I-ல் உள்ள வினாப்பட்டியலுக்கு இந்த முன்னுரை குறிப்பு விடையாக அமைகின்றது என்று அரசு கருதுகிறது. ஏற்கெனவே கூறியபடி, வினாப்பட்டியலின் பிற பகுதிகளில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதால் இவ்வினாக்களுக்கு ஒன்றன் பின் ஒன்றாகப் பதிலளிக்கப்படவில்லை.

பகுதி II

சட்டமியற்றுவது தொடர்பாக மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயுள்ள தொடர்புகள்.

வினா 2.1.—சட்டமியற்றுவது தொடர்பாக மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கும் திட்டத்தில் அடிப்படை தவறு ஏதுமில்லை என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. சாதாரண காலங்களில், சட்டமியற்றுவது குறித்து ஓரள வுக்குத் தனியுரிமையை மாநிலங்களுக்கு வழங்க இது வகை செய்கிறது; ஆனால், பல ஆண்டு களாக மத்திய அரசு, "தேசிய நலனைக் கருதி" அல்லது பொது நலனைக் கருதி நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டு சட்டமியற்றுவதற்கான மாநில அரசுக்குள்ள அதிகாரங்களில் தலையிட்டுள்ளது; அவ்வாறு தலையிட்டுள்ளதற்கு திட்டவட்டமான எடுத்துக் காட்டுகள் எவையேனுமிருப்பின் அவற்றை நீங்கள் குறிப்பிட இயலுமா?

வினா 2.2.—வலிமைமிக்க மத்திய அரசு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றிற் கேற்ப அரசியலமைப்பின் ஏழாவது விவர அட்டவணையின் சட்டமியற்றும் பட்டியல் களின்படி அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதில் மற்றும்/அல்லது அதில் சொல்லியுள்ளவற்றிலும் மற்ற விதித்துறைகளிலும் என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்?

வினா 2.3.—1935ஆம் ஆண்டு மத்திய அரசுச் சட்டத்தின்படி மத்திய, மாநில அரசு களுக்கு பொதுவான பொருள் குறித்து மத்திய அரசு யாதொரு சட்டமியற்றக் கருதும்போது அது குறித்து முன்கூட்டியே மாநில அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற விதித் துறையானது உத்தரவுகள் பற்றிய பட்டியலில் அடங்கியிருந்தது.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நல்ல உறவை ஏற்படுத்துவதற்கு இத்தகைய முறையைப் பின்பற்றுவது உகந்தது என நீங்கள் கருது கிறீர்களா?

வினா 2.4.—மாநிலங்களின் முழு உரிமைக்குட் படுகின்ற சில பொருள்கள் குறித்து "தேசிய அல்லது பொது நலனைக்" கருதி நாடாளு மன்றம் சட்டமியற்றும் வகையிலான அறிவிப்புகள் நிலையான தன்மை கொண்டதாக இருக்க வேண்டுமா அல்லது குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை ஆய்வு செய்வதற்கு உட்பட்ட கால அளவுக்கு மட்டுமே இருக்க வேண்டுமா என்று நீங்கள் கருதுகிறீர்களா?

வினா 2.5.—சட்டமியற்றும் துறையில், மத்திய, மாநில அரசுகளுக்குள்ள உறவு முறை களில் வேறு என்ன திருத்தம் அல்லது சீர்திருத்தம் வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

விடை.—மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயுள்ள உறவுமுறைகள் பற்றி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் IIஆம் பகுதியிலும் அதிலும் குறிப்பாக 245 முதல் 255 வரையிலான பிரிவுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சட்டமியற்று வதிலுள்ள அதிகாரங்களை வரையறுப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப் பட்ட மாநிலத்தைச் சேர்ந்த மக்களின் தேவைகளை ஒட்டிய கொள்கைகளை செயல் படுத்துவதில் மாநிலங்களுக்கு நடைமுறையில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன என அனுபவத்திலிருந்து தெரிய வந்துள்ளது. மத்திய, மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சி ஒரே கட்சியாக இருப்பின், கொள்கை முடிவுகளை எடுப்பது, அவற்றைச் செயல்படுத்துவதில் வெறுப்பு ஏற்பட வாய்ப்பு இருக்காது. ஆனால் இன்றுள்ள நிலைமையில், வெவ்வேறு அரசியல் நோக்கங்களையும் வட்டார அளவிலோ தேசிய அளவிலோ அமைந்த வட்டாரக் கட்சிகளையும் கொண்டுள்ள பல மாநிலங்களைப் பொறுத்த வரையில், குறிப்பாக சட்டமியற்றுவது தொடர்பாக மத்திய, மாநில அரசுகளுக்கிடையே மோதலும் மனக்கசப்பும் ஏற்பட்டுள்ளன.

ஒரு மாநிலம் நன்கு வளர்ச்சியடைய வேண்டு மாயின் அதன் தேவைகள், அம்மாநிலத்தின் அமைப்பிடம், அம்மாநில மக்களின் விருப்பம், எடுக்க வேண்டிய நலப் பணிகள், செய்யக் கருதியுள்ள சமூக-பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கேற்ப மாறுபடுகின்றன. அண்மைக் காலத்தில், மாநில நலனைக் கருதி உடனடியாக சட்டம் இயற்றும்போது அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் நடைமுறைச்சார்ந்த உத்தரவு களை செயல்படுத்த முடியவில்லை. சில சமயத்தில், மாநில அரசுகளால் ஏற்கப்பட்டு பின்பற்றப்படும் கொள்கையின் அடிப்படையில் உருவாகும் நோக்கங்களுக்கு மாநிலங்கள் இணங்கி நடக்கவும் முடிவதில்லை. எடுத்துக்காட்டுகள் பல உள்ளன; குறிப்பிட்டதொரு பொருள் குறித்து குறிப்பிட்ட மாநிலம் மிகவும் அவசிய மெனத் தோன்றுகிற சட்டத்தை இயற்றுவதில் மத்திய அரசு காலந் தாழ்த்தியுள்ளது.

இதற்கு ஒரு சான்றாக, உழவர்கள் தொடர் பான சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கென்றே பினாமி பேரங்களில் காணும் குறைபாடுகளை நீக்குவதற்காகக் கொண்டுவந்த தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்)

இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவுக்கு இசைவளிக்க மத்திய அரசு மறுத்து விட்டது. 1981ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவும், தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த) சட்ட முன்வடிவும் முறையே 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10ஆம் நாளன்றும் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23ஆம் நாளன்றும்இசைவுபெற மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றுக்கு குடியாட்சித் தலைவரின் இசைவு இன்னமும் கிடைக்கவில்லை. இது போலவே, முறையே 1983ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14-ம் நாள், 1983ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29ஆம் நாள் அன்று அனுப்பிவைத்த தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் பதிவேடு ஏற்பு சட்ட முன்வடிவுக்கும் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டா புத்தகச் சட்ட முன்வடிவுக்கும் 1984ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ம் நாள் அனுப்பிவைத்த 1984ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனை பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவுக்கும் குடியாட்சித் தலைவரின் இசைவு இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் ஆதரவு பெற்றுள்ள இந்த உத்தேசச் சட்டம் குறித்து குற்றங்காணுவதில் மத்திய அரசு முயற்சிப்பதற்காக மாநிலங்கள் அஞ்சுவது நியாயமே. இதற்கு எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. அனைவரும் அறிந்ததும் ஒப்புக் கொள்ளப்பட்டதுமான முற்போக்குக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள சட்டங்களைக் கொண்டு வரும் நோக்குடன், மாநிலச் சட்டமன்றம் மேற்கொண்டுள்ள சட்டங்களை நிறைவேற்ற இயலாத வகையில் மத்திய அரசு முட்டுக்கட்டை போட்டுள்ளது. எனவே, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக அனுப்பப்படும் சட்ட முன்வடிவுகளை மத்திய அரசு தாமதம் செய்கிறது அல்லது நிராகரிக்கிறது. இது போன்ற நிலை அனுமதிக்கப்படக்கூடாது. இரு அவைகள் கொண்டுள்ள மாநிலச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வித தயக்கமும் இன்றி தனது இசைவை அளிக்க வேண்டுமென்ற வகையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திட்டவட்டமாகத் திருத்தியமைக்க வேண்டும். கூட்டாட்சி முறையில் பிரதேச தொடர்பு கொள்கைகள் பற்றி தாராளமாகப் பொருள் விளக்கம் கூற வேண்டியிருந்தாலும் கடந்த கால அனுபவத்தையும் மத்திய, மாநில அளவில் ஒரே ஆளுங்கட்சி இராததையும் கருதி குறிப்பிட்ட வரையறைக்குள் அடங்கிய அரசு நடைமுறைகள், நமது அனுபவத்தின் அடிப்படையிலும் மக்களது தேவைகள் விருப்பங்களின் அடிப்படையிலும் அமைய வேண்டும்.

மாநில அரசினால் நிறைவேற்றப்படும் ஒரு சட்ட முன்வடிவு, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு எப்போதும் கிடைக்கும் என்று காத்திராமல் அவ்வாறு இசைவு பெறாமலேயே எப்போது நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள இந்த விதித்துறைகளைப் பற்றி இப்பொழுது விவாதிப்பது உகந்ததாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 201ஆவது பிரிவின்படி ஆளுநர் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு சட்ட முன்வடிவு ஒன்றை அனுப்புகின்றபோது இந்தியக் குடியரசுத் தலைவரின் விருப்பப்படி அதற்கு இசைவு அளிக்கலாம் அல்லது இசைவு அளிக்காமல் நிறுத்தி வைக்கலாம். இருப்பினும், இந்தியக் குடியரசுத் தலைவர், மேற்சொன்னவாறு செயல்பட்டு வருகையில், மத்திய அரசு அமைச்சரவை நல்கும் ஆலோசனையின்படி அவர் செயல்பட்டு வருகிறார் என்பது மறுக்க முடியாததாகும். இந்தியக் குடியரசுத் தலைவர் மேற்படி சட்ட முன்வடிவிற்கு இசைவளிக்க மறுப்பதற்கு அல்லது அதற்கு இசைவளிக்காமல் நிறுத்தி வைப்பதற்கு அவர் பின்பற்ற வேண்டிய மரபுகள் அல்லது வழிமுறைக் குறிப்புகள் எவையும் இல்லாத போது இதன்பிறகு சொல்லியுள்ள ஒரு சில சூழ்நிலையில் அத்தகைய நடைமுறை பின்பற்றத் தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பு அல்லது அது தொடர்பான அதிகார வரம்பினை வரையறுக்கும் கொள்கையானது, ஒரு பெரும் பிரச்சினையாக தெரிகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் VIIஆம் விவர அட்டவணையில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அச் சட்ட முன்வடிவு மாநிலப் பட்டியலின்கீழ் வருமாயின் அதனை இந்தியக் குடியரசுத்தலைவரின் பரிசீலனைக்குஅனுப்ப வேண்டியது அவசியமில்லையெனத் தோன்றுகிறது. எனினும், அச் சட்ட முன்வடிவு பொதுப் பட்டியலின் அதிகாரத்திற்குள் வருமாயின், மாநில ஆளுநர் தன்னுடைய இசைவை அளிக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். 1935ஆம் ஆண்டு மத்திய அரசுச் சட்டத்தில், பொதுப் பட்டியல் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு ''இப்போதிருக்கிற நிலைமை அப்படியே இருக்குமானால், இவற்றை மத்திய அரசு எடுத்துக் கொண்டுவிடுமோ என்று மாநில அரசு கருதக்கூடும்''. அப்பொருள் மாநிலம் சம்பந்தப்பட்டதாக இருப்பின், முக்கியமாக மாநில அரசு கொள்கைகளுக்கிணங்க மாநிலத்தால் நிருவகிக்கப்படுமாயின், சம்பந்தப்பட்ட பொருள் குறித்து மாநில அரசு சட்டமியற்றுவதில் தலையிடக்கூடாது என்று குழு கூறியது. எவ்வாறாயினும் 2, 3 வினாவிற்கு நாம் உடன்பாடான பதிலையே அளிக்கிறோம்.

மாநிலச் சட்ட மன்ற சம்மதமில்லாமல் (மையமாநிலப்) பொதுப் பட்டியலின்கீழ் வரும் எந்த ஒரு பொருள் குறித்தும் நாடாளுமன்றம் சட்டம்

இயற்றக் கூடாது என்று இவ்வரசு கருத்து கொண்டுள்ளது. இத்தகைய சம்மதம் எதுவும் பெறாத போது, பொதுப் பட்டியல் பொருள் குறித்து நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் எதுவும் சம்பந்தப்பட்ட மாநிலத்திற்குப் பொருந்தாது .

மேற்குறிப்பிட்ட தொடக்கக் குறிப்புரைகளுடன், இவ்வரசு, தொடர்ந்து வினாக்களுக்குப் பதிலளிப்பதற்கு பதிலாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் குறித்தும், VIIஆம் விவர அட்டவணை I, II, III-ஆம் பட்டியல்கள் ஆகியவற்றின் பல்வேறு பதிவுகள் குறித்தும் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட பிரிவு அல்லது பதிவு குறித்து பரிந்துரைக்கிறது.

31-A, 31-C, 200, 201, 246, 254 (2) பிரிவுகள் :

தொடக்கத்தில் மாநில அரசு இயற்றிய முக்கியமான இன்றியமையாத சட்டங்களுக்கு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற வேண்டியபோது, அவரது இசைவு கிடைக்காமல் அல்லது காரணமின்றிக் காலதாமதம் செய்யப்படும்போது மாநில அரசுக்கு ஏற்படும் பல இடையூறுகள் பற்றி நாம் குறிப்பிட்டுள்ளோம். மாநிலச் சட்டமன்றம் தனிப்பட்ட சட்டமன்ற அமைப்பாதலால் மத்திய சட்டமன்றத்திற்கு எந்நிலையிலும் கட்டுப்பட வேண்டியதில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் குறிப்பாக VII ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பட்டியல்களின்கீழ், மாநில அரசுகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட விசயங்களைப் பொறுத்தமட்டில், மாநில அரசு மத்திய அரசுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என்பதும் தெளிவாகிறது. மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டத்தின் கொள்கை அல்லது நடைமுறை அரசியலமைப்புப்படி சரியா அல்லது சட்டப்படி சரியா என்பது குறித்து மத்திய அரசு ஆராயுமாயின் அதனை மாநில அரசு அனுமதிக்கக் கூடாது. இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டம் பின்வருமாறு திட்டவட்டமாகத் திருத்தப்பட வேண்டும்.

மாநிலத்திற்குள் எழும் பிரச்சனைகள் குறித்து மாநிலச் சட்டமன்றம் தனது சட்ட உரிமை, கொள்கை மாறாத தன்மை ஆகியவற்றுக்குள் வருமாறு சட்டமன்ற நடவடிக்கைகளை இயற்றுமாயின் IIIஆம் பட்டியலிலுள்ள பதிவுகள் தொடர்பாக, குடியரசுத் தலைவர் மறுப்பேதுமின்றி தனது இசைவை அளிக்கும்படி ஆலோசனை கூற வேண்டும்.

இந்நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 200, 201ஆம் பிரிவுகள் குறித்துப் பரிசீலிக்க வேண்டும். 200ஆம் பிரிவு, மாநில ஆளுநர் சட்ட முன்வடிவுகளுக்கு இசைவு அளிப்பது குறித்து விளக்குகிறது. மேலும், மாநில ஆளுநர் தன்னுடைய இசைவை அளிக்க அல்லது இசைவளிப்பதை நிறுத்திவைக்க அல்லது குடியரசுத் தலைவர் பரிசீலிப்பதற்காக சட்ட முன்வடிவை அனுப்பிவைக்க வேண்டுமென்று அறிவிக்க அவருக்கு அதிகாரமளிக்கிறது. அவ்வாறு குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக சட்ட முன்வடிவுகள் எத்தகைய சூழ்நிலையில் அனுப்பிவைக்க வேண்டுமென்று 201ஆம் பிரிவு விளக்குகிறது. 200, 201ஆம் பிரிவுகளின் நோக்கம் பொதுவானது. மாநில ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் சட்ட முன்வடிவிற்கு இசைவளிக்க மறுக்கும்போது மாநில அளவில் ஆளுநரோ மத்திய அரசு அளவில் குடியரசுத் தலைவரோ ஏற்கனவேயுள்ள கோட்பாடுகளைப் பின்பற்றும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இது குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டம் எதுவும் குறிப்பிடவில்லை. தேசிய நிருவாகத்தினர் பரிசீலனைக்காக மாநிலச் சட்டமன்றத்தின் சட்ட முன்வடிவை அனுப்பிவைக்க விதித்துறை எதுவும் அமெரிக்காவிலோ அல்லது ஆஸ்திரேலியாவிலோ இயற்றப்படவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அத்தகைய விதித்துறையை இயற்ற கனடா நாட்டு அரசியலமைப்புச் சட்டம் எடுத்துக்காட்டாக உள்ளது போலும். மாநிலப் பட்டியலின்கீழ் வரும் விஷயங்கள் குறித்து சட்டமன்ற அதிகாரங்களைப் பொறுத்தவரையில் உண்மையான கூட்டாட்சிக் கோட்பாடு மாநிலத்தின் சுயாட்சியைப் பாதிப்பதால் அக் கோட்பாட்டின் தத்துவம் பொய்யானதே. மாநில அரசு சட்டமியற்றும் அதிகாரம் முற்றிலுமாக மாநில சட்டமன்ற அதிகாரத்திற்குள் வருமாயின், குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக சட்ட முன்வடிவை மாநில ஆளுநர் அனுப்பிவைக்க வேண்டிய அவசியமில்லை.

மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டம் எதுவும் குடியாட்சித் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கிவைக்க வேண்டிய அவசியம் கூடாது. அதற்கிணங்க, 31-ஏ பிரிவின் முதல் வரம்பு நிபந்தனையும், 31-சி பிரிவின் வரம்பு நிபந்தனையும் 200, 201ஆம் பிரிவுகளின் வரம்பு நிபந்தனைகளும் நீக்கப்படவேண்டும். 201ஆம் பிரிவின்படி குடியாட்சித் தலைவர் இசைவு அளிப்பதை நிறுத்தி வைத்துக் கொள்வது தொடர்பான விதித்துறையும் நீக்கப்படவேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246ஆம் பிரிவு பின்வருமாறு இருக்க வேண்டுமென்று இக்குழு பரிந்துரைக்கிறது:

"246. நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்கள் மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டங்கள் ஆகியவற்றின் உட்கருத்து :—

(1) இந்த அரசியலமைப்பில் "மத்திய அரசுப் பட்டியல்" என்று குறிப்பிடப்பட்ட பகுதியின் ஏழாம் விவர அட்டவணையில் I பட்டியலில்

குறிப்பிடப்பட்ட எந்தவொரு பொருளைப் பொறுத்தமட்டில் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உண்டு.

(2) ஏழாம் விவர அட்டவணையில் (இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் ''பொதுப் பட்டியல்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது) IIIஆம் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பொருளைப் பொறுத்தமட்டில் நாடாளுமன்றமும் (1) பகுதிக்குட்பட்டு எந்தவொரு மாநிலச் சட்டமன்றமும் சட்டமியற்ற அதிகாரம் உண்டு:

ஆனால், அத்தகைய சட்டம் எதுவும், மாநிலச் சட்டமன்றத்தின் இசைவு பெற்றிருந்தாலன்றி நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படக் கூடாது.

(3) ஏழாம் விவர அட்டவணையில் (இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் ''மாநிலப் பட்டியல்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது) IIஆம் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பொருளைப் பொறுத்தமட்டில், எந்தவொரு மாநிலச் சட்டமன்றம், அந்த மாநிலத்திற்கு அல்லது அதன் பகுதிக்குச் சட்டமியற்றும் அதிகாரம் அந்த மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு மட்டுமே உண்டு.

(4) மாநிலப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு பொருளாக இருப்பினும், மாநிலத்தில் இணைக்கப்படாத, மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின் எந்தவொரு பகுதிக்கான எந்தவொரு பொருளாக இருப்பினும் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

நாடாளுமன்றமும் மாநிலங்களும் சம்பந்தப்பட்ட தங்கள் சட்டமியற்றும் அதிகாரத்தின் தனிச் சிறப்புரிமையைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு 246ஆம் பிரிவு கருத்து தெரிவிக்கப்பட்ட வகையில் அமைய வேண்டுமென்று அரசு கருதுகிறது.

மேலே நாம் பரிந்துரைத்தபடி 254(2)ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை பின்வருமாறு அமைய வேண்டுமென்று இவ்வரசு கருத்துத் தெரிவிக்கிறது.

''ஆனால், மாநிலச் சட்டமன்றம் இயற்றிய எந்தவொரு சட்டத்தில் அதே பொருளைச் சேர்த்து, திருத்தம் செய்து, மாற்றி அல்லது அதற்குப் பதிலாக மற்றொரு சட்டம் இயற்றுவதைப் பொறுத்தமட்டில் எந்தவொரு சமயத்திலும் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரமில்லை.'

பிரிவு 246-A.—246-A என்ற புதிய பிரிவைச் சேர்ப்பது குறித்து பின்வருமாறு நாங்கள் கருத்து தெரிவிக்கிறோம். பொதுப் பட்டியலில் 45ஆம் பதிவு குறித்து எங்கள் கருத்தைக் காண்க.

'246-A மாநில அரசு அமைச்சர் ஒருவரது நடத்தை குறித்து விசாரணைக் கமிஷனுக்கு ஆணையிடும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது. பதவியில் இருக்கும்போது அல்லது பதவியிலிருந்து விலகிய பின்னர், மாநில அமைச்சர் ஒருவரின் அல்லது அனைத்து அமைச்சர்களின் நடத்தை குறித்து விசாரணைக் கமிஷனுக்கு ஆணையிட சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்குக் கிடையாது.'

பிரிவு 247.—சட்டத்தை உரியவாறு பின்பற்றுவதற்கு, மாநில அரசு நீதி நிருவாகத்தை உறுதியாக நம்பலாம். அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்பட்டதில் இருந்து நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களை சிறந்த முறையில் நிருவகிப்பதற்காக கூடுதல் நீதிமன்றங்களை ஏற்படுத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. கூடுதல் நீதிமன்றங்களை அமைப்பதற்கான அத்தகைய விதித்துறையை தேசிய நலன் கருதி அல்லது அவசர காலங்களில் இயற்ற வேண்டியது அவசியமாயிருக்கும்போது அத்தகைய அதிகாரத்தைச் செலுத்தலாம். அண்மையில் பஞ்சாபில் இது நிகழ்ந்தது. ஆனால், அமைதியான மாலங்களிலும் இயல்பான சிவில், குற்றவியல் வழக்குகளை விசாரிக்க நாடாளுமன்றம் கூடுதல் நீதிமன்றங்களை ஏற்படுத்த இயலும் வகையில் 247ஆம் பிரிவு விரிவாக உள்ளது; இது நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களை சிறந்த முறையில் நிருவகிப்பதற்கு உதவுகிறது. அவ்வாறு சட்டத்தை உரியவாறு பின்பற்ற வேண்டியது மாநில அரசின் கடமையாகவும் இருப்பதால் இந்த விதித்துறையை விட்டுவிடலாம். எனினும், தேசிய நெருக்கடி காலத்தில் அல்லது தேசிய நலன் கருதி இத்தகைய நீதிமன்றங்களை ஏற்படுத்த நாடாளுமன்றத்திற்கு இயலும் வகையில் வரம்பு நிபந்தனை ஒன்றை சேர்க்கலாம் என்று நாங்கள் கருத்து தெரிவிக்கிறோம். இருப்பினும் 'தேசிய நலன்' என்ற தொடர் குறித்து அரசியல் அமைப்பிலேயே பொருள் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது. தற்போது இருக்கின்றவாறு 247ஆம் பிரிவை விட்டுவிடலாம் என்பது எங்களது முக்கிய பரிந்துரையாகும்.

பிரிவு 248.—இப்பிரிவு, பொதுப் பட்டியலில் அல்லது மாநிலப் பட்டியலில் குறிப்பிடப்படாத ஒரு பொருள் குறித்து நாடாளுமன்றத்தின் சட்டமியற்றுவதற்கான எஞ்சிய அதிகாரம் பற்றி விளக்குகிறது. ஏனைய முக்கிய கூட்டாட்சி அமைப்புகளில் இந்த விதித்துறைக்கு இணையாக எதுவும் இல்லை. அமெரிக்க அரசியல் அமைப்பில்கூட மாநிலத்திடம் எஞ்சிய அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றபோது கூட்டமைப்பு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை.

மட்டுமே பெற்றுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பில் 10ஆம் திருத்தம் பின்வருமாறு கூறுகிறது :—

"அரசியலமைப்பு, அமெரிக்க நாட்டிற்குப் பிரித்துக் கொடுக்காத அதிகாரங்கள் அல்லது மாநிலங்களுக்கு அது தடை செய்துள்ள அதிகாரங்கள் முறையே மாநிலங்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றன."

ஆஸ்திரேலிய அரசியலமைப்பிலும்கூட எஞ்சிய அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு மாநில சட்டமன்றங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளை புறக்கணித்து எஞ்சிய அதிகாரத்தை மத்திய அரசுக்கு ஒப்படைப்பதானது எதிர்பார்க்கப் பட்ட கூட்டாட்சி அமைப்புக் கருத்துக்கு முரணாக இருக்கிறது. பொதுப் பட்டியலில் அல்லது மாநிலப் பட்டியலில் இல்லாத பொருள் குறித்து சட்டமியற்றும் அதிகாரத்தை மாநில சட்ட மன்றத்திடம் ஒப்படைக்க அரசியலமைப்பின் 248ஆம் பிரிவை மாற்ற வேண்டும். இந்த இரு பட்டியல்களிலும் குறிப்பிடப்படாத அத்தகைய அதிகாரம், வரி விதிப்பது தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 1-ஆம் பட்டியலில் 97ஆம் பதிவை விட்டுவிட வேண்டியது அவசியமாகும். ஆனால், மாநிலப் பட்டியலில் புதிய பிரிவு ஒன்றை சேர்க்க வேண்டும். அது குறித்த எங்களது பரிந்துரைகள் வருமாறு ;—

(a) 248ஆம் பிரிவு விட்டு விடப்பட வேண்டும்.

(b) மத்திய அரசுப் பட்டியலில் 97ஆம் பதிவு விட்டுவிடப்பட வேண்டும்.

(c) 67ஆம் பதிவு என்ற புதிய பதிவை மாநிலப் பட்டியலில் (IIஆம் பட்டியல்) சேர்த்து அதனை பின்வருமாறு படிக்கலாம்.—

"67 (இவ்விரு பட்டியல்களிலும் குறிப் பிடப்படாத எந்த ஒரு வரி உட்பட) பட்டியல் I-ல் அல்லது பட்டியல் III-ல் குறிப்பிடப்படாத எந்த ஒரு பொருள்".

பிரிவு 249.—இப்பிரிவு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிற மற்றொரு பிரிவாகும். இப்பிரிவு வரையறுக்கப்படாத தேசிய நலன் குறித்து மீண்டும் குறிப்பிடுகிறது. இந்தப் பிரிவு தேசிய நலன் கருதி மாநிலப் பட்டியலிலுள்ள ஒரு பொருள் குறித்து சட்டமியற்ற நாடாளுமன்றத் திற்கு அதிகாரம் அளிக்கிறது. மாநிலங்கள் அவையின் தீர்மானம் ஒன்றிற்கு அவையிலுள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப் பினர்கள் வந்திருந்து தேசிய நலன் கருதி அத் தகைய சட்டத்தை கொண்டு வர வாக்களித்தால் அத்தகைய சட்டம் முடிவானதாகக் கொள்ளப் படுகிறது. 249ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு நாடாளுமன்றம் சட்டமியற்றுவதற்கு இது இரண்டாவது முன்மாதிரியாகும். அவ்வாறு சட்டமியற்றியதானது நீதித்துறை விசாரணை அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என உச்ச நீதிமன்றம் மேற்கு வங்க அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயான வழக்கில் (A. I. R. 1963 SC/241) கூறியுள்ளது.

இப்பிரிவைச் சேர்ப்பதற்கு விளக்கமளித்த இந்திய அறிஞர்கள் இப்பிரிவு ஏற்கப்படுவதை விரும்பவில்லை. மேலும், இப்பிரிவு இதுவரை இல்லாத ஒன்று, உலக நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் இதற்கு இணையான விதித்துறை ஏதும் காணப்படவில்லை. தேசிய நலன் என்ற பெயரில், மாநிலங்களின் அவைக்கு கொடுக்கப்பட்டுள்ள முழு அதிகாரம் மாநிலச் சட்டமன்றகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறுவதற்கான ஒரு வழியாகும். தேசிய நலன் என்பதற்கு திட்ட வட்டமான பொருள் விளக்கம் ஏதுமில்லை. எனவே, இந்த அதிகாரம் இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் சட்டமியற்றும் அதிகார முறையை மாநில அரசுகளின் அதிகாரத்தைவிட மேலோங்கி நிற்கும் அதிகாரம் என்றே நிச்சயமாகக் கருதுவர். 249ஆம் பிரிவை தொடர்ந்து வைத்திருப்பதானது மாநிலச் சட்டமன்றங் களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள விவகாரங்களில் மாநிலங்கள் அவை தலையிடுவதை நிலையாக அங்கீகரிப்பதாகும். மக்களவையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மை உறுப்பினர் களின் ஆதரவு மாநில அவைக்கு இருப்பதால் தான் இத்தகைய சூழ்நிலை உருவாகும்.

எனவே, 249ஆம் பிரிவு விட்டுவிடப்படலாம் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.

பிரிவுகள் 250, 251 :

அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்தால், மாநிலப் பட்டியலில் உள்ள எந்தவொரு பொருளைப் பொறுத்தமட்டில், சட்டம் இயற்றுவதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றம் தன்னிடமே வைத்துக் கொள்ளக் கூடாது என்று அரசு கருதுகிறது. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பினும், மக்களால், தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றங்களின்மூலம் மாநிலம் செயல்படு கின்றது. மாநிலத்தில் மக்களால் தெரிந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றம் எவ்வாறிருந்தபோதிலும், அவசரநிலை பிரகடனத்தின்போது, மாநிலப் பட்டியலிலுள்ள எந்தவொரு பொருள் குறித்தும் சட்டம் இயற்று வதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றம் பெற் றிருந்தால், இதுபோன்ற சட்டங்களை இயற்று வதற்கான தீர்மானத்தை மாநிலச் சட்டமன்றத் தின் இரு அவைகளும் நிறைவேற்றியிருந்தால் மட்டுமே அச்சட்டத்தை இயற்ற வேண்டிய அவசியமாகுமென அரசு கருதுகிறது.

அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் அல்லது 249ஆம் பிரிவின்கீழ் நாடாளுமன்றச் சட்டங்களை இயற்றுவதற்கான வாய்ப்புகளை 251ஆம் பிரிவு அளிக்கிறது. மாநிலச் சட்டமன்றங்கள் மூலம் இயற்றப்படும் சட்டங்களுக்கு இது முரண்பாடானதாகும். எனவே அவசர நிலை பிரகடனக் காலத்தில் கூட மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் மாநிலச் சட்டங்களை விடுத்து, இது போன்ற சட்டங்களை இயற்றக்கூடாது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டங்களில் உள்ள கோட்பாடுகள் மாறாமல் இருந்தால்தான் இதனை தொடர்ந்து பின்பற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும்.

எனவே 250, 251 ஆகிய பிரிவுகளும் விட்டு விடப்பட வேண்டும் என்று அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

பிரிவு 252.—நாடாளுமன்றமோ மாநிலங்களோ இயற்றிய சட்டங்களைத் திருத்துவது அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம் குறித்து இருவருக்குமிடையே பரஸ்பர நல்லுறவு இல்லாத போது நாடாளுமன்றமும் மாநிலச் சட்ட மன்றங்களும் அச்சட்டத்தை ரத்து செய்யவோ மாற்றியமைக்கவோ இயலும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 252(2)ஆம் எண் பிரிவு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு தலைமைப் பொறுப்பு வகிப்பதைக் கருதிப் பார்க்கும்போது கூட்டரசு அமைப்பு முறையை மேற்கொள்வதாயிருப்பினும் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்காக சட்டங்களை இயற்றுமாறு மாநிலச் சட்ட மன்றங்களை மத்திய அரசு கேட்டுக் கொள்வது மிகவும் எளிதாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்று மத்திய அரசு கருதினால் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பூட்டும் வகையிலும் மாநிலத்தின் நலன்களைக் கருதிப்பார்த்தும் ஒவ்வொரு மாநிலத்தின் கொள்கைகளையும் கருத்தில் கொண்ட பின்னர் மாநிலச் சட்டமன்றம் அத்தகைய சட்டம் இயற்றுவதற்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு மாதிரி சட்ட முன்வடிவின் நகலை மத்திய அரசு அனுப்பலாம். இச்சூழ்நிலையில் மாநிலச் சட்டமன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும்கூட மாநிலத்தில் சட்டம் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கத் தேவையில்லை.

இவ்வரசின் முக்கியப் பரிந்துரை 252ஆம் பிரிவை விட்டுவிடுவதேயாகும். மாறாக இந்த அதிகாரம் மத்திய அரசிற்கே உரியது. மாநில அரசுக்கே உரியது என்று இல்லாமல் இருவருக்குமிடையே அதிகாரத்தைப் பங்கீடு செய்யும் வகையில் 252(2)ஆம் பிரிவை மாற்றியமைக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிவு 304.—ஒரு சில சட்ட முன் வடிவுகளுக்கு குடியாட்சித் தலைவரின் அனுமதி பெற வேண்டுமென்று சொல்கிற 304 (பி) பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப்பட வேண்டும். 8.1 பாராவின்கீழ் நமது அரசின் கருத்துரையைக் காண்க.

பிரிவுகள் 154(2)(b), 258(2), 164 :

சட்டமியற்றும் அதிகாரம், அரசியலமைப்பின்படி மத்திய அரசுக்கு அல்லது மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு அதிகார அமைப்புகளிடம் பிரித்துக் கொடுக்கப்படும் அதிகாரத்தைத் தவிர சட்டமியற்றும் பணி நிலைபெற்றிருக்கும் இடங்களிலெல்லாம் அவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை அவை பிரித்துக் கொடுக்க முடியாது (அளிக்கப்பட்ட அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது). இவ்வாறாக, நாடாளுமன்றத்திற்கு அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் பிரித்துக் கொடுக்க இயலாது. இச்சந்தர்ப்பத்தில் 154(2)(b), 258(2) பிரிவுகளைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

154(2)(b) பிரிவின்கீழ் ஆளுநருக்கு அடுத்துள்ள சார்நிலை அதிகாரி எவருக்கும் அதிகாரத்தை சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் வழங்கலாம். இருந்தாலும், 258(2) பிரிவின்கீழ் நாடாளுமன்றம், மாநில அரசு மீது அல்லது அதன் அதிகாரிகள் அல்லது அதிகார மன்றங்களின் மீது சட்டத்தின் மூலம் அதிகாரங்களை வழங்கலாம்; கடமைகளைச் சுமத்தலாம் இவ்வாறு செய்வதானது, நாடாளுமன்றத்திற்குள்ள கூடுதல் சட்டமியற்றும் அதிகாரத்தைக் குறிக்கும். 258(1) பிரிவு மாநில அரசின் இசைவைப் பெறுவதற்கு வெளிப்படையாக வகை செய்கிறபோது, மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வழங்கும் மத்திய அரசின் அதிகாரம் குறித்து விளக்குகையில் இவ்விதித்துறை 154(2)(b), 258(2) ஆகிய இரு பிரிவுகளிலும் இல்லை என்பது தெளிவாகிறது. எனவே, இவ்விரு பிரிவுகளிலும் கருதியுள்ளபடி மத்திய அரசு அதிகாரத்தைச் செலுத்த வேண்டியிருந்தால் மாநில அரசின் இசைவு பெறப்பட வேண்டும் என்கிற வகையில் இவ்விரு பிரிவுகளிலும் திருத்தம் செய்ய வேண்டுமென்று நாங்கள் தெரிவிக்கிறோம்.

164ஆம் பிரிவைப் பொறுத்தமட்டில், ''ஆளுநர்ப் பணி'' என்ற தலைப்பில் பாகம் III-ல் நாங்கள் கொடுத்துள்ள பரிந்துரையில் இதனைக் குறிப்பிடலாம்.

மத்திய அரசு பட்டியல் (பட்டியல் I), மாநில அரசுப் பட்டியல் (பட்டியல் II) பொதுப் பட்டியல்

(பட்டியல் III) ஆகியவற்றில் சேர்க்கைகள் திருத்தங்கள், நீக்கங்கள் செய்யப்பட வேண்டு மென்று இவ் அரசு கருத்து தெரிவிக்கிறது.

பட்டியல் I. மத்திய அரசுப் பட்டியல் :

பதிவு 2-A.—''மத்திய அரசின் ஆயுதம் தாங்கிய படைப் பிரிவை அல்லது மத்திய அரசின் அல்லது அதன் படைப்பிரிவு அல்லது பிரிவின் கட்டுப் பாட்டிற்கு உட்பட்டு வேறொரு படைப் பிரிவை அல்லது வேறொரு படைப் பிரிவை மாநிலத்தின் சிவில் நிருவாகத்திற்கு உதவியாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அனுப்பி வைத்தல், அவ்வாறு அனுப்புகையில் அத்தகைய படைப் பிரிவுகளில் உள்ளவர்களுக்குள்ள அதிகாரங்கள், அதிகார வரம்பு, சிறப்புரிமைகள், பொறுப்புகள்''.

மத்திய அரசின் ஆயுதம் தாங்கிய படைப் பிரிவு களாகிய எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வு காவற்படை முதலியவை, மாநில அரசு கேட்டுக் கொள்வதன் பேரில், மாநில சிவில் நிர் வாகத்திற்கு உதவியாக மாநிலத்திற்கு அனுப்பப் படுகிறபோது, அப் படைப் பிரிவுகளைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளிக்கும் பொருட்டு, 1976ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்திரெண்டாம் திருத்த) சட்டத்தின் மூலம், 2எ பிரிவு கொண்டு வரப்பட்டது. கடுமையான கலவரங்கள் ஏற்படும் நிலைமைகளில் அவற்றைக் கட்டுப்படுத்தி ஒடுக்குவதற்கு, மாநிலக் காவற் படையினருக்கு துணையாகத் தேவைப் படும் என்று மாநில அரசு நியாயமாகக் கருதும்போது மத்திய அரசு காவற் படையைக் கேட்டுப் பெற மாநில அரசுக்கு உரிமை உண்டு. பொது அமை தியைப் பாதுகாத்துப் பேணவும், பொது மக்களின் சொத்துக்களைப் பாதுகாத்து, கலவரங்களை அடக்குவதற்கும் மத்திய அரசு காவற் படையைக் கேட்டுப் பெறுவது மாநில அரசு மட்டுமே ஆகும். எனவே, 2ஏ பிரிவு நீக்கப்பட வேண்டுமென்று இவ் வரசு கருதுகிறது.

பதிவு 7.—'' பாதுகாப்புக்கு அல்லது போர் நடத்துவதற்கு அவசியமென சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் அறிவித்தத் தொழில்கள் '' பதிவு 7 பின்வருமாறு மாற்றியமைக்கப்படலாம் என்று அரசு தெரிவிக்கின்றது :—

'' போருக்கு அவசியமான தொழில்கள் ''

பதிவு 24.—'' இயந்திர விசையால் இயங்கும் கப்பல்களைப் பொறுத்தவரையில் தேசிய நீர் வழிகளாக சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு நீர்வழிகளில் கப்பல் போக்குவரத்தும் நீர்வழிப் போக்குவரத்தும்; அந்நீர்வழிகளில் செல்வதற்கான விதி ''.

இப்பதிவு விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டதொரு மாநிலத்திற்குள் மட்டுமே அமைந்துள்ள ஆறுகளின் உள்நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்து நீர்வழிப் போக்கு வரத்து மேற்கொள்ள இப்பதிவு அனுமதிக்கலாம். வேறு வகையில் கூறுவதானால், பல மாநில ஆறுகளின் உள்நாட்டு நீர்வழிகளில் கப்பல் போக்குவரத்தையும் நீர்வழிப் போக்குவரத்தை யும் இது சேர்க்கலாம். மத்திய அரசு அல்லது மத்திய நாடாளுமன்றம் தலையிட பெருமளவு அதிகாரம் பெற்றிராத மாநிலங்களுக்கு முழுவதும் சொந்தமான மாநிலங்களுக்குள் ஓடும் உள்நாட்டு நீர்நிலைகளின் கப்பல் போக்குவரத்து நீர்வழிப் போக்குவரத்து. எனவே 24ஆம் பதிவு திருத்தப்படவேண்டும். இத்துடன் '' தேசிய நீர்வழிகள் என்று சட்டத்தின்மூலம் நாடாளு மன்றத்தால் அறிவிக்கப்பட்டவை '' என்பதை விட்டுவிட வேண்டும்.

மேலே நாம் கூறியுள்ளதன் அடிப்படையில், நாங்கள் பின்வரும் மாற்றத்தை தெரிவிக்கிறோம். '' பதிவு 24, பன் மாநில ஆறுகளில் உள்நாட்டு நீர்வழிகளில் கப்பல் போக்குவரத்தும், நீர் வழிப் போக்குவரத்தும் ; அத்தகைய நீர்வழிகளின் போக்குவரத்து விதி ''.

பகுதி 25.— '' கடலோரக் கப்பல் போக்கு வரத்து, நீர்வழிப் போக்குவரத்து உட்பட ஆழ்கடல் கப்பல் போக்குவரத்தும் நீர்வழிப் போக்குவரத்தும் வாணிகக் கப்பல் தொகுதிக் கல்வி, பயிற்சிக்கு வகை செய்தல் ; மாநிலங்கள், ஏனைய முகவ ரமைப்புகள் வழங்கும் கல்வி பயிற்சியை முறைப்படுத்தல் ''.

மத்திய-மாநில அரசுப் பட்டியலில் 25ஆம் பதிவு தொடர்பாக அரசு தெரிவித்துள்ளதைக் கருத்திற்கொண்டு, மேற்சொன்ன 25ஆம் பதிவில், ''வாணிகக் கப்பல் தொகுதிக் கல்வி, பயிற்சிக்கு வகை செய்தல், மாநிலங்கள், ஏனைய முகவரமைப் புகள் வழங்கும் கல்வி, பயிற்சியை முறைப்படுத்தல்'' என்னும் சொற்றொடரை விட்டுவிட வேண்டும் என்று அரசு தெரிவிக்கின்றது.

பதிவு 30.—''இரயில், கடல் அல்லது ஆகாயம் வழியாக அல்லது தேசிய நீர்வழிகளில் இயந்திர விசையால் இயங்கும் கப்பல்களில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லுதல் ''.

நாம் 24ஆம் பதிவுக்கு மாற்றங்களைத் தெரிவித்ததால், அதன் விளைவாக 30ஆம் பதிவில் மாற்றங்கள் செய்யவேண்டியுள்ளது. எனவே, '' தேசிய நீர்வழிகள் என்பதில் வரும் '' தேசிய '' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''பல மாநில ஆறு'' என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும் ''. திருத்தத்திற்குப் பின் 30ஆம் பிரிவை பின்வருமாறு படிக்க வேண்டும் என்பது கருத்து:—

''இரயில், கடல் அல்லது ஆகாயம் வழியாக அல்லது பல மாநில ஆற்று நீர் வழிகளில் இயந்திர விசையால் இயங்கும் கப்பல்களில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லுதல் ''.

பதிவு 31.—அஞ்சல், தந்தி, ''தொலைபேசி, கம்பியில்லாத் தந்தி, ஒலிபரப்புதல் ஏனைய இதுபோன்ற செய்தி தொடர்பு சாதனங்கள் ''.

பாகம் IV.—''நிருவாக உறவுகள் ''என்பதில் 4.10 வினாவுக்கான பதிலில் நாங்கள் தெரிவித்த குறிப்புகளைக் காண்க.

பதிவு 32.—மத்திய அரசின் சொத்து அதினின்று கிடைக்கும் வருவாய், ஆனால் மாநிலம் ஒன்றில் அமைந்துள்ள சொத்தைப் பொறுத்த வரையில், நாடாளுமன்றம் சட்டத்தில் வேறு வகையில் வகை செய்திருந்தாலன்றி மாநில அரசு சட்டமியற்றுவதற்குட்பட்டதாகும்".

''நாடாளுமன்றம் சட்டத்தில் வேறுவகையில் வகை செய்யப்பட்டிருந்தாலன்றி '' என்னும் தொடர் அவசியமற்றதாகும். அத்தகைய விதித் துறை 285ஆம் பிரிவிலேயே இயற்றப்பட்டுள்ளது. 285ஆம் பிரிவின் (1) பகுதி, '' மத்திய அரசின் சொத்துக்கு நாடளுமன்றம் சட்டத்தில் வேறு வகையில் வகை செய்திருந்தாலன்றி, மாநில அரசு மாநிலத்திற்குள் உள்ள ஏதேனும் அதிகார மன்றம் விதிக்கும் வரிகள் அனைத்தினின்றும் விலக்களிக்கப்படும் '' என்ற வாசகத்தைக் குறிப்பிடலாம்.

'' நாடாளுமன்றம் சட்டத்தில் வேறு வகையில் வகை செய்திருந்தாலன்றி '' என்னும் சொற் தொடரை விட்டுவிடலாம் என்று அரசு பரிந்துரைக்கின்றது.

பதிவு 33.—சொத்தை கையகப்படுத்தல், கேட்டுப் பெறுதல் பற்றிய நிலையற்ற விதித் துறை (கடந்த காலத்தில் இருந்து வந்ததும் குறிப்பாக அரசியலமைப்பின் 31ஆம் பிரிவு) விட்டுவிடப் பட்டுள்ளது.

முதலில் இருந்தது போன்றே அப் பதிவை மீண்டும் கொண்டுவர இந்தஅரசு கருத்துத் தெரிவித் துள்ளது. அப் பதிவின் வாசகம் பின்வருமாறு :—

'' மத்திய அரசின் காரியங்களுக்காகச் சொத்தினை கையகப்படுத்தல், கேட்டுப் பெறுதல் ''.

பதிவு 40.—''மத்திய அரசால் அல்லது மாநில அரசால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் ''.

மாநில அரசால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் முழுவதும் அம் மாநிலம் சம்பந்தப்பட்ட விவகாரமாகும். இது அளவில் அல்லது தன்மையில் தேசிய அளவிலான விவகாரமாகாது. எனவே மத்திய அரசு பட்டியலில் '' மாநில அரசு நடத்தும் பரிசுச் சீட்டுகளை '' வைத்திருப்பதில் காரணமோ நியாயமோ இல்லை.

எனவே, 40ஆம் பதிவிலிருந்து '' அல்லது மாநில அரசால் '' என்னும் தொடரை விட்டுவிட வேண்டும்.

'' மாநில அரசால் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் '' என்னும் புதிய பதிவு மாநிலப் பட்டிய லில் சேர்க்கப்படலாம் என்று அரசு பரிந்துரைக் கின்றது.

பதிவு 45.— ''வங்கியியல் ''.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி நாடுகளில், மாநிலங்களும் வங்கிகளை நிறுவியுள்ளன. எனவே, வங்கியியல் அமைப்பு மத்திய அரசிடம் மட்டுமே இருக்கக் கூடாது. ஆனாலும், முக்கிய வங்கியாக இருப்பதும் ஏனைய வங்கிகளுக்கு விதிகள், விதிமுறைகளை வகுப்பதும், வங்கிகளின் வங்கியாக பொருளாதார நிபுணர்கள் வேறுபடுத்திக் குறிப்பிட்டுள்ளதுமான மத்திய வங்கிகள் மத்திய அரசுப்பட்டியலில் இருக்க வேண்டும். எனவே, 45ஆம் பதிவல் '' வங்கி யியல் '' என்னும் சொல்லுக்குப் பதிலாக '' மத்திய வங்கி அல்லது ரிசர்வ் வங்கி '' என்ற சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

'' வங்கியியல் '' என்னும் பதிவை மத்திய-மாநில அரசுப் பொதுப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று அரசு தெரிவிக்கின்றது.

பதிவு 48.—'' பங்கு விற்பனை அங்காடிகள், பங்கு தவணை விற்பனை அங்காடிகள்''.

'' பங்கு விற்பனை அங்காடிகள், பங்கு தவணை விற்பனை அங்காடிகள் '' எதுவாயிருந் தாலும், பன் மாநில சம்பந்தப்பட்டிருப்பதாயிருப்ப தாலும் உள்ளூர் விற்பனை வணிக நடவடிக்கைகளைக் கவனிப்பதாயிருப்பதாலும் மத்திய அரசுப் பட்டியலில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

இப் பதிவு '' பங்கு தவணை விற்பனை அங்காடிகளுக்குத் '' தொடர்புடையதாயிருக்கிற வரையில் அதனை மாநிலப் பட்டியலில் சேர்க்கலாம் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

பதிவு 51.—'' இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் அல்லது ஒரு மாநிலத்தில் இருந்து வேறொரு மாநிலத்திற்கு அனுப்பப்படும் பொருட்களின் தரத்தின் அளவை உறுதிப் படுத்தல் ''.

பதிவு 51-ல் '' அல்லது ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு அனுப்பப்படும் '' என்ற சொற்றொடரை விட்டுவிட அரசு பரிந்துரைக் கின்றது. ஏனெனில் ஒவ்வொரு மாநிலமும் அம்மாநிலம் பிற மாநிலங்களிலிருந்து வாங்கும் பொருட்களின் தரத்தைத் தாமே தனிப்பட்ட முறையில் முடிவு செய்ய இயலும். அம் மாநிலங்கள் அனுப்பும் பொருட்களை ஏற்கும் முடிவு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விருப்பத் திற்கு விடப்பட வேண்டியுள்ளது.

"இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தின் அளவை உறுதிப்படுத்தல்" என்று பதிவு 51 இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

பதிவு 52.—"மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழிருப்பது பொது நலனுக்குகந்ததென நாடாளுமன்றம் சட்டமியற்றி அறிவிக்கக்கூடிய தொழில்கள்".

பட்டியல் I-ல் 52ஆம் பதிவில் 'தொழில்கள்' என்பது மத்திய அரசின் நிருவாகப் பொறுப்பில் வருகிறது. பொதுமக்கள் நலன் கருதி இதனை மத்திய அரசு நிருவகிப்பது உகந்ததென சட்டம் ஒன்றின் மூலம் நாடாளுமன்றம் அறிவிக்கிறது. நாடாளுமன்றம் மட்டுமே சட்டமியற்றும் அதிகார வரம்பிற்குள் இது வருகிறது. இதனையொட்டி தொழில்கள் (வளர்ச்சி — முறைப்படுத்துதல்) சட்டம் (மத்தியச் சட்டம் 65/1951) நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்றம் பல இனங்களை இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளது. இதன் விளைவாக பட்டியல் IIல் 24ஆம் பதிவில் கூறப்பட்டுள்ள அதாவது பட்டியல் I-ல் 7, 52ஆம் பதிவுகளின் விதித்துறைகளுக்குட்பட்ட "தொழில்கள்" தொடர்பாகச் சட்டமியற்றும் அதிகாரம் பயனற்றதாகி விடுகிறது. ஏனெனில் நாடாளுமன்றம் யாதொரு தொழிலை கட்டுப்பாட்டுத் தொழிலாக 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்துதல்) சட்டத்தின் அல்லது 52ஆம் பதிவில் வேறொரு சட்டத்தின் வரம்பிற்குள் சேர்த்துள்ளது வரை மாநில சட்டமன்றத்திற்குள்ள சட்டமியற்றும் அதிகாரம் பறிபோய் விடுகிறது. இது அரசியலமைப்பின் கூட்டாட்சி முறையை நிச்சயமாகப் பாதிக்கிறது. இதனை வேறு வகையில் சொல்லப்போனால் பட்டியல் I-ல் 52ஆம் பதிவின்கீழ் நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களின்கீழ் வருகிற கட்டுப்பாட்டுத் தொழில்களைப் பொறுத்தவரையில் மாநிலச் சட்டமன்றம் எதுவும் செய்ய முடியாது.

மேலும், "பொதுமக்கள் நலன் கருதி" என்ற சொற்றொடர் பரந்து காணப்படுவதால் எத் தொழிலையும் 52ஆம் பதிவின் வரம்பிற்குள் கொண்டு வரலாம். எனவே, "தேசிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான முக்கியத் தொழில்கள்" அப்பதிவிலேயே குறிப்பிடப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உறுதியாகக் கருதுகிறது பதிவு 52 பின்வருமாறு இருக்கலாம்:—

52. தொழில்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

1. **உலோகவியல் தொழில் :**

(அ) இரும்பு—

(1) இரும்பு உருக்கு (உலோகம்).

(2) இரும்புக் கலவைகள்.

(3) இரும்பு, உருக்கு வார்ப்படங்கள், உலைகள்.

(4) இரும்பு, உருக்குக் கட்டுமானங்கள்.

(5) இரும்பு, உருக்குக் குழாய்கள்.

(6) சிறப்பு உருக்குகள்.

(7) ஏனைய இரும்பு, உருக்குப் பொருள்கள்.

(ஆ) இரும்பு அல்லாதவை—

(1) நுட்பமான உலோகங்கள், தங்கம், வெள்ளி அவற்றின் கலவைகள் உட்பட.

(2) ஏனைய இரும்பல்லாத உலோகங்களும் அவற்றின் கலவைகளும்.

(3) ஓரளவு தயாரிப்புகளும், தயாரிப்புகளும்.

2. **எரி பொருள் :**

(1) நிலக்கரி, லிக்னைட், கல்கரி அவற்றின் பொருள்கள்.

(2) கனிம எண்ணெய் (சுத்தம் செய்யப்படாத எண்ணெய்), மோட்டார் விமான ஸ்பிரிட், டீசல் எண்ணெய், மண்ணெண்ணெய், எரி பொருள் எண்ணெய், டைவர்ஸ் ஹைடிரோ கார்பன் எண்ணெய்கள், அவற்றின் கலவைகள், செயற்கை எரி பொருள்கள், உட்பட உயவு எண்ணெய்கள் அவை போன்றவை.

(3) எரி பொருள் வாயுக்கள்—(நிலக்கரி வாயு, இயற்கை வாயு அவை போன்றவை).

3. **நீராவி உற்பத்தி எந்திரங்கள் :**

நீராவி உற்பத்தி எந்திரங்கள்.

4. **இயற்கை சக்தியை எந்திர சக்தியாக மாற்றும் எந்திரங்கள் (மின் உற்பத்தி எந்திரங்கள் நீங்கலாக):**

(1) நீராவி எந்திரங்கள், சுழல் எந்திரங்கள்

(2) உள் காற்றழுத்த எந்திரங்கள்.

5. **தகவல் தொடர்புகள் :**

(1) தொலைபேசிகள்.

(2) தந்தி சாதனம்.

(3) கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம்.

(4) ரேடியோ ரிசீர்வர்கள், ஒலி பெருக்கி பொதுமேடையில் உரையாற்ற பயன்படும் சாதனம் உட்பட.

(5) தொலைக்காட்சி பெட்டிகள்.

(6) டெலிபிரிண்டர்கள்.

6. போக்குவரத்து :

(1) விமானம்.

(2) விசையால் இயங்கும் கப்பல்கள். ஏனைய கலன்கள்.

(3) ரயில் எஞ்சின்கள்.

(4) ரயில்வே ரோலிங் ஸ்டாக்.

(5) வாகனங்கள் (மோட்டார் கார், பேருந்துகள், டிரக்குகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், அவை போன்றவை).

7. இரசாயன உரங்கள் :

(1) கரிமமல்லாத உரங்கள்.

(2) கரிம உரங்கள்.

(3) கலப்பு உரங்கள்.

8. இரசாயனங்கள் (இரசாயன உரங்கள் நீங்கலாக):

(1) நாப்தலின், ஆந்திரசீன் முதலியன போன்ற நிலக்கீல் வடிப்புப் பொருள்கள்.

(2) வெடி மருந்து, வெடி மருந்து திரிகள் உட்பட வெடி மருந்துகள்.

9. காகிதம், காகிதப் பொருள்கள் உட்பட காகிதக் கூழ் :

(1) காகிதம்—எழுதுதல், அச்சிடுதல், சிப்பமிடுதல்.

(2) செய்தித்தாள் காகிதம்.

(3) காகிதக் கூழ், எந்திர, இரசாயனக் காகிதக் கூழ், கரையக் கூடிய காகிதக் கூழ் உட்பட.

10. சர்க்கரை :

சர்க்கரை.

11. பாதுகாப்பு கருவிகள் தயாரிப்புத் தொழில் :

படைக் கலன்கள், தோட்டாக்கள்.

இவையும் கூட தேசிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான தொழில்களாக அல்லது முக்கிய தொழில்களுக்கு மட்டுமே பொருந்த வேண்டும். பின்னர் பட்டியல் II-ல் 24ஆம் பதிவு பின் வருமாறு இருக்க வேண்டும் :—

"பட்டியல் I—ல் 7, 52ஆம் பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்கள் தவிர ஏனைய தொழில்கள்".

பதிவுகள் 53, 54, 55.

பதிவு 53.—எண்ணெய் வயல்கள், தாது எண்ணெய் ஆதாரங்களை முறைப்படுத்துதலும் மேம்படுத்துதலும் ; பெட்ரோலியமும் பெட்ரோலியப் பொருட்களும், ஏனைய திரவங்கள் நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் மிக அபாயகரமான எளிதில் பற்றக் கூடியவையென அறிவிக்கப்பட்ட பொருட்கள்".

பதிவு 54.—"மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழிருப்பது பொது நலனிற்கு உகந்ததென நாடாளுமன்றம் சட்டமியற்றி அறிவிக்கும் அத்தகைய முறைப்படுத்தும், மேம்படுத்தும் அளவிற்கு சுரங்கங்கள், தாதுப் பொருட்கள் வளர்ச்சியினை முறைப்படுத்துதல்".

பதிவு 55 : தொழிலாளர்களை முறைப்படுத்துதல், சுரங்கம், எண்ணெய் வயல்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு.—இப்பதிவுகள் சட்டமியற்றுவது தொடர்பாக மத்திய மாநில அரசுகளின் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்படுவது பொருத்தமானதாகும்.

பதிவு 56.—"பன்மாநில ஆறுகள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள் முறைப்படுத்தல், மேம்படுத்துதல் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பது பொது நலனுக்கு உகந்தது என நாடாளுமன்றம் சட்டமியற்றுவதன் மூலம் அறிவிக்கக்கூடிய அளவிற்கு அத்தகைய முறைப்படுத்துதல் மேம்படுத்துதல்".

இப்பதிவு குறித்து மாநில அரசு ஏற்கனவே தனது கருத்தினை அளித்துள்ளது. இவ் அரசு 56ஆம் பதிவு பின்வருமாறு அமைய வேண்டுமென பரிந்துரைக்கிறது :—

"56 பன்மாநில ஆறுகள், ஆற்றுப் பள்ளத் தாக்குகள் முறைப்படுத்துதல், மேம்படுத்துதல் பன் மாநில ஆற்றின் நீரை இந்தியாவின் வேறு பிரதேசங்களுக்குத் திருப்பி விடுதல், பன் மாநில நதி நீரினை அம்மாநிலங்களுக்கிடையே (மாநிலங்களுக்குள் உள்ள பயன் நீங்கலாக) பகிர்ந்தளித்தல் போன்ற பணிகள் அவ்வாறு முறைப்படுத்துதல், மேம்படுத்துதல், திருப்பி விடுதல், பகிர்ந்தளித்தல் ஆகியவை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழிருப்பது பொது நலனுக்குகந்தது என்று நாடாளுமன்றம் சட்டமியற்றி அறிவிக்கக்கூடிய அளவிற்கு".

பதிவு 58.—"மத்திய முகவரமைப்புகள் மூலம் உப்பினை உற்பத்தி செய்தல், வழங்குதல், பகிர்ந்தளித்தல், ஏனைய முகவரமைப்புகள் மூலம் உப்பு உற்பத்தி வழங்கல், பகிர்ந்தளிப்பை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல்".

இந்தப் பதிவில் "மற்ற முகவரைமைப்புகள் மூலம் உப்பு உற்பத்தியை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், உப்பை வழங்கல், பகிர்ந்

தளித்தல் ஆகியவை அனைத்தும் உள்ளூர் நடவடிக்கைகள் ஆகும் ''. இந்த இனத்தை 58ஆம் பதிவில் சேர்ப்பது அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அடிப்படைக் கொள்கைக்கு இணங்க அமையவில்லை. எனவே இச் சொற்றொடரை 58ஆம் பதிவிலிருந்து நீக்க வேண்டும்.

58ஆம் பதிவு பின்வருமாறு இருக்க வேண்டுமென்று அரசு பரிந்துரைக்கிறது:—

'' மத்திய முகவராமைப்புகள் மூலம் உப்பினை உற்பத்தி செய்தல், வழங்குதல், பகிர்ந்தளித்தல். ''

பதிவு 60.—''திரையிடப்படுவதற்காக, திரைப் படங்களுக்கு அனுமதி அளித்தல் ''.

மாநிலச் சட்டமன்றத்துடன் தொடர்பான சிக்கல்கள் அனைத்தும் குறித்து சட்டமியற்ற இயலும் வகையில் இப் பதிவு IIஆம் பட்டியலில் இடம் பெறுவது பொருத்தமாகும். இப் பதிவின் உண்மையான நோக்கினைக் கருதிப் பார்க்கும் போது, மத்திய அரசு நியமித்துள்ள தணிக்கைக் குழுவின் மூலம் தணிக்கை செய்யும் தற்போதைய முறை மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் தேவையான உரிமையினை நல்குகின்றதா இல்லையா என்பதனை மனதில் கொள்ள வேண்டும். இந்தியா தற்போது மொழிவாரி அடிப்படையில் அமைந்துள்ளது. மரபுகள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் ஆகியவை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மத நம்பிக்கைகள்கூட சில சமயங்களில் வேறுபடுகின்றன. செய்திப் போக்குவரத்து தகவலில், திரைப்படம் காண்பித்தல் தற்போது தனி இடத்தைப் பெற்றுள்ளது. நமது நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள மக்களின் பல்வேறு விருப்பங்கள், பல்வேறு பண்பாடுகள், மாறுபட்ட பழக்க வழக்கங்களைப் பொறுத்தமட்டில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கான அதிகாரமானது, மாநிலங்களின் மேற்பார்வை, கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவை நாடாளுமன்றம் சட்டமியற்றும் ஓர் இனமாக இருக்கக் கூடாது.

மாநிலங்களின் தன்னிச்சையான வளர்ச்சியினைக் கருதிப் பார்த்து இப் பதிவு, மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டியுள்ளதென்று அரசு கருத்துரைக்கின்றது.

பதிவு 62.—இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்தில், தேசிய நூலகம், இந்திய அருங்காட்சியகம், பேரரசு போர் அருங்காட்சியகம், விக்டோரியா நினைவாலயம், இந்திய போர் நினைவாலயம் ஆகிய நிறுவனங்களும் மத்திய அரசு முழுவதுமாக அல்லது மாநில அரசால் ஓரளவு நிதியுதவி அளிக்கும் இதையொத்த பிற நிறுவனங்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக நாடாளுமன்றத்தால் சட்டம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் '' முன்னர் செய்துள்ள கருத்துரைகளைக் கருதிப் பார்த்து அரசு பின்வருமாறு பரிந்துரைக்கிறது :—

62ஆம் பதிவிலிருந்து '' அல்லது பகுதி தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாடாளுமன்றம் சட்டமியற்றுவதன் மூலம் அறிவிக்க வேண்டும் ''.

பதிவு 63.—''பனாரஸ் இந்து பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம், டெல்லி பல்கலைக் கழகம் என இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்தில் இருந்த நிறுவனங்கள் 371-E பிரிவின்படி நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக நாடாளுமன்றம் சட்டமியற்றுவதன் மூலம் அறிவித்த பிற நிறுவனம் ''.

63ஆம் பதிவில் '' தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றுவதன் மூலம் அறிவிக்கும் ஏனைய நிறுவனம்'' என்ற கடைசிச் சொற்றொடர் நீக்கப்பட வேண்டும் என அரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 64.—'' மத்திய அரசிடமிருந்து முழுவதுமாக அல்லது ஒரு பகுதி நிதியுதவி பெற்று தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக நாடாளுமன்றத்தால் சட்டம் இயற்றி அறிவிக்கப்பட்ட அறிவியல் அல்லது தொழில் நுட்பக் கல்விக்கான நிறுவனங்கள் ''.

64ஆம் பதிவில், அரசு பின்வருமாறு பரிந்துரைக்கிறது. '' அல்லது ஒரு பகுதி நிதியுதவி பெற்று, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக நாடாளுமன்றத்தால் சட்டம் இயற்றி அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் '' என்ற சொற்றொடரை நீக்க வேண்டுமென்று அரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 66.—'' உயர் கல்வி அல்லது ஆராய்ச்சி அறிவியலுக்கான நிறுவனங்கள், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் கல்வித் தரங்களை ஒருங்கிணைத்தல் முடிவு செய்தல் ''.

பதிவு 67.— '' நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தின் மூலம் தேசிய புராதன சரித்திர கால நினைவுச் சின்னங்கள், பதிவேடுகள் அகழ்வாராய்ச்சிக்குரிய இடங்கள் அகழ்வாராய்ச்சி இடிபாடுகள் '' முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிவிக்கப்படும்.

இவ்விரு பதிவுகளும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமென அரசு கருதுகிறது.

பதிவு 76.— '' மத்திய—மாநில அரசுகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் ''—

மாநில அரசுகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். எனவே,

அரசு பின்வருமாறு பரிந்துரைக்கிறது. அதாவது, பதிவு 76-ல் "மற்றும் மாநில அரசுகளுடைய" என்னும் சொற்கள் நீக்கப்பட வேண்டும்.

பதிவு 84.—"பின்வருபவை நீங்கலாக, இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை அல்லது ஏனைய பொருள்கள் மீதான ஆயத் தீர்வைகள்:—

(அ) மனிதர்கள் உட்கொள்ளக் கூடிய சாராவி கலந்த மதுவகைகள்.

(ஆ) அபின், கஞ்சாச் செடி, ஏனைய, போதை மருந்துகள் (Narcotic Drugs)போதை தரும் பொருள்கள் ஆனால், இப்பதிவைச் சேர்ந்த (b) துணைப் பாராவில் சேர்க்கப்பட்டுள்ள சாராவி அடங்கிய மருந்து ஒப்பனைப் பொருள்கள் அல்லது ஏனைய யாதொரு பொருள் (Substance) உட்பட"

சாராவி அல்லது சாராவி உட்பட யாதொரு மூலப் பொருள் கலந்து தயாரிக்கப்படும் மருந்து அல்லது ஒப்பனைப் பொருள்களுக்கு ஆயத் தீர்வை விதிக்கும் அதிகாரம் மாநில சட்ட மன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டும்; மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலின் 51ஆம் பதிவிலிருந்து மனிதர்கள் உட்கொள்ளக் கூடிய சாராவி கலந்த மது வகைகள், அபின் (Opium), கஞ்சாச் செடி (Indian hemp) ஏனைய போதை மருந்துகள், போதைப் பொருள்கள் ஆகியவற்றிற்கு ஆயத் தீர்வை விதிக்கும் அதிகாரம் மாநில சட்டமன்றத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம். ஆனால், சாராவி கலந்து தயாரிக்கப்படும் மருந்துகள், ஒப்பனைப் பொருள்கள், அல்லது அபினில் சேர்க்கப்பட்டுள்ள யாதொரு பொருள் கஞ்சாச் செடி ஏனைய போதை மருந்துகள், போதைப் பொருள்கள் ஆகியவை அப் பதிவிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நீக்கப்பட்டது அவசியமல்ல. இதன் விளைவாக, அரசு பின்வருமாறு பரிந்துரைக்கிறது:

"மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் 51ஆம் பதிவு நீக்கப்பட்டதை விட்டுவிட வேண்டும்; மத்திய அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் 84ஆம் பதிவு சேர்க்கப்பட்டுள்ள வற்றையும் விட்டுவிட வேண்டும்.

பதிவு 85.—"நிறுவன வரி".

இப்பதிவு தொடர்பாக, 'நிதி தொடர்பான உறவுகள்' என்பது குறித்து 'பகுதி V-ல் நாங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைப் பார்க்கவும்.

பதிவு 90: "பங்கு ஆவண மாற்று நிலையங்கள் வருங்கால பங்கு விற்பனைக் களங்கள் ஆகியவற்றில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்காக முத்திரைத்தாள் தீர்வைகள் நீங்கலாக விதிக்கப்படும் வரிகள்".

பதிவு 48 தொடர்பாக நாங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கிணங்க "மற்றும் வருங்கால பங்கு விற்பனைக் களங்கள்" என்ற பதிவுகள் விட்டு விடப்பட வேண்டும். "வருங்கால பங்கு விற்பனைக் களங்கள் மீதான வரிகள்" என்னும் பதிவுகள், மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

பதிவு 97.—"பட்டியல் II அல்லது பட்டியல் III-ல் குறிப்பிடப்படாத யாதொரு வரி உட்பட மேற்சொன்ன இரு பட்டியல்களில் எந்தப் பட்டியலிலும் விவரிக்கப்படாத ஏனைய யாதொரு பொருள்."

இப்பதிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 248ஆம் பிரிவின் தொடர் முடிவாகத் தோன்றுவதால் 248 பிரிவைக் குறித்து ஆராய்ந்தபோது பிரிவு 248ஆம் பிரிவு, 97ஆம் பதிவு ஆகிய இரண்டையும் விட்டுவிட வேண்டுமென்றும் மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் 67ஆம் பதிவாக புதிய ஒரு பதிவு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருத்து தெரிவித்துள்ளோம். (248ஆம் பிரிவின் கீழ்—நாங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைச் காண்க)—248ஆம் பிரிவை ஆராய்ந்த போது தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள், கருத்துரைகள் ஆகியவற்றைக் கருதிப் பார்த்து அரசு அதே கருத்தையே தெரிவிக்கிறது. அதாவது 97ஆம் பதிவு 248ஆம் பிரிவு ஆகிய இரண்டையும் விட்டுவிட வேண்டும்.

பட்டியல் II. மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியல்.

பதிவு 1—"சட்டம் ஒழுங்கு (ஆனால் கடற்படை, இராணுவம் அல்லது விமானப் படை அல்லது மத்திய அரசின் ஏதேனும் ஒரு படைக்கலப் பிரிவு (Armed Force) அல்லது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு படைப் பிரிவு அல்லது யாதொரு படைப் பிரிவின் ஒரு பிரிவு (contingent) அல்லது சிறு பிரிவு உட்பட எந்தப் பிரிவையும் சிவில் அதிகாரத்திற்கு உதவியாகப் பயன்படுத்துதல் இதில் அடங்காது".

பதிவு 1-ல் "மத்திய அரசின் ஏதேனும் ஓர் இராணுவப் படைப் பிரிவு (Armed Force) அல்லது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் ஒரு படைப் பிரிவு" என்னும் தொடர் (phrase) முழுவதும் நீக்கப்பட வேண்டும் இந்த விதித்துறையில் பெரும் பான்மையானவை, இந்திய அரசியலமைப்புச் சட்ட 1976ஆம் ஆண்டு (42ஆம் திருத்தச்) சட்டத்தால் கொண்டு வரப்பட்டன. இத் தொடரை நீக்கிய பிறகு, பதிவு 1-ஐ பின்வருமாறு கொள்ள வேண்டும்:—

"சட்டம் ஒழுங்கு, (கப்பற் படை, இராணுவப் படை அல்லது விமானப் படை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு படைப் பிரிவை அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு படைப் பிரிவு (contingent) அல்லது சிறுபடைப் பிரிவு ஆகியவை உட்பட யாதொரு படைப் பிரிவையும் சிவில் அதிகாரத்திற்கு உதவியாகப் பயன்படுத்தக் கூடாது)''.

பதிவு 2.—'' காவல் துறை' (இரயில்வே, கிராமக் காவல் பிரிவு உட்பட) பட்டியல் I-ல் 2A பதிவிலுள்ள விதித்துறைகளுக்குட்பட்டு ''.

பதிவு 2-ல், ''பட்டியல் I-ல், 2-A பதிவிலுள்ள விதித்துறைகளுக்குட்பட்டு '' என்னும் தொடர் (phrase) நீக்கப்பட வேண்டும். இத் தொடர் (phrase) நீக்கப்பட்ட பின்னர் பதிவு 2-ஐ பின்வருமாறு படிக்க வேண்டும்.

'' காவல் துறை (இரயில்வே, கிராமக் காவல் பிரிவு உட்பட) ''.

பதிவு 12.—'' மாநில அரசு நிதி உதவி செய்யும் அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் இவற்றைப் போன்ற நிறுவனங்கள் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவிக்கப்பட்ட பழங்கால வரலாற்றுச் சின்னங்கள், பதிவேடுகள் ஆகியவை நீங்கலாக ஏனைய பழங்கால வரலாற்றுச் சின்னங்கள், பதிவேடுகள் ஆகியவை ''.

பதிவு 12–ல், '' நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறிவிக்கப்பட்ட '' என்ற தொடர் நீக்கப்பட வேண்டும். மத்திய அரசு அதிகாரப் பட்டியலிலிருந்து 67ஆம் பதிவை மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று இந்த அரசு பரிந்துரைத்ததையடுத்து பதிவு 12-ஐ பின்வருமாறு படிக்க வேண்டும் :—

'' மாநில அரசு நிதியுதவி செய்யும் அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள், இவற்றைப் போன்ற ஏனைய நிறுவனங்கள் ; பழங்கால வரலாற்றுச் சின்னங்கள், பதிவேடுகள், தொல்பொருள் அகழ்வாராய்ச்சி இடங்கள், சின்னங்கள். ''

புதிய பதிவு 12-A.—மத்திய அரசு அதிகாரப் பட்டியலிலிருந்து 66ஆம் பதிவை மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று இந்த அரசு பரிந்துரைத்ததையடுத்து 12ஆம் பதிவிற்குப் பின்னர் கீழ்க்காணும் பதிவு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் :—

'' 12-A. உயர் கல்வி நிறுவனங்களில் அல்லது ஆராய்ச்சி, அறிவியல், தொழில் நுட்பவியல் நிறுவனங்களில் தரத்தினை நிர்ணயித்தல், ஒருங்கிணைத்தல்.''

பதிவு 13.— '' போக்குவரத்து அதாவது சாலைகள், பாலங்கள் தோணித்துறைகள் (ferris) பட்டியல் I-ல் குறிப்பிடப்படாமல் உள்ள ஏனைய வகைப் போக்குவரத்துக்கள், நகராட்சி டிராம் வண்டிப் போக்குவரத்து, ரோப் வேஸ் (rope ways) உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து, எந்திரத்தினால் இயங்கக் கூடிய வண்டிகள் நீங்கலாக அத்தகைய நீர்வழிப் போக்குவரத்து ஊர்திகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பட்டியல் I, பட்டியல் III ஆகியவற்றின் விதித்துறைகளுக்குட்பட்டு, அவற்றில் மக்கள் போக்குவரத்து ''.

பதிவு 13-ல் '' அத்தகைய நீர்வழிப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் பட்டியல் I, பட்டியல் III ஆகியவற்றின் விதித் துறைகளுக்குட்பட்டு '' என்ற தொடர் (phrase) நீக்கப்பட வேண்டும்.

பிறகு பதிவு 13-ஐப் பின்வருமாறு மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.—

'' போக்குவரத்து, அதாவது சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள் பட்டியல் I-ல் குறிப்பிடப்படாத ஏனைய வகைப் போக்குவரத்துக்கள், நகராட்சி டிராம் வண்டிப் போக்குவரத்து, ரோப் வேஸ் (rope ways) உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து, பன்மாநில ஆறுகள், அவற்றில் உள்ள போக்குவரத்துக்கள், எந்திரத்தினால் இயங்கக் கூடிய வண்டிகள் உட்பட வண்டிகள் ''.

பதிவு 24.—பட்டியல் I-ல் 52ஆம் பதிவில் நாங்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைக் காண்க.

பதிவு 26.— '' பட்டியல் III-ல், 33ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு மாநிலத்திற்குள் நடைபெறும் வர்த்தகம்—வாணிபம் ''.

பதிவு 26-ஐப் பொறுத்தமட்டில், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியலில் உள்ள 33ஆம் பதிவை, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் கொண்டு வர வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.

பதிவு 26 பின்வருமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்:—

'' பின்வரும் வர்த்தகம்—வாணிபம் உட்பட மாநிலத்திற்குள் நடைபெறும் வர்த்தகம், வாணிபம்—

(அ) யாதேனும் ஒரு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பொருள்கள், இறக்குமதி செய்யப்படும் அதைப்போன்ற பொருள்கள் ;

(ஆ) சமையல் எண்ணெய் வித்துக்கள் எண்ணெய்கள், உட்பட உணவுப் பொருள்கள்

(இ) பிண்ணாக்கு, ஏனைய வகைத் தீவனங்கள் உட்பட கால் நடைத் தீவனம் ;

(ஈ) கச்சாப் பருத்தி, விதை நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத பருத்தி, பருத்திக்கொட்டை;

(உ) கச்சா சணல் ''.

பதிவு 27.—'' பட்டியல் III, பதிவு 33-ன் விதித் துறைகளுக்குட்பட்டு, பொருள்களின் உற்பத்தி, வழங்குதல், பங்கீட்டு முறை ''.

பதிவு 27-லும், பட்டியல் III, பதிவு 33-ன் விதித் துறைகளைக் கொண்டு வரவேண்டுமென்று அரசு தீர்மானித்தது.

பதிவு 27-ஐப் பின்வருமாறு மாற்றியமைக்க வேண்டுமென்று தீர்மானித்தது:—

பின்வரும் பொருள்களின் உற்பத்தி, வழங்குதல், பங்கீட்டுமுறை உட்பட பொருள்களின் உற்பத்தி, வழங்குதல், பங்கீட்டு முறை :—

(அ) யாதேனும் ஒரு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பொருள்கள், இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் ;

(ஆ) சமையல் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள் உட்பட உணவுப் பொருள்கள் ;

(இ) பிண்ணாக்கு, ஏனைய வகைத் தீவனங்கள் உட்பட கால்நடைத் தீவனம் ;

(ஈ) கச்சாப் பருத்தி, விதை நீக்கப்பட்ட பருத்தி அல்லது நீக்கப்படாத பருத்தி, பருத்திக் கொட்டை ;

(உ) கச்சா சணல் .''

பதிவு 33.—'' பட்டியல் I-ன் 60ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு திரை அரங்குகள், நாடகங்கள், திரைப்படங்கள், விளையாட்டுப் போட்டிகள், மனமகிழ் கேளிக்கை நிகழ்ச்சிகள்.''

பதிவு 33-ல் '' பட்டியல் I-ன் 60-ம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு '' என்னும் தொடர் (phrase) நீக்கப்பட வேண்டும். இத் தொடரை நீக்கிய பின்னர், 33ஆம் பதிவு பின்வருமாறு இருக்கும் ; '' திரையரங்குகள், நாடகங்கள், திரைப்படங்கள், விளையாட்டுப் போட்டிகள், மனமகிழ் கேளிக்கை நிகழ்ச்சிகள்''

பதிவு 33. A.—மத்திய அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலின் 60ஆம் பதிவின்கீழ் தெரிவிக்கப்பட்ட எங்களுடைய கருத்துப்படி பின்வரும் 33-A என்னும் பதிவை ஏற்படுத்த வேண்டுமென்று இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது ;

'' திரைப்படம் காட்டுவதற்குத் தேவையான திரைப்படச் சுருளுக்கு அனுமதி வழங்குதல் ''.

பதிவு 33-B—வினா 4.10-ன்கீழ் நாங்கள் கருத்துத் தெரிவித்துள்ளதன் காரணமாக இந்த அரசு புதிய பதிவு 33 B '' ஒலிபரப்புதல், தொலைக் காட்சி '' என்று இருக்க வேண்டுமென கருத்துத் தெரிவிக்கிறது.

பதிவு 36.—'' பட்டியல் III-ன் 42ஆம் பதிவின் விதித் துறைக்குட்பட்டு என்னும் பகுதியை நீக்கிய பிறகு, மூலப் பதிவு 36-ஐ திரும்ப அமைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

36ஆம் பதிவு பின்வருமாறு இருக்கும்.— '' மத்திய அரசின் காரியங்கள் நீங்கலாக ஏனைய காரியங்களுக்காக சொத்துக்களைக் கையகப் படுத்துதல் அல்லது கேட்டுப் பெறுதல் ''.

பதிவு 51.— '' மாநிலத்திற்குள் தயாரிக்கப் படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பின்வரும் பொருள்களுக்கு விதிக்கப்படும் ஆயத் தீர்வை, இந்தியாவில் யாதேனும் ஒரு பகுதியில் தயாரிக் கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதைப் போன்ற பொருள்களுக்கு அல்லது அதைவிடக் குறைந்த வீதத்தில் எதிரிடை ஆயத் தீர்வை விதித்தல் :—

(அ) மனிதர்கள் உட்கொள்ளக்கூடிய மது வகைகள் ;

(ஆ) அபின், கஞ்சாச் செடி, ஏனைய போதை மருந்துகள், போதைப் பொருள்கள்; ஆனால், இப் பதிவின் (b) துணைப் பாராவில் சேர்க்கப்பட்டுள்ள சாராவி அல்லது யாதேனும் மூலப் பொருள் கலந்து தயாரிக்கப்படும் மருந்துப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள் நீங்கலாக.''

பட்டியல் I-ன் 84ஆம் பதிவு தொடர்பாக நமது பரிந்துரையின்படி, 51ஆம் பதிவைப் பின்வருமாறு கொள்ள வேண்டும் :—

'' மாநிலத்திற்குள் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் பின்வரும் பொருள்களுக்கு விதிக்கப்படும் ஆயத் தீர்வை இந்தியாவில் யாதேனும் ஒரு பகுதியில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் அதைப் போன்ற பொருள்களுக்கு அதேவீதத்தில் அல்லது அதைவிடக் குறைந்த வீதத்தில் எதிரிடை (Countervailing) வீதத்தில் ஆயத் தீர்வை விதித்தல் :—

(அ) மனிதர்கள் உட்கொள்ளக் கூடிய மது வகைகள் ;

(ஆ) அபின், கஞ்சாச் செடி, ஏனைய போதை மருந்துகள், போதைப் பொருள்கள் ''.

பதிவு 57.—'' பட்டியல் III-ன் 35ஆம் பதிவின் விதித் துறைகளுக்குட்பட்டு டிராம் கார்கள் (tram cars) உட்பட, சாலையில் செல்லப்

பயன்படுத்தத்தக்க எந்திரத்தினால் இயங்கக் கூடிய அல்லது எந்திரத்தின் உதவியின்றி இயங்கக்கூடிய வண்டிகளுக்கான வரிகள்.''

''பட்டியல் III-ன் 35ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டு'' என்னும் தொடர் நீக்கப்படலாம்.

மேற்சொன்ன தொடர் நீக்கப்பட்ட பிறகு, 57ஆம் பதிவைப் பின்வருமாறு கொள்ள வேண்டும் :—

''டிராம், கார்கள் உட்பட, சாலைகளில் செல்லப் பயன்படுத்தத் தகுந்த எந்திரத்தினால் இயங்கக் கூடிய அல்லது எந்திரத்தின் உதவியின்றி இயங்கக் கூடிய வண்டிகளுக்கான வரிகள்.''

பின்வருமாறு புதிய பதிவு ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அரசு கருத்துத் தெரிவிக்கிறது :—

''பதிவு 57-A... எந்திரத்தினால் இயங்கக் கூடிய வண்டிகளுக்கு வரி விதிப்பதற்குரிய கோட்பாடுகள் உட்பட அத்தகைய வண்டிகள்மீது விதிக்கப்படும் வரி.''

பட்டியல் III.—மத்திய, மாநில அரசுகளுக்குள்ள பொதுவான அதிகாரப் பட்டியல்.

அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்த, நாடு முழுவதற்கும் பயனளிக்கும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரை, ஒரே மாதிரியான சட்டமியற்றும் முறையை ஏற்படுத்தும் நோக்குடன் மத்திய, மாநில அரசுகளுக்குள் பொதுவான அதிகாரப் பட்டியல் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது குறைந்த பட்ச அளவிற்கு இருக்க வேண்டும் என்றும் ஏனைய பதிவுகள் மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும் இந்த அரசு கருதுகிறது.

பதிவு 3.—''ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு, பொது சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், அல்லது சமுதாயத்திற்கு இன்றியமையாப் பொருள்களை வழங்குதல், இன்றியமையாப் பணிகளைப் புரிதல் ஆகியவற்றிற்காக, அவற்றிற்கு ஊறு விளைவிக்கும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைத்தல்.''

''சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களை வழங்குதல், இன்றியமையாப் பணிகளைப் புரிதல்'' என்ற தனி நிலை தொடர் (Paranthesis) நீங்கலாக, எஞ்சியுள்ள பதிவு பட்டியல் II-க்கு மாற்றப்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் பின்வருமாறு அமைக்கப்படும் 1-A. என்னும் புதிய பதிவு ஒன்று சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் : .—

''பதிவு 1-A (பட்டியல் II) : ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு அல்லது பொது சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் ஆகியவற்றிற்காக, அவற்றிற்கு ஊறு விளைவிக்கும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைத்தல்.''

மேற்சொன்ன திருத்தத்திற்குப் பிறகு, தற்போதுள்ள பதிவு 3-ஐப் பின்வருமாறு கொள்ள வேண்டும் :—

''சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களை வழங்குதல், இன்றியமையாப் பணிகளைப் புரிதல் ஆகியவற்றிற்காக, அவற்றிற்கு ஊறு விளைவிக்கும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைத்தல்''.

பதிவு 4.—''ஒரு மாநிலச் சிறையில் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளவர்களை, குற்றம் சாட்டப்பட்ட நபர்களை இப் பட்டியலின் 3ஆம் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களை மற்றொரு மாநிலச் சிறைக்கு மாற்றுதல்''.

''ஒரு மாநிலத்தின் சிறையில் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளவர்களை ஏனைய ஒரு மாநிலத்திற்கு மாற்றும்போது அம் மாநிலத்தின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அத்தகைய மாற்றம் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன், இப் பதிவு மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்படலாம்.

பதிவு 5.— திருமணம் (Marriage), விவாகரத்து (Divorce) குழந்தைகள், உரிய வயதடையாதவர்கள் (Infant and minors), சுவீகாரம் எடுத்துக் கொள்ளுதல் (adoption) உயில்கள் (wills), உயில் எழுதாமல் இறந்து விடுதல் (intestacy), மரபு வழியுரிமை (Succession) கூட்டு குடும்பம் (Joint family) பாகப்பிரிவினை (Partition)) இவ்வரசியல் சட்டம் செயல்படத் தொடங்குவதற்கு முன்னர், நீதிமன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் பின்பற்றக் கூடிய இனமுறைச் சட்டத்திற்குட்பட்டு அனைத்தும்.

இப்பதிவு முழுவதும் மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்படலாம். ஏனெனில் இப்பதிவு சம்பந்தப்பட்ட நுகர்பொருள் ஒரு மாநிலத்திலுள்ள மக்கள் பின்பற்றக் கூடிய இனமுறைச் சட்டத்தின் மீது (இந்த இனமுறைச் சட்டம் ஒரு மாநிலத்திற்கும் பிறிதொரு மாநிலத்திற்குமிடையே வேறுபடக் கூடியதாகும் என்பதில் ஐயமில்லை) மாறாத விளைவை ஏற்படுத்தும் என்பதாலேயே ஆகும்.

பதிவு 8.—''வழக்கு தொடரத்தக்க தவறுகள்''.

நிருவாகத் திறனைச் செம்மையாக மேற்கொள்ள வகை செய்வதற்காக இப்பதிவை மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றலாம் என்று அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

பதிவு 10.—'' பொறுப்புக் கழகமும், அறங் காவலர்களும் ''.

பதிவு 11.— '' அட்மினிஸ்டிரேட்டர்ஸ் ஜெனரல் (Administrators — General) நீதிமன்றத் தால் நியமிக்கப்படும் சொத்துப் பொறுப்பாளர் (Official Trustees)''.

நிருவாகத் திறனை செம்மையாக மேற் கொள்ள வகை செய்யும் பொருட்டு இப்பதிவு களை மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றலாம் என்று அரசு கருத்துத் தெரிவித் துள்ளது.

பதிவு 11A.— ''நீதி நிருவாகம், உச்ச நீதிமன்றம் உயர் நீதி மன்றங்கள் ஆகியவை நீங்கலாக ஏனைய அனைத்து வகை நீதிமன்றங்களையும் நிறுவுதல் அவற்றின் அமைப்பு முறை ''.

இப் பதிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் 1976ஆம் ஆண்டு 42ஆம் திருத்தத்தின் மூலம் 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் முதற்கொண்டு சேர்க்கப்பட்டது. இப் பதிவு 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாளுக்கு முன்னர், மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டிய லில் ஏற்கனவே 3ஆம் பதிவாக இருந்தது. அவ் வாறே இப்பதிவு மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் பொதுவான அதிகாரப் பட்டியலில் இப் பதிவைச் சேர்த்துக்கொள்வது எவ்விதத்திலும் முறையாகாது. இவ்வாறு அவ சரகாலத்தில் (Emergency Period) இப்பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், மத்திய, மாநில அரசுகளின் பொதுவான அதிகாரப் பட்டியலில் இப்பதிவைத் தொடர்ந்து வைத்து வருவது விரும் பத்தக்கதல்ல. இப் பதிவு, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, 3எ ஆம் பதிவு என இலக்கமிடப்படலாம்.

பதிவு 15.— இப்பதிவு மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்கு (பதிவு 9A) மாற்றப்படலாம்.

பதிவு 16.—'' மன நோய், மூளை வளர்ச்சிக் குறைவு (Mental Deficiency), மனநோயா ளிகள், மூளை வளர்ச்சிக் குறைவானவர்கள் ஆகி யோரைச் சேர்த்துக் கொள்ளுதல் அல்லது சிகிச்சை அளிக்கக் கூடிய இடங்கள் உட்பட.''

இப்பதிவு, முழுமையாக அந்தந்த மாநிலங் களிலேயே கவனிக்கப்படக்கூடியது பற்றியதா கும். எனவே, பதிவு 16, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, 9-B ஆம் பதிவாக இலக்கமிடப்படலாம்.

பதிவு 17.— '' பிராணி வதைத் தடை ''.

பிராணி வதைத் தடை என்னும் இப் பதிவும் முழுமையாக அந்தந்த மாநிலங்களிலேயே கவனிக் கப்பட வேண்டிய பொருள் பற்றியதாகும். எனவே, இப்பதிவையும் மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றி, 15எ பதிவாக இலக்கிட லாம்.

பதிவு 17எ.—'' வனங்கள் ''.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 1976ஆம் ஆண்டு 42ஆம் திருத்தத்தின்படி 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் முதல் மத்திய மாநில அரசுகளின் பொதுவான அதிகாரம் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதை, மாநில அரசுக்குள்ள அதி காரப் பட்டியலில் மீண்டும் சேர்க்கலாம். இப் பதிவை, மத்திய மாநில அரசுகளின் பொதுவான அதிகாரப் பட்டியலில் வைத்து வருவது எவ்விதத் திலும் முறையாகாது. 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் வரை, 'வனங்கள்' என்னும் பொருள் மாநில அரசின் சட்டமியற்றும் அதிகாரத் திற்குட்பட்டதாகவே இருந்தது. எனவே, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலின் 19ஆம் பதிவாக இருந்த மேற்சொன்ன பதிவை, மீண்டும் அவ்வாறே அமைக்க வேண்டுமென்று அரசு பரிந் துரைக்கிறது.

பதிவு 17பி..—''வன விலங்குகளையும் பறவை களையும் பாதுகாத்தல் ''.

இப் பதிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் 1976ஆம் ஆண்டு (42ஆம் திருத்தத்தின்படி) 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் முதற்கொண்டு சேர்க்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் வரை இப் பொருள் மாநில அரசுக்குள்ள, அதிகாரப் பட்டிய லின் 20ஆம் பதிவாக மாநில அரசின் சட்டமியற் றும் அதிகாரத்திற்குட்பட்டதாகவே இருந்து வந் தது. எனவே, 17பி ஆம் பதிவை, மாநில அரசுக் குள்ள அதிகாரப் பட்டியலின் 20ஆம் பதிவாகவே மீண்டும் சேர்க்க வேண்டுமென்று இவ்வரசு பரிந்து ரைக்கிறது.

பதிவு 19—'' மருந்துகள், விஷம், அபினைப் பொறுத்தமட்டில், பட்டியல் I-ன் 59ஆம் பதிவி லுள்ள விதித் துறைகளுக்குட்பட்டு'' போதை யூட்டக் கூடிய மதுவகைகளைத் தயாரிக்கத் தேவைப்படும் அடிப்படைப் பொருளான சாரா வியைப் பற்றி, பட்டியல் I-ன் 52ஆம் பதிவு குறித்து விவாதித்தபோதே, இப் பதிவை மாநில அரசுக் குள்ள அதிகாரப்பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று ஏற்கனவே நாங்கள் கருத்துத் தெரிவித்துள்ளோம். இப்பதிவின் கீழ்வரும் விஷயங்களைப் பொறுத்த மட்டில், அவை பற்றிய நிலையை மாநில அரசுகளே நன்கு அறிய இயலும் என்பதால், இப் பதிவை மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் சேர்ப்பது முறையானதாகும்.

எனவே, இப்பதிவை, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றி, மாநில அரசுக் குள்ள அதிகாரப் பட்டியலில் 8-எ ஆம் பதிவாக இலக்கமிடலாம் என்று நாங்கள் பரிந்துரைக் கிறோம்.

பதிவு 22.—'' தொழிற் சங்கங்கள், தொழில், தொழிலாளர் தகராறுகள் ''.

பதிவு 23.—'' சமூகப் பாதுகாப்பு, சமூக-ஈட்டு றுதி, வேலைவாய்ப்பு, வேலை வாய்ப்பின்மை ''.

பதிவு 24.—'' பணி நிலைமை, வருங்கால வைப்பு நிதி, தொழிலதிபர்களின் பொறுப்பு, தொழிலாளர் களுக்கான இழப்பீடு, தொழில் தகுதியின்மை (Invalidity), முதியோர் உதவித் தொகை, பேறுகாலப் பயன்கள் உட்பட தொழிலாளர் நலன்''.

இப் பதிவுகளின் நுதல் பொருள்கள் மாநில சட்ட மன்றத்தினால் கையாளப்பட வேண்டியவையா கும். இப் பதிவுகளின் கீழ் வரும் பொருள்களைப் பொறுத்தமட்டில் அவை பற்றிய நிலையை மாநில அரசுகளே நன்கு அறிய இயலுமாதலால், இப்பதிவு களை மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு மாற்றி, அவற்றிற்கு முறையே 10எ, 10பி, 10சி பதிவுகளாக இலக்கமிட வேண்டும்.

பதிவு 25.—'' பட்டியல் I-ன், 63, 64, 65 ஆம் பதிவுகளின் விதித் துறைகளுக்குட்பட்டு தொழில் நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழகங்கள் உட்பட கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, தொழிலாளர்களுக்குத் தொழிற் பயிற்சி ''.

இப் பதிவு, மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டி யலின் பதிவு 11 ஆக மாற்றப்பட வேண்டும்.

பின்வருமாறு வாசகங்களுடன் புதியதொரு பதிவு, 11எ ஆம் பதிவாக மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டு மென்று அரசு மேலும் பரிந்துரைக்கிறது :—

பதிவு 11எ.—''ஆழ்கடல் கப்பல் வணிகம் (Merchantile Marine) பற்றிய கல்வி பயிற் சிக்கு வகை செய்தல், மாநில அரசுகள், ஏனைய முகவரமைப்புக்கள் வழங்கும் அத்தகைய கல்வி, பயிற்சி ஆகியவற்றை முறைப்படுத்தல் ''.

பதிவு 27.—''இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடு கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக, முதன்முத லில் குடியிருந்த பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம், புது வாழ்வு அளித்தல்.''

'' இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக'' என்னும் தொடரை விட்டுவிட வேண்டுமென்று அரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 28.—'' அறக் கட்டளைகள், அறக் கட் டளை நிறுவனங்கள், அறக்கட்டளை, சமய அறக் கட்டளைகள், சமய நிறுவனங்கள்''.

அறக் கட்டளைகள், சமய அறக்கட்டளைகள், சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாகத் திறனை மேம்படுத்துவதற்காக தமிழ் நாடு அரசு குறிப்பாக பயன்தரும் பல சட்டங்களை இயற்றி யுள்ளதோடு கொள்கைகளையும் வகுத்துள்ளது. நமது அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வரும் முன்னரே, அத்தகைய பொருள்கள், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிப் பிரிவுகளின் அதிகார வரம் பிற்குள் விடப்பட்டிருந்தன. எனவே, இப்பதிவை மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலுக்கு உரிய வாறு மாற்றி, அப் பட்டியலில் 34எ பதிவாக இலக்கமிடலாம்.

பதிவு 30.—'' பிறப்பு-இறப்பு பற்றி பதிவு செய்தல் உட்பட புள்ளி விவரங்கள் ''.

பிறப்பு-இறப்பு பற்றி பதிவு செய்ய வேண்டும் என்பது தொடர்பாகத் தமிழ் நாட்டில் தனித்தனி யாகச் சட்டங்கள் செயலிலுள்ளன. மத்திய அரசு மாநிலச் சட்டத்தை ரத்து செய்தது. இவ்வாறு ரத்து செய்ததனால், மாநிலத்தில் ஏற்கனவே செயலிலிருந்து வந்த சட்டம் நிறைவேற்றக் கருதிய நோக்கமல்லாத ஏனைய நோக்கம் எதையும் எய்தி விடவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வருமுன்னர் இச் சட்டம், மாகாணங் களாலேயே (Provinces) இயற்றப்பட்டது. எனவே, இப் பதிவு மாநிலச் சட்டமன்றத்தின் கட் டுப்பாட்டின் கீழ் வரும் நுதல் பொருளாக விளங் கும் வகையில் உரியவாறு மாற்ற வேண்டுமென்று இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது. இவ்வரசு பின்வருமாறு பரிந்துரைக்கிறது:—

''இப் பதிவு மாநில அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலில், 6எ பதிவாகச் சேர்த்துக் கொள்ளப் படலாம்''.

பதிவு 31.—நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது தற் போது செயலிலுள்ள சட்டத்தின் கீழ் பெருந்துறை முகங்கள் என்று அறிவிக்கப்பட்டவை தவிர ஏனைய துறைமுகங்கள்.''

இப் பதிவு, சிறு துறைமுகங்களைக் குறிப்பிடு கிறது என்பது வெளிப்படை.

இப் பதிவு சிறு துறைமுகங்களைக் குறிப்பிடு கிறது போலும் ; அரசியலமைப்புச் சட்டத்திற்கு முன்பு மாகாண பட்டியலில் இருந்த சிறு துறை முகங்கள் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலா மென்றும், அதை 13பி பதிவாக இலக்கமிடலா மென்றும் இவ்வரசு கருத்து தெரிவித்துள்ளது.

பதிவு 32.—'' எந்திர விசைப் படகுகளைப் பொறுத்தவரையில், உள்நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து, அத்தகைய நீர்வழிகளில் போக்குவரத்து விதி, தேசிய நீர்வழிகளைப் பொறுத்தவரையில், I-ம் பட்டியலின் விதித் துறைகளுக்குட்பட்டு உள்நாட்டு நீர் வழிகளில் பயணிகள்-சரக்கு கப்பல் ''

இப் பதிவு 13எ பதிவாக மாநிலப் பட்டிய லுக்கு மாற்றப்படலாமென்று இவ்வரசு பரிந்து ரைக்கிறது.

பதிவு 33.—மாநிலப் பட்டியலின் 26, 27 ஆகிய பதிவுகளின்கீழ் எங்களது கருத்துரைகளைக் காண்க.

பதிவு 33எ : " தரத்தை வரையறுப்பது நீங்கலாக எடைகள் அளவைகள் ".

1977ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3ஆம் நாள் முதற்கொண்டு இப் பதிவு 1976ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் (42ஆவது திருத்தம்) சேர்க்கப்பட்டது. இப் பதிவு முதற்கண் 29ஆம் பதிவாக மாநிலப் பட்டியலில் இருந்தது.

எனவே, இப் பதிவு 29 பதிவாக மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படலாமென்று இவ்வரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 34 .—பல்வகை பகுதி VII-ன்கீழ், எங்களது குறிப்புரைகளைக் காண்க.

பதிவு 35 : " இயந்திரத்தால் இயங்குகிற வண்டிகளுக்கு வரிகள் விதிக்கப்படும் கொள்கைகள் உட்பட இயந்திரத்தால் இயங்குகிற வண்டிகள். "

பொதுப் பட்டியலின் 35ஆவது பதிவுக்குட்பட்டு இயற்றப்பட்ட மாநிலப் பட்டியலின் 57 ஆவது பதிவின் வாசகம் குறித்துத் கருத்து தெரிவிக்கையில், 57ஆவது பதிவை உரியவாறு திருத்தலாமென்று நாம் பரிந்துரை செய்தோம். மேலும், இயந்திரத்தால் இயங்குகிற வண்டிகள் மாநில அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அத்தகைய வண்டிகளுக்கு உரிமம் வழங்குவது வரிகள் விதிப்பது முதலிய பொறுப்புகள் மாநில அரசைச் சேர்ந்தது.

இப்பதிவு மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படலாமென்றும், 57எ பதிவாக இலக்கமிடப்படலாமென்றும் இவ்வரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 36.—" தொழிற்சாலைகள் ".

பதிவு 37.—" கொதிக் கலன்கள் ".

மேற்சொன்ன இரண்டு பதிவுகளும் தொழிற்சாலைகளை நிறுவுதல் முதலியவை உட்பட மாநிலத்தின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

எனவே, இப்பதிவுகளை முறையே 25எ, 25பி பதிவுகளாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்று இவ்வரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 39 : " செய்தித் தாள்கள், புத்தகங்கள், அச்சகங்கள் ".

பொது அமைதியின் பேரில் அல்லது கல்வி முன்னேற்றத்தின் கண்ணோட்டத்தில் அல்லது செய்தி போக்குவரத்து, விளம்பரம் ஆகியவற்றின் மூலம் ஏற்படக் கூடிய பொது நலனைக் கருதிப் பார்க்கும்போது இப்பதிவு மாநிலப் பட்டியலிலேயே வைத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்பதிவின் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நிருவாக அமைப்பு மாநிலங்களிடம் உள்ளது.

எனவே, இப் பதிவு மாநிலப் பட்டியலில் 25சி பதிவாக மாற்றப்படலாமென்று இவ்வரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 40.—பட்டியல் I ன் 67ஆம் பதிவின்கீழ், எங்களது குறிப்புரைகளைக் காண்க.

பதிவு 42.—" சொத்தினைக் கையசப்படுத்தலும் கேட்டுப் பெறுதலும். "

I பட்டியலில் 33ஆவது பதிவு, II பட்டியலில் 36ஆவது பதிவு ஆகியவற்றை மீண்டும் கொண்டு வருவதற்குரிய நம்முடைய கருத்தினைக் கருதிப் பார்த்தும், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் (42ஆவது திருத்தம்) 31ஆவது பிரிவு நீக்கப்பட்டதைக் கருதிப் பார்த்தும்,

இப் பதிவு நீக்கப்படலாமென்று இவ்வரசு பரிந்துரைக்கிறது.

பதிவு 45.—" II பட்டியல் அல்லது III பட்டியலில் குறிப்பிடப்பட்ட விவகாரங்களுக்கான விசாரணைகள் புள்ளி விவரங்கள். "

மாநிலச் சட்டமன்றத்தின் ஆய்வு வரம்பிற்குள் வருகின்ற விவகாரங்களைப் பொறுத்த வரையில், விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கு நாடாளுமன்றம் ஆணை பிறப்பிக்க இயலும் வகையில், நீதிமன்றம் இப் பதிவுக்கு பொருள் விளக்கம் அளித்துள்ளன. 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) செல்திறன், இப் பதிவையொட்டி நியாயமென்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. பதவியில் உள்ள போதிலும் கூட, மாநில அரசு ஒன்றின் அமைச்சர்களின் நடத்தையைப் பொறுத்தவரையில், விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கு உத்தரவிட, விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரமானது 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கான அதிகாரம் மத்திய அரசினால் பயன்படுத்தப்படுகிறது. கூட்டாட்சி அமைப்பு ஒன்றில், பதவியில் இருக்கும்போது, மாநில அமைச்சர்களின் நடத்தையைப் பொறுத்தவரையில் அல்லது அமைச்சர்களின் கடந்த கால நடத்தையைப் பொறுத்தவரையில், விசாரணைக் கமிஷன் ஒன்றிற்கு உத்தரவிடும் அதிகாரத்தை மத்திய அரசு கொண்டிருக்க வேண்டுமென்பது கருதிப் பார்க்க முடியாத ஒன்றாகும். எனவே, மாநில அரசு அமைச்சர்களின் நடத்தையைப் பொறுத்தவரையில், விசாரணைக் கமிஷன் ஒன்றிற்கு உத்தரவிட நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் எதுவும் இருக்கக் கூடாது என்பது அவசியமாகும். மத்திய அரசிலும், மாநில அளவிலும் பல்வேறு ஆளுங்கட்சியானது அதிகாரத்தில் இருக்கும்போது இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகி விடுகிறது.

மத்திய அரசில் ஆளுங்கட்சியாக இல்லாத வேறு ஒரு ஆளுங்கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் ஒருவர் மாநில அரசை நிர்வகிக்கும்போது மாநில அரசின் அமைச்சர்களின் நடத்தை தொடர்பாக விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கு உத்தர விடும் அதிகாரத்தை கிட்டத்தட்ட எல்லா சந்தர்ப் பங்களிலும் மத்திய அரசு பயன்படுத்தியுள்ளது. "விசாரணைகள், புள்ளி விவரங்கள்" என்கிற இந்தப் பொருளானது மாநிலச் சட்ட மன்றத்தைச் சேர்ந்ததாகவே இருக்க வேண்டும்; எனவே, இந்தப் பதிவை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது மிகவும் அவசியமாகும்.

45-வது பதிவு பொதுப் பட்டியலிலிருந்து நீக்கப் பட வேண்டும் என இவ்வரசு கருத்து தெரிவிக் கிறது.

எனினும், இப் பதிவை பொதுப் பட்டியலில் வைத்துக் கொள்ள உத்தேசித்தால், அப் பதிவை பின்வருமாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என அரசு கருத்து தெரிவிக்கிறது :—

"பதவியில் உள்ள போது அல்லது பதவியை விட்டுச் சென்ற பின்னர் மாநில அரசு ஒன்றின் அமைச்சர் ஒருவரின் நடத்தை தொடர்பாக, பட்டியல் II, அல்லது பட்டியல் III-ல் குறிப் பிட்டு ஆனால் விசாரணையில் சேராத விவகாரங் கள் யாதொன்றின் காரியங்களுக்குரிய விசாரணை கள் புள்ளி விவரங்கள்."

வேறு வகையில் கூறின், பதவியில் உள்ள போது அல்லது பதவியை விட்டுச் சென்ற பின்னர், மாநில அரசின் அமைச்சர்களின் நடத்தையைப் பொறுத்த வரையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிப் பதற்கு உத்தரவிடும் அதிகாரம் நாடாளுமன்றத் திற்கு இல்லை. ஆனால், பதவியில் உள்ள போது அல்லது பதவியை விட்டுச் சென்றபின்னர், மாநில அமைச்சரின் நடத்தை குறித்து விசாரிக்க விசாரணைக் கமிஷன் ஒன்றை மாநில அரசு நியமிக்கலாம். இந் நிலைமையைத் தெளிவு படுத்த வேண்டி, அரசியலமைப்புச் சட்டத்தின் I-ம் அத்தியாயத்தில் II-ஆம் பாகத்தில் பின்வரு மாறு நிலையான திருத்தம் ஒன்றைச் செய்யலா மென்று இவ்வரசு கருத்து தெரிவிக்கிறது :—

"246எ மாநில அரசு ஒன்றின் அமைச்சர் ஒருவரின் நடத்தை தொடர்பாக, விசாரணைக் கமிஷன் ஒன்றிற்கு உத்தரவிடும் அதிகாரம் எதுவும் நாடாளுமன்றத்திற்கு இல்லை என்பது :

பதவியில் இருக்கும்போது அல்லது பதவியை விட்டுச் சென்ற பின்னர், மாநில அரசின் அமைச் சர் ஒருவர் அல்லது அமைச்சர்கள் அனைவரின் நடத்தை தொடர்பாக, விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க உத்தரவிடுவதற்கான சட்டமி யற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை என்பது".

பகுதி III.

ஆளுநர்ப் பணி.

மாநில ஆளுநரின் பணியைப் பொறுத்த வரையில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் மாநில ஆளுநர் முந்தைய ஆட்சியமைப்பின் எச்சமாதலால், ஆளுநர் பதவி நீக்கப்பட வேண்டு மென்பது தமிழ்நாடு அரசின் கருத்தாகும். அப்பதவி பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின்போது இருந்ததாகும். இது தற்போதைய நிலைக்கு ஒவ்வாத ஒன்றாகும். மேலும், மாநில ஆளுநர்கள் தங்களது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மாநில அமைச்சர்கள் சட்டமன்றத்தின் முழு நம்பிக்கையைப் பெற்றிருந்தபோதிலும், அமைச்சரவையைக் கலைக்கத் தயங்கமாட்டார்கள் என்பதை அண்மையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தெளிவாக்குகின்றன. அவ்வாறு அதிகார துஷ்பிரயோகம் மீண்டும் செயல்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆளுநர் பதவியை எடுத்து விடலாம். மாநில ஆளுநர்கள், இந்திய அரசயலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க அதிகாரங்களைக் கண்டிப்பாகச் செயல்படுவதைக் காட்டிலும், மத்திய அரசின் ஏஜெண்டுகளாக நன்கு செயல்பட்டு வந்துள்ளனர். மாநில ஆளுநருக்கும் அவர் சம்பந்தப்பட்ட பணியாளரமைப்பிற்கும் மாநிலக் கருவூலத்திலிருந்து செய்யக் கூடிய பெருமளவு செலவு இதனால் குறையும். மாநிலத்தில் அலங்கார பதவி ஒன்று இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதனைக் கருதியே, ஆளுநரின் பதவி எடுத்துவிடப்பட வேண்டும் என்ற உறுதியான முடிவைத் தமிழக அரசு கொண்டுள்ளது. இச்செயல் நோக்கத்திற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 153-லிருந்து 162வரையிலான பிரிவுகள் விட்டுவிடப்படலாம். 163, 164, 166, 167 ஆகிய பிரிவுகளுக்கும், ஏனைய விதித் துறைகளுக்கும் அவசியமான திருத்தங்கள் செய்யப்படலாம்.

ஆளுநரால் தற்போது நிறைவேற்றப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும், முதலமைச்சரால் நிறைவேற்றப்பட வேண்டும். மாநிலத்திலிருந்து மத்திய அரசுக்குத் தகவல் ஏதும் தேவைப்பட்டால், வேறு எந்த முகவரமைப்பின் மூலமும் அல்லாது முதலமைச்சரிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும், மாநில ஆளுநரின் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டால், பின்வரும் குறிப்புகள் கேட்கப்படுகின்றன:—

சட்டமன்றப் பேரவையின் நம்பிக்கைப் பெற்ற முதலமைச்சரால், குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படக்கூடிய நான்கு பேர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றிலிருந்து ஆளுநர் தெரிந்தெடுக்கப்படலாம். அத்தகைய ஒரு நேர்வில், ஆளுநரை மேற்கொண்டும் பதவியில் வைத்திருப்பது மாநிலத்தின் நலனுக்கு உகந்ததாகாது என்று மாநிலச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்தால், சட்டமன்ற பேரவை அவ்வாறே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அதன் நகல் ஒன்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதன்பேரில், குடியரசுத் தலைவர், ஆளுநரை பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

வினா எண் : 3.1

மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான உறவைப் பொறுத்த மட்டில்,

(அ) அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்துள்ளபடி ;

(ஆ) அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்ததிலிருந்து கடந்த 34 ஆண்டுகளில் ஆளுநர் செயல்பட்டு வந்துள்ள முறைப்படி ;

ஆளுநர்ப் பணி குறித்து தங்கள் கருத்து என்ன ?

பதில் : 3.1. (அ)

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி ஆளுநர், ஐந்து வகையான பணிகளை ஆற்ற வேண்டும். முதலாவதாக ஆளுநர் மாநில ஆட்சித் தலைவர் ஆவார். அவர் மாநில நிருவாக அதிகாரத் தலைமைப் பீடம் எனலாம். அரசியலமைப்புச் சட்டத்தின் 153, 154ஆம் பிரிவுகளின் விதித் துறைகளிலிருந்து இது தெரியவரும். மாநிலத்தின் நிருவாக அதிகார வரம்பு எல்லை, அரசியலமைப்புச் சட்டத்தின் 162ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டப்படி, நாடாளுமன்ற அரசு முறை பின்பற்றப்படுவதால், ஆளுநர் அவருடைய அலுவல்களை, அமைச்சரவையின் உதவியுடனும், அதன் ஆலோசனையின் பேரிலும் செய்யக் கடமைப்பட்டுள்ளார். அமைச்சரவை, கூட்டாக மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டதாகும். மாநில ஆட்சித் தலைவர் என்ற உயர் பதவிக்குரிய கண்ணியத்தைப் பாரம்பரிய முறைப்படி கட்டிக்காத்து

வருவதற்கிணங்க, ஆளுநருக்கு முக்கியமான பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை அவர், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது. மாநில அரசின் அலுவல்கள் ஆளுநரின் பெயரில் நடைபெறுகின்றன. (பிரிவு 166) அமைச்சரவையைப் பொருத்த மட்டில், இவர் இவருடைய பாரம்பரிய உரிமைகளைக் கொண்டிருக்கிறார் (அதாவது அனைத்தும் இவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிற உரிமை ; எச்சரிக்கும் உரிமை, ஆலோசனை நல்கும் உரிமை) (பிரிவு 167).

இரண்டாவதாக, இவர், மாநில சட்டமன்றத்தினின்றும் பிரிக்க முடியாத அங்கம் வகிக்கிறார். (பிரிவு 168), இவ்வகையில் இவர், பின்வரும் முக்கியமான அலுவல்களை ஆற்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார், அவை வருமாறு :—

(1) மாநில சட்டமன்றக் கூட்டத்தை ஒவ்வோர் முறையும் கூட்டவும் கூட்டத் தொடரை முடித்து வைக்கவும் மாநிலச் சட்டமன்றப் பேரவையைக் கலைத்து விடவும் அதிகாரம் உடையவர் (பிரிவு 174) ;

(2) மாநில சட்டமன்ற அவையில் அல்லது அவைகளில் உரையாற்றுவது அல்லது அவற்றிற்குத் தகவல் அனுப்புவது ஆகியவற்றிற்கான உரிமை (பிரிவு 175) ;

(3) ஒவ்வோர் ஆண்டு முதலில் மாநில சட்டமன்றம் கூடும்போது முதல் கூட்டத் தொடரில் தொடக்கப் பேருரையாற்றுவதற்கான உரிமை (பிரிவு 176);

(4) மாநில சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய அல்லது, இரு அவைகளைப் பொறுத்த மட்டில் இரண்டு அவைகளும் நிறைவேற்றிய சட்ட முன்வடிவிற்கு இசை வளிக்கும் அல்லது இசைவை நிறுத்தி வைக்கும் உரிமை (பிரிவு 200);

(5) சட்டமன்றக் கூட்டம் நடைபெறாத போது, அவசரச் சட்டங்களை அதிகார முறையில் பிறப்பிப்பதற்கான அதிகாரம் ; முதலியன.

மூன்றாவதாக அரசியலமைப்புச் சட்டப் படிக்கான நடவடிக்கைத் தொடரில், மாநில அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையே ஒரு பயனுள்ள இணைப்பு இருக்கக்கூடிய வகையில், பணி ஆற்ற வேண்டிய சில பரிமாற்றக் கடப்பாடுகள் ஆளுநருக்கு உள்ளன. மத்திய அரசு சார்பாக ஆளுநர், மாநில அரசுக்காக சில கடமைகளைச் செய்கிறார். இது 355ஆம் பிரிவின் விதித்துறைகளையும், 356ஆம் பிரிவின் விதித்துறைகளையும் கொண்டு நமக்குத் தெரிய வரும். மாநில அரசுகளுக்கு அரசியலமைப்புச் சட்டப்படி மத்திய அரசு ஆற்ற வேண்டிய கடமைகளை உறுதி செய்யும் வகையில் ஆளுநர் பணியாற்ற வேண்டுமென்ற கருத்தை இந்த விதித்துறைகள் தெரிவிக்கின்றன.

நான்காவதாக பின்வரும் அலுவல்களைப் பொறுத்தமட்டில், மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே பயன்தருகிற இணைப்புப் பாலமாக ஆளுநர் இருந்து பணியாற்றுகிறார்:—

(1) 200, 201ஆம் பிரிவுகளின்கீழ் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக மாநிலச் சட்ட முன்வடிவுகளை ஒதுக்கி வைத்தல் ;

(2) 254 (2), 288 (2)ஆம் பிரிவுகளின் கீழ், மாநிலச் சட்ட முன்வடிவுகளை ஒதுக்கி வைத்தல் ;

(3) 304 (b)ஆம் பிரிவின்கீழ் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியைப் பெறுதல் ;

(4) 255ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு, மாநில அரசின் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுதல் ;

(5) 256, 257ஆம் பிரிவுகளின் விதித்துறைகள், 256, 257, 339 (2)ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ஆகியவற்றிற்கு மாநில அரசுகளை இணங்கி நடக்கச் செய்தல்.

இவ்விவகாரங்களில், ஆளுநர் சிறந்த முடிவெடுக்க வேண்டிய மிகவும் இக்கட்டான பணியை ஆற்றுகிறார்.

இறுதியாக, ஆளுநர் சில சூழ்நிலைகளில் குடியரசுத் தலைவரின் முகவராகச் செயல்பட வேண்டுமென அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மாநிலத்தின் ஆளுநர், அம்மாநிலத்தை அடுத்துள்ள மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிக்கு நிருவாக அதிகாரியாக நியமிக்கப்பட்டால், நிருவாக அதிகாரி என்ற முறையில் அவ்வாறே அவர் அவருடைய அமைச்சரவையின் ஆலோசனையின்றியே அலுவல்களை ஆற்ற வேண்டுமென 239 (2)-ஆம் பிரிவு கூறுகிறது. மகாராட்டிரம், குஜராத், நாகலாந்து ஆளுநர்களுக்கு, குறிப்பிட்ட சில பணிகளுக்குத் தனி பொறுப்புகளை அளிக்கும் 371, 371-A ஆம் பிரிவுகளை இவ்வகையின்கீழ் சேர்க்கலாம். இத்துடன் 356-ஆம் பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர் அதிகார முறையில் ஆணை வெளியிட்டு, மாநில அரசின் அலுவல்கள் அனைத்தையும் அல்லது ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொண்ட பிறகு, அந்த அதிகாரமுறையில் வெளியிடப்பட்ட

ஆணை செயலில் இருக்கும் கால அளவிற்கு ஆளுநர், குடியரசுத் தலைவரின் முகவராகச் செயல்படுகிறார்.

பதில் : 3.1. (B) :

கேரளம், மேற்கு வங்காளம், ஆந்திர. பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களை நியமனம் செய்வதில் ஆளுநருக்கும், அமைச்சரவைக்குமிடையே கருத்து வேறுபாடு எழுந்துள்ளதாகத் தெரிகிறது. இம் மாநிலங்களின் ஆளுநர்கள், பல்கலைக் கழகங் களின் வேந்தர்கள் என்ற முறையில் துணை வேந்தர்களைத் தெரிந்தெடுக்கத் தங்களுக்கு விருப்புரிமை அதிகாரம் உண்டு என்று கருது வதாகத் தெரிகிறது. ஆனால், ஆளுநர் அவருடைய விருப்ப உரிமை அதிகாரத்தைச் செலுத்துவதை அமைச்சரவை எதிர்க்கிறது. எனவே, மாநில ஆட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் இங்கு செயல்படுவதால், மாநில அமைச்சரவை தெரிவித்த ஆலோசனைக் கெதிராக துணை வேந்தர்களை நியமிக்கும் போது அவருடைய அலுவல் வரம்பை மீறிச் செயல்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மாநிலச் சட்டமன்றத்தால் அல்லது நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்படக்கூடிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அல்லது ஒரு சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங் களைக் கொண்டு ஆளுநர் அவர்கள் அமைச்சரவை தெரிவிக்கக்கூடிய ஆலோசனையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும். துணை வேந்தர்களை நியமிக்கும்போது, அமைச்சரவை அளிக்கும் ஆலோசனையின்படிதான் ஆளுநர் செயல்பட வேண்டும்.

மாநில ஆட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் ஆற்றும் மற்றொரு முக்கியமான பணி முதலமைச்சரை நியமிப்பது தொடர்பானதாகும். மக்களின் பெரும்பான்மையான ஆதரவை ஒரு தனிக்கட்சி பெற்றிருக்கும்போது, சிக்கல் எதுவும் வராது. அரசை அமைக்க மக்களின் பெரும் பான்மை ஆதரவை ஒரு தனி அரசியல் கட்சி பெறாதபோதுதான் பிரச்சினையே எழுகிறது. அத்தகைய ஒரு சூழ்நிலையில் முதலமைச்சரை நியமிப்பதில் இவர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதுதான் பிரச்சனை. கடந்த 34 ஆண்டுகளில், இத்தகைய நிலைமைகள் பல உருவாயின. அத்தகைய சூழ்நிலைகளில், ஆளுநர் அமைச்சரவை அமைக்க, அவையில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கக் கூடுமென்று அவர்கள் கருதக் கூடியவர்களை அழைப்பதற்கு ஆளுநர் விருப்புரிமை உடையவராவார்.

அண்மைக் காலத்தில், கேரளம், அரியானா, கருநாடகம் முதலிய மாநிலங்களில் இதுபோன்ற சூழ்நிலைகள் உருவானபோது, முதலமைச்சர் பதவிக்கு நியமனம் செய்யக்கூடிய வகையில் பெரும்பான்மையான ஆதரவை பெற்றிருப் பவர்களைக் கண்டறிய ஆளுநர்கள் புதிய முறைகளைப் பின்பற்றினர். அந்த புதிய முறைகள் வருமாறு :—மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் நேரில் கண்டு சரிபார்த்தல் ; மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை பல்வேறு கட்சித் தலைவர்கள் கொண்டு வந்து நிறுத்துதல் ; கையொப்பம் சரிபார்த்தல் ; முதலியன. இவை, சிறந்த நடைமுறைகள் ஆகா. ஆளுநர் என்ற உயர் பதவிக்கு இழுக்கு ஏற்படுத்தும். இங்கிலாந்தில் இத்தகைய சூழ்நிலைகளில் இப்படிப் பட்ட முறை ஒருபோதும் பின்பற்றப்படவில்லை. ஆகையால், அரசை அமைக்கக்கூடிய வகையில் யாதொரு அரசியல் கட்சி மக்களின் பெரும் பான்மை ஆதரவைப் பெறத் தவறி விட்டால் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் விளைவாக, ஒரு அமைச்சரவை நம்பிக்கை ஓட்டை பெறத் தவறி விட்டால் அப்போது அது போன்ற சூழ்நிலைகளில், இதில் தெரிவித் துள்ளவாறு அரசியலமைப்புச் சட்டத்தின் 164ஆம் பிரிவில் திருத்தம் செய்யலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளோம். எந்த ஒரு அரசியல் கட்சியும் பெரும்பான்மை ஆதரவைப் பெறாதபோது, மாநில ஆட்சித் தலைவர் அவராகவே முதலமைச்சராக ஒருவரைத் தேர்ந்தெடுக்க சட்டமன்ற பேரவையைக் கூட்டி அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் நபரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்க வேண்டும்.

சட்டமன்ற அலுவலில் ஒரு பகுதியாக, ஆளுநர் வேறு சில அலுவல்களையும் ஆற்ற வேண்டி யுள்ளது. அத்தகைய அலுவலில் ஒன்று, ஏற்கனவே தெரிவித்தபடி, 254 (2) 288 (2)ஆம் பிரிவுகளின்கீழ் குடியரசுத் தலைவர் பரிசீலனை செய்வதற்காகவும், அவருடைய இசைவைப் பெறுவதற்காகவும் மாநில அரசின் சட்டமுன் வடிவுகளை ஒதுக்கி வைத்தல் ; 254 (2)ஆம் பிரிவின்படி, பொதுப்பட்டியலில் கூறப்பட்டுள்ள பொருள் குறித்து மத்திய அரசு முன்னரே இயற்றி செயலில் இருக்கக்கூடிய மத்திய சட்டத்தை மீறுவதாகவும் அல்லது 288 (1)ஆம் பிரிவின் தொடர்பான விதித்துறைகளை மீறுவதாகவும் இருக்கக்கூடிய மாநில சட்டங்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்கு அனுப்பி வைக்க வேண்டும். இது குறித்து முழு விவாதத்தையும் அறிய '' பகுதி—II சட்டமன்ற உறவுகள் '' என்ற தலைப்பில் நாங்கள் தெரிவித்துள்ள கருத்தைக் காணலாம்.

சட்டமன்றத்தின் ஓர் அங்கமாக ஆளுநர் ஆற்றும் மற்றொரு முக்கியமான அலுவல், மாநில சட்டமன்ற அவை அல்லது அவைகளைக் கூட்டுவதும், கூட்டத் தொடரை முடித்து வைப்பதும்; மாநிலச் சட்டமன்றப் பேரவையைக் கலைப்பதும் ஆகும். மாநில சட்டமன்ற அவை அல்லது அவைகளைக் கூட்டுவது கூட்டத் தொடரை முடித்து வைப்பது தொடர்பான அலுவலை ஆளுநர், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில், செய்கிறார். ஆனால் கடந்த 34 ஆண்டுகளில் சில சூழ்நிலைகளில் ஆளுநர்கள் சிலர் இந்த அதிகாரத்தை, மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு எதிராகப் பயன்படுத்தினர். மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் நான்காவது பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பிறகே இது நிகழ்ந்தது. இவை ஆளுநரின் அதிகார அத்து மீறல்களில் சில என்பதில் ஐயமில்லை.

ஆகவே, கடந்த 34 ஆண்டுகளில், அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட அப்பதவியை வகிப்பதில், ஆளுநர் அவர்கள், அரசியலமைப்புச் சட்டத்தின் விதித்துறைகள் நியதிகளுக்கு இணங்கி நடக்க கூடுமானவரை முயன்றனர் என்பதும், ஆனால் ஒரு சில சமயங்களில் ஆளுநர்கள் அத்தகைய அரசியலமைப்புச் சட்டத்தின் நியதிகளை மீறி தங்களுடைய கடமை வரையறைக்கும் அப்பாற்பட்டு நடந்தனர் என்பதும் தெளிவாகிறது.

கட்சிக்காரர்களை ஆளுநர்களாக நியமிப்பதற்கு ஆட்சேபனை எதுவும் இருக்க முடியாது; ஆனால், அவ்வாறு ஆளுநர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் தகுதிவாய்ந்தவர்களாகவும் யாவருடைய மதிப்பையும் பெற்றவராக இருக்க வேண்டும்; மேலும், நிருவாகத் திறமையும் இருக்க வேண்டும்; நடுநிலைமையுடன் செயல்பட வேண்டும். அரசியல்வாதி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டால், மக்களவைத் தலைவருக்கு இருக்கின்ற பொறுப்பைப் போன்று அவர் கட்சி அரசியல் சார்பின்றி அப்பதவிக்குரிய மரபுப்படி நடக்க வேண்டும். மக்களவைத் தலைவருக்கு இருக்கின்ற மரபினையே அரசியல் கட்சியைச் சேர்ந்த ஆளுநருக்கும் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அத்தகைய மரபு எதுவும் ஏற்படுத்தப் படாமல் அரசியல் கட்சியைச் சேர்ந்த ஆளுநர் பாரபட்சமான அணுகுமுறையை பின்பற்றினர்; அதன் காரணமாக, மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே மனக்கசப்பு நிலை உருவாயிற்று. இந்திய அரசியலமைப்பு முறை போன்ற கூட்டாட்சி முறையுள்ள அமைப்பில் மத்திய அரசில் குறிப்பாக ஆளுங்கட்சியில்லாத மற்ற கட்சிகள் ஆட்சிபுரியும் மாநில அரசுகளுக்கு எதிராக பாரபட்சமான அணுகுமுறையைக் கைவிட வேண்டும். மத்திய அரசில் உள்ள ஆளுங்கட்சியானது மாநில அரசுகள் எந்த அரசியல் கட்சியை சார்ந்தவையாக இருப்பினும், அம்மாநில அரசுகள் அனைத்திடமும் நியாயமான அணுகுமுறையை வைத்துக்கொள்ளாவிட்டால், மத்திய-மாநில அரசுகளிடையே சுமுகமான நல்லுறவு ஏற்பட இயலாது. மத்திய அரசில் ஆளுங்கட்சி, எதிர்கட்சி நடத்தும் மாநில அரசுகளிடம் பாரபட்சமான வகையில் நடக்கலாகாது. அரசியலமைப்புச் சட்டம் தோன்றிய காலத்திலிருந்து மாநில அரசுகள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவையாக இருந்தாலும், அவற்றிடம் மத்திய அரசு சீரான பாரபட்சமற்ற அணுகுமுறையை பின்பற்றும் நல்ல மரபு எதுவும் உருவாக்கப் படவில்லை. மத்திய அரசில் அதிகாரத்திலுள்ள ஆளுங்கட்சி, மாநிலங்களில் தன்னுடைய கட்சி நலம்பெற்று முன்னேறுவதில் ஆர்வம் காட்டுகிறது; மத்திய அரசின் ஆளுங்கட்சியைச் சேராத மாநில அரசுகளை நீக்க வேண்டி, ஆளுநர்கள் சில சமயங்களில் மத்திய அரசின் கருத்துக்கிணங்க நடந்து கொள்கின்றனர். முன்பு, அ.இ.அ.தி.மு.க. அரசையும் ஏனைய அரசுகளையும் நீக்கியது, அண்மையில் சிக்கிம் அரசை நீக்கியது ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஆளுநர் சில சமயங்களில் பிரிட்டன் அரசியலமைப்பு சட்ட மரபுகள், பழக்க வழக்குகளுக்கு முரணாக நடந்துள்ளார்; மேலும், முதலமைச்சர் தனக்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கிறதா இல்லையா என்பதை நிருபிக்க வேண்டி சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கு வாய்ப்பு எதுவும் தராமலேயே ஆளுநர் தான்தோன்றித்தனமாக நடந்துள்ளார். சர் ஐவார் ஜென்னிங்ஸ் தன்னுடைய ''அமைச்சரவை அரசு'' என்னும் நூலில் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்:

''பெரும்பான்மை ஆதரவை அரசு இழந்துவிட்டது என்று பிரிட்டிஷ் பேரரசர் நம்பி, அக்கறை எடுத்துக்கொள்வதாயிருந்தால் அவர், அவருடைய அனுமானம் சரியானதா என்பதை உறுதி செய்துகொண்டு, அரசைக் கலைத்து விடுவது குறித்து வற்புறுத்துவதுதான் அவருடைய முடிவான நடவடிக்கையாக இருக்க வேண்டும். அமைச்சர்கள் அரசைக் கலைப்பது குறித்து 'ஆலோசனை' கூற மறுத்தால், அவர்கள் பதவி விலகுவர்; அவ்வாறு அவர்கள் பதவி விலகாது போனால், அவர், அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

ஆனால், அவ்வாறு அனுமானிக்க வேண்டியது அவருடைய கடமையா? அவ்வாறு அறுதியிட இயலும் வகையில், பொதுமக்களின் கருத்தினை போதிய அளவுக்கு அவர் அறிந்து வைத்துள்ளாரா? இரண்டாவது வினாவிற்குரிய பதிலானது இல்லையென்றே கூறப்படுகிறது. அவர் எதிலும் சம்பந்தப்படாமல் ''தனிப்பட்ட கீர்த்திச் சிறப்பில்'' இருப்பதாலேயே அதிக பாரபட்சம்

இல்லாமல் இருக்கலாம். அதனால், கருத்து எதுவும் கூறுவதற்கு இல்லாமலும் இருக்கிறார். செய்தித் தாள்களிலிருந்தும் துணைத் தேர்தல்களின் மூலமும் தன்னுடைய சொந்த சுற்றுப் பயணத்திலிருந்தும் மட்டுமே அவர் ஒருவாறு நிலையை ஓர்ந்தறிய லாம். முதலாவதாக, லண்டன் செய்தித்தாள்கள் ஒருமித்து எதிர்த்தாலுங்கூட அதுவே ஒரு காரண மாக அமையாது. இரண்டாவதாக, துணைத் தேர்தல்கள் (திரு டிஸ்ரேலி கண்டறிந்தவாறு) ஏமாற்றும் இயல்புடையவை என்று கூறலாம்; அதிலும் முக்கியமாக இவற்றினின்றும் வெகு தொலைவில் தள்ளியுள்ள ஒருவருக்கு இது பெரிதும் ஏமாற்றமாகத்தான் இருக்கும். மூன்றா வதாக, அரசருக்கே தெரிந்திருப்பது போன்று அதிக பாரபட்சமாகவும் நன்கு தெரியாத வகையி லும் இருப்பதாக உறுதியாகச் சொல்லலாம்''.

அவர் மேலும் பின்வருமாறு சுட்டிக்காட்டி யுள்ளார். "குடியாட்சி அரசு என்பது போட்டிக் கொள்கைகள் கொண்டதாகும். அதனால், கட்சி க்ளிடையே போட்டி மனப்பான்மை இருக்கும். வாக்காளர்களிடம் முறையிட அரசிடம் உள்ள அதிகாரத்திற்குட்பட்டு மக்களவையின் ஒப்புத லைப் பெறக்கூடியதாக கொள்கையானது அமைய வேண்டும். ஆகவே, மக்களவையில் அரசு தோல்வி யுற்று மக்களின் ஆதரவைப் பெற முடியவில்லை யெனில் அல்லது மக்களிடம் வேண்டுகோள் விடுத்து இதன் வேண்டுகோளுக்கு மக்கள் இசை வளிக்காமல் தோல்வியுறுமாயின் ஓர் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும். இராணியின் பணி அரசு தொடர்ந்து நிலையாக ஆட்சி நடத்துவதை மட்டுமே பார்த்துக்கொள்ள வேண்டும்; எனவே, இராணியார் ஒப்புக்கொள்கிற கொள்கையை தரக்கூடிய அரசை அமைப்பதில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு இராணியார் செய்வ தாக இருந்தால், கட்சி அரசியலில் அவர் தலை யிடுவதாக அமைந்துவிடும். உண்மையில் இராணி யார் பாரபட்சமற்ற வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், பார பட்சமற்ற வகையில் செயல்படுவதாகவும் காட்டிக் கொள்ள வேண்டும் என்பது முடியாட்சியின் இன்றி யமையாத கொள்கையாகும். இதனைத் தெளி வாக எடுத்துக் காட்டக்கூடிய ஒரே வழிமுறை என்னவெனில், எதிர்கட்சித் தலைவருக்கு உடனடி யாக அழைப்பு விடுவதாகும்''.

<u>ஆளுநரின் கடமையானது அரசாட்சி நிலையாக நடைபெறுவதைக் கவனித்துகொள்ள வேண்டுமே யன்றி அரசை அமைப்பதல்ல.</u>—அரசியலமைப்புச் சட்டத்தின் 164 (1) பிரிவின்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பொறுத்தவரை யில், அரசியலமைப்புச் சட்டத்தின் மரபுகள் பழக்க வழக்கங்கள் பின்பற்றப்படாததன் காரண மாகவே, மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையே மனக்கசப்பும் மோதலும் ஏற்படு கின்றன. கீர்த்தியும், பண்பும், திறமையும் வாய்ந் தவர்களையே ஆளுநர்களாக நியமனம் செய்ய வேண்டியது மத்திய அரசின் கடமையாகும். மத்திய அரசுக்கு வளைந்து கொடுத்து, அது சொன் னதை எல்லாமே செய்யக்கூடிய நபர்களை மத்திய அரசு ஆளுநர்களாக நியமனம் செய்தால், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே மனக் கசப்பும், மோதலும் பதட்ட நிலையும் உருவாகும் வாய்ப்புள்ளது. அதன் காரணமாக, மத்திய அர சுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே தக ராறு ஏற்படும்.

வினா : 3.2

மத்திய அரசுக்கும் மாநிலஅரசுகளுக்கும் இடையே நல்லுறவினை வளர்ப்பதில் ஆளுநரின் பங்கு என்னவாக இருக்க வேண்டும் (உங்களுடைய கருத்துப்படி) ?

விடை :

பம்பாயின் முன்னாள் முதலமைச்சர் திரு பி. ஜி. கர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்:—

'' நாம் இயற்றியுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு மிகச் சிறிய அளவில் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், ஓர் ஆளுநர் நல்லவராக இருந்தால், அவர் பல நல்ல காரியங்களைச் செய்யலாம்; ஆனால் ஓர் ஆளுநர் கெட்டவராக இருந்தால், தொல்லை பல தரலாம்''. — C. A. D. VIII பக்கம் 434.

மத்திய-மாநில அரசுகளுக்கிடையே சிறந்த நல்லுறவை வளர்க்கும் பொருட்டு, ஆளுநர் தன் னுடைய பல்வேறு கடமைகளுக்குரிய வரம்பினைச் சரியாகப் புரிந்து கொண்டு தன்னுடைய கடமை யினை ஆற்ற வேண்டும். இதனை வேறு வகையில் கூறுவோமாயின் ஆளுநரின் நான்கு வகையான அலுவல்களின் வாய்ப்பு வரம்பையும் அந்த நான்கு அலுவல்களுக்கிடையேயுள்ள தனித்தன்மையை நிலை நிறுத்துவதையும் சரியாகப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். மேலும், ஆளுநரின் பண்பு நலனைப் பொறுத்தே, மத்திய-மாநில அரசுகளுக் கிடையே நலமார்ந்த நல்லுறவு ஏற்படக்கூடும்.

இப்பிரச்சினையைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் பரிசீலிக்க வேண்டும் :—

(1) ஆளுநரின் பண்பு நலன்.

(2) ஆளுநரின் மனப்பான்மை.

(3) மாநில ஆட்சித் தலைவர் என்கிற வகையில் அவருடைய விருப்புரிமை அதிகாரங் களைச் செலுத்துகின்றபோதும் மாநிலச் சட்ட மன்றத்தின் அங்கமாக அவருடைய அதிகாரங் களைச் செலுத்துகின்றபோதும் அதிக விழிப் புணர்வுடன் இருத்தல்.

ஆளுநர் பதவியை வகிக்கின்ற ஒருவருடைய உயரிய அந்தஸ்தைப் பொறுத்தே, ஆளுநரின் பண்பு நலம் அமைகிறது என்பதில் ஐயமில்லை

ஒன்று அல்லது பல துறைகளில், அப்பண்பு நலன்களை அவர் பெற்றிருக்கலாம். ஆனாலும் அது ஆளுநரைத் தெரிந்தெடுக்கும் அல்லது நியமிக்கும் முறையைப் பொறுத்திருக்கிறது. ஏனெனில், பாரபட்சமான அரசியலைக் கொண்ட எந்தவொரு தெரிவு முறை அல்லது நியமிக்கும் முறை பின்பற்றப்பட்டால், அதனால் அப்பதவி வகிக்கும் நபரை அது பிரதிகூலமான வகையில் பாதிக்கும். ஆளுநர் அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின்படி எடுக்கக் கூடிய நடவடிக்கைகளில் உள்ள நியாயம் பற்றி மக்களுக்கு ஐயப்பாடு இருந்து வருகிறது; இதற்குக் காரணம் தற்போது ஆளுநரின் நியமனத்தில் பின் பற்றப்படும் நடைமுறையேயாகும்; மைய-மாநில அரசுகளுக்கிடையே சிறந்த ஒத்திசைவான உறவு முறைக்கு இது ஊறு விளைவிக்கும். முதலமைச்சர் ஒருவர் அண்மையில் தெரிவித்த கருத்து வருமாறு :

> ''நமது மாநில ஆட்சிக்குத்தேவையற்ற தலையீடு தொடர்ந்து இருந்து வருமோ என்று நான் அஞ்சுகிறேன்; அரசியல் காரணத்திற்காக மக்களின் கருத்து தொடர்ந்து அலட்சியப்படுத்தப்படும் அபாயநிலை உள்ளது''.

தற்போது, குடியரசுத் தலைவர் முதலமைச்சர்களைக் கலந்தாலோசித்த பின்னரே, ஆளுநர்களை நியமிக்கிறார். இவ்வாறு கலந்தாலோசிக்கும் கொள்கை அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்படவில்லை. எனவே, ஆளுநர்களை நியமனம் செய்யும் விஷயத்தில், முதலமைச்சர்களைக் கலந்தாலோசிக்கத் தவறுவதால் அல்லது மறுப்பதால் அத்தகைய நியமனம் செல்திறனற்றதாகாது. உண்மையில், அண்மையில் ஆளுநர்கள் சிலரை நியமித்ததில், மத்திய அரசு சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களைக் கலந்தாலோசிக்கவில்லை. ஆகவே முதலமைச்சர்களைக் கலந்தாலோசிக்காமல் ஆளுநர்களை நியமனம் செய்வது மத்திய அரசு மாநில அரசுகளின்மீது சுமத்துகின்ற ஒரு சுமையாகும் என்று மாநில அரசுகள் கருதுகின்றன. அத்தகைய கருத்தானது மத்திய-மாநில அரசுகளின் நல்லுறவுக்கு உகந்ததாயிராது. ஆகவே ஆளுநர்களை நியமனம் செய்யும் விஷயத்தில் அல்லது தெரிந்தெடுக்கும் விஷயத்தில் புதிய முறை ஒன்றை வகுக்க வேண்டும்.

மாநில ஆட்சித் தலைவருக்கும் மாநில அமைச்சரவைக்கும் இடையே சுமூகமான நல்லுறவை ஏற்படுத்தும் விஷயத்தில், மாநில அமைச்சரவையை கலந்தாலோசிப்பதும் முதலமைச்சரின் இசைவைப் பெறுவதும் அவசியமாகும்.

ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக இருக்க வகை செய்யும், 153-ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப்பட வேண்டும். ஏனெனில், அத்தகைய முறை, மாநிலங்கள் இக் கூட்டாட்சிக் குடியரசின் இணைந்து செயல்படக் கூடிய மாநில அரசுகள் என்று நடத்தப்படுவதற்கு மாறாக உண்மையில் வெறும் நிறுவனங்களாக அல்லது நிருவாகப் பிரிவுகளாக மட்டுமே நடத்தப்படுகின்றன என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது என்று நாங்கள் கருதுகிறோம். 153ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப்படுமாயின் 158ஆம் பிரிவின் (3-A) பகுதியும் இதனையொட்டி நீக்கப்பட வேண்டும்.

வினா : 3.3.

கீழ்க்காணும் விஷயத்தில் ஆளுநரின் கடமைகள்/அலுவல்கள் குறித்து தங்களுடைய கருத்துக்கள் யாவை?

(அ) 356 (1)ஆம் பிரிவின்படி, நடவடிக்கை எடுக்குமாறு கருத்துத் தெரிவித்து இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்புதல்.

(ஆ) 164ஆம் பிரிவின்படி முதலமைச்சரை நியமித்தல் ;

(இ) 174 (2) பிரிவின்படி சட்டப் பேரவைக் கூட்டத் தொடரைத் தள்ளி வைத்தல் அல்லது கலைத்தல் ;

விடை :

(அ) பாகம் IV—நிருவாக உறவுகள் என்பது பற்றி விளக்குகையில் இவ்வினாவிற்கு முழுமையாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தேர்தலில் ஓர் அரசியல் கட்சி மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, சட்டமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெற்றால், அமைச்சரவை அமைக்குமாறு, அக் கட்சியின் தலைவரை அழைப்பதைத் தவிர, ஆளுநருக்கு வேறு வழியில்லையென்று முதலமைச்சரைக் நியமிப்பது தொடர்பாக நாங்கள் முன்னர் தெரிவித்த கருத்துடன் மேலும், தெரிவிக்கிறோம். தேர்தலில், எந்தவொரு தனிக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத இழுபறி நிலைமை காணப்படில், எந்த ஓர் அரசியல் கட்சியின் தலைவர் நிலையான அமைச்சரவையை அமைக்க முடியுமென்று ஆளுநர் கருதுகிறாரோ அவரை, முதலமைச்சராக ஆளுநர் நியமிக்க வேண்டும். ஆளுநர் அவர்கள், இம்மாதிரி சிக்கலான சமயங்களில் தன்னுடைய பணிகளை ஆற்றும் போது அவர் மிகுந்த கவனத்துடனும் மதிநுட்பத்துடனும் செயல்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட கட்சி சட்டமன்றத்தில் பெற்றுள்ள எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கையை நேரில் எண்ணிச் சரி பார்த்தல் அல்லது எம்.எல்.ஏ.க்களின் கையொப்பங்களை நேரில் சரி பார்த்தல் போன்ற முறைகள் நன்முறைகளன்று. இம்முறைகள் பின்பற்றப்பட்டால், இவை, ஆளுநர் அவர்கள் பதவியின் மதிப்பையேக் குறைத்து விடும்.

(இ) சட்டப் பேரவைக் கூட்டத் தொடரைத் தள்ளி வைப்பதைப் பொறுத்த மட்டில், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே அவ்வாறு செய்ய வேண்டும். எனினும், சட்டப் பேரவையினைக் கலைக்கும்போது பிரச்சினை எழுகின்றது. சட்டப் பேரவையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுள்ள முதலமைச்சர் அவையைக் கலைக்குமாறு ஆளுநருக்கு ஆலோசனை கூறினால், அவருடைய ஆலோசனையை ஆளுநர் ஏற்றுக் கொள்ளவேண்டும். ஏனெனில் அவருடைய ஆலோசனையைப் புறக்கணித்தால் அரசை நடத்துவதற்கு வேறு ஒருவரை முதலமைச்சராக நியமிக்க இயலாது என்ற ஒரே காரணத்தாலேயே ஆகும். ஆனால், பெரும்பான்மை ஆதரவை இழந்த முதலமைச்சர் சட்டப் பேரவையைக் கலைக்குமாறு ஆளுநருக்கு ஆலோசனைக் கூறினால் அவருடைய ஆலோசனையை ஏற்று நடக்க வேண்டிய அவசியம் ஆளுநருக்கு இல்லை. ஆனால், உத்தேச 164ஆம் பிரிவின் (1-A) பகுதியில் நாம் குறிப்பிட்டுள்ள நடைமுறையை அவர் பின்பற்றி நடக்கக் கடமைப்பட்டவராவார்.

வினா : 3.4.

200ஆம் பிரிவின்படி ஆளுநர் சட்டமுன்வடிவுகளை ஒதுக்கி வைக்கவும், 201ஆம் பிரிவின்படி குடியரசுத் தலைவர் பரிசீலிக்கவும் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் வழிவகை செய்ததன் கருத்தும் நோக்கமும் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்? மாநிலச் சட்டமுன் வடிவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கி வைக்கும் ஆளுநரின் அதிகாரம் இந்த விதித்துறையின் கருத்து, எண்ணம், நோக்கத்திற்குப் பொருந்தும் வகையில் பொதுவாகச் செலுத்தப்பட்டுள்ளதா ? திட்டவட்டமான எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் உங்கள் கருத்துக்களைக் கூறவும்,அமைச்சரவையின் ஆலோசனையின்றி மாநிலச் சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிப்பதை ஆளுநர் நிறுத்தி வைத்த அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்த நிகழ்வுகள் எவையேனும் இருப்பின் அவற்றைக் குறிப்பிடவும்.

விடை :

இவ்வினாவிற்கு பாகம்-II. சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள் என்ற பகுதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

வினா : 3.5

1956 முதல் 1965-ஆம் ஆண்டு வரையில் இயற்றப்பட்ட 170சட்ட முன்வடிவுகளை இந்தியச் சட்ட நிறுவனம் ஆய்வு செய்ததில் பின்வரும் உண்மை தெரிய வந்தது. ''குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்குத் தனது கொள்கைகளை ஏற்கவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகள் மீது ஆதிக்கம் செலுத்த முயல்கிறது. ஆனால், ஒரு சில சட்டமுன்வடிவுகளுக்கு மட்டுமே இசைவளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அதனால் இதுவரையிலும் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் மாநில அரசின் தன்னாட்சி உரிமையினைப் பாதிக்கும் வகையில் அமையவில்லை எனத் தெரிகிறது ''.

மேற்கண்ட முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இறுதியில் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தால், வீணான காலதாமதம் ஏற்பட்டதாக நீங்கள் எண்ணுகிறீர்களா ?

விடை :

இவ்வினாவிற்கு பாகம்-II சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள் என்ற பகுதியில் விடையளிக்கப்பட்டுள்ளது.

வினா : 3.6

ஆளுநர் என்பவர் மத்திய அரசின் முகவரோ அல்லது மாநில அரசின் அலங்காரத் தலைவரோ அல்லர் ; அவர் மாநில மைய அரசிற்கிடையில் பாலமாகச் செயல்படுகிறார் என்ற கருத்து நிலவி வருகின்றது. இது சரியான நிலையினைக் குறிக்கின்றதா ? நடைமுறையில் ஆளுநர்கள் தங்களின் இருவகைப் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் பொதுவாக பாரபட்சமின்றி அரசியல் சட்டத்தின்படியும் மரபுகளின்படியும் நியாயமாகச் செயல்படுகின்றனரா ? நீங்கள் உங்களுடைய பதிலைத் திட்டவட்டமான நிகழ்வுகள் எவையேனும் இருப்பின் அவற்றுடன் தரவும்.

விடை :

ஆளுநரின் இருவகைப் பொறுப்புகளை நாங்கள் ஏற்கவில்லை. ஆளுநர் என்பவர் மத்திய அரசின் முகவரோ அல்லது மாநில அரசின் அலங்காரத் தலைவரோ அல்லர். அவர் மாநில-மைய அரசிற்கிடையில் பாலமாகச் செயல்படுகிறார் என்பது சரியான நிலையைக் குறிப்பிடுகிறது. ஏற்கனவே விவரித்தபடி, அரசியலமைப்புச் சட்டத்தின்படி அவர் நான்கு முக்கியப் பங்கினை வகிக்கின்றார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், இதுதான் சரியான நிலை. இந் நான்கு வகைக் கடமைகளையும் அரசியலமைப்புச் சட்ட விதித்துறைகளின்படியே ஆளுநர் நிறைவேற்றுகின்றார். ஆனால், சில சமயங்களில், அந் நடைமுறைகளினின்றும் பிறழ்ந்து ஆளுநர் செயல்படுகின்றார். இதன் காரணமாகவே நாங்கள் சில வற்றை பரிந்துரைக்கிறோம்.

வினா : 3.7

ஆளுநர் அரசியலமைப்புச்சட்டத்தின்படித் தனது கடமைகளை திறம்படவும், பாரபட்சமின்றியும் நிறைவேற்ற இயலும் பொருட்டு அவருடைய பதவிகாலம் 5 ஆண்டுகள் என்று உறுதி அளிக்கப் படுவதுடன் தலைமை நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதியை நீக்குவதில் பின்பற்றப்படும் நடை முறையே ஆளுநரை நீக்குவதற்கும் பின்பற்றப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ?

விடை :

ஆளுநர்ப் பதவி அரசியல் சார்புடையதாகும். எனவே, இதனை தலைமை நீதிமன்ற/உயர்நீதி மன்ற நீதிபதி நிலையுடன் ஒப்பிடக்கூடாது. ஆளுநர், அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில-மைய அரசுகளுக்கிடையே நடுவராகச் செயல் படுவார்என எதிர்பார்க்கப்படுவதில்லை. எனவே, அவருடைய சுதந்திர செயல்பாட்டினை உறுதி செய்ய பதவிக் காலத்திற்கும் சம்பளம் முதலிய வற்றிற்கும் உறுதி அளிப்பது என்ற பிரச்சினை எழாது. அரசியலமைப்புச் சட்டத்தின் தற்போதுள்ள விதித்துறைகளே போதுமானவை யாகும்.

வினா : 3.8

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சி சட்டமன்றத்தில் தனது பெரும்பான்மையினை இழந்து விட்டதா என்பதை முடிவு செய்ய, தானே சட்டப் பேரவையினைக் கூட்டிச் சரிபார்க்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?

விடை :

164ஆம் பிரிவிற்குப் பின்வருமாறு திருத்தம் ஒன்றை தெரிவிக்கும்போது எங்களால் வெளிப் படையாகக் கூறப்பட்டுள்ள சூழ்நிலை தவிர மற்ற சூழ்நிலைகளில் இக்கருத்தை நாங்கள் ஏற்கவில்லை. இக்கருத்து ஏற்கப்படுமானால், ஒரு மாநிலத்தில் அன்றாட அரசியலில் ஈடுபடுமாறு ஆளுநரைக் கட்டாயப்படுத்துவதாக அமையும். இச்செயல் ஆளுநர் எனும் உயர் பதவிக்கு இழுக்கினை ஏற்படுத்துவதாகும். இதைத்தவிர, குறிப்பிட்ட செயலில் பேரவைத் தலைவரின் அலுவல்களை ஆளுநர் பறிப்பதாகும்.

வினா 3·9 :

மாநிலச் சட்டமன்றதில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையடுத்து, மாநில அமைச்சரவை பதவி விலகிய பின்னர் ஏற்படும் கட்சிகளின் நிலையற்ற சூழ்நிலை நிலவும்போது, மாநில முதலமைச்சரைத் தெரிவு செய்வதில் ஆளுநர் நியாயமாக நடந்து கொள்வதில்லை என்றும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது கூட்டத்தினரின் நலனை ஊக்குவிக்கும் முறையில் நடந்துகொள்கிறார் என்றும் அடிக்கடி குறை கூறப்படுகிறது. அமைச்சரவையின் நிலையற்ற தன்மையினைத் தவிர்ப்பதற்காக, ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசின் அரசியல் சட்டம் புதிய வழிமுறை ஒன்றினைக் கொண்டுவந்துள்ளது. கூட்டமைப்பு சட்ட மன்றம் (பண்டேஸ்டாக்) கூட்டாட்சி சான்செல்லர் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம். அதே சமயம் புதிய கூட்டாட்சி சான்செல்லர் ஒருவரை தெரிந்தெடுத்து அதன் பின்னரே தற்போதைய சான்செல்லரை பதவி நீக்கம் செய்யுமாறு கூட்டாட்சித் தலைவரைக் கேட்டுக் கொள்ளலாம் என்று அடிப்படைச் சட்டத்தின் 67ஆம் பிரிவு கூறுகிறது. நமது அரசியல் சட்டத்திலும் இத்தகைய விதித்துறை சேர்க்கப்பட்டால் தேர்ந்தெடுக், கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் ஆளுநருக்குமிடையே ஏற்படும் மோதலைத் தவிர்க்கலாமென்றும்- மேற்சொன்னவாறு ஆளுநரைக் குற்றஞ்சாட்டும் நிலைமை ஏற்படுவதைத் தடுக்கலாமென்றும் நீங்கள் நினைக்கிறீர்களா ? வேறு கருத்து எதுவும் தெரிவிக்கிறீர்களா ?

விடை:

164ஆம் பிரிவைத் திருத்த வேண்டு மென்று கூறுகையில் நாங்கள் பின்வருமாறு தெரி வித்த பரிந்துரைகளைக் காண்க:—

ஜெர்மன் கூட்டமைப்புக் குடியரசு அரசியல் சட்டத்தின் 67 (1)ஆம் பிரிவு எந்த வகையிலும் நல்லதொரு தீர்வினைக் கொடுக்கவில்லை என்பதை இது தொடர்பாக நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மேற்கு ஜெர்மனி அரசியல் சட்டத்தின் 67 (1) பிரிவு கூறுவதாவது :

"பண்டேஸ்டாக் (Bundestag) சட்ட மன்றம், தனது கூட்டமைப்பு சான்செல்லர் மீது நம்பிக்கையின்மையை, அவருக்குப் பதிலாக வேறொரு சான்செலரை பெரும்பான்மை உறுப் பினர்களின் ஆதரவைக் கொண்டு தெரிந் தெடுப்பதன் மூலமும் தற்போதுள்ள கூட் டமைப்பு சான்செல்லரைப் பதவியிலிருந்து நீக்கு மாறு கூட்டமைப்புத் தலைவரைக் கேட்டுக் கொள்வதின் மூலமும் மட்டுமே, தெரிவிக்கலாம். கூட்டமைப்புத் தலைவர் அவ்வேண்டுகோளை ஏற்று, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபரை நியமிக்க வேண்டும்".

அமைச்சரவையினை நிலையாகப் பாது காப்பதும், அற்ப காரியங்களுக்காக நம்பிக்கையில் லாத்தீர்மானம் கொண்டு வருவதைத் தடுப்பதுவுமே மேற்சொன்ன 67 (1) பிரிவின்

விதித்துறைகளின் நோக்கமாகும். மேற்கு ஜெர்மனி அரசியலமைப்புச் சட்டத்தின் 67ஆம் பிரிவின் (1) பகுதியில் வரும் 'மட்டும்' என்ற சொல் இதனைத் தெளிவாகக் குறிக்கின்றது. எனவே, மேற்கு ஜெர்மனியில் வேறு எந்த வகையிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர இயலாது. இதனை வேறு விதமாகக் கூறுவோமேயானால் மேற்கு ஜெர்மனியில் எதிர்க் கட்சியானது பெரும்பான்மை ஆதரவுடன் புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்த பின்னர்தான் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும் இவ்வகையான நிதித்துறை சேர்க்கப்பட்டால், மாநிலச் சட்டப் பேரவையானது தற்போதுள்ள முதலமைச்சர் மீது தனது நம்பிக்கையின்மையை. அவருக்குப்பதிலாக வேறொருவரை முதலமைச்சராகத்தெரிந்தெடுப்பதன் மூலமும், தற்போதுள்ள முதலமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குமாறு ஆளுநர் அவர்களைக் கேட்டுக்கொள்வதன் மூலமும் மட்டுமே, தெரிவிக்கலாம் என்பதற்கு வகைசெய்யும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே தெரிவிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், ஆளுநர் கோரிக்கையினை எற்று இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் நபரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும். இப்படிப்பட்ட விதித்துறையானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டால், சட்டமன்றப் பேரவையிலுள்ள எதிர் கட்சியினர் புதிய முதலமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க பெரும்பான்மை ஆதரவை திரட்டினாலன்றி பதவியிலிருக்கும் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் உரிமையினை இழந்துவிடுவர். இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகள், ஆட்சியிலுள்ள ஒரு அமைச்சரவையினை பதவியிலிருந்து நீக்க நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும் தங்கள் உரிமையினைக் கட்டுப்படுத்தும் இத் திருத்தத்தை இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகள் ஏற்கமாட்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். இது தவிர, மாநிலச் சட்டமன்றத்திற்கும் ஆளுநருக்குமிடையில் உள்ள உறவு முறையினை முறைப்படுத்த மேற்கு ஜெர்மன் அரசியலமைப்புச் சட்டத்தின் 67 (1) பிரிவின் விதித்துறைகள் இந்திய அரசிலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டால், 67 (1) பிரிவைத் தொடர்ந்து அதனையொட்டி மேற்கு ஜெர்மனி அரசியலமைப்புச் சட்டத்தின் 68ஆம் பிரிவையும் நாம் அவசியம் சேர்த்துக் கொள்ளவேண்டும் மேற்கு ஜெர்மனிய அரசியலமைப்புச் சட்டத்தின் 68 (1) பிரிவு கூறுவதாவது :—

"கூட்டமைப்பின சான்செல்லர், தன்மீது நம்பிக்கையுள்ளதா என்பதை அறியக் கொண்டுவரும் தீர்மானத்திற்கு, கூட்டமைப்பு சட்டமன்றத்தின் (பண்டேஸ்டாக்கின்) பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவளிக்கவில்லையெனில், கூட்டமைப்பு சான்செல்லர் முன் மொழிவதன் பேரில், கூட்டமைப்புத் தலைவர், கூட்டமைப்புச் சட்ட மன்றத்தை 21 நாட்களுக்குள் கலைக்கலாம். பெரும்பான்மை உறுப்பினர்களுடன் கூட்டமைப்பு சட்டமன்றம் மற்றொரு சான்செல்லரைத் தேர்ந்தெடுத்தவுடன் கூட்டமைப்புச் சட்ட மன்றத்தைக் கலைக்கும் உரிமை அற்றுப்போகும். இவ் விதித் துறைகள் எப்பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கிறதோ அவற்றை விட அதிகமான பிரச்சனைகளே, இவ்விதித்துறைகளைக் கொண்டு வருவதால் உருவாகலாம்."

வினா 3.10.—

நிருவாகச் சீர்திருத்தக் குழு பின்வருமாறு பரிந்துரைத்தது. "ஆளுநர்கள் தங்களுக்குள்ள விருப்ப அதிகாரங்களை எம்முறையில் செலுத்தவேண்டுமென்பது குறித்த வழிகாட்டிக் குறிப்புகளை பன்மாநிலக் குழுவே தயாரிக்க வேண்டும். இவற்றை மத்திய அரசு ஏற்ற பின்னர் குடியரசுத் தலைவரின் பெயரில் வெளியிட வேண்டும். அவை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கப்பட வேண்டும்".

இப்படிப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிடுவது அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுப்படியாகுமா அரசியலுக்கேற்ப பொருத்தமானதா, இதனால் பயன் விளையுமா என்பது பற்றி உங்களுடைய கருத்தென்ன ?

பதில்.—

நிருவாகச் சீர்த்திருத்தக் குழுவின் கருத்தினை நாங்கள் ஏற்கவில்லை. ஆளுநர் தனது விருப்ப அதிகாரத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிடுவதானது, அவை விரிவாக இல்லாவிட்டாலும், ஆளுநர்ப் பதவியை நகராட்சி மன்ற அல்லது மாநகராட்சி மன்ற ஆணையர் அல்லது செயலர் பதவி போன்று கருதுவதற்கு ஒப்பாகும். மாநிலங்கள் சுயாட்சி உரிமை கேட்கின்றன. ஆளுநர்ப் பதவியை மத்திய அரசு தலையீடு இல்லாத தனிப் பதவியாக ஆக்க வேண்டுமென்று கூறுகின்றன. எனவே, ஆளுநருக்கு பன் மாநிலக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 263ஆம் பிரிவின்படி ஆற்றவேண்டிய பணிகள் சிலவற்றை இது கூறியுள்ளது. குடியரசுத் தலைவரின் பெயரில் வழிகாட்டிக் குறிப்பு வெளியிடுவது தொடர்பாக நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமானால் ஆளுநரை, அரசியலமைப்புச் சட்டப்படி மாநில ஆட்சித் தலைவராக ஆக்கும் முயற்சி பொருளற்றதாகி விடும். பண்டித ஜவகர்லால்

நேரு அவர்கள் கூறியதை இங்குக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். ''ஆளுநர்கள் ஆளுங் கட்சிகளால் நியமனம் செய்யப்படுபவர்கள் அல்லர்; இவர்கள் ஆட்சி மாறும்போது எல்லாம் மாற்றப்படக் கூடியவர்களும் அல்லர். ஆளுநர் அப் பகுதியிலுள்ள அரசியல் கட்சிகளுடனும் அலுவல்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளாதவராகவும் மாநிலம் ஏற்கும் விதத்தில் சார்ப்பற்று தனித்து நிற்பவரேயானால், மேலும் சிறப்புடையதாக இருக்கும் மாநில அரசின் கட்சி அமைப்பில் ஓர் அங்கமாக இருக்கக் கூடாது''. இவ்வாறு பண்டித நேரு அவர்கள் கூறினர்கள். ஹிரிகோவிந்த பண்டட்டுக்கும் ரகுலால் திலக் மற்றும் ஏனையோருக்குமான வழக்கில் உயர் நீதி மன்றம் (AIR 1979 SC பக்கம் 1109), ஆளுநர் மத்திய அரசின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டவர் அல்லர், அவர் தனது அலுவல்களையும், கடமைகளையும் செய்வதில் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. அரசியலமைப்புச் சட்டப்படி இவர் தனித்துச் செயல்படுகிறார். மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு இவர் உட்பட்டவரல்லர். ஆகவே, அவருக்கு வழிகாட்டிக் குறிப்புகளை வரையறுக்க வேண்டுமென்று கூறுவது, அரசியல் ரீதியில் முறையற்றது. சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதும் அல்ல என்று நாங்கள் கூறுகிறோம். அரசியலமைப்புச் சட்டப்படி செயலாற்றுகின்ற ஆளுநர் போன்ற உயர்ப் பதவிக்கு இப்படிப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகளைப் பிறப்பிப்பதன் மூலம் அப் பதவியின் மதிப்பைக் குறைப்பது முறையல்ல. இவ் வகையில் இப் பதவிக்குரிய சிறந்த மரபுகள் தழைத்தோங்கி வளர நாம் அனுமதிக்க வேண்டும். இது பற்றி பாகம் IV "நிருவாக உறவுகள்" என்பதன் கீழ் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே தெரிவித்த கருத்துகளுடன் இப்போது கூறப்படுகிற பரிந்துரைகள்—

(1) 153ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை கூறுவதாவது: ''ஆனால் இப்பிரிவில் கண்டுள்ள தெதுவும் ஒரே நபரை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமனம் செய்வதைத் தடை செய்யாது'' இந்த வரம்பு நிபந்தனை நீக்கப்பட வேண்டும். ஒருவரை மாநில ஆட்சித் தலைவராக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு நியமனம் செய்வதானது, மாநிலங்கள் கூட்டாட்சி முறைப்படி அமைந்த அரசுகளாக இல்லாமல் வெறும் நிறுவனங்களாகவோ நிருவாகப் பிரிவுகளாகவோ கருதப்படுகிற ஒரு எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. வேறு எந்த கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்திலும் இத்தகைய விதித்துறை இல்லை.

153ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப்படுவதையொட்டி 158ஆம் பிரிவின் (3-A) பகுதியும் நீக்கப்பட வேண்டும். 158ஆம் பிரிவின் (3-A) பகுதி கூறுவதாவது :—''ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமிக்கப்படுவாரேயானால், ஆளுநருக்குக் கொடுக்கப்படும் ஊதியம், படிகள் ஆகிய வகையில் ஏற்படும் செலவு, குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்து, அதன்மூலம் தீர்மானிக்கின்ற விகிதாச்சாரத்தில் அந்த மாநிலங்களுக்கிடையே ஒதுக்கப்பட வேண்டும்.''

(2) முதலமைச்சரின் இசைவுடன், குடியரசுத் தலைவர் ஆளுநரை நியமிக்க வேண்டும். ஆளுநர் நியமனம் தொடர்பான 155ஆம் பிரிவை இதற்கு ஏற்றவாறு திருத்த வேண்டும்.

(3) 160ஆம் பிரிவு கூறுவதாவது, ''இந்த அத்தியாயத்தில் கூறப்படாத யாதொரு சூழ்நிலையில் ஒரு மாநில ஆளுநருக்குள்ள அலுவல்களை நிறைவேற்ற, குடியரசுத் தலைவர் தான் தகுதியெனக் கருதுகிற விதித்துறையை இயற்றலாம்.'' 160ஆம் பிரிவு விரிவாக விளக்கப்பட்டிருப்பதுடன் குடியரசுத் தலைவருக்குப் பரந்த அளவில் விருப்ப அதிகாரம் அளிக்கிறது. ''இந்த அத்தியாத்தில் வகை செய்யப்பட்டிராத யாதொரு சூழ்நிலையில்'' என்ற தொடர் பரந்திருப்பதோடு மத்திய அமைச்சரவை தெரிவிக்கும் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் செயலாற்ற வேண்டியிருப்பதால் அரசியல் நடவடிக்கைக்கு அதிக வாய்ப்பளிக்கிறது. குடியரசுத் தலைவரின் முகவராக ஆளுநர் அவருடைய கடமைகளை ஆற்றுவதற்கு குடியரசுத் தலைவர் விதிகள் இயற்றவும், வழிகாட்டிக் குறிப்புகளைக் குறிப்பிடவும், ஏதுவாய் இருக்கும் பொருட்டு, இந்த விதிமுறை கொண்டு வரப்பட்டதாக எண்ணுவதற்கு வாய்ப்பிருக்கிறது. உண்மையில் பார்க்குமிடத்து, இந்த அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டபடி ஆளுநர், அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சில அலுவல்களை குடியரசுத் தலைவரின் முகவராக இருந்து செய்கிறார். ஆனால், ஆளுநரின் மற்ற அலுவல்களையும் கூட சேர்த்துக் கொள்ளும் அளவிற்கு, இப் பிரிவிற்கு மேலும் விளக்கம் கொள்ளலாம். இப்பிரிவைத் திருத்தியமைக்க வேண்டியுள்ளது.

(4) ஆளுநர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அல்லது அதன் கீழ் தன் விருப்புரிமையின்படி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட அலுவல்கள் அல்லது அவற்றில் ஏதாவது ஓர் அலுவல் நீங்கலாக, ஆளுநர் தன் அலுவல்களைச் செய்வதில் அமைச்சரவை உதவவும், ஆலோசனை கூறவும் அரசியலமைப்புச் சட்டத்தின் 163 (1) பிரிவு வகை செய்கிறது. இப்பிரிவை, குடியரசுத் தலைவர் தொடர்பான 74 (1) பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாய் இருக்கலாம். மேற்படி 74(1)

பிரிவில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி அல்லது அதன் கீழ் குடியரசுத் தலைவர் அவர் விருப்புரிமைப்படி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட அலுவல்களை அல்லது அவற்றில் ஏதாவது ஓர் அலுவல் நீங்கலாக என்ற தொடர் இடம் பெறவில்லை. மத்தியிலும், மாநிலத்திலும், சட்டமன்ற அமைப்பு கொண்ட அரசு முறை அமைய, அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது. எனவே, அரசியலமைப்புச் சட்டத்தின் 74 (1) பிரிவின் படி, 163 (1) பிரிவைத் திருத்த வேண்டியது அவசியமாகிறது. ஆகவே 163 (1) பிரிவைப் பின்வருமாறு திருத்தி அமைக்கலாம்.''

'' ஆளுநர் அவருடைய அலுவல்களைச் செய்வதில் அவருக்கு உதவவும், ஆலோசனை கூறவும், அந்த ஆலோசனைக் கேற்ப அவர் செயலாற்றவும், முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை ஒன்று இருக்க வேண்டும்.

ஆனால், 239 (2), 371, 371-A ஆம் பிரிவுகளின் கீழ் வெளிப்படையாக ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அலுவல்களைப் பொருத்தவரையில், அவர், தனது விருப்பத்திற்கு ஏற்ப, அந்த அலுவல்களைச் செய்யலாம்.''

(5) 163 (2) பிரிவு கூறுவதாவது : '' இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அல்லது அதன் கீழ் யாதொரு விஷயம் தொடர்பாக, ஆளுநர் தன்னுடைய விருப்பப்படி செயற்படலாமா கூடாதா என்ற ஒரு பிரச்சனை எழுமானால், தன்னுடைய விருப்பம்போல் எடுக்கும் தீர்வே இறுதி முடிவானதாகும். ஆளுநர் தன் விருப்பம் போல் நடந்திருக்க வேண்டும் அல்லது நடந்திருக்கக் கூடாது என்னும் காரணத்தைக் கொண்டு அவர் செய்த யாதொரு செயலின் செல்திறனை ஆட்சேபிக்கலாகாது. மாநிலங்களில் அமைச்சரவை முறையில் அமைந்திருக்கிற அரசு திறம்படச்செயலாற்றுவதற்கு இந்த விதித்துறை மிகவும் உறுதுணையாக இல்லாமல் இருக்கலாம். எனவே, இதனை நீக்கிவிடலாம்.

(6) அரசியலமைப்புச் சட்டத்தின் 164 (1) பிரிவின்படி ஆளுநர் முதலமைச்சரை நியமிக்க வேண்டும். மற்ற அமைச்சர்களை முதலமைச்சரின் ஆலோசனையுடன் ஆளுநர் நியமிக்க வேண்டும் இந்த அமைச்சர்கள், ஆளுநர் தகுதியெனக் கருதுகிற கால அளவு வரை பதவி வகிப்பர். மாநிலச் சட்ட பேரவைக்கு அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு வகிக்க (2) பகுதி வகைசெய்கிறது.

நாடாளுமன்ற மக்களாட்சிக் கோட்பாட்டிற்கிணங்க, ஒரு மாநிலத்தில் அமைச்சரவை எந்த முறையில் அமைக்கப்பட வேண்டும் என்பதை விரிவாகக் குறிப்பிட்டு, திட்ட வட்டமான விதித்துறை ஒன்றை அரசியலமைப்புச் சட்டத்தின் 164ஆம் பிரிவில் (1) பகுதிக்குப் பின்னர், (1-A) பகுதியாகச் சேர்க்க வேண்டியது உகந்ததாகும். (1-A) பகுதி பின்வருமாறு, அமைத்துக் கொள்ளப்படலாம் :

'' (1-A) (உ) சட்டப் பேரவையில் அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் தலைவரை முதலமைச்சராக, ஆளுநர் நியமிக்க வேண்டும்.

(b) சட்டமன்றப் பேரவையில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இருப்பதாக ஆளுநர் மனநிறைவு அடையாவிட்டால், ஒருவரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுப்பதற்கு, தானாகவே பேரவையைக் கூட்டி, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவரை, முதலமைச்சராக நியமிக்க வேண்டும்.

(c) அமைச்சர் எவரையும், நீக்கும்படி, ஆளுநருக்கு முதலமைச்சர் கூறும் ஆலோசனையை ஆளுநர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(d) முதலமைச்சர் சட்டப் பேரவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டாரென ஆளுநருக்கு எச்சமயத்திலேனும் தோன்றினால், முதலமைச்சர் சட்டப் பேரவையில் நம்பிக்கைத் தீர்மானம் பெற இயலும் பொருட்டு, ஆளுநர் தாமே நடவடிக்கை எடுத்து உடனடியாகச் சட்ட பேரவையைக் கூட்ட வேண்டும்.

(e) (i) முதலமைச்சர் நம்பிக்கை தீர்மானத்தைப் பெறத் தவறினால் அல்லது நம்பிக்கைத் தீர்மானம் பெற முயன்று, தேவையான வாக்குகள் பெறத் தவறினால், முதலமைச்சர் பதவியை விட்டு விலக வேண்டும். அத்தகைய பதவி விலகலின் போது சட்டப் பேரவையில் முழுப் பெரும்பான்மையை ஏதேனும் ஒரு கட்சி பெற்றிருந்தால், அக்கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஆளுநர் தம் சுய தீர்மானத்தின்பேரில் நியமனம் செய்யலாம்.

(ii) (1)ம் பாராவில் கூறியுள்ளபடி முதலமைச்சர் பதவி விலகத் தவறினால், அல்லது, சட்டப் பேரவையில் எக்கட்சியும் முழுப் பெரும்பான்மையைப் பெற்றிராவிடில், அப்போது ஆளுநர் தம் சுய தீர்மானத்தின் பேரில் சட்டப் பேரவையைச் கூட்ட வேண்டும். புதிய முதலமைச்சரைச் சட்டப் பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும். அவரை முதலமைச்சராக ஆளுநர் நியமனம் செய்ய வேண்டும்; அல்லது, மாற்று ஏற்பாடாக, சட்டப் பேரவையைக் கலைக்கும்படி பரிந்துரை செய்து தீர்மானமொன்றைச் சட்டப் பேரவை நிறைவேற்ற வேண்டும்; ஆளுநர் இத் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

(iii) உட்பகுதியின்படி நம்பிக்கை வாக்கு கோரிய நாளிலிருந்து ஒரு திங்கள் கால அளவுக்குள் (ii)-ம் பாராவில் கூறியுள்ளவாறு சட்டப்

பேரவை புதிய முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க அல்லது தீர்மானமொன்றை இயற்றத் தவறினால், மேற்சொன்ன ஒரு திங்கள் கால அளவு முடிவடைவதன்பேரில் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதாகும்.

(f). (e)யின் உட்பகுதியின் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதாக இருக்கும்போதும், சட்டப் பேரவை தொடங்கிய நாளிலிருந்து புதிய முதலமைச்சரைப் புதிய சட்டப் பேரவை தேர்ந்தெடுக்கும் நாள் வரையிலான கால அளவிலும், (e)யின் உட்பகுதியின்படி சட்டப் பேரவை கலைக்கப்பட்டதாக உள்ள நாளில் பதவியிலிருந்த முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் காப்பு (காபந்து) அமைச்சரவையாக மட்டுமே தொடர்ந்து பதவியில் இருக்கலாம்.

(7) அடுத்ததாக, நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியப் பிரிவு 169 ஆம் பிரிவு, (1) பகுதியாகும். இப் பிரிவில் சொல்லியுள்ளதாவது '' 168 ஆம் பிரிவில் என்ன சொல்லியிருப்பினும், சட்டப் பேரவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும் பான்மையோராலும், சட்ட மன்றக் கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் 3-ல் 2 பங்குக் குறையாத பெரும்பான்மை உறுப்பினர்களாலும், அத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால், நாடாளுமன்றம் சட்டம் ஒன்றை இயற்றி, சட்ட மேலவை உள்ள ஒரு மாநிலத்தில் அச்சட்ட மேலவையை எடுத்து விட அல்லது அத்தகைய மேலவை இல்லாத ஒரு மாநிலத்தில் அத்தகைய மேலவை ஒன்றை உருவாக்க ஏற்பாடு செய்யலாம்''. இப்பிரிவில் ''நாடாளுமன்றம் .... ஏற்பாடு செய்யலாம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக '' நாடாளுமன்றம் .... ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்ற சொற்றொடரைக் கொள்ள வேண்டும். இப் பகுதியைக் கீழ்க் கண்டவாறு மாற்றியமைத்தல் நலம். '' குடியரசுத் தலைவர் மாநிலச் சட்டப் பேரவையின் அத்தகையத் தீர்மானம் வரப் பெற்றதிலிருந்து 14 நாட்களுக்குள் சட்ட மேலவையை எடுத்து விடுவது அல்லது உருவாக்குவது தொடர்பான அவசியம் பற்றி அல்லது அவசரம் பற்றி ஆலோசனை கூறுவதற்காக, அத்தகையத் தீர்மானத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143ஆம் பிரிவின் கீழ் உச்ச நீதி மன்றத்திற்கு அனுப்பி உச்ச நீதி மன்றம் அதற்கு எதிராக ஆலோசனை கூறியிருந்தாலன்றி, சட்டப் பேரவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும் பான்மையோராலும், சட்டமன்றக் கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் 3-ல் இரண்டுபங்குக்குக்குறையாத பெரும்பான்மை உறுப்பினர்களாலும், அத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால் நாடாளுமன்றம், சட்டம் ஒன்றை இயற்றி, சட்ட மேலவை உள்ள ஒரு மாநிலத்தில் அச் சட்ட மேலவை எடுத்துவிட அல்லது அத்தகைய மேலவை இல்லாத ஒரு மாநிலத்தில், அத்தகைய மேலவை ஒன்றை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்''.

பாகம் IV

நிருவாக உறவுகள்.

வினா 4.1—நமது அரசியலமைப்புத் திட்டத்தில், காணும் 256, 257, 365ஆம் பிரிவுகளின் நோக்கம், செயல்பாடு, பயன் குறித்து தங்கள் கருத்து யாது? 256 அல்லது 257ஆம் பிரிவின்படியும், இவ்விரு பிரிவுகளின்படியும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கையில், 365ஆம் பிரிவு செயலாக்கப்படும் என்று அச்சுறுத்தலின் பேரில் ஏதேனுமொரு மாநில அரசு மேற்படி உத்தரவுகளைச் செயலாக்கும்படி வற்புறுத்தப்பட்டதற்கு முன்மாதிரி ஏதும் உள்ளதா?

வினா 4.2—365ஆம் பிரிவை நீக்க வேண்டுமென்கிற ஒரு கருத்து உள்ளது. இது ஏற்படக் கூடிய விளைவைப் பொறுத்துச் செயலாக்க வேண்டிய பகுதியாக இருப்பதால் (இதுவரை இது செயலாக்கப்படவில்லை) இது ரிசர்வ் விதித் துறையாக இருக்கலாம் என்கிற மற்றொரு கருத்தும் உள்ளது.

எந்த கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்?

அதற்கான காரணங்கள் யாவை?

வினா 4.3—நிருவாகச் சீர்திருத்தக் குழு அதன் அறிக்கையில் (1969) தெரிவித்துள்ள கருத்து வருமாறு.—

''மத்திய அரசு மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பிப்பதென்பது (256 அல்லது 257ஆம் பிரிவின்படி) மிகக் கடுமையான நடவடிக்கையாகும்; நோக்கத்தை நிறைவேற்ற வேறு வழியில்லாத போது முழுத்தேவை ஏற்பட்டால் மட்டுமே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். குடியரசுத் தலைவர் ஆட்சி நிர்வாகத்தை ஏற்பதென்பது (பிரிவு 356) கடைசி நடவடிக்கையாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது, அன்றாடம் உணவு உட்கொள்வதுபோல் வாலாய பணி முறையில் குடியரசுத் தலைவர் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள இயலாது''.

மேற்கூறிய காரணத்தின் பேரில், குழு தெரிவித்த கருத்து வருமாறு:—

'' 256ஆம் பிரிவின்படி மத்திய அரசு மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பிக்குமுன்னர் இருக்கின்ற வழிகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயலவேண்டும்.''

நிருவாகச் சீர்திருத்தக் குழு தெரிவித்ததாக மேலே குறிப்பிட்ட பரிந்துரைகள் பற்றி தங்கள் கருத்து யாது?

வினா 4.4— '' மாநில அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்க நடக்க இயலாத ஒரு சூழ்நிலை உருவாகும் என்று அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் முன்கூட்டியே எதிர்பார்த்ததன் காரணமாக அத்தகைய சூழ்நிலைக்கு இறுதியாக தீர்வு காணும் பொருட்டு மத்திய அரசு செயலாக்கும் வகையில் 356ஆம் பிரிவில் தேவையான விதித் துறைகளை இயற்றினர். இப்பிரிவு செயலாக்கப்பட்டது தொடர்பான அனைத்து இனங்களை அல்லது கணிசமான சில இனங்களை ஆய்வு செய்த பின்னர், பொதுவான தீர்வு காண்பதற்கான இச் சிறப்பதிகாரம் முறையாகச் செயலாக்கப்பட்டுள்ளதா என்று தாங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இயலுமா? உங்களுடைய பதில் முற்றிலும் அல்லது ஓரளவு ''இல்லை'' என்றிருந்தால், மேற்படி இனங்களில், உங்களுடைய கருத்துப்படி, இப்பிரிவின் சொல்நோக்கத்திற்கு முரணாக இந்த அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதற்கான காரணங்களைக் கொடுக்கவும்.

பதில்.—இந்த நான்கு வினாக்களும் அவற்றின் நோக்கம், செயல்பாடு, பயன் ஆகியவற்றிற்கிணங்க முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டும்.

256, 257, 365, 356 ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் நிருவாக அதிகாரங்களை மத்திய அரசு தன்னிச்சையாகப் பயன்படுத்துவதால் மாநிலங்களுக்கு தீமையே உண்டாகும். எந்த வாதக் கருத்தின் அடிப்படையில் 256, 257ஆம் பிரிவுகளின்கீழ் நிருவாக அதிகாரங்களைச் செலுத்தலாமோ அந்த வாதக் கருத்து, ஒரு மாநில அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க ஆட்சி செலுத்த இயலாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதென்று இந்தியக் குடியரசுத் தலைவர் எந்த ஆதாரத்தைக் கொண்டு ஐயமறத் தெளிகிறாரோ அந்த ஆதாரம், 356ஆம் பிரிவின் கீழ் அறிக்கை அனுப்ப வழங்கப்பட்டுள்ள தடையில்லாத, வெளிப்படையான, தன்னிச்சையான அதிகாரங்களின்கீழ் ஒரு மாநில ஆளுநர் தயாரித்தனுப்பும் அறிக்கை 356ஆவது பிரிவின்கீழ் நியாயமான அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க வரையறைகளினால் கட்டுப்படுத்தப்படாத எஞ்சிய விதித் துறை மற்றும் மத்திய அரசு நிருவாக அதிகாரத்தைச் செயலாக்குவதன் மூலம் மேற்கொள்கிற கடுமையான நடவடிக்கை (அது தடுப்பு நடவடிக்கையாக இருந்தாலும் சரி, பரிகார நடவடிக்கையாக இருந்தாலும் சரி) ஆகியவற்றின் காரணமாக, நிருவாக அதிகாரத்தை அவ்வாறு செயல்படுத்துவது, உலக நாடுகளால் ஏற்பட்ட கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்கிணங்க அமைவதாகுமா என்ற நியாயமான அச்சத்தை நம் நாட்டின் மாநில மக்களிடையே தோற்றுவித்துள்ளது. அவ்வாறு மாநில அரசுகளின் அச்சத்தையும் பயத்தையும் தூண்டிய நிகழ்வுகள் ஏராளம். நிருவாக அதிகாரங்களை அசாதாரண முறையில் பயன்படுத்தி, அவை அரசியலமைப்புச் சட்டத்தில் கருதியபடிக்கான

மாநில அரசுகளின் அரசியல் அந்தஸ்தைப் பெரிதும் பாதிக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டதை 1951 முதல் பின்வரும் நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன :—

1. 1951ஆம் ஆண்டில் பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது. முதலமைச்சர் டாக்டர் G.E. பர்க்காரா பதவி விலகினார்.

2. 1953-ல், பெப்சுவில் கியான் சிங் ரேர்வாலா அமைச்சரவை கலைக்கப்பட்டது.

3. 1953-ல், கேரளாவில் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது.

4. 1954-ல் ஆந்திரப் பிரதேசத்தில் திரு. T. பிரகாசம் அமைச்சரவை பதவி விலகியது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

5. கேரளாவில், திரு. பி. கோவிந்தமேனனின் அமைச்சரவை கவிழ்ந்தது. 1956-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

6. கேரளாவில் திரு. E. M. S. நம்பூதிரிபாட் அமைச்சரவைக் கலைக்கப்பட்டது. 1959-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

7. 1961-ல், ஒரிசாவில் திரு. மகாப் அமைச்சரவை கவிழ்ந்தது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

8. கேரளாவில், திரு.ஆர்.சங்கர் அமைச்சரவைக் கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அதனையடுத்து 1964, செப்டம்பர் திங்கள் 16ஆம் நாளன்று குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

9. 1966-ல் பஞ்சாப் முதலமைச்சர் திரு. இராமகிருஷ்ணன் பதவி விலகினார். மாநில சட்ட மன்றம் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டது.

10. 1966-ல் கோவாவில் மஹாராஷ்டிரவாடி கோமன்டாக் கட்சி அரசு பதவி விலகியது. கோவா சட்டப்பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டது.

11. அரசியல் கட்சி எதுவும் ஆட்சி அமைக்கும் நிலையில் இல்லாததால் 1965 மார்ச்சுத் திங்களில் கேரளாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

12. மாநிலச் சட்ட மன்றம் கலைக்கப்பட்ட இராஜஸ்தானில் 1967-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

13. மணிப்பூர் சட்டப் பேரவை, அமைச்சரவை ஆகியவற்றை குடியரசுத் தலைவர் 25—10—1967 அன்று கலைத்தார்.

14. ராவ் பீரேந்திர சிங் தலைமையிலிருந்த ஐக்கிய முன்னணி அமைச்சரவையை 29—11—1967 அன்று குடியரசுத் தலைவர் கலைத்தார். ஹரியான சட்டப் பேரவை கவிழ்ந்தது.

15. உத்திரப் பிரதேச சட்டப் பேரவையையும், திரு. சரண்சிங் தலைமையிலிருந்த அமைச்சரவையையும் கலைத்து 1968-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

16. பீகாரில் திரு. போலா பஸ்வின் சாஸ்திரி அமைச்சரவை பதவி விலகியது. 1968-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டது.

17. பாண்டிச்சேரி சட்டப்பேரவை கவிழ்ந்தது. 1968-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

18. மேற்கு வங்காள அமைச்சரவை கலைக்கப் பட்டது. 1968-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

19. பஞ்சாப் முதலமைச்சர் இலச்மண் சிங்கில் பதவி விலகினார். 1968-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

20. 1969-ல் திரு. போலா பஸ்வன் சாஸ்திரி அமைச்சரவை கவிழ்ந்த பின்னர் பீகார் சட்டப் பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

21. மணிப்பூரில், 1969-ல் கொய்ரெங் சிங் தன்னுடைய அமைச்சரவை பதவி விலகலை அறிவித்தார். அதனால் சட்டப்பேரவை கலைக்கப் பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

22. திரு. சரண்சிங் அமைச்சரவை கலைக்கப் பட்ட பின்னர் 1970-ல் உத்திரப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

23. ஒரிசா முதலமைச்சர் திரு. ஆர். என். சிங்டியோ பதவி விலகினார். சட்டப் பேரவை 11—1—1971 அன்று கலைக்கப்பட்டது. 1971 ஜனவரித் திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

24. ஒரிசாவில் 23—1—1971 அன்று சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி தொடர்ந்து கொண்டுவரப்பட்டது.

25. மேற்கு வங்காள முதலமைச்சர், திரு. அஜாய் முகர்ஜி பதவி விலகினார். சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. 1970, மார்ச்சில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

26. 30—7—1970 அன்று மேற்கு வங்காளத்தின் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

27. கேரளாவில் திரு. C. அச்சுத மேனன் பதவி விலகினார். சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. 1970-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப் பட்டது.

28. மைசூரில் திரு. வீரேந்திர பட்டீல் பதவி விலகினார். சட்டப்பேரவை கலைக்கப்பட்டு 1971 மார்ச்சுத் திங்களில் குடியரசுத் தலைவராட்சி கொண்டுவரப்பட்டது.

29. 1971-ல் மைசூரில் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது.

30. குஜராத் முதலமைச்சர் திரு. ஹித்தேந்திர தேசாய் பதவி விலகினார். சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. 1971 மே திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

31. ஆளுநர் Dr. D.C. பவத்தே பஞ்சாப் சட்டப் பேரவையைக் கலைத்தார். குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவர ஆலோசனை வழங்கினார். 1971 ஜூன் திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

32. மேற்கு வங்காள ஆளுநர் 25-6-1971 சட்டப்பேரவையைக் கலைத்தார். 29-6-1971 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

33. பீகாரில், திரு. போலா P. சாஸ்திரி அமைச்சரவை பதவி விலகியது. 1972 ஜனவரி திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

34. சத்பதி அமைச்சரவை அருதிப் பெரும்பான்மை இழந்தபோது, 1973 மார்ச் திங்களில் சட்டப் பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

35. மணிப்பூரில், அலிமுதின் அமைச்சரவை பதவி விலகியது. சட்டப் பேரவை கலைக்கப்பட்டு 1973 மார்ச் திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

36. 1974 ஜனவரித் திங்களில் புதுச்சேரி முதலமைச்சர் திரு M.D.H. பரூக் மரக்காயர் பதவி விலகினார். குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

37. 1974 மார்ச்சுத் திங்களில் புதுச்சேரியில் திரு. இராமசாமி அமைச்சரவை பதவி விலகியது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

38. திரிபுராவில், 1971 நவம்பர் திங்களில் சென்குப்தா அமைச்சரவை பதவி விலகியது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

39. ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவ் பதவியை இராஜினாமா செய்தார். சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டு, 1973 ஜனவரியில் குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டு வரப்பட்டது.

40. உத்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. கமலாபதி திரிபாதி பதவி இராஜினாமா செய்தார். உத்திரப்பிரதேசத்தில், 1973 ஜூன் திங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப் பட்டது.

41. குஜராத்தில் முதலமைச்சர் திரு. சிமான்பாய் பட்டேல் இராஜினாமா செய்தார். சட்டப்பேரவை நீக்கப்பட்டு, 1974 பிப்ரவரியில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

42. குஜராத் சட்டமன்றப் பேரவை 1974 மார்ச்சுத் திங்களில் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி தொடர்ந்து நீடிக்கப்பட்டது.

43. உத்திரப் பிரதேசத்தில் 1974 நவம்பர் திங்களில் திரு. எச்.என். பகுகுனா முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவை கலைக்கப் பட்டது.

44. ஒரிசாவில், முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி 1976 டிசம்பர் திங்களில் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

45. குஜராத் முதலமைச்சர் திரு. பாபுபாய் பட்டேல் 1976 மார்ச் திங்களில் நடந்த வரவு-செலவுத்திட்ட கோரிக்கை விவாதத்தில் தோற்று விட்டதால் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

46. நாகாலாந்தில் ஜான்பாஸ்கோ ஜகோகி அமைச்சரவை 1975 மார்ச் திங்களில் உறுப்பினர்கள் கட்சி மாறி விட்டதால் நிலைக்கவில்லை. அதனால் சட்டமன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

47. நாகாலாந்தில் 1975 மே திங்களில் சட்டமன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

48. தமிழ்நாட்டில் 1976ஆம் ஆண்டில் திரு. கருணாநிதி அமைச்சரவை நீக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது.

49. மிசோராம் முதலமைச்சர் திரு. சுன்கா பதவியை ராஜினாமா செய்தார். 1977 மே திங்களில் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

50. திரிபுராவில் 1977, நவம்பர் திங்களில் திரு. ஆர். ஆர். குப்தா அமைச்சரவை ராஜினாமா செய்தது. அதனால் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

51. கர்நாடகத்தில் திரு. டி. தேவராஜ் அர்சின் அரசு ஜனதா அரசால் 1977-ல் நீக்கப்பட்டது.

52. மிசோராமில் திரு. T. சைலோ முதலமைச்சராக இருந்தபோது, 1978 நவம்பரில் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

53. புதுச்சேரியில் 1978-ல் திரு. இராமசாமி அமைச்சரவை கலைக்கப்பட்டது.

54. கோவாவில் திருமதி எஸ். கோகோத்கார் முதலமைச்சராக இருந்தபோது 1979 நவம்பரில் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

55. அருணாசலப் பிரதேசத்தில் 1979 நவம்பர் திங்களில் திரு. தோமோரிபா முதலமைச்சராக இருந்தபோது, சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

56. கேரளாவில் திரு. சி. எச். முகமது கோயா, 1979 டிசம்பரில் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

57—65. உத்திரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், ஒரிசா, மத்தியப்பிரதேசம், பஞ்சாப் இராஜஸ்தான், அரியானா, இமாசல பிரதேசம் ஆகிய ஒன்பது மாநில அரசுகள் ஜனதா அரசால் 1977-ல் கலைக்கப்பட்டன.

66. மணிப்புரியில் 1977 மேத் திங்களில் திரு. ஆர். தரேந்திரசிங் முதலமைச்சராக இருந்த போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

67. 1979 டிசம்பர் திங்களில் அசாமில் திரு. ஜே. என். அசாரிகா முதலமைச்சராக இருந்த போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

68. 1979, நவம்பரில் மணிப்புரியில் திரு. ஓய். சாகிசா முதலமைச்சராக இருந்தபோது சட்ட மன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

69. சிக்கிம்மில் 1979 ஆகஸ்ட் திங்களில் திரு டோர்ஜி முதலமைச்சராக இருந்தபோது சட்ட மன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

70—78 உத்திரப் பிரதேசம், பீகார், இராஜஸ் தான், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, ஒரிசா, குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய ஒன்பது மாநில அரசுகள் 1980-ல் கலைக்கப்பட்டன.

79. அசாமில் 1981, ஜூன் திங்களில் திரு, அன்வராதைமூர் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

80. மணிப்புரியில் 1981, பிப்ரவரி திங்களில் திரு. ரிஷாங்கிசிங் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

81. கேரளாவில் 1981 அக்டோபரில் திரு. ஈ. கே. நாயனார் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

82. கேரளாவில் 1982 மார்ச் திங்களில் திரு. கருணாகரன் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

83. அசாமில் 1982 மார்ச் திங்களில் திரு. கே.சி. கோகாய் முதலமைச்சராக இருந்தபோது சட்ட மன்றப்பேரவை கலைக்கப்பட்டது.

84. புதுச்சேரியில் 1983 ஜூன் திங்களில் திரு. D. இராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்த போது சட்டமன்றப் பேரவை கலைக்கப் பட்டது.

85. பஞ்சாபில் 1983 அக்டோபர் திங்களில் திரு. தார்பாராசிங் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டது.

86. 1984-ல் சிக்கிம் அமைச்சரவை நீக்கப் பட்டது.

87. 1984-ல் பஞ்சாப் அமைச்சரவை நீக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட இனங்களின் சந்தர்ப்ப சூழ் நிலைகளை அனுகி ஆராய்ந்ததில் 256, 257, 365, 356ஆம் பிரிவுகளைச் செயலாக்குவதன் மூலமாகச் செலுத்தப்பட்ட தீர்வு காண்பதற்கான அல்லது பரிகாரம் தேடுவதற்கான அதிகாரம் முறையின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது புலனாகிறது; ஏனெனில், ஒரு மாநில அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கு இணங்க நடை பெறுவதைத் தடுக்கின்ற சூழ்நிலை எதுவும் ஏற்பட வில்லை. பிறவற்றுடன் 256ஆம் பிரிவு, நாடாளு மன்றம் இயற்றிய சட்டங்களுக்கும், ஏற்கனவே யுள்ள சட்டங்களுக்கும் இணங்க மாநில அரசு செயல்படுவதை உறுதிசெய்ய வகை செய்கிறது. மாநில அரசுக்குப் பொருந்துகின்ற, நாடாளுமன்றச் சட்டங்களும், ஏற்கனவேயுள்ள சட்டங்களும், மாநில அரசுகள் பின்பற்ற வேண்டியவையாகவும், மாநில அரசுகள் அவற்றை அனுசரித்து நடக்க வேண்டியனவாகவும் இருப்பதால், இது போன்ற தொரு பிரிவு இருக்க வேண்டிய அவசியமில்லை. இப்பிரிவு முற்றிலும் தேவையற்றது. 256 அல்லது 257ஆம் பிரிவின்படி உத்தரவு பிறப்பிப்பதன் வாயி லாக கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும், ஆகவே, 256 அல்லது 257ஆம் பிரிவின் படி உத்தரவு பிறப்பிக்கும் முன்னர், பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான பிற வழிகள் அனைத்தை முயன்று பார்க்க வேண்டும் என்றும் நிருவாகச் சீர்திருத்தக் குழு கருதியது; மேலும், 256, 257, 365, 356 ஆகிய பிரிவுகளின் கீழ் நிருவாக அதிகாரத்தைச், செலுத்துவதில் மறுப்புக்குரிய தன்மை இருப்பதை முற்றிலும் ஒப்புக் கொள்கிறது. ஆகவே இப்பிரிவுகள் ஏட்டளவிலும் செயலளவிலும் அவற்றி லுள்ள கொடுங்கோண்மைத் தன்மை மூலம் நிரு வாக அதிகாரங்களும் சட்டமியற்றும் அதிகாரங் ளும் ஒருங்கே நிலைபெற்றுள்ளன. மாநில அரசு ஆட்சி செலுத்துவதில் கடுமையான தலையீட்டை ஏற்படுத்தும். பன்மாநிலக் குழு போன்றதொரு அமைப்பின் பயன் பற்றி அரசியலமைப்பை எடுத் துரைத்தவர்களே புரிந்து கொண்டிருந்த போதி லும், அத்தகையதொரு குழு 263ஆம் பிரிவின்படி அமைக்கப்படவில்லை; வரையறுத்த பணிகள் கொண்ட வல்லுநர்கள் அடங்கிய அத்தகைய குழுவை அமைக்க கடந்த 34 ஆண்டுகளாக எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

(அ) நாடாளுமன்றம் இயற்றிய சட்டங் களுக்கு இணங்க நடப்பதையும் அதன் பொருட்டு தேவைப்படக் கூடிய உத்தரவுகளைப் பிறப்பிப்பது பற்றியும் உறுதி செய்தல் (பிரிவு 256).

(ஆ) மத்திய அரசின் நிருவாக அதிகாரத்தைச் செலுத்துவதைத் தடுக்காதிருப்பது அல்லது அதற்கு பாதகமாயில்லாமலிருப்பது மற்றும் அதன் விளை வாக அது காரியத்துக்காகக் கட்டளைகள் பிறப் பிக்கும் அதிகாரமும் [பிரிவு 257 (1)].

(இ) மாநில அரசு, அரசியலமைப்புச் சட்டத் தின் விதித் துறைகளுக்கு இணங்க ஆட்சி செலுத்த இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது என்று அனு மானிக்கிற வகையில் மத்திய அரசு பிறப்பித்த

உத்தரவுகளுக்கிணங்க நடக்க அல்லது அந்த உத்தர வுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கத் தவறுதல் (பிரிவு 365).

(ஈ) ஆளுநரின் அறிக்கை அல்லது மாநில அரசின் ஆட்சியின் அனைத்துப் பணிகளை குடியரசுத் தலைவர் மேற்கொள்வதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது என்று ஐயமற தெளிதல் (பிரிவு 356).

மேலே குறிப்பிட்டுள்ள கூற்றுகள் மூலம் மாநில, சுயாட்சிக் கொள்கையை மிகக் குறைந்த அள விற்கு மட்டுப்படுத்தி, மாநிலங்கள் மீது மிகுந்த அளவுக்கு கட்டுப்பாட்டு அதிகாரங்கள் வைத்திருக்கும் பொருட்டு அரசியலமைப்பின்கீழ் மத்திய அரசு அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்துக் கொள் கிறது என்பது புலனாகிறது. நிலைமை இவ் வாறு இருந்தது. ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகளில் அத்தகைய அதிகாரங்கள் அளவுக்கு அதிகமாக அல்லது தவறுதலாக பயன்படுத்தப் பட்டன, என்பதும் இதனால் அசாதாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் விளைவாக மாநில சுயாட்சி மாளிகை சுக்கு நூறாக சிதறுண்டு போயிற்று என்பதும் தெளிவாகிறது. 256, 257, 365, 356 ஆகிய அரசியலமைப்புப் பிரிவுகளின்கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்துவதனால் தொடர்ச் சியாகக் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் என் றும், இதனால் மாநில சுயாட்சித் தன்மையில் கடுமையான தலையீடு ஏற்பட்டு முடிவில் மாநில சுயாட்சி கொள்கைக்கு மரண அடி விழுந்து விடும் என்று நாம் ஏற்கனவே கருத்து தெரிவித்துள் ளோம். எனவே 4.1 முதல் 4.4 வரையிலான வினாப்பட்டிகளுக்கும் எங்களது பதில் யாதெனில், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 256, 257, 365, 356 ஆகியவற்றை நீக்கிவிட வேண்டும் என்பதேயாகும்; ஏனெனில் அவை, மாநில அரசு களைப் பாதுகாப்பதற்காக உள்ளன என்ற நம்பிக்கைப் பொய்த்துவிட்டது; நிர்வாகச் சீர் திருத்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது போல் குடியரசுத் தலைவர் ஆட்சிமுறை (356ஆம் பிரி வின்கீழ்) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அமை யாமல், ஆனால் இயல்பான நடவடிக்கையாக அமைந்து விட்டது என்றும், கடுமையான ஒரு மருந்தை தினசரி உணவாகக் கொள்வது போன்று குடியரசுத் தலைவர் ஆட்சிமுறையை ஒரு கடைசி நடவடிக்கையாகக் கொள்வதற்குப் பதிலாக, சாதா ரண இயல்பான நடவடிக்கையாகக் கொள்ளப்பட் பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 357, 360ஆம் பிரிவுகள் விட்டுவிடப்படவேண்டும் என்றும் அரசு கருதுகிறது.

மத்திய அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசு நடைமுறையில் அரசியலமைப்புச் சட்டப்படி நடக்காதபோது குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டுவருவதற்கு வகையேதும் இல்லை என்று குறிப்பிடலாம். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குடி யரசுத் தலைவர் மத்திய அளவில் அமைச்சர் அவையின் உதவியின்றி குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வருவதற்கு அதிகாரம் இல்லை என்று உள்ளபோது, மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக்கொண்டுவருவதில் நியாயம் ஏதுமில்லை. மாநிலத்தில் அரசிய லமைப்புப்படி நடக்காதபோது ஜனநாயகமுறை யில் தேர்தல்கள் நடத்தப்பட்டு மத்திய அரசு போல் புதிய அரசு அமைக்கப்படவேண்டும்.

வினா 4.5.—1976ஆம் ஆண்டு 42-வது திருத்தச் சட்டம், 356ஆம் பிரிவின் (4) பகுதியில் "ஆறு திங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஓராண்டு" என்று அமைத்துக் கொள்ளப்பட் டது; இதனால் (3) பகுதிக்கு முந்தைய பகுதியின் கீழ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ள பிரகட னம் ரத்து செய்யப்பட்டாலன்றி மற்றபடி அந்த பிரகடனம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலம் முடிவடையும் நாளன்று அது செயலற்றுப் போகும். 1978ஆம் ஆண்டு 44-வது திருத்தச் சட்டம் இப்பகுதியில் உள்ள "ஆறு திங்கள்" என்ற முந்தைய கால அளவை மீண்டும் கொண்டு வந்துள்ளது என்பதுடன் (அ), (ஆ) துணைப் பகுதி களில் குறிப்பிட்டுள்ள 2 கடுமையான நிபந்தனைகள் நீங்கலாக (5) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குடியரசுத் தலைவர் ஆட்சிக்கான உயர்ந்தளவு கால அளவு "மூன்று ஆண்டுகளிலிருந்து ஓராண்டா கக்" குறைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் பொறுப்புள்ள அரசின் இயல்பான நடவடிக்கையை நிலைநிறுத்தும் வகையில், மிகவும் அவசியமான காலத்திற்கும் பின்னரும் மத்திய ஆட்சியைத் தேவை யில்லாமல் நீட்டிப்பதற்கு எதிராக ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக இம் மாற்றங்கள் செய்யப்பட்டன.

ஒரு மாநிலத்தில் அண்மையில் எழுந்த சில சூழ் நிலைகளையொட்டியும் ஏனைய சில மாநிலங்களில் இனி ஏற்படவிருக்கும் சில சூழ் நிலைகளையொட்டி யும், ஒரு மாநிலத்தில் கலவரங்கள் தொடர்ந்து நிலவும் போதும் ஆட்சி இயந்திரத்திற்குக் குந்தகம் ஏற்படும் போதும், ஆட்சி இயந்திரம் செயல்படத் தவறிய போதும் 356ஆம் பிரிவின் (4) மற்றும் (5) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவுக்குள் அவற்றைக் களைந்து இயல்பான நிலைக்குக்கொண்டு வர இயலாதபோது, மேற்சொன்ன திருத்தங்கள் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாகக் கருதப்பட்ட போதிலும், மத்திய அரசு இந்த அதிகாரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த அவை தடை யாக அமையலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட் டுள்ளது.

இக் கருத்தை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? அவ்வாறு ஒப்புக்கொண்டால், இத்துடன் அல்லது (4), (5) பகுதிகளைத் திருத்தியும் ஏனைய பாது காப்பு நடவடிக்கைகள் எவையேனும் இருந்தால் கூறலாம்; அவை பயனுள்ள நடவடிக்கையின்,

இறுதியான ஓர் அம்சமாகப் பயன்படுத்துவதற்குத் தடையாக இல்லாதவாறு 356ஆம் பிரிவின் கீழ் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை இயன்றளவு குறைக்கும் வகையில் இருக்க வேண்டும்.

விடை.—4.1 முதல் 4.4. வரையிலான வினாக் களுக்கு பதில் அளித்துவிட்டதால் இக் கேள்வி களுக்குப் பதில் அளிக்கும் பிரச்சினை எழவில்லை. இது குறித்து நாங்கள் கருத்து எதுவும் கூற விரும்ப வில்லை.

வினா 4.6.—தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, தேர்தல்கள் முதலியவை போன்ற மத்திய அரசின் அலுவல்கள் பலவற்றை மாநில நிர்வாகம் செயல்படுத்தி வரு கிறது.

தற்போதுள்ள ஏற்பாடுகள் மனநிறைவு அளிக்கும் வகையில் செயல்படுகின்றனவா? இது தொடர் பாக, கருத்துக்கள் எவையேனும் கூற விரும்பு கிறீர்களா?

விடை.—நிர்வாக அலுவல்களைப் பரவலாக்கும் கோட்பாடு செயல்படுத்தப்பட்டுள்ள துறை இத் துறைதான். பரவலாக்கப்படும் அத்தகைய முயற்சி ஒவ்வொன்றையும் பாராட்ட வேண்டும். மேலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, தேர்தல்கள் போன்ற பணிகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசைவிட மாநில அரசுகள் சிறப்பாக நிறை வேற்றும்.

வினா 4.7.—தற்போது, வேளாண்மை விலைகள் கட்டுப்பாடு ஆணைக்குழு, மத்திய நீர் வழங்கள் ஆணைக் குழு, மத்திய மின்விசை அதிகார மன்றம், தொழில் நுட்ப மேம்பாட்டுத் தலைமை இயக்குநர், ஏகபோக கட்டுப்பாட்டு வர்த்தக நடைமுறை ஆணைக்குழு, தொழிலாளர்கள் நலக் காப்புறுதிக் கழகம், தேசிய சிறு சேமிப்பு நிறு வனம், தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், தொழில் செலவுகள்-விலைகள் நிறுவனம், இந்திய உணவுக் கழகம் முதலியவைபோன்ற மத்திய அரசின் நிறுவனங்கள் பல, இந்திய அரசி யலமைப்பின் ஏழாவது விவர அட்டவணையின் மாநில மற்றும் மாநில - மத்திய அரசுப் பொதுப் பட்டியல்களில் உள்ள பொருள்கள் தொடர்பான நடவடிக்கைகளைக் கவனிக்கின்றன. இந் நிறு வனங்கள் மூலமாக மத்திய அரசு, மாநில சுயாட்சி யில் தேவையில்லாமல் தலையிடுவதாகக் கூறப்பட் டுள்ளது.

இக் கருத்து ஏற்புடையதுதானா?

ஆம் எனில், அத்தகைய இனங்களில் மத்திய அரசின் நிறுவனங்கள் முறையாக செயல்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

விடை.—முதற்கண், இந்த நிறுவனங்கள் அனைத் தையும் இரண்டு வகையாக அதாவது (1) மாநிலப் பட்டியலில் உள்ள பொருள்கள் தொடர்பான நிறுவனங்கள், (2) பொதுப் பட்டியலில் உள்ள பொருள்கள் தொடர்பான நிறுவனங்கள் என்று பிரிக்க வேண்டும். மாநிலப் பட்டியலிலுள்ள பொருள்கள் தொடர்பான மத்திய அரசு நிறுவனங்கள், 258ஏ பிரிவின் நிபந்தனைகளின் படி, மாநில அரசுகளின் இசைவின்றி அலுவல்களை ஆற்றவும், கொள்கைகளையும், நெறி முறைகளையும் வகுக்கவும் அல்லது மாநில அரசின் அலுவல்களை மத்திய அரசுக்கு மாற்ற அல்லது ஒப்படைகக, சட்டப்படியான அதிகாரம் இல்லை. எனவே, மாநிலப் பட்டியலில் உள்ள பொருள்கள் தொடர்பான மத்திய அரசு நிறுவனத்தின் அலுவல்கள், மொத்தத்தில் மாநில சுயாட்சி அதிகாரத்தில் தலையிடுவதாக அமையும்.

பொதுப் பட்டியலில் வரும் பொருளைப் பொறுத்தமட்டில், மாநிலச் சட்டமன்றத்தின் இசைவின்றி, நாடாளுமன்றம் சட்டம் இயற்றக் கூடாது. நாடாளுமன்றம் இயற்றும் அத்தகைய சட்டத்திற்கு மாநிலச் சட்டமன்றம் இசை வளிக்காவிடில், நாடாளுமன்றம் இயற்றும் அச்சட்டம், அம் மாநிலத்திற்குப் பொருந்தாது. ஆனால், மத்திய நாடாளு மன்றம் முழுவதுமாக ஆதிக்கம் கொண்டிராத பொதுப் பட்டியலில் உள்ள பொருள்களைப் பொறுத்தவரையில், அப்பொருள்கள் தொடர்பான மத்திய அரசு நிறுவனங்கள் மாநிலப் பிரதிநிதி களுடன் சேர்ந்து செயல்படலாம். அது சரியான நடைமுறை என்று கொள்ளப்படும்.

மத்திய நாடாளுமன்றம் முழுவதுமாக ஆதிக்கம் கொண்டுள்ள பொதுப்பட்டியலில் உள்ள பொருள்கள் தொடர்பான மத்திய அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவற்றில் மாநிலப் பிரதி நிதிகள் இல்லாமலேயே செயல் படலாம்; ஏனெனில் முழுவதுமாக ஆதிக்கம் செலுத்தும் துறைகளில் அத்தகைய நிறுவனங்கள் செயல்படுவது கூட்டமைப்புக் கோட்பாட்டை மீறியதாகப் பொருள் கொள்ளமுடியாது.

குறிப்பாக இந்த வினாவிற்கு பதிலளிக்கும் வகையிலும் குறிப்பாக தென் மாநிலங்களில் நிலவும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் அவநம்பிக் கைகளைக் கருத்திற்கொண்டும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் VII விவர அட்ட வணையின் I பத்தியைச் சேர்ந்த 56ஆம் பதிவிலும் VII விவர அட்டவணையின் II பட்டியலிலுள்ள

17ஆம் பதிவிலும் குறிப்பிட்டுள்ளவாறு மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளின் நீரை முறைப்படுத்துவது தொடர்பாக கருத்துரைக்குமாறு நாங்கள் தூண்டப்படுகிறோம். அண்மைக் காலங்களில், மாநிலங்களுக்கிடையே குறிப்பாக, தமிழ் நாடு மாநிலத்திற்கும் கருநாடக மாநிலத்திற்கும் இடையே நதி நீரை முறைப்படுத்துவது மற்றும் பங்கீடு செய்தல் உட்பட நதி நீர் பிரச்சினைகள் எழுந்துள்ளன. மாநிலங்களுக்கிடையேயான நதி நீரை நியாயமாக பங்கீடு செய்வது குறித்து தென் மாநிலம் ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்றதில் அதிக காலம் ஆயிற்று. இணைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதைப் பொறுத்தமட்டில், தேசிய நீர் ஆதாரங்கள் குழு மற்றும் தேசிய நீர் மேம்பாட்டு முகவரமைப்பு ஆகியவை ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் ஒத்துழைப்பின் பேரில்தான் செயல்பட வேண்டியுள்ளன. பருவ காலங்களில் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பிரச்சினையுள்ள மாநிலங்கள் மன நிறைவு பெறும் வகையில் ஏற்கத்தக்க அல்லது ஒருங்கிணைந்த ஒரு முடிவினை எந்த ஒரு மாநிலமும் காண இயலவில்லை. இது தொடர்பான கடித போக்குவரத்தில் ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, மாநிலங்களிடையிலான நீர்ப் பங்கீடு குறித்த தகராறுகள் அனைத்தும் உச்ச நீதிமன்றம் அமைக்கும் நிரந்தர நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று நாம் கருத்து தெரிவித்துள்ளோம்.

வினா 4.8.—நிர்வாக ஆணை ஒன்றின் மூலம் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள இரண்டு அகில இந்தியப் பணிகளை, அதாவது இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்தியக் காவல் பணிகளை முறைப்படுத்துவதற்காக மட்டுமல்லாமல், மத்திய-மாநில அரசுகளுக்குப் பொதுவான, தேசிய நலனுக்கு முக்கியத்துவம் எனக் கருதப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அகில இந்தியப் பணிகளை நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தவும், அப்போதைய மாகாண அரசுகளின் ஒருமித்த ஆதரவுடன் இந்திய அரசியலமைப்பின் 312ஆம் பிரிவில் திட்டவட்டமான விதித்துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நிலையான தன்மையை ஏற்படுத்தவும், இப்பணிகள் திறம்படவும் பயனுள்ள வகையிலும் செயல்படுவதற்கு அவசியமானதும், தேசிய ஒருமைப்பாட்டிற்கு உகந்ததுமான விரிவான தேசியக் கண்ணோட்டத்தோடு அணுகும் பொருட்டு இப்பணிகளுக்கு ஆட்களை நியமித்தல், ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை சீரான அடிப்படையிலும் மத்திய அரசின் உத்தரவுகளின்படியும் செய்யப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் எதிர்பார்ப்புகளை அகில இந்தியப் பணிகள் நிறைவு செய்துள்ளதாக நீங்கள் நினைக்கிறீர்களா ?

சில மாநிலங்கள் அகில இந்தியப் பணிகளின்மீது இன்னும் அதிகக் கட்டுப்பாடு செலுத்தத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளன. இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?

பதில்: இந்திய நிருவாகப் பணி, இந்தியக் காவல் பணி உட்பட்ட அனைத்து இந்தியப் பணிகள் இருப்பது அவசியமில்லை. வெளிமாநிலங்களிலுள்ள அதிகாரிகள் இம்மாநில மக்களின் உணர்வை புரிந்து கொள்ள இயலாது என்பதால், அவர்களை இம் மாநிலத்தில் பதவியிலமர்த்தக்கூடாது என்று இந்த அரசு கருதுகிறது. இருவகையான பணிகள் இருக்கவேண்டும். அவையானை—(1) மாநில அரசுக் காரியங்களுக்கான மாநில அரசுப் பணி. (2) கூட்டாட்சிக்கான மத்தியப் பணி, மத்தியப் பணியில், மத்திய அரசால் நியமிக்கப்படும் பணியாளரைப் பொறுத்தமட்டில், தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் வகையில், மத்திய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள மாநிலங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

வினா 4.9.—நிருவாகச் சீர்திருத்த ஆணை குழுவின் கருத்துப்படி, ஒரு மாநிலத்தின் சிவில் அதிகாரத்திற்கு உதவியாக படைக்கலம் தாங்கிய மத்தியக் காவல் படை ஏனைய ஆயுதம் தாங்கியப் படையினை தாமாகவே அனுப்பி, அதனைப் பயன்படுத்துவதற்கு 355ஆம் பிரிவின்கீழ் மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. ஒரு சில மாநிலங்கள் இக் கருத்துக்கு மறுத்துரைத்துள்ளன. மத்திய அரசின் தலையீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

உங்கள் கருத்துக்கள் என்ன ?

பதில்: 1949ஆம் ஆண்டு மத்திய சேமக் காவற் படைச் சட்டத்தின் விதித்துறைகளின்படி மத்திய சேமக் காவற்படையில் மத்திய அரசு அமைக்கிறது. மத்தியக் காவற்படைக்கு ஆட்களை அனுப்புவதைப் பொறுத்தமட்டில், மாநில அரசின் இசைவுடன்தான் செய்யப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் பட்டியல் I 2ஏ பதிவு தகுந்தவாறு திருத்தப்பட வேண்டும் என்றும் அப்போதுதான் கூட்டாட்சி அமைப்பு பாதிக்கப்படாது என்றும் அரசு ஏற்கெனவே கருத்து தெரிவித்துள்ளது.

வினா 4.10.—அரசியல் அமைப்புச் சட்டத்தில் "ஒலிபரப்பு, ஏனைய வகை செய்திப் போக்குவரத்து" மத்தியப் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்கையில் (பதிவு 31, பட்டியல்-I) செய்தித் தாள்கள், புத்தகங்கள், அச்சகங்கள் போன்றவை பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன (பதிவு 39, பட்டியல் III).

"செய்தி ஒலிபரப்பை" பொதுப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபை விவாதத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. செய்தி, ஒலிபரப்பு, தொலைக்காட்சி வசதிகளை மத்திய-மாநில அரசுகள் நியாயமான நேர்மையான அடிப் படையில், தங்களது கருத்துக்களை பொது மக்களுக்குத் தெரிவிப்பதற்கு இந்த மக்கள் தொடர்பு சாதனத்தை சமமாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சில மாநிலங்கள் வலியுறுத்தியுள்ளன.

உங்கள் கருத்துக்கள் என்ன?

பதில்.—ஒலிபரப்பையும், தொலைக்காட்சியையும் மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

வினா 4.11.—1956ஆம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மண்டலக் குழுக்கள், மாநில அரசுகளின் நலனைக் கூட்டாகச் செயல்படுத்துவதில் கட்சிக் கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டு எந்த அளவிற்கு செயல் பட்டுள்ளன?

பதில்.—1956-ல் ஐந்து மண்டலக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. மாநில அரசுகளிடையே கலந்து ஆலோசித்து, ஒருங்கிணைப்பதற்காக, குறிப்பாக, சமூகப் பொருளாதாரத் துறைகளில் இவ்வாறு ஒருங்கிணைப்பதற்காக இவை ஏற்படுத்தப்பட்டன. பின்னர், பொருளாதார, சமூக திட்டமிடும் துறையில் உள்ள பொது நலன் குறித்து பரிந்துரை செய்வது அவற்றின் முக்கிய பணியாக இருந்தது. அத்துடன், எல்லைத் தகராறுகள், மொழிவாரி சிறுபான்மையினர், பன்மாநிலப் போக்குவரத்து போன்றவற்றைப் பொறுத்தமட்டில் விவாதித்து, பரிந்துரை செய்வது அவற்றின் கடமையாகும். வேறு விதமாக சொல்லப் போனால், துர்க்காதாஸ் பாசுவின் கருத்துப்படி "கூட்டாட்சி முறையில் அடங்கிய பிரிவுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவதைத் தவிர்க்க மிகவும் உதவி யாகயிருக்கும்" வகையில் மண்டலக் குழுக்களிடம் போதிய அதிகாரங்கள் உள்ளன என்பதை அக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் காட்டும். 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்பு சட்டத்தின்கீழுள்ள பயனை எய்தும் வகையில் சம்பந்தப்பட்ட அனைவரின் நலன் கருதி மண்டலக் குழுக்கள் செயல்படுமாறு தூண்டப்பட வேண்டும் என்று அரசு கருத்துக் கொண்டுள்ளது. மண்டலக் குழுவின் முடிவு எதனையும் சம்பந்தப்பட்ட மாநிலம் செயற்படுத்த வேண்டும். இது குறித்து உத்திரவிட மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

வினா 4.12.—பன் மாநிலக் குழு ஒன்றை ஏற்படுத்துவதால் பொது மக்களுக்கு பயன் ஏற்படும் என்று குடியரசுத் தலைவருக்குத் தோன்றினால் அக் குழுவை ஏற்படுத்துவதற்கு "மாநிலங்களிடையே ஒருங்கிணைப்பு" என்ற தலைப்பின்கீழ் அரசியலமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது. அத்தகைய குழுவை அமைப் பதற்கு நிருவாகச் சீர்திருத்தக் குழுவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநிலங்களிடையேயும், மத்திய-மாநில அரசு களிடையேயும் நிலவும் கருத்து வேறுபாடுகளையும் பிரச்சினைகளையும் அகற்றுவதற்கும், மாநிலங் களிடையே ஒத்துழைப்பை செவ்விய முறையில் பராமரிக்கவும் அத்தகைய குழு ஒன்றை அமைப்பது விரும்பத்தக்கதுதான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ஆம் எனில், அக்குழுவின் பணிகள், அமைப்பு முறை என்ன?

இதனை நிரந்தர அடிப்படையில் அமைக்க வேண்டுமா அல்லது குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு சோதனை நடவடிக்கையாக அமைக்க வேண்டுமா?

அக்குழுவிற்கு என தனியாக செயலகம் ஒன்று வேண்டுமா?

பதில்.—தற்போதுள்ள 263ஆம் பிரிவின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பன்மாநிலக் குழு நடைமுறையில் பயனுள்ளதாக இருக்காது என்று முதற்கண் சொல்ல வேண்டும். 263ஆம் பிரிவு கூறும் இரு கருத்துக்களை நினைவிற்கொள்ள வேண்டும். அவையாவன :—

(1) பன் மாநிலத் தகராறுகளை விசாரணை செய்தல்; ஆலோசனை வழங்குதல்;

(2) மாநிலங்களிடையே அல்லது மத்திய, மாநிலங்களிடையே பொதுமக்கள் நலன் குறித்த பொருள் பற்றி ஆய்வு செய்தல், விவாதித்தல், பரிந்துரை செய்தல். 263ஆம் பிரிவின்கீழ் ஏற்படுத்தப்பட்ட குழு அளித்த ஆலோசனை, செய்த

பரிந்துரைகள், எடுத்த முடிவுகள் எந்தத் தரப்பையும் கட்டுப்படுத்தாது என்னும் வகையில் அதன் சொற்றொடர்கள் அமைந்துள்ளன. அத்தகைய ஆலோசனைகள், பரிந்துரைகள் போன்றவற்றிற்கு தூண்டும் அளவிற்கு முக்கியத்துவம் இருக்கலாம். அதற்கு மாறாக, குழு முறைப்படி அமைக்கப் படாவிட்டால், அக் குழுவின் பரிந்துரைகளும், ஆலோசனையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் நம்பிக்கையைப் பெறத் தவறுவதோடு மட்டு மல்லாமல், நாட்டின் அரசியலமைப்பில் தொடர்ந்து தொல்லை தருவதாக ஆகிவிடும். ஆகவே, பன் மாநிலக் குழு அமைப்பதற்கு வகை செய்யும் 263ஆம் பிரிவு முழுவதையும் நீக்கி விடலாம் என்று நாங்கள் கருத்து தெரிவிக்கிறோம்.

ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தவிர பரிந்துரைகள்—

(1) நாங்கள் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களின் காரணமாக, *256, 257, 356, 357, 360, 365* ஆகிய பிரிவுகள் நீக்கப்படவேண்டும்.

(2) 263ஆம் பிரிவும் விட்டுவிடப்பட வேண்டும்.

(3) ஒரு மாநிலத்திலுள்ள பழங்குடியினரின் நலனில் மத்திய அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதே அக்கறை மாநில அரசுக்கும் உண்டு. ஆகவே, *339(2)*ஆம் பிரிவை விட்டுவிட வேண்டும். ஆகவே பழங்குடியினர் நலனை எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பது குறித்து மாநில அரசுக்குக் கட்டளை எதுவும் பிறப்பிக்கத் தேவையில்லை.

(4) கூடிய வரையில் இந்தி மொழியைப் பயன் படுத்துவது அல்லது ஆங்கில மொழி பயன்படுத்து வதை குறைத்தல் போன்ற முக்கிய பிரச்சினை குறித்து குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் உத்தரவுகள் மாநிலத்தின் கவுரவத்தையும் தனித்தன்மையையும் பாதிக்குமாதலால் *344 (6)* பிரிவை விட்டுவிட வேண்டும்.

(5) மொழிவாரி சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு தொடக்கக் கல்வி நிலையில் தாய்மொழியில் பயிற்றுவிப்பதற்கு போதிய வசதி அளிப்பது மாநில அரசின் கடமையாக இருப்பதாலும், குடியரசுத் தலைவரின் உத்தரவு அல்லது கட்டளை ஏதுமின்றி மாநில அரசு இக் கடமையை நம்பகமாக செய்யலாம் என்பதாலும் 350-ஏ பிரிவும் குடியரசுத் தலைவரின் கட்டளை தொடர்பான விதித்துறைகளும் விட்டுவிடப்பட வேண்டும்.

பாகம் V.

நிதித் தொடர்புகள்.

பொதுக் குறிப்புரைகள்.

அரசியலமைப்புச் சட்டம் முதன் முதலாக இயற்றப்பட்டபோது மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதிவாயில்களைப் பொறுத்தவரையில், அன்றிருந்த நிலையிலும், நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் அவற்றின் நிதித் தேவைகள், வேறுபாடுகள் ஆகியவை தொடர்பாக ஆழ்ந்த ஆய்வு செய்யப்படவில்லை. அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த காலத்தில் இருந்த நடைமுறையே சிறு மாற்றங்களுடன் தொடர்ந்து செயலிலிருந்தது. இந்த நிலை மத்திய அரசுக்கு எப்போதும் சாதகமாகவே இருந்து வந்தது. இத்தகைய சாதகமான நிதி நிலையே தொடர்ந்து செயலிலிருந்ததால், மத்திய அரசின் நிலை எப்பொழுதும் ஓங்கியிருந்ததுடன், நிதிப் பங்கீட்டு அதிகாரம், அவர்கள் வசம் இருந்ததால் மாநில அரசுகள் மத்திய அரசின் ஆதிக்கத்திலேயே இருக்கும்படியான நிலை உருவாகியது. அரசியலமைப்புச் சட்டத்தின் 269ஆம் பிரிவில் சொல்லியிருப்பதற்கு மாறாக, அப் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ள நிதிவாயில்களை மத்திய அரசு என்ன காரணத்தினாலேயோ முழுவதும் பயன்படுத்தத் தவறிவிட்டது. மத்திய அரசு செய்த தவறு காரணமாக மாநில அரசுகள் இடர்ப்பாடு அடைய நேரிட்டது. நிதிக் கமிஷன் அரசியலமைப்புச் சட்டத்தின் 280ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் பெற்றுள்ள, சட்டப்படிக்கான அமைப்பாகும்; திட்டக் கமிஷன் குறிப்பிட்ட சட்டப்படிக்கான அமைப்பல்ல: நிருவாக அமைப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்; எனினும் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதிப் பங்கீடு தொடர்பாக அதன் கருத்தே இறுதியாகயுள்ளது. இந்த இரண்டு கமிஷன்களிடையே நிதிப் பங்கீடு தொடர்பாக அவசியமற்று இருந்து வரும் குழப்ப நிலையும், ஒரே பணியை இரண்டு கமிஷன்கள் செய்யும் நிலையையும் தவிர்க்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. நிதிப் பங்கீடு ஒரே சீராகயிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், மாநிலங்கள் மத்திய அரசு உதவியின்றி நிதி வாயில்களைத் திரட்டி தங்களது திட்டங்களை வகுப்பதற்கு அவர்களுக்கு உதவும் வகையிலும் நிதிக் கமிஷன், திட்டக் கமிஷன் ஆகியவற்றின் அலுவல்கள் தனித்தனியாக வரையறுக்கப்படுவதுமின்றி அவற்றிடையே செவ்விய முறையில் ஒருங்கிணைப்பும் இருக்கவேண்டும். அவசரச் சூழ்நிலைகளின்றி மற்றபடியும் தேசிய நலன் ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டும் திட்டக் கமிஷன் மாநில அரசுகள் நிதிக் கமிஷனில் ஆலோசனைக்காக அனுப்பும் திட்டங்களை மறுக்காது ஏற்றுக் கொள்ள வேண்டும், இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. கே. சுப்பாராவ் அவர்கள் கூறியுள்ள கீழ்க்காணும் கருத்து நமது நாட்டத்திற்குரியதாகும்.

"மத்திய-மாநில அரசுகளின் நிதித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதித் தொடர்புகளை மாற்றியமைக்கவும், அவற்றிடையே நிதி வாயில்களை மறுபங்கீடு செய்யவும் உயர் அதிகார நிதிக் கமிஷனை நியமிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதும், நிதிக் கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.''

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன் கூறியுள்ளதை கவனிப்போம்:

"தேவைகள் இருக்குமிடங்களில் நாம் பணத்தை முதலீடு செய்வோம். தேவையுள்ள மக்களுக்காக அப்பணத்தைச் செலவு செய்ய அதிகாரங்களைப் பயன்படுத்துவோம். நமது நிதி ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வோம். நிதி நெருக்கடியிலுள்ள நாடுகளையும், பகுதிகளையும் காப்பாற்ற நமது நிதி வாயில்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வோம் ....பல இடங்களில் நமது பணத்தை, அதிகாரத்தைப் பயன்படுத்தினோமாயின் மேற்கொண்டும் பல இடங்களில் அரசை ஆக்க அடிப்படையில் செயல்படச் செய்ய இயலும்.''

இறுதியாக ஆராய்கையில் திட்டக் கமிஷனும் குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் நிறுவப்படவேண்டும்; திட்டக் கமிஷனின் பரிந்துரைகள் ஆலோசனை அடிப்படையில் இருக்க வேண்டும். இருப்பினும் தேசிய வளர்ச்சிக் குழுவும், மத்திய அரசும், மாநில அரசும் ஒருவருக்கொருவர் தலையீடின்றி அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும். உயர் அதிகாரங்களுக்கு நிதிக் குழு ஒன்றை அமைப்பதன் அவசியம் இன்றியமையாததாகும். நன்கு வகுக்கப்பட்ட திட்டங்கள், திட்டப் பணிகள் ஆகியவற்றுக்குத் தேவையான நிதிகளை பங்கீடு செய்வதற்கு மத்திய-மாநிலங்கள் இடையே நிதிப் பங்கீட்டு முறை சீராக அமையும். எடுத்துக்காட்டாக மாநில—மத்திய அரசுகளிடையே நிதி தொடர்பான உறவுகளில் நிலவிவரும் வேறுபாடு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 289ஆவது பிரிவின் விதித்துறைகளைப் பார்த்தால் நன்கு தெரியவரும். 289(2) பிரிவின்கீழ் மாநில அரசு அல்லது தன் சார்பாக வேறொருவர்

நடத்தி வரும் தொழில் அல்லது வணிகம் தொடர்பாக வரி விதிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 289ஆவது பிரிவின் (3) பகுதியில் என்ன சொல்லியிருப்பினும் இப்பிரிவு அரசின் இயல்பான அலுவல்களுக்கு தொடர்பானது என்று எந்த ஒரு தொழிலையும் அல்லது வணிகத்தையும் அறிவிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் அளிக்கின்றது. இந்த விதித்துறையே பாரபட்சமான ஒரு நிலையை உருவாக்கியுள்ளது. மத்திய அரசு பல்வகையான தொழிலையும் வணிகத்தையும் நடத்தி வருவது உண்மைதான். அது தொடர்பான பல்வேறு வணிகங்களையும் அது கவனிக்க வேண்டியுள்ளது. ஆனால் அத்தகைய தொழிலிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு எந்த வரியும் விதிக்கப்படவில்லை. ஆனால் மாநிலங்களைப் பொறுத்தவரையில் வேறுபாடு காட்டப்படுகிறது. இத்தகைய வணிகத்தின்மீது வரி விதிக்கப்பட்டது நாடாளுமன்றச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு நீதிமன்றத்தின் ஏற்பும் கிடைத்துள்ளது (AIR 1964 SC 1486 at 1493). எனவே, நமக்குள்ள ஒரே வழி 289 (2) (3) ஆகிய பிரிவுகளை விட்டு விடுவதாகும். அப்படிச் செய்தால் தொழிலைப் பொறுத்தவரையில் குறிப்பாக தொழில்கள், வணிகங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மாநில அரசும், மத்திய அரசும் ஒரே நிலையில் இருக்கும்.

மாநிலங்களின் நிதி தொடர்புகள் மூன்று வகைப்பட்டது ஆகும். ஒன்று அவை மாநிலத்திற்கும் வசூல் செய்யும் வரிகளைப் பங்கீடு செய்வதாகும். இரண்டாவதாக, அரசு அளிக்கும் மானியங்கள் மூன்றாவது திட்ட நிதி ஒதுக்கீடு.

நிதி வாயில்களைப் பங்கீடு செய்வதைப் பொறுத்த வரையில் மாநில அரசு,சுங்கத் தீர்வைகள், ஆயத் தீர்வைகள், மருந்துகள், ஒப்பனைப் பொருள்கள், மதுவகைத் தயாரிப்புகள் ஆகியவற்றின் மீதான வரிகள் கூட்டு நிறுவன வரி, வருமான வரி ஆகியவற்றை தங்களுக்கு வைத்துக் கொண்டு உள்ளது. மேலும் வருமான வரியின்மீது சர்சார்ஜ் விதிக்கும் உரிமையையும் தன்னிடம் வைத்துக் கொண்டுள்ளது. இவ்வாறாக, மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் இந்த வரிகள் மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்படுகின்றன.

மாநிலங்களின் முக்கிய வருவாய் வாயில்கள் நிலவரி, மதுவகைத் தயாரிப்புகள்மீதான ஆயத் தீர்வை, விற்பனை வரி, வருமான வரியில் ஒரு பங்கு ஆகியவை மட்டுமேயாகும். இவை தொடர்பான பிரிவுகள் 268, 269, 270, 271 ஆகியவை ஆகும். ஒன்றாவது பட்டியலைப் பொறுத்த மட்டில் 82 முதல் 86 வரையிலான பதிவுகள் இவை தொடர்பானவையாகும். இரண்டாவது பட்டியலைப் பொறுத்தமட்டில் 45 முதல் 57 வரையில் உள்ள பதிவுகள் இவை தொடர்பானவை ஆகும்.

நிதி பங்கீட்டு முறை மத்திய அரசுக்கு அதிக வருவாய் வாயில்களை அளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. இதனால் மாநில அரசுகளின் தேவைகளுக்கும் அவற்றின் நிதி வாயில்களுக்கும் எவ்வித தொடர்பும் இன்றி பெரியதொரு பற்றாக் குறை நிலவி வருகின்றது.

எனவே, நிதி வாயில்களுக்கும் நிதித் தேவைகளுக்கும் நிதி ஒதுக்கங்களுக்கும் இடையே உள்ள பற்றாக்குறையை நிறைவு செய்வதே கூட்டாட்சி அமைப்பின் முக்கியமான பிரச்னையாகும். இவ்வாறாக, அரசியல் அமைப்பில் இப்பற்றாக் குறையை நிறைவு செய்ய மூன்று முனைத் திட்டம் உள்ளது.—

(1) கூட்டு நிறுவனங்கள் தொடர்பான வரி மத்திய ஆயத் தீர்வைகள் நீங்கலாக ஏனைய வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பகிர்ந்து கொள்ள மாநிலங்களுக்கு உரிமையுண்டு.

(2) இரண்டாவதாக மத்திய அரசு விதிக்கும் ஒரு சில வரிகள் முழுவதும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. உதாரணமாக, எஸ்டேட் தீர்வை ரெயில்வே கட்டணங்களின் மீதான வரிகள், விற்பனை வரிகளுக்குப் பதிலாக விதிக்கப்படும் கூடுதல் ஆயத் தீர்வைகள்.

(3) மூன்றாவதாக, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானிய உதவி வழங்க அரசியல் அமைப்புச் சட்டம் வகை செய்துள்ளது.

பற்றாக்குறை எந்த அளவுக்கு நிறைவு செய்யப்பட்டது என்பதை நாம் இப்பொழுது பார்ப்போம்.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வணிகத்தின்மீது வரி விதிக்கும் அதிகாரம் அதாவது எந்த இடத்தில் விற்பனை நடக்கிறதோ அல்லது கொள்முதல் நடக்கிறதோ அந்த விற்பனை அல்லது கொள்முதல்மீது வரி விதிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு முழுவதும் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டம் (மூன்றாவது திருத்த) சட்டம் 1956 பட்டியல் ஒன்று 926 பதிவையும் 269 (1) (ஜி) பிரிவையும் பார்ப்போம். இந்த அதிகாரங்களைக் கொண்டு நாடாளுமன்றம் 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி சட்டத்தின் மூன்றாவது பிரிவை இயற்றியுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 26 (1) (ஜி) பிரிவின்கீழ் மத்திய விற்பனை வரியை விதிக்கும் வகையில் மாநிலங்களுக்கு இடையே நடைபெறும் விற்பனை அல்லது கொள்முதல்மீது விதிக்க வேண்டிய வரியை நிச்சயிப்பதற்கான கோட்பாடுகளை நிர்ணயிக்கவும் நாடாளுமன்றத்துக்கு இப்பிரிவின்மீதும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வரி ஆதாரங்கள், அதிகாரங்களைப் பொறுத்து கூடுதல், திட்ட உதவி தொடர்பான நிதி ஒதுக்கீடு ஆகியவை பற்றி நமக்கு இதுவரை ஏற்பட்டுள்ள அனுபவம் மிகவும் கசப்பானதாகும். இக் கசப்பான நிலையை அகற்றுவதும் மத்திய மாநில அரசு

களிடையே நல்ல உறவு நிலவவும் வழிவகைகளை கண்டுபிடிப்பது மிகவும் அவசியமான இன்றியமையாத தேவையாகிவிட்டது.

மத்திய அரசு தனது நிதித் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்து கொள்கிறதோ அவ்வாறே மாநில அரசும் தனது நிதித் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும், என்பதுதான் மாநில அரசின் முக்கியமான வாதமாகும். மத்திய அரசும் மாநில அரசும் ஒருவர் நிதிநிலையில் மற்றொருவர் தலையிடாமல் தனித்தனியாக இயங்கும் வகையில் வருவாய் ஆதாரங்களைப் பெற்றிருக்க வேண்டும். பற்றாக்குறையை நிறைவு செய்யும் அவசியம் ஏற்படும்போதுதான் சரிப்படுத்தும் பணி தேவையாகின்றது. மாநிலங்களுக்குள்ள நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவே ; அவை போதா. எனவே, அவை மத்திய அரசையே நம்பியிருக்கும் நிலை வெகுவாக உள்ளது. மேலும், அரசியலமைப்புச் சட்டத்திலேயே மாநில அரசுகளுக்கு நிதி பங்கீடு செய்யும் முறை நியாயமற்ற வகையில் அமைந்துள்ளது என்றும், மாநிலங்கள் சார்பாக வசூலிக்கப்படும் வரிகளின் பங்கீடு, மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கும் தகுதி மானியம் ஆகியவற்றில் மத்திய அரசு ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகிறது. மாநில அரசுகளின் நிதி வாயில்கள் மத்திய அரசின் நிதி வாயில்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் குறைவே; இதன் காரணமாக மாநில அரசுகள் மானியங்கள், மிகைப் பற்றுகள் ஆகியவை தொடர்பாக மத்திய அரசை நம்பியிருக்கும் நிலை உருவாகியுள்ளது. மத்திய மாநில அரசுகளிடையே நிதி வாயில்களைப் பொறுத்தவரையிலுள்ள ஏற்றத் தாழ்வைக் கருத்திற்கொண்டு பார்த்தால் மாநில அரசுகள் தங்கள் வளர்ச்சித் திட்டத் தேவைகளுக்காகவும் ஏனைய திட்டங்களுக்காகவும் போதிய அளவு நிதி திரட்ட இயலும் வகையில் அரசியலமைப்பின் சம்பந்தப்பட்ட பிரிவு திருத்தப்பட வேண்டும். அத்தகைய நிலையில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு தொடர்பாக மாநில அரசும் மத்திய அரசும் சம நிலையில் இருக்கும். மாநில அரசு மானியத்திற்காக மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் நிலை இருக்காது. மத்திய அரசும் அவசியமான சூழ்நிலைகளில் மட்டும் நிதியுதவி செய்ய இயலும்.

மாநில அரசுகளுக்கு மானியங்களாகவும் குறிப்பிட்ட வரிகளில் பங்காகவும் நிதியொதுக்கம் செய்வதற்கு வகை செய்த பின்னர் இந்த நிதியுதவியின் அளவை நிச்சயிக்கும் அமைப்பையும் இத்தகைய நிதியுதவி எந்தக்கோட்பாடுகளின்படி அளிக்கப்பட வேண்டும் என்பதை நிச்சயிப்பதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்குவதன் அவசியம் கருதிப் பார்க்கப்பட்டது. இந்த அமைப்புதான் நிதி கமிஷனாகும். இக்கமிஷன் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறது. அவ்வப்போது இருக்கும் சூழ்நிலைக்கேற்ப மத்திய-மாநில அரசுகளிடையே நிலவிவரும் நிதிநிலைத் தொடர்புகளை மாற்றியமைப்பதுதான் இதன் நோக்கமாகும். நிதிக் கமிஷன் இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் தனிச் சிறப்பாகும். நிதிக் கமிஷன் நடுவர் மன்றம் போன்றதாகும். மத்திய மாநில அரசுகளிடையே நிதிநிலைத் தொடர்பாக நியாயம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய கூட்டாட்சி அமைப்புகளில் இத்தகைய அதிகார அமைப்பு இல்லை. இதற்கு ஓரளவு ஒத்ததாக ஆஸ்திரேலியா காமன்வெல்த் மானியக் கமிஷனைத்தான் குறிப்பிடலாம். எனினும், இவ்விரண்டு அமைப்புகளிடையேயும் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. அரசியலமைப்பில் அவர்களுக்குள்ள நிலை, செயல்திறம், வரம்பு ஆகியவை வேறுபட்டவை ஆகும். இந்திய நிதிக் கமிஷன் அரசியலமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டதாகும். இது நிலையான அமைப்பல்ல. ஐந்தாண்டுகளுக்கொருமுறை தான் இது உருவாக்கப்படுகிறது. மாறாக, காமென்வெல்த் மானியக் கமிஷன் காமென்வெல்த் நாடாளுமன்றத்தால் 1933ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது நிலையான அமைப்பாகும். மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா ஆகிய பற்றாக்குறை அரசுகளுக்கு மானியங்கள் வழங்க பரிந்துரைக்கும் அதிகாரம் உடையதாகும். ஆஸ்திரேலியாவில் கமிஷன் உறுப்பினர்களின் பதவிக்கால அளவு மூன்றாண்டுகளாகும். இந்தியாவில் இக்கமிஷனின் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓராண்டாகும். கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி முடிவடைந்ததும், அதன் பதவிக்கால அளவு முடிவடைந்து விடுகிறது. இவ்வாறாக, இந்தியாவில் கமிஷனின் பணி தொடர்ந்து நடப்பதில்லை, மேலும், இந்திய நிதிக் கமிஷனுக்கு ஆஸ்திரேலிய கமிஷனைவிட அதிக அளவு அலுவல்கள் உள்ளன. மத்திய-மாநில அரசுகளுக்கிடையே வரிகளைப் பங்கீடு செய்வது பற்றியும், மாநிலங்களுக்குத் தேவையான மானியங்களைப் பற்றியும் பரிந்துரைக்க வேண்டியுள்ளது. மேலும், மத்திய-மாநில அரசுகளுக்கிடையிலுள்ள நிதித் தொடர்பான ஏனையப் பிரச்சனைகளும் இக்கமிஷனுக்கு தீர்வைக்காக அனுப்பப்படுகிறது. மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பங்கீடு மத்திய அரசினால் தன்னிச்சையாக செய்யப்படமாட்டாது என்றும் மாநில அரசுகளின் தேவைகளை மதிப்பிடும் தனிப்பட்ட கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நிதிப்பங்கீடு செய்யப்படும் என்பதும், நிதிக் கமிஷன் ஏற்படுத்தியதன் நோக்கமாகும்.

நிதிக் கமிஷன் ஏற்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 280ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. கமிஷன் உறுப்பினர்களுக்கானத்தகுதிகள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய விதம், கமிஷன் தன் அலுவல்கள் செய்ய வேண்டியதற்கு அதற்குள்ள அதிகாரங்கள் ஆகியவற்றை நிர்ணயிக்க இப்பிரிவு நாடாளுமனறத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. இதன்படி, 1951ஆம்

ஆண்டு நிதிக் கமிஷன் (பல்வகை விதித் துறைகள்) சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப் பட்டது. இச்சட்டத்தின்கீழ் இக்கமிஷனுக்கு தலைவர் ஒருவர் இருப்பார்கள். மேலும், 4 உறுப் பினர்கள் இக்கமிஷனில் இருப்பார். தகுதிகளைப் பொறுத்தவரையில், கமிஷன் தலைவர் அரசு விவகாரங்களில் அனுபவம் பெற்றவராகயிருக்க வேண்டும். உறுப்பினர்கள் உயர் நீதிமன்ற நீதி பதிகளாக நியமிக்கப்பட்டவர்களாக அல்லது நிய மிக்கப்பட தகுதியுள்ளவராக இருக்க வேண்டும் அல்லது அரசின் நிதி நிலை, அரசின் கணக்குகள் பற்றி சிறப்பு அறிவு படைத்தவர்களாகயிருக்க வேண்டும் அல்லது நிதி விவகாரங்களிலும், நிரு வாகத்திலும் பரந்த அனுபவமுள்ளவராகயிருக்க வேண்டும் அல்லது பொருளாதாரத்தில் சிறந்த அறிவுடையவராக இருக்க வேண்டும்.

நிதிக் கமிஷனின் அலுவல்கள் பற்றி அரசிய லமைப்புச் சட்டத்தின் 280 (3) பிரிவு விளக்கு கிறது. மத்திய-மாநில அரசுகளுக்கிடையே வரி களின் நிகர வசூல் பிரித்துக் கொடுக்கப்பட வேண் டிய முறை பற்றியும் இந்திய தொகு நிதியிலிருந்து மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்களை முறைப்படுத்தும் கோட்பாடுகள் பற்றியும் குடியரசுத் தலைவர் நாட்டின் செவ் வையான நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு கமிஷனுக்கு அனுப்பும் வேறுயாதொரு விவகாரம் பற்றியும் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைகள் அனுப்ப வேண்டும். அரசியலைப்புச் சட்டத்தின் படி வருமான வரியைப் பொறுத்தவரையில், கமிஷன் பரிந்துரைகள் குடியரசு தலைவராலும் ஏனைய வரிகள் மானியங்கள் தொடர்பாக கமிஷனின் பரிந்துரைகள் நாடாளுமன்றத்தாலும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அலுவல் நடைமுறையை நிச்சயிக்க கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சாட்சிகளுக்கு அழைப்பாணை கொடுத்தல், சாட்சியம் சொல்ல வருமாறு அவர்களை கட்டாயப்படுத்துதல், எவை யேனும் ஆவணங்களைக் கொண்டு வந்து காண் பிக்குமாறு அவர்களைக் கேட்டல், ஒரு நீதிமன்றம் அல்லது அலுவலகத்திலிருந்து அரசு தொடர் பானஆவணங்களைக்கொண்டுவருமாறுகட்டளை யிடுதல் ஆகியவை தொடர்பாக கமிஷனுக்கு சிவில் நீதிமன்றங்களுக்குரிய அதிகாரம் உண்டு. கமிஷன் தான்ஆராய்ந்து வரும் பொருள் தொடர்பாக பயனுள்ளதாக அல்லது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதும் பிரச்சினைகள் அல்லது விவகாரங்கள் குறித்து தகவல் அளிக்குமாறு ஒருவரைக் கேட்கவும் கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

நிதிக் கமிஷனை இந்திய கூட்டாட்சி அமைப் பின் மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயானநிதி தொடர்புகளைப் பொறுத்த வரையில், அதனை சீராக அமைக்கும் ஒரு இயந்திரமாகக் கருதலாம் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு நிதிமாற்றம் செய்வதன் அடிப்படை அரசியலமைப்புச் சட்டத் தில் வரையறுக்கப்படவில்லை. இந்த அடிப் படையை நிதிக் கமிஷன் அவ்வப்பொழுது மாற்றி யமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1950ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்த திலிருந்து இப் பிரச்சினைகள் குறித்து எட்டு நிதிக் கமிஷன்கள் தனது பரிந்துரைகளை வழங்கியுள்ளன. ஒவ்வொரு கமிஷன் நியமிக்கப்பட்டபோதும், மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மாற்றும் மத்திய நிதியின் அளவு படிப்படியாக உயர்ந்துள்ளது என்பதில் சந்தேகமே இல்லை.

மத்திய நிதி மாநில அரசுகளுக்கு பங்கீடு செய் வது படிப்படியாக உயர்ந்து உள்ளது என்பதற்கே ஒரு சில சான்றுகளை இங்கு கூறலாம். முதல் நிதிக் கமிஷன் நியமிக்கப்பட்டபோது மத்திய வரு மான வரியில் 50 சதவீதம் மாநிலங்களுக்கு மாற்றப் பட்டது. மாநிலங்களின் நிதி வாயில்களை அதி கரிக்கும் முயற்சியில் முதல் கமிஷன் மத்திய வரு மான வரியில் மாநில அரசுகளின் பங்கை 55 சத வீதமாக உயர்த்தியது. இரண்டாவது நிதிக் கமி ஷன் இதனை 60 சதவீதமாகவும் மூன்றாவது கமிஷன் இதனை 66.6 சதவீதமாகவும், நான்காவது கமிஷன் 75 சதவீதமாகவும் உயர்த்தியது. ஐந்தா வது நிதிக் கமிஷன் இந்த நிதி ஒதுக்கத்தை உயர்த்த வில்லை. வருமான வரியை விதித்து, வசூல் செய்வது மத்திய அரசு பொறுப்பாகுமாதலால், மத்திய அரசிற்கு இந்த வருமானவரி வசூலில் கணி சமானப் பங்கு இருக்க வேண்டும் என்று ஐந்தாவது நிதிக் கமிஷன் கருதியது. எட்டாவது நிதிக் கமிஷன் இதனை 85 சதவீதமாக உயர்த்தியது.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசு விதிக்கும் ஆயத் தீர்வைகளை மத்திய அரசு மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிப்பது, மத்திய அரசின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஆனால், இந்த ஆயத் தீர்வையிலிருந்து கிடைக்கும் தொகை தற் போது மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இந்த நடைமுறை சிறு அளவில் முதல் நிதிக் கமிஷனால் கொண்டு வரப் பட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு நிதிக் கமி ஷன் நியமிக்கப்பட்டபோதும் மத்திய ஆயத் தீர்வை வசூலை மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளும் அளவு தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்தது. ஆயத் தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுவதிலிருந்து 20 சதவீதம் வரை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளலாம் என நான்காவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்தது. சிறப்பு ஆயத் தீர்வைகளை பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் சேர்த்துவிடு வதன் மூலம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு கிடைக்கும் வருவாயை இந்த வீதாச் சாரம் உயர்த்துகிறது என்று ஐந்தாவது நிதிக் கமிஷன் கருத்து தெரிவித்தது. எட்டாவது நிதிக் கமிஷனின் பரிந்துரைகளையடுத்து, மாநிலத்தின்

பங்கு 45 சதவீதமாக உயர்த்தப்பட்டது. நிதிப் பகிர்ந்தளித்த பின்னரும் வருவாய் பற்றாக் குறையுள்ள மாநிலங்களுக்கு, இதிலிருந்து 5 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. சிறப்பு ஆயத் தீர்வைகள் இதுவரையில் மத்திய அரசின் பயனுக்காகவே முழுவதும் பயன்படுத்தி வந்தன. மத்திய ஆயத் தீர்வைகளை மாநில அரசுகள் பகிர்ந்து கொள்வதினால், மாநில அரசுகளின் நிதி வாயில்களைப் பெருக்குவதில் மாநில அரசுகளுக்குப் பெரும் உதவியாகவுள்ளது. ஏனெனில், தொழில்கள் விரைந்து பெருகிவரும் இக்காலத்தில் ஆயத் தீர்வைகள் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் நிதி வாயில்கள் ஒன்றாகும்.

மானியங்களைப் பொறுத்த வரையில்கூட மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்படும் மானியங்கள் ஒவ்வோராண்டும் பெருமளவில் பெருகியுள்ளன என்று சொல்லப்படுகிறது. ஏழு மாநிலங்களுக்கு ஓராண்டில் ரூ. 50.5 மில்லியன் மானியமாக வழங்கப்படலாமென்று முதல் நிதிக் கமிஷன் பரிந்துரைத்தது. இரண்டாவது நிதிக் கமிஷன் இந்த மானியங்கள் 11 மாநிலங்களுக்கு வழங்கப்படலாமென்று பரிந்துரைத்ததுடன் மானியத் தொகையை ஆண்டொன்றுக்கு ரூ. 3,95 மில்லியனாக உயர்த்தியது. ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், ஜம்மு-காஷ்மீர், கேரளம், மைசூர், நாகாலாந்து, ஒரிஸா, ராஜஸ்தான், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ரூ. 6,37.85 கோடி மானியம் அளிக்கப்படாலாமென்று, ஐந்தாவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்தது. இந்த இடைவெளியை நிரப்பும் மானியமாக ரூ. 2,200 கோடி வழங்கலாம் என எட்டாவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்துள்ளது.

மத்திய நிதிகளில் பகிர்ந்து அளிக்கக் கூடிய தொகையில், மாநிலங்களின் பங்கை வரையறுக்கையில், ஒவ்வொரு நிதிக் கமிஷனின் வருவாய் வாயில் அதிகமில்லாத மாநிலங்களின் நிதி வாயில்களை உயர்த்தும் நோக்கத்துடன் மாநிலங்களுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைக்க நேர்ந்துள்ளது. உதாரணமாக, வருமான வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் தொடர்பான பகிர்ந்தளிக்கக் கூடிய தொகையில் மாநிலங்களின் பங்கை நிச்சயிக்கையில், மக்கள் தொகைக்கு அதிக சிறப்பிடமும் வசூல் செய்யப்படும் தொகைக்கு குறைந்த முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது. மக்கள் தொகை அடிப்படையில் 80 சதவீதமும், வசூல் அடிப்படையில் 20 சதவீதமும் பகிர்ந்தளிக்கப்படலாம் என்று முதல் கமிஷன் கருத்து தெரிவித்தது. மூன்றாவது, நான்காவது நிதிக் கமிஷன்களும் இதே கருத்தை தெரிவித்தன. ஆனால், இரண்டாவது நிதிக் கமிஷன் இதற்கு மாறான கருத்தை தெரிவித்தது. மத்திய நிதியைப் பகிர்ந்தளிப்பது வருமான வரி வசூல் தொகை முக்கியமான அடிப்படை அல்ல என்றும், மக்கள் தொகை அடிப்படையிலேயே வரி வசூல் பகிர்வு முழுவதும் அமைய வேண்டும் என்றும் கூறியது. அதே சமயத்தில், மக்கள் தொகை அடிப்படையில் 90 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படலாம் என்றும், வசூல் அடிப்படையில் 10 சதவீதம் பகிர்ந்தளிக்கப்படலாமென்றும் அது கருத்து தெரிவித்தது. இக் கோட்பாட்டை ஐந்தாவது நிதிக் கமிஷன் ஒப்புக் கொண்டது. மத்திய ஆயத் தீர்வை வசூல் மாநிலங்களிடையே மக்கள் தொகை அடிப்படையில் 80 சதவீதமும், சமூக பொருளாதார நிலையில் பின் தங்கிய பகுதிகளின் அடிப்படையில் 20 சதவீதமும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 25 சதவீதமும், நபர்வாரி வருமானம் அதிகரித்ததன் பேரில் 25 சதவீதமும், நிதி உபரியாகவுள்ள மாநிலங்களிலிருந்து நபர்வாரி வருமானம் அடிப்படையில் 50 சதவீதமும் வழங்கலாம் என்று எட்டாவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்தது. அரசியலமைப்புச் சட்டத்தின் 275ஆம் பிரிவின்கீழ் மானியங்கள் அளிப்பதைப் பொறுத்தவரையில், மாநிலங்களின் தேவைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்றாலும், மானியம் அளிக்கும் நடைமுறை போதிய அளவில் அமையவில்லை. இந் நடைமுறையை மேம்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

எனினும், எட்டாவது நிதிக் கமிஷன் தொகுத்துள்ள இத்தகைய கோட்பாடுகள் அனைத்திலும் மக்கள் தொகையானது ஒரு தெளிவான வெளிப்படையான காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் 1971ஆம் ஆண்டு மக்கட் தொகையானது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் நபர்வாரி வருமானத்தைக் கணக்கிடுதல் போன்ற பிற இனங்களில் (அத்தகைய இனங்களில் தொகுதிக் கூற்று எண்ணைப் பொறுத்தவரையில் மக்கள் தொகையானது உள்ளடக்கமான அம்சமாக இருக்கும்). நடப்பு மக்கள் தொகை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த முறையானது 1971ஆம் ஆண்டு மக்கட் தொகையினை கணக்கில் எடுத்துக் கொள்ளும் கொள்கைக்கு முற்றிலும் முரணாக அமைந்துள்ளது அதாவது குடும்ப நலத் திட்டத்தை சிறப்பாக செயலாற்றும் மாநிலங்களை தண்டிக்கக் கூடாது என்ற கொள்கைக்கே இது முரணாக உள்ளது. தற்போதைய மக்கட் தொகையினைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் மூலம் உயர் முன்னுரிமை வழங்க வலியுறுத்தப்படும் தேசியக் கொள்கையாகிய குடும்ப நலத் திட்டத் துறையில் நல்ல முறையில் செயலாற்றும் மாநிலங்கள் பெருமளவுக்கு பாதிக்கப்படுகின்றன. இந்தப் போக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், மக்கள் தொகையானது உள்ளடக்கமான அம்சமாக அமையும் இனங்களில்கூட 1971ஆம் ஆண்டு மக்கட் தொகையானது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் மாநில அரசு பல்வேறு அமைப்புகளின் மூலம் வாதாடி வருகின்றது.

நிதிக் கமிஷனின் பரிந்துரைகள் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. சட்டப்படி பார்த்தால் கமிஷனின் பரிந்

துரைகளை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கட்டாயமில்லை. நிதிக் கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் தான் குடியரசுத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர் விருப்பப்படி தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க முடியாது என்று டாக்டர் அம்பேத்கர் கருத்து தெரிவித்திருந்தாலும், நடைமுறையில் நிதி பரிந்துரைகளில் பல மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. எனவே. நிதிக் கமிஷன் நிலையானதொரு அமைப்பாக இருக்க வேண்டும் என்றும், அதற்கென்று தனியாக செயலகம் இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. நிதிக் கமிஷனின் பரிந்துரைகள் மத்திய அரசாலும், மாநில அரசாலும் கட்டாயம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற திருத்தம் ஒன்று அரசியலமைப்புச் சட்டத்தில் திட்ட வட்டமாக செய்யப்பட வேண்டும். மாநிலங்களுக்கு திட்டச் செலவு, திட்டம் சாரா செலவு ஆகியவை தொடர்பான மானியங்கள் நிதிக் கமிஷன் போன்ற சட்டப்படிக்கான, தனித்தியங்கும் பாரபட்சமற்ற அமைப்பு ஒன்றில் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் வழங்கப்பட வேண்டும்.

வாலாயமான மானியங்களைத் தவிர குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மானியங்கள் வழங்கவும், அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய மானியங்கள், மத்திய அரசு தேசிய அளவிலான கொள்கைகளை நிறைவேற்றும் பொருட்டும், அனைவருக்கும் பொதுவான நோக்கங்களை எய்தும் பொருட்டும் தாம் தகுதியெனக் கருதும் பணிகளுக்காக வழங்குவதாகும். இவை நிதிக் கமிஷனின் பரிந்துரைகளுக்குப் புறம்பானவையாகும். தற்போதைய நிலை என்னவெனில் இத்தகைய சிறப்பு மானியங்கள் ஏராளமான அளவில் பெருகி, வாலாயமான மானியங்கள் குறைந்து விட்டன. திட்டக் கமிஷனின் ஆலோசனையின் பேரிலேயே திட்டப் பணிகளுக்கான மானியங்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பணிகள் அல்லாத பணிகளுக்காக பல மாநிலங்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 282ஆம் பிரிவின் கீழ்மானியங்கள் பல வழங்கப்படுகின்றன.

மத்திய-மாநிலங்களிடையேயான நிதித் தொடர்புகளைப் பொறுத்த வரையில், அரசியலமைப்புச் சட்டத்தில் விரிவான அவ்வப்போது மாற்றிக் கொள்ளத்தக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ள போதிலும், நடைமுறையில் பல பிரச்சினைகள் தலைதூக்குகின்றன என்பது உண்மையே. மாநில அரசுகள் அதிக நிதி ஒதுக்கம் கேட்ட வண்ணம் இருக்கின்றன.

இத்தகைய கோரிக்கைக்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. மாநில அரசுகளின் பணிகளுக்கும் அதற்குத் தேவையான நிதி வாயில்களுக்குமிடையே சம நிலை இல்லாதது முதற் காரணமாகும். இது திட்டங்கள் தயாரிப்பதன் காரணமாக முக்கியமாக எழுகின்றது. நாட்டை வளமாக்குவதற்கான பணித் திட்டங்களுக்காக மாநில அரசுகள் ஏராளமான அளவில் செலவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், அவற்றுக்குள்ள நிதி வாயில்கள் மிகவும் குறைவாகும். மத்திய அரசு ஆண்டுதோறும் பெரிய அளவில் மானியங்கள், கடன்கள் ஆகியவற்றை மாநில அரசுகளுக்கு வழங்கியபோதிலும், திட்டப் பணிகளுக்கான செலவை மாநில அரசுகளால் ஈடு செய்ய முடிவதில்லை.

மேலும், மாநிலங்களில் உள்ள சமூகப் பணிகளில், வெகுவாக ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. அவற்றைப் போக்கி சீரான நிலையை உருவாக்க போதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. ஐந்தாவது நிதிக் கமிஷன் அறிக்கையில் கண்டுள்ள புள்ளி விவரங்களின்படி, கல்விக்கான நபர்வாரி செலவு பீகாரில் மிகவும் குறைவு, அதாவது ரூ. 4.98. நாகாலாந்தில் மிகவும் அதிகம். அதாவது ரூ. 46.08. அடுத்ததாக வரும் மாநிலம் கேரள மாநிலம்; இதன் நபர்வாரி செலவு ரூ.21.11. இதே மாதிரி, மக்கள் நல்வாழ்வைப் பொறுத்த வரையில் பீகாரில் நபர்வாரி செலவு ரூ. 0.23. நாகாலாந்தில் ரூ. 4.41. அடுத்ததாக ராஜஸ்தானில் ரூ. 4.29. இவ்வாறு எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். நிதித் தேவை அடிப்படையிலான மானியம், நிதிக் கமிஷன் ஆகிய இரு கருத்துக்களும் இந்திய, ஆஸ்திரேலியா நாட்டு அரசியலமைப்பிலிருந்து எடுத்துக் கொண்டவை. ஆஸ்திரேலியாவில் பற்றாக்குறை நாடுகளில் சமூக நலப் பணிகளை, தேசிய சராசரி நிலைக்கு உயர்த்துவதே காமன்வெல்த் மானிய கமிஷனின் பணியாகும். இந்தியாவில், நிதிக் கமிஷன், இத்தகைய பணியைச் செய்வதில்லை. சமூக நலப் பணிகளைப் பொறுத்த வரையில், ஒரு சில மாநிலங்களின் மிக அதிகமான செலவைக் கருத்தில் கொள்கிற போதிலும் சமூக நலப் பணிகள் தொடர்பான செலவு மிகவும் குறைவாக உள்ள மாநிலங்களுக்குச் சமமாக மேற்குறிப்பிட்ட மாநிலங்களைக் கருத அது முற்படுவதில்லை.

இந்த அணுகுமுறை முரண்பாடான ஒரு நிலைமைக்கு வழி கோலுகிறது. விவேகமான வகையில் நிதி நிர்வாகத்தை செயல்படுத்தியுள்ள மாநிலங்கள் பிரதிகூலமான ஒரு நிலைமைக்கு உள்ளாகியுள்ளன. அளவுக்கு மீறிய செலவுகள் செய்வதற்கு இது ஊக்கமளிப்பதாக உள்ளது. அதேபோல, பற்றாக்குறையை ஈடு செய்ய நிதிக் குழு பின்பற்றிய அணுகுமுறையில் வரி விதிக்கத் தக்க அனைத்து வழிமுறைகளை மேற்கொள்வதிலும் வரி வசூலையும், அதிக வசூல் செய்ய உள்ள நிர்வாக அமைப்பையும் முடுக்கிவிட சில மாநிலங்கள் மேற்கொண்ட சிறந்த முயற்சிகளை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே, அனைத்து மாநிலங்களுக்கான குறைந்தளவு பணித் தரத்தை உறுதி செய்யும் வகையில், அனைத்து மாநிலங்களின் வரி வரவுகளை மதிப்பிடுவதிலும்

ரெவின்யூ செலவை மதிப்பிடுவதிலும் நிதிக் கமிஷன் இயல்பான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது. அப்போது தான் நடப்பு வருவாயிலிருந்து பற்றாக்குறை உபரி அளவைக் கணக்கிட முடியும். மின்வாரியங்களி லிருந்தும், பிற பொதுத்துறை நிறுவனங்களிட மிருந்தும் கிடைக்கும் வருவாயைப் பொறுத்தவரை இத்தகைய இயல்பான நடைமுறை ஏற்கனவே நிதிக் கமிஷனால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டலாம். மத்திய அரசின் செலவினங்களையும் வரி வருவாய்களையும் இதேபோன்ற ஆய்வுக்கும் இயல்பான அணுகு முறைக்கும் உட்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்பதை வலியுறுத்திக் கூறலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதி தொடர்பான உறவு சுமுக மாக இருக்க வேண்டும் என்று வகை செய்யப் பட்டிருந்த போதிலும், திட்டப் பணிகள் காரண மாக இந்த உறவுநிலை பாதிக்கப்பட்டுள்ளது. திட்டக் கமிஷனும், நிதிக் கமிஷனும் ஒரே வகை யானப் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. உண் மையைச் சொல்லப் போனால், நிதிக் கமிஷனை விட திட்டக் கமிஷன் மூலமாகத்தான் அதிக அளவிற்கு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்யப் படுகின்றது. வேறு வகையில் சொன்னால், நிதிக் கமிஷன், திட்டக் கமிஷனின் நிழலில் ஓரளவிற்கு மறைந்து விடுகிறது என்று சொல்லலாம். திட்டக் கமிஷன் பரிந்துரைத்த மானியங்கள் மாநில அரசு களுக்கு மனநிறைவு அளிப்பதாக இல்லை. திட்டக் கமிஷன் மத்திய அரசின் நிருவாக ஆணையினால் உருவாக்கப்பட்டதாகும் என்றும், எனவே திட்டப் பணிகளுக்கான மானியங்கள் குறித்த நிதி ஒதுக் கத்தை முறைப்படுத்தும் கோட்பாடுகள் நாடாளு மன்றத்தால் உருவாக்கப்படும் மற்றொரு அமைப்பு வகுக்கவேண்டும் என்றும், இத்தகைய அமைப்பு நிதிக் கமிஷனைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்றும், மாநில அரசுகள் கருத்து தெரிவித்துள்ளன. இக் கருத்துக்கு நிருவாகச் சீர்திருத்த கமிஷனும் தனது அறிக்கையில் ஆதரவு தெரிவித்துள்ளது. வருங்காலத்தில், மாநில அரசுகளுக்கு திட்டப் பணிகள் தொடர்பான மானியங்கள் அளிக்கப்படுவதை முறைப்படுத்தும் பரிந்துரைகளை அளிக்குமாறு நிதிக் கமிஷன் கேட்டுக் கொள்ளப் படலாம் என்றும், கோட்பாடுகளை ஒவ்வோ ராண்டும் பயன்படுத்தும் அதிகாரம் திட்டக் கமிஷ னுக்கும் மத்திய அரசுக்கும் கொடுக்கப்படலாம் என்றும் நிருவாகச் சீர்திருத்த கமிஷன் கருத்து தெரிவித்துள்ளது. நிதிக் கமிஷனின் பரிந்துரைக் கும் திட்டங்களுடன் திறம்பட ஒருங்கிணைந்து அமைவதற்காக திட்டக் கமிஷன் உறுப்பினர் ஒருவர் நிதிக் கமிஷனில் நியமிக்கப்படலாம் என்றும் நிருவாக சீர்திருத்த கமிஷன் கருத்து தெரிவித் துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 282ஆம் பிரிவு வெறும் பிரிவாக இருப்பதற்கு மட்டும் கொண்டு வரப்பட்டதா அல்லது தற்போது திட்ட மிடும் நோக்கங்களுக்காக, பெரிய அளவில் நிதி மாற்றம் செய்யப்படுவதற்காக கொண்டு வரப் பட்டதா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கம் அரசியல மைப்புச் சட்டத்தின் 275ஆம் பிரிவின்கீழ் மாநில அரசுகளுக்கு கொடுக்கப்பட வேண்டுமே தவிர திட்டக் கமிஷன் மூலமாக அளிக்கப்படக் கூடாது என்று சொல்லப்படுகிறது. இந்த ஏற்பாட்டில் உள்ள பெரிய குறைபாடு என்னவென்றால், நிதிக் கமிஷன் 5 ஆண்டுகளுக்கொரு முறையே கூடுகிறது. எனவே, மாநில அரசுகளின் திட்டச் சாதனைகள் 5 ஆண்டுகளுக்கொரு முறையே மதிப்பிட முடியும். இத்தகைய ஏற்பாட்டினால், மாநில அரசுகள் தாங்கள் விரும்பும் திட்டங்களுக்காக தங்கள் விருப்பம் போல செலவிடுவதற்கு வழி ஏற்படும். இதனால், திட்டமிடும் நடைமுறை முழுவதும் பயனற்றுப் போகலாம்.

மாநில அரசுகளின் கடன்கள் தொடர்பானப் பிரச்சனைகள் முழுவதையும் ஆராய்ந்து பார்க்க வல்லுநர் குழு ஒன்று நியமிக்கப்படலாம். மாநில அரசுகள் மத்திய அரசிடம் கேட்கும் கடன்களைச் கவனிக்க உலக வங்கியின் அடிப்படையில் வளர்ச்சி வங்கி ஒன்றை அமைப்பது பற்றி ஆய்வு செய்யவும், குழு ஒன்று அமைக்கப்படலாம். இயற்கை சீற்றங்களினாலும், மக்களுக்கு ஏற்படும் துயர் களைய ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனியான நிதி ஒன்று இருக்க வேண்டும். வரிகளைத் திருத்தி யமைப்பது, கூட்டு நிறுவன வரி, ஏற்றுமதி தீர்வை உட்பட சுங்கத் தீர்வை பகிர்ந்து கொள்ளத் தக்க சொத்துக்களின் மூலதன மதிப்பின் மீதான வரி ஆகியவை மத்திய—மாநில அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

ஆயத் தீர்வைகள் :

ஆயத் தீர்வைகள், மேல்வரி, சிறப்புத் தீர்வை கள் அல்லது சாதாரண தீர்வைகள் ஆகிய மத்திய அரசின் விருப்பப்படி பகிர்ந்து கொள்ளத்தக்க தீர்வைகள் அனைத்தும் மத்திய—மாநில அரசுகளுக் கிடையே கட்டாயமாக பகிர்ந்து கொள்ளத்தக்கவை என்று அறிவிக்கப்பட வேண்டும்.

கூடுதல் ஆயத் தீர்வைகள் மாநில அரசுகளின் இசைவுடன் மட்டுமே தொடர்ந்து செயலிலிருக்க வேண்டும்.

கூடுதல் ஆயத் தீர்வைகள் எடுக்கப்பட்டு, அவற்றிற்குப்பதிலாக மாநில அரசுகள் விற்பனை வரிவிதிக்கும்நடைமுறைகொண்டுவரப்பட்டாலும் விற்பனை வரி விதிப்பதன்மீது வரி விதிப்பு வீதம், வரி விதிப்பு முனை ஆகியவை தொடர்பாக 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத் தின் (மத்திய சட்டம் 74/1956) 14, 15 ஆகிய பிரிவுகளினால், விற்பனை வரிமீது விதிக்கப்படும் வரையறைகள் முழுவதும் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 286ஆம் பிரிவைச் சேர்ந்த (3) பகுதியின்கீழ் நாடாளுமன்றத்துக்குள்ள அதிகாரம் மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல் பயன்படுத்தப்படக்கூடாது.

வருங்காலத்தில் சர்சார்ஜ் எதுவும் விதிக்கப்படக்கூடாது. ஏனெனில், அது வருவாயை எடுத்துக்கொண்டு விடுகிறது. அது அவ்வாறு எடுத்துக்கொள்ளப்படாவிடில், உபரியின் பங்காக அது மாநிலத்துக்குக் கிடைத்திருக்கும்.

மானியங்கள் :

திட்டச் செலவு, திட்டம் சாராச்செலவு ஆகிய செலவுகள் தொடர்பாக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு மானியங்கள் வழங்குவது நிதிக் கமிஷன் போன்ற, தனித்தியங்கக் கூடிய பாரபட்சமற்ற சட்டப்படிக்கான அமைப்பின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கமிஷன் :

நிதிக் கமிஷனின் பரிந்துரைகளை மத்திய அரசும் மாநில அரசுகளும் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மாநில அரசுகளின் கடன்கள் :

மாநில அரசுகளின் கடன்கள் தொடர்பானப் பிரச்சனைகள் முழுவதையும் ஆராய்ந்து பார்க்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படலாம்.

நிவாரண நிதி :

இயற்கைச் சீற்றங்களினால் மக்களுக்கு ஏற்படும் துயர்களை ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி நிதி இருக்க வேண்டும். இந்த நிதி நிவாரண நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

இப்பொழுது வரிசையாக ஒவ்வொரு வினாவிற்கும் விடை காண்போம்.

வினா 5.1.—மாநில அரசுகளின் நிதி வாயில்களுக்கும், நாளுக்குநாள் பெருகி வரும் பொறுப்புகளை நிறைவேற்ற அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்திற்கும் இடையேயுள்ள பற்றாக்குறை ஒரு சில மத்திய வரிகள், தீர்வைகள் ஆகியவற்றை மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் மத்திய அரசு வழங்கும் உதவி மானியங்கள் மூலமும் ஈடு செய்யலாம். இவ்வாறு ஈடு செய்வதானது "இயன்ற வரையில் மத்திய அரசும், மாநில அரசுகளுக்கும் நிருவாகத்தில் ஒருவருக்கொருவர் தலையிடாமல்" இருக்கும் ஏற்பாட்டின்கீழ் வரவேண்டும். எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமான நிதிக் கமிஷனின் பரிந்துரைகளின் மேல் அவ்வப்போது குடியரசுத் தலைவர் மாற்றங்கள் செய்வார்.

கடந்த 34 ஆண்டு காலமாக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மாற்றியுள்ள நிதி வாயில்களை பரிசீலனை செய்த பின்னரும், நிதி பகிர்வு முறையை சீர்தூக்கிப் பார்த்த பின்னரும், அரசியல் அமைப்பில் வகை செய்யப்பட்டுள்ள நிதிப் பகிர்வு முறை செவ்வையாகச் செயல்பட்டுள்ளது என்றும் அரசியலமைப்பு தயாரிப்பாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப அமைந்துள்ளது என்றும் சொல்ல முடியுமா ?

விடை : 5.1.—

நிதி வாயில்களைப் பகிர்ந்து கொள்ளும் திட்டத்தினால் மத்திய அரசின் ஆதிக்கம் ஓங்கி விட்டது என்பது அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டிய, நன்கு அறிந்த உண்மையாகும். இதற்குக் காரணங்கள் வருமாறு :—

(அ) மத்திய அரசிற்குக் கொடுக்கப்பட்டுள்ள வரி வாயில்கள், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிதி வாயில்களை விட அதிக அளவு வருமானத்தைப் பெருக்கிக் கொடுக்க இயலும்.

(ஆ) பொதுமக்களிடமிருந்தும் நிதி நிறுவனத்திடமிருந்தும் கடன்கள் திரட்டும் அதிகாரம் மத்திய அரசிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசு மத்திய அரசின் முன் அனுமதியைப் பெறாமல் பொது மக்களிடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் திரட்ட முடியாது. ஏனெனில் மாநில அரசுகள் மத்திய அரசிடம் ஏற்கனவே கடன்பட்டுள்ளன.

(இ) பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது மத்திய அரசின் ஏகபோக உரிமையென்று நடைமுறையில் ஒருவர் சொல்லலாம். மாநில அரசு இத்தகைய முயற்சியில் ஈடுபட்டால் "அதிகாரமற்ற வகையில், மிகைப் பற்று" வாங்கும் நிலை ஏற்படும். இதனால், மத்திய அரசு மாநில அரசைக் கண்டிக்கும் நிலை உருவாகும். சட்டம் இயற்றும் அதிகாரங்கள் தொடர்பான 1-வது பட்டியலின் 45-வது பதிவு பற்றி எமது கருத்தைப் பார்க்கவும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள நிதி வாயில்கள் மாற்றத் திட்டம் காரணமாக பெரியதொரு இடைவெளி உருவாகியுள்ளது. ஏனெனில் மத்திய அரசு திரட்டும் நிதி, மாநில அரசு தங்கள் பணிகளை நிறைவேற்ற இயலும் வகையில், மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை. பொது மக்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து திரட்டிய கடன்களில் மாநில அரசுக்கு உரிய பங்கு மூன்றாவது

திட்டத்தில் 62.7 சதவீதமாக இருந்தது. இது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 23 சதவீதமாகக் (மதிப்பீடு) குறைந்தது. இதே மாதிரி, பல்வேறு நிதிக் கமிஷன்களின் தீர்ப்புகளை நிறைவேற்றாமல் தவிர்க்கும் தந்திரத்தை இந்திய அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஏழாவது நிதிக் கமிஷனின் தீர்ப்பை நிறைவேற்றும் கால அளவில் இது மிகவும் முக்கியமாகும். ஏனெனில் 1980–81ஆம் ஆண்டில் 28.77 சதவீதமளவிற்கு வரி வருவாயை மாநில அரசுகளுக்கு மாற்ற வேண்டும் என்று ஏழாவது நிதிக் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. எனினும் மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியிராத, அதாவது கூடுதல் வருமான வரி, கூடுதல் ஆயத் தீர்வை கூடுதல் சுங்க வரி போன்ற வரிகளை அதிகரிக்கும் கொள்கையை இந்திய அரசு முனைந்து பின்பற்றி வருகிறது. அதே நேரத்தில் மாநில அரசுகளுடன் பகிர்ந்துக் கொள்ளத்தக்க வரிகள் தொடர்பாகச் சலுகையளிக்கும் வகையில் வரிகளைக் குறைத்தும் வருகிறது. இதன் காரணமாக மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளத்தக்க வரிகளின் சதவீதம் 1983–84ஆம் ஆண்டில் 25.05 ஆகக் (திருத்த மதிப்பீடு) குறைத்து விட்டது. 1-வது அட்டவணையைப் பார்க்கவும்.

அட்டவணை-I.

	1969–70	1970–71	1971–72	1972–73	1973–74	1974–75	1975–76	1976–77
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
								(ரூபாய் கோடியில்)
I. மத்திய அரசின் மொத்த வருவாய்	36,89	40,97	49,72	56,45	62,46	77,82	97,67	1,10,03
II. மொத்த வரி வருவாய் ..	28,23	32,07	38,72	45,10	50,73	65,22	76,09	82,71
III. மாநில அரசுகளுக்கு மாற்றம்— வரிகளில் பங்கு—	6,22	7,55	9,45	10,66	11,74	12,24	15,99	16,90
(a) வருமான வரி ..	2,93	3,59	4,62	4,92	5,32	5,12	7,84	6,52
(b) இறப்பு வரி ..	7	6	8	8	11	9	8	10
(c) மத்திய ஆயத் தீர்வை ..	3,22	3,90	4,75	5,66	6,31	7,03	8,57	10,28
IV. பகிர்ந்துகொள்ள இயலாத வரி வருவாய் (II–III)—	22,01	24,52	29,27	34,44	38,99	50,98	60,10	65,81
(a) கூட்டு நிறுவன வரி ..	3,53	3,71	4,72	5,58	5,83	7,09	8,62	9,84
(b) சுங்கத் தீர்வை.	4,23	5,24	6,96	8,57	9,96	13,39	14,19	15,54
(c) ஏனைய வரிகள்.	14,25	15,57	17,59	20,29	23,20	30,56	37,29	40,43

	1977–78	1978–79	1979–80	1980–81	1981–82	1982–83	1983–84 (திருத்த மதிப்பீடு)	1984–85 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு)
	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
								(ரூபாய் கோடியில்)
I. மத்திய அரசின் மொத்த வருவாய்.	1,15,90	1,31,97	1,47,46	1,66,20	1,98,49	2,27,31	2,62,10	2,94,82
II. மொத்த வரி வருவாய் ..	88,58	1,05,25	1,19,74	1,31,80	1,58,47	1,76,96	2,09,46	2,29,92
III மாநில அரசுகளுக்கு மாற்றம்— வரிகளில் பங்கு—	17,98	19,57	34,06	37,92	42,74	46,39	52,46	57,39
(a) வருமான வரி ..	6,75	7,07	8,65	10,02	10,17	11,32	11,72	11,25
(b) இறப்பு வரி ..	10	11	11	12	17	16	17	17
(c) மத்திய ஆயத் தீர்வை.	11,13	12,40	25,30	27,77	32,40	34,91	40,57	44,97
IV. பகிர்ந்து கொள்ள இயலாத வரி வருவாய் (III)—	70,60	85,68	85,68	93,88	1,15,73	1,30,57	1,57,00	1,72,53
(a) கூட்டு நிறுவன வரி ..	12,21	12,51	13,92	13,11	19,70	21,85	25,65	25,88
(b) சுங்கத் தீர்வை.	18,24	24,49	29,24	34,09	43,00	51,19	58,79	66,50
(c) ஏனைய வரிகள்.	40,15	48,68	42,52	46,68	53,03	57,53	72,56	80,15

	1969-70	1970-71	1971-72	1972-73	1973-74	1974-75	1975-76	1976-77
	(ரூபாய் கோடியில்)							
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
IV. A III/II×100 ..	22.04	23.55	24.41	23.64	23.15	19.36	21.02	20.44
V. வரியில்லாத ஏனைய வருவாய் (I–II) ..	8,66	8,90	11,00	11,35	11,73	14,60	21,58	27,32
VI. மாநிலக் கணக்கிற்கு மாற்றப் பட்டவை ஏனைய கணக்கு மாற்றங்கள் ..	5,32	5,66	8,52	9,26	9,37	10,22	12,18	15,05
VII. பங்கிட முடியாத வரியில்லாத ஏனைய நிகர வருவாய் (V-VI).	3,34	3,24	2,48	2,09	2,36	4,38	9,40	12,27
VIII. மாநிலக் கணக்கிற்கு மாற்றப் பட்டவை—மொத்தம் (III+VI) ..	11,54	13,22	17,76	19,93	21,11	22,46	28,17	31,95
IX. பங்கிட முடியாத நிகர வருவாய் (வரி+வரியில் லாதவை) (IV+VII) ..	25,35	27,75	31,76	36,52	41,35	55,36	69,50	78,08

	1977-78	1978-79	1979-80	1980-81	1981-82	1982-83	1983-84	1984-85
	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
IV. AIII/II×100	20.30	18,60	28,45	28.77	26.93	26.22	25.05	24.96
V. வரியில்லா ஏனைய வருவாய் (I-II) ..	27,32	26,72	27,72	34,40	40,02	50,35	52,64	64,90
VI. மாநிலக் கணக்கிற்கு மாற்றப் பட்டவை ஏனைய கணக்கு மாற்றங்கள் ..	18,38	24,73	20,83	26,23	27,82	34,55	42,86	48,19
VII. பங்கிட முடியாத வரியில்லாத ஏனைய நிகர வருவாய் (V-VI).	8,94	1,99	6,89	8.17	12,20	15,80	9,78	16,81
VIII. மாநிலக் கணக்கிற்கு மாற்றப் பட்டவை—மொத்தம் (III+VI) ..	36,36	44,29	54,89	64,14	70,56	80,94	95,32	1,05,58
IX. பங்கிட முடியாத நிகர வருவாய் (வரி+வரியில்லா தவை) (IV+VII)..	79,54	87,68	92,57	1,02,06	1,27,93	1,46,37	1,66,78	1,89,34

வினா.—5.2, 5.3, 5.7, 5.8, 5.24, 5.25, 5.26.

வினா : 5.2.—

மத்திய-மாநில உறவு குறித்து நிருவாக சீர்திருத்த ஆய்வுக் குழு தெரிவித்த கருத்துக்கள் வருமாறு-: "... மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதிப் பங்கீடானது, மத்திய அரசு கொடுக்கின்ற வகையிலும், மாநில அரசுகள் அவற்றைப் பெற்றுக் கொள்கின்ற வகையிலும் அமைந்துள்ளது. மாநிலத்தின் சொந்த நிதி வாயில்களானது, திட்டத்தில் சேராத பணிச் செலவுகள் அனைத்தையும் சரிக்கட்டுவதற்குக்கூட போதுமானதாக இல்லை; எனவே, மத்திய அரசிடமிருந்து அதிக அளவுக்கு நிதியுதவியை எதிர்பார்த்து நம்பியிருக்க வேண்டியிருக்கிறது".

பல்வேறு நிதிக் குழுக்கள் பரிந்துரைத்த நிதி வாயில் மாற்றங்களை ஆய்வு செய்த பின்னர், நிருவாக சீர்திருத்த ஆய்வுக் குழு தெரிவித்த நிலைமை இன்னும் இருக்கிறதா? ஆம் எனில், பின்வரும் எத்தகைய மாற்றங்கள் அல்லது கூட்டு ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்; அதற்கான காரணங்கள் என்ன?

(அ) மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் உள்ள நிதி வாயில்களை தனித்தனியே பிரித்தமைத்தல்; நிதி வாயில் மாற்றத் திட்டத்தை நீக்குதல் அதற்குப் பதிலாக வரிவிதிப்பு தலைப்புகளை அதிக அளவில் ஏழாவது விவர அட்டவணையின்–2 பட்டியலுக்கு மாற்றுதல்.

(ஆ) மேலும், கூட்டிக் குறைத்து வரி விதிக்கக்கூடிய வரிவிதிப்புத் தலைப்புகள் சிலவற்றை 2-பட்டியலுக்கு மாற்றுதல்.

(இ) அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படுகிற மத்திய மாநில அரசுகளின் பங்குகள் அனைத்தையும் சேர்த்து பகிர்ந்தளிக்கத்தக்க ஓர் தொகுப்பினை அமைப்பதற்காக அனைத்து வரி விதிப்புத் தலைப்புகள் வரி விதிப்பு அதிகாரங்கள் மத்திய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். எத்தொகையிலிருந்து மாநில அரசின் பங்கு பல்வேறு மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும்; எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் அவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நிதிக் குழு தீர்மானிக்கலாம்.

(ஈ) மத்திய அரசின் பல வரிகள் அதாவது கூட்டு நிறுவன வரி, சுங்கத் தீர்வை, வருமான வரி மீதான மேல் வரி முதலிய வரிகளைப் பகிர்ந்தளிக்கத்தக்க நிதித் தொகுப்பின்கீழ்க் கொண்டு வரலாம்.

(உ) மத்திய அரசின் வரி வருவாய் நீங்கலாக, ஏனைய நிதி வாயில்களையும் மத்திய-மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளலாம்.

வினா : 5.3.—

சமூக-பொருளாதார நீதிக்கு வகை செய்யவும், பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவும் மாநில அரசு ஏனையவற்றிற்கிடையே முயற்சி செய்ய வேண்டுமென்று மாநில அரசின் நெறிமுறை கோட்பாடுகள் எடுத்தியம்புகின்றன.

தொன்றுதொட்டு வந்த வரலாற்றுக் காரணங்களினால், மாநிலங்கள் தங்களுடைய சொந்த நிதி வாயில்களின் மூலம் வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதை உறுதி செய்யவும், சமூக-பொருளாதார நீதியைப் பெறவும் மாநிலங்களிடையே உள்ள திறன் பரவலாக வேறுபடுகிறது.

அவ்வப்போது கூட்டிக் குறைத்து வரி விதிக்கும் அதிகாரமும் நிதி வசதி குறைவாக உள்ள மாநிலங்களை மேம்படுத்த தங்களிடம் உள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிக அளவுக்கு விருப்புரிமை அதிகாரங்களையும் கொண்டுள்ள வலுவான ஒரு மத்திய அரசுதான் வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க இயலுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி சம்பந்தமாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பது நிதி வசதி உள்ள மாநிலங்களுக்கு மேலும் சாதகமாக இருக்கும்.

மேற்சொன்ன கருத்தினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? மேற்சொன்னவற்றின் மீது உங்கள் கருத்து என்ன?

வினா : 5.7.—

மத்திய-மாநில அரசுகளுக்கு வரிவிதிப்பு அதிகாரங்களை ஒதுக்குவதில் சில நிபந்தனைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. ஒன்று வரியை விதித்து சிறந்த முறையில் அதனை வசூலித்து நிருவகிக்கக்கூடிய ஓர் அதிகார மன்றம் வரியை விதிக்க வேண்டும் என்பது இன்றியமையாத கோட்பாடாகும். இரண்டாவதாக "நாட்டிற்குள் வர்த்தகமும், வாணிபமும் தங்குதடையின்றி நடைபெறுவதை" உறுதி செய்யும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 13ஆம் பகுதி கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்ற ஒன்றாக இருக்கிறது. மூன்றாவதாக, ஏனையவற்றிற்கிடையே பொருளாதாரக் கொள்கையின் ஓர் கருவியாகவுள்ள வரி விதிப்பு முறையைப் பயன்படுத்துவதன் மூலம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதாகும். மேற்சொன்ன மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் எந்த வகையான வரி விதிப்பு அதிகாரங்களை மாநிலங்களுக்கு நியாயமாக மாற்றலாம்?

தயவுசெய்து விளக்கி அதற்கான காரணங்களைக் கொடுக்கவும்.

வினா : 5.8.—

கூட்டு நிறுவன வரி, வருமான வரி, சொத்து வரி, எஸ்டேட் தீர்வை, சுங்கத் தீர்வை, ஆயத் தீர்வை, விற்பனை வரி முதலிய முக்கியமான வரிகள் மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் சார்ந்துள்ளதென்றும் வரிவிதிப்பு குறித்து துண்டுதுண்டாக அணுகுவதால் கணிசமான

அளவிற்கு வரி இழப்பு ஏற்படலாமென்றும் வல்லுநர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். அத்தகைய வரி விதிப்பும் வரி வருவாய்ப் பகிர்வும் தனித்தனியே இருக்க வேண்டுமென்று அவர்கள் கூறுகின்றனர். வரி விதிப்பைப் பொறுத்தவரையில் மத்திய-மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்டு மைய அமைப்பின்கீழ் அத்தகைய வரிகளை விதிக்கலாம் என அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

மேற்சொன்னவை தொடர்பாக உங்கள் கருத்து என்ன ?

வினா : 5.24.—

அரசியலமைப்புச் சட்டத்தின் 268, 269ஆவது பிரிவுகளில் சொல்லியுள்ள ஓர் தீர்வை வரியினை விதிக்க அல்லது அதன் வரிவீத அமைப்பினை மாற்ற அல்லது நீக்க, மத்திய அரசு சட்டமுன் வடிவு ஒன்றைக் கொண்டு வருவதற்கு முன்னர் மாநில அரசுகளின் கருத்துக்களை அறிந்து அவற்றை உரிய அளவில் பரிசீலனை செய்து, மாநிலத்தின் நிதிவாயில்களின் ஸ்திரத்தன்மைக்கு உதவுதல் நல்ல மரபாக இருக்குமென்று நீங்கள் கருதுகிறீர்களா ?

வினா : 5.25.—

மாநில அரசுகளின் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 269ஆவது பிரிவை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சில மாநில அரசுகள் கருத்து தெரிவித்துள்ளன. இது குறித்து உங்களுடைய கருத்து என்ன ?

வினா : 5.26.—

மாநில அரசுகளின் பயனுக்காக மத்திய அரசு 1957-ல் அரசியலமைப்புச் சட்டத்தின் 269 (டி)ஆம் பிரிவின்கீழ் முதன்முதலாக இரயில்வே பயணி கட்டணங்கள்மீது வரி ஒன்றை விதித்தது. 1961ஆம் ஆண்டில் மேற்சொன்ன சட்டம் ரத்துச் செய்யப் பட்டது ; அதற்குப் பதிலாக, தற்போது மாநிலங் களுக்கு ரூ. 23.12 கோடி கொடுக்கப்படுகிறது. அந்த வரி தொடர்ந்து விதிக்கப்பட்டிருந்தால் நடப்பில் இரயில்வே பயணிக் கட்டண வருமானம் பெரிதும் உயர்ந்திருக்கும்போது மேற்படி வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் மிகவும் அதிகமாக இருந்திருக்குமென்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இக்காரணத்தால் இரயில்வே பயணிக் கட்டணத் திற்குப் பதிலாக வழங்கப்படுகிற மானியத்தை உயர்த்த வேண்டுமென்றும், இரயில்வே பயணி கட்டண உயர்வின் விகிதாச்சார அளவிற்கு உயர்த்த வேண்டுமென்றும் வலியுறுத்தப்படுகிறது.

மாநிலங்கள் எழுப்பியுள்ள இப் பிரச்சினை பற்றி உங்களுடைய கருத்து என்ன ?

விடை :—5.1, 5.2, 5.3, 5.7, 5.8, 5.24, 5.25, 5.26.

இந்தியா போன்ற ஒரு நாட்டில் வரி விதிப்பின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தை கூட்டாட்சி முறையில் பகிர்ந்து கொள்வதற்குப் பின்வரும் காரணக் கூறுகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்:—

(1) மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள நிதி வாயில்கள் போதுமானதா என்பது ;

(2) வட்டார வேறுபாடுகள் பொருளாதார ஏற்றதாழ்வுகளைக் குறைத்தல்;

(3) அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லியுள்ளவாறு நாட்டிற்குள் தங்குதடையின்றி வர்த்தகத்தை நடத்துவதற்கு உத்தரவாதமளித்தல் ;

(4) அரசுக்கு மட்டுமல்லாது மொத்தத்தில் சமுதாயத்திற்கு தற்போதுள்ள நிதி வாயில்களை உரிய அளவுக்கு பயன்படுத்திக் கொள்வதை உறுதி செய்தல் ;

(5) வரியை விதித்து சிறந்த முறையில் அதனை வசூலித்து திறம்பட நிருவகிப்பதை உறுதி செய்தல்.

மேற்சொன்ன நிபந்தனைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் வரிவிதிப்பின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கூட்டாட்சி முறையில் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஏற்பாட்டை வைத்துக் கொள்வது மிகவும் கடினமாகும். அத்தகைய ஓர் ஏற்பாடு மிகச் சிறப்பானதாக கருதினாலும்கூட அதனை எய்துவது அநேகமாக சாத்தியம் அல்ல. நடைமுறையில் மேற்சொன்ன கூறுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலையில் விலகிச் செல்வதாக உள்ளன ; இந்நிலையில் ஓர் வழிமுறை வகுக்க வேண்டியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியபோது நிலவிய சூழ்நிலைகள் அரசியலமைப்புச் சட்டத்தை ஆக்கியோர்களுக்கு தற்போது செயலில் உள்ள நிதிவாயில் களைப் பகிர்ந்து கொள்வதற்கான கோட்பாடு களை வகுக்க உதவியிருக்கலாம். வரி விதிப்பின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் கூட்டாட்சி முறையில் பகிர்ந்து கொள்ளும் அத்தகைய ஓர் ஏற்பாடு தொடர்ந்து முழு நிறைவானதாகவும், எல்லா காலங்களுக்கும் ஏற்ற சிறப்பான முறையாகவும் இருக்குமென்பது அதன் பொருளல்ல. அத்தகைய கூட்டாட்சி வரி வருமான பகிர்வு முறை ஏற்பாடு காலத்திற்கு ஒவ்வாததாகி விட்டதையும் அதனை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்பதையும் நம்முடைய முந்தைய அனுபவம் தெளிவுபடுத்தியுள்ளது. மேற்சொன்ன கருத்தினைத் தெளிவுப்படுத்தும் பொருட்டு, தற்போதைய வரி விதிப்பு முறை மேற்சொன்ன கூட்டாட்சி வரி வருவாய்ப் பகிர்வு முறையின் நோக்கங்களை இதுவரை நிறைவு செய்துள்ளதா என்பதை நாம் சுருக்கமாகப் பரிசீலனை செய்வோம்.

மாநிலங்களுக்குக் கிடைக்கிற வருமானம் போதுமானதாக உள்ளதா இல்லையா என்கிற பிரச்சனையைப் பொறுத்தவரையில், மாநில

அரசுகள் மக்களுடன் மிக நெருக்கமாக தொடர்பு வைத்துள்ளன என்பதும், மக்களுக்கு கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி செய்து கொடுத்தல், சட்டம்-ஒழுங்கினைப் பராமரித்தல், மாவட்ட நிருவாகம் முதலிய பணிப் பொறுப்புகள் அவற்றிற்கு உள்ளன என்பதும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். மத்திய அரசிடம் விடப்பட்டுள்ள துறைகளைக் காட்டிலும், மேற்சொன்ன துறைகளில் மக்களின் எதிர்பார்ப்பு நாளுக்குநாள் பெருகி வருகிறது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். தகவல் தொடர்பு, பாதுகாப்பு முதலியவற்றின் முக்கியத்துவத்தை மறக்காமலேயே மாநில அரசிடம் விடப்பட்டுள்ள பணிகளின் தேவை கூடவும் குறையவும் செய்யலாம் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது. மக்களின் எதிர்பார்ப்பு வளர்ந்து வருகிற சூழ்நிலையில், மாநில அரசுகளுக்கு இருக்கிற நிதி வாயில்கள் மிகவும் குறைவான வருமானம் தரக்கூடியதாக உள்ளன என்கிற உண்மையை மாநில அரசுகள் பெரிதும் உணர்ந்து கொண்டுள்ளன. ஆகவே, நிதி வாயில்கள் போதுமானதாக உள்ளதா என்பதை பரிசீலனை செய்ததில், அதிக வருவாய் நீக்குப் போக்குள்ள பணிகளை மிகுதியாகக் கொண்ட மாநிலங்களுக்கு குறைந்த வருமான நீக்குப் போக்கால் அந்த மாநிலத்தை இக்கட்டான நிலைக்குக் கொண்டுபோய் நிறுத்தி விட்டிருப்பது எளிதில் தெரியவரும். இதன் காரணமாக, மாநில அரசு மத்திய அரசை நம்பியிருப்பது அதிகரித்துள்ளது ; கூட்டாட்சிக் குடியரசில் இந்த விரும்பத்தகாத போக்கினைத் திருத்த வேண்டியது அவசியமாகும்.

2. யாதொரு கூட்டாட்சி அமைப்பில் வரி வருமானப் பகிர்வு முறை குறித்த மற்றொரு முக்கிய கோட்பாடானது வட்டார ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதையும், மாநிலங்களின் சீரான வளர்ச்சியினையும் உறுதி செய்வதாகும். நம்முடைய முந்தைய அனுபவத்தின்படி, தற்போதுள்ள பகிர்வு முறை உண்மையில் இந்நோக்கத்தை எய்துவதாக இல்லை என்பது தெரியவரும். இதற்கான காரணங்கள் தனியாக விளக்கப்படும். 1974–75 முதல் 1980–81 வரையிலான கால அளவில், நாடு முழுவதும் தனிநபர் வருமான விகிதாச்சாரத்துடன் ஒப்பிடுகையில் மாநிலத்தின் தனிநபர் வருமானமானது தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஏறக்குறைய தேக்க நிலையிலேயே இருந்துள்ளது என்பது 1-ம் அட்டவணையிலிருந்து தெரியவரும். அதே சமயம் பஞ்சாப் மாநிலத்தின் தனிநபர் வருமான விகிதமானது 150 சதவீதத்திலிருந்து தோராயமாக 200 சதவீதத்திற்கும், அரியானா மாநிலத்தின் தனிநபர் வருமான விகிதமானது 140 சதவீதத்திலிருந்து தோராயமாக 165 சதவீதத்திற்கும் உயர்ந்துள்ளது. உத்திரப் பிரதேசம் போன்ற பின்தங்கிய மாநிலத்திலும்கூட தனிநபர் வருமான விகிதமானது 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக உயர்ந்துள்ளது. தற்போதைய முறையில் வட்டார ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கு வாய்ப்போ அல்லது அது குறித்துப் போதிய அளவுக்கு கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதற்குப் பரிந்துரைக்கவும் இல்லையென்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இந்த வகையில் பெரிதும் பாதிக்கப்படுகிற மாநிலங்கள் நடுத்தர வருமானமுள்ள மாநிலங்களாகும் ; அவ்வாறு பாதிக்கப்படக்கூடிய மாநிலங்கள் தங்களுடைய வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் ஊக்கம் குறைந்து காணப்படுகின்றன. பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்கள், மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறும் நிலையை ஏற்கெனவே கடந்து விட்டது ; அம்மாநிலங்கள் தங்களுடைய நிதி வளத்தை மேலும் பெருக்கிக் கொண்டுள்ளன. மேற்சொன்ன பகிர்வுமுறை வருமான வசதி குறைவாக உள்ள மாநிலங்கள் சிலவற்றிற்கு நன்மை அளித்திருக்கலாம் ; ஆனால், இந்த நன்மைக்கூட சொற்பம்தான் என்பதை உத்திர பிரதேச மாநிலத்தைப் பொறுத்தவரையில் அறியலாம். தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில், நிதிப் பங்களவை கொண்டிருக்கக் கூடிய முற்போக்கு தன்மை வாய்ந்த கருத்து எதனையும் நிதிக் குழு கடந்த காலத்தில் கருத்தில் கொள்ளவில்லை என்பது நன்கு தெரிகிறது.

3. அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி கட்டுப்பாடற்ற முறையில் வர்த்தகம் நடைபெற வேண்டும் என்பதைப் பொறுத்த மட்டில், வர்த்தக உரிமையைப் பாதிக்காத வகையில் அனைத்து வரிகளை விதிப்பதற்கான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கே பிரித்துக் கொடுப்பது சாலச் சிறந்ததென்று நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

4. இந்தியா போன்ற பரந்த நாட்டில் பன் மாநில வர்த்தகம் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை கூட்டாட்சி முறையிலான வரி விதிப்புக் கொள்கை மறக்கலாகாது. மேலும் வரி விதிப்பு பற்றி தனித்தனி அணுகு முறையால் இது பாதிக்கப்படுமென்றும் தற்போதுள்ள வரிகள் பலவற்றைப் பொறுத்தமட்டில், வரி விதிப்பு அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுமாயின், அது நிதி வாயில்களை உரிய அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை உருவாகும். இந்தியா போன்ற பரந்த பெரிய நாட்டில், பொருள்களின் தேவையும், வழங்கலும் ஒரு பகுதியில் அதிகமாகவும் மறுபகுதியில் குறைவாகவும் முரண்பட்ட நிலையில் இருப்பதால் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகம் தொடர்பான வரிகளை மத்திய அரசுப் பொறுப்பின்கீழ் கொண்டு வந்தால் தான் நிதிவாயில்களை உரிய அளவிற்குப் பயன் படுத்திக் கொள்ள இயலும் என்றும் கருதப்படுகிறது போலும். இக்கருத்தை, மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது என்றும், உரிய அளவிற்கு நிதி வாயில்களைப் பயன்படுத்திக் கொள்வதைப் பாதிக்காத வகையில் எவற்றையெல்லாம் மாநில அரசுகளின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரவேண்டுமென்பதைத்

தெளிவாகக் குறிப்பிட திட்டவட்டமான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருதுகிறோம். அது, சில கணக்குத் தலைப்புகளைப் பொறுத்தமட்டில் மாநில அரசு சிறந்த பயனுள்ள வரி வசூல் நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் இந்த சிறு மாற்றத்தையும் கூட விட்டுக் கொடுக்கலாம் என்று நாங்கள் இங்கு வலியுறுத்திக் கூறுகிறோம். இவை குறித்து பின்னர் விரிவாக ஆய்வு செய்யப்படும். இதற்கிடையில் நாம், அரசியலமைப்புச் சட்டத்தின் 268, 269, 270ஆம் பிரிவுகளில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 268ஆம் பிரிவு, மத்திய அரசு விதிக்கக் கூடிய தீர்வைகள் குறித்தும், அவை வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டியது குறித்தும் குறிப்பிடுகிறது. இதில், முத்திரைத் தாள் தீர்வைகள், மருந்து, ஒப்பனைப் பொருகளுக்கான ஆயத் தீர்வைகள் போன்ற இனங்கள் அடங்கும். இந்தத் தீர்வைகள், பன் மாநிலங்களுக்கிடையே நடைபெறும் பற்று வரவுகளின் ஒரு பகுதியாக அதிக அளவுக்கு அமையாது என்பது யாவரும் அறிந்ததே ஆகும். இவற்றைப் பொறுத்த மட்டில், மாநில அரசுகளே வரி விதித்து வசூலித்து பிரித்துக் கொடுக்கலாம் என்ற நிலையைக் கொண்டு வந்தால், வரி வீதங்கள் மாறுவதால் நிதிவாயில்கள் உரிய அளவிற்குப் பயன்படுத்திக் கொள்வது, பாதிக்கப்படக் கூடும் என்று யாரும் கூற மாட்டார்கள். அதற்கு மாறாக மாநில அரசுகள், அவற்றின். வளர்ச்சிப் பணிகளுக்காக கூடுதலாக நிதியை திரட்டிக் கொள்ள இது மேலும் அதிக உரிமையைக் கொடுக்கும். இந்த தீர்வைகளை, 268ஆம் பிரிவின்கீழ் சேர்க்கப்படுவதில் நியாயம் எதுவும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. இவற்றை, மாநில அரசுகளே விதித்துக் கொள்ள நேரடியாகவே இவற்றைப் பிரித்துக் கொடுக்கலாம்.

5. மத்திய அரசு விதித்து வசூலித்து, அதன் வருவாயை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கக் கூடிய வரிகள் குறித்து 269ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. வேளாண்மை நிலம் நீங்கலான சொத்துக்களின் வாரிசுரிமை பொறுத்த மட்டிலான தீர்வைகள், வேளாண்மை நிலம் நீங்கலான ஏனையவற்றைப் பொறுத்த மட்டில் உள்ள சொத்துரிமை மாற்றத் தீர்வை (எஸ்டேட் தீர்வை) ஆகியவற்றை விதிக்கும் அதிகாரத்தையும் முன் பாராவில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக, மாநிலங்களுக்கே பிரித்துக் கொடுக்கப்படலாம் என்று நாங்கள் கருதுகிறோம். ரயில், கப்பல் அல்லது விமானம் மூலம் கொண்டு செல்லப்படும் பொருட்கள், ஏற்றிச் செல்லப்படும் பயணிகளுக்கான இறுதி முனை வரிகள், பத்திரிகைக் காகிதம் விற்பனை அல்லது கொள்முதலுக்கான வரிகள்; அதில் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கான வரிகள், பன் மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தில் இடம்பெறும் பொருட்களின் விற்பனை அல்லது கொள்முதலுக்கான வரிகள் ஆகிய அனைத்தையும் 268ஆம் பிரிவின் வரம்பிற்குள் கொண்டு வரலாம்.

6. வரி, நிர்வாகத் திறன், வரி வசூல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், வரித் தொகையை பயன்படுத்தும் அதிகாரம் பெற்றிருக்கும் அதிகார மன்றமே வரி நிர்வாகப் பணியையும், வரி வசூல் பணியையும் மேற்கொண்டால் சிறப்பாக இருக்குமென்பது எங்கள் கருத்தாகும். ஓர் அதிகார மன்றம் வரி நிர்வாகப் பணியையும், வரி வசூல் பணியையும் கவனித்து வந்து, மற்றோர் அதிகார மன்றம் அந்த வரித் தொகையைப் பயன்படுத்த வேண்டியிருக்குமாயின் இதில் பணித்திறன் கணிசமான அளவிற்குக் குறையும் என்று நாங்கள் கருதுகிறோம். இருந்தபோதிலும், இத்தகைய கருத்தினை வலியுறுத்துவதற்கு மறுக்க முடியாத சான்று கொடுப்பது எளிதானதாக இல்லாமல் இருக்கலாம், ஆனாலும், இது குறித்து சுட்டிக்காட்ட பல அறிகுறிகள் உள்ளன. கடந்த காலத்தில், வருமான வரியைப் பொறுத்த மட்டில் அளித்த மத்திய அரசு இந்த மனப்போக்கினைக் காட்டி வருகிறது. நமக்கு சட்டெனத் தோன்றுகிற எடுத்துக்காட்டு, மொத்த வருமான வரித் தொகையில் 90 சதவீதம் மாநில அரசுகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. அதே சமயம், கூடுதல் மேல்வரி, அல்லது வருமான வரி வீதங்களின் உயர்வினால் கிடைக்கும் தொகையை மத்திய அரசே முழுவதும் வைத்துக் கொள்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள 3ஆம் அட்டவணையை ஒருவர் ஆய்வு செய்தாலே அவரும் இதே முடிவிற்குத்தான் வருவார். 1973–74 முதல் 1981–82 வரையான கால அளவில், விற்பனை வரி (மாநில அரசு நிர்வகித்து, வைத்துக் கொள்வது) சுங்கத் தீர்வை (மத்திய அரசு நிர்வகித்து, வைத்துக் கொள்வது) ஆகிய இரண்டின் அதிகரிப்பு, 300 சதவீதத்திற்குமேல் இருந்தது என்பதை இது காட்டுகிறது; ஆனால், ஆயத் தீர்வையின் அதிகரிப்பு (இதனை மத்திய அரசு வசூலித்து, குறிப்பிட்ட நிதிக் குழு பரிந்துரைக்கிற முறைக்கேற்ப) 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. இதே கால அளவில் 180 சதவீதமாக மட்டுமே இருந்தது என்பதை இது காட்டுகிறது. ஆனால், சுங்கவரியின் அதிகரிப்பு 300 சதவீதத்திற்கு மேல் இருந்தது. ஒருபுறம் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு மாறாக இங்கு அப்பொருட்களின் உற்பத்தி அதிகரித்து இருக்கும் நிலையின் அடிப்படையிலும், மற்றொருபுறம் தொழில் வளர்ச்சியின் காரணமாக இந்த இரண்டு வரிகளும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய அளவிற்காவது அதிகரித்திருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும் இதனை ஆய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

வருமான வரியை உயர் அளவில் மாநிலங்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க வேண்டியுள்ளதால், வருமான வரியைப் பொறுத்தமட்டில், இத்தகைய அறிகுறி தெளிவாகத் தென்படுகிறது. இதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி 100 சதவீதத்திற்கும் குறைவே. அதே சமயம், வருமான வரி மீதான கூடுதல் மேல்வரி 150 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. இயன்ற அளவிற்கு ஒப்பிட்டு பார்க்கப்பட்ட மேற்படி தகவலின் பேரில் ஒப்பிடத்தக்க வரிகளை ஒப்பிட்டுப் பார்க்க நாங்கள் முயன்றுள்ளோம். அவ்வப்போது கூடவும் குறையவும் செய்கிற பல்வேறு வரிகளின் வீதங்கள் வேறுபட்டு இருப்பதால், இவற்றை ஒப்பிட்டுக் காண வேண்டியுள்ளது. இருப்பினும், தொழில் உற்பத்தி, வணிகம் தொடர்பான வரிகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டியவை ஆகும். எனவே, அவை ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன. அதேபோல வருமானம் தொடர்பான வரிகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டியவை ஆகும். எனவே, அவை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன. வரி நிருவாகத் திறனானது வரி வருவாயை எந்த அதிகார மன்றம் பயன்படுத்தப் போகிறது என்பதற்கு மிகவும் தொடர்புடையதாக இருக்கிறது என்பது மேற்சொன்ன விவாதத்திலிருந்து தெளிவாகத் தெரிய வரும். ஆகையால், இந்நாள் வரை அரசியலமைப்புச் சட்டத்தின் 268, 269ஆம் பிரிவுகளின்கீழ் சேர்க்கப்பட்டு வந்துள்ள வரிகளை விதித்து அது தொடர்பான நிருவாகப் பணிகளைக் கவனிக்க வரி நிருவாகப் பணி நலனை முன்னிட்டு மாநில அரசுகளையே படிப்படியாக அனுமதிப்பது நலமாக இருக்கும்.

இச்சூழ்நிலையில், வேறொரு கருத்தையும் தெரிவிக்கலாம். 269ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள எட்டு வரிகளில், சிலவரிகள் மட்டுமே விதிக்கப்படுகின்றன. ஏனையவை விதிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக, இந்த விதிக்கப்படாத வரிகளிலிருந்து மாநிலங்களுக்கு வருவாய் கிடைப்பதில்லை. நிதிக்குழு, இந்த வரிகளை நன்கு ஆய்வு செய்த பிறகு, நிருவாக இடர்ப்பாடு, குறைந்த வருவாய் தற்போதைய பொருளாதார சூழ்நிலை ஆகிய காரணங்களினால், இதில் சில வரிகள் விதிக்கப்பட முடியவில்லையென்ற முடிவிற்கு வந்ததாகத் தெரிகிறது. நிதிக் குழுவின் கருத்து என்னவாக இருந்த போதிலும், 269ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள சில வரிகள் விதிக்கப்படாததால், மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காமல் போகும் என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும். ஆகையால், 269ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள சில வரிகளை விதிக்காததற்குப் பதிலாக ஒரு கணிசமான தொகையை மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுக்க வேண்டுமென அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

அதிக அளவிற்கு வருவாய் பெறவும், அத்தகைய நிதிவாயில்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், இதுவரை விதிக்கப்படாத வரிகளை மத்திய அரசு முழு அளவிற்கு இனி விதித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நாங்களும் கருத்துத் தெரிவிக்கிறோம்.

சுருங்கக்கூறின், கூட்டாட்சி முறை வரி விதிப்பில் முக்கியமான 5 கோட்பாடுகள் மனதில் இருந்தபோதிலும்கூட, தற்போதுள்ள ஏற்பாடுகள் அந்த நோக்கங்களை நன்கு நிறைவு செய்யவில்லையென்று தெரிய வருவதோடு, சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது என்பதையும் வலியுறுத்திக் கூறலாம். 268ஆம் பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள வரிகளை, மாநில அரசே விதித்து நிர்வகிக்க விட்டு விடலாம் என்றும் வலியுறுத்திக் கூறலாம். 269ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய சில வரிகளை அதாவது வேளாண்மை நிலமல்லாத சொத்துக்களின் வாரிசு உரிமைக்கான வரிகள், வேளாண்மை நிலமல்லாத சொத்து குறித்த எஸ்டேட்டுத் தீர்வை ஆகியவற்றை விதிப்பதற்கான அதிகாரங்களை மாநில அரசுக்கு பிரித்துக் கொடுக்கலாம். எவ்வாறாயினும், இவற்றையெல்லாம் மாநில அரசு பயன்படுத்தி வருகிறது. ஆகையால், மத்திய அரசுக்கு நிகர வருவாய் இழப்பு எதுவும் இருக்காது. 269ஆம் பிரிவின்கீழ் இப்போது வரக்கூடிய ஏனைய வரிகள் அனைத்தும் 268ஆம் பிரிவின் கீழ் கொண்டுவரப்படலாம். பங்கு வாணிபம் மீதான வரிகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கலாம். இதனாலும், மத்திய அரசின் வருவாய் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது, வருமானவரி, அதன்மீதான கூடுதல் மேல்வரி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், அவற்றை 269ஆம் பிரிவின் வரம்பிற்குள் கொண்டுவரலாம். வட்டார ஏற்றத் தாழ்வுகளை சரி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை இதுவும் பாதிக்காது. மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 85 சதவீதம் கூட்டுநிறுவன வரிகள். சுங்கத் தீர்வை, மத்திய ஆயத் தீர்வைகள் மூலம் கிடைப்பதால், வரி விதிப்பு அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று இப்போது தெரிவித்துள்ள திட்டம். வட்டார ஏற்றத்தாழ்வு-களைச் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது மத்திய அரசின் நிதி நிலைமையை பெரிதும் பாதிக்காது. அதே சமயம், மாநில அரசுகள் வரி வருவாய் வாயில்களை திரட்டிக் கொள்ள இது வாய்ப்பளிக்கும். அதோடு, மாநில அரசுகளுக்கு கூடுதலாக சில வருவாய் வாயில்களையும் இது ஈட்டித்தரும். ஆனால், இப்போது கருத்து தெரிவித்துள்ள அதிகாரங்களை அது இடைக்கால ஏற்பாடாயினும் மாநில அரசுகளுக்கு நிச்சயமாகக் கொடுக்கப்பட

வேண்டும். அப்போதுதான், அரசியலமைப்பு சட்டப்படி அவற்றிற்குள்ள பொறுப்புகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற முடியும். ஏனைய வரிகளைப் பங்கிட்டுக் கொள்வதைப் பொறுத்த மட்டில், ஆரம்பத்தில் கூட்டுநிறுவன வரி வருமான வரியில் சேர்க்கப்பட்டிருந்தது என்பதை இங்குக் குறிப்பிடலாம். 1959ஆம் ஆண்டு நிதிச் சட்டம் இதனை சேர்க்காமல் விட்டு விட்டது. இதனால் அரசியலமைப்புச் சட்டப்படி மாநில அரசுகளுக்கு பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய வருவாய் அளவு குறைந்து விட்டது. கூட்டு நிறுவன வரி இப்போது முக்கியமான வரி வருவாயாக ஆகிவிட்டது. இதில், மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பங்கு மறுக்கப்பட்டு வருகிறது. ஆகையால், கூட்டு நிறுவன வரியும், வருமான வரி மீதான மேல்வரியும் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட வேண்டும்.

கூட்டு நிறுவன வரி, வருமான வரி மீதான மேல்வரி ஆகியவையும் பிரித்துக் கொடுக்கப் பட வேண்டுமென்பதும், வருமான வரிக்கு இருப்பது போல சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு அவை பிரித்து ஒதுக்கப்பட வேண்டுமென்பதும் நம்முடைய கருத்தாகும்.

அட்டவணை 1.

மாநில தனி நபர் நிகர வருமானம்.

	1974 மற்றும் 1975	1975 மற்றும் 1976	1976 மற்றும் 1977	1977 மற்றும் 1978	1978 மற்றும் 1979	1979 மற்றும் 1980	1980 மற்றும் 1981
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
அரியானா ..	1,408	1,514	1,761	1,935	1,990	1,923	2,335
மகாராட்டிரம் ..	1,435	1,455	1,535	1,677	1,797	2,021	2,277
பஞ்சாப் ..	1,585	1,688	2,050	3,217	2,382	2,611	2,768
தமிழ்நாடு ..	964	997	1,066	1,203	1,225	1,274	1,269
அனைத்து இந்தியா	1,006	1,024	1,082	1,198	1,250	1,316	1,537
உத்திரப்பிரதேசம்	740	727	819	896	894	962	1,272
பீகார் ..	706	669	716	759	791	795	870
மத்தியப்பிரதேசம்.	525	790	807	951	927	877	1,177
ஒரிசா	780	834	797	912	1,046	931	1,147

அட்டவணை 2.

மத்திய அரசின் வரி வருவாயையும் அதன் வளர்ச்சிப் போக்கினையும் காட்டும் விவர அட்டவணை.

(ரூபாய் கோடியில்.)

(1)	1973–74. (2)	1974–75. (3)	1975–76. (4)	1976–77. (5)	1977–78. (6)	1978–79. (7)	1979–80. (8)	1980–81. (9)	1981–82. (10)
1 வருமான வரி (மேல் வரி உட்பட) ..	7,45.16	8,74.41	12,14.36	11,94.38	10,02.02	11,77.39	13,40.31	15,06.39	14,75.50
வளர்ச்சி சதவீதம்		17.34	38.87	(—)1.64	(—)16.10	17.50	13.83	12.39	(—)2.05
2 வருமான வரி மீதான மேல் வரி (மத்திய அரசு சிறப்பு கூடுதல்)	41.96	47.65	62.69	63.53	74.77	1,15.92	1,83.61	1,22.42	1,07,96
வளர்ச்சி சதவீதம்		13.56	31.56	1.33	17.69	55.03	58.39	(—)33.32	(—)11.81
3 வருமான வரி (மேல் வரி நீங்கலாக) ..	7,03.20	8,26.76	11,51.67	11.30.85	9,27.25	10,61.47	11,56.70	13.83.97	13,67.54
வளர்ச்சி சதவீதம்		17.57	39.29	(—)1.80	(+)18.00	14.47	8.97	19.64	(—)1.18
4 கூட்டு நிறுவன வரி	5,82.60	7,09.48	8,61.70	9,84.23	12,20.77	12,51.47	13,91.90	13,10.79	19,69,97
வளர்ச்சி சதவீதம்		21.77	21.45	14.21	24.03	2.51	11.22	(—)5.82	50.28
5 சுங்கவரி	9,96.43	13,32.90	14,19.40	15,53.70	18,24.10	24,48.74	29,24.16	34,09.28	43,00.36
வளர்ச்சி சதவீதம்		33.76	6.48	9.46	17.40	34.24	19.41	16.59	26.13
6 மத்திய ஆயத் தீர்வை	26,02.13	32,30.52	38,44.78	42,21.45	44,47.51	53,41.95	60,11.09	65,00.02	74,20.74
வளர்ச்சி சதவீதம்		24.14	19.01	9.79	5.35	20.11	12.52	8.13	14.16
7 மாநில விற்பனை வரி—									
விற்பனை வரி	1,32.25	1,88.00	2,09.00	2,29.00	2.42 00	2,94.00	3,25.00	4,57.00	5,44.00
வளர்ச்சி சதவீதம்		42.16	11.17	9.57	5.68	21.49	10.55	40.62	19.04
8 விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வையில் தமிழ்நாட்டின் பங்கு.		15.00	13.00	18.00	22.00	22.00	26.00	29.00	35.00
வளர்ச்சி சதவீதம்			(—)13.34	38.47	22.23		18.19	11.54	20.69

அட்டவணை 3.

மத்திய அரசின் வரி வருவாயையும் அதன் வளர்ச்சி நிலையையும் காட்டும் விவர அட்டவணை.

	1973–74.	1974–75.	1975—76.	1976–77.	1977–78.	1978—79.	1979–80.	1980–81.	1981–82.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
								(ரூபாய் கோடியில்)	
வருமான வரி (மேல் வரி உட்பட)	7,45.16	8,74.41	12,14.36	11,94.38	10,02.02	11.77.39	13,40.31	15,06.39	14,75.50
வளர்ச்சி வீதம்		17.34	38.87	(—)1.64	(—)16.10	17.50	13.83	12.39	(—)2.05
வருமான வரி மீதான மேல் வரி (மத்திய அரசு, சிறப்பு கூடுதல்).	41.96	47.65	62.69	63.53	74.77	1,15.92	1.83.61	1,22.42	1,07.96
வளர்ச்சி வீதம்		13.56	31.56	1.33	17.69	55.03	58.39	(—)33.32	(—)11.81
வருமான வரி (மேல்வரி நீங்கலாக) ..	7,03.20	8,26.76	11,51.67	11,30.85	9,27.25	10,61.47	11,56.70	13,83.97	13,67.54
வளர்ச்சி வீதம்		17.57	39.29	(—)1.80	(—)18.00	14.47	8.97	19.64	(—)1.18
கூட்டு நிறுவன வரி	5,82.60	7,09.48	8,61.70	9.84.23	12,20.77	12,51.47	13,91.90	13.10.79	19,69.97
வளர்ச்சி வீதம்		21.77	21.45	14.21	24.03	2.51	11.22	(—)5.82	50.28
சுங்க வரி	9,96.43	13,32.90	14,19.40	15,53.70	18,24.10	24,48.74	29,24.16	34,09.28	43,00.36
வளர்ச்சி வீதம்		33.76	6.48	9.46	17.40	34.24	19.41	16.59	26.13
மத்திய ஆயத் தீர்வை	26,02.13	32,30.52	38,44.78	42,21.45	44,47.51	53,41,95	60,11.09	65,00.02	74,20.74
வளர்ச்சி வீதம்		24.14	19.01	9.79	5.35	20.11	12.52	8.13	14.16

வினா 5.4. :

முந்தைய வினாவில் சொல்லிய நோக்கத்தை அடைய மத்திய அரசுக்கு உள்ள வழிகள் வருமாறு :—

1. (i) வரி விதிப்பின் மூலம் அதிக வரி வருவாய்களைத் திரட்டுதல்.

(ii) ஒரு சில கொள்கைகளின்படி மத்திய நிதித் தொகுப்பிற்கு நிதி வளமுள்ள மாநிலங்களிலிருந்து பணம் பெறுவதன் மூலமாக நிதி திரட்டுதல்.

2. செலவினத்தின்மீது சிறந்த கட்டுப்பாடு வைத்திருத்தல்.

3. பற்றாக்குறையான நிதித்திட்டம் தயாரித்தல்.

நிதிக்குழுக்களும், திட்டக்குழுவும் பரிந்துரைத்தபடி, மாநில அரசுகளுக்குத் தேவையான நிதிப்பங்களவைக் கொடுத்தபிறகு, கடந்த பல்லாண்டுகளாக மத்திய அரசு ரெவின்யூ கணக்கு, பெருவாரியான அளவில் பற்றாக் குறைக் கணக்கையே காட்டுவதாகத் தெரிகிறது.

இந்த பற்றாக் குறையை ஈடு செய்வதில் தேசிய நலனை முன்னிட்டு உமது கருத்துப்படி பற்றாக் குறை நிதிமுறை அவசியமா ? இல்லையெனில், ரெவின்யூ பற்றாக் குறையை ஈடு செய்ய நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் யாவை ?

விடை 5.4. :

இந்தியாவைப் போன்ற பலதரப்பட்ட வேற்றுமைகள் மலிந்த ஒரு நாட்டில், வட்டார ஏற்றத் தாழ்வுகளை குறைப்பது ஒரு முக்கிய நோக்கமாக விளங்க வேண்டும் என்பது முற்றிலும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆயினும், இந்த நோக்கத்தை அடைவதற்கு மத்திய அரசிடம் தற்போதுள்ள அதிகாரமே போதுமானதாகும் என்பதை ஈண்டுச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பின் தங்கிய மாநிலங்கள் மேற்கொள்ளும் நிதி மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க புதிய நிதி வாயில்களைத் திரட்டி அதன் பிறகு பல்வேறு மாநிலங்களிடையே அதனை பகிர்ந்தளிப்பதைக் காட்டிலும், தற்போது அதற்குள்ள நிதி வாயில்களை விவேகத்துடன் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். புதிய நிதி வாயில்களைத் திரட்டி, அதனை பல்வேறு மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கும் முறை ஏற்கனவே நாம் கூறியது போல், தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை மேலும் அவை பெரிதுபடுத்தும். நிதிக் குழுவும் திட்டக் குழுவும், பரிந்துரைத்தபடி, மாநில அரசுகளுக்கு உரிய நிதிப்பங்களவைப் கொடுத்த பிறகும், இந்திய அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுமாயின், இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண, பற்றாக்குறை நிதி முறையும் உகந்த தீர்வாகக் கொள்வதற்கில்லை. ஆனாலும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டப் பணிகளுக்கான மூலதனச் செலவைக் குறைப்பதன் மூலம், மத்திய அரசு முடிந்த வரையில் இந்த நிலைமையை ஓரளவிற்குச் சமாளிக்கலாம். மத்திய அரசு பற்றாக்குறை நிதி முறையை பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று வலியுறுத்துமாயின், அப்போது இதனைத் தொடர்ந்து பணப் புழக்கம் அதிகரிப்பு ஏற்படும் என்பதை அது உணர வேண்டும். அதோடு, அதனால் கணிசமான அளவிற்கு பண வீக்கம் ஏற்பட வழி வகுக்கும். அப்போது மத்திய அரசு அகவிலைப் படித் தவணைகள் பெருகி வருவது குறித்தும், ஐந்தாண்டுத் திட்டத்திற்கான செலவு உயர்வு குறித்தும் அல்லது நிதிக் குழு மானியங்கள், உயர்வதனால் ஏற்படும் செலவு குறித்தும், ஏற்படும் நிதிப் பொறுப்பினை ஏற்க முன் வர வேண்டும்.

பணவீக்கத்தோடு தொடர்பு கொண்டு நிதிப் பங்களவு உயர்த்த படாதபோது, பற்றாக்குறை நிதி முறையால், நிதிக் குழு அளிக்கும் தீர்ப்பினால், கிடைக்கும் நிதியுதவி மறைமுகமாக குறையும் என்பதையும் நாம் வலியுறுத்திக் கூறலாம்.

வினா 5.5. :

நிதிக் குழு திட்டக் குழு வாயிலாக இப்போது பகிர்ந்தளிக்கப்படும் நிதிப் பங்களவுகள் வறுமை மிக்க மாநிலங்களுக்கும், வளமிக்க மாநிலங்களுக்கும் இடையே உள்ள நிதி வாயில்களின் பற்றாக் குறையை ஈடு செய்யும் வகையில் இல்லை என்று கூறலாம். இதனை மனதிற் கொண்டு பின் வருவன குறித்து முடிவெடுக்க என்ன வழிமுறைகளைப் பயன்படுத்தலாம் என்பது குறித்து உங்கள் கருத்துக்களைக் கொடுக்கவும் :

(a) வரித் தொகையைப் பங்கிட்டுக் கொள்ளுதல்.

(b) ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதியுதவி.

(c) திட்டம் சாராப் பணிகளுக்கான நிதியுதவி.

ஒவ்வொரு மாநிலமும் வரி விதிப்பில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளையும் திறமையையும், நிதி நிருவாகத்தில் மேற்கொள்ளும் சிக்கனத்தையும் கருத்தில் கொண்டு, மேலே சொல்லியவை குறித்து முடிவெடுக்க வேண்டும். மேலே சொல்லிய ஒவ்வொரு ஏற்பாடு குறித்தும் என்ன நிறை முக்கியத்துவம் அளிக்கப்படலாம் என்பது பற்றியும் தெரிவிக்கலாம்.

விடை 5.5. :

வளமிக்க, வறுமை மிக்க மாநிலங்களிடையே நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதில், நிதிக் குழுவும், திட்டக் குழுவும் ஆற்றும் பணிகளைப் பற்றி விவரிக்கையில், அவ்விரு அமைப்புகளிடையே உள்ள பணி முறைகளைப் பிரித்துப் பார்த்து உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கூறி வரும் கருத்தெல்லாம் என்னவெனில் குறிப்பிட்ட சட்டப்படி அமையப் பெற்ற அமைப்பாகிய நிதிக் குழு மூலம் நிதி வாயில்கள் மேலும் மேலும் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்பதேயாகும். நிதிக் குழு, நீதிமன்றம் போன்ற ஓர் அமைப்பு என்ற வகையில் பணியாற்றுகிறது. அவ்வாறு அமையப் பெற்ற அதன் தன்மையினாலேயே, அக் குழு அரசியல் காரணங்களுக்கும், வட்டாரப் பற்றுதல்களுக்கும் அப்பாற்பட்டும் செயற்பட வேண்டும். இத்தகைய வட்டார அரசியல் காரணங்கள்தான் மக்களாட்சிக் கூட்டமைப்பு முறையில் ஆணி வேரையே அசைத்து விடுகின்றன. மேற்சொன்ன கருத்திற்கிணங்க நிதி வாயில்கள் நிதிக் குழுவின் மூலமாக மட்டுமே மாற்றப்பட வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்.

நிதிவாயில்களை மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு மாற்றும் தற்போதைய முறையானது பல்வேறு மாநிலங்களுக்கிடையே பொருளாதார நிலையில் காணப்படும் இடைவெளியைத்தான் மேலும் அதிகப்படுத்தியுள்ளது என்ற உண்மையினைக் கூற விழைகிறோம். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவை நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்த மாநிலங்களே. ஏனெனில், அம்மாநிலங்கள் சுய தேவையினைப் பூர்த்தி செய்யும் நிலையினை ஏற்கெனவே அடைந்துவிட்டதென்று தவறான கருத்தின் காரணமாக போதிய நிதி ஆதாரமின்றி அவை இன்னலுற்று வருகின்றன. உண்மையில் மகாராட்டிரம், பஞ்சாப் மாநிலங்கள் ஒரு ''பெரும் உந்துதலினால்'' சுய சார்பு நிலையினை அடைந்தது போன்று ''ஒரு பெரும் உந்துதல்'' தேவைப்படும் ஒரு நிலையில் உள்ளன. இவையும் ஆனல், நிதிவாயில்களை மாற்றும் முறை நடுத்தர வருமானமுள்ள மாநிலங்களைப் பொறுத்தமட்டில் நியாயமாக அமையாத காரணத்தால் இத்தகைய நிலையிலுள்ள பல மாநிலங்கள் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது அழிவுப் பாதையினை நோக்கிப் படிப்படியாகப் போய்க் கொண்டிருக்கின்றன. 1980–85ஆம் ஆண்டில், அட்டவணை A-யின்படி தமிழ்நாட்டிற்கு மத்திய திட்டக் குழுவின் மூலம் மாற்றப்பட்ட வருவாய் வாயில் நபர் வாரியாக 161 ரூபாய் மட்டுமே ஆகும்.

அட்டவணை 'A'.

1980–84ஆம் ஆண்டிற்கு மாற்றப்பட்ட நபர் வாரி தொகை.

	VIIஆம் நிதிக்குழு வாயிலாக (1979–84).	மத்திய திட்டக் குழுவின் வாயிலாக (1980–85).	1980–84 மொத்தம்.
	(1)	(2)	(3)
	(ரூபாய்)		
ஆந்திரப் பிரதேசம்	340	208	548
அசாம் ..	355	..	355
பீகார் ..	393	223	616
குஜராத் ..	361	225	586
அரியானா ..	307	234	541
கருநாடகம் ..	343	184	527
கேரளம் ..	361	202	563
மத்தியப் பிரதேசம்	383	243	626
மகாராட்டிரம் ..	340	174	514
ஒரிசா	449	301	750
பஞ்சாப் ..	310	221	531
இராஜஸ்தான் ..	350	243	593
தமிழ்நாடு ..	365	161	526
உத்திரப்பிரதேசம்	375	218	593
மேற்கு வங்காளம்	360	153	513

ஆயினும், மகாராட்டிரம், பஞ்சாப், அரியானா, மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட நபர்வாரி வருமானம் முறையே ரூ. 174, ரூ. 221, ரூ. 234 ஆகும்.

மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பற்றாக்குறையினை ஈடுசெய்யும் வகையில் மாநிலங்களுக்கிடையே நபர்வாரி வருமானத்தை திட்டகுழு மாற்றவில்லை என்பது தெரியவரும். இதற்கு மாறாக, போதுமான அளவிற்கு முற்போக்காக இல்லாவிடினும் நிதிக்குழு தனது அணுகு முறையில் ஓரளவுக்கு முற்போக்குடன் நடந்துள்ளது. இவற்றின் விளைவு என்னவெனில் வருமானம் குறைவாக உள்ள மாநிலங்கள் தொடர்ந்து வறுமையில் உள்ளன. வருமானம் மிகுந்துள்ள மாநிலங்கள் மேலும் வளம் பெற்ற மாநிலங்களாக உள்ளது.

வறுமைமிக்க மாநிலங்களின் இழப்புப் பொறுப்பில் இது தொடர்பாக பக்கம் 71-யில் கூறியுள்ள அட்டவணையைக் காண்க. இந்த அட்டவணையிலிருந்து தேசிய மொத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது மாநிலத்தின் மொத்த வருமானம் 1974—75ஆம் ஆண்டிலிருந்து 1980—81ஆம் ஆண்டு வரையில் 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

பஞ்சாப் போன்ற நிதிவளம் செறிந்த மாநிலத்தின் வருமானம் இதே கால அளவில் 75 சதவீதமாகவும் அரியானா மாநிலம் 65 சதவீதமாகவும் இருந்தது. அதே சமயம் தமிழ்நாடு போன்ற நடுத்தர வருமானம் உள்ள மாநிலத்தின் வருமானம் சுமார் 30 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. ஆனால், உத்திரப் பிரதேசம், ஒரிசா போன்ற குறைந்த வருமானம் உள்ள மாநிலங்களின் வருமானம் நன்கு உயர்ந்துள்ளது. அவை முறையே சுமார் 60 சதவீதம், 45 சதவீதம் ஆகும். முன் சொன்னவற்றிலிருந்து தற்போதுள்ள நிதி வாயில் மாற்றமுறை மனநிறைவு அளிக்கும் வகையில் அமையவில்லையென்று வெளிப்படையாகத் தெரிகின்றது.

மேலும் நியாயமான முறையில் நிதி வாயில்களை மாற்றுவது குறித்த மாற்றுத் திட்டம் குறித்து நாங்கள் கீழே கோடிட்டுக் காட்டியுள்ளோம். இதுபற்றி விரிவாகக் கூறுவோமெனில் நிதி வாயில்களை மூன்று வெவ்வேறு வகைகளில் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நாங்கள் கருத்துரைக்க விரும்புகின்றோம். அனைத்து வகை வருமானத்தையும் பிரித்துக்கொள்ள ஒரே விதிமுறையைப் பின்பற்றலாம். இவ்வரி வாயில்களின் அடிப்படையில் வேறுபாடு எதுவும் அவசியமென்று நடைமுறையிலுள்ள சில வரிகளுக்குப் பதிலாக மத்திய வரியானது கொண்டுவரப்படுமெனில், ஒரு மாநிலம் நேரடியாக வரி விதித்துப் பெறும் வருவாயினைப் பாதிக்காத வகையில், மத்திய வரியினைப் பகிர்வு செய்வதற்கான விதிமுறை ஏற்பாடு ஒன்றை வகுத்துக் கொள்ளலாம். இதைப் போன்றே, மாநிலத்தின் வளர்ந்து வரும் தேவையினைச் சமாளிப்பதற்காக ஒரே விதிமுறை ஏற்பாடுதான் இருக்க வேண்டும். இதற்குப் புறம்பான வகையில் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி உதவி எதுவும் வழங்கப்படக் கூடாது. பொதுச் சந்தையில் பெறும் கடன் தொகைகளை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொடுப்பதற்கு தனி விதிமுறை ஏற்பாட்டினைப் பின்பற்றலாம். வருமானத்தை பிரித்துக் கொள்வதைப் பொறுத்தமட்டில் பல்வேறு மாநிலங்களுக்கிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை நீக்க எடுத்த முயற்சிகள் அனைத்துமே, தற்போதுள்ள நிதிவாயில்கள் திறமையின்றி, பயனற்ற முறையில் நிருவகிக்கப்படும் நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்திவிட்டன. வருமானத்தைப் பிரித்துக் கொள்வதென்பது மாநிலங்களுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதாகவும் வரி வருமானத்தைத் திறம்பட நிருவகிப்பதை ஊக்குவிப்பதாகவும் அமைய வேண்டும். பின்தங்கிய மாநிலம் என்பதுடன் அந்த மாநில அரசு புதிய நிதி வாயில்களை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளையும் இயற்கை வள வாயில்கள் குறித்து இடர்ப்பாடு இருந்தபோதும் அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டதையும் கருதிப் பார்க்க வேண்டியது உகந்தது என்று நாங்கள் கருத்துரைக்கின்றோம். இதற்கு வகை செய்யும் விதிமுறை ஏற்பாடானது, எளிமையாகவும், பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. எனவே, பல்வேறு காரணக் கூறுகளைக் கருத்தில் எடுத்துக் கொள்வதைவிட, வறுமை, மாநில நிதி வாயில்கள் என்ற இரு கூறுகளைச் சரியாகப் பிரதிபலிக்கும் அடிப்படையில், இந்த விதிமுறை ஏற்பாடு அமைய வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். திட்ட உதவியினை பொறுத்தமட்டில், சரிவிகித விதிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும். ஒட்டு மொத்த வளர்ச்சி வீதத்திற்கேற்ப இருக்கிற மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு 50 சதவீதம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அடுத்து அரசு குறிப்பிட்டுள்ள பின்தங்கிய தன்மை ஆகியவற்றின்படி, பின்தங்கிய தன்மை, இயற்கை வரி வாயில்கள் ஆகியவற்றிற்கேற்ப வரி வருவாயைத் திரட்டிக்கொள்ள மாநில அரசு மேற்கொண்ட முயற்சிக்கு 50 சதவீதம் முக்கியத்துவம் கொடுக்கலாம்.

வினா 5.6. :

யூகோஸ்லேவியா அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளதுபோல, தேசத்தின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள பகுதிகளை விரைந்து வளர்ச்சி பெறச் செய்வதனை உறுதி செய்யும் வகையில் ''சிறப்புக் கூட்டமைப்பு நிதி'' ஒன்று இந்தியாவிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது நிதிக் குழுவும், திட்டக் குழுவும் இந் நோக்கத்தினை நிறைவேற்றத் தகுதியான வகையில் அமையவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா ?

விடை 5.6. :

ஏற்கனவே சுருக்கமாகக் கூறியுள்ளவாறு, குறித்த சட்டப்படி அமையாத திட்டக் குழுவானது 280ஆம் பிரிவின்கீழ் கூறப்பட்டுள்ள சட்டப்படிக்கான குழுவின் பணிகளையும் கணிசமான அளவிற்குச் செய்து வருகின்றது. இதன்

விளைவு என்னவெனில், சட்டப்படிக்கல்லாத விருப்ப மானியங்கள் உரிய அனுமதியின்றி வழங்க பல சமயங்களில் திட்டக்குழு பரிந்துரைப்பதாகத் தோன்றுகிறது. நிதியினைச் சரிவிகித முறையில் பகிர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட மற்றொரு சட்டப்படியமையாத அமைப்பான தேசிய அபிவிருத்திக் குழு அதன் நோக்கங்களை நிறைவேற்ற இயலவில்லை. இதனால்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் 280ஆம் பிரிவில் வகை செய்துள்ளதை வரிகள், மானியம் உட்பட நிதிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக மத்திய, மாநில அரசின் பிரதிநிதிகள் அடங்கிய உயர்நிலை நிதிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும் என்று இந்த அரசு பரிந்துரைத்தது. எனவே, தற்போதுள்ள நிதி திட்டக் குழுக்களின் தற்போதைய செயல்முறைகள் இந்நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் தகுதியாக இல்லையென்று அரசு கருதுகின்றது.

வினா 5.9. :

திட்டத்தில் சேராத செலவினங்களுக்காக நிதிக்குழு ஐந்தாண்டிற்கு ஒருமுறை வருவாய் வாயில்களிலிருந்து நிதி ஒதுக்கிவிட்டு, ஒவ்வோராண்டும் விரிவாக்கத் திட்டத்திற்குரிய நிதித் தேவைகளை திட்டக்குழு மதிப்பீடு செய்ய விட்டு விடுவதால் பெரும் இடர்ப்பாடுகள் ஏற்படுவதை சில வல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஓர் அமைப்பு மூலதன வருவாய் வாயில்களை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் நிதி வாயில்களை (திட்ட, திட்டத்தில் சேராத) மாற்றுவதை ஓர் அமைப்பு கவனிக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். இதனை நிலையான நிதிக்குழு ஒன்றே சிறப்பாகக் கையாள முடியும். ஒட்டுமொத்த முதலீட்டிற்கும் அரிய மூலதன நிதி வாயில்களை நியாயமான முறையில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் முடிவு எடுக்கவும் ஒரு முகவர் அமைப்பாக திட்டக்குழு செயல்படும்.

இந்த அணுகுமுறையினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? ஆமெனில், அதனை விளக்கவும்.

விடை 5.9. :

எட்டாவது நிதிக்குழுவின் அத்தியாயம் I, 13ஆம் பாராவில் (தொகுதி—1), " இந்த நிதிக் குழு, மதிப்பீடு செய்தவாறு திட்டம் சேரா வருவாயில் உள்ள பற்றாக்குறையை ஈடு செய்வதை மட்டும் கவனிப்பதோடு நின்றுவிடக் கூடாதென்று தாம் கருதுவதாக இந்த அரசு கூறியுள்ளது. நாட்டின் மொத்தத் தேவைகளின் அடிப்படையில், மாநிலங்களின் நிதிவாயில் ஏற்றத் தாழ்வுகளை முழுவதையும் ஒட்டு மொத்தமாக நிதிக்குழுச் சேர்த்துப் பார்த்தால்தான் ஒரு மாநிலத்தின் நலன் காக்கப்படும் என்பது எங்கள் கருத்தாகும். ஐந்தாண்டுத் திட்டத்தில் சேராத, பணிகள், திட்டப் பணிகள் இவற்றின் முழுத் தேவையினை நிதிக்குழு கருதிப் பார்த்தால்தான் இதனைச் செய்ய இயலும் ''. இந் நிலையில் பார்த்தால் நிதி வாயில்கள் மாற்றம் அனைத்தையும் வரவு--செலவு முழுவதையும் (திட்டத்தில் சேர்ந்தது, திட்டத்தில் சேராதது). ஒரே ஒரு குழு, அதாவது நிதிக்குழு மட்டுமே கவனித்து வர வேண்டும். என்று சொல்வது முற்றிலும் பொருத்தமானதேயாகும் நமக்குக் கிடைக்கிற நிதிவாயில்களை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் திட்டக்குழு தம் பணியினை செய்திட வேண்டும்.

பல ஆண்டுகளாக மத்தியத் திட்டக் குழுவின் தன்னாட்சி நிலை உருக்குலைந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது. மத்திய திட்டக் குழுவானது இந்திய அரசின் கைப்பாவையாக மாறுவதற்கு நீண்ட நாளாகாது. ஆனால், அதே சமயத்தில் நிதிக் குழுவானது அரசியலமைப்புச் சட்டப்படி உருவான அமைப்பாகும். எனவே அரசியல் சட்டப்படி நடுநிலையில் நின்று இக்குழு தனது கடமைகளைச் செவ்வனே செய்யும் என எதிர் பார்க்கலாம். மத்திய திட்டக் குழு, வழங்கு கடன் குழு, செலவுக் குழு போன்ற அமைப்புகள் போலல்லாமல் நிதிக் குழுவே நிதிவாயில்கள் பகிர்ந்தளிக்கும் பொறுப்பு முழுவதையும் மேற்கொள்ளலாம் என்று முடிவுக்கு வருவது விரும்பத்தக்கது.

வினா 5.10 :

பின்னர் அமைக்கப்பட்ட நிதிக் குழுக்களின் ஆலோசனையின் பேரில் அல்லது வேறு வகையில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு சட்டதிட்டப்படிக்கான அதிகாரங்களையும் விருப்புரிமை அதிகாரங்களையும் மாற்றியதால், ஒருவகையில் தொகையைப் பயனுள்ள வகையில் செலவிடுவதும் செலவுச் சிக்கனம் ஏற்படுவதும் எந்த அளவுக்குக் காணப்பட்டன என்றும், மற்றொரு வகையில் மாநிலங்களுக்கிடையேயான பொதுச் செலவில் ஏற்றத் தாழ்வுகள் எந்த அளவுக்கு குறைந்தன என்றும் நீங்கள் கருதுகிறீர்கள் ?

விடை 5.10 :

நிதிக் குழு பின்பற்றிய முறையாலும் அது முடிவு செய்வதற்கு குறுகிய காலம் ஆவதாலும், தொகையைப் பயனுள்ள வகையில் செலவிடுவதும், செலவுச் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதும் நிதிக் குழுவிற்கு மிகவும் இடர்ப்பாடாக உள்ளது. நிலை நிதிக் குழு அமைக்கப்பட்டாலும்கூட, தொகையைப் பயனுள்ள வகையில் செலவிடவும், செலவுச் சிக்கனத்தைக் கடைப் பிடிக்கவும் நிதிக் குழுவிற்கு உதவும் வகையில் எளிய முறையில் கண்காணிப்பதோ பயனுள்ள வகையில் தணிக்கை செய்வதோ மிகவும் சிரமமாக இருக்கும். மேலும், இது பிற்காலத்தில் மாநில அரசுகளின் அலுவல்களில் அதிகக் குறுக்கீடு ஏற்பட வழி வகுக்கும். ஒருவேளை மாநிலங்

களுக்கு அதிக அளவு சுயாட்சி உரிமை வழங்கும் கொள்கைக்குப் பாதகம் விளைவிப்பதாக அது அமையலாம். மாநில மின் வாரியங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும், ஏனைய அரசுத் துறை நிறுவனங்களுக்கும் அவற்றின் வருமானம் குறித்த சில கோட்பாடுகளை நிர்ணயிப்பதன் மூலமாகவும், தற்போதுள்ள இருப்புகளைப் பராமரிக்கவும் சில கோட்பாடுகளை நிர்ணயிப்பதன் மூலமாகவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நிதிக் குழு தற்போதுகூட அரைகுறையான முயற்சி எடுத்துள்ளது. ஆனால், இந்த முயற்சிகள் நடைமுறைக்கேற்றபடி இல்லை. அனைத்து மாநில அரசுகளின் செலவு, வரவு சேர்ந்த பெருந்தொகை மாநில அரசுகள் விரும்பிய வரையறைப்படி இல்லை. இந்த வரவு--செலவைப் பொறுத்தமட்டில், நிதிக் குழு கடந்த ஆண்டுக் கணக்குகளையே பின்பற்றி அதன்பேரில் திட்டமிடுகிறது. இது அக்கறையற்ற நிதி நிருவாகத்திற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, நிதிக்குழு முக்கியமான வரவு-செலவுகளுக்குச் சில கோட்பாடுகளை வரையறுத்தால் நன்றாக இருக்கும் என்று கருதப்பட்டது. மாநில மொத்த வருமானம், தற்போதுள்ள நிதி வாயில்கள், அவற்றைப் பயன்படுத்தல் வரி விதிப்பு, மக்கள் தொகை, படித்தவர் எண்ணிக்கை முதலியன போன்ற சில பொருத்தமான அம்சங்களின் அடிப்படையில் இத்தகைய கோட்பாடுகளை நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் ஒருவேளை நிதிக் குழு மூலமாக அனைத்து மாநிலங்களுக்கும் நியாயமான ஒரே சீரான செலவுத் தொகை ஒதுக்க இயலும். அதே சமயம், அவற்றின் சொந்த நிதி வாயில்களை அதிகரிக்கும் வகையில் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும்படி அவற்றைக் கட்டாயப்படுத்த இயலும்.

வினா 5.11 :

நிதி வாயில்களை மாற்றும் தற்போதுள்ள அமைப்பில் நிதி ஒதுக்க முறைகேடுகள், பற்றாக் குறையான வருமானம் இருப்பதாக மிகைப் படுத்திக் கூறல், விளம்பர நடவடிக்கைகளைப் பின்பற்றல், ஆகியவற்றினால் வீண்செலவுகளுக்கு வழி வகுக்கும் போக்கு காணப்படுகின்றதென்றும், இதன் காரணமாக வருவாய் இழப்பும் தற்போதுள்ள நிதி வாயில்களுக்குப் பொருந்தாத வகையில் செலவும் ஏற்படுகிறதென்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

இக்கருத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? ஆமெனில், இந்நிலையை மாற்றத் தாங்கள் தெரிவிக்கும் நடைமுறை யாது?

விடை 5.11 :

நிதிவாயில்களை மாற்றுகின்ற தற்போதைய முறை. வருமானப் பற்றாக்குறையை மிகைப்படுத்திக்கூறுகின்ற போக்கை உருவாக்கியிருக்கக்கூடும் என்பது உண்மை. ஆனால், வருமானப் பற்றாக் குறை பற்றிய விவரங்களைத் தக்கவாறு திருத்தி உண்மை நிலையை எடுத்துக்காட்ட நிதிக்குழுக் களிடம் போதிய வசதிகள் உள்ளன.

வீண்செலவு என்கிற குற்றசாட்டைப் பொறுத்த மட்டில் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுதான், அதன் ஆட்சியில், அதன் மக்களின் நலத்திற்கென்று எந்த திட்டங்களைச் செயலாக்க வேண்டுமென்பதை முடிவு செய்யும் நல்ல நீதிபதி என்பதை மீண்டும் வலியுறுத்தலாம். மத்திய அரசோ, ஏனைய மாநில அரசோ சில திட்டங்களை விளம்பரத்திற்காகச் செய்யப் படுபவை என்று குறை கூறுவது சரியல்ல.

அதே சமயம் பயனுள்ள வரி விதிப்பு செய்ய வேண்டிய அவசியத்தை நாம் ஒப்புக்கொள்ளலாம். வருவாயை மாற்றும் விதியில் இந்த அம்சத்திற்கு போதிய முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமாக தமிழ்நாடு போன்ற நிதிவாயில் தட்டுப்பாடாக உள்ள மாநிலங்களுக்கு, அவற்றின் நிதிவாயிலுக்கு ஏற்ப மத்தியவரி விதிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தலாம்.

வினா 5.12.—வரியைப் பகிர்ந்தளிப்பதன் மூலமாக மொத்த நிதிவாயில்களை மாற்ற வேண்டுமென்று ஏழாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்தது. மொத்த வருவாய் மாற்றுத் திட்டத்தில் 275ஆம் பிரிவின்படி உதவி மானியம் வழங்குவதென்பது ஈடுசெய்வதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விரிவாகப் பகிர்ந்தளிப்பது பற்றி தங்கள் கருத்து யாது ?

வினா 5.13.—275ஆம் பிரிவின்படி உதவி மானியம் வழங்குவதற்கு ஏழாம் நிதிக்குழு முன்னுரிமை அடிப்படையில் பின்வரும் கோட்பாடுகளை வரையறுத்துள்ளது :—

(i) வரித்தொகையையும், தீர்வையையும் பிரித்தளித்த பின்னர் ஏற்படும் வரிவருமான பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு முதற்கண் மாநிலங்களுக்கு உதவி மானியம் வழங்கலாம். இவ்வாறு செய்வதால் கமிஷன் விரும்பிய முறையிலும் வருமான மதிப்பீடு அடிப்படையிலும் தற்போதுள்ள பணியளவை வைத்துவர இயலும்.

(ii) மாநில எல்லைகள் எவ்வாறிருப்பினும் நாட்டிலுள்ள சில பணிகளுக்கென்று சில அடிப்படை தேசியக் குறைந்த அளவு தரத்திற்கு உறுதியளிக்க முயலுவதே நோக்கமாக இருப்பதால்

முன்னேற்றமடைந்த மாநிலங்களுக்கும் குறைந்த அளவே முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுக்கு மிடையே உள்ள பல்வேறு நிருவாக சமூகப் பணி களில் காணும் ஏற்றத்தாழ்வுகளை இயன்ற வரையில் குறைக்கும் நோக்கத்துடன் ஒரு திருத்த நடைமுறையாக உதவி மானியம் வழங்கலாம்.

(iii) ஒவ்வொரு மாநிலத்திற்கும் அலாதி யான சூழ்நிலை உருவாவதாலோ தேசிய முக்கியத் துவம் வாய்ந்த காரணத்தினாலோ அவற்றுக்கு அதிகச் செலவு ஏற்படுவதைச் சமாளிக்கும் பொருட்டு அவற்றுக்கு உதவி மானியம் வழங்க லாம். மேலே கூறிய கோட்பாடுகள் அவற்றைச் செயலாக்கும் முறை பற்றி தங்கள் கருத்து யாது ?

விடை 5.12-ம். 5.13 :

இது குறித்து, எட்டம் நிதிக்குழுக் (தொகுதி குறிப்பின்) Iஆம் அத்தியாத்தில் காணும் 10, 11, 15-ம் பாராக்களில் விவாதிக்கப் பட்டுள்ளது. விரிவாக்கூறின், குறைந்தது 90 சத வீதத்தை பிரித்தளிப்பதன் மூலமாக மாற்ற வேண்டும், எஞ்சியதற்கு மட்டுமே உதவி மானியம் வழங்க வேண்டும் என்பது நமது கருத்து. நடுத்தர வருமானமுள்ள மாநிலங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கு மாகையால், வருமானத்தை பிரித்தளித்த பின்னர் நடுத்தர வருமானமுள்ள மாநிலங்களின் நபர் வரியான உபரி வருமானம், வருமானம் அதிக முள்ள மாநிலங்களுடன் ஏறத்தாழ சமமாக இருக்க வேண்டும் என்கிற மற்றொரு கருத்தையும் மனதில் கொள்ள வேண்டும்.

உதவி மானியம் வழங்குவது முதற்கண் தாமா கவே விருப்பப்பட்டு வழங்கப்பட வேண்டும். ஒரு வேளை மத்திய அரசு சில மாநில அரசுகளுக்கு சலுகை அளிக்க அதிக வாய்ப்பினை ஏற்படுத்தும் என்கிற கருத்து நமது தீர்மானத்திற்கு வழிகாட்டி யாக அமைகிறது. ஆகவே, இந்த அம்சத்தை மீண்டும் வலியுறுத்துவது அவசியம். உதவி மானியம் வழங்குவதை இயன்றவரை மிகக் குறைந்த அளவிற்கு நாம் கட்டுப்படுத்த வேண்டு மெனில், வரிகளையும், தீர்வைகளையும் பிரித் தளித்த பின்னர் ஏதேனும் வரிவருமானப் பற்றாக் குறை ஏற்பட்டிருந்தால் அதனை ஈடுசெய்யும் பொருட்டு, உதவி மானியம் வழங்க வேண்டு மென்று நாம் கூற வேண்டியிருக்கும்.

தற்போது பின்பற்றி வரும் வருவாய் பற்றாக் குறை விதிக்குப் பதிலாக வரிவருமானப் பற்றாக் குறை விதியைப் பின்பற்றலாம் என்று நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம்.

எட்டாம் நிதிகுழு முன்பாக, அரசு எடுத்துள்ள முடிவைக்காட்டிலும் இது சற்று வேறுபட்டிருந் தாலும், நிபந்தனைகளில் மாறுபாடு ஏதுமில்லை. நிதிக்குழு, வரி வருமானத்தைப் பிரித்தளிப்பதற் கான விதிமுறையைக் கண்டறிகையில், திட்டச் செலவைக் கருத்தில் கொள்ளாதபடி தடை செய்கின்ற, திட்டக் குழுவிற்கும், நிதிக்குழுவிற்கு மிடையே தற்போதுள்ள இருவேறுபட்ட கருத் தினை, இதுபற்றிய குறிப்பைத் தயாரிக்கையில் கருத்தில்கொள்ள வேண்டியிருந்தது. நாம் பரிந்துரைக்கப்போகும் இத்திட்டத்தில், நிதிக் குழு திட்டத்தில் சேராத தேவைகளை மட்டுமின்றி மாநில அரசுகளின் ஒட்டு மொத்தமான அனைத்துத் திட்ட தேவைகளையும் கருத்தில் கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும். ஆகவே, நிதிக்குழு மாநில அரசுகளின் திட்டத் தேவைகள், திட்டத்தில் சேராத செலவுகளுக்கான தேவைகள், ஏனைய சிறப்புவகைச் செலவு ஆகியவற்றிற்குப் வகை செய்யும் வழிமுறையை வரையறுப்பதற்கு அனைத்து வழிகளையும் கருதிப்பார்க்க வேண்டும். இது மத்திய அரசு பெருமளவிற்கு குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டும் சலுகை அளிக்காமல் இருப்பதை உறுதி செய்யும்.

நிருவாகத் தரத்தை உயர்த்துவதற்கு மானியம் வழங்குவதைப் பொறுத்தமட்டில், இதனை அறவே அகற்ற வேண்டும். நிதிக்குழு மாநில அரசுகளின் திட்டச் செலவு, திட்டத்தில் சேராத செலவு முழுவதையும் நுணுகிக்காண அனுமதிக்கப் பட்டால், நிருவாகத் தரத்தை உயர்த்துவதற் கென்று தனியாக நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இருக்காது.

வினா 5.14 :

மத்திய அரசின் ஏனைய வருவாய்கள் சில வற்றை, அதாவது, சிறப்புக்கடன் பத்திரங்கள் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய், பெட் ரோலியம், நிலக்கரி முதலியவை போன்ற இனங்களின் விலைகளை உயர்த்தியதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றைப் பகிர்ந் தளிக்கத்தக்க நிதிவாயில்களின் தொகுப்பிற்குக் கொண்டுவர வேண்டும் என்று கருத்துத் தெரி விக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வரி விதிக் கப்படாத வருவாய்கள், பகிர்ந்தளிக்கத்தக்க நிதித் தொகுப்பிற்குள் கொண்டுவருவது குறித்துத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எதையேனும் நீங்கள் அறிவீர்களா ? விவரங்களைக் குறிப்பிடுக. வரி விதிக்கத்தக்கத் தொகையில் பகிர்ந்தளிக்கத் தக்கத் தொகுப்பின்கீழ் இந்த வருவாய்களை உரியவாறு கொண்டுவர வேண்டும் என்ற வாதம் உங்களுக்கு மனநிறைவு அளிக்கிறதா ?

விரிவாகப் பதிலளிக்கவும்.

விடை 5.14 :

இம்மாநில அரசு, எட்டாவது நிதி ஆணைக் குழுவிற்கு (தொகுதி I) அளித்த முறையீட்டின் 1ஆம் அத்தியாயத்தின் 26.1, 27ஆம் பாராக் களில் இக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. ஆயினும், சிறப்புக் கடன் பத்திரங்கள் திட்டத்தின்மூலம் கிடைக்கும் வருவாய், பெட்ரோலிய ம், நிலக்கரி முதலியவை போன்ற

இனங்களின் விலையை உயர்த்தியதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றை மத்திய அரசு பகிர்ந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். பின்வரும் காரணங்களால் இது நியாயமானது எனக் கருதுகிறோம்.

சிறப்புக் கடன் பத்திரங்களைப் பொறுத்தவரையில், இதன் மூலம் கிடைக்கும் தொகை எந்த ஒரு வகையிலும் வருமானவரியாக மத்திய அரசுக்கு வந்து சேர வேண்டும். இது மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளத்தக்கதாகும். சாதாரணமாக வருமான வரியை வசூலிக்க வேண்டிய நேரத்தில் மத்திய அரசு அவற்றை வசூலிக்க இயலாததே இதற்குக் காரணமாகும். அதாவது, எந்தக் கறுப்புப் பணத்தின் மீது வருமான வரி செலுத்துவது ஏற்கப்பட்டதோ அந்தக் கறுப்புப் பணத்தை முறைப்படுத்துவதற்காகத்தான் கடன் பத்திரங்கள் போன்றதொரு திட்டம் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. கொள்கையளவில் இதனை வருமான வரி நிலுவை பாக்கிகளாகக் கொள்ள வேண்டும் என்பதுடன், இதனை மாநில அரசுகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். சிறப்புக் கடன் பத்திரங்கள் திட்டம் மட்டுமின்றி கிராமச் சீரமைப்புப் பத்திரங்கள் முதலியவைபோன்ற ஏனைய பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருவாயையும் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

விலைகள் உயர்த்தப்படுவதைப் பொறுத்த வரையில், இதே போன்ற கருத்து அதற்கும் பொருந்தச் செய்யலாம். மத்திய அரசு இந்த நிதிவாயில்களை பெருக்க ஆயத்தீர்வைகளை உயர்த்துவதைத் தடுக்க நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். அத்தகைய ஒரு நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசுக்கு அடிப்படை நோக்கம் ஏதேனும் இருக்குமானால் நடைமுறையை விலைகளை உயர்த்துவதனால் பின்னர் மாநில அரசுக்கு ஏற்படுகின்ற கூடுதல் செலவுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வகை செய்யும் ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும். அத்தகைய விலைவாசி உயர்வுகளால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துறைகள் மின் வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை ஆகியவையாகும். நிதி ஆணைக் குழு இது குறித்து இறுதியாக முடிவு செய்யும்போது மின் வாரியங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் மீது வரையறுக்கப்பட்டுள்ள சில விவரங்களையும் கருத்தில் கொண்டது. ஆயினும், மத்திய அரசு, இடு பொருள்களின் விலையை ஒருமுறை உயர்த்தினால், இந்த கணக்கீடுகள் அனைத்தும் மொத்தத்தில் சீர் குலைந்து விடுகின்றன. இடு பொருள்களின் விலை உயர்வை நுகர்வோர் மீது சுமத்த பொது மக்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுகளுக்கு இயலாது. பெரும்பாலான நேர்வுகளில் அவ்வாறு செய்ய இயலவில்லை. பொருளாதாரத்தின் அனைத்து பிரிவுகளிலும் இந்த விலை உயர்வு ஏற்படுத்தும் பல்வகை விளைவுகளே இதற்கு காரணமாகும். இது தொடர்பாக, 1974–75, 1983–84ஆம் ஆண்டுகளில் நிலக்கரி விலைகள், உலை எண்ணெய் ஆகியவற்றின் விலைகள். சரக்குக் கட்டணங்கள் ஆகியவை திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கடந்த 10 ஆண்டுகளாக ஏற்பட்டுவந்த கூடுதல் நிதிப் பொறுப்பு ரூ. 350 கோடி என்பதையும்,இந்த விலை உயர்வை நுகர்வோருக்கு குறிப்பாக உழவர்கள் மீது சுமத்தினால் பெருமளவில் பணவீக்கம் ஏற்படும் என்பதையும் இது தொடர்பாக, சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இவ்வாறாக, தங்களிடமுள்ள சொற்ப நிதியாதாரங்களைக் கொண்டு, உயர்த்தப்பட்டுள்ள கடன் சுமையை ஏற்க வேண்டியதைத் தவிர மாநில அரசுகளுக்கு வேறு வழியில்லை.

இதே போன்று, அதே கால அளவில் நிலக்கரியின் விலையும் 5 முதல் 6 மடங்கு உயர்ந்துள்ளது. இதனால், மாநில அரசுக்கு ரூ. 60 கோடி கூடுதல் நிதிச் செலவு ஏற்பட்டது (காண்க : அட்டவணை-I). தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதும் போக்குவரத்துத் துறையின் முதுகெலும்பாகவும் சாலைகள் விளங்குவதால் இக் கடன் சுமை முழுவதையும் மாநில அரசுகளே ஏற்க வேண்டியுள்ளது. டீசல் எண்ணெயின் விலை ஏற்றத்தினாலும் ரூ. 215 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டது (கீழேயுள்ள அட்டவணை II-ஐக் காண்க).

மாநில அரசுகளைப் பொறுத்த வரையில், விலைவாசி உயர்வினால் ஏற்பட்டுள்ள கடன் சுமையை நுகர்வோர் மீது சுமத்த இயலாது என்பதும், மாநில அரசுகளிடம் குறைவாகவுள்ள நிதிவாயில்களை இது குறைத்துவிடும் என்பதும் மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது. இது மொத்தத்தில் பொருளாதாரத்தையே பாதிக்கிறது. நிதி ஆணைக் குழு, வரி வருவாய், வரி அல்லாத ஏனைய வருவாய் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு வரி வருவாயைப் பகிர்ந்தளிப்பது குறித்து முடிவு செய்கிறது. வரி அல்லாத ஏனைய வருவாயில் மின்வாரியம், போக்குவரத்துக் கழகங்களின் பங்குத் தொகையும் அடங்கும். இந்த விலை உயர்வு வருவாயைப் பெரும் அளவில் குறைத்து விட்டதுடன் நிதிவாயில்களுக்கும், செலவுக்கும் இடையேயுள்ள இடைவெளியையும் அதிகரித்து விட்டது. எனவே, வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்படுவதை அதிகப்படுத்துவதன் மூலம் இது ஈடு செய்யப்பட வேண்டும்.

அட்டவணை I.

ஆண்டு.	அரசு சாலைகளின் நீளம். (கி. மீட்டரில்)	நிலக்கீல்/மெ.டன். ஐ.எஸ்.டி. வீதங்கள். சிப்பம் செய்யப் பட்டபோது.	நிலக்கீல்/மெ.டன். ஐ.எஸ்.டி. வீதங்கள். மொத்தத்தில்	சராசரி செலவு.	பயன்படுத்தப் பட்ட/ தேவையான நிலக்கீல் (தோராய மாக).	ஐ.எஸ்.டி. வீதங்களில் பயன்படுத்தப் பட்ட நிலக்கீலின் செலவு. (சராசரி இலட்சத்தில்).	1978–79-க்குப் பிறகு திடீர் விலை ஏற்றத்தைக் கருத்தில் கொள்ளாமல் பயன்படுத்தப் பட்ட நிலக்கீலின் செலவு. (ரூபாய் இலட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1974–75	29,248	615	..	..	46,200	2,84.13	2,84.13
1975–76	31,444	1,070	..	..	48,400	5,17.88	5,17.88
1976–77	31,906	1,070	..	..	49,000	4,24.30	5,24.30
1977–78	32,582	1,070	..	..	50,000	5,35.00	5,35.00
1978–79	33,331	1,070	850	960	54,000	5,18.40	5,18.40
					மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 960 சராசரி வீதத்தைப் பின்பற்றி.		
1979–80	33,556	1,622	1,313	1,468	60,000	8,80.80	5,76.00
1980–81	33,960	2,450	2,150	2,300	75,000	17,25.00	7,20.00
1981–82	35,607	2,759	2,762	2,611	90,000	23,49.90	8,64.00
1982–83	36,264	2,851	2,329	2,590	..	24,86.40	9,21.60
1983–84	38,607	2,851	2,329	2,590	98,000	25,38.20	9,40.80
					மொத்தம் ..	1,23,60.00 இலட்சம் (அல்லது) 124 கோடி.	64,02.11 இலட்சம் (அல்லது) 64 கோடி.

மாநில அரசுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவு 124 கோடி—64 கோடி=60 கோடி.
10 ஆண்டுகளில் ரூ. 60 கோடி.

அட்டவணை II.

கடந்த பத்து ஆண்டுகளில் டீசல் விலை ஏற்றத்தின் காரணமாக நிதிவாயில்களில் ஏற்பட்ட பாதிப்பு.

தொடர் எண்.	விலை உயர்வு நாள்.	லிட்டர் ஒன்றுக்கு அதிகரிக்கப்பட்ட விலை (ரூபாயில்.)		கி.மீ. ஒன்றுக்கு அதிகரிக்கப்பட்ட விலை (பைசாவில்.)		கி.மீ. ஒன்றுக்கு அதிகரிப்பு (பைசாவில்.)	சேர்ந்து வந்த அதிகரிப்பு	அடுத்த விலை ஏற்றம் வரை ஓடிய கி.மீ. தூரம். (இலட்சத்தில்)	கூடுதல் செலவு. (ரூபாய் கோடியில்.)
		முதல்	வரை	முதல்	வரை				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1	01— 4—1974	0.86	1.02	25	29	4	4	4,421	1.77
2	01— 8—1975	1.02	1.21	29	35	5	10	2,857	2.86
3	01— 4—1976	1.21	1.36	35	39	4	14	14,309	20.03
4	01— 4—1979	1.36	1.48	39	42	3	17	2,037	3.46
5	17— 8—1979	1.48	1.65	42	45	3	20	5,150	10.30
6	08— 6—1980	1.65	2.27	45	63	18	38	4,177	15.87
7	13— 1—1981	2.27	2.69	63	74	11	49	3,753	18.39
8	11— 7—1981	2.69	3.05	74	84	10	59	13,510	79.71
9	15— 2—1983 .. .. (31— 3—1984 வரையில்)	3.05	3.38	84	93	9	68	9,253	62.92
									2,15.31

வினா 5.15 : பொதுவாகக் கிடைக்கக்கூடிய மொத்த சேமிப்பு, அரசுத் துறை, தனியார் துறை ஆகியவற்றிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளது. அரசுத் துறை திரட்டுகின்ற தொகைகள் மத்திய—மாநில அரசுகளிடையேயும் அவ்வவற்றின் பொது நிறுவனங்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளன.

தற்போது பகிர்ந்தளிக்கப்படுகின்ற முறைகள் திருப்திகரமாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா ?

வினா 5.18 : மாநிலங்களின் நிதிவாயிலும் தாராளமாகக் கடன் வாங்கும் உரிமையும் வீணாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. இதனை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா ? ஆமெனில், வளமான அடிப்படை நிதிக் கோட்பாடுகளைப் பாதிக்காத வகையில் எந்த அளவிற்கு இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த முடியும் ?

வினா 5.20 : தேசிய வளர்ச்சிக் குழு ஏற்பளிக்கக் கூடிய கோட்பாடுகளின் அடிப்படையில், வெவ்வேறு மாநிலங்கள், மத்திய அரசு ஆகியவை கடன் வாங்கும் அளவை நிர்ணயிக்கும் வகையில் ஆஸ்திரேலிய நாட்டு கடன் வழங்கு குழுவைப் போன்று, கடன் வழங்கு குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகள் மட்டுமல்லாமல் தனியார் துறைகள் பொதுமக்கள் வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனை ரிசர்வ் வங்கி தற்போது ஒருங்கிணைக்கிறது.

உங்கள் கருத்தில் இந்திய ரிசர்வ் வங்கியைவிட கடன் வழங்கு குழு ஒரு சிறந்த நிறுவனமாகுமா ? இச் சூழ்நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாட்டை மேம்படுத்துவது குறித்த மாற்று கருத்து ஏதும் உள்ளதா ?

விடை 5.15, 5.18, 5.20.

பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து மாநில அரசு வாங்கும் கடன்.

சென்ற பல ஆண்டுகளாக அரசு நிதியில் பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து கடன் வாங்குவது மிக முக்கியமான பங்கு வகித்து வந்துள்ளது. எனினும், இந்த நிதி வாயில்களின் முக்கியத்துவம் அண்மை ஆண்டுகளில் கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்பது Iஆம் அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. அதே சமயம், பொதுமக்கள் வங்கிகள் முதலியவற்றிடமிருந்து கடன் வாங்குவதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து வாங்கும் கடன் தற்போது பெரும்பாலும் கட்டுப்பட்ட நிலையில் உள்ளது.

பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து கடன் வாங்குவதில் மத்திய அரசின் ஆதிக்கம்.

இதுவரையில், இந்தியாவில் மூலதனம் திரட்டுவது வளர்ச்சி அடையவில்லை. முதலீடு செய்வது ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. பொது மக்களிடமிருந்து சேமிப்புகளைத் திரட்டும் பெரும்பாலான வணிக வங்கிகளும், ஏனைய நிறுவனங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி, பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிலிருந்து பெறும் கடன் முழுவதையும் ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்கிறது. கடன் வழங்கு அமைப்பு, மாநில அரசாக இருந்தாலும் அல்லது நிதி நிறுவனங்களாக இருந்தாலும் அவை மத்திய அரசுக்கு கடன்பட்டிருக்குமானால், பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடனை மத்திய அரசின் அனுமதியின்றி அவை பெற முடியாது. இந்த அனைத்து, அமைப்புகளும் மத்திய அரசுக்குக் கடன் பட்டிருக்கின்றபடியால் இந்திய ரிசர்வ் வங்கி மத்திய அரசின் உத்தரவின்படி மட்டுமே மாநில அரசுக் கடன்களை திரட்டுகிறது அல்லது திட்டக் குழுவின் ஆலோசனையின் பேரிலும் மத்திய நிதி அமைச்சகத்தின் ஆலோசனையின் பேரிலும், இந்திய ரிசர்வ் வங்கி மூலம் பொதுமக்கள் வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடன் வெவ்வேறு மாநிலங்களுக்கிடையே ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-க்குப் பின்னர், இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவின்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுக்கத் தொடங்கியதால், பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடன், இந்திய ரிசர்வ் வங்கி மூலம் வங்கிகளின் வைப்பீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆகவே, மொத்தம் கிடைக்கக்கூடிய கடனில் பெரும் பகுதியை மத்திய அரசு பல ஆண்டுகளாக ஒதுக்கி வருகிறது என்பது வியப்பிற்குரிய விஷயமாகும்.

மாநில அரசுகளுக்குப் பங்குகளைப் பகிர்ந்தளித்தல்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடன் பங்கைப் பொறுத்தமட்டில் முதல் திட்ட காலத்தில் பொதுமக்கள், வங்கிகள் முதலிய வற்றிடமிருந்து பெரும் மொத்தக் கடனில் மாநில அரசின் பங்கு 76 சதவீதமாக இருந்தது ஆறாவது திட்ட மதிப்பீட்டின்படி 23.03 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் மொத்த கடனில் மத்திய அரசு பெறும் கடன் அளவு அதிகரித்து வந்துள்ளது. இது மட்டு

மல்லாது, பொதுமக்கள் வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் மொத்த கடன் அளவு முதல் திட்டகாலத்தில் ரூ. 204 கோடியாக இருந்தது. ஆறாவது திட்டகாலத்தில் ரூ. 19,500 கோடியாக அதாவது 90 மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதை இரண்டாம் அட்டவணையில் காணலாம். பொதுமக்கள் வங்கிகளிடமிருந்து கடன் வாங்கும் அளவை 1970லிருந்து நாம் கட்டுப்படுத்திய போதிலும் ஆண்டொன்றுக்கு சுமார் 29 சதவீதம் வளர்ச்சியடைந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மாறாக, முந்தைய ஆண்டுகளில் பொதுமக்கள் வங்கிகளிடமிருந்து மாநில அரசு பெறும் அனுமதிக்கத்தக்க கடன் அளவில் 10 சதவீதம் மட்டுமே அதிகமாக பெற மத்திய அரசு அனுமதித்துள்ளது. அதிகரித்துள்ள வீதத்திலான எஞ்சிய தொகையை மத்திய அரசு தனது திட்டத்திற்கும், சிறிதளவு மாநிலங்களின் திட்டத்திற்கும் நிதி உதவியளிக்கப் பயன்படுத்தியுள்ளது. இதனால், முதல் திட்ட காலத்தில் மத்தியத் திட்ட மூலதனத்திற்கு பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடன் 9.15 சதவீதம் என்று கணக்கிடப்பட்டது. தற்போது திட்ட செலவில் 30.67 சதவீதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மாறாக, மாநிலத் திட்ட செலவைப் பொறுத்தமட்டில், முதல் திட்ட காலத்தில் 10.87 சதவீதமாக இருந்தது. ஆறாவது திட்ட காலத்தில் 9.26 சதவீதமாக குறைந்து விட்டது. மத்திய, மாநில அரசுகளின் திட்ட செலவு, பொதுமக்கள் வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடன் குறித்த ஒப்பீட்டு விவர அறிக்கையை 3ஆம் அட்டவணையில் காணலாம்.

இச்சூழ்நிலைகளில், நன்கு வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளை நிர்ணயிப்பது அவசியமாகும். அதன் அடிப்படையில் பொதுமக்கள் வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடன் மத்திய—மாநில அரசுகளிடையே நியாயமான அளவுக்கும் மாநிலங்களுக்கிடையே ஒரே சீராகவும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

மத்திய மாநில அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளுதல்.

பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை நியாயமான முறையில் பகிர்ந்து அளிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை என்பது மேற்சொன்னவற்றிலிருந்து தெரிய வருகிறது. மாநில அரசுகளின் பங்கை அதிகரிப்பதற்கான கோரிக்கையை வலியுறுத்தலாம். அவ்வாறு அதிகரித்தால் மத்திய அரசிடமிருந்து பெறும் நிதி உதவியின் அளவு குறைந்து விடும். நிகரப் பயன் சொற்பமாக இருக்கும். எனினும், மாநிலத் திட்டச் செலவில் மத்திய அரசின் நிதி உதவியின் சதவீதம், மூன்றாவது திட்ட காலத்தில் 60.38 சதவீதமாக இருந்தது. ஆறாவது திட்ட காலத்தில் 31.58 சதவீதமாக குறைந்திருப்பதை ஈண்டு குறிப்பிடலாம். கூட்டாட்சி அமைப்பு முறையில் பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை நியாயமாக பகிர்ந்தளிக்குமாறு நாம் கேட்டுள்ளோம். இது நியாயமே. ஏனெனில் மத்திய மாநில அரசுகள் இரண்டும் திட்டத்திற்கு நிதி உதவியளிப்பதற்காக பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை பயன்படுத்திக் கொள்கின்றன என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது. ஆனால், மத்திய மாநில அரசுகளின் திட்டச் செலவிற்கு அவற்றை விகிதாசாரப்படி பங்கிட்டுக் கொள்வது நியாயமானதாகும். அத்தகைய பங்கீடானது மத்திய, மாநில அரசுகளுக்குரிய திட்ட நிதி உதவிக்கு ஒத்த அளவிலான ஆதரவைக் கொடுக்கும். உதாரணமாக, ஆறாவது திட்ட காலத்தில், மத்திய, மாநில அரசுகளின் தொடர்புடைய பங்கு ஒவ்வொன்றுக்கும் 50 சதவீதமாக இருந்தால், அதே வீதத்தில், பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனையும் ஒதுக்கீடு செய்யலாம்.

அவ்வாறே, நியாயமான, நேர்மையான கொள்கையின், அடிப்படையில், மாநிலங்களிடையேயான பங்கீடும் இருக்க வேண்டும்.

மாநிலங்களிடையே பகிர்ந்தளித்தல்.

கடந்த ஆண்டுகளில், மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும், பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடன், கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட அளவைவிட மிக நியாயமான முறையில் 10 சதவீதம் அதிகமாக கொடுக்கப்பட்டு வந்தது. இவ்வாறாக, எதிர்பாராதவகையில் குறைவாக கடன் பெறும் மாநிலங்கள் தொடர்ந்து அவ்வாறே பெற்று வருகின்றன. நியாயமான அளவில் கடன் பெறுவதற்கு எவ்வித முயற்சியும் 1969 முதல் 1979 வரையிலான கால அளவில் மேற்கொள்ளப்படவில்லை. பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து மாநில வாரியாகப் பெறப்படும் கடன் குறித்த விவரம் 5ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1969 முதல் 1979 வரையில் தமிழ்நாட்டில் (மாநில வாரியான) பொதுமக்கள்—வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன் 90 சதவீதம் அதிகரித்திருப்பதையும், அதே கால அளவில் மேற்கு வங்காளத்தில் சுமார் 600 சதவீதம் அதிகரித்திருப்பதையும் பதிவுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 1978–79ஆம் ஆண்டில் உள்ளது போல, மாநிலங்களுக்கிடையே பெருத்த அளவில் வேறுபாடு காணப்படுகிறது. உத்தரப்பிரதேசம்

வாங்கிய நபர் வாரிக் கடன் ரூ. 5,078, நாகாலாந்து வாங்கிய நபர் வாரிக் கடன் ரூ. 52.80 ஆகும். மிகவும் வளர்ச்சி அடைந்துள்ள மாநிலங்களான அரியானா, குஜராத் வாங்கிய நபர் வாரிக் கடன் முறையே ரூ. 15.47, ரூ. 12.10 ஆகும் என்பது தெரியவரும். தற்போது, பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை மாநிலங் களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் முறையானது, தற்போதுள்ள ஏற்றத் தாழ்வை சரி செய்வதற்கு முனைந்து நடவடிக்கை எடுக்காமல் குறிப்பிட்ட ஓர் இலக்கு இல்லாத ஏனோதானோ என்ற கொள்கையைப் பின் பற்றுவதாக உள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. பின்தங்கியுள்ள மாநிலங்களுக்கு, மேற்படி கடன் தொகையில் அதிக பங்கு அளிக்கத் தற்போதைய நடைமுறை தொடர்ந்து சாதகமாக இல்லை. மேலும், மத்திய அரசு பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெற்ற கடன் ஒதுக்கீட்டைக் குறைத்து அதற்கு பதிலாக மானியங்களை வழங்கி ஈடு செய்தால், இந்த மாநிலங்களுக்கு அதிக கடன் பொறுப் பினால் ஏற்படக் கூடிய சுமை குறையும். மத்திய அரசு இத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ள தயாராக இல்லை. ஏற்கனவே கூறியுள்ளபடி தற்போதைய நிலைமை எந்த விதமான இலக்கோ இலட்சியமோ இல்லாது காற்றுப்போன போக்கில் பறந்து செல்லும் காகிதம் போன்று அமைந்துள்ளது. எனவே, பொதுமக்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பெறப்படும் கடன் தொகையை நியாயமான, பொருத்தமான முறையில் மாநிலங்களுக்கிடையே பங்கீடு செய்வதே தற்போது உடனடியாகச் செய்ய வேண்டிய செயலாகும்.

இந் நோக்கத்தை எய்துவதற்கு அரசிய லமைப்புச் சட்டத்தின் 280 (3) (C) பிரிவின் கீழுள்ள தனது அதிகாரத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் தாராளமாகப் பயன்படுத்த வேண்டும்.

பொதுமக்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெறும் கடன் தொகை குறித்து மத்தியத் திட்டக் குழுவும், இந்திய ரிசர்வ் வங்கியும், கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் ஒத்து போகவில்லை என்பதை இங்கு குறிப்பிடுவது பயனுடையதாக இருக்கும். இந்திய ரிசர்வ் வங்கி கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் 6ஆம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. 1973–74-க்கும் 1982–83-க்கும் இடையே பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறும் கடன், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 32 சதவீதம் அதிகரித்திருப்பதையும், அதே கால அளவில் உத்திரப் பிரதேசத்தில் 228 சத வீதமும், ஆந்திரப் பிரதேசத்தில் 276 சத வீதமும் அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. எனினும், மாநிலங்களிடையே கடன் தொகையை பகிர்ந்தளிப்பதற்கு நிதிக் குழு, நியாயமான, பொருத்தமான கொள்கையைச் செயல்படுத்து வதற்கான அவசியத்தை இது மீண்டும் வலியுறுத்துகிறது.

ஆகவே, வெவ்வேறு மாநிலங்கள், பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை ஒதுக்கீடு செய்வதன் மூலமும், மொத்தமாக பொதுமக்களிடமிருந்து சேமிப்பு களைப் பங்கிடும்போதும் மத்திய அரசு, நிதிக் குழுவின் கருத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நாம் வலியுறுத்தலாம். பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடனை பகிர்ந்து அளிப்பதற்கு இனி பயன்படுத்தக் கூடிய பொருத்தமான விதிமுறையை நிதிக் குழு தெரிவிக்கலாம். இவற்றின் செயல்பாட்டை தொடர்ந்து இந்திய ரிசர்வ் வங்கி ஒருங்கிணைக்க வேண்டும். தனியாகக் கடன் குழு ஒன்றை அமைக்கத் தேவையில்லை. ஏனெனில், பற்பல முகவரமைப்புகள் இருந்தால் அவை ஒன்றுக் கொன்று முரண்பாடாகச் செயல்படும் ஒரு சூழ்நிலை தோன்றக் கூடும்.

அட்டவணை 1.

திட்டக் காலம்.	அரசு நிறுவன திட்டச் செலவு.	பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடன்.	அரசு நிறுவனத் திட்டச் செலவின் சதவீதமாக பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடன்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் கோடியில்)		(சதவீதம்)
முதல் ஐந்தாண்டுத் திட்டம் .. .. (1951-56 கணக்குகள்)	1,960	204	10.40
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் .. (1956-61 கணக்குகள்)	4,672	756	16.18
மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் .. (1961-66 கணக்குகள்)	8,577	823	9.60
ஆண்டுத் திட்டங்கள் .. .. (1966-69 கணக்குகள்)	6,625	725	10.94
நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் .. (1969-74 கடைசி மதிப்பீடு)	16,160	2,788	17.25
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் .. (1974-79 திருத்த மதிப்பீடுகள்)	39,303	5,879	14.96
1979-80 ஆண்டுத் திட்டம் .. .. (மூலத் திட்ட மதிப்பீடுகள்)	12,601	2,371	18.81
ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் .. (1980-85 மூல மதிப்பீடுகள்)	97,500	19,500	20.00

அட்டவணை 2.

மத்திய—மாநில அரசுகளிடையே பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்துப் பெறப்படும் கடனை ஒதுக்கீடு செய்தல்.

திட்டக் காலம்.	பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் மொத்தக் கடன்.	பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து மத்திய அரசு பெறும் கடன்.	பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடனில் மத்திய அரசு பெறும் கடன் சதவீதம்.	பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து மாநில அரசு பெறும் கடன்.	பொது மக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடனில் மாநில அரசு பெறும் கடன் சதவீதம்.
			(ரூபாய் கோடியில்)		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
முதல் திட்டம் (1951-56) ..	204	49	24.00	155	76.00
இரண்டாம் திட்டம் (1956-61) ..	756	400	52.91	356	47.09
மூன்றாம் திட்டம் (1961-66) ..	823	307	37.30	516	62.70
ஆண்டுத் திட்டங்கள் (1966-69) ..	725	384	52.97	341	47.03
நான்காம் திட்டம் (1969-74) கடைசி மதிப்பீடு ..	2,788	1,744	62.55	1,044	37.44
ஐந்தாம் திட்டம் (1974-79) (திருத்த மதிப்பீடு) ..	5,879	3,746	63.72	2,133	36.28
ஆண்டுத் திட்டம் (1979-80) மூல மதிப்பீடு ..	2,371	1,850	78.02	521	21.98
ஆறாம் திட்டம் (1980-85) ஆறாவது திட்ட மூல மதிப்பீடு. ..	19,500	15,000	76.92	4,500	23.08

அட்டவணை 3.

திட்டச் செலவும் பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறப்படும் கடனும்—மத்திய—மாநில அரசுகள்.

திட்டக் காலம்.	மத்திய அரசு.			மாநில அரசுகள்.		
	திட்டச் செலவு.	பொது மக்கள், வங்கிகள் முதலிய வற்றிட மிருந்து பெறப் படும் கடன்.	மத்திய அரசு திட்டச் செலவு சதவீதப் படி பொது மக்கள், வங்கிகள் முதலிய வற்றிட மிருந்து பெறப் படும் கடன்.	திட்டச் செலவு.	பொது மக்கள், வங்கிகள் முதலிய வற்றிட மிருந்து பெறப் படும் கடன்.	மாநில அரசு திட்டச் செலவு சதவீதப் படி பொது மக்கள், வங்கிகள் முதலிய வற்றிட மிருந்து பெறப் படும் கடன்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய் கோடியில்)		
முதலாம் திட்டம் (1951-56 கணக்குகள்) ..	535	49	9.15	1,425	155	10.87
இரண்டாம் திட்டம் (1956-61 கணக்குகள்) ..	2,590	400	15.44	2,082	356	17.10
மூன்றாம் திட்டம் (1961-66 கணக்குகள்) ..	4,412	307	6.96	4,165	516	12.39
ஆண்டுத் திட்டங்கள் (1966-69 கணக்குகள்) ..	3,565	384	10.77	3,060	341	11.14
நான்காம் திட்டம் (1969-74 கடைசி மதிப்பீடு) ..	8,793	1,744	19.83	7,367	1,044	14.17
ஐந்தாம் திட்டம் (1974-79 திருத்த மதிப்பீடு) ..	20,586	3,746	18.19	18,717	2,133	11.40
ஆண்டுத் திட்டம் (1979-80 மூல மதிப்பீடு) ..	6,639	1,850	27.87	5,962	521	8.74
ஆறாம் திட்டம் (1980-85) ..	48,900	15,000	30.67	48,600	4,500	9.26

அட்டவணை 4.

மத்திய அரசு நிதி உதவி.

திட்டக் காலம்.	மத்திய அரசு நிதி உதவி.	
	மொத்தம்.	மாநில திட்டச் செலவுக்கு.
(1)	(2)	(3)
	(ரூபாய் கோடியில்)	(சதவீதமாக
மூன்றாம் திட்டம் (1961-66)	2,515	60.38
ஆண்டுத் திட்டம் (1966-69)	1,767	57.90
நான்காம் திட்டம் (1969-74)	3,535	47.98
ஐந்தாம் திட்டம் (1974-78)	5,271	41.48
ஆண்டுத் திட்டம் (1978-79)	2,885	48.01
ஆண்டுத் திட்டம் (1978-79)	2,694 (இ.ம.)	45.19
ஆறாம் திட்டம் (1980-85)	15,350	31.58

5.15, 5.18, 5.20.

அட்டவணை 5.

1969—79ஆம் ஆண்டுகளில் மாநில அரசு ஒவ்வொன்றும்

	மாநிலங்கள்.	1969—70.	1970—71.	1971—72.	1972—73.
	(1)	(2)	(3)	(4)	(5)
1	ஆந்திரப் பிரதேசம்	2.71	2.61	2.91	4.86
2	அசாம்	5.30	4.59	4.77	5.73
3	பீகார்	1.50	1.22	1.36	2.95
4	குஜராத்	10.28	6.75	7.84	7.52
5	அரியானா	11.02	8.75	8.33	10.49
6	இமாசல பிரதேசம்	..	..	..	6.06
7	ஜம்மு-காஷ்மீர்	..	..	..	4.78
8	கருநாடகம்	6.94	5.64	5.99	5.88
9	கேரளா	2.37	3.97	5.36	9.12
10	மத்தியப் பிரதேசம்	2.02	3.05	2.98	3.03
11	மகாராட்டிரம்	7.08	5,50	6.18	7.28
12	மணிப்பூர்	..	..	..	10.09
13	மேகாலயா	..	..	..	11.00
14	நாகாலாந்து	..	..	..	22.20
15	ஒரிசா	2.30	3.64	4.68	3.01
16	பஞ்சாப்	7.70	6.95	6.67	7.46
17	இராஜஸ்தான்	2.52	3.74	3.75	7.98
18	சிக்கிம்	..	..	..	..
19	தமிழ்நாடு	4.49	5.19	4.69	4.97
20	திரிபுரா	..	..	..	..
21	உத்திரப் பிரதேசம்	1.54	1.52	1.98	2.97
22	மேற்கு வங்காளம்	1.78	4.06	4.45	7.93
	மொத்தம் ..		3.64	3.97	5.35

குறிப்பு.—மாநிலங்கள் வாரியாக பொதுமக்கள்-வங்கிகள் முதலியவற்றிடமிருந்து சராசரியாகப் 5.15, 5.18, 5.20.

பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் கடன்.

1973–74.	1974–75.	1975–76.	1976–77.	1977–78.	1978–97.
(6)	(7)	(8)	(9)	(10)	(11)
4.83	5.05	4.83	5.31	5.84	6.43
7.54	7.57	7.65	9.29	9.37	10.31
4.36	4.36	4.38	4.80	5.27	5.80
8.15	9.22	9.08	10.00	11.00	12.10
11.61	14.70	11.65	12.77	14.06	15.47
8.66	8.62	8.65	9.51	10.40	11.43
14.35	14.36	14.47	15.89	17.48	19.22
7.52	7.58	7.49	8.26	9.08	9.99
9.26	9.06	10.19	10.19	11.26	12.38
4.63	4.57	4.64	5.10	5.61	6.17
6.30	6.34	6.72	7.36	8.10	8.90
12.55	32.14	12.45	13.82	15.18	16.73
11.00	38.80	20.00	24.20	26.60	29.30
39.60	1,15.80	39.60	43.60	48.00	52.80
5.80	5.99	5.79	6.38	7.02	7.72
7.36	10.39	7.78	8.04	8.84	9.72
8.80	8.84	9.30	9.68	10.65	11.71
..	..	..	..	..	..
6.36	5.88	6.41	7.01	7.71	8.48
..	10.37	8.62	9.50	10.44	11.50
4.34	4.15	4.40	4.78	5.25	5.78
9.26	9.28	9.30	10.19	11.20	12.32
6.43	6.76	6.62	7.21	7.94	8.73

பெறப்படும் கடன் 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

அட்டவணை 6.

1973–74-லிருந்து 1982–83வரையில் மாநில அரசுகள், பொதுமக்கள், வங்கிகள் முதலியவற்றிடமிருந்து பெறும் நிகரக் கடனைக் காட்டும் விவர அறிக்கை.

மாநிலங்களின் பெயர்.	1973–74.	1974–75.	1975–76.	1976–77.	1977–78.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
1 ஆந்திரப் பிரதேசம் ..	13,03	21,04	24,41	13,04	13,01
2 அசாம்	5,54	5,66	8,58	5,17	5,72
3 பீகார்	11,09	14,86	15,22	11,03	11,05
4 குஜராத்	9,70	13,71	18,29	12,17	12,41
5 அரியானா	8,04	12,36	9,39	8,10	9,63
6 இமாசலப் பிரதேசம்.	1,38	1,37	1,38	1,69	1,67
7 ஜம்மு-காஷ்மீர் ..	2,48	2,44	2,49	2,54	2,48
8 கருநாடகம்	9,12	19,12	18,01	11,71	11,76
9 கேரளம்	4,97	5,91	9,14	6,23	8,60
10 மத்தியப் பிரதேசம் ..	5,57	5,32	9,99	4,80	5,07
11 மகாராட்டிரம் ..	13,03	15,42	27,11	13,35	13,25
12 மணிப்பூர்	1,38	3,58	1,38	1,66	1,65
13 மேகாலயா ..	1,11	3,88	1,10	1,41	..
14 நாகாலாந்து ..	1,99	5,80	1,93	2,22	2,48
15 ஒரிசா	6,65	7,07	14,72	7,50	6,74
16 பஞ்சாப்	5,54	9,76	7,51	5,28	2,92
17 இராஜஸ்தான் ..	15,55	15,65	20,76	17,89	17,74
18 சிக்கிம்	..	..	..	..	..
19 தமிழ்நாடு	13,05	14,62	26,30	13,24	13,15
20 திரிபுரா	..	1,66	1,38	1,69	1,65
21 உத்தரப் பிரதேசம் ..	29,63	27,87	40,52	30,09	29,28
22 மேற்கு வங்காளம் ..	7,76	7,92	14,93	7,84	7,87
மொத்தம் ..	166,61	215.02 *	274,54	178,65	178,12 *

5.15, 5.18, 5.20

அட்டவணை—6—தொடர்ச்சி.

மாநிலங்களின் பெயர்.	1978–79.	1979–80.	1980–81.	1981-82.	1982–83.	1973–74 1981–82 ஆம் ஆண்டுகளுக்கு இடையே உள்ள அதிகரிப்பு சதவிகிதம்.
	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
			(ரூபாய் இலட்சத்தில்.)			
1 ஆந்திரப் பிரதேசம் ..	13,43	12,89	13,35	41,11	49,04	276.36
2 அஸ்ஸாம்	4,53	5,48	6,22	7,76	8,24	48.74
3 பீகார்	11,13	11,21	10,53	22,15	22,83	105.86
4 குஜராத்	12,14	11,99	13,51	15,04	16,49	70.00
5 அரியானா	9,40	7,90	9,21	9,91	10,42	29.60
6 இமாசலப் பிரதேசம்.	1,66	1,69	1,76	1,93	2,48	79.71
7 ஜம்மு-காஷ்மீர் ..	2,48	2,48	2,80	3,06	3,58	44.35
8 கருநாடகம்	13,31	12,15	13,78	14,06	17,02	86.62
9 கேரளம்	11,30	13,78	16,43	19,80	23,05	363.78
10 மத்தியப் பிரதேசம் ..	5,63	4,83	5,50	10,12	11,25	101.97
11 மகாராட்டிரம் ..	13,14	13,20	13,16	14,71	16,15	23.94
12 மணிப்பூர்	1,93	2,20	2,52	3,05	3,30	139.13
13 மேகாலயா	..	1,38	1,51	..	4,68	321.62
14 நாகாலாந்து	2,76	3,03	3,33	4,16	4,40	121.11
15 ஒரிசா	6,74	6,60	7,55	18,96	23,03	246.32
16 பஞ்சாப்	3,49	5,63	6,13	7,02	7,40	33.57
17 இராஜஸ்தான் ..	17,80	17,87	19,13	53,70	38,49	147.52
18 சிக்கிம்	..	..	..	..	..	..
19 தமிழ்நாடு	13,22	12,91	13,89	16,46	17,19	31.72
20 திரிபுரா	1,93	2,20	2,49	3,03	4,69	182.53
21 உத்திரப் பிரதேசம் ..	31,07	29,85	30,74	77,93	97,29	228.35
22 மேற்கு வங்காளம் ..	7,82	7,88	7,51	9,95	17,25	122.29
மொத்தம் ..	184.95 *	187.14 *	201.07 *	333.90 *	398.26 *	97.62

*=மொத்தம் சேர்க்கப்படக் கூடாது.

ஆதாரம்—

(1) 1974–75ஆம் ஆண்டைத் தவிர கரன்சி, நிதி தொகுதி II குறித்த அறிக்கை.

(2) இந்திய ரிசர்வ் வங்கி செய்தி வெளியீட்டில் வெளியிடப்பட்ட 1976–77ஆம் ஆண்டு மாநில அரசுகளின் நிதி நிலை குறித்த கட்டுரை—1974–75ஆம் ஆண்டுக்கான ' 1976 டிசம்பர்' வெளியீடு.

வினா 5.16. 5.17.

வினா 5.16 : மத்திய அரசின் பற்றாக்குறை அதிகரித்து வருவதால், மத்திய அரசின் வரி வருமான சதவீதம் மாநில அரசுகளுக்கு மாற்றப் படுகிற காரணத்தால், மாநிலங்களின் வரவு-செலவுப் பற்றாக்குறை மத்திய அரசின் பற்றாக் குறையைக் காட்டிலும் விரைந்து அதிகரித் துள்ளபோதிலும் இத்தகைய மாற்றங்கள் கணிச மான அளவுக்கு அதிகரித்துள்ள போதிலும், படிப்படியாக இறக்கநிலை காணப்படுகிறது. மாநிலங்களின் வரி வருமான ஏற்றத் தாழ்வு அதிகரித்து, அதன் காரணமாக அவற்றின் கடன் மிகுதியாக அதிகரிக்கிறதென்றும் கருதப்பட்டுள்ளது.

இது பற்றித் தங்கள் கருத்து யாது ?

வினா 5.17 : மாநில அரசுகளின் கடன் நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் கவனித்து அதற்குத் தீர்வு காணும்படி ஆறாம் நிதிக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை அவ்வப்போது ஆய்வு செய்வதன் மூலமாக, வருங்காலத்தில் மாநில அரசின் கடனில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்க இயலு மென்பதே நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ? மத்திய மாநிலத் தொடர்பு குறித்த A. R. C. ஆய்வுக் குழு, மாநில அரசுகளின், எப்போதுமே அதிகரித்து வருகின்ற பெருங்கடன் தொல்லை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், மாநில அரசுகள் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் அவற்றுக்கு மிகுந்த சிரமம் உள்ளது. அல்லது சில இனங்களில் வரிக் கட்டணத்தைச் செலுத்து வதில்கூட நாளுக்கு நாள் சிரமம் அதிகரித்து வருகிறதென்றும், மாநில அரசு மத்திய அரசிட மிருந்து வாங்கிய மொத்தக் கடன் தொகையில், மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகைதான் பெரும்பகுதி என்றும் கருத்துத் தெரிவித்தது.

இந்த நிலைமைக்கு எவை காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள் ? இதற்குத் தீர்வு காண என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

பதில் 5.16 & 5.17 :

மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து வாங்கிய கடனையும் அதற்குரிய வட்டியையும் திருப்பிக் கொடுக்கும் வகையில், மத்திய அரசிட மிருந்து வாங்கிய கடனில் தோராயமாக 60 சத வீதத்தைத் திருப்பிக் கொடுத்துள்ளது என்பது கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. 1973–74ஆம் ஆண்டு உட்பட சில ஆண்டு களில் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகையும் வட்டியுமே சேர்ந்து, இந்த ஆண்டில் வாங்கிய கடனைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. முன்னர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்ப தற்காக மட்டுமே பல ஆண்டுகளாக மாநிலங்கள் மேலும் மேலும் கடன் வாங்க வேண்டிய ஒரு நிலை உருவானது என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது. மாநில அரசுகள் அதிக அளவில் கடன் வாங்கியதற்கு பல காரணங்கள் உள்ளன. அவை மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளன—

(1) மாநில அரசுகளுக்கு பிறப்பிக்கக் கூடிய நிபந்தனைகளைவிட மிகவும் தாராளமான நிபந்தனைகளின் பேரில் மத்திய அரசு நிதிகளை (கடன்) எப்போதும் வாங்கியுள்ளது.

(2) இக்கடன்களில் பெரும்பாலானவை வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக வாங்கியவை ஆகும். அவை உரிய ஆதாயம் தராத தன்மை வாய்ந்தவை. இவற்றின் பேரில் மாநில அரசு எவ்வித ஆதாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. அவற்றை மானியங்களாகக் கருத வேண்டும். அவற்றை கடன்களாகக் கருதியது மாநில அரசுகளின் கடன் அளவை உயர்த்தியுள்ளது. இனிமேல் நிலைமையை சீராக்கும் பொருட்டு, வெளிநாட்டு ஏஜென்சிகளிடமிருந்து பெறும் கடன்கள், அவை எந்த வரையறைகள் நிபந்தனை களின் பேரில் வாங்கப்பட்டனவோ அவற்றின் பேரிலேயே மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டும். அன்றியும் மாநில அரசுகளுக்கு கொடுக்கப்பட்ட நிதி உதவி, வணிகக் காரியங்கள், வணிகமல்லாத காரியங்கள் என்று வகைப் படுத்தப்பட வேண்டும். வணிகமல்லாத காரியங் களுக்காக வழங்கப்படுவதும், அதன் பேரில் மாநில அரசுகள் எவ்வித ஆதாயத்தையும் எதிர்பார்க்க முடியாததுமான நிதி உதவி, மானியமாக கொடுக்கப்பட வேண்டும். உரிய ஆதாயமுள்ள காரியங்களுக்கு கொடுக்கப்படும் உதவியைப் பொறுத்தவரை, வளர்ந்து வரும் மாநிலங்கள், பின் தங்கிய மாநிலங்கள் ஆகிய வற்றிற்கிடையே வேறுபாடு காட்டப்பட்டாலும், அவற்றிற்கு கொடுக்கப்படும் தொகைக்குரிய வட்டி வீதமும், திருப்பிக் கொடுக்கப்படும் வரையரைகளும் எளிதாக இருந்தாலும் பயனுள்ளதாக இருக்கும்.

வினாக்கள் : 5.16, 5.17

அட்டவணை I.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்ற கடன்.

ஆண்டு.	மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப் பட்ட கடன். (a)	மத்திய அரசிட மிருந்து பெற்ற கடனுக்கான வட்டி. (b)	இந்த ஆண்டு பெற்ற கடன். (c)	$\frac{a}{c} \times 100$	$\frac{a+b}{c} \times 100$
	(ரூபாய் இலட்சத்தில்)				
1973–74	49.35	20.27	60.25	82	116
1974–75	22.21	18.51	53.42	42	77
1975–76	50.94	21.61	78.90	65	92
1976–77	31.64	23.26	99.32	32	56
1977–78	35.28	26.95	1,39.10	26	45
1978–79	43.31	32.40	1,65.34	27	46
1979–80	34.53	26.18	1,26.28	28	48
1980–81	40.17	55.57	1,54.50	26	62
1981–82	47.57	49.78	1,54.62	31	63
1982–83	54.85	57.04	1,75.57	32	64
1983–84 .. .. (தற்காலிகமானது) (தி.ம.)	86.46	65.80	2,08.59	42	73
1984–85 .. .. தற்காலிகமானது (வ.செ.தி.ம.)	74.85	63.16	1,92.06	39	72

குறிப்பு.—(i) கடனில் வழிவகை முன்பணம் அடங்கவில்லை.

(ii) வட்டியில், வழிவகை முன்பணம் குறித்த வட்டி அடங்கும்.

அட்டவணை II.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெற்ற கடன்கள்

ஆண்டு.	நிகரக் கடன்.	தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கில் வரவு.	தமிழ்நாட்டின் உபரி வருவாய்.	நபர் ஒருவருக் கான நிகரக் கடன்.	நபர் ஒருவருக்கு வருவாய்க் கணக்கில் வரவு.	திருப்பிச் செலுத்தியது X100 / வருவாய் வரவு.	திருப்பிச் செலுத்தியது X100 / உபரி வருவாய்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
			(ரூபாய் இலட்சத்தில்)				
1973–74 ..	10,90	4,86,30	13,67	2,65	118.04	11	361
1974–75 ..	31,21	5,20,29	(—) 8,07	7,58	126·29	5	(—)276
1975–76 ..	27,96	5,63,36	5,44	6,79	136·74	9	937
1976–77 ..	67,68	6,28,98	61	16,43	152·67	5	5,187
1977–78 ..	1,03,82	6,82,05	(—)24,07	25,20	165·55	6	(—)147
1978–79 ..	1,22,03	8,01,48	47,97	29,62	194·54	6	91
1979–80 ..	91,75	9,44,85	95,30	22,27	229·34	4	37
1980–81 ..	1,14,41	12,79,96	1,27,71	23,69	265·01	4	32
1981–82 ..	1,07,05	14,41,55	81,66	22,17	298.46	4	59
1982–83 ..	1,20,72	16,78,02	1,01,94	25,00	347·42	4	54
1983–84 .. (திருத்த மதிப்பீடு)	1,22,13	18,92,86	23,53	25,29	391·90	5	368
1984–85 .. (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு)	1,17,21	20,65,43	1,19,05	24,27	427·63	4	63

தமிழ்நாட்டு மக்கள் தொகை : 1971 மக்கட் தொகை கணக்கெடுப்பு .. 412 இலட்சம்
1981 மக்கட் தொகை கணக்கெடுப்பு .. 483 இலட்சம்

வினா 5.19 :

வெளிநாட்டிலிருந்து பெறும் கடன் தொகைக்கு மத்திய அரசு கடன் கொடுத்த வெளிநாட்டவருக்குச் செலுத்தும் வட்டி வீதத்தைக்காட்டிலும் அதிக வட்டி வீதத்தை மாநில அரசுகளுக்கு விதிக்கின்றது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆம் எனில், இது நியாயமாகுமா ? மாநிலத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக மத்திய அரசு வெளிநாட்டிலிருந்து கடன்பெற்று மாநிலங்களுக்கு வழங்கும் தற்போதைய முறை பற்றி ஏதேனும் கருத்து கூற நீங்கள் விரும்புகிறீர்களா ?

விடை 5.19 :

வெளிநாட்டுக் கடனுதவியைப் பயன்படுத்திக் கொள்ளும் கொள்கையை மத்திய அரசு அண்மை ஆண்டுகளில் படிப்படியாகத் தளர்த்தியுள்ளது. எனவே, குறிப்பிட்ட திட்டங்கள் குறித்த மாநில அரசின் மேம்பாட்டுச் செலவுக்கு நிதியுதவி அளிக்க அனைத்து நாட்டு முகவரமைப்புகளிடமிருந்தும் ஏனைய வெளி நாட்டு அரசுகளிடமிருந்தும் கடன்கள் பெறப்பட்டுள்ளன. 1984—85ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் நிலுவைத் தொகை, அனைத்து நாட்டு வளர்ச்சி நிதிக் கடன் நீங்கலாக சுமார் ரூ. 17,000 கோடி ஆகும். அனைத்து நாட்டு வளர்ச்சி நிதிக் கடன் உட்பட சுமார் ரூ. 21,000 கோடி ஆகும். எனினும், வெளி நாட்டுக் கடன்களைப் பெறும் திட்டம் மத்திய அரசுடன் ஒப்பிடுகையில் மாநில அரசுக்கு சாதகமின்றி வகுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முகவரமைப்புகள் மூலம் பெறப்படும் கடன்கள்யாவும் மத்திய அரசு மூலம் வாங்கப்பட வேண்டும் என்று நன்கறிந்திருந்தபோதிலும், செலுத்த வேண்டிய கடன்தொகையின் நிலைமையைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசுதான் ஒருங்கிணைக்க வேண்டும். எளிய நிபந்தனைகளின் பேரில் (நீண்ட காலக் கடன்) வெளிநாட்டு முகவரமைப்புகளிடமிருந்து கடன் பெற்று, அத்தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் கண்டிப்பான நிபந்தனைகளுடனும் இந்திய அரசு செலுத்தும் வட்டி வீதத்தைக் காட்டிலும் உயர் வட்டி வீதத்திலும் மாநில அரசுகளுக்கு இந்திய அரசு அளிப்பது நியாயமாகத் தெரியவில்லை.

மாநில அரசின் கடன் பளுவானது, அதன் குறைந்த அளவு நிதி ஆதாரங்களை ஏற்கனவே திக்குமுக்காடச் செய்துள்ளது என்றும் மிகையான கடன் பளுவிலிருந்து ஓரளவு நிவாரணம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும் வேறோரிடத்தில் காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு திருப்பிச்செலுத்தும் கடன், வட்டித் தொகை, குறிப்பிட்ட ஓராண்டில் பெற்ற கடன்தொகையில் சுமார் 70 சத விகிதம் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது என்றும் காட்டப்பட்டுள்ளது. இம்மாதிரியான நிலைமையில், மத்திய அரசு, தன்னுடைய கடன் தொகையையும், எளிய நிபந்தனைகளின் பேரில் திருப்பிச் செலுத்துவதற்கியலும் வகையில் மாநில அரசுகளுக்கு வழங்குவது அவசியமெனத் தோன்றுகிறது. ஏற்கெனவே இக்கட்டுகளுக்குள்ளான மாநில அரசின் நிதிவாயில் நிலைமையை மேலும் மோசமாக்குகிற வகையில் வெளிநாட்டு முகவரமைப்புகளிடமிருந்து பெற்ற கடன்களுக்கான நிபந்தனைகளை மத்திய அரசு மாற்றுவது எந்தவிதத்திலும் நியாயமில்லை.

இது தொடர்பாக, கீழே ‘A’ அட்டவணையில் நாட்டம் செலுத்துமாறு கேட்க நாங்கள் விரும்புகிறோம். அந்த அட்டவணை, அனைத்து நாட்டு வளர்ச்சி நிதிக்கடன் நீங்கலான நிலைமையை விளக்குகிறது.

அட்டவணை ‘A’

நாடுகள் / ஸ்தாபனங்கள்.	வெளிநாட்டுக் கடன்மீதான வட்டி.	நிலுவையாக உள்ள கடன்.	சராசரி வட்டி வீதம்.
	(ரூபாய் கோடியில்)		
பிரான்சு ..	16·00	3.31	4·8
மேற்கு ஜெர்மனி	25·55	15.03	1.7
ஜப்பான் ..	45·82	11.19	4·2
ஹாலந்து ..	11·57	5.81	1·9
பிரிட்டன் ..	3·45	5.96	0·6
அமெரிக்கா ..	69·82	30.72	2·2
அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம்	69·97	67.26	1·0
உலக வங்கி (I.B.R.D.)	1,35·38	9.64	14·0
குவைத் ..	5·63	93	6·0
சௌதி அரேபியா.	4·02	84	4·8
ஐக்கிய அரபுநாடுகள்.	1·51	17	..
ரஷியா ..	10·46	3.15	3·3
அனைத்து நாட்டு வளர்ச்சி நிதி, பொறுப்பு நிதி	3·06	5.75	0·5
ஏனையவை ..	5·81	..	..
	4,08·05	1,70.00	2.4

(தோராயமாக)

பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி வீதம் 0·5 சத வீதம் முதல் 14 சதவீதம் வரை வேறு

படுவதை மேற்கூறிய அட்டவணையிலிருந்து காணலாம். சராசரி வட்டிவீதம் 2·4 சதவீதம் தான். இதைத்தான் மத்திய அரசு கடன் வழங்கும் வெளிநாட்டவர்களுக்கு செலுத்துகிறது. வேறு வகையில் சொல்லப்போனால், இக்கடன் தொகையை மத்திய அரசு கடுமையான வரையறைகள், நிபந்தனைகளின் பேரில் (குறுகிய காலக் கடன்) மாநில அரசுகளுக்கு வழங்கி வந்துள்ளது. இக்கடனுதவியில் பெரும்பாலான தொகை, அதே வரையறைகள், நிபந்தனைகளின் பேரில் மாநிலத் திட்ட நிதியுதவியின் ஒரு பகுதியாக வழங்கப்படுகிறது. இதற்கு மாநில அரசு வட்டி வீதமாக 7 சதவீதம் செலுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பாக, இந்திய அரசு எந்த அளவுக்கு மாநில அரசுகளைப் பாதிக்கும் வகையில் வரையறைகள், நிபந்தனைகளை மாற்றியுள்ளது என்பதை காட்டுவதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கொடுக்க நாங்கள் விரும்புகிறோம். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக உலக வங்கி, பயிற்சி வழித் தொடர்பு திட்டத்திற்கு (Training and Visits Scheme) நிதியுதவி அளித்துள்ளதையும் இந்திய அரசு 3/4 சத வீத வட்டி வீதத்தில் கடனைப் பெற்று பின்னர் 5½ சதவீதம் வட்டி வீதத்தில் மாநில அரசுக்கு வழங்கியுள்ளதையும் 'B' அட்டவணையிலிருந்து காணலாம்.

அட்டவணை 'B'

திட்டம்.	வெளிநாட்டு முக வரமைப்பின் நிதியுதவி.		வட்டி வீதம்.	மாநிலத் திட்டங்களுக்கு நிதி உதவி.		வட்டி வீதம்.	உள்நாட்டில் விதிக்கப்படும் கூடுதல் வட்டி.
	கடன்	மானியம்.		கடன்.	மானியம்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. சென்னை நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் (அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம்).	100%	..	¾%	70%	30%	5½%	4¾%
2. தமிழ்நாடு செய்தித்தாள்–காகித நிறுவனம் (உலக வங்கி IBRD).	100%	..	10·08% (இது வேறுபடுகிறது)	100%	..	14%	3·92%
3. பயிற்சி வழித்தொடர்பு திட்டம் (உலக வங்கி).	100%	..	¾% (வட்டி வீதம்)	100%	..	5½%	4¾%
சராசரி சதவீதம்—			3·86%	..	..	8·33%	3·86%

அதுபோன்றே வணிகக் காரியங்களுக்கு கடன் அளிக்கும் வகையில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனமான அரசுப் பொதுத்துறை நிறுவனங்களுக்கு சராசரியாக 10.08 சத வீதத்தில் உலக வங்கியிடமிருந்து மத்திய அரசு கடன் பெற்று, ஆனால், மத்திய அரசு 14 சத வீதத்தில் மாநில அரசுக்கு கடன் வழங்குகிறது. இதுமட்டுமல்லாமல், சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இந்திய அரசுக்கு ஸ்வீடன் அனைத்து நாட்டு முகவரமைப்பு முழு அளவு மானியம் அளித்துள்ளது. ஆனால், மத்திய அரசு இதனை மாநில அரசுக்கு வழங்குகையில் 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவிகிதம் மானியமாகவும் மாற்றியுள்ளது. இதற்கு 7 சதவிகிதம் வட்டி விதித்துள்ளது.

மேற்சொன்னவற்றின் அடிப்படையில், வெளிநாட்டு முகவரமைப்புகளிடமிருந்து இந்திய அரசு தொடர்ந்து கடன்களை ஒருங்கிணைக்க இயன்ற போதிலும் கிடைக்கும் அந்நிய செலாவணி கடன் நிலுவைத் தொகை நிலைமை ஆகியவை பற்றி மத்திய அரசு நன்கு தெரிந்திருப்பதால், வெளிநாட்டு முகவரமைப்புகளிடமிருந்து எந்த நிபந்தனைகளின்படி கடன்களை பெற்றுள்ளதோ அதே நிபந்தனைகளின்படி கடன் தொகை முழுவதையும் பணிக் கட்டணமாக 1 சதவிகிதம் தொகையைப் பெயரளவுக்குக் கழித்துக் கொண்ட பின்னர் மாநில அரசுகளுக்கு வழங்கலாம் என்று நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறோம். இது எங்களுடைய கருத்துப்படி நியாயமானதாக இருப்பதுடன் மட்டுமல்லாமல், நாளடைவில் அதிகமாக கடன் பட்டுள்ள மாநில அரசுகளின் நிலைமையை உயர்த்தவும் வகை செய்யும்.

வினா 5·21 :

இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து மாநில அரசுகள் பெறும் வழிவகை முன் பணங்களின் வரையறை 1982, ஜூலைத் திங்களிலிருந்து இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டது. வழிவகை முன் பணங்களை இரு மடங்காகப் பெறத் தகுதி பெற்ற பின்னருங் கூட, பெருமளவு மிகைப்பற்று தொடர்ந்து இருப்பதானது மாநிலங்களின் நிதி நிலைமை 'திருப்திகரமாக' இல்லை என்பதைக் குறிக்கிறது என்று இந்திய ரிசர்வ் வங்கியின் 1982–83ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகிறது. உங்களுடைய கருத்துப்படி இந்நிலைமைக்குக் காரணமான கூறுகள் யாவை? இதற்கு நீங்கள் என்ன நிவாரண நடவடிக்கைகளைத் தெரிவிக்கிறீர்கள்?

விடை 5·21 :

மாநில அரசுகள் பெருமளவு மிகைப்பற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கு தற்போது ஆட்சி மாற்ற முறையில் ஏற்பட்ட பலவீனமே காரணமாக இருக்கலாம் என்று வலியுறுத்தப்பட வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய அகவிலைப்படி கூடுதல் தவணைகளை நிதிக்குழு கருத்திற்கொள்ளவில்லை. அது போன்றே, மாநில அரசின் நிதிவாயில்களைக் கணக்கிடுகையில், உதவித் தொகை வழங்கப்பட்ட கால அளவில் இந்திய அரசு வெளியிடும் நிர்ணய விலையில் உயர்வு ஏற்பட்டதனால் மின்சார வாரியத்திற்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் செலுத்தத்தக்க உயர்த்தப்பட்ட உதவித்தொகை காரணமாக ஏற்பட்ட கூடுதல் நிதிப்பொறுப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதுபோன்றே, திட்டச் செலவு மாநிலத் திட்ட நிதியுதவியை முடிவு செய்கையில் நிலை ஏற்ற இறக்கத்திற்கேற்ப போதுமான ஆதாயத்திற்கு வகை செய்யப்படவில்லை. இக்கூறுகளே மாநில அரசு தொடர்ந்து மிகைப்பற்று வைத்திருப்பதற்கு முக்கியக் காரணங்களாகும். இதற்கான நிவாரண நடவடிக்கை 5·14ஆம் எண் வினாவிற்கு அளித்த பதிலில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினா 5·22 :

மாநிலங்கள் தங்களுடைய நிதிவாயில்களைப் போதுமான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வில்லை என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ? ஆம் எனில், இது குறித்து நீங்கள் என்ன தெரிவிக்கிறீர்கள் ?

விடை 5·22 :

மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரிகள் போன்று மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வரிகள், மாற்றத்திற்குட்பட்டவையல்ல என்பதை நாம் வலியுறுத்திக் கூறலாம். மாநில அரசுக்குக் கூடுதல் நிதிவாயிலை ஏற்படுத்துகிற ஒரே வரி விற்பனை வரிதான். வரி விதிப்பு மூலம் வருவாயைப் பெருக்கக்கூடிய ஒரே நிதிவாயிலான இந்த வரி விதிப்பு ஏற்கெனவே இயன்றவரையில் முழு அளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1973–74 முதல் 1981–82 வரையிலான கால அளவில் (தமிழ் நாட்டில்) விற்பனை வரி உயர்வு 311·34 சத விகிதம் ஆகும். ஆனால், ஆயத்தீர்வை உயர்வு 185·18 சதவிகிதம் மட்டுமேயாகும் என்று குறிப்பிடுவது பொருத்தமானதாகும். 5·22 வினாவில் தெரிவிக்கப்பட்டுள்ள பொதுப்படையான கருத்து நியாயமானதுமல்ல பொருத்தமானதுமல்ல என்பதைப் (அட்டவணை 1) போதுமான அளவுக்கு மெய்ப்பிக்கலாம்.

அட்டவணை

இனங்கள்.	1973–74	1974–75	1975–76	1976–77	1977–78
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(ரூபாய் கோடியில்)				
மத்திய ஆயத்தீர்வை	2,602·13	3,230·52	3,844·78	4,221·45	4,447·51
வளர்ச்சி சதவீதம்	24·14	19·01	9·79	5·35	20·11
மாநில விற்பனை வரி					
விற்பனை வரி	132.25	188·00	209·00	2,29·00	242·00
வளர்ச்சி சதவீதம்	42·16	11·17	9·57	5·68	21·49

இனங்கள்.	1978–79	1979–80	1980–81	1981–82
(1)	(7)	(8)	(9)	(10)
	(ரூபாய் கோடியில்)			
மத்திய ஆயத் தீர்வை	5,341·95	6,011·09	6,500.02	7,420.74
வளர்ச்சி சதவீதம்	12·52	8.13	14.16	..
மாநில விற்பனை வரி				
விற்பனை வரி	294.00	325.00	457.00	544.00
வளர்ச்சி சதவீதம்	10.55	40.62	19.04	..

வினா 5.23 :

மத்திய அரசு செய்திருக்கக்கூடிய, செய்திருக்க வேண்டிய பணியான அனைத்து வருவாயையும் மதிப்பீடு செய்து வசூலிப்பதைச் செய்யவில்லை என்று ஒரு கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக—

(a) மத்திய அரசு அது நினைத்த அளவுக்கு அதிகாரங்களை பெற்றிருந்துங்கூட பொதுத் துறையில் மூலதன முதலீட்டில் எதிர்பார்த்த அளவு வருவாய் கிடைக்கவில்லை.

(b) மத்திய வரிவிதிப்பில் குறை உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ? ஆம் எனில், இந் நிலைமையைப் போக்க நீங்கள் என்ன கருத்து தெரிவிக்கிறீர்கள் ?

விடை 5.23 :

இது குறித்த மாநில அரசின் கருத்து 8ஆம் நிதிக் குழுவுக்கு அனுப்பிய குறிப்பின் தொகுதி 1, அத்தியாயம் 1-ல் 25, 26.1 பாராக்களில் கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய வரிகளில் பெருமளவு குறைகள் உள்ளது என்பதையும் மூலதன முதலீட்டின் மூலம் கிடைக்கும் ஆதாயம் சொற்பமே என்பதையும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இந் நிலைமையைப் போக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யும் நன்னிலையில் மத்திய அரசு இருக்கிறது.

எனினும், மத்திய அரசின் நிதிவாயில்களைக் கணக்கிடுகையில், மாநில அரசுகள் எதிர்பார்க்கும் நிதிவாயில் விஷயத்தில் கணக்கிடுவது போல் மூலதன முதலீட்டிலிருந்து கிடைக்கும் என்று கருதுகிற குறைந்தளவு ஆதாயத்தையும், நிலுவைத் தொகை வசூலையும் நிதிக்குழு கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தலாம்.

வினா 5.26 :

மாநிலங்களின் நலனுக்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 269 (d) பிரிவின்கீழ் மத்திய அரசு 1957ஆம் ஆண்டில் முதன் முதலில் ரயில் பயணிகள் கட்டணத்தின் மீது வரி விதித்தது. இச் சட்டம் 1961-ல் ரத்து செய்யப்பட்டது. இதற்குப் பதிலாக ரூ. 23.12 கோடி மானியம் தற்போது மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரி தொடர்ந்து விதிக்கப்பட்டிருந்தால், உயர்த்தப்பட்ட தற்போதைய ரயில் பயணிகள் கட்டணத்தின் மீதான வரி மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவுக்கு உயர்ந்திருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பயணிக் கட்டண வரிக்குப் பதிலாக மானியம் திருத்தியமைக்கப்பட்டு ரயில் கட்டண வசூல் தொகை உயர்வுக்கு ஏற்ப அதே வீதாச்சாரத்தில் மானியமும் உயர்த்தப்பட வேண்டும்.

மாநிலங்கள் எழுப்பியுள்ள இப்பிரச்சினை குறித்து உங்களுடைய கருத்து யாது ?

விடை 5.26 :

இது, 8ஆம் நிதிக் குழுவுக்கு அனுப்பப்பட்ட குறிப்பின் I தொகுதி, Vஆம் அத்தியாயத்தின் 1, 2.1, 2.2, 3,4ஆம் பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கீழே உள்ள அட்டவணை 11 ஆண்டுகளில் ரயில் பயணிகள் கட்டண வசூல் மூன்று மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. எனவே, பயணி கட்டண வசூலில் ஏற்படும் உயர்வைக் கருத்திற்கொண்டு அது உயரும் அதே வீதாச்சாரத்தின்படி நிதிக் குழு மாநில அரசுகளுக்கு இழப்பீடு செய்ய வேண்டும் என்பதுதான் நியாயம்.

அட்டவணை

இந்திய ரயில்களில் பயணம் செய்யும் பயணிகள் மூலம் கிடைக்கும் வருவாய் (அனைத்திய புள்ளிவிவரங்கள்.)

ஆண்டு.	புறநகர்.	புறநகர் அல்லாத மற்றவை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1969–70	28,65	2,50,21	2,78,86
1970–71	29,94	2,65,55	2,95,49
1971–72	32,14	2,87,99	3,20,13
1972–73	35,67	3,08,14	3,20,13
1973–74	38,73	3,28,42	3,67,15
1974–75	41,50	3,71,05	4,12,55
1975–76	50,53	4,63,59	5,14,12
1976–77 (திருத்த மதிப்பீடு)	(கிடைக்க வில்லை.)	(கிடைக்க வில்லை.)	5,72,19
1977–78	61,92	5,59,73	6,21,65
1978–79	66,80	6,05,97	6,72,77
1979–80	78,32	6,60,50	7,38,82
1980–81	90,52	7,36,95	8,27,47
1981–82 (வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு.)	(கிடைக்க வில்லை.)	(கிடைக்க வில்லை.)	9,31,75
1982–83 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு)	(கிடைக்க வில்லை.)	(கிடைக்க வில்லை.)	11,94,19

வினா 5.27 :

சட்டமன்றத்துடன் கூடிய மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகள் நான்கு உள்ளன. மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளும் கணக்கில் கொள்ளப்பட்டு வருமானவரி, மத்திய ஆயத்தீர்வை ஆகியவை மூலம் கிடைக்கும் வருவாயில் அப்பகுதிகளுக்கும் பங்குகள் ஒதுக்கப்பட்டபோதிலும் அவற்றுக்கு மத்திய அரசு தனியாக உதவி மானியம் மட்டுமே வழங்குகிறது என்றும் இவ்வாறாக, மத்திய வரிகளில் அவற்றுக்குக் கிடைக்கும் பங்கு கிடைக்காமல் செய்யப்படுகிறது என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்குறைபாடு நியாயமானதா ? ஆம் எனில், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கும் உரிய வரிப்பங்கு கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்த என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று நீங்கள் தெரிவிக்கிறீர்கள் ?

விடை 5.27 :

இது குறித்து நாங்கள் எவ்விதக் கருத்தும் தெரிவிக்க வேண்டியதில்லை.

வினா 5.28 :

இயற்கை சீற்றங்களினால் உண்டாகும் சேதங்களைச் சீரமைக்க மாநிலங்களுக்கு மத்திய நிதியுதவி ஒதுக்குவது பற்றிய தற்போதைய ஏற்பாட்டின் செயல்பாடு குறித்து உங்களுடைய கருத்துக்கள் யாவை? நிவாரண உதவித் தொகை உரிய அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த நீங்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறீர்கள்?

விடை 5.28 :

8ஆம் நிதிக் குழுவிற்களிக்கப்பட்ட குறிப்பாணையின் தொகுதி I, அத்தியாம் Xன் 5, 9, 10, 11, 13 ஆம் பாராக்களில் இந்த அரசின் கருத்துக்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகள் விரிவாகவுள்ளன. எனவே, அவற்றை அவ்வாறே, வைத்துக் கொள்ளலாம். மேலும், இந்திய அரசு நிவாரணம் தொடர்பான செலவுக்கு உச்சவரம்பை நிர்ணயிப்பதோடு மட்டுமின்றி, மொத்த உச்ச வரம்புத் தொகையை வெவ்வேறு பிரிவுகளுக்கும் ஒதுக்கீடும் செய்கிறது என்ற ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கு சுட்டிக் காட்டலாம். இந்த ஒதுக்கீடு தேவையற்றது என்பதோடு தீமை விளைவிப்பதாகவும் உள்ளது. முதற்கண், பொது மக்களோடு நேரடித் தொடர்புள்ள மாநில அரசுகள், தேவைகளைக் கருத்தில் கொண்டு தேவைக்கேற்ப ஒதுக்கீடுகள் செய்வது குறித்துத் தீர்மானிக்க இயலும். இரண்டாவதாக, இயற்கை சீற்றம் ஏற்பட்டு பல மாதங்கள் கழிந்த பிறகே மத்தியக் குழு அப்பகுதிகளைப் பார்வையிடுகிறது. இச் சூழ்நிலையில், மாநில அரசு, மத்தியக்குழு ஒதுக்கீடு செய்யும் தொகைக்காக எதிர்பார்த்திருக்குமேயானால், இவ்வாறான காலதாமதத்தால், நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் நோக்கம் நிறைவேறாது போய் விடுகிறது. எனவே, தகுதியான இனங்கள் குறித்து வழங்கவேண்டிய உச்ச வரம்பு நிதி உதவித் தொகையை இந்திய அரசு மதிப்பீடு செய்துவிட்ட பிறகு, அத் தொகையை பல்வேறு துறைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை மாநில அரசுகளிடம் விட்டுவிட வேண்டும். மேற்சொன்ன தொகை தகுதியான இனங்களுக்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளதா என்பதை இந்திய அரசு உறுதி செய்து கொள்ளலாம். ஆனால், தகுதியான இனங்கள் ஒவ்வொன்றிற்கும் செலவிடக் கூடிய தொகைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் உச்சவரம்பு நீக்கப்படவேண்டும்.

வினா 5.29 :

இந்திய அரசும், மாநில அரசுகளும் பங்கேற்கும் வகையிலான மூன்று அனைத்திந்திய நிறுவனங்களை இத்தகைய நிறுவனங்களில் மத்திய அரசு ஆற்றவேண்டிய எஞ்சியுள்ள பணியை நீக்கிவிடாமல் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது :—

(1) நிதி உதவி வழங்கும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் செயலாற்றக்கூடிய தேசியக் கடன் வழங்கும் கழகம் (NLC) ஏற்படுத்தப்பட வேண்டும். அது கடன் திரட்டுதல், கடன் தொகையை ஆக்க வளமுடைய பொருளாதாரநிலையில் தனித்தியங்கவுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

(2) தேசிய கடன் வழங்கும் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் (NCC). இக் குழுவில் மாநில அரசுகளுக்கு ஓரளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். கடன் பெறுவதற்கான வாயில்களை மதிப்பிடுதல், பண வீக்கம் ஏற்படாமல் கடன் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை அதிகரித்தல் ஆகிய பணிகள் அதனிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மாநிலங்கள் அனைத்திற்கும் வழங்கப்படக் கூடிய பங்குத் தொகை குறித்து இக் குழு நிர்ணயிக்க வேண்டும். ஆனால், அவ்வாறு வழங்கப்படும்தொகை 40 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது. மாநிலங்கள் எந்தப் பொதுவான வகைக் காரியங்களுக்காக தங்களது பங்குத் தொகையைத் தங்கள் திட்ட அமைப்பில் பயன்படுத்த இயலுமோ அந்தப் பொதுவான வகைக் காரியங்களையும் இக் குழு குறிப்பிடலாம்.

(3) தேசியப் பொருளாதாரக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் (NEC) : இக்குழுவில் மாநில அரசுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். இக் குழு வணிக, தொழில் கொள்கைகள், பொருளாதார நிருவாகம் ஆகியவற்றில் தேசிய நலனைக்கருத்தில் கொண்டு செயலாற்றுவதோடு, மாநிலங்களில் தொழில் உரிமம் வழங்குதல், ஏற்றுமதி இறக்குமதி உரிமங்கள், உதவித் தொகைகள், ஊக்கத் தொகைகள், வேலை வாய்ப்பு முதலியவற்றின் நலன்களையும் கருத்தில் கொண்டு செயலாற்றும். தேசிய கடன் வழங்குக் கழகம், தேசியக் கடனுதவிக் குழு ஆகியவற்றிற்கும் இக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

மேற்சொன்ன மூன்று அமைப்புகளின் ஆண்டு அறிக்கைகள், விவாதிக்கப்படுவதற்காகவும், அந்த அறிக்கைகள் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்காகவும் நாடாளுமன்றத்தின் முன்பும், தகவலுக்காக, மாநில சட்டமன்றங்களின் முன்பும் வைக்கப்பட வேண்டும்.

இக் கருத்துக்கள் தொடர்பாக நீங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்கள்யாவை ?

விடை 5.29 :

ஆதாரங்களை (நிதி வாயில்கள்) மாற்றும்முறை நிதிக்குழுவின் மூலமாக மட்டுமே நடைபெற வேண்டும் என்ற கொள்கையை மாநில அரசு

வலியுறுத்தலாம். அப்போது தான் இப் பிரச்சினை குறித்து ஒட்டு மொத்த நீண்டகால நோக்குடன் ஒருங்கிணைந்த அணுகு முறைகளைப் பின்பற்ற இயலும்.

வினா எண் 5.30 :

நிதியை யார் வசூலிக்க வேண்டும், வசூலித்த நிதியை எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டுமென்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி முழுவதும் பொது மக்களிடமிருந்து வசூலிக்கப் படுவதால், இக்கருத்து சம்பந்தப்பட்டதல்ல. இவ்வாறு பெறப்பட்ட நிதி முழுவதும் மதி நுட்பத்துடன் பொது மக்களின் பயனுக்காகவே செலவிடப்பட வேண்டியதே இதன் முக்கிய குறிக்கோளாக அமைய வேண்டும்.

நீங்கள் இதை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

விடை 5.30 :

இவ்வினாவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசுக்கு முக்கிய பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென திட்டவட்டமான நிதி வாயில்களும் வழங்கப்பட்டுள்ளன. நிதி முழுவதும் பொது மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன என்று வாதிடுவதன் மூலம் மேலும் பணியை, யாரா நிறைவேற்றுவதாக இருந்தாலும் அத் தொகை முழுவதும் பொது மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசின் நடவடிக்கைகளில் தலையீடு செய்யக் கூடாது.

வினா எண் 5.31 :

(அ) மத்திய அரசின் செலவுகள், நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் மேற் கொள்ளப்படவில்லை என்றும், இவ்வாறு செய்வதற்குப் பதிலாக வீணான, தேவையற்ற சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் குறை கூறப்படுகிறது. மத்திய அரசு செலவிடும் தொகைகள் குறித்து ஆய்வு மேற் கொள்ளப்படுவதன் மூலம், அவர்கள் செலவிடும் தொகையளவைக் கட்டுப்படுத்தலாம் என்றும், மாநிலங்களுக்கு உதவுவதற்காக, குறிப்பாக மிக வறிய நிலையில் உள்ள மாநிலங்களுக்கு உதவுவதற்கென கூடுதல் நிதி வாயில்கள் கண்டறியப் படலாம் என்றும், பல்வேறு மாநிலங்களிலிருந்து கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமென்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?

(ஆ) குறைந்த அளவிலேயே வளர்ச்சிவாயில்கள் உள்ளன என்று புகார் எழுப்புகின்ற மாநிலங்கள், மேலும் மேலும் தேவையற்ற செலவினங்களைச் செய்து வருகின்றன என்றும், அத்தகைய செலவினங்கள் பொருளாதாரக் காரணங்களுக்கென மேற்கொள்ளப்படாமல் பொதுமக்களைக் கவர வேண்டும் என்ற காரணங்களினாலேயே மேற் கொள்ளப்படுகின்றன என்றும், இதன்பின் ஏற்கெனவே மேம்பாட்டுப் பணிகளுக்காகக் கிடைக்கக்கூடிய பற்றாக்குறையாகவுள்ள நிதி வாயில்களின் அளவைக் குறைத்துவிடுகின்றன என்றும் உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

நீங்கள் இதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

(இ) மேற்சொன்ன இரு காரணங்களுக்காகவும், மத்திய, மாநில அரசுகள் நிறைவேற்றவேண்டிய நியாயமான கடமைகளை மனநிறைவளிக்கும் வகையில் நிறைவேற்றுவதற்காக, செலவினம், செலவினத்தின் தன்மை மத்திய, மாநில அரசுகளின் வருவாய் வாயில்களை ஏற்படுத்துவதற்கான அவசியம் ஆகியவை குறித்து மதிப்பீடு செய்வதற்காக தேசிய அளவில் செலவீட்டுக் குழு ஒன்றை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டியது அவசியமென்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் இதை ஏற்றுக்கொள்கிறீர்களா ? அல்லது, வேறு ஏதேனும் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறீர்களா ? அவ்வாறாயின், அத்தகைய கருத்தை விரிவாகக் குறிப்பிடவும்.

விடை 5.31 :

எட்டாம் நிதிக் குழுவிற்களிக்கப்பட்ட குறிப்பாணையின் தொகுதி I, அத்தியாயம் I, 22, 23, 24-ஆம் பாராக்களில் இவ்வரசின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வினா 5.32 ;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 150ஆம் பிரிவின் பகுதி V-ல் கூறப்பட்டுள்ளவாறு இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் வழங்கக் கூடிய ஆலோசனைகளின்படி, இந்தியக் குடியரசுத் தலைவர் வரையறுக்கக்கூடிய படிவத்தில் மத்திய அரசு, மாநில அரசுகள் ஆகியவற்றின் கணக்குகளை வைத்துவர வேண்டும். இதைப் போலவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151ஆம் பிரிவின்படி மத்திய அரசு தொடர்பான கணக்குகளை குடியரசுத் தலைவருக்கும் மாநில அரசுகள் தொடர்பான கணக்குகளை அந்தந்த மாநில ஆளுநர்களுக்கும் இந்தியக் கணக்குத்துறைத் தலைவர் அனுப்பிவைக்கவேண்டும். குடியரசுத் தலைவர், அவருக்கு அனுப்பப்படும் கணக்குகளைப் பாராளுமன்றத்திலும், மாநில ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கணக்குகளை அவரவர்கள் மாநில சட்டமன்றங்களிலும் வைக்கவேண்டும்.

மத்திய மாநில அரசுகளின் உறவைக் கருத்தில் கொண்டு, கணக்குகளை உரிய காலத்தில், முறையாகத் தயாரித்து, ஆய்வு செய்து, சரி பார்ப்பதில் தங்களுக்குத் தெரிய வரும் செயல்பாட்டுப் பிரச்னைகள் அவற்றால் ஏற்படும் விளைவுகள் யாவை? இன்றியமை யாதென நீங்கள் கருதுகிறீர்களா?

வினா எண் 5.33 :

தற்போதுள்ள தணிக்கை முறை, கைச்சாத்துக் களை தணிக்கையிடுவதையே நம்பியுள்ளது. ஆனால் மதிப்பீட்டுத் தணிக்கை முறையைப் பின்பற்றுவதே விரும்பத்தக்கதாகும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. தணிக்கையில் திறன், உரிய காலத்தில் தணிக்கை செய்தல் ஆகிய நோக்கங் களை 'மதிப்பீட்டுத் தணிக்கை' முறையுடன் இணைத்து எந்த அளவிற்கு முன்னேற்றமடையச் செய்யலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? இது குறித்துக் கருத்தேதும் தெரிவிக்க விரும்பி னால் திட்டவட்டமானக் கருத்துக்களைத் தெரிவிக்கவும்.

வினா எண் 5.34 :

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், மத் திய, மாநில அரசுகளின் கணக்குகள் தொடர்பாக, அரசியலமைப்புச் சட்டத்தின் படியும், சட்டப்படி, பாராளுமன்றம் அளிக்கக் கூடிய பணிகளையும் கடமைகளையும், நிறைவேற்றுபவராவார். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் மத்திய, மாநில அரசுகளின் கணக்குகளைச் சோதனையிடத்தேவை யான அளவிற்குத் தன்னால் இயன்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதில்லை என்று மூன் றாம் நிதிக்குழுவின் தலைவர் திரு. அசோக் சந்தா சுட்டிக் காட்டியுள்ளார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 149ஆம் பிரிவின்கீழ், இந்திய நாடாளுமன்றம் 1971ஆம் ஆண்டில் (1976 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது) இந்திய தணிக் கைத் துறைத் தலைவரின் கடமைகள், அதிகாரங் கள் ஆகியவற்றை விளக்கும் சட்டத்தை இயற்றியது.

திரு. அசோக் சந்தாவின் கருத்துகளுக்கு இது பதிலளிப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா? மத்திய, மாநில அரசுகளின், செலவினங்களைத் தீவிரமாகக் கண்காணிக்கும் வகையில், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருக்குப் போதிய அதிகாரங்களையும், கடமைகளையும் இச் சட்டத்தின்படி நாடாளுமன்றம் அளித்துள்ளதா?

வினா எண் 5.35 :

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், மத்திய அரசின் கணக்குகள் தொடர்பாக நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்யப்படும் அறிக்கை தொடர் பாகவும் மாநில அரசுகளின் கணக்குகள் தொடர்பாக மாநிலச் சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் தொடர் பாகவும், முறையே இந்தியக் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்கள் ஆகியோருக்கு மட்டுமே பதிலளிக்கக் கடமைப் பட்டவராவார். பின்னர் நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்கள் ஆகியவை நிதி நடைமுறை வரம்பு களைப் பின்பற்றுவதற்குத் தேவையானவை என்று கருதக்கூடிய சோதனை முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நாடாளுமன்றம், மாநிலங்களின் சட்ட மன்றங்கள் ஆகியவற்றில் தாக்கல் செய்யப்படும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகள், போதிய அனைத்து விவரங்கள் அடங்கியவையாகவும், இது குறித்து அவை உறுதியான முடிவெடுப்பதற்குத் துல்லியமான விவரங்கள் அடங்கியவையாகவும் உள்ளன என்று நீங்கள் கருதுகிறீர்களா? அவ்வாறில்லாதாயின், மேற்சொன்ன அறிக்கைகள் தொடர்பாக என்ன முன்னேற்றம் செய்யலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

வினா எண் 5.36 :

நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு வும், மாநிலச்சட்டமன்றங்களின் பொதுக்கணக்குக் குழுக்களும், பொது நிறுவனங்கள் குழுவுடன் இணைந்து இந்தியத் தணிக்கைத்துறைத்தலைவரின் அறிக்கைகளைப் பரிசீலனை செய்கின்றன, மேலும் மிக முக்கியம் என்று அவை கருதக் கூடிய விஷயங்கள் குறித்து மேலும் ஆராய்கின்றன. மேற்சொன்ன பணியில், இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவர் அவற்றிற்கு உதவி செய்கிறார்.

மத்திய, மாநில அளவில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் போதிய அளவு மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்ட புகார் தொடர்பாக, மேற்கூறிய முறை போதிய தடுப்பு நடவடிக்கையாக உள்ளது என நீங்கள் கருதுகிறீர்களா?

வினா எண் 5.37 :

நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகி யவற்றின் மதிப்பீட்டுக் குழுக்கள், இந்தியத் தணிக் கைத் துறைத் தலைவர் நாடாளுமன்றம் மாநிலச் சட்ட மன்றங்கள் ஆகியவற்றிற்கு அளிக்கும் அறிக் கைகளில் குறிப்பிடப்படாமல் விடுபாடு ஏற்பட் டுள்ள, கொள்கைகள், திட்டங்கள் ஆகியவை குறித்து விரிவாகப் பரிசீலித்து, அவை தொடர்பாக மேற்கொள்வது அவசியமானது என்று கருதக் கூடிய மேம்பாடுகள் குறித்து அரசுகளுக்கு ஆலோசனை வழங்குகின்றன. மத்திய அரசு, மாநில அரசுகள் ஆகியவற்றின் செலவினங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்வதில், இக்குழு கண்காணிப்புக் குழுவாகச் செயல்பட்டு, பயனுள்ள சட்ட, நிருவாக ஆலோசனைகளை அரசு நிருவாகத்திற்கு வழங்க வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

வினா எண் 5.38 :

மத்திய மாநில அரசுகள், எந்தெந்த இனங்களுக்குச் செலவு செய்யவேண்டுமென்பது குறித்து மதிப்பீடு செய்வதற்காக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருக்கு அரசியலமைப்புச் சட்டத்தின்படி அதிகாரம் ஏதும் வழங்கப்படாதிருப்பின், அத்தகைய அதிகாரத்துடன் கூடிய செலவினம் குறித்த மதிப்பீட்டுக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமென்று நீங்கள் கருதுகிறீர்களா ?

விடை 5.32 முதல் 5.38 :

மேற்சொன்ன வினாக்கள், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், பொதுக் கணக்குக் குழுக்கள், மதிப்பீட்டுக் குழுக்கள் ஆகியவற்றிற்கு செலவினங்களைப் பரிசீலனை செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகள் பற்றியவையாகும். மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், மாநிலக் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கும், அக் கணக்குகள் தொடர்பாக அனைத்து விவரங்களுடன் விரிவான அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் வைப்பதற்கும், தற்போது பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையே போதிய அதிகாரமளிக்கிறது என்பதை ஈண்டு குறிப்பிடலாம். அவர் கவனிக்காமல் விட்டுப்போன கருத்துக்கள் குறித்து, பின்னர், பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவை விரிவாகப் பரிசீலனை செய்கின்றன. எனவே, பொதுமக்களின் வரித் தொகை முறையாகவும், பொதுமக்களின் பிரதிநிதிகள் மூலம் நிருவாகத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த வாய்ப்புக்கிணங்க உரிய வகையில் செலவிடப் படுகின்றதா என்பதைக் கவனிப்பதற்காகத் தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகளே போதுமானவையாகும். செலவினங்கள் குறித்த குழுவை ஏற்படுத்துதல் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து யாதெனில், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் தெரிவித்துள்ள பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு சட்டமன்றத்தின் குழுக்கள், செலவினத்தின் தகுதி குறித்து ஏற்கெனவே விரிவாகப் பரிசீலனை செய்திருக்கும் நேர்வில், மேற்சொன்ன குழுவை ஏற்படுத்துதல் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து பொதுவாக மறுக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய, மாநில அரசுகள் செய்துள்ள செலவினங்களின் தகுதி குறித்து மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக, செலவினம் குறித்த குழு ஏற்படுத்தப்பட்டிருந்தால், கடந்த ஆண்டுகளில் மத்திய திட்டக் குழுவில் மத்திய அரசு தேவையற்ற வகையில் தனது செல்வாக்கைச் செலுத்துவதைப் போலவே, இக் குழுவிலும், மத்திய அரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கும் என்பதோடு, இத் திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்தப்படுமேயாயின், நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டாட்சி முறைக்கு எதிராகவும் அமையும்.

வினா எண் 5.39 :

குறிப்பிட்ட திட்டத்திற்காகத் தொகை செலவிடப் பட்ட பிறகு, செலவுக் கணக்குகளைக் கண்காணிப்பதற்கு மாநில அரசுகள் மறுப்பு ஏதும் தெரிவிக்காதிருந்தபோதிலும், மாநில அரசுகளால் தயாரிக்கப்பட்ட செயல் திட்டங்களுக்கு மத்திய அரசின் சம்பந்தப்பட்ட நிருவாக அமைச்சகத்தால், இசைவளிக்கப்பட வேண்டும் என்பது எரிச்சலூட்டுவதாகவும், மிகுந்த கால தாமதம் ஏற்படுத்துவதாகவும் உள்ளது என்று சில மாநில அரசுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட தொகையின் செல்திறன் குறித்துத் தீர்மானிப்பதற்காக, இத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாநில அரசுகளுக்கு (ஏனைய முகவரமைப்புகளின் இடையீடு ஏதுமின்றி) அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

மேற்சொன்ன கருத்து தொடர்பாகத் தங்களுடைய கருத்து என்ன ? ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை, அக்காரியத்திற்காக மட்டுமே செலவிடப்பட்டது என்பதை மத்திய அரசு அறிந்து கொள்வதற்குரிய ஏனைய வழிகள் யாவை ?

விடை 5.39 :

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மத்திய அரசு இயன்றவரை படிப்படியாகச் செயல்படுத்தவேண்டுமென்பதும் அரசியலமைப்புச்சட்டத்தின்படி மாநிலங்களுக்கென்று திட்ட வட்டமாக ஒதுக்கி வைக்கப்பட்ட துறைகளிலிருந்து, மத்திய அரசு அறவே விலகிக்கொள்ள வேண்டுமென்பதும் நமது வாதமாகும். மாநில அரசுகள் மட்டுமே மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன என்பதால், மக்களின் தேவை குறித்து மாநில அரசுகள் மட்டுமே அறிந்து கொள்ள இயலும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே, தற்போதுள்ள திட்டப் பணிகளைப் பொறுத்த மட்டிலும்கூட மாநில அரசுகளால் தயாரிக்கப்பட்ட செயல் திட்டங்களுக்கு மத்திய அரசின் சம்பந்தப்பட்ட நிருவாக அமைச்சகத்திடமிருந்து இசைவைப் பெற வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்துவதில் நியாயமேதும் இல்லை என்று தோன்றுகிறது. அத்தகைய வரைமுறைகள் காலதாமதம் ஏற்படுவதற்கு வகை செய்வதோடு, மத்திய, மாநில அரசுகளுக்குடையே மனக்கசப்பையும், மாநில அரசுகளுக்கு எரிச்சலையும் ஊட்டுவதாக அமையும். பொதுமக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுகள்தான் பொதுமக்களுக்கு பதிலளிக்க வேண்டும் ; மேலும், மாநில அரசுகள் மட்டுமே தங்களது திட்டங்களைப் பொதுமக்களின் தேவைக்கேற்பத் திட்டமிடவும் அவற்றை நிறைவேற்றவும் இயலுமென்பதைக் கருதிப் பார்க்க வேண்டும்.

பாகம் VI.

பொருளாதார-சமூகத் திட்டப் பணிகள்.

''பொருளாதார-சமூகத் திட்டப் பணிகள்'' என்கிற தலைப்பும் இதனைப் பொதுப் பட்டியலின் III பட்டியலில் 20ஆம் பதிவாகச் சேர்த்துள்ள ஏற்பாடும், பொருளாதார-சமூகப் பணிகள் குறித்துத் திட்டமிடுவது மத்திய—மாநில அரசுகளின் தேவை அவசியம் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதற்குரிய அறிகுறியாகவே திகழ்கிறது. இன்றுள்ளவாறு, திட்டக் குழுவும், தேசிய வளர்ச்சிக் குழுவும் மத்திய அரசு நிறைவேற்றுகின்ற தீர்மானங்களின் படி செயல்பட்டு வருகின்றன. 280ஆம் பிரிவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிக்குழுவைப் போன்றல்லாமல், திட்டக்குழு தேசிய வளர்ச்சிக் குழு ஆகிய இரண்டும் சட்டப்படிக்கான ஆதாரம், அங்கீகாரம் ஆகியவை இல்லாமல் பரிந்துரை செய்யும் அமைப்புகளாக செயல் பட்டு வருகின்றன. தேசிய வளர்ச்சிக் குழு அதனுடைய பெயருக்கேற்றவாறு தேசிய நிறுவனமாக செயல்பட வேண்டுமென்றாலும் அது தேசிய பிரச்சினைகளை விவாதிக்காமல், சிறப்புத் திட்டங்களுக்காக மாநில அரசுகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்குரிய ஓர் அமைப்பாக ஆகியுள்ளது. அதனுடைய நிலை கணிசமாகக் குறைந்துள்ளது. அது தன்னுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய ஓர் அமைப்பாக செயல் பட்டு வருகிறதேயன்றி தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவில்லை. மேற் சொன்ன இரண்டு அமைப்புகளும் ஓரளவு அரசியல் சார்புடைய அமைப்புகளாகச் செயல் பட்டு வருகின்றன என்று அரசியல் மேதைகளும் பொருளாதார வல்லுநர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்; எல்லா விஷயங்களிலும் அந்த அமைப்புகள் மத்திய அமைச்சரவையின் ஒருங்கிணைந்த ''உயர் அமைச்சரவையாக செயல்பட்டு வருகின்றன'' என்று நீதிபதி சுப்பாராவ் கோடிட்டுக் காட்டியுள்ளார். பொதுப் பட்டியல், மாநிலப் பட்டியல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், அவற்றிற்காக, திட்டக்குழு செயல் பட்டு வந்துள்ளபோதிலும் அது மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஓர் தனி அமைப்பாகவே செயல்பட்டு வருகின்றது. எனவே, திட்டங்களைத் தயாரித்தல் அதனை நிறைவேற்றுதல் ஆகிய விஷயங்களைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் விருப்பமானது 282 ஆம் பிரிவின்கீழ் சட்டப்படிக்கல்லாத விருப்புரிமை மானியங்களைக் கணிக்கும்போது தெளிவாகத் தெரிய வருகிறது. தேசிய வளர்ச்சிக் குழு, திட்டக் குழு ஆகியவற்றின் பரிந்துரையின் அடிப்படையில் ஒட்டுமொத்த மானியங்கள்-கடன்கள் ஆகிய வகையில் மாநிலங்கள் தங்களுடைய விருப்பத் தொகையினைப்பெறும் என்று எதிர்பார்க்கப் படுகின்றன; ஆனால், மாநில அரசுகள் தாங்கள் ஏற்றுக்கொண்டு தயாரித்துள்ள தனிப்பட்ட திட்டங்களின் தேவையின் தன்மையைப்பற்றிக்கூட அவ்விரு குழுக்களும் ஆழ்ந்து அதிக கவனம் செலுத்தி ஆய்வதில்லை.

சமூக-பொருளாதார திட்டப் பணிக்காக, திட்டக்குழு தனித்து இயங்கும் வகையில் உரிமை அளிக்கப்பட்டாலும், மத்திய அரசையும், மாநில அரசுகளையும் ஒரே சமயத்தில் கலந்தாலோசிப்பதற்கு சம உரிமை இருந்தாலும், மாநிலங்களின் முன்னேற்றத்திற்கான நிதி ஆதாரங்களைப் பெறும் விஷயத்தில் மாநில சுயாட்சியை மத்திய அரசு எதிர்க்கிறது என்ற கருத்து தவிர்க்கப்படலாம். மாநிலத் திட்டங்களுக்குத் திட்டமிடும் விஷயத்தில் மட்டுமன்றி, தேசியத் திட்டங்களுக்கும் திட்டமிடும் ஒருமித்த இணைந்த முயற்சி குறித்துக் கருதிப் பார்க்க வேண்டும். திட்டக்குழு தேசிய வளர்ச்சிக் குழுவைக் கலந்தாலோசித்து மொத்தத்தில் மக்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இணங்க மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் நாட்டினுடைய நிதிவாயில்களைச் சமமாகப் பகிர்ந்தளிக்க உறுதி செய்யும் வகையில் அது தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். பெருந்திட்டங்களை வகுக்கும் போது மத்திய அரசின் தலையீடு இருப்பதாக அறியப்படுகிறது. இதற்கடுத்த நிலையில் மத்திய அரசு திட்டங்களைப் பொறுத்தமட்டில் தேசிய வளர்ச்சிக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு, பரிசீலிக்கையில் இத்தகைய திட்டங்களை மாநிலங்களில் செயல்படுத்த மாநில அரசுகள் முக்கிய பங்கு வகித்தபோதிலும்கூட இத்தகைய திட்டங்கள் குறித்து மாநில அரசுகளின் கருத்துகளுக்குக் குறைவான முக்கியத்துவமே அளிக்கப் படுகிறது.

திட்டக்குழுவை, சட்டப்படி அமைந்த ஓர் அமைப்பாக அமைக்கவேண்டியது அவசியம்என்பது ஒருபுறமிருக்க, பல்வேறு மனப்பான்மைகள், கருத்துக்கள், இயற்பியல் ஆன்மீக நிலைகளைக் கொண்டுள்ள இந்தியாவின் பரந்துபட்ட அமைப்பு முறையைத் திட்டக்குழு கருத்தில் கொண்டு, அது தன் நடவடிக்கைகளை அதற்கேற்ப மேற் கொள்ள வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள், திட்டங்கள் ஒருமைத் தன்மையானதாகவும் ஒரே இடத்தில் குவிந்துவிட்டிருப்பதாகவும் இருக்கும் நிலையைத் தவிர்த்து மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உடனடியாகப் பயனளிக்கக் கூடிய வகையில் திட்டங்களை மக்களாட்சி முறையில் வகுக்கும் வகையில் இருக்க வேண்டும். நீதிபதி சுப்பாராவ் சுட்டிக்காட்டியபடி, திட்டமிடுதல் என்பது ''மக்களாட்சி முறையில் திட்டமிடுதலாக இருக்க வேண்டும்.'' திட்டமிடும் பணி, அதிக அளவில் ஒரே இடத்தில் அமைந்து விடுவதாலும், ஏதேச்சதிகார முறையில் இருப்பதாலும் சொந்த முயற்சியால் ஏற்படக்கூடிய பயன்கள்

அற்றுப்போகும் வகையில் இருக்கக்கூடாது. திட்டங்கள் என்பது ஐந்தாண்டு கால அளவில் செயல்படுத்தக்கூடியவை என்று கருதும் வகையில் இருக்கக்கூடாது. இது, நடப்பு நிலையில் அல்லது தொடக்க நிலையில் இருக்கக்கூடிய போக்குகளைத் தொடர்ந்து கவனிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஐந்தாண்டுகால அளவிற்குள்கூட அவசியம் ஏற்படும்போதெல்லாம், அத்தகைய திட்டங்களை மறு ஆய்வு செய்து, புதிய தேவைகளுக்கேற்ப அவற்றை சரி செய்ய வேண்டும்.

மேலும், 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்தல்) சட்டமும் அரசியலமைப்புச் சட்டத்தின் மத்திய அரசுப் பட்டியலின் 52ஆம் பதிவும் தவறான எண்ணத்தை உருவாக்கியுள்ளன. இச்சூழ்நிலையில், பாகம் II (சட்டமியற்றுதல் தொடர்பான உறவுகள்) தொடர்பாகப் பரிசீலிக்கும்போது 52ஆம் பதிவில் சில திருத்தங்கள் தேவையென்று நாங்கள் கருத்து தெரிவித்துள்ளோம். மேற்சொன்ன முன்னுரையின் பின்னணியில் வினாக்களுக்கு இப்பாகத்தின்கீழ் இந்த அரசு பதிலளிக்கிறது.

வினா 6.1.—அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையின் பொதுப் பட்டியலில் உள்ள ''பொருளாதார-சமூகத் திட்டமிடல்'' என்ற பதிவு, நாட்டின் தேவைகளை நிறைவு செய்யவும், தேசிய முன்னுரிமைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கவும் தேசிய அளவில் திட்டமிடுகையிலும், துறை வாரியான, பகுதி வாரியான பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைக்கையிலும் மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் ஆய்வுக்குழுவும், வல்லுநர்கள் நடத்திய ஏனைய ஆய்வுகளும், ஏனையவற்றிற்கிடையே திட்டமிடலில் உள்ள தொடர்பு முறையில் காணப்படும் மூன்று குறைபாடுகளைக் குறிப்பிட்டுள்ளன :—

(1) அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளையும் முழுமையாகவும், வெளிப்படையாகவும், பரிசீலித்த பிறகு, குறிக்கோள்களையும், நோக்கங்களையும் தீர்மானிக்கும் முக்கியப் பணியை மேற்கொள்ளும் வகையில் திட்டங்களில் ஈடுபாடு இருக்காது. மாநிலங்களின் தேசிய வளர்ச்சி மன்றத்தின் மூலம் மாநிலங்களுடன் கலந்தாலோசிப்பது போதுமானதாக இல்லை. முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் கூட்டங்களில் கலந்தாலோசிக்கும் நடைமுறை, மேலெழுந்தவாரியாகவும் அவசரத் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது.

(2) மத்திய அமைச்சகங்கள் தாங்கள் உருவாக்கிய திட்டங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு வற்புறுத்துகின்றன. துறைக் குழுக்கள் மத்தியச் செயற் குழுவுடன் ''துறை ரீதியான தொடர்பு'' கொண்டிருப்பதால் மத்தியக் குழு, உருவாக்கிய திட்டங்களை சரியாக ஆய்வு செய்யாமல் ஏற்கும் போக்கு இருந்து வருகிறது.

(3) மாநில அரசின் ஆட்சி வரம்பிற்குள் முழுமையாக வருகின்ற சட்டப்படிக்கான திட்டங்களில் மத்திய அரசு அதிக அளவு தலையிடுகிறது.

மேற்சொன்ன குறைபாடுகளை களைய அல்லது அவற்றைக் குறைக்க நீங்கள் கூறும் பரிகார நடவடிக்கைகள், நடைமுறை மாற்றங்கள் யாவை ? அவற்றிற்கான காரணங்கள் யாவை ?

விடை.—ஏழாம் விவர அட்டவணையின் பொதுப் பட்டியலிலுள்ள பதிவு-20. மத்திய-மாநில அரசுகளுக்குப் பொருளாதார-சமூகத் திட்டத்தை உருவாக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகத் திட்டம் வகுப்பவர்களுக்கு உண்மையிலேயே ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. பொதுப்பட்டியலிலுள்ள அந்தப் பதிவு பொருளாதார சமூகத் திட்டத்தை உருவாக்குவதற்கு பயன்படுத்த வேண்டிய செயல்முறைத் திட்டங்களுக்கும் உதவியாக அமைகின்றது. நாடாளுமன்றம், சமூக பொருளாதாரத் திட்டங்களை வகுக்கும்போதும், சட்டங்களை இயற்றும்போதும் மாநிலச் சட்டமன்றத்தின் தீர்மானங்களை, ஒதுக்கித் தள்ளக் கூடாது. அதே சமயத்தில் மாநிலச் சட்டமன்றம், பொருளாதார—சமூகத் திட்டம் தொடர்பாகச் சட்டம் இயற்றும்போது மைய அரசுக்கு விஞ்சிச் செயலாற்றக் கூடாது. பொதுப் பட்டியலிலுள்ள இந்த பதிவு, இதனை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. பொருளாதார-சமூகத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் திட்டமிடுதலோ, பின்பற்றுதலோ அல்லது செயல்படுத்துதலோ எதுவாயினும் அது பற்றி மத்திய-மாநில அரசுகளுக்கிடையே ஓர் ஒருங்கிணைந்த செயல்முறை இருக்க வேண்டும் என்ற பொருளில்தான் இந்த விதித்துறை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். மேலே நமது முன்னுரையில் கூறியது போல, இந்தத் திட்டக் குழு உயர் அமைச்சரவை என்ற போர்வை போர்த்தியதாகவோ அல்லது மைய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஏகபோக மைய இயக்கமாகவோ கருதப்படுகிறது. எனவே, வல்லுநர்களால் நடத்தப்பட்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஆய்வுப் பிரிவு, திட்டமிடுதலில் உள்ள தொடர்பு முறையில் காணப்படும் மூன்று குறைபாடுகளைக் குறிப்பிட்டுள்ளது ; இவை வினாக்களிலேயே உள்ளன. இதனை மீண்டும் குறிப்பிடத் தேவையில்லை. ஆயினும், நிருவாகச் சீர்திருத்தக் குழு ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ள குறைபாடுகளைக் களைய அல்லது யாதொரு வகையில் குறைக்க எத்தகைய பரிகார நடவடிக்கைகள், நடைமுறை மாற்றங்கள் தேவை என்பதுதான் நம் முன்புள்ள கேள்வி.

தற்போதுள்ள குறைகளைக் களையும் செயல் நோக்கத்திற்காகப் பின்வரும் கருத்துரைகளைத் தெரிவிக்கிறோம் :—

(1) மத்தியத் திட்ட வாரியம் ஒன்றை ஏற்படுத்தும் பொருட்டு, பொதுப் பட்டியலின் 20ஆம் பதிவு தொடர்பாக அரசு நாடாளுமன்றம், சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும். அதன் அமைப்பு முறை, அலுவல்கள், அதிகாரங்கள் ஆகியவற்றைத் தெளிவாக அது வரையறுக்க வேண்டும். மத்திய அரசு தொடர்பான மத்தியத் திட்டங்களைப் பட்டியலிட்டு கிடைக்கின்ற மத்திய நிதி வாயில்களையும், திட்டங்களையும் பிரதேச வாரியாகவும் துறை வாரியாகவும் ஒதுக்குதல், அத்தகைய திட்டங்கள் முதலியவற்றிற்கு முன்னுரிமை அளித்துச் செயல்படுத்தல் ஆகியவற்றை மட்டும் மத்தியத் திட்ட வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அது தெளிவாக விளக்க வேண்டும்.

(2) மாநிலத் திட்டக் குழுவை ஏற்படுத்த மாநிலச் சட்ட மன்றம் சட்டமொன்றைத் தனியாக நிறைவேற்ற வேண்டும். அந்த மாநிலச் சட்டம், அவ்வாறு ஏற்படுத்தப்படும் மாநிலத் திட்டக் குழுவின் அமைப்பு, அவற்றின் அதிகாரங்கள், அலுவல்கள் பற்றிக் குறிப்பிடவேண்டும். மாநிலத்தில் கிடைக்கப் பெறும் நிதிவாயில்கள், மாநிலம் தொடர்பாகத் தீட்டப்படும் மாநிலத் திட்டங்கள், அத்திட்டங்களை பிரதேச அடிப்படையிலும் துறை அடிப்படையிலும் ஒதுக்குதல், அத்திட்டங்களுக்கு முன்னுரிமை நிர்ணயித்தல் முதலிய பணிகளை மட்டுமே மாநிலத் திட்டக் குழு கவனிக்க வேண்டுமென மாநிலச் சட்டம் தெளிவாகக் கூற வேண்டும்.

(3) மத்திய, மாநிலத் திட்டக் குழுக்களால் அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டங்கள் குறித்துப் பரிசீலிக்க வேண்டி அவற்றை தேசிய வளர்ச்சி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும். தேசிய வளர்ச்சி மன்றம், வல்லுநர் ஆலோசனைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அக்குழுவில், பொருளாதார நிபுணர்கள், அறிவியலறிஞர்கள், நிர்வாக வல்லுநர்கள், சமூகவியல் வல்லுநர்கள், பொறியாளர்கள் ஆகியோர் இருக்க வேண்டும். மத்திய, மாநிலத் திட்டக் குழுக்கள் தெரிவித்தத் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள திட்டங்களுக்கு எவ்வாறு முன்னுரிமை கொடுப்பது, துறை வாரியாகவும் பிரதேச வாரியாகவும் எவ்வளவு ஒதுக்குவது, நிதித் தேவைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான காலக்கெடு முதலியன பற்றி இக்குழு தெளிவாகத் தெரிவித்து குறிப்பிட்ட காலத்திற்குள் ஆலோசனை நல்க வேண்டும்.

மத்திய, மாநிலத் திட்டக் குழுக்கள் தெரிவித்த திட்டங்களை பொருத்தமான இடங்களில் சரியாகச் செயல்படுத்த வேண்டுமென குழு பரிந்துரைக்கவும் வேண்டும். தேசிய வளர்ச்சி மன்றத்திற்கும் திட்டக் குழுவிற்கும் இடையே இணைப்புக் குழு என்ற வகையில் நிலைக்குழு ஒன்றை ஏற்படுத்துவதால் மத்திய, மாநில நிலைகளில் நாட்டிற்குப் பயன் விளைவிக்கக்கூடிய பொருளாதார, சமூகத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்த முடியும்; அவ்வாறு செயல்படுத்துவதால் அத்திட்டத்தின் நோக்கத்தாலும், அணுகு முறையாலும் தேசியத் தேவைகள் நிறைவு பெறுவதோடு மட்டுமின்றி மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றி நல்ல முன்னேற்றம் காண முடியும். இறுதியாக இந்த முறையினால் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே போதிய அளவு நிதிவாயில்களை உரியவாறு ஒதுக்க முடியும்.

(4) ஆலோசனைக் குழுவின் அறிக்கைக்கு ஒப்புதல் பெற வேண்டி அதனை தேசிய வளர்ச்சி மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்க வேண்டும். தேசிய வளர்ச்சி மன்றமானது இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தவுடன் மத்தியத் திட்டங்களை மத்திய அரசே நேரடியாகச் செயல்படுத்துகின்றது; அல்லது ஒட்டுமொத்த மானியங்களை அல்லது மத்தியத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மானியங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்து மத்தியத் திட்டங்களை மாநில அரசுகளால் செயல்படுத்துகிறது.

இத்திட்டங்களில் மத்திய அரசால் நிருவகிக்கப்படும் திட்டங்கள் எவையென்றும் ஒட்டு மொத்தமாக மானியம் வழங்கப்படும் திட்டங்கள் அல்லது மானியத்துடன் கூடிய திட்டங்கள் எவை என்றும் திட்டவட்டமாகவும் மிகத் தெளிவாகவும் அது குறிப்பிடவேண்டும். மாநிலத் திட்டங்களை மாநிலங்களே நிருவகிக்க வேண்டும். ஆனால், நிதி ஆதாரங்களில் பற்றாக்குறையேதும் ஏற்படுமாயின் அதனை நிதிக்குழு வரையறுத்தபடி மத்திய அரசு வழங்கும் மானியங்கள் மூலம் நிறைவு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின், திட்டமிடுவது குறித்து மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே நிலவும் உறவில் தற்போது காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், நிருவாகச் சீர்திருத்த ஆய்வுக் குழு சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளைக் குறைக்கவும் பேருதவியாக இருக்கும்.

வினா 6.2.—பாரதப் பிரதமரைத் தலைவராகவும் அனைத்து மாநில முதலமைச்சர்கள், பல்வேறு துறை வல்லுநர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு தேசிய வளர்ச்சி மன்றம் ஒன்று குறிப்பிட்ட சட்டப்படி அமைக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி தொடர்பாக திட்டக்குழுவின் பரிந்துரைகள் குறித்து விவாதித்து ஒப்புதலளிக்க இம்மன்றத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும். இம்மன்றம் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தவுடன் ஒப்புதலளிக்கப்பட்ட முறைப்படி மாநிலங்கள் அத்திட்டங்களைத் தங்கு தடையின்றிச் செயற்படுத்த

அனுமதிக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்குப் போதுமான நிதி ஆதாரங்கள் வழங்கப்பட வேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்க இம் மன்றத்திற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

மேற்குறித்த செயற்குறிப்பு பற்றித் தங்கள் கருத்து என்ன ?

விடை 6-1.—ஆம் வினாவிற்கு நாங்கள் பதிலளிக்கையில், தேசிய வளர்ச்சி மன்றம் தொடர்ந்து இருந்து வர வேண்டுமென்பதை நாங்கள் முழுமனதுடன் ஒப்புக் கொண்டுள்ளோம். ஆனால் நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட வேண்டும். அதனால், பாரதப் பிரதமரைத் தலைவராகவும் அனைத்து மாநில முதலமைச்சர்களையும் பல்வேறுத் துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்ட தேசிய வளர்ச்சி மன்றம் ஒன்று, குறிப்பிட்ட சட்டப்படி அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாங்கள் சிறிதும் தயக்கமின்றி ஒப்புக்கொள்கிறோம்.

வினாவில் இரண்டாம் பகுதியைப் பொறுத்த மட்டில் நாங்கள் பரிந்துரைத்தபடி தேசிய வளர்ச்சி மன்றத்தை அமைப்பதால் தனிச் சட்டப்படி அமைக்கப்படாத திட்டக் குழு கலைக்கப்பட வேண்டும். நிருவாகத்தினரின் விருப்பத்திற்கிணங்க செயல்படும் திட்டக்குழு மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் அவசியமற்றதுமல்லாமல் அது பயனற்றதுமாகவும் அமையும்.

இவ்விதம் திட்டக் குழுவுக்குப் பதிலாகச் சட்டப்படி அமைக்கப்பட்ட நிலையான உடன் இயங்கும் சிறு அமைப்புகளை, அதாவது, மத்தியத் திட்ட வாரியம் மாநிலத் திட்டக் குழுக்கள் என்ற அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். தேசிய வளர்ச்சிமன்றம் எல்லாத் திட்டங்களையும் மத்திய அரசு அளவிலோ மாநில அளவிலோ ஒப்புதலளிக்கு முன்பு அத் திட்டங்கள் தொடர்பாகப் பல்வேறு விவரங்கள் குறித்து நுணுக்கமாய்ப் பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஆலோசனையைப் பெற வேண்டும். அந்த வல்லுநர் குழுவின் பரிந்துரைகளை விவாதித்து, முடிவில், அந்த மன்றம் அமைப்பதற்காக இயற்றப்பட்ட சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி ஒப்புதல் அளிக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் பயனுக்காக வகுக்கப்பட்டு, பரிசீலிக்கப்படுகின்ற திட்டங்கள், இறுதியாகத் தேசிய வளர்ச்சி மன்றத்தால் ஏற்பளிக்கப்படுவதாக இருந்தால், அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட அத் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் தனித்தனியே செயல்படுத்த வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். நாங்கள் தெரிவித்தவாறு, தேசிய வளர்ச்சி மன்றம் அமைக்கப்படுவதற்கும் மத்திய அல்லது மாநிலத் திட்டமொன்றுக்கு அவற்றின் முத்திரையையும் ஒப்புதலையும் அளிப்பதற்கும் அது பின்பற்ற வேண்டிய வழிமுறைக்கும் உட்பட்டு, வினாவில் குறிப்பிடப்பட்ட செயற்குறிப்பை நாங்கள் ஏற்கிறோம்.

வினா 6.3.—''திட்டக் குழு'' மத்திய, மாநில அமைச்சகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கலந்தாலோசித்துச் செயல்பட வேண்டும் என்று திட்டக் குழுவை அமைக்கக்கூறும் தீர்மானம் கூறுகிறது. மாநில அரசுகளுடன் அவ்வாறு நெருங்கிய தொடர்பு கொண்டு கலந்தாலோசிப்பதற்கு ஏற்றவாறு திட்டக்குழுவின் தற்போதைய அமைப்பும் நடைமுறைகளும் இருக்கின்றனவா? இல்லையெனில் அவற்றை மேம்படுத்த நீங்கள் தெரிவிக்கும் கருத்து யாது ?

விடை.—சட்டப்படி அமைக்கப்படாத திட்டக் குழுவை கலைக்க வேண்டும் என்று நாங்கள் கருத்து தெரிவித்துள்ளதால், சில மாற்றங்களுடன் இக் குழுவைத் தொடர்ந்து வைத்து வரும் பிரச்சினை எழவில்லை. அதற்குப் பதிலாக 6.1. வினாவிற்கு நாங்கள் அளித்த பதிலில் தெரிவித்தபடி சட்டப்படிக்கான அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய மாற்றம், திட்டமிடுவதில் மத்திய, மாநில அரசுகளிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துவதில் குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழும்.

வினா 6.4.—திட்டக் குழுவின் அமைப்பு குறித்து மூன்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(i) திட்டங்கள் குறித்தும், அரசின் விருப்பம், நோக்கங்கள் ஆகியவை குறித்தும் தகுந்த முறையில் தெளிவாக எடுத்துக் கூறும் அளவிற்கு நிபுணத்துவம் வாய்ந்த அமைச்சர்களைப் போதிய எண்ணிக்கையில் இக் குழுவில் அங்கம் வகிக்க செய்ய வேண்டுமென்பதோடு இக் குழு ஏற்பளித்த திட்டங்களை ஏற்றுச் செயல்படுத்துமாறு மத்திய, மாநில அரசுகளை இணங்க வைக்க வேண்டும்.

(ii) இது, பொருளாதார வல்லுநர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், நிருவாக வல்லுநர்கள் ஆகியோரை உயர்தர ஆலோசனைக் குழுவாக இருக்க வேண்டும்.

(iii) அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இருக்கும் வகையில் இதனை விரிவுபடுத்த வேண்டும். மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சியின் கருத்தை/கொள்கையை பொது

வாக வெளியிடும் மத்திய அமைச்சரவையின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு சுதந்திர அமைப்பாக இதனை ஆக்க வேண்டும்.

இந்த மூன்று கருத்துக்களில் எந்தக் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்? அதற்கான காரணங்கள் யாவை ?

விடை.—தற்போதுள்ள திட்டக் குழுவைத் தொடர்ந்து வைத்து வர நாம் ஒப்புக்கொள்வ தாக இருந்தால், இந்த மூன்று கருத்துக்களையும் பரிசீலிக்க வேண்டும். தற்போதுள்ள திட்டக் குழுவை தொடர்ந்து வைத்து வர நாங்கள் விரும் பாததால் இந்த மூன்று கருத்துக்கள் குறித்து நாங்கள் கருத்து தெரிவிக்க வேண்டியதில்லை. எனினும், தற்போதைய திட்டக் குழு தொடர்ந்து இருக்குமாயின், திட்டக் குழுவை அமைப்பது தொடர்பான இரண்டாவது கருத்து மிகவும் நியாய மானது எனக் கூறலாம். அதாவது, திட்டக் குழு பொருளாதார வல்லுநர்களையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும், நிருவாக வல்லுநர் களையும் கொண்ட ஓர் உயர்தர ஆலோசனைக் குழுவாக அமைக்கப்பட்டால் அது சிறந்ததாக இருக்கும். திட்டக் குழு மத்திய அரசின் கட்டளைக்குட்பட்டு செயல்படாமல் திட்டங்களை அலசி ஆராய்ந்து தன்னிச்சையாகப் பரிசீலித்து பரிந்துரைக்க வேண்டும். அத் தகையதொரு வல்லுநர் குழு, அரசியல் ரீதியில் ஏற்படக்கூடிய பெரும் மாற்றங்களினால் பாதிக்கப்படாமல் தன்னிச்சையாகச் செயல் படுமாயின், மத்திய, மாநில அரசுகளுக்கிடையே சிறந்த பயனையும் சிறந்த திட்ட உறவையும் எதிர்பார்க்கலாம்.

வினா 6.5,—திட்டக் குழு மத்திய அரசின் துறையாக இருக்கக் கூடாதென்றும், ஆனால், இது தேசிய அளவில் திட்டமிடுதல், முதலீடு செய்தல், முடி வெடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடுவதற்கு தேசிய வளர்ச்சி மன்றத்தின்கீழ் தனித்தியங்கக் கூடிய குழுவாக இருக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன கருத்து பற்றி உங்களுடைய கருத்துக்கள் யாவை?

விடை.—திட்டக் குழு தொடர்ந்து இருந்தால் அது தேசிய வளர்ச்சி மன்றத்தின்கீழ் தனித்தியங் கக்கூடிய அமைப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஒப்புக் கொண்டிருப்போம். அரசு தெரிவித்துள்ள சட்டத்தில், தேசிய வளர்ச்சி மன்றத்தின் அமைப்பு, அலுவல், அதிகாரங்கள் பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டும். குழுவின் பரி சீலனைக்காக விடப்பட்டுள்ள பொருட்கள் குறித்து ஆலோசனை வரம்புடன் தனித்தியங்கக் கூடிய ஓர் அமைப்பாகத் திட்டக்குழுவை அமைத்தல், குழுவின் அலுவல், அதிகாரங்கள் ஆகியவை பற்றி தனிப்பட்ட அத்தியாயம் ஒன்றுக்கு வகை செய்யலாம். ஆனால், தேசிய அளவில், திட்ட மிடுதல், முதலீடு செய்தல், முடிவு எடுத்தல் ஆகிய வற்றை மேற்பார்வையிடும் அலுவல்கள் திட்டக் குழுவுக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தை ஒப்புக்கொள்வது கடினம். இக் குழு, ஆலோசனைக் குழுவாக இருக்கலாமேயல்லாமல் மேற்பார்வைக் குழுவாக இருக்கக் கூடாது. திட்டப்பணிகள் குறித்த இறுதி முடிவெடுக்கும் பொறுப்பு, தேசிய வளர்ச்சி மன்றத்திடம் இருக்க வேண்டும், அத்திட்டப் பணிகளைச் செயற்படுத்தும் அதிகாரம் மத்திய, மாநில அரசுகளிடம் நிலைபெற்றிருக்க வேண்டும்.

வினா; 6.6.—மாநிலத் திட்டங்களில் தேசிய முன்னுரிமைகளைக் கருதிப் பார்த்துச் சேர்ப்பது அவசியமென்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர் களா? அதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா யின், இந்நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக மாநிலங்களின் நிதி வாயில்கள், திட்டங்கள் பற்றி திட்டக் குழு விரிவாகப் பரிசீலித்து வந்துள்ளதென் றும் அதன்மூலம் மாநிலத்தின் தன்னாட்சி உரிமை விரும்பதகாத அளவுக்குப் பறிக்கப்படுகிறது என் றும், குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு வந்துள்ள தென்று குறிப்பிடும் கருத்து குறித்து பரிசீலிக்க வும், இச்சந்தர்ப்பத்தில் தேசிய முன்னுரிமைகளை உறுதிப்படுத்தி மாநிலத் திட்டங்களை ஆய்வு செய்வதற்குத் திட்டக் குழு நடைமுறைகளில் என்ன மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டு மென்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

விடை.—திட்டக் குழு தொடர்ந்து இருந்து வரு வது குறித்து முன்னர் தெரிவித்த எங்களுடைய கருத்துக்குட்பட்டும், அதன் நிலைமையைச் சீர மைப்பதற்கு மாற்றுக் கருத்து தெரிவிக்கப் பட்டதற்குட்பட்டும், மாநிலத் திட்டங்களில் தேசிய முன்னுரிமைகள் பற்றிக் கருதிப்பார்த்து அத் திட்டங்களில் சேர்ப்பது அவசியம் என்ற கருத்தை ஒப்புக்கொள்வது கடினம் என்பதை நாங்கள் அறிகிறோம். அத்தகைய நடவடிக்கை கள் மாநிலத் தன்னாட்சி உரிமையில் தலையிடு வதற்கு திட்டக் குழுவுக்கு பெரும் வாய்ப்பை அளிக்கும். உண்மையில், இக் கருத்தை ஏற்றுக் கொள்வதானது, இன்றைக்குள்ளது போன்று திட்டக்குழு தேசிய வளர்ச்சி மன்றக் கருத்து களினின்று வேறுபட்டு இருப்பதற்கு வகை செய்யலாம். தேசிய வளர்ச்சிக் குழு எதிர் நோக்கி ஏற்றுக் கொண்டுள்ள திட்டங்கள் மீது, திட்டக் குழு மீண்டும் மேற்பார்வை அதிகாரத் தைச் செலுத்த வழி வகுக்கும். தேசிய மாநிலத் திட்டங்களில் தனிப்பட்ட முன்னுரிமைகளைக் கொண்டு வருவது சாலச் சிறந்ததாகும். 6.1. வினாவுக்கு அளித்த பதிலில் நாங்கள் தெரிவித்த கருத்து பரிசீலனைக்கு எடுத்துக

கொள்ளப்படுமாயின் தற்போதுள்ள இடர்பாட்டை நீக்கி மாநிலத் தன்னாட்சி உரிமை பறிக்கப்படுவதைத் தடுப்பதற்குப் பெரிதும் உதவும்.

வினா 6.7. :

மாநிலங்களுக்குக் கடனாகவும், மானியமாகவும் வழங்கப்படும் மத்திய அரசின் நிதி உதவியினை திட்டக் குழுவின் மூலம் முறைப்படுத்தும் தற்போதைய முறையில் உள்ள நிறை குறைகள் யாவை ?

விடை. :

திட்டக் குழுவானது சட்டப்படிக்கான ஓர் அமைப்பாக இல்லாத காரணத்தாலும், அது பெரும்பாலும் மத்திய அரசையும் அதன் கொள்கைகளையும் சார்ந்துள்ளதாலும், மாநிலங்களுக்குக் கடனாகவும் மானியமாகவும் வழங்கப்படும் மத்திய அரசின் நிதி உதவியினைத் திட்டக் குழுவின் மூலம் முறைப்படுத்தும் தற்போதைய முறை நன்கு செயல்படவில்லை. திட்டக் குழுவின் அதிகாரங்கள், செயல்முறைகள், பதவிக் கால அளவுகள் முதலியன ஒரு சட்டத்தின் மூலம் குறிப்பாக வரையறுக்கப்படவில்லை. பாரத பிரதமரைத் தலைவராகவும், சில முக்கிய மத்திய (கேபினட்) அமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட இத்திட்டக் குழுவானது, கிட்டத்தட்ட மத்திய அரசிற்குப் பரிந்து பேசும் ஓர் அமைப்பாகவே செயல்படுகிறது. இத்தகைய தகுதியும், அதிகாரமும் கொண்டுள்ள இத்திட்டக் குழுவிடம் மாநிலங்களுக்கு நியாயமான பங்கினை எதிர்பார்ப்பது கடினமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 282ஆம் பிரிவில் வகுக்கப்பட்டுள்ள மானியம், விருப்புரிமையின் பேரில் வழங்கப்படும் மானியமாகும். திட்டக் குழுவின் மூலம் அதனைப் பகிர்வு செய்வதோ அல்லது அளிப்பதோ மாநிலங்களுக்கு பயனளிக்கவில்லை. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாநிலங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு பெறும் கடன் தொகையை மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பெரும்பாலான மாநில அரசுகள் பயன்படுத்துகின்றன. மாநிலத்திற்குப் போதுமான நிதி வசதியில்லாததாலும், வளர்ச்சி திட்டங்களுக்குப் பெருமளவு தொகை தேவைப்படுவதாலும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மத்திய அரசின் உதவி முக்கிய பங்கு வகிக்கிறதென்று கூறுவது முற்றிலும் சரியாகும். திட்டவளர்ச்சிக்கு அவசியமான பெரும்பாலான திட்டங்களை மாநிலங்களே நிறைவேற்றவேண்டியுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். திட்டமிடுதல் என்பது விரும்பிய வளர்ச்சி இலக்குகளை மத்திய அரசுத்துறை, மாநில அரசுத்துறை, தனியார் துறை போன்ற பல்வேறு துறைகளில் விரும்பிய மூலதனமாக மாற்றுவதேயாகும். அரசியலமைப்புச் சட்டப்படி, மத்திய மாநிலத் துறைகளிலுள்ள திட்டங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இனங்களில் மாநிலப்பட்டியல், பொதுப்பட்டியல், மத்திய அரசுப்பட்டியல் என்று பட்டியலிடப்பட வேண்டும். தற்போது, மத்திய அரசின் முதலீடுகள் பெரும்பாலும் தொழில் வளர்ச்சி, போக்குவரத்து—சாலை போக்குவரத்து வளர்ச்சிகளிலேயே செய்யப்படுகின்றன. அதே சமயம், மாநில அரசுகளின் முதலீடுகள், பாசனம், மின் சக்தி, வேளாண்மை, பல்வேறு சமூகப் நல பணிகளிலேயே செய்யப்படுகின்றன. மத்திய அரசின் உதவிகள் மத்திய அரசின் உதவி பெறும் திட்டங்கள், மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள் என இருவகைகளில் வழங்கப்படுகின்றன. மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியம் கடன் தொகைகள் பொதுவாக மிக அதிகமாகவே உள்ளன. உதாரணமாக குடும்ப நலத் திட்டங்கள், தொற்று நோய்களை நீக்குதல், கட்டுப்படுத்துதல், பின்தங்கிய வகுப்பினரின் நலன், பல்வேறு வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் ஆகிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களாகும். இவை தவிர, திட்டமிடுதல் என்பது கூட்டுப்பகுதிகளாக்கப்பட்ட பகுதிகளை நகர்ப் பகுதிகளாக்குவதன் மூலம் நிருவாக, ஏனைய பணிகள் அதிகரித்ததன் காரணமாக மாநிலங்களுக்கு வளர்ச்சிப் பணியல்லாதவற்றிற்குப் பெருஞ்செலவினை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, தற்போதைய திட்டமிடுதல் முறையின்கீழ், மாநிலங்களுக்கு கடன் வழங்குவதும், அதனைத் திரும்ப வசூலிப்பதும் பெரும் இடர்ப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. திட்டக் குழுவின் மூலம் மாநில அரசுகளுக்கு நிதியினை திட்டமிட்டு, கடன் தொகைகள் வழங்குவதை முறைப்படுத்துவது மன நிறைவளிக்கக் தக்கவகையில் பலனைத் தரவில்லை என்று கூறப்படுகிறது. மூன்றாவது திட்டத்தில் கடன் வசூல் தொடர்பான பணிகளுக்கான செலவினங்கள் அனைத்து மாநிலங்களுக்கும் ரூ. 9,34 கோடி ரூபாய் (கடனைத் தவிர்த்து அல்லது குறைப்பதற்கான நிதி ஒதுக்கம் உட்பட) என்றும் இது மூன்றாவது திட்டத்திற்கான கூடுதல் வரி விதிப்பான ரூ.6,10 கோடியைவிட அதிகமானதாகுமென்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது, இந்திய ரிசர்வ் வங்கி 1966 மே திங்களில் கொடுத்த விவர அறிக்கையின்படி உள்ளது. திட்ட செலவுகளுக்கென்று மானியம் வழங்கும் மத்திய அரசு, அதே சமயம் கடனுக்கு வட்டியாக, வழங்கிய மானியத்தில் கடன் தொகையில் ஒரு பகுதியைத் திரும்பப் பெற்றுக்கொள்வது, உதவி மானியம் வழங்குவதில் மத்திய அரசு வைத்துள்ள கட்டுப் பாட்டையே காட்டுகிறது என்று கூறப்பட்டுள்ளது. கருத்தாளம் மிகவும் பொருத்தமாகும். ஆகவே, தேசிய வளர்ச்சி மன்றம் ஏற்பளித்தவாறு நிதிக்குழு மூலமாக, மத்திய

நிதியைக் கடனாக இருந்தாலும் சரி, அல்லது மானியமாக இருந்தாலும் சரி, முறைப்படுத்துவது நல்லது.

வினா 6.8 :

திருத்தப்பட்ட காட்கில் விதி, I. A. T. P. முதலியவற்றின் (மாநிலங்களின் திட்டத் தேவைகள் அனைத்திற்கும் இது வகை செய்யாது) அடிப்படையில் மத்திய அரசு முன் கூட்டியே தீர்மானித்த திட்ட நிதி உதவியோடு, தனியாக மாநிலங்களின் மதிப்பிடப்பட்ட நிதிவாயில்களைச் சேர்ப்பதன் மூலமாக, மாநிலங்களின் திட்டச் செலவைக் கணக்கிடும் தற்போதுள்ள முறை பொருளாதார நிலையில் நலிந்த மாநிலங்களுக்குக் கடுமையாக உள்ளது என்னும் கருத்தை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ? ஆமெனில் இதுதொடர்பாக நீங்கள் கூறும் மாற்றங்கள் எவையேனுமுள்ளனவா ?

விடை. :

மதிப்பீடு செய்யப்பட்ட வரி ஆதாரங்களுடன் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட மத்திய நிதியுதவியைச் சேர்ப்பதன் மூலம் மாநிலத் திட்டஅளவை முடிவு செய்வது தற்காலிகத் தன்மை வாய்ந்தது என்ற வாதத்தில் ஓரளவு உண்மையிருக்கிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

எனினும், பொருளாதார வகையில் நலிந்த மாநிலங்களின் தேவையைப் பொறுத்தவரை, வருவாயை பகிர்ந்தளிப்பது பற்றாக்குறை, பற்றாக்குறைக்கான மானியங்கள், நிர்வாகத் தரத்தை உயர்த்துவதற்கான மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களை வழங்குவது குறித்து முடிவு செய்யும்போது நிதிக்குழுகூட அம் மாநிலங்களின் நலனைக் கவனத்தில் கொள்கிறது. ஆகவே, காட்கில் வரையளவு முறை போதுமானதா அல்லது அதில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமா என்பதை ஆராயும்போது, திட்டப்பணிகளுக்கு நிதி யுதவி செய்வதில், தேவைக்கும் பொருளாதார வகையில் பின்தங்கிய மாநிலங்களின் பல்வேறு மாநிலங்களிடையே ஓரளவு சமநிலை நிலவுமாறு பார்த்துகொள்ளவேண்டியதன்தேவைக்கும் இடையே சம நிலையை ஏற்படுத்த வேண்டும் ; எல்லா அம்சங்களிலும் (நபர்வாரி வருமானம் போன்ற அம்சங்கள் உட்பட), காட்கில் வரையளவைப் பயன்படுத்தும் போதும்கூட 1971 மக்கள் தொகைக் கணக்கு மட்டுமே கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அப்போதுதான் குடும்ப நலத்திட்டத்தை அனைத்து வகையிலும் முழு அக்கறையுடன் செயற்படுத்தியுள்ள மாநிலங்கள் பாதிக்கப்படாமலிருக்குமெனவும், பல்வேறு மன்றங்களிலும் இம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. உயர் வருமானமுள்ள மாநிலங்கள் அவற்றின் திட்டத் தேவைகள் அனைத்தையும் அவற்றால் கவனித்துக் கொள்ள இயலுகிறதென்பதையும், குறைந்த வருமானமுள்ள மாநிலங்கள் அவற்றின் தேவைகளுக்கு நிதிக்குழு, திட்டக்குழு ஆகியவற்றின் மூலம் போதிய நிதியுதவி பெறுகின்றன என்பதையும், நடுத்தர வருமானமுள்ள மாநிலங்கள்தான் இவ்வகையில் ஏனோதானோவென்று நடத்தப்படுகின்றன என்பதையும் ஈண்டு அறுதியிட்டுக் கூறலாம். காட்கில் வரையளவில் செய்கின்ற எந்தவொரு மாற்றமும் இந்த சமண்பாடில்லா நிலையைப் போக்க வேண்டும். அப்போதுதான் பின்னடைந்துள்ள நடுத்தர வருமானமுள்ள மாநிலங்கள் இதன்மூலம் அச்சமின்றி, முன்கூட்டித் திட்டமிட்ட கால அளவில் திட்ட வளர்ச்சி காண முடியும்.

வினா 6·9 :

மாநிலங்களுக்கு, மத்தியத் திட்ட உதவியை ஒதுக்கீடு செய்வதற்காக தேசிய வளர்ச்சிக் குழு வகுத்துள்ள முறை எந்த அளவிற்கு பொருத்தமாக உள்ளது ? வட்டாரங்களில் சம நிலையான (Balanced Regional Development) அளவில் வளர்ச்சியை ஏற்படுத்தவும், ஏழ்மை நிலையை அகற்றவும், தீட்டப்பட்ட திட்டத்தின் நோக்கங்களை எய்துவதற்காக, மத்திய நிதி உதவித் தொகை ஒதுக்கீடு செய்யும். தற்போதுள்ள நடைமுறை எந்த அளவிற்குப் பயனளித்துள்ளது ? பழங்குடியினர் மலைப்பகுதிகள் மேம்பாட்டுத் துணைத்திட்டம் முதலியவற்றிற்கு மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியைத் தீர்மானிப்பதற்காகத் தற்போது பின்பற்றப்பட்டு வரும் முறை, மொத்தத்தில் மாநிலத்திட்டச்செலவுகளுக்கும், முன்னுரிமை அடிப்படையிலான சில துறைகளுக்கும் (Sections) வரையாறை செய்வதற்கான முறை ஆகியவை குறித்தும் கருத்துத் தெரிவிக்கவும்.

விடை. :

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யும் தற்போதுள்ள முறை மாநிலங்களில் எவ்வாறு பொருளாதார இடர்பாடுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்பதை நாங்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். மேற்சொன்ன விளைவிற்குப் பொறுப்பான முக்கிய காரணங்களில் ஒன்று யாதெனில், வளர்ச்சியல்லாத பணிகளுக்கான செலவினங்கள் அதிக அளவில் அதிகரித்துள்ளதேயாகும் ; அவ்வாறு அதிகரித்துவரும் செலவுகளை முழு அளவில் மாநில அரசுகள் ஏற்கும் நிலையில் இல்லை. பல்வேறு திட்டங்களால், அதாவது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக இருந்தாலும்

சரி அல்லது மத்திய அரசு நிதியுதவி செய்யும் திட்டமாக இருந்தாலும் சரி அவற்றின் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்பதால் புதிய வரி வரவு வாயில்கள் சில ஏற் படுத்தப்பட்டுள்ளன என்பதிலும் ஐயமில்லை. ஆனால், இவ்வாறு அதிகரித்துள்ள வரி வரவு வாயில்களின் வளர்ச்சி மாநில அரசு ஏற்க வேண்டி யுள்ள வளர்ச்சி அல்லாத பணிகளுக்காகச் செல விடப்படும் செலவுத் தொகைக்கு நிகராக அதிகரிக்கப்படவில்லை. சான்றாக, மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டங் களைச் செயல்படுத்தும்போது, அத்திட்டங் களை நிறைவேற்றுதல் செயல்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு, எப்போதும், மாநில அரசுகளுடையதாகவே உள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் அல்லது மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றும் போது அத்தகைய திட்டங்களை, குறிப்பிட்ட ஒரு மாநிலத்தின் நிலவரையறை எல்லைகளுக் குட்பட்ட பகுதிகளில் மட்டுமே நிறைவேற்றப் படக் கூடியவையாக திட்டப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை மீறாமல் இருக்க வேண்டும். இவ்வாறாகத் திட்டப்பணி செயல்படுத்தப்படும் போது இடம் கையகப்படுத்தல், மூலப் பொருள்களின் வேறுபடும் விலை வீதம், பொதுச் சுகாதார நடவடிக்கைகள், சட்டம்—ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரித்தல் முதலியவை உட்பட பல்வேறு கடமைகளையும் பொறுப்புகளையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்ட மானாலும் சரி, அல்லது மத்திய அரசு நிதி உதவி செய்யும் திட்டமானாலும் சரி அத்திட்டத் தில் உள்ள இத்தகைய தவிர்க்க இயலாத நிலைமைகள் (Concept) காரணமாக அத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு மட்டுமின்றி, விரைவில் நிறைவேற்றப்படுவதற்கும் மாநில அரசுகளின் உடனுழைப்பு மிக மிக இன்றி யமையாததாகும். திட்டங்களை நிறைவேற்றக் கருதும்போதும் அத்திட்டப்பணியை மேற்கொண்டு நிறைவேற்றும் நாள் வரையிலும் அத்தகைய ஒத்துழைப்பு இருக்கவேண்டியது இன்றியமையாத தாகும்; அத் திட்டப் பணியைத் தொடங்குவதற் கான ஒத்துழைப்பை நல்குவதற்குக் கால தாமதம் செய்யக்கூடாது. சம்பந்தப்பட்ட திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படும் வரையில் அத்தகைய உடனுழைப்பு நல்கப்பட வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒரு திட்டத்தைத் தொடங்குவதிலிருந்து அத்திட்டம் நிறைவேற்றப்படும் வரையில் அத்திட்டப் பணியுடன் தொடர்புடைய இன்றியமையாத அனைத்து விவரங்களையும் சேகரிப்பதில் மத்திய அரசும் மாநில அரசும் ஒருங்கிணைந்து செயல் படவேண்டியது மிக மிக அவசியமாகும்; அவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுவதின் மூலமே இலக் கிடப்பட்ட நோக்கத்தை, அதாவது, அனைத்து வகையிலுமான ' உண்மையான தேசிய வளர்ச்சியை அடைய முடியும். பொதுவாக திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை நிறை வேற்றுவதற்குரிய முறைகளை வகுத்தல் ஆகிய வற்றிற்கு முன்னர், மேற்கூறியவாறு மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றமும் நடவடிக்கைகள் எடுப் பதும் ஒருங்கிணைந்து செய்யப்படும்போதும், தொடர்புடைய நிதி உதவிக்கு உறுதி அளிக்கப் படும்போதும் எந்த ஒரு துறையாக இருந்தாலும், அந்தத் துறைக்காக மத்திய நிதி உதவித் தொகையை ஒதுக்கீடு செய்வது குறித்து தற் போது பின்பற்றப்படும் ஒதுக்கீட்டு முறையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்க்கலாம்.

தமிழ்நாடு மாநிலத்தில், தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1972) இயற்றப் படுவதற்கு முன்னர், நகர்ப் பகுதி நிலங்களை மேம் படுத்தும் திட்டப் பணிகள், தமிழ்நாடு 1920ஆம் ஆண்டு நகர் அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. ரத்து செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் சாலைகள் போடுதல், நிலம் கையகப்படுத்தல், போக்குவரத்து வசதிகள், குடிநீர் வழங்குதல், விளக்கு வசதிகள், கழிவு நீரகற்று வசதிகள், சமய-அறக்கட்டளைகள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஏனைய பொதுமக்கள் நலன் சார்ந்த நோக்கங்கள் ஆகிய வற்றிற்காக நிலங்களை ஒதுக்கீடு செய்தல், இத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்கு முரணாக இல்லாத ஏனையவை ஆகியவை நகர் அமைப்புத் திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் 23ஆம் பிரிவில் பின்வருமாறு கூறப்பட் டுள்ளது :—

" 23, மேம்பாட்டுக் கட்டணம் விதிப்பதற்கான அதிகாரம்—

" நகர அமைப்புத் திட்டம் ஒன்றை நிறை வேற்றுவதால் யாதொரு சொத்தின் மதிப்பு உயர்ந்தால் அல்லது உயரக்கூடுமென்றால், 14ஆம் பிரிவின்கீழ் அத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி மாநில அரசின் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளி லிருந்து மூன்று திங்களுக்குக் குறைவாக இல்லா ததும், இத் திட்டத்தால் கால அளவு ஏதும் வரை யறுக்கப்பட்டிருப்பின் அக்கால அளவிற்குள்ளும் இந்நோகத்திற்காக நகராட்சி மன்றம் உரிமைக் கோரிக்கை எதையேனும் செய்தால், இத் திட்டத் தில் வரையறுக்கப்பட்டவாறு அச் சொத்தின் மதிப்பு எவ்வளவு உயருகிறதோ, அதில் 10 சத வீதத்திற்கு மேற்படாத மதிப்புத் தொகையை குறிப்பிட்ட அக்கால அளவிற்கு ஒரே சீரான சத வீதத்தில் ஆண்டு மேம்பாட்டுக் கட்டணமாக அச் சொத்தின் உரிமையாளரிடமிருந்து வசூலிக்க அந்த நகராட்சி மன்றம் அதிகாரம் உடையதாகும்.

ஆனால், அவ்வாறு வசூலிக்கப்பட்ட கட்டணத்தின் மொத்தத் தொகை, பின்வரும் அடுத்த பிரிவில் உறுதிப்படுத்தித் தெரிவித்தவாறு

மேற்கூறிய காலஅளவில் அதிகரித்த மதிப்பின் உயரளவுத் தொகையில் பாதித் தொகைக்கு மேற்படக்கூடாது''.

திட்டங்களுக்காக மாநில அரசு செலவிட்ட தொகையை, அத் திட்டங்களினால் பயனடைந்தோரிடமிருந்து, மேம்பாட்டுக் கட்டணமாக வசூலிப்பதன் மூலம் மாநில அரசுக்குத் திரும்பக் கிடைக்கப்பெற மேற்சொன்ன சட்டமே வகை செய்கிறது. அவ்வாறு செய்வதால், மாநிலத்தின் பயனுக்காகவும், மாநில மக்களின் பயனுக்காகவும் மாநில அரசு செலவிட்ட தொகையில் ஓரளவுத் தொகையை மாநில அரசு திரும்பப் பெறலாம். தேசிய வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தும்போது நாடாளுமன்றம் சட்டம் இயற்றுகையில் மேற்கூறியதற்கு வகைசெய்து அத்தகைய சில விதித்துறைகளை இயற்றலாம். அப்போதுதான் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ பெரும் தொகையைச் செலவிடாமலேயே மேற்சொன்ன பயன்களைப் பெறுவதற்கு வகை செய்யும். செலவிட்ட தொகையைத் திரும்பப் பெறுவதற்காக மேற்சொன்ன வழி முறை பின்பற்றப்படுமேயாயின், மாநிலங்களுக்கு வழங்கப்படும் மத்திய திட்ட உதவியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையலாம் என்பதோடு, மத்திய திட்ட உதவித் தொகை மாநிலங்களுக்கு சரிசமமாக ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற விமரிசனம் ஏற்படுவதையும் தவிர்க்கலாம்.

வினா 6.10 :

மத்திய அரசு பொறுப்பேற்கும் பல திட்டப் பணிகளுக்கு இணை மானியம் என்ற அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கணிசமான அளவு தொகை வழங்குவதால், மாநில அரசுகள் அத் திட்டப் பணிகளையே மேற்கொள்ள விழைகின்றன. இதனால் மாநிலத் திட்டப் பணிகளின் முன்னுரிமை பாதிக்கப்படுகிறது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் இக் கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? இது தொடர்பாக மாற்றம் எதனையும் நீங்கள் தெரிவிக்க விரும்புகிறீர்களா ? அவ்வாறாயின், தங்களுடைய கருத்தைக் குறிப்பிடவும்.

விடை :

இக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டங்களில் பெரும்பான்மையானவை உரிய பயனளிக்காத திட்டங்களாகும், அத்தகைய உரிய பலனளிக்காத திட்டப் பணிகளை மேற்கொள்ள மாநிலங்களிடம் போதுமான நிதி வாயில்கள் இல்லாததால், அவை மத்திய அரசு பொறுப்பேற்கும் அத்தகைய திட்டங்களை ஏற்றுக்கொள்ள ஆர்வமாக உள்ளன. இதனால், மாநிலத் திட்டப் பணிகளின் முன்னுரிமைகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, உரிய பலனளிக்காத தன்னிலை வாய்ந்த மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு முழு நிதியையும் மத்திய அரசே வழங்க வேண்டும் என்று நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம். மாநிலங்கள் அத் திட்டங்களைக் கண்காணிக்கும் பணியைப் புரிய வேண்டும். மேலும், மத்திய அரசு, மத்திய அரசு பொறுப்பேற்கும் அத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவதால் வளர்ச்சிப் பணி குறித்த செலவிற்கு நிதி ஒதுக்கம் செய்யுமாறு மத்திய அரசைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

வினா 6.11 :

திட்டங்கள் சரியான வகையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் ஒவ்வொரு மாநிலத்திலும், திட்டக் குழுவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கண்காணிப்பு மதிப்பீட்டு அமைப்பு போதுமானதாகும் என்று நீங்கள் கருதுகிறீர்களா ? இல்லை எனில், வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்ட மத்திய—மாநில அரசுகளின் நிதிகளின் மூலம் விரும்பத்தக்க பலன்கள் கிடைக்கப் பெற நீங்கள் தெரிவிக்க விரும்பும் மேம்பாட்டுக் கருத்துக்கள் யாவை ?

விடை :

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள திட்டக் குழுவில் ஏற்படுத்தப்பட்டுள்ள கண்காணிப்பு—மதிப்பீட்டு அமைப்பு நன்றாகச் செயல்பட்டு வருகின்றது என்று எண்ணுவது முற்றிலும் இயலக்கூடியதே. ஆனால், மத்திய—மாநில அரசுகளுக்கிடையேயான உறவுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இத்தகைய ஓர் அமைப்பை உருவாக்குவது முக்கியமானதாகும். ஆகவே, மத்திய அரசுத் திட்டங்களையும், மாநில அரசுத் திட்டங்களையும் செயல்படுத்துவதைத் தனித் தனியாகக் கண்காணிப்பதற்கென கண்காணிப்பு—மதிப்பீட்டு அமைப்புகளைத் தனித்தனியாக உருவாக்குவதற்கு மத்திய—மாநில அரசுகளுக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென நாங்கள் கருத்துத் தெரிவிக்கிறோம். முதலீடு செய்யப்படும் மாநில அரசு நிதிகள் விரும்பத்தக்க பலனை அளிக்கின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு, மத்திய கண்காணிப்பு—மதிப்பீட்டு அமைப்பு தேவையில்லை.

வினா 6.12 :

திட்டமிடும் பணியைப் பரவலாக்குவது நமது திட்டமிடும் முறையில், ' கூட்டுறவுத் தத்துவத்தை கொண்டு வருவதில் உதவிபுரியும் என்று

நீங்கள் கருதுகிறீர்களா ? ஆம் எனில் திட்டத்தைத் தயாரித்தல், திட்டத்தைச் செயற்படுத்துதல் ஆகிய நிலைகளில் மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே முறையான கூட்டுறவு ஏற்பட உறுதி செய்வதற்கு அந்த முறையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நீங்கள் சுருக்கமாகக் கூற முடியுமா ?

விடை :

நம் திட்டமிடும் முறையில் ''கூட்டுறவுத் தத்துவத்தை'' கொண்டு வருவதில், திட்டமிடும் பணியை பரவலாக்குவது மிகுந்த அளவிற்கு உதவி புரியும் என்ற கருத்தை முற்றிலும் நாங்கள் ஏற்கிறோம். இதனை நாங்கள் கருத்தில் கொண்டு 6.1ஆம் எண்ணுள்ள வினாவிற்கு நாங்கள் அளித்த விடையில் நற்பயன் அளிக்கக் கூடிய திட்டமிடும் முறையைப் பரவலாக்குவது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளோம். வினா 6.1—க்கான எங்களின் விடை, திட்டமிடுதலை பரவலாக்கும் திட்டத்திற்கான முழு விவரங்களையும் கொடுத்துள்ளது. இத்தகைய கருத்துக்கள் ஏற்கப்பட்டு செயல்படுத்தப்படுமானால் திட்டத்தைத் தயாரித்தல் திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகிய நிலைகளில் மத்திய அரசுக்கும். மாநில அரசுகளுக்கும் இடையே முறையான கூட்டுறவை உறுதி செய்ய உதவும் என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

வினா 6.13 :

ஒவ்வொரு மாநிலத்திலும் திட்டக் குழுக்களை அமைப்பது குறித்து நிருவாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைத்துள்ளதால், பல மாநில அரசுகள் அவற்றின் திட்ட அமைப்புகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மாநிலங்களின் திட்டமிடுதல் குறித்து உயர்ந்த அளவு திறன்கள், திட்டம் வகுத்தல், செயற்படுத்தல், மறு ஆய்வு செய்தல் ஆகியவற்றில் எந்த அளவுக்குத் திறம்படப் பயன்படுகின்றன என்பது பற்றிய தங்கள் கருத்து யாது ? இது குறித்து மேற்கொண்டும் மேம்பாடுகள் எதுவும் செய்ய வேண்டுமாயின் தாங்கள் அது குறித்துத் தெரிவிக்க விரும்பும் கருத்து யாது ? மாநிலத் திட்டக் குழுக்கள் அனுபவம் பெறுவதால், தேசியத் திட்டம், சுட்டிக் காட்டுகிற தன்மையே அதிகமாகவும் கட்டாயமாகச் செயல்படுத்த வேண்டு என்ற தன்மை குறைவாகவும் உள்ளதாக ஆகி விடுகிறதா ?

விடை :

இங்கு கூறப்பட்டுள்ளவை உண்மையாக இருக்கலாம். ஆனால், மாநிலத் திட்டக் குழுக்கள் அனுபவம் பெறும்போது, தேசியத் திட்டம், சுட்டிக் காட்டுகின்ற தன்மை அதிகமாகவும் கட்டாயமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற தன்மை குறைவாகவும் உள்ளதாக ஆகிவிடுகிறதா என்பது குறித்து கருத்துத் தெரிவிக்க வேண்டுமாயின், தற்போதுள்ள முறை தொடர்ந்து இருக்க நாம் முதற்கண் ஒப்புக் கொள்ள வேண்டும் ; தற்போதுள்ள முறை தொடர்ந்து இருக்கலாம் என்று நாம் கூறாததால், இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்து பற்றி நாம் எதுவும் கூறவியலாது. முன்பே எங்களால் தெரிவிக்கப்பட்ட கருத்தின்படி, திட்டக் குழுக்கள் தனித்தனியாக இரு நிலைகளில், அதாவது, மத்திய அரசு நிலையில் ஒன்றும் மாநில அரசு நிலையில் மற்றொன்றுமாகத் தனித் தனியாகச் செயல்படுகின்றன. ஆனால், இவை, தேசிய வளர்ச்சிக் குழு பொறுப்பின்கீழ் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றன. இவை இந்நாட்டில் பொருளாதார, சமூகத் திட்டமிடலுக்கு அதிக அளவு உதவி புரியும். இவ்வாறு செயல்படுவது மத்திய—மாநில அரசுகளுக்கிடையே மிகவும் தேவையான கூட்டுறவையும், சுமுகமான உறவையும் ஏற்படுத்தும்.

பாகம்—VII.

பல்வகை.

தொழில்கள்.

வினா : 7-1.—பட்டியல்-I, 52ஆம் பதிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, நாடாளுமன்றம், இப் பதிவில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க அவசியமான அறிவிப்பை வெளியிட்டதன் மூலம் 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியது. இச் சட்டம், தற்போதுள்ள தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்ய வேண்டுமெனக் கட்டாயப் படுத்துவதற்கும், மத்திய அரசு வழங்கிய உரிமத்தின் படியும், உரிமத்திற்கிணங்கவும்] அன்றி மற்றப்படி இச்சட்டத்தின் 1ஆம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களை புதிதாக ஏற்படுத்தக் கூடாது என்று கூறுவதற்கும், மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

முதன்முதலாக இயற்றப்பட்டுள்ள சட்டத்தின் முதல் விவர அட்டவணையில், பொதுமக்களின் நலனுக்கு முக்கியமானவையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையுமான ஒரு சில தொழில்கள் மட்டுமே சேர்க்கப்பட்டன. ஆனால், இச் சட்டம் அடிக்கடி திருத்தப்பட்டு, முதல் விவர அட்டவணையில் இன்னும் பல தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ரேஸர் பிளேடுகள், பசை, தீக்குச்சி சோப்பு, வண்ணங்கள், வார்னீஸ், எடைபோடும் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், ஹரிகேன் விளக்குகள், ஸ்டீல் மேசை நாற்காலிகள், வெட்டுக் கருவிகள், பிரஷர் குக்கர்கள், வேளாண்மைக் கருவிகள், சைக்கிள் காலணி, வீட்டுச் சாமான்கள், கைக்கருவிகள், தட்டச்சுப் பொறிகள், பீங்கான் சாமான்கள், மட்பாண்டங்கள், எண்ணெய் ஸ்டவ்கள் முதலியன போன்ற இனங்களை மத்திய அரசு தற்போது தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளது. உற்பத்திப் பொருட்களின் மதிப்பைக் கருத்திற்கொண்டு மிக அதிகமான தொழில்களை முதல் விவர அட்டவணையின் கீழ்க் கொண்டு வந்துள்ளதால், அடிப்படை அரசியலமைப்புத் திட்டத்தின்முறை தலைகீழாக மாற்றப்பட்டு, மத்திய அரசு அதிகாரத்திற்குட்பட்ட பொருளாகத் தொழில்கள் மாற்றப் பட்டுள்ளன.

இக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களா? ஆம் எனில், எந்த இடத்தில் இவ்வதிகாரம் மாநிலங்களின் நலனுக்குப் பாதகமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்துக் குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் எவையேனும் இருப்பின் அவற்றை உங்களால் கொடுக்க முடியுமா ?

விடை : "சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள்" என்ற தலைப்பின்கீழ் 52ஆம் பதிவுக்குப் பதில் புதிய பதிவு கொண்டு வரப்பட வேண்டுமென்றும், இதன்மூலம் இப் பதிவே அத் தொழில்களைக் குறிப்பிடும் என்றும், இவ்வரசு ஏற்கனவே கருத்து தெரிவித்துள்ளது. அதன்படி "சட்டங்கள் இயற்றுவது தொடர்பான உறவுகள்" என்ற தலைப்பின்கீழ் கருத்துத் தெரிவித்தவாறு 52ஆம் பதிவு மாற்றியமைக்கப்படலாம். எனினும், நாடாளுமன்றம் சட்டமியற்றுவதற்கு அதிகாரமுள்ள தொழில்களைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு தொழில் கொள்கையை அவ்வப்போது வகுத்து வருகிறது. தொழில் வளர்ச்சி என்பது மத்திய—மாநில அரசுகள் எடுக்க வேண்டிய கொள்கைக் கருத்தாகும் என்று மத்திய அரசு கருதுகிறது. இது தயாரிப்பு நடைமுறை சம்பந்தமானது மட்டுமல்லாது அடிப்படை வளர்ச்சி குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்டதாகவும், அதாவது, உரிமம் அளித்தல் ஒருங்கிணைப்புக் கொள்கைகள், நிதி, வரி, வருவாய், வணிக விலைக் கொள்கைகள், தொழில் உறவுகள், நிருவாகம் அறிவியல் தொழில் நுட்ப மேம்பாடு, சமூகப் பொருளாதாரம் பற்றிய பரந்த கொள்கைகள் ஆகியவற்றிற்குத் தொடர்பானதாகும். எனவே, தொழிற் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் பல்வேறு நிலைகளிலும், மத்திய-மாநில அரசுகளுக்குமிடையே நெருங்கிய தீவிர உடனுழைப்பும் கண்காணிப்பும் தேவைப்படுகின்றன.

எனவே, தொழிற் கொள்கையை வகுக்கையில் மத்திய அரசு மாநில அரசுகளுடன் முன்னரே கலந்தாலோசிக்க வேண்டியது உகந்ததாகும். தற்போது, மாநில அரசுகளை தொழிற் கொள்கையை வகுப்பதற்கு முன்னர் அவ்வாறு கலந்தாலோசிப்பதில்லை. தொழில் வளர்ச்சித் திட்டங்களை நிருவகிக்கும் பெரும்பணி மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே, முக்கியத் தொழில் கொள்கையை வகுப்பதில் அவை சம்பந்தப்பட வேண்டும்.

தொழிற்சாலை ஒன்றை அமைக்க விரும்பும் தொழில் முனைவர், தன்னுடைய விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு அனுப்புகிறார். இவ்விண்ணப்பம் குறித்து மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக அவ்விண்ணப்பம் மாநில அரசுக்கு அனுப்பப்படுகிறது. மாநில அரசு தன்னுடைய கருத்துக்களை அனுப்புவதற்கு முன்னரேயே மத்திய அரசு சொந்தமாக முடிவெடுத்து அதனைத் தொழில் முனைவருக்குத் தெரிவித்திருக்கும் இனங்கள் உள்ளன. தனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு மாநில அரசுக்கு வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கும்போது, தொழில் முனைவரின் விண்ணப்பம் குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர்

மாநில அரசுக்கு அனுமதித்துள்ள கால வரையறைக்குள் மாநில அரசு தனது குறிப்புகளை அனுப்புகின்றதா என்று மத்திய அரசு காத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

தொழில் முனைவர்களின் விண்ணப்பங்கள் உரிமம் வழங்கும் துணைக் குழு முன்னர் வைக்கப் படுகின்றன என்பது மற்றொரு கருத்து, உரிமம் வழங்கும் துணைக் குழுவில் மாநில அரசின் பிரதிநிதி எவரும் இல்லை. விண்ணப்பம் குறித்து மாநில அரசு தனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இயலும் வகையில், உரிமம் வழங்கும் துணைக் குழுவில் மாநில அரசுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் பரவலாகத் தொழிற்சாலைகள் அமைக்கப் படுவதற்கு உறுதி செய்வதற்குச் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பின்தங்கிய பகுதிகள் என்பதற்கு நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விளக்கம் கொடுக்கப்படவில்லை. சில மாநிலங்களில் அவை வளர்ச்சி வட்டாரங்கள் அல்லது வட்டங்கள் அல்லது மாவட்டங்களைக் குறிக்கிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகள் என்பதற்குப் பொருள் விளக்கம் அளிப்பது குறித்து மாநில அரசுடன் முன்னரே கலந்தாலோசிப்பது சரியான முறையாகும்.

தொழில் நிறுவனம் ஒன்று தனது தயாரிப்பு நடைமுறைகள் முழுவதையும் அல்லது ஒரு பகுதியை மாநிலத்திற்குள் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிக்கு அல்லது ஓர் அறிவிக்கையிடப்பட்ட பின்தங்கிய பகுதியிலிருந்து அறிவிக்கையிடப்பட்ட மற்றோர் பின்தங்கிய பகுதிக்கு மாற்ற விரும்பினால், மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை; ஆனால், மாநில அரசின் முன் அனுமதியைத் தொழில் நிறுவனம் பெற வேண்டுமென்கிற வகையில், 1979ஆம் ஆண்டில் மத்திய அரசு நெறிமுறைக் குறிப்புகளை வழங்கியது. மாநில அரசுக்குரிய இந்த அதிகாரத்தைத் தற்போது மத்திய அரசு எடுத்துக் கொண்டுள்ளது. தொழில் நிறுவனத்தின் இடமாற்றம் செய்வது தொடர்பான இனங்கள் அனைத்தையும் ஒப்புதலுக்காக தற்போது மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. இந்த அதிகாரம் தொடர்ந்து ஏன் மாநில அரசிடம் இருக்கக் கூடாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லை. அத்தகைய இனங்களில் மத்திய அரசிடமிருந்து தொழிலதிபர்கள் அனுமதி பெற வேண்டியுள்ளதால் அவர்கள் இடையூறுக்குள்ளாவர். எனவே, மாநிலத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தொழில் நிறுவனத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை மீண்டும் மாநில அரசிடம் இருக்கச் செய்வதற்கு மத்திய அரசு திருத்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம் முதலியவை போன்ற மத்திய நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து மாநில நிதியுதவி நிறுவனங்கள் கடன் பெறும் முக்கிய அமைப்புகளாக இருந்தபோதிலும் அவற்றில் மாநில அரசின் பிரதிநிதி எவரும் இல்லை. பல்வேறு மாநிலங்கள் சுழல் முறையில் பிரதிநிதித்துவம் வகிப்பது பற்றி பரிசீலிக்கப்பட வேண்டும். வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இவ்வட்டாரக் குழுக்களில் வட்டாரப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.

சுற்றுப்புற சூழல் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியை, இசைவுக் கடிதத்தை தொழில் உரிமமாக மாற்றும் சமயத்தில் பெற வேண்டும் என்று தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது. பல இனங்களில், இவ்வாரியத்திற்கு அனுப்பாமலேயே தொழில் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தொழிற்சாலைகள் கிட்டத்தட்ட செயல்படத் தொடங்கும் நிலையில் தயாராக இருக்கும்போது தான் அனுமதி வேண்டி இவ்வாரியத்தைத் தொழிற்சாலைகள் அணுகுகின்றன. அத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க, தொழிற்சாலைகளுக்கு இசைவுக் கடிதம் வழங்கும் சமயத்திலேயே சுற்றுப்புறச் சூழல் மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் கலந்தாலோசிக்கப்படலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திப் பொருட்களின் மதிப்பைக் கருத்திற்கொண்டு பல தொழிற்சாலைகளை முதல் விவர அட்டவணையின்கீழ் கொண்டு வந்துள்ளதால், "அடிப்படை அரசியலமைப்புத் திட்டத்தின் முறை தலைகீழாக மாற்றப்பட்டு, மத்திய அரசு அதிகாரத்திற்குட்பட்ட பொருளாகத் தொழில்கள் மாற்றப்பட்டுள்ளன" என்ற கருத்தை நாங்கள் ஏற்கிறோம். இது "சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள்" என்ற தலைப்பின்கீழ் பாகம் II—லும் விளக்கப்பட்டுள்ளது. 52ஆம் பதிவில் "பொதுமக்கள் நலன்" என்ற சொற்றொடருக்குப் பொருள் விளக்கம் அளிக்கப்படாதவரையில், மாநில தன்னாட்சி உரிமையைப் பாதிக்கின்ற வகையில் கட்டுப்பாட்டின்கீழ் வரக்கூடிய இனங்களாக பல இனங்களைச் சேர்ப்பதைப் பொறுத்தவரையில், மாநிலத் தன்னாட்சியை வலியுறுத்துவதன் மூலம் 52ஆம் பதிவில் முக்கிய மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும். பொது நலனை முன்னிட்டு அல்லது தேசிய முக்கியத்துவத்துக்காக எந்தவொரு தொழிலையும் இவ்விவர அட்டவணையில் சேர்ப்பது சரியென மத்திய அரசு கருதினால் 52ஆம் பதிவின்கீழ் மத்திய அரசுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

சோப்பு, வண்ணங்கள், தீக்குச்சிகள், பசை முதலிய வற்றைப் பொறுத்தமட்டில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லாத தொழில்களும் 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்தல்) சட்டத் தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. எனவே, பொருள் விளக்கம் அளிக்கப்படாததும் நடைமுறையில் நீக்கமற செயலி லுள்ளதுமான 52ஆம் பதிவு, சட்டமியற்றுதல் தொடர் பான உறவுகள் என்ற தலைப்பின்கீழ் கருத்துத் தெரி விக்கப்பட்டவாறு 52ஆம் பதிவிலேயே அத் தொழில் களைக் குறிப்பிட்டு அப் பதிவானது திருத்தப்பட வேண்டும்.

வினா 7.2.—(i) நாடாளுமன்றம் மட்டுமே சட்டமியற்றலாம் என்னும்போது, எந்தவொரு தொழில்மீதான தேசியக் கட்டுப்பாட்டைப் பொறுத்தமட்டில் தேசிய/பொது நலன் குறித்து பொருள் விளக்கம் தருவதற்கு அல்லது விளக்கு வதற்கு உங்களுடைய கருத்துப்படி சில கோட்பாடுகள் வகுக்கப்பட வேண்டாமா ?

உங்களுடைய விடை ஆம் எனில், உங்க ளுடைய கருத்துப்படி அத்தகைய கோட்பாடுகள் என்னவாக இருக்க வேண்டும்?

(ii) மத்திய அரசு கட்டுப்படுத்துமளவுக்கு தேசிய/பொது நலனுக்கு முக்கியமானவை அல்ல என்ற காரணத்தினால் 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி—முறைப்படுத்தல்) சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் தற்போதைய பட்டியலிலுள்ள இனங்களிலிருந்து எந்த இனங்களை நீக்க முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

விடை :

பாகம் II-ல் காணும் வினாக்களுக்கு விடையளிக்கையில் இந்த அரசு தெரிவித்த கருத்தின் அடிப்படையில் 52ஆம் பதிவும் 249ஆம் பிரிவும் நீக்கப்பட வேண்டும் என்றும் இந்த அரசு கருதுகிறது ; ஆகவே, இது தொடர்பாகக் கருத்துக்களேதும் தெரிவிக்கவில்லை.

வினா 7.3.—தொழில் அனுமதி வழங்க முக்கிய பிரச்சினைகளுக்கு மத்திய அனுமதி அளிக்க, முக்கியப் பொருட்கள், மூலப் பொருட்கள், வெளிநாட்டு உடனுழைப்பு ஆகியவற்றைத் தருவிக்க தற்போதுள்ள நடைமுறைகளை மேம்படுத்தவும் பரவலாக்கவும் மேம்படுத்த அல்லது பரவலாக்க நீங்கள் கருத்தேதும் தெரிவிக்கிறீர்களா?

வினா 7.4.—பின்தங்கிய பகுதிகள் மேம்பாடு குறித்த தேசியக் குழு "தொழிற்சாலைகளைப் பரவலாக அமைத்தல்", "கிராம—குடிசைத் தொழில்கள்", "தொழில் நிறுவனம்" ஆகியவை பற்றிக் கொடுத்த அறிக்கைகளில் சிறு தொழில் துறைகளுக்கு நியாய விலையில் மூலப் பொருட்களை வழங்குவதில் பெருத்த வேறுபாடு காணப்படுகிறதென்றும், சிறு தொழில் பிரிவுகள் தயாரிக்கும் உற்பத்திப் பொருட்களை விற்பனை அமைப்புகள் தக்க விலையில் விற்க ஆவன செய்ய வேண்டுமென்றும், சிறு தொழில் பிரிவுகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்றும் குறிப் பிட்டுள்ளது ; இத் தொழில் துறையில் எளிய அணுகு முறையைப் பின்பற்றுவதற்கு ஏற்ற தொழில் நுட்ப உத்திகளைக் கையாள வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தங்கள் கருத்துப்படி (a) இத் துறைக்கு உதவும் வகையில் மாநிலங்கள் போதுமான ஏற்பாடுகளை செய்துள்ளனவா ? இல்லையெனில் எக்காலக் கட்டத்தில் இது சாத்தியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் ? (b) இதுவரையில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாநிலங்கள் மேற்கொண்ட அணுகுமுறைகளில் வெளிப் படையாகத் தெரியும் குறைபாடுகள் யாவை ?

வினா 7.7.—மத்திய அரசு பெருந்தொழில் களுக்கு நேரடியாக முதலீடு செய்வதில் தனிப் பட்ட மாநிலங்களை ஆதரித்துள்ளது அல்லது புறக்கணித்துள்ளது என்று குறை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு குறை கூறுவதில் ஏதேனும் நியாய முள்ளதா ? ஆமெனில், மத்திய முதலீட்டை மிகவும் பயனுள்ளதாகச் செய்யத் தாங்கள் கூறும் கருத்தேதும் உள்ளதா ?

வினா 7.8.—தொழில் வளர்ச்சிக்காக மத்திய வரி வருமானத் தொகையும் நிதி உதவியும் வழங்கும் பொருட்டு, தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களை / பகுதிகளைக் கண்டறியப் பின்பற்றப்படும் நடைமுறை தற்போது தேவைப்படும் தகவல்களை அளிக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் மத்திய அரசு ஊக்க உதவி அளித்ததால் எந்த அளவுக்கு பயன் கிடைத்துள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

இதுபற்றி நீங்கள் மாற்றுக் கருத்தேதும் தெரிவிக்கிறீர்களா ?

விடை—7.3., 7.4., 7.7., 7.8 ஆகிய வினாக் களுக்கான பதில் பொதுக் குறிப்பில் உள்ளது.

வினா 7.5.—மாநிலத் திட்டங்களுக்குக் கடன் வழங்குவதைப் பொறுத்தமட்டில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம், இந்தியத் தொழில் கடன்—

முதலீட்டுக் கழகம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா போன்ற மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் தேசியத் தொழில் நிதியுதவி நிறுவனங்கள் செயல்படுவது குறித்து நீங்கள் கருத்தேதும் தெரிவிக்க விரும்புகிறீர்களா ?

விடை.—இந் நிறுவனங்கள், மாநிலங்களுக்கு நிதியுதவி அளிப்பதில் பாரபட்சம் காட்டுவதாகக் குறை கூறப்படுவதால், ஒவ்வொரு மாநிலமும் அதற்குரிய நியாயமான அளவு பங்குத் தொகை பெறும் பொருட்டு நிதி நிறுவனங்கள் நிதியுதவி வழங்குவது தொடர்பாகத் தக்க விதி முறைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

வினா 7.6.—அரசுத் துறையில் மத்திய அரசு முதலீடு செய்வதில் இடத்தைப் பற்றித் தீர்மானிப்பது மாநிலங்களைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமான அம்சமாகும். அவ்வாறு இடங்களைத் தீர்மானிப்பதற்கு முன்னர், மாநிலங்கள் எல்லா சமயங்களிலும் நம்பப்படுவதில்லை என்ற குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டு நியாயமானதா ?

விடை.—அரசுத் துறையில் மத்திய அரசு முதலீடு செய்வது குறித்து இடத்தை முடிவு செய்வதற்கு, அடிப்படை வசதிகள் முதலியவற்றையும், வட்டாரத்தின் பின்தங்கிய நிலையையும் கருத்தில் கொண்டு, கிடைக்கச் கூடிய நிதிவாயில்களின் அடிப்படையில், நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இது தொடர்பாக, மாநிலத்தை முன்கூட்டியே கலந்தாலோசிப்பதும் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

வர்த்தகம்—வணிகம்.

வினா 8.1.—வணிகம், வர்த்தகம், பன்மாநிலங்களிடையே வணிகப் போக்குவரத்துத் தொடர்பு ஆகியவை பற்றி சில கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக விளக்கும் 301, 302, 303, 304ஆம் பிரிவுகளின் செயல்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, நாடாளுமன்றம் சட்டப்படி அதிகார மன்றம் ஒன்றை அமைக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் (307ஆம் பிரிவு வகை செய்கிறது. இதுவரையில் அத்தகைய அதிகார மன்றம் எதுவும் 307ஆம் பிரிவின்படி) அமைக்கப் படவில்லை.

வணிகமும், வர்த்தகமும் எளிதில் நடைபெறுவதைக் கட்டுப்படுத்துகின்ற முறைப்படுத்தும் சட்டங்கள் (வரி, வரியற்ற) பற்றிய கருத்து வேறுபாடு மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையேயும் மாநிலங்களுக்கிடையேயும் எப்போதுமே இருந்து வருகின்ற ஒன்றாகும். வணிகம், வர்த்தகம் நடைபெறுவதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே சுமுகமான உறவு இருக்கும் பொருட்டு, பின்வருவனவற்றிற்காக அதிகார மன்றம் ஒன்றை அமைக்க வேண்டியது அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?

(a) அந்தந்த மாநிலத்திலேயும் பன்மாநிலங்களுக்கிடையேயும் நடைபெறும் வணிகம், வர்த்தகம் ஆகியவற்றின் மீது பல்வேறு அரசுகள் விதிக்கும் கட்டுப்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அவ்வப்போது அறிக்கை ஒன்றைத் தயாரித்தல்;

(b) வணிகமும் வர்த்தகமும் எளிதில் நடைபெற வகை செய்யும் நோக்கத்துடன் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் சீரமைக்க அல்லது திருத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைத்தல்;

(c) இது தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் வரும் புகார்களை ஆய்வு செய்தல் ;

இதுபற்றி நீங்கள் கருத்தேதும் கூற விரும்புகிறீர்களா ? ஆமெனில், அவற்றைக் குறிப்பிடவும்.

விடை.—எந்தவொரு வாழ்க்கைத் தொழிலையும் மேற்கொள்ள அல்லது வணிகம் அல்லது வியாபாரத்தை நடத்த ஒவ்வொரு குடிமகனுக்கும் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையைப் பொறுத்தமட்டில் வணிகம், வர்த்தகம் என்பது பற்றி முக்கியமாகக்கூற வேண்டியுள்ளது. பன்மாநிலங்களுக்கிடையேயான வாணிபத்திற்கும், மாநிலத்திலேயே நடைபெறும் வாணிபத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டவேண்டும். பன்மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வாணிபத்தைப் பொறுத்தமட்டில் ''சட்டமியற்றுதல் தொடர்பான உறவுகள்'' (குறிப்பாகப் பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட 33-ம் பதிவைப் பொறுத்தமட்டில்) அந்தந்த மாநிலத்திலேயே நடைபெறும் வர்த்தகம், வணிகம் ஆகியவை பற்றிய குறிப்பை விட்டுவிட்டு, பன்மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் வணிகத்தைப் பற்றி மட்டுமே குறிப்பிடும் வகையில், 302ஆம் பிரிவைத் திருத்தி மத்திய—மாநில உறவைத் தொடர்ந்து வைத்து வருவது முறையானதாகும். மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே தற்போதுள்ள ஏற்பாடுகள் செயல்படுவதை ஆய்வு செய்வதற்குப் பொருத்தமாக இருக்கக்கூடிய

மாற்றங்களையும் நடவடிக்கைகளையும் பரிந்துரைக்க நீதிபதி சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டுள்ளதற்கான நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, வணிகம்—வர்த்தகம் நடைபெறுவதைப் பொறுத்தமட்டில், அதிலும் குறிப்பாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19 (1) (g) பிரிவின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை காரணமாக, மத்திய அரசும் மாநில அரசும் ஒரே மாதிரியாக கருதப்பட வேண்டும் என்று இவ்வரசு கருதுகிறது. 302ஆம் பிரிவைத் திருத்துவதில் முன்னர் கூறிய பரிந்துரை தவிர, '' நியாயமான '' என்னும் சொல்லை '' கட்டுப்பாடுகள் '' என்னும் சொல்லிற்கு முன்பாக அமைத்துக் கொள்ளலாம்.

303ஆம் பிரிவு பற்றி இவ்வரசு கருத்தேதும் கூறவில்லை. 304ஆம் பிரிவு வரி வேறுபாட்டைத் தவிர்க்கக் கருதுகிறது. ஆனால், இவ்வரசு 304ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனையை விட்டுவிடக் கருதுகிறது. 304ஆம் பிரிவு அதிகாரம் வழங்கும் ஒரு சட்டப்பிரிவாகும். இப்பிரிவின்படி விதிக்கவேண்டிய வரிகள் வேறுபாடுள்ளவையாக இருக்கக்கூடாது. மாநிலச் சட்டமன்றம் விதிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் நியாயமானதாகவும் மக்கள் நலத்தைக் காப்பதாகவும் இருக்க வேண்டும். இதுவரையில், 304ஆம் பிரிவைப் பொறுத்தவரை நாங்கள் கருத்தேதும் தெரிவிக்கவில்லை. வணிகமும் வர்த்தகமும் தடையின்றி நடைபெறுவதற்குக் கட்டுப்பாடு விதிப்பது தொடர்பாக ஏதேனும் சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் அல்லது மாநிலச் சட்டமன்றத்தில் முன்மொழியப்படுவதற்கு முன்னர் குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும் என்று மேற்படி பிரிவின் வரம்பு நிபந்தனை குறிப்பிடுகிறது. பன்மாநில வணிக, வர்த்தகத்திற்கு மட்டுமின்றி ஒரு மாநிலத்தின் எல்லைகளுக்குள் நடைபெறுகின்ற வணிக நடவடிக்கைகளை முறைப்படுத்தவும் அல்லது கட்டுப்படுத்தவும் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் என்கின்ற வரம்பு நிபந்தனை பின்பற்றப்படும்; சட்டமியற்றும் அதிகாரங்களைப் பிரித்தளிப்பதைப் பொறுத்தமட்டில் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காகவும் இசைவிற்காகவும் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட முன்வடிவுகளை நிறுத்தி வைப்பது தொடர்பான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அனைத்து விதித் துறைகளும் [288 (2) பிரிவு தவிர] ஒட்டு மொத்தமாக நீக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளோம். தங்கு தடையின்றி வணிகம் வர்த்தகம் நடைபெறுவது குறித்து மாநிலச் சட்ட மன்றம் கொண்டு வந்த சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நியாயமானவையா? இக் கட்டுப்பாடுகள் 304(b) விதியின் செயல் நோக்கத்திற்காக மக்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்டவையா என்பவை, உயர்நீதிமன்றத்தால் அல்லது தலைமை நீதிமன்றத்தால் இறுதியாக முடிவு செய்யப்பட வேண்டிய வினாக்களா? கட்டுப்பாடுகள் நியாயமற்றவை அல்லது மக்களின் நலத்தைப் பாதிப்பவை என்று நீதிமன்றம் அறிந்தால் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியோ, பின் அனுமதியோ உறுதியற்ற நிலையைப் போக்கவியலாது. சட்டம் வேறு வகையில் செல்திறனுள்ளதாகவும் கட்டுப்பாடுகள் நியாயமானதாகவும் பொதுமக்களின் நலத்தைக் காப்பதாகவும் இருந்தால் அவருடைய முன் அனுமதி தேவையில்லை. எவ்வாறாயினும், குடியரசுத் தலைவரின் முன் அனுமதித் தேவை, என்று கூறுவதே மாநிலச் சட்டமன்றத்திற்கென்று ஒதுக்கப்பட்ட அதிகாரத்தை நேரடியாக ஆக்கிரமிக்கிறது. ஆகவே, 304ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். 301, 307 ஆகிய பிரிவுகளைப் பொறுத்தமட்டில் நாங்கள் மேற்கொண்டும் தெரிவிக்கக் கருத்தேதுமில்லை.

'' 8.1. '' வினாவிற்கு பதிலளிக்கையில்,

(a) பன்மாநில வணிக வர்த்தகத்திற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் குறித்து ஆய்வு செய்து குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை அறிக்கை தயாரிக்கவும்;

(b) வணிகம் வர்த்தகம் நடைபெறுவதை எளிதாக்கும் நோக்கத்துடன் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைச் சீரமைக்க அல்லது திருத்தத்தக்க நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும்;

(c) FICCI போன்ற உச்ச அமைப்பு உட்பட வர்த்தக சபையிடமிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்யவும்.

வணிகம், வர்த்தகம் நடைபெறுவதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே நல்லுறவு இருக்கும் பொருட்டு அதிகார மன்றம் ஒன்றை நியமிக்க வேண்டியது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்.

வேளாண்மை.

வினா 9.1.—கால்நடை வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீனளம் உள்ளிட்ட வேளாண்மைத் துறை மாநிலப் பட்டியலில் (ஏழாம் விவர அட்டவணையில் II-ம் பட்டியல்) இடம் பெற்றிருக்க, மத்திய அரசின் பட்டியலிலும் குறிப்பாக ஏழாம் விவர அட்டவணையிலுள்ள பொதுப் பட்டியலிலும் உள்ள பல்வேறு பதிவுகள் மூலம் அரசியலமைப்புச் சட்டம், வேளாண்மை குறித்த பணிகளில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க பெரும் வாய்ப்பினை அளிக்கிறது. மத்திய-மாநில அரசுகள் உறவு குறித்த நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் (1967) ஆய்வுக் குழு

"பொதுப் பட்டியலின் 33ஆம் பதிவு இனத்தை ஆய்வு செய்யும்போது" வேளாண்மை, மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறையாகவே கருதப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான பொறுப்பினை ஏற்க இயலாகாததாகவும் தோன்றுவதாகக் கூறியுள்ளது.

1967ஆம் ஆண்டிலிருந்து இந் நிலை எவ்வாறு மாறியுள்ளது? நீங்கள் எந்த அளவிற்கு மேற்சொன்ன கருத்தினை ஏற்றுக்கொள்கிறீர்கள்?

விடை.—மத்திய-மாநில அரசு உறவுகள் குறித்த நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் (1967) கருத்துரையினை நாங்கள் ஏற்கிறோம். தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, காடு வளர்ப்பு, மீனளம் உள்ளிட்ட வேளாண்மைத் துறை முக்கியமாக மாநில அரசின் துறையாகவே கருதப்பட வேண்டும். வேளாண்மைத் துறையில் பெரும்பாலான துறை பிரிவுகளை மத்திய அரசு தன் பொறுப்பில் வைத்துக் கொண்டு மாநில அரசுகள் கொண்டு வரும் சிபாரிசுகளுக்கேற்பத் தனிப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசு பெருமளவிற்கு நிதி ஒதுக்கம் செய்கின்றது. சில இனங்களில், சில துறைகளுக்கு மத்திய அரசின் உதவி அவசியமாகவும் முக்கியமாகவும் அளிக்க வேண்டியிருந்தும்கூட, மத்திய அரசு உள்ளூர்ப் பிரச்சினைகளை உணராததாலும், முறையாக புரிந்து கொள்ளாத காரணத்தாலும் மத்திய அரசின் உதவி கிடைப்பதில்லை. எனவே, தனிப்பட்ட இனங்களின் தகுதியின் அடிப்படையில் மத்திய அரசின் உதவி கிடைப்பதில்லை; ஆனால் அதற்குப் பதிலாக ஏற்றத் தாழ்வாக உதவி அளிக்கப்படுகிறது. இதனைச் சரிசெய்ய வேண்டியது அவசியம். நடவடிக்கைகளில் மத்திய அரசின் குறுக்கீடு கட்டுப்படுத்தப்படாத வரையில் ஒருதலைபட்சமாக அல்லது தேவையற்ற முறையில் சாதகம் செய்வதற்கான வாய்ப்புகள் பெருமளவில் உள்ளன.

எனவே, மாநிலங்கள் சமமான முறையில் நடத்தப்படுவதற்கும், மத்திய அரசின் தங்கு தடையற்ற தன்னிலையான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கும், பெரும் நிதிச் செலவிலானவையும் மத்திய அரசின் உதவி பெறக் கூடியவையுமான பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கவும், பொதுப் பட்டியலின் 33ஆம் பதிவின் செயல் வரம்பினைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

வேளாண்மை மாநில அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வரக் கூடியதாக இருந்த போதிலும், வெள்ளச் சேதம் அல்லது தொடர் வறட்சி நிலையின் காரணமாக ஒரு மாநிலம் அல்லல்படும்போது, அதன் வளர்ச்சியில் மத்திய அரசும் அக்கறை செலுத்த வேண்டும். இல்லையெனில், மாநில அரசு பெருமளவுத் தொகையைச் செலவிட வேண்டியிருக்கும். 33, 34-ம் பதிவுகள் மாநில அரசுப் பட்டியலுக்கு மாற்றப்படலாம். இதனால், தேசிய அல்லது பொது நலனிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. குறிப்பிட்ட ஒரு மாநிலத்தில் வெள்ளச் சேதம் அல்லது தொடர் வறட்சி நிலை ஏற்பட்டு பாதிப்பு ஏற்படும்போது, மத்திய அரசு மாநில அரசின் நலனில் அக்கறை காட்டுவதுடன், இத்தகைய அவசர நிலைகளில் மட்டும் உதவி அளிப்பதுடன் நில்லாது, இதற்காக எடுக்கப்படும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் வேண்டும் என்றும் அரசு கருத்து தெரிவிக்கிறது.

வினா 9.2.—வேளாண்மைத் துறையில் மத்திய-மாநில அரசு உறவினை ஆய்வு செய்த தேசிய வேளாண்மைக் குழு (1976), நீண்டகாலத் தொலை நோக்கு வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டு "மாநிலத் துறையின்" ஒரு பகுதியாக மாநில அரசினை முகவரமைப்பாக வைத்து மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், அவை குறைந்த எண்ணிக்கையில் இருக்க வேண்டுமென்றும் பரிந்துரை செய்துள்ளது.

நீங்கள் இக் கருத்தினை ஏற்றுக் கொள்கிறீர்களா, ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை? இது தொடர்பாக குறிப்பிட்ட கருத்துரை எவையேனும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?

விடை.—வேளாண்மைத் துறையானது மாநில அரசிற்குட்பட்ட துறையாகக் கருதப்பட வேண்டும்; அதிக அளவிற்குப் பொறுப்புகள் கட்டுப்பாட்டினை தன்னிலையான நடவடிக்கைகளில் மத்திய அரசு பெருமளவில் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. வேளாண் தட்பவெட்ப மண்டலங்களும் உணவுப் பழக்க வழக்கங்களும் மாநிலத்திற்கு மாநிலம் பெரிதும் வேறுபடுவதால், இத்துறையை விரிவான அளவில் பொதுமைப்படுத்த இயலாது. மேலும், பல்வேறு பயிர்களுக்கு அனைத்திந்திய குறியிலக்கினை நிர்ணயிக்கும் போது, சமமான உற்பத்தியளவினை நிர்ணயிக்கப்படுவதில்லை. உதாரணமாக, கோதுமை, அரிசி விலையில் ஒற்றுமை இல்லை. இதன் விளைவாக நெல் பயிரிடுவதினால் வடக்குப் பிராந்தியத்திலுள்ள விவசாயிகளுடன் ஒப்பிடும்போது தெற்கு பிராந்தியத்திலுள்ள விவசாயிகள் இன்னலுக்குள்ளாகிறார்கள்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்திலும் கூட, மத்திய அரசு கணிசமான மூலதனத்துடன், அதாவது, 1983–84ஆம் ஆண்டில் வேளாண்–காடு வளர்ப்பிற்கு ரூ. 188 இலட்சம் மூலதனத்துடன் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்தது. எனினும், மாநிலம் இத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு தற்போதைய தேவை

களுக்குச் செலவிட்ட பின்னர், மாநில நிதியின்கீழ் கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது. ஆகவே, மாநிலங்கள் அவற்றின் நீண்டகால வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டு அவற்றுக்குத் தேவையானநிதி உதவியை இந்திய அரசு அளித்தாலே போதுமானதாகும். இந்திய அரசு ஒரு மொத்த மானியங்களுக்கு அனுமதி அளித்து, இந்திய அரசு தகுதியெனக் கருதுகிற யாதொரு வேளாண் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அத் தொகையை மாநில அரசின் பொறுப்பில் ஒப்படைக்கலாம். மேலும், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடுகள் வருவாய் செலவினங்களுக்கு மட்டுமேயன்றி, மூலதனச் செலவுகளுக்கல்ல என்கிற வகையில் முறைமை உள்ளது. இது பெருமளவிற்குத் தளர்த்தப்பட்டு, நிலையான கட்டிடங்கள் கட்டுதல், சாதனங்கள் வாங்குதல் முதலியன போன்ற காரியங்களுக்காக நீண்ட கால அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு (1976) நீண்டகாலத் தொலைநோக்குத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்றும், அதில் மத்திய அரசு மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மாநில முகவரமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டு மென்றும், இவை மாநிலத் துறையின் ஒரு பகுதியாக அமைய வேண்டுமென்றும், இவற்றின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்றும் செய்துள்ள பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை ஆண்டு முழுவதும் நிறைவேற்றும்போது, ஒவ்வோராண்டும் பல இடையூறுகள் ஏற்பட்டு, பல்வேறு திட்டங்களின் வளர்ச்சி வேகத்திற்குத் தடை ஏற்படுத்துகின்றன. எனவே, வேளாண்மைத் திட்டங்களைத் தட்பவெட்ப நிலைக்கேற்ப சரியான வழியில் செயல்படுத்தும் நோக்குடன், பயிர் வளர்ப்புத் திட்டங்கள்/திட்டப் பணிகள் மாநிலத் துறைத் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பது பொருத்தமாகும். மேலும், புதிய திட்டங்கள், அந்தந்த மாநிலங்களில் நிலவும் உள்ளூர் நிலைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட வேண்டும்; இதனைப்பெரும்பாலான மாநிலங்களுக்குப் பொதுவானதாக்க இயலாது. மாநிலத் துறையின் கீழ் திட்டங்களை மாநில முகவரமைப்பு தொடர்ந்து மேற்கொள்வதற்கு முன் நீண்டகால உதவியினைத் திட்டமிட வேண்டும்.

வினா 9·3.—வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழுவின் கருத்துரைகளாவன (1976) :—

(I) மத்திய அரசு மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் வேளாண்மை திட்டத்தை அமைக்கும்போது இணைப் பணிக் குழுக்களின் மூலமாக மாநிலங்களுடன் கலந்து உருவாக்க வேண்டும். (II) நிதி நெருக்கடியின் காரணமாக, திட்டத்தில் செய்யப்பட்ட சரிக்கட்டல்கள், மாநிலங்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாகவும் திட்டங்களின் முன்னுரிமைகளை ஏற்று அவற்றைச் செயல்படுத்தும் நிலையிலும் உள்ளன என்பதை உறுதி செய்து கொள்வதற்கு மத்திய அரசுக்கும் மாநில அரசின் இணைப் பணிக் குழுவிற்குமிடையே தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும்.

மேற்கூறியவற்றில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் எந்த அளவிற்குத் தற்போது ஒத்துழைப்பு காணப்படுகிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள். நீங்கள் இதனை மேம்படுத்த தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை ?

விடை.—மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை உருவாக்குவதில் மாநில, மத்திய அரசுகள் சரிசமப் பங்குதாரர்களாயிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், திட்டங்களை நிறைவேற்றுவதில் மத்திய அரசு மட்டுமே நிபந்தனைகளையும் வரையறைகளையும் விதிக்க இயலாது (உதாரணமாக) தீவிர பருத்தி வளர்ச்சி திட்டப் பணியாளர்களுக்கு மத்திய அரசின் நிதி கிடைக்காது. ஏனெனில், அவர்கள் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய-மாநில பணிக் குழுக்கள் தங்களது கருத்துப் பரிமாற்றங்களுக்காக அடிக்கடி சந்திக்க வேண்டும் ; அரசுக்கு ஏற்படும் சிரமங்கள் மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பெரும்பான்மை மக்களின் நலனுக்காக நிறைவேற்றவேண்டிய முன்னுரிமைத் திட்டங்களைக் கண்டறிய பணிக் குழுக்கள் முறையான நெறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழுவின் கருத்துரைகளை வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். அப்போதுதான், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டு, இருவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களை விட்டுவிடாது நிறைவேற்ற இயலும்.

வினா 9.4.—எந்த அளவிற்கு எந்த வகையில் மத்திய அரசின் தொடக்க முயற்சிகள் பின்வரும் இனங்களில் மாநில அரசினைப் பாதிக்கின்றன ? (அ) வேளாண்மை விளைப் பொருள்களின் குறைந்த அளவு அல்லது நியாயவிலை நிர்ணயித்தல், (ஆ) பாசனம் (மாநிலங்களுக்கிடையேயானவை உட்பட) (இ) கடன் வசதி உட்பட நடைமுறை இடுபொருள்களை வழங்குதல், (ஈ) காடு வளர்ப்பு கொள்கை, நிருவாகம்.

இவ்வகையில் மாநில—மத்திய அரசு உறவுகளில் கடும் பிரச்சினை எதனையும் நீங்கள் காண்கிறீர்களா? இது குறித்து நீங்கள் ஏதேனும் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?

விடை.—வேளாண் விளை பொருள்களுக்கு அதிலும் குறிப்பாக நெல்லிற்குக் குறைந்த விலை நிர்ணயிப்பதில் மாநில அரசுகள் பாதகமான நிலையிலுள்ளன. பல சமயங்களில்உள்ளூர் நிலைமைகளில் உள்ள வேறுபாடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை; சில சமயங்களில் அவை உற்பத்திச் செலவிற்கு முற்றிலும் தொடர்பில்லாத வகையில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரே விதமான பயிர் பயிரிடப்பட்டாலும் கூட, நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் முற்றிலும் வேறுபட்ட நிலைகளே இதற்குக் காரணமாகும். எனவே, வேளாண்பொருள்களுக்குக் குறைந்த அளவு நியாய விலையினை நிர்ணயிக்கும்போது,முடிவுகளை எடுக்கும் அமைப்பு மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். கோதுமைக்கும், நெல்லிற்கும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமெனப் பலமுறை வலியுறுத்தப்பட்டும் கூட, அக் கோரிக்கை செயல்படுத்தப்படவில்லை.

இது, இம் மாநிலத்தில் பெரும்பான்மையினரின் இந்த முக்கிய உணவுப் பயிரைச் சிக்கனமாகப் பயிரிடுவதில் பிரச்சினை ஏற்படுத்துவதுடன், அரசியல் பிரச்சினைகளையும் தூண்டிவிடுவதாய் அமைகிறது.

பாசனத்தில், இயற்கையில் கிடைக்கக்கூடிய தண்ணீர், உச்ச அளவிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பகுதி IV-ல் இது தொடர்பாக நாங்கள் செய்துள்ள கருத்துரைகளும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும்.

கடன் உட்பட வழங்கப்படும் நடைமுறை இடுபொருள்கள், போதுமானவையன்று; மாநிலம் அவ்வப்போது கருத்துரைப்பதற்கு ஏற்ப இவற்றின் அளவு உயர்த்தப்பட வேண்டும்.

மாநில அரசுகளின் நன்மையைக் கருதி காடு வளர்ப்புக் கொள்கையினை வடிவமைப்பதிலும் நிருவகிப்பதிலும் மாநில அரசுகளுக்கு உயரளவிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வந்தது முதற்கொண்டு ''வனங்கள்'' மாநிலப் பட்டியலின் கீழேயே இருந்து வருகிறது. ஆனால், 1976ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தி இரண்டாவது திருத்த) சட்டம் 3–1–1977-லிருந்து செயலுக்கு வந்தபின்பு அது பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. இதன்படி மேற்கூறிய வனங்கள் குறித்து மத்திய-மாநிலம் ஆகிய இரு அரசுகளும் சட்டங்கள் இயற்றலாம். இந்திய அரசியலமைப்பு (நாற்பத்தி இரண்டாவது திருத்தச்) சட்டத்தில் குறிப்பிட்டுள்ளது செயலுக்கு வருவதற்கு முன்பு இருந்ததைப் போலவே ''வனங்கள்'' மாநிலப் பட்டியலிலேயே திருப்பிச் சேர்க்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

சமீபத்தில் மத்திய அரசு 1980ஆம் ஆண்டு வன (பாதுகாப்புச்) சட்டத்தைக் (மத்தியச் சட்டம் 69/1980) கொண்டு வந்தது. அச் சட்டம் 25-10-1980-லிருந்து செயலுக்கு வந்தது. இந்த மத்தியச் சட்டம், மாநில அரசுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தது. மேற்சொன்ன சட்டத்தின்படி வனத்தைச் சேர்ந்த எந்த நிலங்களையும் அல்லது எந்தவொரு வனப் பகுதியையும், மத்திய அரசின் முன்அனுமதியின்றி வனப் பணி அல்லாத நோக்கத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. இச் சட்டத்தின்படி வனப் பணி அல்லாத நோக்கங்கள் எனபது, எந்தவொரு வனத்தைச் சேர்ந்த நிலத்தையும் அல்லது நிலத்தின் பகுதியையும், மீண்டும் மரம் வளர்ப்பதைத் தவிர எந்தவொரு நோக்கத்திற்காகவும் துண்டாக்குதல் அல்லது காலி செய்தல் என்று பொருள்.

முன்பு காப்பு வனமாக இருந்த எந்தவொரு நிலத்தையும் மத்திய அரசின் முன் அனுமதியின்றி காப்பு வனம் அல்ல என்று அறிவிக்கவும் மாநில அரசுக்கு அதிகாரமில்லை.

வன நிலத்தின் ஒரு பகுதியில் சாலை அமைக்க வேண்டுமென்றாலோ அல்லது வன நிலத்தின் ஒரு பகுதியை பொதுமக்களுக்கு நீர் வழங்கு திட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்றாலோ வன (பாதுகாப்புச்) சட்டத்தின்படி, மத்திய அரசின் முன் அனுமதி பெறவேண்டும்.

விவசாயி ஒருவர் அவருடைய நிலத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு வன நிலத்தின் பக்கவாட்டின் வழியாக குழாய் அமைக்க வேண்டுமென்றாலுங்கூட அதையும் மத்திய அரசுக்கு தெரிவித்து முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

வன (பாதுகாப்புச்) சட்டம் செயலுக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே வனநிலம் ஏற்கெனவே நிரந்தரமாக்கப்பட்டிருந்தது. அந்நிலத்தின் தன்மையையும் வளமையும் முழுமையாகவும், தெளிவாகத் தெரியாத அளவிற்கும் மாற்றம் அடைந்திருந்தாலும் அறிக்கையின் மூலம் இந்நிலம் காப்பு வனம் அல்ல என்று அறிவிக்கப்படாதிருந்தால் இவற்றிற்காக செயற் குறிப்புகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

மேலும் கிராமங்களுக்கு குறிப்பாக, பழங்குடியினர் வாழ் பகுதிகளுக்கு மின்இணைப்பு கொடுக்க வேண்டுமென்றாலும், அதற்கான செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். பழங்குடியினர்களுக்கான வளர்ச்சித் திட்டப் பணிகளை உடனடியாகவும் விரைவாகவும் செயல்படுத்துவது இச்சட்டத்தின்படி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

பொதுமக்களின் தேவைகளை மாநில அரசு நேரடியாகக் கவனித்து வருகிறது. அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது அவ்வரசின் சட்டப்பூர்வமான கடப்பாடாகும். உரிய ஒப்புதல் பெறப்பட்ட பின்பும், இவ்வரசு மத்திய அரசுக்கு செயற்குறிப்புகளை அனுப்புகிறது. சில இனங்களைப் பொறுத்த வரையில், கோரிக்கைகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது. சில செயற்குறிப்புகள், உயர்மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டும் நிராகரிக்கப்படும். இது மாநில அரசுக்கு ஒரு இக்கட்டான நிலையை உருவாக்குகிறது. இது, மக்களின் உடனடித் தேவையை நிறைவு செய்வதை ஒரு தவறான நிலைக்குக் கொண்டு செல்கிறது. வனங்களைப் பாதுகாப்பதில் மத்திய அரசைப் போலவே மாநில அரசுக்கும் பொறுப்பு உண்டு. ஆனால், வன (பாதுகாப்புச்) சட்டத்தின்கீழ் ஒரு மாற்று ஏற்பாடாக குறைந்த அளவு கீழ்க்காணும் ஒரே மாதிரியான இனங்களிலாவது சில அதிகாரங்களை மாநில அரசுக்கு மாற்றுவது தேவையான ஒன்றாக இருக்கிறது.

(1) வனப் பகுதிக்குள் மின்சக்தி செல் வழிகள் அமைக்கப்படும் போது, அவற்றுக்கான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பத் தேவையில்லை. ஏனெனில் மரங்கள் வெட்டுவதைக் குறைப்பதற்கு எப்போதும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

(2) பழங்குடியினர், ஏனையோரின் நலனுக்காக வனத்துறை சாலைகள் அமைத்துக் கொண்டிருக்கிறது. சாதாரணமான சாலைகள் அமைக்கப்படும்போது, அவற்றுக்கான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பத் தேவையில்லை. ஆனால், நெடுஞ்சாலைகள்-ஊரகப் பணித் துறையால், மோட்டார் செல்லத்தக்க, 20 அடி அகலத்திற்கும் அதிகமான பெரிய சாலைகள் காப்பு வனத்தில் அமைப்பதற்கு அவற்றுக்கான சில செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

(b) மத்திய அரசு, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்ப்பங்கீட்டுத் தகராறுகள் சட்டத்தை (மத்திய சட்டம் 33/1956) இயற்றியது. இச் சட்டம், மாநிலங்களுக்கிடையிலான ஆறுகள்—ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் நீர்ப்பங்கீடு தொடர்பான தகராறுகளுக்குத் தீர்ப்பு வழங்குகிறது. 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்ப் பங்கீட்டுத் தகராறுகள் சட்டத்தில், மாநிலங்களுக்கிடையிலான ஆற்றிலிருந்து நீர் பெறுவதற்கான உரிமையையும் முறைப்படுத்தவேண்டும். தகராறுகள் ஏற்படும்போது, அவற்றைக்காலதாமதமின்றி உடனடியாக தீர்ப்பதற்காக மத்திய அரசு இச் சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் நடுவர் மன்றங்களை அமைக்க வேண்டும். தற்போதுள்ள முறையில் நீரைப் பங்கீடு செய்வதற்கும், மாநிலங்களின் உரிமைக்கேற்ப சம அளவில் நீரை ஒதுக்கீடு செய்வதற்கும், வடிநிலப்பகுதி மாநிலங்களுக்கிடையில் ஒப்பந்தம் செய்வதற்கும் நடைமுறையில் உள்ள பழக்க வழக்கத்தின் மூலம் உரிமைகளைப் பெறுவதற்கும், ஆற்றுப் பகுதி வடிநில அதிகார மன்றம் அமைக்கப்பட வேண்டும். இந்த அதிகார மன்றத்திற்கேற்ப, மாநிலங்களுக்கிடையிலான நீர்ப் பங்கீட்டுத் தகராறுகள் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை எவ்வாறு செயல்படுத்துவது என்பது ஈண்டு எழும் பிறிதொரு பிரச்சனை ஆகும். நடுவர் மன்றத் தீர்ப்பு இறுதியானதும் தகராறுக்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் கட்டுப்படுவதும் ஆகும் என்று அதற்கு இரு தரப்பினரும் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்றும் மேற்கூறிய சட்டத்தின் 6ஆம் பிரிவு தெரிவிக்கிறது. இருப்பினும், தீர்ப்பை எவ்வாறு செயல்படுத்துவது என்ற கேள்வியே எழுகிறது. இதற்கு நடுவரின் தீர்ப்புக்கு இணங்க சம்பந்தப்பட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவும், அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பின் பேரில் அதனைத் தொடர்ந்து டிகிரி வழங்கவும் 1940ஆம் ஆண்டு நடுவர் இணக்கச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1940) 17ஆம் பிரிவு அதிகாரமளிக்கிறது என்பதை இங்கு குறிப்பிடலாம். 1956ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தில் இதைப் போன்ற விதித்துறை இல்லையென்றால், கட்டுப்பாட்டை மீறும் மாநிலத்தின் மீது நடுவர் மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த முடியுமா? என்பது மிகவும் ஐயத்திற்கிடமாக உள்ளது.

எனவே, நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பைச் செயல் படுத்த சட்ட முறையின் மூலம் நிவாரணம் பெற தகராறுக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இயலும் வகையில், இச் சட்டத்தை மாற்றியமைச்க வேண்டுமென்றே அல்லது இச் சட்டத்தில் புதியதொரு விதித் துறையைக் கொண்டு வர வேண்டுமென்றே அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

குறிப்பிடப்படும் பணிகளை ஆற்ற தேசிய நீர் ஆதாரங்கள் குழு, ஆற்றுப்படுகை ஆணைக் குழுக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தலாம். இவை, செயல்படுவதற்குரிய முறைகளை மத்திய-மாநில அரசுகளிடையே மேற்கொண்டும் நடைபெறும் பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவு செய்யலாம்.

மாநிலங்களுக்கிடையே செல்லும் ஆறுகளை தேசிய ஆறுகள் என்று மத்தியஅரசு அறிவிக்கலாம். நடுவர் மன்றம் பிறப்பிக்கும் தீர்ப்பை, நிறைவேற்ற நிருவாக ஏற்பாடுகளை அந்த நடுவர் மன்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது கட்டாயமானதாகும் என்றும், அத்தகைய ஏற்பாடுகள் அனைத்து மாநிலங்களையும் கட்டுப்படுத்தும் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

வினா 9.5.—வேளாண் ஆராய்ச்சி (எ.க. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு)நிதியுதவி நிறுவனங்கள் (எ.க.) வேளாண்மை ஊரக வளர்ச்சி தேசிய

வங்கி ஆகியவற்றின் செயற்பாடு குறித்து மத்திய-மாநில அரசின் உறவில் பிரச்சனை ஏதும் உள்ளதாக உங்களுக்குத் தெரிய வருகிறதா? இது தொடர்பாக, தாங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்கள் யாவை?

விடை.—தட்ப-வெப்ப நிலைகள் முற்றிலும் தெளிவாக வேறுபடக் கூடிய தமிழ் நாட்டைப் போன்ற தென்மாநிலங்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் ஆட்சிக் குழுவில் அதிக பிரதிநிதித்துவம் இருக்க வேண்டிய அவசியமாகும் என்பதோடு, இம்மாநிலங்களின் தேவை வட மாநிலங்களின் தேவைகளிலிருந்து வேறுபட்டதாகும். இதனால் மட்டுமே, தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவு செய்ய உரிய வகையில் நிதி வழங்கப் படுவதை உறுதிப் படுத்த முடியும்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு போன்ற கொள்கை வகுக்கும் குழுவில் மாநிலக் கால்நடை வளர்ப்பு, வேளாண்மைத் துறை இயக்குநர்களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழு வெளியிட்ட ஆய்வு வகைகளைவிட, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட ஆய்வு வகைகள் விவசாயிகளுக்கு அதிகப் பயனளிப்பதாக உள்ளன. இந்திய வேளாண்மை ஆய்வுக் குழு, கோதுமையின் மீதும், ஆய்வு நிலையம் எங்கு அமைந்துள்ளதோ, அவ்விடங்களில் இருக்கும் தானிய வகைகளின்மீதும் அதிகக் கவனம் செலுத்துவது அநேகமாக இதற்குக் காரணமாக இருக்கலாம். வேளாண்மை நடவடிக்கைகளின் நேர்விலும் இதே நிலையே நிலவுகிறது. இத்தகைய இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களை மாநிலத்தின் வேளாண்மை தட்பவெப்ப மண்டலங்களில் அமைத்தால் மட்டுமே பயனளிக்க முடியும்.

இந் நாட்டில் காய்கறி வளர்ச்சி, பழ விற்பனை முறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பவியல், சிப்பம் செய்தல், சேமித்துவைத்தல், குளிர்பதன இடம் பெயர் கொள்கலன்கள் ஆகியவை குறித்து ஆராய்ச்சியை மேற்கொள்ளுமாறு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு கேட்டுக் கொள்ளப் படலாம்.

1981ஆம் ஆண்டு மத்திய சட்டத்தின் (1981ஆம் ஆண்டு வேளாண்மை-ஊரக தேசிய வங்கிச் சட்டம்) (மத்தியச் சட்டம் 61/1981) முகவுரையில், வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (நாபார்டு) வேளாண்மை வளர்ச்சிக்காகவும், சிறு தொழில்கள், குடிசை கிராமத் தொழில்கள், கைவினைப் பொருள்கள் தயாரித்தல், ஏனைய ஊரக கைத் தொழில்கள், கிராமப் பகுதிகளில் இதனைச் சார்ந்த ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குக் கடனுதவி அளிப்பதற்காகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிக்காகவும், இவற்றுடன் தொடர்புடைய அல்லது தொடக்கத் தொழில்களுக்காகவும் இவ்வங்கி ஏற்படுத்தப் பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இவ்வங்கியின் முதல் இயக்குநர் குழுவை, மத்திய அரசு 19–3–1983இல் நியமித்தது. மேற்படி வங்கியின் இயக்குநர் குழுவில், கூட்டுறவு வங்கிகள் ஏதாவது ஒரு வணிக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இருவரும், இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அரசு, இரு மாநில அரசுகள் ஆகிய ஒவ்வொன்றின் ஒரு பிரதிநிதியாக மூவரும் கிராம-குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிக்கான ஊரக கைவினை வல்லுநர்கள் இருவரும் அடங்கியுள்ளனர். மேற்படி வங்கி குறித்த செயற்பாடுகள் அதிகமாக மாநிலப் பட்டியில் சேர்க்கப் பட்டுள்ளதால், இதன் இயக்குநர் குழுவில் மாநில அரசுகளின் பிரதிநிதிகளை அதிகரிக்கக் கருதப்படுகிறது.

வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கியும், பயன்பெறுவோரும் நிதி உதவி செய்வதில் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி தற்போது செயல்படுத்தி வரும் முறையானது, வெவ்வேறு வட்டி வீதங்களை அதிக அளவு செலுத்துவதன் மூலம் பயனடைவோரைத் துன்பத்திற்குள்ளாக்குகிறது. ஏனெனில், விண்ணப்பங்கள் ஏனைய முகவர் அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவை அந்த விண்ணப்பங்களைச் சரிபார்த்து அனுப்பும் போது ஒவ்வொரு நிலையிலும் அவை வட்டியை விதிக்கின்றன என்பதே ஆகும். நிதியுதவி கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி நேரடியாகப் பெற்றுக்கொண்டால், இவ்வாறு பல்வேறு வட்டி வீதங்களை அதிகரித்த அளவில் பயன் பெறுவோர் செலுத்த வேண்டி இருப்பதைத் தவிர்க்கலாம்.

உணவு-நுகர்பொருள் வழங்கல்.

வினா எண் 10.1 :

மத்திய-மாநில கலந்தாலோசனை தொடர்பாக தற்போதுள்ள ஏற்பாடுகள், மாநில அரசுகளின் பொறுப்புகளுக்கு இணங்க உள்ளனவா அல்லது உணவுத் தானியங்கள், ஏனைய இன்றியமையாப் பொருள்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல், விலை குறிப்பிடுதல், சேமித்துவைத்தல், கொண்டு செல்லுதல், விநியோகித்தல் ஆகியவற்றில் மத்திய-மாநில உறவை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்களா? திட்டவட்டமான கருத்துரைகளை அளிக்கவும்.

விடை.—உணவுத் தானியங்கள்; இன்றியமையாப் பொருள்கள் ஆகியவற்றைப் பராமரித்தல், வழங்குதல் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள உணவுத் துறை பொறுப்பு ஆகும். சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்கள் நலிந்த பிரிவினர் ஆகியோரின் நலனை கருத்தில் கொள்ளும்போது, மாநிலம் மேற்கூறியவற்றுக்குப் பொறுப்பு வகிக்க வேண்டியுள்ளது. இது குறித்து மத்திய-மாநில அரசுகளின் இரு வேறுபட்ட பொறுப்பு பற்றி பொது மக்களுக்கும், தமிழ்நாட்டின் மக்களுக்கும் முழுவதுமாக அறிவுறுத்தப்படவில்லை. மத்திய-மாநில கலந்தாலோசனைக்குத் தற்போதுள்ள ஏற்பாடுகள் மாநில அரசின் பொறுப்பிற்கு இணக்கமாக இல்லை. இதன் பின்னர், தெரியவருகின்றவாறு, கொள்முதல் செய்தல், விலை நிர்ணயித்தல், விநியோகித்தல் ஆகியவற்றில் மத்திய-மாநில உறவை மேம்படுத்துவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. நிலைமையைக் கீழ்க்காணும் தலைப்புகளில் வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்யலாம்.

கொள்முதல் செய்தல்.

பொது விநியோகமுறையைப் பராமரிக்க இன்றியமையாப் பொருள்களை மாநில அரசு கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாகும். பாதகமான பருவகால நிலைமைகள், குறிப்பிட்ட பொருள் போதிய அளவிற்குக் கிடைக்கப் பெறாதது முதலியவை போன்ற காரணங்களால் பொது வினியோக முறையின் மூலம் வழங்கப் பெறுவதற்குத் தேவையான அளவு உணவுத் தானியங்களை அல்லது ஏனைய பொருள்களை முழுவதும் மாநில அரசு கொள்முதல் செய்வது இயலாததாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பருவகால நிலைகள் இயல்பாக இருந்தால், நெல் உற்பத்தியில் இம் மாநிலம் ஏறத்தாழ தன்னிறைவைப் பெற்ற மாநிலமாக விளங்கும். பருவமழை தவறும்போதெல்லாம், தமிழ்நாடு மாநிலம் பற்றாக்குறை நிலவும் மாநிலமாக ஆகிறது. இத்தகைய சூழ்நிலை கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ளது. எனவே, இம்மாநிலம் தான் கொள்முதல் செய்கின்றவற்றோடு மத்திய தொகு ஏற்பாட்டிலிருந்து, பொருள்களை ஒதுக்கித் தரவேண்டுமென்று கோருவது அவசியமாகியுள்ளது. மேலும், இம்மாநில அரசு ஏனைய மாநிலங்களில் வெளி அங்காடியில் அரிசியையோ அல்லது கோதுமையையோ கொள்முதல் செய்யக் கருதும் போதெல்லாம், இந்த அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. தமிழ்நாடு மாநிலம், ஏனைய மாநில அரசுகளின் முகவரமைப்புகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்குக் கூட, மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டியது அவசியமாகிறது. இது தவிர, மாநிலத்திற்கு வெளியே செய்யப்படுகின்ற கொள்முதலுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அதிக வட்டி வசூலிக்கிறது. தனியார் வர்த்தகர்கள் ஏனைய மாநிலங்களிலிருந்து அம் மாநிலத்தில் லெவியை செலுத்துவதற்கு உட்பட்டு பொருட்களைக் கொள்முதல் செய்ய எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால், மாநில அரசுகள் அவ்வாறு வெளி மாநிலங்களிலிருந்து பொருட்களைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்றால் (லெவிக்கு வழங்கப்பட்ட இருப்பாக இருந்த போதிலும்கூட) அந்த அளவிற்குக் கட்டுப்பாடில்லாது அரிசி அல்லது கோதுமையைக் கொள்முதல் செய்ய இயலவில்லை. மத்திய அரசின் அனுமதியைப் பெறுவது என்பது இடைஞ்சலான சூழ்நிலையை உருவாக்குகிறது. தனியார் வர்த்தகர்கள் வெளி மாநிலங்களிலிருந்து எவ்விதக் கட்டுப்பாடும் இன்றிக் கொள்முதல் செய்யலாம் என்றுள்ளபோது, ஏன் மாநில அரசுகள் மட்டும் மத்திய அரசின் இசைவைப் பெற வேண்டும் என்பதற்குரிய காரணம் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு மாநிலம் அம்மாநிலத்திற்குத் தேவையான அளவைவிட அதிக அளவைக் கொள்முதல் செய்யாது. உணவு என்பது மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் வருகிறது. அது தொடர்பாக அளவுக்குமீறி கட்டுப்பாடு விதிப்பது விரும்பத்தக்கது அல்ல.

பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்ய மத்திய அரசு இசைவளித்தபோதிலும், இந்திய ரிசர்வ் வங்கி வழங்கும் ரொக்கக் கடன் உதவிக்காக அதிக வட்டி வசூலிக்கிறது. இவ்வாறாக, உயர் வட்டி வீதமானது அரிசியின் விலையை அதிகரிக்கச் செய்கிறது. விலைவாசி உயரும்போது, பொது மக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர். விலையை நிர்ணயிப்பது மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாதபோதிலும் அது குறித்து, மாநில அரசு பொது மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டியுள்ளது.

மத்தியதொகு ஏற்பாட்டிலிருந்து ஒதுக்கப்படுவதைப் பொறுத்தமட்டில், எவ்வளவு ஒதுக்க வேண்டும் என்பது குறித்து மத்திய அரசு தனக்கென்று ஒரு கொள்கை வைத்து வருகிறது. இதனால், மாநில அரசு, உரிய பங்கைப் பெற இயலுவதில்லை. மாநில அரசு, தன்னிடம் உபரியாக உள்ளபோதெல்லாம் மத்தியதொகு ஏற்பாட்டிற்கு வழங்குகிறது என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில், தமிழ்நாடு மாநிலத்தில் உபரி ஏதும் இல்லை என்னும்போது மத்தியதொகு ஏற்பாட்டிற்கு வழங்கி, அதிலிருந்து திரும்பப் பெறுவது என்பதில் பொருளேதும் இல்லை. ஏனெனில், இந்நடைமுறையால் விலை உயர்வதைத் தவிர பயன் ஏதும் விளைவதில்லை. எனவே, மத்தியதொகு ஏற்பாட்டிற்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துவது உண்மையிலேயே உபரியாக இருக்கும்போது மட்டும்தான் அவ்வாறு வலியுறுத்தப்பட வேண்டும். அத்தகைய இடர்ப்பாடுகளைக் களைய கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

(1) மத்திய அரசின் தலையீடின்றி உபரியாக உள்ள மாநிலங்களிலிருந்து லெவி நெல்,

அரிசி ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய மாநில அரசுக்கு அல்லது அதன் முகவரமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

(2) இது குறித்து, இந்திய ரிசர்வ் வங்கி பெயரளவிலானதொரு வீதத்தில் வட்டி வசூலிக்க வேண்டும்.

விலை.—தற்போது கொள்முதல் விலையை வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு நிர்ணயிக்கிறது. இது ஆதரவு விலை எனப்படுகிறது. கோதுமை முதலியவற்றிற்கும் அவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அவ்வாறு மத்திய அரசு விலைகளை நிர்ணயிக்கையில் வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணைக்குழுவின் பரிந்துரையைக கருத்திற் கொள்கிறது. இந்த ஆணைக்குழு மாநில அரசைக் கலந்தாலோசிக்கிறது. கோதுமைக்கு விலை நிர்ணயிக்கையில் அதற்குரிய உற்பத்திச் செலவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது போன்று அரிசிக்கு விலை நிர்ணயிக்கையில் அதற்குரிய உற்பத்திச் செலவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

லெவிமூலம் கொள்முதல் செய்கையில், மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைகொடுக்க வேண்டும்; அதைவிட அதிகவிலை நிர்ணயிக்க இயலாது. இதனால், தனியார் வர்த்தகர்கள் பொருட்களை உயர்விலை வீதத்தில் கொள் முதல் செய்யும்போது மாநில அரசு குறைந்த விலையே வழங்க வேண்டிய கட்டாயம் ஏற் படுகிறது. தனியார் வர்த்தகர்கள் அதிக விலை தரும்போது, குறைந்த விலை தரும் அரசுக்கு எந்த உழவர் நெல்லை விற்பனை செய்ய முன் வருவார்? குறிப்பிட்ட சில நிபந்தனைக்கு உட்பட்டு மத்திய அரசின் இசைவுடன் கொள் முதல் விலையை மாநில அரசு நிர்ணயிக்க அதற்கு 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3 (3B) ஆம் பிரிவு அதிகாரமளித்த போதிலும், நடைமுறையில் இந்த அதிகாரத்தை மாநில அரசு செலுத்த இயலுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, கொள்முதல் விலையை நிர்ணயிப்பதில் "மத்திய அரசின் முன் அனுமதியுடன்" என்று 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3 (3B) பிரிவில் வரும் தொடர் நீக்கப்பட வேண்டும் என்றும் இயன்ற வகையிலான ஒருங்கிணைப்பிற்கு உறுதி செய்ய வேண்டுமென்றும் அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

பொது வினியோக ஏற்பாட்டின் மூலம் உணவுத் தானியங்களையும் ஏனைய இன்றியமையாப் பொருட்களையும் வழங்குதல்:

பொதுமக்களுக்கு, அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருள்கள் கிடைக்கச் செய்யவும் வழங்கவும் உறுதி செய்ய பொது வினியோக முறையை ஏற்படுத்தி அதனைப் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று மத்திய அரசு கூறி வருகிறது. கிராம அளவில் உட்பட நியாய விலைக் கடைகள் மூலம் சிறந்த பொது வினியோக முறையை ஏற்படுத்துவதில் மாநில அரசு மிகுந்த கவனமும், தீவிர முயற்சிகளையும் எடுத்து வந்த போதிலும், உணவுப் பொருள் வழங்கு கடைகள் மூலம் வழங்குவதற்காகச் சமையல் எண்ணெய் முதலியவை போன்ற இன்றியமையாப் பொருள் களைப் போதிய அளவிற்கு மாநில அரசு பெற வியலவில்லை. வேறு வகையில் கூறுவோமாயின் மத்திய அரசு ஒதுக்கும் அளவு, தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை. எனவே, சமையல் எண்ணெய்களின் விலைகளைக் குறைந்த அளவில் வைத்து வர இயலவில்லை. தமிழ்நாட்டில், பல்வேறு திட்டங்கள் அதாவது எழுத்தறிவின்மையைப் போக்க கல்வி புகட்டும் திட்டம், இந்நாட்டிலேயே முதன் முதலாக தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட மதிய சத்துணவுத் திட்டம் (இத்திட்டத்தின் மூலம் சுமார் 84 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது). வயது முதிர்ந்தோருக்கான நலத் திட்டம், சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளோருக்கான நலத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் நிறை வேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் அனைத்திற்கும் உணவுத் தானியங்களும் ஏனைய பொருள்களும் தேவைப்படுகின்றன. எனவே தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்த மட்டில், இந்த நலத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்ற குறைந்த கட்டுப்பாட்டு விலை வீதங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

வினா 10.2.—மாநிலங்களின் பொறுப்புகளைப் பாதிக்கும் இன்றியமையாப் பொருள்கள் சட்டம் ஏனைய முறைப்படுத்தும் மத்திய சட்டங்கள் ஆகியவற்றை நிருவகிப்பதற்கான ஏற்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று நீங்கள் கருதுகின்றீர்களா? ஆம் எனில், இது குறித்து தாங்கள் தெரிவிக்க விரும்பும் ஏற்பாடுகள் யாவை?

விடை.—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் VIIஆம் விவர அட்டவணையைச் சேர்ந்த IIIஆம் பட்டியலில் காணப்படும் 33ஆம் எண் பதிவின்படி உணவுப் பொருள்கள், சமையல் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்தல், வழங்குதல், வினியோ

கித்தல் ஆகியவை மத்திய-மாநில அரசுகளுக்கு பொதுவான அதிகாரப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

உணவு-நுகர்பொருள் வழங்கல் தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள மத்திய சட்டங்கள் வருமாறு :—

(i) 1955ஆம் ஆண்டு இன்றியமையா பொருள்கள் சட்டம், இச்சட்டம் 1981ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தால் திருத்தப்பட்டது.

(ii) 1958ஆம் ஆண்டு அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல்) சட்டம்.

(iii) 1962ஆம் ஆண்டு கிடங்கு கழகச் சட்டம்.

(iv) 1951ஆம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டம்.

(v) 1980ஆம் ஆண்டு கள்ளச்சந்தை தடுப்பு இன்றியமையாப் பொருள்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம்.

மேற்கூறிய சட்டங்கள், இன்றியமையப் பொருட்களை நியாயமான விலையில் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கும், கிடைக்கச் செய்வதற்கும், விலைகளைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கும் இயற்றப்பட்டவையாகும் இச்சட்டங்கள், வர்த்தகர்கள் அதிக அளவு ஆதாயம் தராமலும் சுரண்டாமலும் பார்த்துக்கொள்ள உதவி புரிகின்றன.

இன்றியமையாப் பொருள்கள் சட்டமானது மாநில அரசின் உணவுத் துறைக்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. பொருட்களை உற்பத்திச் செய்தல், வழங்குதல், வினியோகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவது அல்லது தடை செய்வது குறித்த பல்வேறு விஷயங்களில் மாநில அரசுகள் கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பிக்க மேற்கூறிய சட்டத்தின் 3ஆம் பிரிவு அதிகாரமளிக்கிறது. இப் பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படும் எந்தவொரு கட்டுப்பாட்டு ஆணையும் அதிகாரப் பிரிவினைக்கு வகை செய்யும் 5ஆம் பிரிவை ஒட்டி மத்திய அரசின் இசைவைப் பெற வேண்டியது அவசியமாகும். கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் அல்லது தற்போதுள்ள கட்டுப்பாட்டு ஆணைக்குத் திருத்தம் வெளியிடும் ஒவ்வொரு முறையும் மத்திய அரசின் முன் இசைவைப் பெற வேண்டும் என்றிருப்பதால் 5ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பது, உண்மையான அதிகாரப் பிரிவினை ஆகாது. இன்றியமையாப் பொருள்கள்மீது திறம்படக் கட்டுப்பாடு வகிக்கவும், நியாயமான முறையில் விநியோகிக்க மத்திய அரசின் முன் இசைவைப் பெறாமல் மாநில அரசு இத்தகைய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

பற்றாக்குறை மாநிலங்களுக்கு உதவி புரிய உணவுத் தானியங்களுக்காக மத்திய தொகுப்பு ஏற்பாடு ஒன்றை மத்திய அரசு வைத்து வருகிறது. பற்றாக்குறையாக உள்ள பொருள்களை அவர்கள் இறக்குமதியும் செய்யலாம். இதனைக் கருத்தில் கொண்டு பார்த்தால் மத்திய அரசின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

இன்றியமையாப் பொருள்கள் சட்டம் மத்திய சட்டமாக உள்ளதால், உணவுப் பொருள்-நுகர்பொருள் வழங்கல் துறைகளின் அன்றாட நிர்வாகத்தில் தமிழ்நாடு மாநிலத்திற்கு இடர்ப்பாடு ஏற்படுகிறது. மாநில அரசு பிறப்பிக்கும் திருத்தங்களுக்கு அல்லது அறிவிக்கைகளுக்கு மத்திய அரசின் இசைவைப் பெற வேண்டிய அவசியம் உள்ளது. அவ்வப்பொழுது மத்திய அரசின் இசைவைப் பெற அதனை அணுக வேண்டியது பணிச்சுமை மிகுந்ததாக உள்ளது. மத்திய அரசின் இசைவைப் பெறவில்லை அல்லது மத்திய அரசிடமிருந்து வந்த தகவலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி சில அறிவிக்கைகளின் செல்திறன் எதிர்க்கப்படுகிறது. உணவுப் பொருள் வழங்கல் போன்ற மிக முக்கியமான விஷயத்தில் மாநில அரசுக்கே உடனடிப் பொறுப்பு உள்ளது. எனவே, அதிக அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, கொள்முதல் விலையை உள்ளூர் நிலைமைகளை ஒட்டி, மாநில அரசே நிர்ணயிக்க வேண்டும்.

அதிகாரப் பிரிவினை தேவைப்படும் ஏனைய சில இனங்கள் குறித்த விவரம் வருமாறு :—

கோதுமை மாவு உருளை ஆலைகள்

1957ஆம் ஆண்டு கோதுமை மாவு உருளை ஆலைகள் (உரிமம் வழங்குதல்-கட்டுப்பாடு) ஆணையின்கீழ் கோதுமை மாவு உருளை ஆலைகள் செயல்படுவதை கட்டுப்படுத்தும் அதிகாரம் 28—2—1969ஆம் நாள் வரை மத்திய அரசிடம் இருந்தது. இருப்பினும், 1—3—1969ஆம் நாளிலிருந்து இப்பணிகள் மாநில அரசுகளிடம் மாற்றிக் கொடுக்கப்பட்டன. இந்தக் கட்டுப்பாட்டுப் பணியில் புதிய ஆலைகளுக்கு உரிமங்களை வழங்குதல், ஏற்கெனவே வழங்கப்பட்ட உரிமங்களைப் புதுப்பித்தல், மாவு உருளை ஆலைகளுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தல், மேற்கூறிய ஆணையின் விதித்துறைகளை மீறும் மாவு உருளை ஆலைகளுக்கு அபராதம் விதித்தல், மாவு உருளை ஆலைகள் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதை உறுதிப்படுத்த அவற்றை ஆய்வு செய்தல், உரிமம் வழங்கும் அதிகாரி பிறப்பித்த ஆணைகளுக்கெதிரான மேல்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை அடங்கும். மத்திய அரசு 6—2—1982ஆம் நாளிலிருந்து புதிய ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்குதல், தவறு செய்யும் ஆலைகளுக்கு அபராதம் விதித்தல், உரிமம் வழங்கும் அதிகாரி பிறப்பித்த ஆணைகளால் பாதிக்கப்பட்ட

ஆலைகள் தாக்கல் செய்யும் மேல்முறையீடுகளை ஏற்றுக்கொண்டு அவை குறித்து முடிவு செய்தல் ஆகியவை குறித்த அதிகாரங்களை ஏற்றுக் கொண்டது. 1957ஆம் ஆண்டு கோதுமை மாவு உருளை ஆலைகள் (உரிமம் வழங்குதல்-கட்டுப்பாடு) ஆணையைத் தகுந்தவாறு திருத்தி, மத்திய அரசு அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளதோடு, மத்திய அரசின் உணவுத் துறை துணைச் செயலாளரை (வளர்ச்சி—முறைப்படுத்தல்) உரிமம் வழங்கும் அதிகாரியாக நியமித்துள்ளது. தற்போது, 1957 ஆம் ஆண்டு கோதுமை மாவு உருளை ஆலைகள் (உரிமம் வழங்குதல்-கட்டுப்பாடு) ஆணைக்கு மத்திய அரசு வெளியிடக் கருதியுள்ள மாற்றங்கள் பற்றிய விவரம் வருமாறு :—

(i) ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் 6—2—1982ஆம் நாளிலிருந்து மத்திய அரசிடம் நிலை பெறுகிறது. உணவுத் துறைத் துணைச் செயலர் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) உரிமம் வழங்கும் புது அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கிணங்க, உரிமம் வழங்க இந்த அதிகாரி நியமிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் மாநில அரசு பிறப்பித்த ஆணைகள் அனைத்தும் இந்நாளிலிருந்து செல்திறன் அற்றுப்போகும்.

(ii) ஆலை உரிமத்தைப் புதுப்பித்தல் முதலியவற்றுக்காக மேற்சொன்ன ஆணையின் 2 (dd) பகுதியின் கீழ் '' குறிப்பிட்ட அதிகாரியை நியமித்து ஆணை ஒன்றை வெளியிடுமாறு'' மாநில அரசு தற்போது கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(iii) உரிமங்களைப் புதுப்பிப்பதற்கான அதிகாரங்களை மாநில அரசுகள் தொடர்ந்து கொண்டிருக்கையில், 12 திங்களுக்கு மேற்பட்ட கால அளவிற்கு மூடி இருக்கும் மாவு ஆலைகளின் உரிமங்களைப் புதுப்பித்தல் அல்லது உரிமத்தின் காலக்கெடு முடிவடைந்தநாளிலிருந்து 30 நாட்களுக்குள் உரிமம் புதுப்பிக்கப்படாத உரிமங்களைப் புதுப்பித்தல் தொடர்பாக, அவற்றைப் புதுப்பிப்பதற்கு முன்னர், மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கவேண்டும்.

(iv) ஆலை உரிமத்தை தற்காலிகமாக நீக்கி வைத்தலுக்கு அல்லது ரத்து செய்வதற்கு உரிய அதிகாரம் தற்போது மத்திய அரசிடம் நிலை பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடமிருந்து வரப்பெறுகின்ற அறிக்கைகளின்படி அவ்வரசு, இந்த அதிகாரங்களைச் செயற்படுத்தும்.

(v) உரிமம் வழங்கும் அதிகாரியால் அல்லது குறிப்பிடப்பட்ட அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்குகெதிரான மேல்முறையீடுகள் அனைத்தும் மத்திய அரசின் உணவுத்துறைச் செயலருக்குத் தாக்கல் செய்யப்படவேண்டும்.

(vi) கோதுமைப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக கோதுமையை எவ்வாயிலிருந்து எம்முறையில் பெறப்பட வேண்டும் என்பது தொடர்பாக கட்டளை எதனையும் இதுவரை இருந்ததுபோல மத்திய அரசின் முன் ஒப்புதல் இன்றி மாநில அரசு பிறப்பிக்கக் கூடாது என்று நிபந்தனைக்கு உட்பட்டு உரிமம் குறித்த கட்டளைகளைப் பிறப்பிப்பதற்குரிய அதிகாரங்களை மாநில அரசு (குறிப்பிட்ட அதிகாரி) தொடர்ந்து கொண்டிருக்கும். கோதுமையை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல், ஒதுக்கீடு செய்யப்பட்ட கோதுமையிலிருந்து பெற வேண்டிய கோதுமைப் பொருள்களின் சதவீதத்தை வரையறுத்தல் ஆகியவை மாநில அரசால் வரையறுக்கப்படும்.

மேற்சொன்ன ஆணையின் கீழ் '' குறிப்பிட்ட அதிகாரியின் '' அதிகாரங்கள், பணிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

(i) ஆலை உரிமங்களைப் புதுப்பித்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தல்.

(ii) கோதுமைப் பொருள்களை உற்பத்தி செய்ய கோதுமையானது எவ்வாயிலிருந்து எம்முறையில் பெறப்பட வேண்டும்; கோதுமையிலிருந்து பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வது அல்லது தயாரிப்பது; சிப்பத்தின் அளவு; சிப்பம் செய்ய வேண்டிய முறை மற்றும் அது போன்றவை; கோதுமைப் பொருட்களை ஒருவகை செய்தல்; ஆகியவை தொடர்பாகக் கட்டளைகள் பிறப்பித்தல்.

(iii) ஆலை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்க அல்லது ரத்து செய்ய வகை செய்யும், மேற்சொன்ன ஆணையின் II ஆம் பகுதியின் கீழ் நடவடிக்கை எடுக்க மேற்சொன்ன ஆணையின் விதித்துறை மற்றும் ஆலை உரிமத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பது தொடர்பாக, உரிமம் வழங்கும் அதிகாரிக்கு தெரிவித்தல்.

மேல்முறையீட்டு அதிகாரங்கள், அரசின் உணவுத் துறை செயலரிடம் நிலை பெற்றிருக்கும் போது உணவுப் பொருள் வழங்கு இணை ஆணையர் உரிமம் வழங்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தற்போது மேல் முறையீட்டு அதிகாரங்களும், உரிமம் வழங்கும் அதிகாரங்களும், மத்திய அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது உரிமம் வழங்கும் அதிகாரி இந்திய அரசின் உணவுத் துறை துணைச் செயலர் (வளர்ச்சி முறைப்படுத்தல்) ஆவார். மேல்முறையீட்டு அதிகாரி மத்திய அரசின் உணவுத் துறை செயலர் ஆவார். மேற்கூறிய ஆணையின் IIஆம் பகுதியின் திருத்தப்பட்ட விதித் துறையின்படி, ஆலை உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அல்லது ரத்து செய்ய உரிமம் வழங்கும் அதிகாரி நடவடிக்கை எடுப்பது '' குறிப்பிட்ட அதிகாரியிடமிருந்து '' அறிக்கை வரப்பெறுவதன் பேரில் எடுக்கக் கருதப்பட்டுள்ளது).

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோர் அரிசிக்கு அடுத்தபடியாக கோதுமையையும், கோதுமைப் பொருள்களையும் உட்கொள்ளுகின்றனர். கோதுமைப் பொருட்கள், மைதா, ரவை போன்றவை உடனடியாக பயன்படுத்தக்கூடியதும், சத்துள்ளதும் ஆகும் என்பதை இல்லத்தரசிகள் நன்கு அறிந்துள்ளனர். மாவு உருளை ஆலைகள் மீது கட்டுப்பாட்டு அதிகாரங்களை மாநில அரசு கொண்டிருந்தால்தான், அந்தப் பொருட்களின் உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றின் மீது திறம்பட கட்டுப்பாடு வகிக்க இயலும். அதிகாரங்களை பரவலாக்குவது மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது ஆகியவை, நிருவாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு தேவையான ஒன்றாகும். ஆனால் இதுவரையில் மாநில அரசுகளிடமிருந்த அதிகாரங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாவு உருளை ஆலைகள் மீது திறம்பட கட்டுப்பாட்டை வகிக்கவும் பயனீட்டாளர்களுக்கு மைதா, ரவை ஆகியவற்றை உரிய முறையில் உற்பத்தி செய்து வழங்குவதற்கும் மத்திய அரசின் பொதுவான வழிகாட்டிக் குறிப்புகளுக்கு உட்பட்டு மாவு உருளை ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரங்கள் மீண்டும் மாநில அரசுகளிடம் நிலை பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

பருப்பு வகைகள்.

பருப்பு வகைகளைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாகும். இம் மாநிலத்தின் பருப்பு வகைகளின் தேவை பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலமும் வட மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுவதன்மூலமும் நிறைவு செய்யப்படுகிறது. இந்த இறக்குமதியாளர்களில் சொந்தக் கணக்கு வைத்துக்கொண்டு இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் மட்டுமல்லாது கமிஷன் ஏஜெண்டுகளும் அடங்குவர். இந்த கமிஷன் ஏஜெண்டுகள் இந்த மாநிலத்திற்கு பொருள்களை அனுப்பி வைக்குமாறு, இம் மாநிலத்திற்கு வெளியிலுள்ள வர்த்தகர்களைக் கோருகின்றனர். பருப்பு வகைகள், வெளி மாநிலங்களிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுவதால், விலைகள் ஒரே நிலையாக வைத்து வரப்படுகின்றன.

சென்ற சில காலமாக, 1977ஆம் ஆண்டு பருப்பு வகைகள்-சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் சமையல் எண்ணெய் (சேமிப்பு-கட்டுப்பாடு) ஆணையில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பருப்பு வகைகளை இருப்பு வைப்பதற்குரிய உச்ச வரம்பு செயல்படுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்குமாறும், பருப்பு வகைகளின் இருப்பின் மீதான உச்ச வரம்பை உயர்த்துமாறு மத்திய அரசுக்கு எழுதிக் கேட்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டு பருப்பு வகைகளின் வர்த்தகர்களிடமிருந்து பல முறையீடுகள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன. இந்த உச்ச வரம்பை அதிகரிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு அது ஒப்புக்கொள்ளவில்லை. தற்போது வெளிநாடுகளிலிருந்து தனியார் இறக்குமதி செய்யும் பருப்பு வகைகளுக்கு 1977ஆம் ஆண்டு பருப்பு வகைகள்-சமையல் எண்ணெய் வித்துக்கள்-சமையல் எண்ணெய் (சேமிப்பு-கட்டுப்பாடு) ஆணையின் 4ஆம் பகுதியிலிருந்து மாநில அரசுகள் திட்டவட்டமாகப் பரிந்துரைப்பதன் பேரில், மத்திய அரசால் விலக்களிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு வகைகளை இருப்பில் வைப்பதற்குரிய உச்ச வரம்பு அளவிலிருந்து விலக்களிக்குமாறு பருப்பு வகைகளின் மொத்த விற்பனையாளர்கள்/கமிஷன் ஏஜெண்டுகள் செய்துகொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஏராளம். விலக்களிக்குமாறும், இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு வகைகளின் இருப்பிற்கு இருப்பு உச்ச வரம்பிலிருந்து விலக்களித்து அறிவிக்கை வெளியிடுமாறும் மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதில் கணிசமான அளவிற்குக் காலம் பிடிக்கிறது. இதற்கிடையில், வரையறுக்கப்பட்ட அளவிற்கு அதிகமான இருப்பு வைத்திருக்கும் வர்த்தகர்கள் / கமிஷன் ஏஜெண்டுகளுக்கு எதிராக அவர்கள் கட்டுப்பாட்டு ஆணையின் விதித்துறைகளை மீறியதாகக் கருதி இந்த ஆணையைச் செயற்படுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கலாம். இதனால் பருப்பு வகைகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் மிகுந்த இடர்ப்பாட்டிற்குள்ளாகின்றனர். மேற்கூறிய ஆணையை செயற்படுத்தும் அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு இந்த அரசு ஆதரவு அளிக்கையில், இந்நிலைக்குப் பரிகாரம் காண வேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது என்றும் இந்த அரசு கருதுகிறது. 1977ஆம் ஆண்டு பருப்பு வகைகள்-சமையல் எண்ணெய் வித்துக்கள்-சமையல் எண்ணெய்கள் (சேமிப்புக் கட்டுப்பாடு) ஆணை பதுக்கி வைத்திருப்பதை வெளிக்கொணர்வதற்குரிய இன்றியமையாத ஆணையாகும். தனியார் வர்த்தகர்கள் இறக்குமதி செய்யும் பருப்பு வகைகள் எவ்வளவாக இருந்தாலும் அவற்றை அங்காடிக்குக் கொண்டு வர இந்த ஆணை விழைகிறது. மத்திய அரசின் முன்ஒப்புதலுடன் பருப்பு வகைகளின் இருப்பு குறித்த உச்ச வரம்பு செயல்படுவதிலிருந்து மாநில அரசு விலக்களிக்க அரசு 1977ஆம் ஆண்டு பருப்பு வகைகள்-சமையல் எண்ணெய் வித்துக்கள்-சமையல் எண்ணெய்கள் (இருப்புக் கட்டுப்பாடு) ஆணை வகை செய்கிறது. பருப்பு வகைகளை இருப்பில் வைப்பதற்குரிய உச்ச வரம்பிலிருந்து விலக்களிப்பதற்குரிய அதிகாரம் (உண்மையான நேர்வுகளில்) மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கவேண்டியிராமல் மாநில அரசிடம் நிலை பெற்றிருந்தால் நியாயமான விலையில் பருப்பு வகைகள் பயனீட்டாளர்களுக்கு அதிக அளவில் கிடைக்கச் செய்வதோடு வர்த்தகர்களும் மிகுந்த நன்மை அடைவர்.

மண்ணெண்ணெய்.

தற்போது மண்ணெண்ணெய் மொத்த விற்பனை உரிமை மத்திய அரசால் அதன் எண்ணெய்க் கம்பெனிகள் மூலம் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டளவை 1979ஆம் ஆண்டு மத்திய அரசு குறைத்ததாலும் அதனை ஒட்டி மண்ணெண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் கிடைக்கும் மண்ணெண்ணெயைச் சமமாக வினியோகிக்க குடும்ப நுகர்பொருள் வினியோக அட்டைகளின் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மண்ணெண்ணெய்ச் சில்லறை விநியோகமானது, மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் கூட்டுறவு சங்கங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது இந்த நிறுவனங்கள் தனியார் மொத்த விற்பனையாளர்களிடமிருந்து மண்ணெண்ணெயை வாங்கிக் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குகின்றன. மண்ணெண்ணெய், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் சமையலுக்கும் விளக்கு வசதிக்கும் எரிபொருளாகப் பயன்படுத்தக்கூடியதோர் இன்றியமையாப் பொருளாகும். மண்ணெண்ணெய் சில்லறை விநியோகத்தை மாநில அரசு கவனித்து வருகிறது. ஆனால் மொத்த விற்பனை டிப்போக்களை எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்று ஆணையிடுவதற்குரிய அதிகாரங்கள் மாநில அரசுக்கு இல்லை. இதற்காக புதிய மொத்த விற்பனையாளர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில நிருவாகத்திடம் இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும். பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களை வினியோகிக்க மாநிலம் முழுவதும் 17,926 நியாயவிலைக் கடைகளை மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கு கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் கொண்டுள்ளன. மண்ணெண்ணெய் மொத்த விற்பனை உரிமை, எப்போது எங்கு வழங்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கு கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் தயாராக உள்ளன. குறிப்பிட்ட ஒரு மொத்த விற்பனை ஆதாயமாக செயற்படாது போனாலும் கூட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுமக்களின் நலனைக் கருதி அத்தகைய வணிக உரிமையை எடுத்துக் கொள்வதற்கும், சில்லறை விற்பனை நிலையங்களுக்குத் தடங்கலின்றி பொருள்கள் வழங்குவதை உறுதி செய்வதற்கும் தயாராக இருக்கிறது.

நாம் கருத்துரைகள் தெரிவித்ததைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசு முக்கிய கொள்கைகளையும், மாநிலங்களுக்கிடையேயான பற்று வரவுகளையும், இறக்குமதி முதலியவை பற்றி முடிவு செய்யலாம்; பொது விநியோக ஏற்பாடும், நுகர்பொருள் வழங்கல் விவகாரங்களும் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டால், அவை நல்ல முறையில் செயல்படுத்தலாம்.

கல்வி.

வினா எண் 11·1 :

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அது தேவையற்ற முறையில் மையப்படுத்தப்பட்டும் தரமாக்கப்பட்டும் உள்ளது என்றும், மாநில அரசுகளின் முயற்சி, அதிகாரம் ஆகியவற்றில் மத்திய அரசின் தலையீடு அதிகமுள்ளதென்றும் சில மாநிலங்கள் கருத்துத்தெரிவித்துள்ளன. இவ்வாறு குறை கூறியுள்ளது எந்த அளவுக்குச் சரியாகும்?

வினா எண் 11·2 :

பல்கலைக் கழக மானியக் குழு (a) எந்த அளவுக்குப் பல்கலைக்கழக கல்வியில் செல்வாக்கு பெற்றிருக்கிறது? (b) பல்கலைக் கழகத்தின் கல்விக்காக எந்த அளவுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது! என்பது குறித்து உங்கள் கருத்து என்ன?

வினா எண் 11·3 :

விவாதித்தல், கலந்து பேசுதல், நயம்பட எடுத்துரைத்தல் ஆகிய நடைமுறையின் மூலம் கல்வித் துறையில் மாநிலங்களுக்கிடையேயும், மத்திய அரசு, மாநில அரசுகளுக்கிடையேயும் கருத்து ஒருமைப்பாட்டை ஏற்படுத்த என்ன ஆலோசனை கூற விரும்புகிறீர்கள்?

வினா எண் 11·4 :

சமய வாரியான கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தல் அதனை நிருவகித்தல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 29, 30ஆவது பிரிவின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதும் இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்களா? ஆமெனில், என்ன வகையான சீரமைப்புப் பணிகளைச் செய்ய விரும்புகிறீர்கள்?

வினர எண் 11·5 :

கல்வி வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்த வரையில் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிலவுகின்ற கருத்து வேறுபாடுகள் அல்லது பிரச்சனைகள் குறித்த திட்டவட்டமான நிகழ்வுகளையும் அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய ஆலோசனைகளையும் கூற முடியுமா?

விடை 11.1 முதல் 11·5 வரையிலான வினாக்களுக்கு வரிசைக்கிரமமாக விடையளிப்பதற்குப் பதிலாக 'கல்வி' என்கிற பொருள் குறித்து ஒட்டுமொத்த

மாக குறிப்பு ஒன்றைக் கொடுக்க விரும்புகிறோம். பின்வரும் இக்குறிப்பில், அரசியலமைப்புச் சட்டத்தின் நாற்பத்திரண்டாவது திருத்தத்திற்கு முன்பும் பின்பும் உள்ள அரசியலமைப்பு நிலைமை; 1950-க்கு முன்பும் பின்பும் 'கல்வி' என்கிற பொருளின் நீண்டகால வரலாறு, மாநிலப் பட்டியலில் கல்வியை மீண்டும் சேர்ப்பதற்கான அவசியம், தமிழ்நாடு அரசு பின்பற்றி வருகின்ற மொழிக்கொள்கை, மாநிலப் பல்கலைக் கழகங்கள்—கல்லூரிகளுக்குப் பல்கலைக்கழக மானியக் குழு உதவி புரிவதில் உள்ள முரண்பாடுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் 29, 30ஆவது பிரிவுகளின் நோக்கங்களை மீண்டும் விளக்குவதற்கான அவசியம் ஆகியவை விவாதிக்கப்பட்டுள்ளன.

A. 1976 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்திற்கு (42ஆளது திருத்தம்) முன்பும் பின்பும் அரசிலமைப்பின் நிலைமை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 42ஆவது திருத்தத்திற்கு முன்பும், பின்பும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7ஆவது விவர அட்டவணையில் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களின் பட்டியலின் பொருத்தமான இனங்களை எடுத்துச் சொல்வது பயனுடையதாக இருக்கும்.

42ஆவது திருத்தத்திற்கு முன்னர் மத்திய அரசு பட்டியல் (பட்டியல் I).	42வது திருத்தத்திற்குப் பின்னர் மத்திய அரசு பட்டியல் (பட்டியல் I).
63. இந்த அரசியலமைப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டபோது ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களான பனாரஸ் இந்து பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம், டில்லி பல்கலைக் கழகம்; 317E பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம்; தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமென்று நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் அறிவிக்கும் ஏனைய நிறுவனம். 64. இந்திய அரசின் முழு நிதியுதவி அல்லது ஓரளவு நிதியுதவி பெற்றதும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமென்று நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் அறிவித்ததுமான அறிவியல் அல்லது தொழில் நுட்ப கல்வி நிறுவனங்கள். 65. (a) காவல் துறை அதிகாரிகளின் பயிற்சி உட்பட தொழில்முறை பயிற்சி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி அல்லது தொழில் நுட்பப் பயிற்சி; அல்லது (b) சிறப்பு கல்வி அல்லது ஆராய்ச்சி மேம்பாடு; அல்லது (c) குற்றப் புலனாய்வு அல்லது குற்றத்தைக் கண்டு பிடித்தலில் அறிவியல் அல்லது தொழில் நுட்ப உதவி ஆகியவற்றிற்கான மத்திய அரசின் முகவரமைப்பு நிறுவனங்களும். 66. உயர் கல்வி அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்களும் அறிவியல்-தொழில் நுட்ப நிறுவனங்களிலும் அவற்றின் தரத்தினை ஒருங்கிணைத்தலும் தீர்மானித்தலும்.	63 முதல் 66 வரை; 42 ஆவது திருத்தத்திற்கு முன்னர் உள்ளவாறு.

மாநில அரசு பட்டியல் (பட்டியல் II).	மாநில அரசு பட்டியல் (பட்டியல் II).
11. பட்டியல் I-ன் 63, 64, 65, 66ஆவது பதிவுகள், பட்டியல் III-ன் 25ஆவது பதிவு ஆகியவற்றின் விதித்துறைகளுக்குட்பட்டு பல்கலைக் கழகங்கள் உட்பட கல்வி.	11ஆவது இனம் நீக்கப்பட்டது.

பொதுப் பட்டியல் (பட்டியல் III).	பொதுப் பட்டியல் (பட்டியல் III).
25. தொழிலாளர்க்கான வாழ்க்கைத் தொழில்—தொழில் நுட்ப பயிற்சி.	25. பட்டியல் I-ன் 63, 64, 65, 66ஆவது பதிவுகளைச் சேர்ந்த விதித்துறைகளுக்குட்பட்டு தொழில் நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி; பல்கலைக் கழகங்கள்; உட்பட கல்வி; தொழிலாளர்க்கான வாழ்க்கைத் தொழில்—தொழில் நுட்பப் பயிற்சி.

B. வரலாற்று நோக்கு.

(i) 1950ஆம் ஆண்டு வரையில்—

நம் நாட்டில் கடந்த 130 ஆண்டுகளுக்கும் மேலாக, கல்வித்துறையில் மத்திய-மாநில அரசுகளின் உறவுகள் பலவகைப்பட்டதாக அமைந்துள்ளன. 1833-க்கு முன்னர், பிரிட்டிஷ் அரசின் மூன்று மாகாணங்களும் லண்டன் நீதிபதிகளின் ஏக தேச தொடர்ச்சியற்ற மேற்பார்வைக்குட்பட்டு, தங்கள் தங்கள் கல்விக் கொள்கையைப் பின்பற்றியபோது மொத்தத்தில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருந்தன. 1833ஆம் ஆண்டு சாசன சட்டம் நாட்டில் அதிகாரங்கள் நிருவாக மைய அமைப்பை ஏற்படுத்தியது; அதில் ஏனைய துறையைப் போன்று கல்வித் துறையும் இந்திய அரசின் பொறுப்பின்கீழ் வந்தது. எடுத்துக்காட்டாக, இக்கால அளவில் கல்கத்தாவிலுள்ள பிரிட்டிஷ் அரசின் அனுமதியைப் பெறாமல் ஒரு ரூபாயை கூட தங்களால் செலவிட இயலவில்லையென மாகாணங்களிலுள்ள பொதுக் கல்வி இயக்குநர்கள் முறையிட்டனர். எனவே இக்கால அளவு உச்ச அளவுக்கு அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட கால அளவாகும். 1870-ல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட காலம் ஒன்று 'மேயோ' பிரபுவினால் தொடக்கிவைக்கப்பட்டது. 1918ஆம் ஆண்டு வரையில் இவ்வாறு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவது படிப்படியாக உயர்ந்தது; அச்சமயத்தில் இந்திய அரசு முக்கியமான விவகாரங்களில் கணிசமான அளவிற்கு மேலாண்மை அதிகாரங்களைத் தொடர்ந்து வைத்திருந்தபோதிலும் மாகாண அரசுகள் கல்வித்துறையில் அதிக அளவுக்கு அதிகாரங்களைக் கொண்டிருந்தன. இத்துடன் 1897-ல் தோற்றுவிக்கப்பட்ட இந்தியக் கல்விப் பணியும் இருந்தது; இந்தியக் கல்விப் பணியைச் சேர்ந்த அதிகாரிகள் மாகாண கல்வித் துறைகள் அனைத்திலும் முக்கியமான பதவிகளில் நியமிக்கப்பட்டனர். எனவே, இக்கால அளவு வரையறுக்கப்பட்ட ஆனால் முக்கியமான மத்திய அரசின் கட்டுப்பாட்டுடன் அதிகாரங்களை பரவலாக்கப்பட்ட கால அளவாகும்;

1919ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் முற்போக்கு வாய்ந்த மாற்றத்தைச் செய்தது. அறுதி பெரும்பான்மை பலத்துடன் தெரிந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் ஒன்றிற்குப் பொறுப்பு வகிக்கின்ற இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின்கீழ், மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையை அது கொண்டு வந்தது. எனவே, இதற்குத் துணையாக கல்வித்துறையில் மத்திய அரசின் கட்டுப்பாட்டை முழுவதுமாக நீக்காவிட்டாலும் குறைந்தளவுக்குக் குறைக்க வேண்டியிருந்தது. அதனையடுத்து, ' 'ஹார்டாக் குழு' குறிப்பிடுகிற கருத்து வேறுபாடு என்கிற ஒன்று இந்திய அரசுக்கும் கல்வித்துறைக்கும் இடையே ஏற்பட்டது. மத்திய அரசின் கல்வி ஆலோசனைக் குழுவை மீண்டும் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம், இந்திய அரசுக்குள்ள பணியை மீண்டும் நிலை பெறச் செய்வதற்கு 1935ஆம் ஆண்டு முதற்கொண்டு சற்று மாறான முயற்சிகள் சில எடுக்கப்பட்டபோதிலும், 1950ஆம் ஆண்டு வரையில் இந்த நிலைமை தொடர்ந்து இருந்தது.

(II) 1950ஆம் ஆண்டு முதற்கொண்டு—

1950-ல் அரசியலமைப்புச் சட்டம் ஓரளவுக்கு நிலைமையை மாற்றியது. 1919 அல்லது 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டங்களின் கீழ் கிடைத்த அதிகாரங்களைக் காட்டிலும் இந்திய அரசு தற்போது கல்வித்துறையில் அதிக அளவுக்கு அதிகாரங்களைப் பெற்றது. உயர் கல்வியைப் பொறுத்தவரையில், கல்வியின் ஒருங்கிணைப்பும், கல்வியைத் தரமுடன் வைத்துவருதலும் மத்திய அரசின் பொறுப்பாக மாறியது. (1) மத்திய-மாநில அரசுகளின் வளர்ச்சி நடவடிக்கைகள் அடங்கிய ஐந்தாண்டுத் திட்டப் பணிகளைத் தயாரித்தும் அதற்காக திட்டக் குழுவை ஏற்படுத்தி வளர்ச்சித் திட்டப் பணிகளைத் திட்டமிடுதல், (2) குறிப்பிட்ட கல்வித் திட்டங்களுக்காக அதிக அளவில் மத்திய அரசின் மானியங்களை ஒதுக்குதல், (3) மத்திய அரசிலும் மாநிலங்களிலும் ஒரே அரசியல் கட்சியானது தற்செயலாக அமைந்துவிட்டது போன்ற மூன்று புறக்கூறுகளின் மூலம் அதிகாரங்களை மையப்படுத்துகிற இந்தப் போக்குக்கு ஆதரவு கிடைத்தது. ஆகையால், 1967 வரையில், அரசியலமைப்புச் சட்டத்தின்படி "கல்வி" என்பது மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் வருவதாக இருந்தபோதிலும், அக்கல்வி பொதுப்பட்டியலாக நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

42ஆவது திருத்தத்திற்கு முன்னரும்கூட, மத்திய அரசு கல்வித்துறையில் கணிசமான அதிகாரங்களைக் கொண்டிருந்தது. மத்திய அரசுப் பட்டியலின் 66ஆவது இனத்தின்கீழ் ஒருங்கிணைப்பதற்கான அதிகாரமானது "ஒருமித்த நடவடிக்கைக்கான உறவு முறையை உருவாக்குவதற்குரிய அதிகாரமாக மட்டுமே இல்லாமல் அத்தகைய உறவு முறையை இணக்குவிப்பதாகவும் பொருந்தச் செய்வதாகவும் இருக்க வேண்டுமென்று" உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கம் தந்தது. 1968–69 ஆண்டுக்கான மத்திய அரசின் கல்வி அமைச்சக நிருவாக அறிவிக்கையில் விளக்கப்பட்ட மத்திய அரசின் கருத்துக்கள் வருமாறு :—

'அரசியலமைப்புச்சட்டம்' கல்வித் துறையை முக்கியமாக, மாநில அரசின் ஆட்சி வரம்பின்கீழ் வருகிற பொருளாகச் செய்துள்ளது; ஆனாலும்,

கல்வித் துறையின் கணிசமான பொறுப்புகளை இந்திய அரசிடம் நிலைபெறச் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, மத்திய அரசின் பல்கலைக் கழகங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து நிறுவனங்கள், இந்தி மொழியின் வளம், மேம்பாடு, பிரச்சாரம் ஆகியவற்றிற்கும் உயர் கல்வியின் ஒருங்கிணைப்பு, தரம் ஆகியவற்றிற்கும், அறிவியல், தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி ஆகிய வற்றிற்கும், வெளிநாட்டிலுள்ள இந்திய மாண வர்களின் நலனுக்கும், ஏனைய நாடுகளுடன் செய்துகொண்டுள்ள பண்பாட்டு, கல்வி ஒப்பந்தங் களுக்கும் மத்திய அரசு பொறுப்பாகும். கல்வித் திட்டங்கள் உட்பட சமூக-பொருளாதார திட்டங் கள் பொதுப்பட்டியலின் கீழ் வருவனவாகும். ஆதி திராவிடர்கள்—பழங்குடியினரின் கல்வி குறித்த தனிப்பொறுப்பும் மத்திய அரசுக்கு உள்ளது''.

(C) மாநில அரசின் பட்டியலிலிருந்து கல்வித் துறையை நீக்கி விடுதற்கான முயற்சிகள்.

(42-ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் வரையில் வெற்றி பெறவில்லை.)

1949ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2ஆம் நாளன்று, அரசியல் நிர்ணய சபையில் வரைவு அரசியலமைப்புச் சட்டத்தின் இது தொடர்பான பதிவுகள் விவாதிக்கப்பட்டபோதும்கூட, மாநிலப் பட்டியலிலிருந்து கல்வித் துறையை எடுத்துவிட தவறான வகையிலும், பயனற்ற வகையிலும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன. அவர் களுடைய வாதங்களுக்கு திரு டி.டி. கிருஷ்ண மாச்சாரியரால் பின்வருமாறு மறுப்பளிக்கப் பட்டது :—

'' வரைவுக் குழுவைப் பொறுத்தமட்டில் மத்திய அரசிடம் அதிக அதிகாரங்களைக் குவிக்கும் எண்ணமோ அல்லது மாநிலங்களுக்கு பாதகம் இழைக்கும் எண்ணமோ இருக்கிறது என்பதை நான் மறுத்துக்கூற விழைகிறேன். நம்மால் முடிந்த அளவிற்கு நாம் செய்துள்ளதெல்லாம், மாகாணங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக் கத் தேவைப்படும் அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு எடுத்துக்கொள்கிறதா என்று பார்ப்பது மட்டும்தான். '' கல்வி '' என்ற பதிவைப் பொதுப்பட்டியலுக்கு மாற்ற அல்லது பட்டியல் 1-ல் கல்வி குறித்த இனங்களை அவர்கள் அப்படியே வைத்திருந்தால், கல்வி குறித்த 18ஆம் பதிவின் செயல்வரம்பை இடை நிலைக்கல்வி அளவிற்குக் கட்டுப்படுத்த இந்த திருத்தங்களை என்னுடைய நண்பர்கள் கொண்டு வந்துள்ளனர். உயர் கல்வி, - தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கைத் தொழில் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில், மாநிலங்களின் கல்வி குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க மத்திய அரசிடம் போதிய அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை உறுதி செய்யும் வகையில் நாங்கள் தெரி வித்த இந்த விதித்துறைகளை அவையும் ஏற்றுக் கொண்டுள்ளன. மத்திய அரசு இம்மட்டோடு செயல்படுவது போதுமானதாகும். இந்த அளவுக்கும் மீறி மத்திய அரசு செல்வது விவேகமாகாது''.....

'' மாநிலங்கள் அதிக அளவில் சுயாட்சி அதிகாரங்கள் பெற்றிருக்க வேண்டுமென்ற கொள்கைக்கிணங்கிய வகையில் மத்திய அரசு, உள்நாட்டுப் பாதுகாப்பு, இராணுவம், நாட்டின் பொதுவான நலன் ஆகியவற்றை மட்டும் தன் வசம் வைத்துக்கொண்டு பிறவற்றை மாநிலங் களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்பதில் இயன்ற அளவிற்குச் செயல்படுவது சிறந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன் ''.

பின்னர், மாநிலப் பட்டியலிலிருந்து கல்வியை எடுத்துவிட வேண்டுமென்று அவ்வப்போது தவறான கருத்து தெரிவிக்கப்பட்டு வந்தது. உதாரணமாக, உயர் கல்வியை மாநிலப் பட்டியலி லிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றவேண்டு மென்று 1965 ஆம் ஆண்டின் சாப்ரூ குழு தெரிவித்த பரிந்துரை ; கல்வி சம்பந்தப்பட்ட அனைத்தை யும் பொதுப்பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென எஸ். சி. சமந்தா கொண்டு வந்த 1971 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (திருத்த) சட்ட முன்வடிவு ; இத்தகைய விவேகமற்ற ஏற்பாட்டை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்ளாத தால், இத்தகைய முயற்சிகள் எதுவும் வெற்றி யடையவில்லை. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தின் 42 ஆம் திருத்தம் நிறைவேற்றப் பட்டதனையடுத்து, விரும்பத்தகாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, கல்வி, பொதுப்பட்டியலின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

(D) கல்வி மாநிலப் பட்டியலிலேயே மீண்டும் இருக்க வேண்டியதன் அவசியம்.

தனியாட்சி அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ள இங்கிலாந்து போன்ற சிறு நாடுகளில் கூட, கல்வி போன்ற துறைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லையென்பது தெரிய வருகிறது. சி. நார்த்திபோர்ட் பார்கின்சன் அவர்களின் பின்வரும் கருத்து இதற்கு உறுதுணை யாக இருக்கும். [''கால தாமதம் குறித்த சட்டம்'' ஜான் முர்ரே, லண்டன் 1970 '' அரசரின் ஆட்சிப் பகுதிகளும் அதிகாரங்களும் '' என்கின்ற அத்தியாயத்தைக் காண்க :—]

'' பாரிஸ் அல்லது ரோம் நகரில் சுகாதாரம் வீட்டுவசதி குறித்த பிரச்சனைகள் விவாதிக்கப் படுவதில்லை. அங்கெல்லாம் தேசிய அல்லது அனைத்து நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை விவாதிக்கத்தான் நேரம் இருக்கும்,

இது குறித்த அனைத்தையும் தொடக்கத்திலேயே முடித்துவிடுவதும், அவற்றை மத்திய அரசில் விவாதிக்க நேரம் ஒதுக்குவதில்லை என்பதும்தான் தற்போது நமது கொள்கையாக உள்ளது...''

''எடின்பரோவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விக் கொள்கையை மீண்டும் லண்டனில் விவாதிக்க வேண்டியுள்ள ஓர் ஏற்பாட்டை பைத்தியக்காரன் கூட கொண்டுவர மாட்டான். இது பித்துக்கள் ஏற்பாடாகும். இது சாதாரண அறிவு படைத்த மனிதர்களுக்குக்கூட நன்கு தெரியும். இப்போதுள்ள முறைப்படி நம்முடைய நிருவாகம் மிகவும் சிக்கலானது. அதனை மேலும் சிக்கலாக்குவது தற்கொலைக்கு ஒப்பாகும்.''

அரசியலமைப்புச் சட்டத்தைப் படைத்தவர்கள் முதலில் சரியான முறையிலேயே கல்வியை மாநிலப் பட்டியலில் வைத்திருக்கும்போது, கூட்டாட்சி அரசியலமைப்பை கொண்ட இந்தியா போன்ற பெரிய நாட்டில் கல்வியை பொதுப் பட்டியலில் வைக்க வேண்டுமென்று சொல்வது மேலும் விவேகமற்ற பேச்சாகும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் அவசியமில்லாத திட்டங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. முக்கியத்துவமற்ற பணிகளுக்கு வீணாக மத்திய நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது; மத்திய அரசு அதிகாரிகள் அதிக அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகின்றனர் ; பயனற்ற செலவுகள் செய்யப்படுகின்றன ; தேவையற்ற கால தாமதம் ஏற்படுகிறது ; நிலையான விதிமுறைகளுக்கேற்ப நடக்குமாறு வலியுறுத்த வேண்டியுள்ளது போன்ற புகார்களை முன்னாள் மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் 1970 ஆம் ஆண்டில் (கல்வி, மாநில பட்டியலில் இருந்தபோதே) குறிப்பிட்டிருந்தார். மத்திய அரசு பொறுப்பேற்கும் துறைக்கு எதிராக தெரிவித்த மேற்சொன்ன மறுப்புரைகள், பொதுப்பட்டியலில் கல்வியை வைக்க வேண்டுமென்னும் கருத்துக்கும் பொருந்துவதாகும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான செலவை, ஏனையவற்றிற்கிடையே, மத்திய அரசு குறைத்துக்கொண்டாலும், (ஆனால் அதற்குப் பதிலாக நியாயமான அளவு அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதியை பகிர்ந்தளிக்கலாம்) மாநில அரசுகள் அளிக்கும் கல்வி வசதிகளையே மைய அரசு செய்யாதிருந்தாலும் (உதாரணமாக மத்திய அரசு பள்ளிகளை நடத்துவதன் மூலம்) பல்கலைக்கழக மானியக் குழு, இந்திய தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கான நிதி முதலியவற்றின் மூலம் உயர்கல்விக்காகவும் பல மொழிகளுக்காகவும் செலவிடுகிற தொகையை பல மாநிலங்களிடையே நியாயமான அளவில் பகிர்ந்தளித்தாலும் மட்டுமே கல்வி வளர்ச்சிக்கு உகந்ததாக அமையும்.

மொழிச் சிக்கல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 23-1-1968 ஆம் நாளன்று நடத்திய சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி தமிழ்நாடு, இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது (1968 சனவரியிலிருந்து) அதன்படி, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் மொழிகள் வருமாறு:—

பகுதி A.—வட்டார மொழி (அல்லது தாய் மொழி, வட்டார மொழியிலிருந்து வேறுபட்டதாக இருந்தால்).

பகுதி B.—ஆங்கிலம் அல்லது இந்தியமொழி அல்லாத பிறமொழி.

பகுதி A. மொழி, 1ஆம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுகிறது. பகுதி B. மொழி, 3ஆம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுகிறது. இவ்விருமொழிகளிலும் தேர்வுகளைக் கட்டாயமாக எழுத வேண்டும்.

23-1-1968ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மொழிப் பிரச்சனை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்தியாவின் ஆட்சிமொழியாக பின்பற்றப் படும் ஒரு வட்டார மொழியான இந்தி, இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் என்றும், இதன் விளைவாக ஒரு வட்டார மொழி, ஏனைய மொழிகளைக் கொண்டுள்ள பிறவட்டார பகுதிகள்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடும் என்று தமிழ்நாடு மக்கள் அச்சப் படுவதையும், தமிழும் ஏனைய தேசிய மொழிகளும் மத்திய அரசின் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டு பின்பற்றப்பட வேண்டும் என்றும், அதற்கேற்ப அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும், இது நிறைவேறும்வரை ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. இந்தி பேசாத பகுதிகளில் உள்ள மக்களுக்கு எந்த விதத்திலும் பாதகம் விளைவிக்காமல் பார்த்துக்கொள்ள வழிவகைகளை வகுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இந்தியை திணிப்பதற்கான மத்திய அரசின் திட்டத்தை ஏற்க அவை மறுப்பதாகவும் அந்தத் தீர்மானம் தெரிவித்தது. மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட வேண்டுமென்றும், தேசிய மாணவர் படை இது போன்ற ஏனைய படைப் பயிற்சிப் பிரிவுகளில் இந்தி கட்டளைச் சொற்கள் பயன்படுத்தக்கூடாது என்றும் தீர்மானம் கூறியது.

2. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் 7—7—1977ஆம் நாளன்று உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார் :—

''இருமொழித் திட்டத்தைச் செயல்படுத்துவது என்னுடைய அரசின் திடமான கொள்கையாகும். இதனை, காலஞ்சென்ற முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெளிவாக விளக்கிக் கூறியிருந்தார்கள்.

இக்கொள்கையை இம்மாமன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இக்கொள்கை தமிழக மக்களின் விருப்பத்தைக் குறிப்பிடுவதுடன் முழுமையாகப் பிரதிபலிக்கிறது.

ஆகையால், அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாம் விவர அட்டவணையில் ஆங்கிலம் சேர்க்கப்பட வேண்டும்; எட்டாம் விவர அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழிகள் அனைத்தும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்று இவ்வரசு தெரிவிக்கிறது. அத்தகையதொரு முடிவு எடுக்கப்படும்வரையில் மத்திய மாநில தகவல் தொடர்புகளுக்கும், மற்றும் மாநிலங்களுக்குமிடையேயான தகவல் தொடர்புகளுக்கும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

3. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளின் மேம்பாட்டிற்கும் சம அளவில் மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

4. தமிழ்மொழி ஒரு பழம்பெரும் மொழியாகும். இது, சமஸ்கிருதத்திற்கு சமமானது அல்லது அதைவிட பழம் பெருமை வாய்ந்த மொழியாகும். தமிழ் மொழியை இந்தியாவில் தற்போது 5 கோடி மக்கள் பேசுவது மட்டுமல்லாது, உலகில் பல பாகங்களில் அதாவது ஸ்ரீ லங்கா, மலேசியா, மொரீஷியஸ், பிஜி தீவுகள் முதலிய பகுதிகளில் மேலும் பல கோடி மக்கள் பேசுகின்றனர். வடஇந்தியாவில் இந்தோ-ஆரிய மொழிகளில் சமஸ்கிருத மொழிக்கு எந்த தகுதி உள்ளதோ அதற்கு இணையாக தென்னிந்தியாவில், திராவிட மொழிகளுக்கிடையே தமிழ் மொழிக்கு உயரிய அந்தஸ்தும் தகுதியும் உள்ளது. எனவே, சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு அளிக்கப்படும் நிதியுதவியைப் போலவே, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

பல்கலைக் கழக மானிய குழுவின் நிதியை பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பிரித்துக் கொடுப்பதில் ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்குமிடையே முரண்பாடுகள் உள்ளன. பல்கலைக் கழக மானியக் குழுவின் மானியத்தின் பெரும்பகுதியை மத்திய பல்கலைக் கழகங்கள் பெற்று வருகின்றன. ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்படும் பங்கு மிகவும் சொற்பமே. மத்திய பல்கலைக் கழகங்களுக்கு (இந்த பல்கலைக் கழகங்களில் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள்தான் பொதுவாகச் சேர்ந்து படிக்கின்றனர்) அனைத்திந்தியத் தன்மை அதிக அளவில் உள்ளது. இச்சூழ்நிலையில், உயர் கல்விக்கான மத்திய நிதியைப் பிரித்துக் கொடுப்பதற்கான ஒரு கொள்கையை வகுக்க வேண்டியுள்ளது. அத்தகைய கொள்கைதான், மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளுக்கு நியாயம் வழங்குவதாக இருக்கும்.

சமயக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நிர்வகிப்பதை பொறுத்த மட்டில், சிறுபான்மையினருக்கான உரிமைகள் தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தின் 29, 30ஆம் பிரிவுகளின் கீழ் வருகிற விதித்துறைகளுக்கு சிறுபான்மையினர்களின் நியாயமான நலன்கள் பாதுகாக்கக்கூடிய வகையில் பொருள் விளக்கம் மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. தற்போது செயலில் உள்ள விதித்துறைகள் (உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் பொருள் விளக்கம் அளித்துள்ளபடி) அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அந்த விதித்துறைகளுக்கு வேறுவகையில் பொருள் விளக்கம் அளித்து இத்தகைய நிலைக்குப் பரிகாரம் காண வேண்டும்.

ஆளுநர் பணி—ஆளுநர் அதிகாரங்களின் அளவும், வரம்பும்.

கல்வி சம்பந்தமாக, ஆளுநரின் அலுவல்கள் / கடமைகளைப் பொறுத்தமட்டில், மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற முறையில் அலுவல்களை ஆற்றுவதோடு அதிகாரங்களைச் செலுத்துகிறார்.

2. நடைமுறை மரபுப்படி தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்திற்கும் ஆளுநரே வேந்தராவார். பல்கலைக் கழகங்கள் தொடர்பான சட்டதிட்டங்களின் கீழ் ஆளுநரின் நியமனம், அவரது தனிப்பட்ட திறமையின் அடிப்படையில் அல்லாமல் அலுவல் முறையில் செய்யப்படுகிறது. ஆளுநராகப் பதவி வகிக்கும் வரையில்தான் அவர் வேந்தரின் அலுவல்களை ஆற்றுவார். எனவே, அவர் ஆளுநராகப் பதவி வகிப்பதால்தான், வேந்தராக அலுவல்களை மேற்கொள்கிறார் என்பது தெளிவாகிறது. ஆளுநர் தனது விருப்ப உரிமைப்படி அலுவல்களைச் செய்ய வேண்டுமா அல்லது அரசியலமைப்பின் 163ஆம் பிரிவின் கீழ் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் அலுவல்களை ஆற்ற வேண்டுமா என்று ஆளுநர், வேந்தராக அலுவல்களை ஆற்றுவது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஆளுநர், மாநில ஆட்சித் தலைவராக இருப்பதால், பல்கலைக் கழகச் சட்ட விதித்துறைகளின்படி அத்தகைய குறிப்பிட்ட சட்டப்படிக்கான பதவிக்கு நியமனம் செய்யப்படுகிறார். அவர் மாநில அரசின் தலைவராக இருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின், கருத்துக்களை அவர் எடுத்துரைப்பார் என்பதும், எனவே அத்தகைய நியமனம் மாநில அரசுக்கு

சாதகமாக அமைய வாய்ப்பளிக்கக் கூடாது என்பதும் நோக்கமாக இருக்கலாம். இக்கருத்து சரியானது எனில், ஆளுநரின் சட்டப்படிக்கான அலுவல்கள் அரசியலமைப்பின் 163 (3) பிரிவின் கீழ் மாநில அரசின் அலுவல்களுக்குள்ளும், 163 (1) பிரிவின் கீழ் அலுவல்களின் பொருள் வரம்பிற்குள்ளும் ''அடங்கியுள்ள ஒன்றாகக் கருதப் பட வேண்டும்''.

3. பல்கலைக் கழக விவகாரங்களைப் பொறுத்தவரையில், துணை வேந்தரை நியமிக் கும்போதும், பல்வேறு சட்டப்படிக்கான, அமைப்பு களுக்கும் நபர்களை நியமிக்கும்போதும் வேந்தர் என்ற முறையில் ஆளுநரின் பணி மேற்கொள்ளப் படுகிறது.

ஆளுநர், இது தொடர்பாக தனது விருப்ப உரிமைப்படி செயல்படுவதைவிட, மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சி புரியும் அமைச்ச ரவையின் (அவர்கள் அமைச்சர்களாக இருக்கும் வரையில்) ஆலோசனையின் பேரில் செயல் படுவதுதான் மக்களாட்சிக்கு நன்மை பயக்கும். இது, பல்கலைக் கழக விவகாரங்களில் அரசின் கருத்துக்களை எடுத்துரைக்க துணை வேந்த ருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் பெரும் அளவில் உதவி புரியும். 3.1 வினாவிற்குப் பதில் அளிக்கையில் (பகுதி IV ஆளுநர் பணி) இவ் வரசின் கருத்தினை, மேலும் விளக்கம் பெற மீண்டும் படித்துப் பார்க்கலாம்.

மாநிலங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு.

வினா 12.1 :

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அமெரிக்கக் கூட் டாட்சி முறை செயற்படுவதை நன்கு கண் காணித்து, அவற்றின் மேம்பாடுகள் குறித்துப் பரிந்துரைக்க, 1959ஆம் ஆண்டில், மாநில அரசு களுக்கிடையிலான உறவுகள் (A.C.I.R.) குறித்த ஆலோசனைக் குழு ஒன்றை, காங்கிரஸ் ஏற்படுத்தியது. இது தொடர்ந்து இருக்கும் ஓர் அமைப்பாக இருப்பதால் இக்குழு, குறிப் பிட்ட விவகாரங்களையும், பிரச்சனைகளையும் தானே சென்று அணுகி ஆராய்கிறது. இக் குழு எடுக்கும் முடிவு, மாநில அரசுகளுக்கிடையில் மேம்பட்ட ஒத்துழைப்பு நிலவவும் கூட்டாட்சி முறை செவ்விய முறையில் செயல்படவும் உதவும்.

இந்தியாவில், மத்திய-மாநில அரசுகளுக்கிடை யில் எழுகின்ற கருத்து வேறுபாடுகள், பிரச்சினை கள் பலவற்றை உரிய வகையில் தீர்க்க நமது நாட்டில் அத்தகைய ஓர் அமைப்பை ஏற்படுத்து வது பயனுள்ளதாக அமையும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ? ஆம் எனில், அத்தகைய ஓர் அமைப்பின் பணியும் அதில் எவரெவர் எவ் வாறு இருக்க வேண்டும் என்பதையும் விவரிக்க.

விடை :

ஐக்கிய அமெரிக்க நாடுகளில், மாநில அரசு களுக்கிடையிலான உறவுகள் குறித்த ஆலோ சனைக்குழு (A.C.I.R.) ஒன்று இருப்பது போலவே, இந்தியாவில் மத்திய-மாநில அரசு களுக்கிடையில் எழுகின்ற கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் பலவற்றை உரிய வகையில் தீர்க்க நமது நாட்டிலும் அத்தகைய ஓர் அமைப்பை ஏற்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று இவ்வரசு கருதுகிறது. மாநில அரசுகளுக் கிடையிலான குழு ஒன்று அமைப்பதற்கு அரசிய லமைப்பின் 263ஆம் பிரிவில் தனி விதித்துறை இருந்தபோதிலும், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதிலிருந்து அத்தகைய குழு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி எண்ணிப் பார்க்கவுமில்லை அல்லது கருதிப் பார்க்கவுமில்லை என்று ஏற் கெனவே நாங்கள் கருத்துத் தெரிவித்துள்ளோம். இத்தகைய சூழ்நிலைகளில், 263ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு மாநிலங்களுக்கிடையிலான குழு ஒன்று அமைக்க வாய்ப்பில்லாததாலும் அவ்வாறு அமைந்தாலும் மக்களின் விருப்பத் திற்கு இணங்க மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் குறித்து ஆலோசனைக் குழு ஒன்று அமைப்பதானது பல்வேறு மாநில அரசுகளுக் கிடையேயும், மத்திய அரசுக்கிடையேயும் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேம் படுத்தும் வழிவகைகளில் ஒன்றாக அமையும் என்பது இவ்வரசின் கருத்தாகும்.

இந்தக் குழுவின் அமைப்பைப் பொறுத்த வரையில் பிரதம மந்திரியின் தலைமையின்கீழ் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களும் இதில் இடம் பெறலாம் என்று இவ்வரசு கருத்து தெரிவிக்கிறது.

அரசியலமைப்பின் 281ஆம் பிரிவில் வகை செய்துள்ளவாறு, நிதி ஆணைக்குழு செய்யும் பரிந் துரைகளுக்கு இணையாக அந்த ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளும் கருதப்பட வேண்டும். ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகள் நடவடிக்கை பற்றிய விளக்கக் குறிப்புடன் நாடாளுமன்ற இரு அவைகளிலும் வைக்கப்பட வேண்டும். இந்த அமைப்பை ஏற்படுத்துவதன் காரணமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ளது போன்றதுமான அமைப்பு, இந்திய மக்களின் குறிப்பாக தமிழ்நாடு அரசின் விருப்பங்களை நிறைவு செய்வது மட்டுமல்லாது மத்திய மாநிலங்களுக்கிடையில் அவ்வப்போது அல்லது மற்ற வகையில் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரச்சனைகள் பலவற்றை உரிய முறையில் விரைந்து தீர்த்து வைக்கவும் உதவும்.

பரிந்துரையின் சுருக்கம்.

பரிந்துரையின் சுருக்கம்.

தொடக்கம்.

நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் பெருமளவு ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும், சட்டமன்றம், நிதி, பிற துறைகளில் மாநிலங்களுக்குப் பெருமளவு அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கும், உண்மையான கூட்டாட்சிக் கொள்கையை அடைவதற்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்து, ஏற்றவாறு திருத்தியமைக்க வேண்டுமென்று தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் சி. என். அண்ணாதுரை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். மத்திய-மாநில உறவுகள் தொடர்பாகவும், குறிப்பாக சட்டமன்றம், நிருவாகம், நிதித் துறைகளில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைத் தரும் வகையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது குறித்து நமது முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, உண்மையானதோர் கூட்டரசாக இயங்கிட வேண்டுமென்பதும், அதில் மத்திய அரசும், மாநில அரசும் ஒரே சமமான அதிகாரங்களைப் பெற்றிருக்கவேண்டுமென்பதும் அவை ஒவ்வொன்றும் சமமாகவும், சுதந்திரமாகவும் செயலாற்றி, வரி விதிப்பு அதிகாரம் உட்பட எஞ்சிய சட்டமியற்றும் அதிகாரங்கள் மாநில அரசிடம் இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசு குறைந்தளவு அதிகாரங்களையே பெற்றிருக்க வேண்டும் என்றும் தமிழக அரசு உறுதியான கருத்துக் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் தற்போதுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மத்திய அரசிடம் தற்போதுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்படும். இதனால் சட்டமியற்றுதலிலும் நிதி, நிருவாகத் துறைகளிலும் மாநில அரசு மேலும் அதிக சுயாட்சி பெற்று விளங்கும்.

மேற்சொன்ன நோக்கத்தைக் கருத்திற்கொண்டு தமிழக அரசு சர்க்காரியா கமிஷனால் கொடுக்கப்பட்ட வினாப்பட்டிகளுக்கு பதில் அளித்துள்ளது. பரிந்துரைகளின் முக்கிய கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பகுதி-I—முன்னுரை.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பு கூட்டாட்சி அமைப்பாக இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும், பிற அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படாத சில விதித்துறைகள் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்படுவதால், இது ஓரளவிற்கு கூட்டாட்சி (அல்லது) மத்திய ஆட்சி அமைப்பாக உள்ளது. நமது அரசியலமைப்புச் சட்டம் உண்மையில் கூட்டாட்சி அமைப்பு நெறியமைப்புடையது அல்ல என்று மக்களும், சட்ட வல்லுநர்களும் தொடர்ந்து குறிப்பிடுவதற்கு வலுவூட்டுபவையாய் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 256, 257, 356, 365, 200, 201 ஆகிய விதித்துறைகளும், 31-சீ, 31-ஏ(1), 254(2), 304 (b) வரம்பு நிபந்தனைகளும் விளங்குகின்றன.

ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் சில ஏற்கத்தகாத பிரிவுகளைச் சேர்த்ததன் காரணமாக மாநிலங்களின் சுயாட்சி உரிமைக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளது. மத்திய-மாநில உறவில் இடர்பாடுகள், பதட்ட நிலை, பிரச்சினைகள் ஆகியவை ஏற்பட்டுள்ளதற்கு நமது அரசியலமைப்புச் சட்டத்தின் திட்டத்திலும் அடிப்படை அமைப்பிலும் உள்ள பெருங்குறைகளே காரணமாகும். மத்திய அரசின் நல்லெண்ணத்தை நம்பியே மாநில அரசின் சுயாட்சி அமைய இயலாது.

எனவே, நல்ல மரபுகளும், நடைமுறைகளும் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் விதித்துறைகளில் தேவையான இடங்களில் ஏற்றவாறு திருத்தங்களைச் செய்வதன் மூலமாக மத்திய—மாநில அரசுகளுக்கிடையே ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும் நீக்கி, மத்திய—மாநில அரசுகளுக்கிடையே அமைதி, நட்புறவு, சமூக நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. உண்மையான கூட்டாட்சி அமைய வேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும். எனினும், இக் குறிக்கோளினை எய்தும்வரை, பின்வரும் பகுதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தம், மாநிலங்களின் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்து, நாட்டில் ஒற்றுமை வலுவுடைய வழிகோலுவதிலும், பெரிதும் துணைபுரியும்.

பகுதி II—சட்டம் இயற்றுவது தொடர்பாக மத்திய-மாநில உறவுகள்.

நாடாளுமன்றத்தால் சட்டமியற்றப்படுவதற்கு முன்னதாக, மாநிலச் சட்டமன்றத்தின் இசைவைப் பெறுதல்.

பொது அதிகாரப் பட்டியலின்கீழ் வரக்கூடிய ஒரு பொருளைப் பொறுத்தவரையில், மாநிலச் சட்டமன்றத்தின் இசைவின்றி,

நாடாளுமன்றம் சட்டமெதையும் இயற்றக் கூடாது. இத்தகைய இசைவு எதுவும் பெறப் படாவிடின், பொது அதிகாரப் பட்டியலின் கீழ்வரும் ஒரு பொருள் குறித்து நாடாளுமன்றம் இயற்றிய அச் சட்டம், அந்த மாநிலத்திற்குப் பொருந்தாது.

குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக மாநில சட்ட முன்வடிவுகளை அனுப்புதல் தொடர்பாக.

31ஏ, அல்லது 31சி பிரிவின்கீழ்இயற்றப் படும் எந்தவொரு சட்ட முன்வடிவும் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக அனுப்ப வேண்டியதில்லை. அதற்கிணங்க, 31ஏ பிரிவின் முதல் வரம்பு நிபந்தனையும், 31சி பிரிவின் வரம்பு நிபந்தனையும் 200ஆவது பிரிவின் முதல் வரம்பு நிபந்தனையும், 201ஆம் எண் பிரிவின் வரம்பு நிபந்தனையும் நீக்கப்பட வேண்டும். 201ஆம் பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர், இசைவளிப்பது அல்லது இசைவளிப் பதை நிறுத்திவைப்பது தொடர்பான விதியும் நீக்கப்படவேண்டும்.

ஏனைய சட்ட விதித் துறைகள்.

சட்டமியற்றும் துறையில் நாடாளுமன்றத் திற்கும், மாநிலங்களுக்கும் உள்ள தனி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், 246ஆம் பிரிவு திருத்தப்படவேண்டும்.

மாநில அரசின் சட்டமன்றத்தால் இயற்றப் பட்ட சட்டத்துடன் கூடுதலாக ஒரு சட்டத்தை அல்லது அச் சட்டத்தைத் திருத்துகிற மாற்றுகிற அல்லது ரத்து செய்கிற சட்டம் உட்பட அத்தகைய பொருள்களைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றம் எந்தவொரு சமயத்திலும் எந்தவொரு சட்டத்தையும் இயற்ற அதிகாரம் கொண்டதாக இருக்கக்கூடாது என்னும் வகை யில் 254(2) பிரிவின் வரம்பு நிபந்தனைக்குப் பதிலாக வரம்பு நிபந்தனை அமைத்துக்கொள்ள வேண்டும்.

247, 249, 250, 251, 252 ஆகிய பிரிவுகள் நீக்கப்படவேண்டும்.

252ஆம் பிரிவைப் பொறுத்தவரையில், பின்வரும் மாற்றுக் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது. மத்திய-மாநில அரசுகளுக் கிடையே உள்ள அதிகாரம் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளத் தக்கதாக அமையும் வகை யிலும், ஒரமைப்புக்கே உரியதாக இல்லாத வகையிலும் 252(2) பிரிவு ஏற்றவாறு திருத்தப் படவேண்டும்.

எஞ்சிய அதிகாரங்கள்.

சட்டம் இயற்றுதல், வரி விதித்தல் தொடர் பான எஞ்சிய அதிகாரங்கள் மாநில சட்ட மன்றத்திடம் இருத்தல் வேண்டும். எனவே, 248ஆம் பிரிவும் மத்திய அதிகாரப் பட்டியலில், 97ஆம் பிரிவும் நீக்கப்பட வேண்டும். இதனை யடுத்து மாநில அதிகாரப் பட்டியலில் 67ஆம் பிரிவு என்ற புதிய பதிவைச் சேர்த்துக் கொள்ளலாம்.

"67. பட்டியல்-I-லோ அல்லது பட்டியல்-III-லோ குறிப்பிடாத வரி எதுவும் உட்பட அந்த பட்டியல் எதிலும் குறிப்பிடாத வேறு பிற பொருள்".

154(2) (b), 258(2) பிரிவுகள் :

மேற்சொன்ன இரண்டு பிரிவுகளிலும் குறிப் பிடப்பட்டுள்ள அதிகாரத்தை மத்திய அரசு செலுத்தவேண்டுமேயாயின், மாநில அரசின் இசைவைப் பெற வேண்டும் என்பதற்கு வகை செய்யக்கூடிய வகையில் இவ்விரு பிரிவுகளிலும் திருத்தம் கொண்டு வரப்படலாம்.

304 (b) பிரிவு :

304 (b) பிரிவின் வரம்பு நிபந்தனை நீக்கப் பட வேண்டும்.

246(A) பிரிவு :

மாநில அரசின் அமைச்சர்களின் நடத்தை குறித்து விசாரணை ஒன்றை நடத்த நாடாளு மன்றத்திற்கு அதிகாரம் ஏதும் இருக்கக்கூடாது என்கிற வகையில் 246(A) என்ற புதிய பிரிவை சேர்க்கலாம் என கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால், மாநில அமைச்சர் பதவியிலிருக்கும் போது அல்லது பதவியை விட்டு விலகிய பின்னர் அவருடைய நடத்தைக் குறித்து விசாரணைக் கமிஷன் அமைக்கும் அதிகாரம் மாநில அரசுக்கே இருக்கவேண்டும்.

சட்டப் பதிவுகள் ;

மத்திய அதிகாரப் பட்டியல் (பட்டியல் I) மாநில அதிகாரப் பட்டியல் (பட்டியல் II), பொது அதிகாரப் பட்டியல் (பட்டியல் III) ஆகியவற்றின்கீழ் பதிவுகளைத் சேர்த்தல், திருத்தல், நீக்குதல் ஆகியவற்றிற்கு இந்த அரசு கருத்துத் தெரிவிக்கின்றது. மாநில அரசால் தெரிவிக்கப்பட்ட திருத்தங்களுடன் அமைந்த திருத்த மத்திய அதிகாரப் பட்டியல், திருத்த மாநில அதிகாரப் பட்டியல், திருத்த பொது அதிகாரப் பட்டியல் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு அமையும் :—

திருத்த மத்திய அதிகாரப் பட்டியலில் உள்ள மொத்தம் 99 பதிவுகளில், 9 பதிவுகள் நீக்கப்பட்டன அல்லது திருத்த மாநில அதி காரப் பட்டியலுக்கு அல்லது திருத்த பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட மாநில அரசுப்பட்டியலில், தற்போதுள்ள 61 பதிவுகளுடன், மேலும் 42 பதிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட பொதுப் பட்டியலிலிருந்து 33 பதிவுகள் திருத்தப்பட்ட மாநிலப் பட்டிய லுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதனால், திருத்தப்பட்ட பொதுப்பட்டியலில் 23 பதிவுகள் மட்டுமே உள்ளன.

பட்டியல் I—மத்திய அரசுப் பட்டியல்.

1. பாதுகாப்புக்குரிய ஆயத்தங்களைச் செய் வது, போர்க் காலங்களில் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு உகந்த அனைத்து நடவடிக்கை களையும் எடுப்பது, போர் முடிவுற்ற பின்னர் படைகளைக் கலைப்பது ஆகியவை உட்பட இந்தியாவில் ஒவ்வொரு பாகத்தின் பாது காப்பைப் பராமரிப்பது.

2. கடற்படை, இராணுவம், விமானப் படை, மத்திய அரசின் படைக்கலம் தாங்கிய ஏனைய படைப்பிரிவுகள்.

2-A. நீக்கப்பட்டது.

3. பாளையப் பகுதிகளில் எல்லையை வரையறுத்தல், உள்ளாட்சி முறையை ஏற் படுத்தல், பாளைய அதிகார மன்றங்களை அப்பகுதிகளுக்குள் அமைத்தல் அவற்றின் அதிகாரங்களை வரையறுத்தல், அப்பகுதிகளில் வீட்டு வாடகைக்கட்டுப்பாடு உட்பட வீட்டு வசதியை முறைப்படுத்தல்.

4. கடற்படை, இராணுவம், விமானப் படை பணிகள்.

5. படைக்கலங்கள், சுடுபடைக்கலங்கள், போர்த்தளவாடங்கள், வெடிகுண்டு முதலிய வெடிமருந்துப் பொருள்கள்.

6. அணு ஆற்றல், அதனை உற்பத்தி செய்வதற்கான கனிவளங்கள்.

7. போர்த் தளவாடங்கள் தயாரிப்பதற்கு அவசியமான தொழிற்சாலைகள்.

8. தகவல் சேகரிப்பு—குற்றப் புலனாய்வு மத்தியப் பிரிவு.

9. பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள் அல்லது உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய காரணங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைத்தல்; அவ்வாறு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர் குறித்து நடவடிக்கை எடுத்தல்.

10. வெளிநாட்டு விவகாரங்கள் இந்திய அரசை எந்தவொரு வெளிநாட்டுடனும் உறவு கொள்ள வைக்கும் ஏனைய விஷயங்கள் அனைத்தும்.

11. வெளிநாட்டுத் தூதரகம், வாணிபக் குழு பிரதிநிதிகளை அனுப்பி வைத்தல்.

12. ஐக்கிய நாடுகள் சபை.

13. பன்னாட்டு மாநாடுகள், ஏனைய அமைப்புகள் ஆகியவற்றில் பங்கு கொள்ளுதல், அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயற் படுத்தல்.

14. வெளிநாடுகளுடன் நேச உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள் ஆகியவற்றைச் செய்து கொள்ளுதல்; வெளிநாடுகளுடன் செய்து கொண்ட நேச உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், பொது இணக்க ஒப்பந்தங்கள் ஆகியவற்றை செயற் படுத்தல்.

15. போரும் அமைதியும்.

16. வெளிநாட்டு அதிகார வரம்பு.

17. குடியுரிமை, அயல் நாட்டவருக்குக் குடியுரிமை வழங்குதல், வெளிநாட்டவர்கள்.

18. நாடு கடத்தப்பட்டவரை மீண்டும் அவர் நாட்டுக்கு அனுப்புதல்.

19. இந்தியாவிற்கு வர அனுமதித்தல், இந்தியாவிலிருந்து குடி பெயர்ந்து செல்வோர், இந்தியாவிலிருந்து வெளியேற்றுதல்; பாஸ் போர்ட்டுகள் விசாக்கள்.

20. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங் களுக்குப் புனித யாத்திரை செல்லுதல்.

21. கடலில் அல்லது விமானத்தில் செய்யப் படும் கொள்ளைக் குற்றங்கள் ஏனைய குற்றங்கள், உலக நாடுகளின் கூட்டங்களுக் கெதிராக, நிலத்தில் அல்லது கடலில் அல்லது விமானத்தில் செய்யப்படும் குற்றங்கள்.

22. இரயில்வேக்கள்.

23. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளென்று அறிவிககப்பட்ட நெடுஞ்சாலைகள்.

24. கப்பல் போக்குவரத்து மாநிலங்களுக் கிடையே ஓடும் நதிகளில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, அத்தகைய நீர்வழிப் போக்கு வரத்துக்குள் சம்பந்தப்பட்ட விதிகள்.

25. கரையோரக் கப்பல் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து உட்பட கடற்கரையோர கப்பல் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து.

26. விளக்குக் கப்பல்கள், கப்பல்களுக்கு அல்லது விமானங்களுக்கு வழிகாட்டுவதற்கான கம்பியில்லாத் தந்தி ஏற்பாடுகள் ஆகியவை உட்பட கலங்கரை விளக்கங்கள், கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவை பாதுகாப்பாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏனைய ஏற்பாடுகள்.

27. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட் டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது தற்போதுள்ள சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் பெருந்துறைமுகங்கள் என்று அறிவிக்கப்பட்ட துறைமுகங்கள்,* அவற்றின்

எல்லையை வரையறுத்தல், துறைமுக அதிகார மன்றங்களை அமைத்தல், அவற்றின் அதிகாரங்களை வரையறுத்தல்.

28. பயணிகள், கப்பல் நோயாளிகள் வகையில் தொற்றுத்தடைக் காப்புப் பகுதி, அதனுடன் இணைந்த மருத்துவமனைகள், மாலுமிகள். கப்பல் சிப்பந்திகள் ஆகியோருக்குரிய மருத்துவ மனைகள்.

29. விமானப் பாதைகள், விமானங்கள், விமானப் போக்குவரத்துக்கள் விமான நிலையங்களை ஏற்படுத்தல். விமானப் போக்குவரத்தை முறைப்படுத்தல், விமான நிலையங்களை ஏற்படுத்துதல், விமானப் போக்குவரத்திற்குரிய கல்வி-பயிற்சியளித்தல். மாநிலங்களால், ஏனைய முகவரமைப்புகளால் வழங்கப் பெற்ற அத்தகைய கல்வி-பயிற்சியை முறைப்படுத்துதல்.

30. பயணிகளை, பொருட்களை, இரயில், கப்பல் அல்லது விமானத்தின் மூலம் கொண்டு செல்லுதல் அல்லது மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகளில் நீர்வழிப் போக்குவரத்தின் மூலம் எந்திரத்தால் இயக்கப்படும் கலங்களில் கொண்டு செல்லுதல்.

31. அஞ்சல்—தந்தி, தொலைபேசி, கம்பியில்லாத தந்தி, செய்தியைத் தெரிவிப்பதற்குரிய இவை போன்ற முறைகள்.

32. மத்திய அரசின் சொத்தும் அதிலிருந்து கிடைக்கப்பெறும் வருவாயும், ஆனால், மத்திய அரசுக்குச் சொந்தமானதும், ஒரு மாநிலத்தில் அமைந்துள்ளதுமான சொத்தைப் பொறுத்த மட்டில், அது அம்மாநில அரசு இயற்றும் சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

33. மத்திய அரசுக்காகச் சொத்துக்களைப் கையகப்படுத்துதலும், கேட்டுப் பெறுதலும்.

34. இந்திய சமஸ்தானங்களின் முன்னாள் அரசர்களின் எஸ்டேட்டுகளுக்குரிய காப்புளார் நீதிமன்றங்கள்.

35. மத்திய அரசின் பொதுக் கடன்.

36. கரென்சி நோட்டுகள், நாணயம் அடித்தல், மறுக்கவொண்ணாச் செலாவணிப் பணம், அந்நியச் செலாவணி.

37. அயல் நாட்டுக் கடன்கள்.

38. இந்திய ரிசர்வ் வங்கி.

39. அஞ்சலகச் சேமிப்பு வங்கி.

40. மத்திய அரசு ஏற்படுத்தும் பரிசுச் சீட்டுகள்.

41. அயல் நாடுகளுடன் வர்த்தகம்-வாணிகம் செய்தல்; சுங்கப் பகுதி எல்லையைக் கடந்து இறக்குமதி ஏற்றுமதி செய்தல்: சுங்கப் பகுதி எல்லை என்பதற்குப்பொருள் விளக்கமளித்தல்.

42. மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகம்-வாணிகம்.

43. வங்கி, ஈட்டுறுதி, நிதியுதவிக் கழகங்கள் உட்பட (ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் இதில் அடங்கா) வர்த்தகக் கழகங்களை அமைத்து இணைத்தல், முறைப்படுத்துதல், மூடி விடுதல்.

44. பல்கலைக் கழகங்கள் நீங்கலாக, ஒரு மாநிலத்திற்குள்ளேயே மட்டும் தனது செயல் நோக்கங்களைக் கொண்டிராத வர்த்தகக் கழகமாயினும் சரி அல்லது வர்த்தகக் கழகம் அல்லாவிடினும் சரி அத்தகையக் கழகங்களை அமைத்து இணைத்தல், முறைப்படுத்துதல், மூடி விடுதல்.

45. நீக்கப்பட்டது.

46. மாற்று உண்டியல்கள் காசோலைகள், கடன் உறுதிப் பத்திரங்கள், (இவை போன்ற) ஏனைய உறுதிப் பத்திரங்கள்.

47. ஈட்டுறுதி (இன்ஷூரன்ஸ்).

48. பங்கு விற்பனைக் களம்.

49. பதிவுப் பொருள் தனியுரிமை, புதியன புனைதலும் வடிவமைத்தலும், பதிப்புரிமை, வணிகக் குறிகள், வணிகப் பொருள்களில் இடும் குறிகள்.

50. தர எடை—அளவைகளை ஏற்படுத்துதல்.

51. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தை நிர்ணயித்தல்.

52. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்கள்—

1. உலோகத் தொழில்கள்—

A. இரும்பு ;

(1) இரும்பு—உருக்கு (உலோகம்)

(2) இரும்பு—உலோகக் கலவை.

(3) இரும்பு—உருக்கு வார்ப்புகள்—அச்சுகள்.

(4) இரும்பு—உருக்குக்கட்டுமானங்கள்.

(5) இரும்பு—உருக்குக் குழாய்கள்.

(6) தனிவகை உருக்குகள்.

(7) இரும்பு—உருக்கின் ஏனைய உற்பத்தி பொருள்கள்.

B. இரும்பு அல்லாதவை :

(1) தங்கம், வெள்ளி, இவற்றின் கலப்பு உலோகங்கள் உட்பட மதிப்புமிகு உலோகங்கள்.

(2) இரும்பு அல்லாத ஏனைய உலோகங்கள் அவற்றின் கலப்பு உலோகங்கள்.

(3) ஓரளவு தொழிலாக்கம் சார்ந்தவை, தொழிலாக்கம் சார்ந்தவை.

2. எரி பொருள்கள்—

(1) நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, சுட்ட நிலக்கரி அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுபவை.

(2) கனிம எண்ணெய் (குரூட் எண்ணெய்) மோட்டார், விமான எரியெண்ணெய் டீசல் எண்ணெய், கெரோசின் எண்ணெய், எரி எண்ணெய், டைவர்ஸ் ஹைடிரோகார்பன் எண்ணெய் (ஸிந்தடிக் எரி பொருள், லூப்ரி கெட்டில் எண்ணெய் ஆகியவை உட்பட அவற்றின் கலைவகள்).

(3) எரி வாயுக்கள் (நிலக்கரி வாயு, இயற்கை வாயு இதுபோன்ற ஏனையவை).

3. நீராவி உற்பத்தி செய்யும் தளவாடங்கள்.

4. பிரைம் மூவர்கள் (மின்சார உற்பத்தி இயந்திரம் நீங்கலாக)—

(1) நீராவி இயந்திரங்களும், டர்பைன் களும்.

(2) இண்டர்னல் கம்பஸ்டன் என்சின்கள்.

5. தொலைத் தகவல் போக்குவரத்து—

(1) தொலைபேசி.

(2) தந்தி சாதனம்.

(3) கம்பியில்லா தந்தி துணைக் கருவிகள்.

(4) ஒலி பெருக்கி, பொதுக் கூட்டத்தில் பேசும் சாதனம் உட்பட ரேடியோ ரிசிவர்கள்.

(5) தொலைக்காட்சி பெட்டிகள்.

(6) டெலிபிரிண்டர்கள்.

6. போக்குவரத்து—

(1) விமானம்.

(2) கப்பல், விசையால் இயங்கும் பிற கலன்கள்.

(3) ரயில்வே லோகோமோடிவ்ஸ்.

(4) ரயில்வே ரோலிங்ஸ்டாக்.

7. உரங்கள்—

(1) கரியச் சேர்மானமல்லாத உரங்கள்.

(2) கரியச் சேர்மானமுள்ள உரங்கள்.

(3) கலப்பு உரங்கள்.

8. இரசாயனப் பொருட்கள் (உரங்கள் நீங்கலாக)—

(1) நேப்தலின், ஆந்த்ரஸின் போன்ற நிலக்கரி தார் வடிப்பு பொருட்கள்.

(2) துப்பாக்கி மருந்து, சேப்டி பியூஸ் ஆகியவை உட்பட வெடி மருந்துப் பொருட்கள்.

9. காகிதப் பொருட்கள் உட்பட காகித, காகிதக் கூழ்—

(1) காகிதம்—எழுதுதல், அச்சிடுதல், மேலட்டை.

(2) செய்தித் தாள்களுக்கான காகிதங்கள்

(3) காகிதக் கூழ்—மரக்கூழ், இயந்திர, இரசாயனக் கூழ், கரையும் கூழ் உட்பட.

10. சர்க்கரை—

சர்க்கரை.

11. பாதுகாப்புத் தொழில்கள் —

படைக் கலன்களும் வெடி மருந்துப் பொருட்களும்.

53. நீக்கப்பட்டது.

54. நீக்கப்பட்டது.

55. நீக்கப்பட்டது.

56. முறைப்படுத்தல், மேம்படுத்தல், திருப்பி விடுதல், யூனியனின் கட்டுப்பாட்டின்கீழ் பகிர்ந்தளித்தல் ஆகியவை பொது நலன் கருதி உசிதம் என நாடாளுமன்றத்தால் சட்டத்தால் அறிவிக்கப்படுகிற அளவுக்கு, மாநிலங்களுக் கிடையேயான ஆறுகள், ஆற்றுப் பள்ளத்தாக்கு களை முறைப்படுத்தலும் மேம்படுத்தலும், மாநிலங்களுக்கிடையேயான ஆற்று நீரை இந்தியாவின் ஏதாவது ஓர் பகுதிக்கு திருப்பி விடல், மாநிலங்களுக்கிடையேயான ஆற்றுநீரை மாநிலங்களிடையே பகிர்ந்தளித்தல் (மாநிலங் ளுக்குள் பயன்படுத்துவது இதில் அடங்காது).

57. ஆட்சி எல்லைகளின் நீருக்கு அப்பால் மீன் பிடித்தலும், மீன் பண்ணைகளும்.

58. யூனியன் ஏஜென்ஸிகள் உப்பு தயாரித்தல், வழங்குதல்.

59. அபின் சாகுபடி, தயாரித்தல், ஏற்று மதிக்காக விற்பனை செய்தல்.

60. விட்டுவிடப்பட்டது.

61. யூனியன் பணியாளர் தொடர்பான தொழில் தகராறுகள்.

62. இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் தேசியப் புத்தக நிலையம், இந்திய அரும் பொருட்காட்சியகம், இம்ப்பிரியல் யுத்த மியூசியம், விக்டோரியா மெமோரியல், இந்தியன் யுத்த மெமோரியல் என வழங்கும் நிறுவனங்களும் முழுவதுமோ ஒரு பாகமோ இந்திய அரசின் செலவில் நடைபெறுவனவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என நாடாளுமன்றத்தால் சட்டத்தினால் அறிவிக்கப்படுவதுமான அவை போன்ற வேறெந்த நிறுவனமும்.

63. இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் பெனாரஸ் இந்து பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம், டில்லி பல்கலைக் கழகம் என அழைக்கப்படும் நிறுவனங்கள் : 371E பிரிவினையொட்டி ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம்.

64. முழுவதும் இந்திய அரசால் நிதி உதவி பெறும் அறிவியல் அல்லது தொழில் நுட்ப நிறுவனங்கள்.

65. பின்வருவனவற்றிற்காக யூனியன், ஏஜென்சிகள் நிறுவனங்கள் :—

(a) காவல்துறை அதிகாரிகள் பயிற்சி உட்பட தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது தொழில் நுட்பப் பயிற்சி.

(b) சிறப்பு ஆய்வு அல்லது ஆராய்ச்சியை வளர்த்தல் அல்லது.

(c) குற்றங்களை புலனாய்வு செய்தல் அல்லது கண்டு பிடித்தலில் அறிவியல் அல்லது தொழில் நுட்ப உதவி.

66. நீக்கப்பட்டது.

67. நீக்கப்பட்டது.

68. இந்திய நில அளவை, இந்திய மண்ணியல் தாவர இயல், விலங்கியல், மானிடவியல் சர்வே வானிலை ஆராய்ச்சி நிறுவனங்கள்.

69. மக்கள் தொகை கணக்கெடுப்பு.

70. மத்திய அரசுப் பணி ; அகில இந்தியப் பணி ; மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு.

71. மத்திய அரசு ஓய்வூதியம், அதாவது மத்திய அரசு அல்லது இந்தியத் தொகு நிதியிலிருந்து கொடுக்கத் தக்க ஓய்வூதியம்.

72. நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்களுக்கும் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் பதவிகளுக்கும் தேர்தல்கள், தேர்தல் கமிஷன்.

73. நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற மேலவை தலைவர், துணைத் தலைவர், மக்கள் சபையின் சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகியோரின் சம்பளங்களும் படிகளும்.

74. நாடாளு மன்றத்தின் ஒவ்வொரு அவை, ஒவ்வொரு அவையின் குழுக்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள், பாதுகாப்புகள், நாடாளுமன்றக் குழுக்களின் முன்பு அல்லது நாடாளுமன்றம் நியமித்த கமிஷன்களின் முன்பு சாட்சியம் அளிக்க அல்லது ஆவணங்களைத் தாக்கல் செய்ய நபர்களை அழைத்தல்.

75. குடியரசுத் தலைவர், ஆளுநர்கள் ஆகியோரின் ஊதியங்கள், படிகள், சிறப்பு உரிமைகள், மத்திய அமைச்சர்களின் சம்பளங்கள், படிகள், இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் சம்பளங்கள், படிகள், ஏனைய பணி நிபந்தனைகள்.

76. மத்திய அரசின் கணக்குகளை தணிக்கை செய்தல்.

77. உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு, நிர்வாகம் அதிகார வரம்பு, அதிகாரங்கள் (அந்த நீதிமன்றத்தை அவமதித்தல் உட்பட) அங்கு வாங்கப்படும் கட்டணங்கள், உச்ச நீதிமன்றத்தில் வாதாட உரிமை பெற்ற நபர்கள்.

78. உயர்நீதிமன்ற அலுவலர்கள் பணியாளர்கள், குறித்த விதித்துறை நீங்கலாக உயர்நீதி மன்றங்களை, அமைத்தல் நிர்வாகம் (தடை நீக்கம் உட்பட) உயர்நீதிமன்றங்களில் வாதாட உரிமை பெற்றவர்கள்.

79. உயர்நீதி மன்றத்தின் அதிகார வரம்பை மத்திய நேரடி ஆட்சிப் பகுதிக்கு நீட்டித்தல், உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பை மத்திய நேரடி ஆட்சிப் பகுதியிலிருந்து நீக்குதல்.

80. ஏதாவது ஒரு மாநிலத்தைச் சேர்ந்த காவல் துறையினரின் அதிகார வரம்பையும், அதிகாரங்களையும் அந்த மாநிலத்திற்கு வெளியே உள்ள பகுதிக்கு நீட்டித்தல், ஆனால், அப்பகுதி அமைந்துள்ள மாநில அரசின் இசைவின்றி ஒரு மாநிலத்தின் காவலர் அந்த மாநிலத்திற்கு வெளியே உள்ள பகுதியில் அதிகாரங்களையும் அதிகார வரம்பையும் செலுத்தும் வகையில் அவ்வாறு செய்யக் கூடாது.

81. பன்மாநில இடம் பெயர்வு : பன்மாநில நோய் தொற்றுத் தடைக்காப்பு.

82. வேளாண்மை வருமானம் நீங்கலாக ஏனைய வரிகள், அல்லது வருமானம்,

83. ஏற்றுமதி தீர்வை உட்பட சுங்கத் தீர்வைகள் :

84. (அ) மனிதர் அருந்துவதற்கான ஆல்கஹால், மது :

(ஆ) அபின், இந்திய கஞ்சா ஏனைய போதை மருந்துகள் போதைப் பொருள்கள் ஆகியவை நீங்கலாக இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது உற்பத்தி செய்யப்படும் புகையிலை ஏனைய பொருள்கள் மீதான ஆயத் தீர்வை.

85. கூட்டு நிறுவன வரி.

86. தனிப்பட்டோர், நிறுவனங்களுக்குச் சொந்தமான வேளாண்மை நிலம் நீங்கலாக, ஆஸ்தி இருப்புகளின் மூலதன மதிப்பு மீதான வரிகள் ; நிறுவன மூலதனம் மீதான வரிகள்.

87. சொத்துக்களைப் பொறுத்த மட்டில் வேளாண்மை நிலம் நீங்கலாக எஸ்டேட் வரி.

88. வேளாண்மை நிலம் நீங்கலாக, வாரிசுரிமை; சொத்து வரி.

89. இரயில், கடல் அல்லது விமான வழிப் போக்குவரத்து மூலம் எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் அல்லது செல்லும் பயணிகள் மீதான இறுதிமுனை வரிகள் ; இரயில் கட்டணம், சரக்குக் கட்டணம்.

90. பங்கு வாணிப நிலையங்களில் நடைபெறும் பற்று வரவுகள் மீது முத்திரைத்தாள் தீர்வை நீங்கலாக வரிகள்.

91. மாற்று முறி, காசோலைகள், கடன் உறுதி ஆவணம், கப்பல் சரக்கு ஏற்றுமதிப்பட்டி கடன் சான்று, ஈட்டுறுதி பாலிசிகள்? பங்கு மாற்றம் கடனீட்டுப் பத்திரங்கள்? பதிலிமனு ரசீதுகள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள்.

92. செய்தித் தாள்கள் விற்பனை அல்லது கொள்முதல் மீதான வரிகள். அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மீதான வரிகள்.

92-அ. செய்தித்தாள்கள் நீங்கலான பொருள் களின் விற்பனை அல்லது கொள்முதல் அதுவும் பன்மாநில வாணிபம் அல்லது வணிகத்தின் போது செய்யப்பட்ட விற்பனை அல்லது கொள்முதல் மீதான வரிகள்.

92-ஆ. சரக்கு ஒப்படை மீதான வரிகள் சரக்கு ஒப்படை தனக்குத் தானே செய்து கொண்டாலும் அல்லது வேறொருவருக்குச் செய்தாலும் அத்தகைய சரக்கு ஒப்படை பன்மாநில வணிக அடிப்படையில் செய்யப் பட்டிருந்தால்.

93. இப் பட்டியலில் கண்டுள்ளவற்றுக்குச் சம்பந்தப்பட்ட சட்டங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள்.

94. இப் பட்டியலில் கண்டுள்ளவற்றின் செயல் நோக்கத்திற்கான விசாரணை, ஆய்வு, புள்ளிவிவரங்கள்.

95. இப் பட்டியலில் வரும் விஷயங்கள் தொடர்பாக, உச்ச நீதிமன்றம் நீங்கலாக, அனைத்து நீதிமன்றங்களின் ஆட்சி வரம்பும் அதிகாரங்களும், கடற்படை அதிகார வரம்பு.

96. இப் பட்டியலில் கண்டுள்ளவை தொடர் பான கட்டணங்கள், ஆனால் நீதிமன்றம் ஒன்றில் விதிக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

97. நீக்கப்பட்டது.

பட்டியல் II—மாநில அரசுப் பட்டியல்.

1. பொது அமைதி (ஆனால் சிவில் அதிகாரத்துக்கு உறுதுணையான கடற்படை, இராணுவப்படை அல்லது விமானப்படை அல்லது அதன் ஒரு பகுதி அல்லது ஒரு பிரிவைப் பயன் படுத்துவது இதிலடங்காது).

1-அ. மாநிலப் பாதுகாப்பு அல்லது பொது அமைதியைக் காப்பது தொடர்பான காரணங் களுக்காக தடுப்புக் காவலில் வைத்தல் அத்தகைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோர்;

1-ஆ. இப் பட்டியலில் 1-அ பதிவிலும் III-ஆம் பட்டியலில் 3ஆம் பதிவிலும் குறிப் பிட்டுள்ள காரணங்களுக்கான பிற மாநிலத் தின் இசைவுடன் கைதிகள், குற்றஞ்சாட்டப் பட்டவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப் பட்டோர் ஆகியோரை ஒரு மாநிலத்திலிருந்து மற்றோர் மாநிலத்திற்கு மாற்றுதல்.

2. காவல் படை (இரயில்வே காவல் படையும் கிராமக் காவல்படையும் உட்பட).

3. உயர்நீதி மன்றத்தின் அலுவலர்களும் பணியாளர்களும் வாடகை-வருவாய் நீதி மன்றங்களில் பின்பற்றப்படும் நடைமுறை; உச்ச நீதிமன்றம் நீங்கலாக, பிற நீதிமன்றங்கள் அனைத்திலும் விதிக்கப்படும் கட்டணங்கள்.

3-அ. நீதி நிருவாகம்; அரசியலமைப்புச் உச்ச நீதிமன்றம்; உயர் நீதிமன்றங்கள் நீங்கலாக அனைத்து நீதிமன்றங்களின் அமைப்பு.

3-ஆ. நீதி மன்றத்தை அவமதித்தல், ஆனால் இதில் உச்சநீதி மன்றத்தை அவமதிப்பது அடங்காது.

4. சிறைகள், சீர்திருத்த நிறுவனங்கள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள், அதுபோன்ற ஏனைய நிறுவனங்கள் அங்கு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள்; சிறைகளை யும் ஏனைய நிறுவனங்களையும் பயன்படுத்து வதற்கு ஏனைய மாநிலங்களுடன் செய்து கொள்ளப்படும் ஏற்பாடுகள்.

5. உள்ளாட்சி அமைப்பு அதாவது நகராட்சிகள், மேம்பாட்டுப் பணிப் பொறுப்புக் கழகங்கள், மாவட்டக் குழுக்கள், சுரங்க ஏற்பாட்டு அமைப்புகள், உள்ளூர் சுயாட்சிக்கா அல்லது கிராம நிர்வாகத்திற்காக ஏனைய உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அமைப்பும் அதிகாரங்களும்.

5-அ. பொறுப்புக் கழகமும், அறங்காவலர் களும்.

5-ஆ. பேராட்சியர், அரசுச் சொத்துப் பொறுப்பாளர்கள்.

6. பொதுச் சுகாதாரமும் துப்புரவும், மருத்துவ மனைகளும் மருந்தகங்களும்.

6.அ. பிறப்பு-இறப்பு குறித்து பதிவு செய் வது உட்பட பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்கள்.

7. இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங் களுக்கான யாத்ரீகர் வரி நீங்கலாக, யாத்ரீகர் வரி.

7-அ. திருமணங்களும், விவாகரத்தும், சிசுக்களும் உரிய வயதடையாதவர்களும் சுவீகாரம் எடுத்துக் கொள்ளுதல் உயில் எழுதி வைத்தல்; உயில் எழுதி வைக்காமை, வாரிசுரிமை; கூட்டுக் குடும்பமும் பாகப் பிரிவினையும், அரசியலமைப்புச் சட்டம் செயலுக்கு வருவதற்கு அடுத்து முன்னர் இருந்து வந்த நீதிமன்ற நடவடிக்கைகளில் தரப்பினர்களாக உள்ளவர்களைப் பொறுத்தமட்டில் அவரவர் இனமுறைச் சட்டத்தின்படி தீர்ப்பு வழங்கப்படும்.

8. போதையூட்டும் மது வகைகள், அதாவது போதையூட்டும் மது வகைகளை உற்பத்தி செய்தல், தயாரித்தல், வைத்திருத்தல், எடுத்துச் செல்லுதல், வாங்குதல், விற்பனை செய்தல்.

8-அ. மருந்துப் பொருள்களும் நச்சுப் பொருள்களும் அபினைப் பொறுத்தமட்டில் Iஆம் பட்டியலில் 59ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட் பட்டதாகும்.

9. ஏலாமையுற்றவர்களுக்கும் பணிக்கமர்த்திக் கொள்ளப்படத் தகுதியற்றவர்களுக்கும் நிவாரணம் அளித்தல்.

9-அ. அலைந்து திரிவோர்; நாடோடி இடம்பெயர் பழங்குடியினர்.

9-ஆ. பைத்தியம் பிடித்தவர்களுக்கும், மன வளர்ச்சி குன்றியோருக்கும் சிகிச்சை அளிக்கும் இடங்கள் உட்பட; பைத்தியம், சித்த சுவாதீனமின்மை.

10. சவ அடக்கங்கள், இடுகாடுகள்; எரியூட்டல்கள்; சுடுகாடுகள்.

10-அ. தொழில் சங்கங்கள்; தொழில், தொழிலாளர் தகராறுகள்.

10-ஆ. சமூகப் பாதுகாப்பு, சமூகக் காப்புறுதி; வேலை வாய்ப்பும் வேலைவாய்ப்பின்மையும்.

10-இ. தொழிலாளர் நலன், பணி நிலைமைகள், வருங்கால வைப்பு நிதிகள், தொழிலதிபர்களின் பொறுப்புகள், தொழிலாளர்களுக்கு இழப்பீடு, உடலூனம், முதியோர் உதவித் தொகை, பேறுகால நலன்கள்,

11. கல்வி, (தொழில் நுட்பக் கல்வி உட்பட), மருத்துவக் கல்விப் பல்கலைக் கழகங்கள் (Iஆம் பட்டியலின் 63, 64, 65 பதிவுகளின் விதித்துறைகளுக்குட்பட்டு); வாழ்க்கைத் தொழில், தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி.

11-அ. கடல் வணிகக் கல்வியும், பயிற்சியும், மாநில அரசும் ஏனைய அமைப்புகளும் ஏற்பாடு செய்துள்ள கல்வி, பயிற்சியை முறைப்படுத்தல்.

12. மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதன் நிதியுதவி பெறும் நூலகங்கள அரும்பொருட் காட்சியகங்கள், அவை போன்ற ஏனைய நிறுவனங்கள்; பண்டைக் கால, வரலாற்று நினைவுச் சின்னங்கள், ஆவணங்கள், தொல்பொருள் இடங்களும் சின்னங்களும்.

12-அ. உயர் கல்வி அல்லது ஆராய்ச்சி, அறிவியல் தொழில் நுட்ப நிறுவனங்களில் தரத்தை ஒருங்கிணைப்பதும் முடிவு செய்வதும்.

13. சாலைகள், பாலங்கள், படகுகள், Iஆம் பட்டியலில் குறிப்பிடப்படாத ஏனைய போக்குவரத்துச் சாதனங்கள்; நகராட்சி டிராம் வேக்கள்; கயிற்றுப்பாலங்கள், உள்நாட்டு நீர் வழிகள் பன் மாநில ஆறுகள், அவற்றில் நடைபெறும் போக்குவரத்து; வாகனங்கள் (இயந்திர விசையில் இயக்குபவை உட்பட).

13-அ. இயந்திர விசையில் இயங்கும் கப்பல்கள் சம்பந்தப்பட்ட உள்நாட்டு நீர் வழிகளில் கப்பல் போக்குவரத்தும் கடல் பயணமும்; அத்தகைய நீர்வழிப் போக்குவரத்து குறித்த விதிகள்; தேசிய நீர்வழிகள் சம்பந்தப்பட்ட வரை, Iஆம் பட்டியலின் விதித்துறைகளுக்குட்பட்டு உள்நாட்டு நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

13-ஆ. நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டத்தின்படி அல்லது நிகழ்காலத்தில் செயலிலுள்ள சட்டத்தின்படி பெரிய துறைமுகங்களென அறிவிக்கப்பட்ட துறைமுகங்கள் நீங்கலான வேறு துறைமுகங்கள்.

14. வேளாண்மை (வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி உட்பட), பயிர்ப்பூச்சிகளுக்கு எதிரான பாதுகாப்பு, பயிர் நோய்த் தடுப்பு.

15. கால்நடைகள் காப்பு, பாதுகாப்பு, உற்பத்திப் பெருக்கம், நோய்த்தடுப்பு; கால்நடை மருத்துவப் பயிற்சி—மருத்துவத் தொழில்.

15-அ. கால்நடைகளுக்குக் கொடுமை இழைத்தலைத் தடுத்தல்.

16. கால்நடைகளை அடைத்து வைப்பதற்கான பட்டிகள், கால்நடைகள் கவனிப்பாரற்று தெருக்களில் பொது இடங்களில் திரிதலைத் தடுத்தல்.

17. நீர் வழங்கல், பாசனம், கால்வாய்கள், வடிகால், கரையமைத்தல், நீரைத் தேக்கி வைத்தல், புனல் மின் சக்தி உற்பத்தி (Iஆம் பட்டியலில் 56ஆம் பதிவின் விதித்துறைகளுக்கு உட்பட்டவை).

18. நில உரிமைகள், நில உடைமை உரிமைகள் (நிலக்கிழார்-குடியானவர் உறவு முறை உட்பட), குத்தகை வசூல், உழவு நில உடைமை மாற்றம், உரிமை மாற்றம்; நிலச் சீர்திருத்தமும் விவசாயக் கடன்களும்; நிலக் குடியேற்றம்.

19. காடுகள்.

20. வனவிலங்குகள், பறவைகள் பாதுகாப்பு.

21. மீனளம்.

22. காப்பாளர் நீதிமன்றங்கள் (Iஆம் பட்டியின் 34ஆம் பதிவின் விதித்துறைகளுக்குட்பட்டவை); வில்லங்கத்திற்கு உட்பட்ட பற்றுகைக்குரிய ஜமீன்கள்.

23. சுரங்கங்களை முறைப்படுத்தல், கனிவள மேம்பாடு (மத்திய அரசின் பொறுப்பில் வரும் முறைப்படுத்தல்—மேம்பாடு சம்பந்தப்பட்ட வரை I-ஆம் பட்டியலின் விதித்துறைகளுக்குட்பட்டவை).

24. I-ஆம் பட்டியலின் 7, 52 பதிவுகளில் குறிப்பிடுள்ளவை நீங்கலான பிற தொழில்கள்.

24-அ. வணிக, தொழில் ஏகபோக உரிமைகள் கூட்டு நிறுவனங்கள், அறக்கட்டளை.

25 எரிவாயு, எரிவாயு அமைப்புகள்.

25-அ. தொழிற்சாலைகள்.

25-ஆ. கொதிகலன்கள்.

25-இ. செய்தித்தாள்கள், புத்தகங்கள், அச்சகங்கள்.

26. மாநிலத்திற்குள் நடைபெறும் வர்த்தகம் வணிகம்; அவற்றில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:—

(அ) யாதொரு தொழிற்சாலையின் உற்பத்தி பொருள்களும் அவைபோன்ற இறக்குமதிப் பொருள்களும்;

(ஆ) உணவுப் பொருள்கள் (சமையல் எண்ணெய் வித்துகள், எண்ணெய் உட்பட);

(இ) கால்நடைத் தீவனம் (பிண்ணாக்குகள், ஏனைய உணவுப் பொருள்கள் உட்பட);

(ஈ) கச்சாப் பருத்தி (கொட்டை நீக்கப்பட்டவை, நீக்கப்படாதவை ஆகிய இரண்டும்) பருத்தி விதைகள்;

(உ) கச்சா சணல்.

27. கீழ்க்கண்ட பொருள்களின் உற்பத்தி, வழங்கல், பங்கீடு உட்பட பொருள்களின் உற்பத்தி, வழங்கல், பங்கீடு:—

(அ) யாதொரு தொழிற்சாலையின் உற்பத்தி பொருள்களும் அவை போன்ற இறக்குமதிப் பொருள்களும்;

(ஆ) உணவுப் பொருள்கள் (சமையல் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் உட்பட);

(இ) கால்நடைத் தீவனம் (பிண்ணாக்குகள், ஏனைய உணவுப் பொருட்கள் உட்பட);

(ஈ) கச்சாப் பருத்தி (கொட்டை நீக்கப்பட்டவை, நீக்கப்படாதவை ஆகிய இரண்டும்);

28. சந்தைகளும் பொருட்காட்சிகளும்.

28-அ. வருங்காலக் கைமாற்றல் கணக்குக் குறிப்பு முறையில் பண்டங்கள் வாங்கல்—விற்றல்.

28-ஆ. வழக்கிற்குட்பட்ட தவறான வணிசங்கள்.

29. எடைகளும் அளவைகளும் (தர நிர்ணயம் நீங்கலாக).

30. வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கும் தொழிலும் வட்டிக்குப் பணம் கடன் கொடுப்போரும்; வேளாண்மைக் கடன் நிவாரணம்;

31. சத்திரங்களும் சத்திரக் காவலர்களும்.

31-அ. உணவுப் பொருள்கள், ஏனைய பொருள்கள் கலப்படம்.

32. கூட்டு நிறுவனங்கள் அமைப்பு, முறைப்படுத்தல் கலைப்பு (I-ஆம் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவை நீங்கலாக); பல்கலைக் கழகங்கள்; கூட்டு நிறுவன வர்த்தகம் அல்லாத பிற வர்த்தகம், இலக்கிய, அறிவியல், சமய, ஏனைய சங்கங்கள், கூட்டுச் சங்கங்கள்; கூட்டுறவுச் சங்கங்கள்.

33. அரங்குகளும், நாடக நிகழ்ச்சிகளும்; சினிமாக்கள்; போட்டி விளையாட்டுகள், கோரிக்கைகள், மனமகிழ் நிகழ்ச்சிகள்;

33-அ திரையிடப்படுவதற்காக திரைப்படங்களுக்கு அனுமதியளித்தல்.

33.-ஆ வானொலி-காணொலி (தொலைக் காட்சி).

34. குதிரைப் பந்தயமும் சூதாட்டமும்.

34-அ. அறக்கட்டளைகளும் அற நிறுவனங்களும்; அற, சமயக்கட்டளைகள்; சமய நிறுவனங்கள்.

34-ஆ. மாநில அரசு நடத்தும் பரிசுச் சீட்டுகள்.

35. மாநில அரசு பொறுப்பில் விடப்பட்டுள்ள பணிகள், நிலங்கள், கட்டிடங்கள்.

36. மத்திய அரசின் பயனுக்கு நீங்கலாக மற்றப்படி உடைமையைக் கையகப் படுத்தலும் வேண்டி பெறுதலும்.

37. நாடாளுமன்றம் நிறைவேற்றும் யாதொரு சட்டத்தின் விதித் துறைகளுக்குட்பட்டு இம் மாநிலத்தின் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்துதல்.

38. இம்மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருடைய சம்பளங்கள், படிகள், சட்டமன்ற மேலவை இருப்பின் அதன் மேலவைத் தலைவர், துணைத்தலைவா ஆகியோருடைய சம்பளங்கள், படிகள்.

39. சட்டப்பேரவை, அதன் உறுப்பினர்கள், குழுக்களின் அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள், காப்புரிமைகள், சட்ட மேலவை என ஒன்று இருந்தால், அதன் உறுப்பினர்கள், குழுக்களின் அதிகாரங்கள், சிறப்புரிமைகள், காப்புரிமைகள் ; சட்டமன்றக் குழுக்களின் முன்னிலையில் சாட்சியமளிக்கவோ அல்லது ஆவணத்தைக் காட்டவோ உரியவர்களை வரச் செய்தல்.

40. மாநில அமைச்சர்களுடைய சம்பளங்களும் படிகளும்.

41. மாநிலப் பொதுப் பணிகளும், மாநிலப் பொதுப்பணி ஆணையரும்.

42. மாநில அரசின் ஓய்வூதியங்கள், அதாவது இம்மாநிலம் கொடுக்கத்தக்க அல்லது இம் மாநிலத்தின் தொகு நிதியிலிருந்து கொடுக்கத்தக்க ஓய்வூதியங்கள்,

43. இம்மாநில அரசின் பொதுக்கடன்.

43-அ. இம்மாநிலக் கணக்குகளின் தணிக்கை.

44. புதையல், அரும்பொருள்.

45. வரி விதிப்பு, வரிவசூல் உட்பட நிலவரி, நிலப்பதிவேடுகளை வைத்து வருதல், வரி விதிப்பு காரியங்களுக்கான ஆய்வு, பதிவுரிமை, வருவாய் உடைமை மாற்றம்.

45-அ. விலைவாசிக் கட்டுப்பாடு.

46. வேளாண்மை வருமானம் வரிகள்.

47. வேளாண் நிலமரபுரிமைத் தீர்வைகள்.

48. வேளாண் நில எஸ்டேட் தீர்வை.

49. நிலங்கள்-கட்டிடங்கள் குறித்த வரிகள்.

50. கனிவள மேம்பாடு தொடர்பாக ஒரு சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் விதித்துள்ள யாதொரு வரையறைகளுக்குட்பட்டு கனிவள உரிமைகள் குறித்த வரிகள்.

51. இம்மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட கீழ்க்காணும் பொருள்கள் மீதான ஆயத்தீர்வை ; இந்தியாவில் யாதொரு இடத்தில் தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யபட்ட இதுபோன்ற பொருள்கள் மீது அதே வீதத்தில் அல்லது குறைந்தளவு வீதங்களில் ஈடு செய் ஆயத்தீர்வை (Countervailing duties) :—

(அ) மனித உபயோகத்திற்கான மதுவகைகள்.

(ஆ) ஓபியம், கஞ்சா, ஏனைய மயக்கமூட்டு மருந்துப் பொருட்கள் மயக்க மருந்துகள்.

52. உட்கொள்வதற்காக அதனை பயன்படுத்துவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக உள்ளூர்பகுதி ஒன்றுக்கு கொண்டுவரப்படும் பொருட்கள் மீதான வரிகள்.

53. மின் பயன் அல்லது மின் விற்பனை குறித்த வரிகள்.

54. I. பட்டியலின் 92-அ பதிவைச் சேர்ந்து விதித்துறைகளுகளுக்குட்பட்டு செய்தித்தாள்கள் நீங்கலான பொருள்களின் விற்பனை அல்லது கொள்முதல் மீதான வரிகள்.

55. செய்தித்தாள்களில் வெளியிடப்படுகிற விளம்பரங்கள், வானொலி அல்லது தொலைக்காட்சியின் மூலம் ஒலி ஒளிபரப்பப்படுகிற விளம்பரங்கள் நீங்கலாக ஏனைய விளம்பரங்கள் மீதான வரிகள்.

56. சாலையின் மூலம் ஏற்றிச்செல்லப்படுகிற பொருள்கள் பயணிகள் அல்லது உள்நாட்டு நீர் நிலைகளின் மூலம் ஏற்றிச்செல்லப்படுகிற பொருள்கள் பயணிகள் மீதான வரிகள்.

57. டிராம் வண்டிகள் உட்பட சாலைகளில் பயன்படுத்தப் பொருத்தமான விசை வண்டிகளாக இருந்தாலும் சரி அல்லது விசை அல்லாத வண்டிகளாக இருந்தாலும் சரி—வாகனங்கள் மீதான வரிகள்.

57-அ. அத்தகைய வாகனங்களுக்கு வரிகள் விதிக்கப்படவுள்ள கோபாட்டுகள் உட்பட விசை வாகனங்கள் மீதான வரிகள்.

58. கால்நடைகள், படகுகள் மீதான வரிகள்.

59. கருவிகள்.

60. தொழில்கள், வர்த்தகங்கள், வாழ்க்கைத் தொழில்கள், வேலை வாய்ப்புகள் குறித்த வரிகள்.

60-அ. சட்ட, மருத்துவ, ஏனைய தொழில்கள்.

61. தலைவீத வரி.

61-அ. ஊக சந்தை மீதான வரிகள்.

62. கேளிக்கை பொழுதுபோக்கு, பந்தயம், சூதாட்டம் ஆகியவை குறித்த வரிகள் உட்பட ஆடம்பர வசதி குறித்த வரிகள்.

63. முத்திரைத்தாள் தீர்வை வீதங்களைப் பொறுத்தவரையில், பட்டியலின் விதித்துறைகளின் குறிப்பிட்டுள்ளவை நீங்கலாக, ஏனைய ஆவணங்கள் தொடர்பான முத்திரைத்தாள் தீர்வைக் கட்டண வீதங்கள்.

63 அ. மாநில அமைச்சர் பதவியிலிருக்கும் போது அல்லது பதவியைவிட்டு விலகிய பின்னர் அவரது நடத்தை குறித்து விசாரணைக் கமிஷன் அமைப்பது உட்பட இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொடர்பான விவரங்களும், விசாரணைகளும்.

64. இந்தப் பட்டியலின் யாதொரு விவகாரங்களைப் பொறுத்தவரையில், சட்டத்திற்கெதிரான குற்றங்கள்.

65. இந்த பட்டியலில் கண்டுள்ள யாதொரு விவகாரங்களைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றம் நீங்கலாக நீதிமன்றங்கள் அனைத்தின் ஆட்சி வரம்பும் அதிகாரங்களும்.

66. இந்தப் பட்டியலிலுள்ள யாதொரு விவகாரங்களைப் பொறுத்தவரையில் கட்டணங்கள்; ஆனால் யாதொரு நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்படும் கட்டணங்கள் இதில் அடங்கா.

67. அத்தகைய எந்தப் பட்டியல்களிலும் குறிப்பிடப்படாத யாதொரு வரி உட்பட, பட்டியல்-I அல்லது III-ல் கொடுக்கப்படாத ஏனைய யாதொரு விவகாரம்.

III. பட்டியல்—பொது அதிகாரப் பட்டியல்.

1. குற்றவியல் சட்டம்—இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் இந்தியக் குற்றவியல் நடைமுறை விதிக் கோவையில் சேர்க்கப்பட்ட அனைத்து விவகாரங்கள் உட்படவும், ஆனால் I—பட்டியல் அல்லது II பட்டியல் குறிப்பிடப்பட்ட ஒன்றைப் பொறுத்தவரையில் செய்த சட்ட விரோதமான குற்றங்கள் நீங்கலாகவும், சிவில் அதிகாரத்திற்குத் துணையாக மத்திய அரசின் கடற்படைகள், இராணுவப் படைகள் அல்லது விமானப் படைகளையாவது மற்றெந்த ஆயுதப்படைகளையாவது உபயோகித்தல் நீங்கலாகவும்.

2. குற்றவியல் நடைமுறை—இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த அனைத்து விவகாரங்களும் உட்பட.

3. சமுதாயத்திற்கு அவசியமான வழக்கங்கள், பணிகள் ஆகியவற்றைப் பராமரித்தல் தொடர்பான காரணங்களுக்காக தடுப்புக் காவல்; அத்தகைய தடுப்புக் காவலுக்கு உட்பட்டவர்கள்.

4. நீக்கப்பட்டது.

5. நீக்கப்பட்டது.

6. விவசாய நிலம் அல்லாத ஏனைய சொத்துக்களை மாற்றுதல்; பத்திரங்கள், ஆவணங்களைப் பதிவு செய்தல்.

7. ஒப்பந்தங்கள்—கூட்டுப்பங்கு, ஏஜென்சி, பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தங்கள், ஏனைய தனிவகை ஒப்பந்தங்கள் உட்படவும், ஆனால், வேளாண் நிலம் தொடர்பான ஒப்பந்தங்கள் நீங்கலாகவும்.

8. நீக்கப்பட்டது.

8-அ. வங்கி அலுவல்.

9. வியாபார முறிவும், நொடிப்பும்.

10. நீக்கப்பட்டது.

11. நீக்கப்பட்டது.

11-அ நீக்கப்பட்டது.

12. சாட்சியங்கள், பிரமாணங்கள், சட்டங்கள், பொதுச் சட்டங்கள், பதிவேடுகள், நீதித் துறை நடவடிக்கைகள ஆகியவற்றை அங்கீகரித்தல்.

13. சிவில் வழக்கு முறை—இந்திய அரசியலமைப்பின் தொடக்கத்தில் இருந்த சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட அனைத்தும் உட்பட ; காலவரன்முறை இணக்க ஏற்பாடு.

14. நீக்கப்பட்டது.

15. நீக்கப்பட்டது.

16. நீக்கப்பட்டது.

17. நீக்கப்பட்டது.

17-அ நீக்கப்பட்டது.

17-ஆ. நீக்கப்பட்டது.

18. நீக்கப்பட்டது.

19. நீக்கப்பட்டது.

20. பொருளாதார—சமூகத் திட்டமைப்பு.

20-அ. மக்கட்தொகை கட்டுப்பாடும் குடும்ப நலத் திட்டமும்.

21. நீக்கப்பட்டது.

22. நீக்கப்பட்டது.

23. நீக்கப்பட்டது.

24. நீக்கப்பட்டது.

24-அ. எண்ணெய் ஊற்றுக்களையும் வளஎண்ணெய் வாயில்களையும் ஒழுங்குப்படுத்துதலும் மேம்படுத்துதலும், பெட்ரோல், பெட்ரோல் பொருட்கள் எளிதில் தீ பிடிக்கக்கூடிய அபாயமானவை என்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் அறிவிக்கக்கூடிய ஏனைய திரவ-திடப் பொருட்கள்.

24-ஆ. பொது நலனைக் கருதி சுரங்கங்களை ஒழுங்குபடுத்துவது கனிவளத்தை மேம்படுத்துவது ஆகியவற்றை எந்த அளவிற்கு மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தால் உகந்த

தாக இருக்குமென்று நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் அறிவிக்கிறதோ அந்த அளவிற்கு சுரங்கங் களை ஒழுங்கு படுத்துவதும், கனிவளத்தை மேம் படுத்தலும்.

24-இ. சுரங்கங்களிலும் எண்ணெய் ஊற்றுக் களிலும் தொழிலாளர் நலனையும், பாது காப்பையும் ஒழுங்குபடுத்துதல்.

25. நீக்கப்பட்டது.

26. நீக்கப்பட்டது.

27. சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளி யேறிய மக்களுக்கு நிவாரணமும், மறுவாழ்வும் அளித்தல்.

28. நீக்கப்பட்டது.

29. மனிதர்களையும் விலங்குகளையும், தாவரங் களையும் பாதிக்கக்கூடிய தொத்துநோய்கள் ஒட்டுநோய்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பரவுவதைத் தடுத்தல்.

30. நீக்கப்பட்டது.

31. நீக்கப்பட்டது.

32. நீக்கப்பட்டது.

33. நீக்கப்பட்டது.

33-அ. நீக்கப்பட்டது.

34. நீக்கப்பட்டது.

35. நீக்கப்பட்டது.

36. நீக்கப்பட்டது.

37. நீக்கப்பட்டது.

38. மின்சாரம்.

39. நீக்கப்பட்டது.

40. நீக்கப்பட்டது.

41. அகதிச் சொத்து என்று சட்டத்தினால் அறிவிக்கப்பட்ட சொத்துக்களைப் (வேளாண்மை நிலம் உட்பட) பாதுகாத்தல், நிர்வகித்தல், ஒருவகை செய்தல்.

42. நீக்கப்பட்டது.

43. வரிகள், ஏனைய பொது கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் கோரிக்கை தொகைகளை ஒரு மாநிலத்தில் வசூலித்தல் ; இதில் அந்த மாநிலத் திற்கு வெளியே எழும் நிலவரிப் பாக்கிகளுக்கு அத்தகைய பாக்கிகளைப் போல் வசூலிக்கத்தக்க தொகைகளும் அடங்கும்.

44. நீதித்துறை முத்திரைத்தாள்கள் வகையில் வசூலிக்கப்படும் தீர்வைகள் அல்லது கட்டணங்கள் நீங்கலாக முத்திரைத்தாள் தீர்வைகள். இதில் முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள் அடங்காது.

45. III-வது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக நடத்தப்படும் விசாரணைகள், புள்ளிவிவரங்கள். ஆனால் இதில், மாநில அரசின் யாதொரு அமைச்சர் பதவியிலிருக்கும்போது அல்லது பதவி விலகியபோது நடந்துகொண்டது தொடர்பான விசாரணைகள், புள்ளிவிவரங்கள் அடங்காது.

46. இப்பட்டியலில் கண்டுள்ள ஒரு பொருள் தொடர்பாக, உச்ச நீதி மன்றம் நீங்கலாக அனைத்து நீதி மன்றங்களின் அதிகார வரம்பும் அதிகாரமும்.

47. இப்பட்டியலில் கண்டுள்ள ஒரு பொருள் தொடர்பான கட்டணங்கள். ஆனால் இதில் ஒரு நீதி மன்றத்தில் வாங்கப்படும் கட்டணங்கள் அடங்கா.

பாகம் III. ஆளுநர் பணி.

குடியரசுத் தலைவர் ஆளுநரை நியமனம் செய்வது என்பது கடந்த காலத்தில் இருந்து வந்த ஒரு மரபாகும் ; எனவே, ஆளுநர் பதவியை எடுத்து விடலாம் என்பதே நம்முடைய அரசின் முதன்மையான கருத்தாகும். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான் எப்போதும் செயல் படவேண்டும். ஆளுநருக்கென்று தனியாக விருப்ப உரிமை எதுவும் இருக்கக்கூடாது என்கிற வகையில், சட்டபூர்வமாக தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளதால் ஆளுநர் பதவி என்பது தேவையற்ற ஒரு பதவியாகும். சில நேர்வுகளில் அமைச்சரவை சட்ட மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருந்த போதிலும் ஆளுநர்கள் தங்களின் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி அமைச்சரவையைக் கலைக்கவும் தயங்குவதில்லை. இவ்வாறு அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது அடிக்கடி நிகழ்வதைத் தவிர்க்க, இந்த ஆளுநர் பதவியை நீக்கிவிடவேண்டும். நிருவாக அதிகாரங் கள் அனைத்தும் முதலமைச்சருக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆளுநர் பதவியை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமாயின் சட்டமன்றத்தின் முழு ஆதரவைப் பெற்றுள்ள முதலமைச்சர், குடியரசுத் தலை வருக்கு அனுப்பும் நால்வர் கொண்ட பட்டிய லிருந்து ஒருவரை ஆளுநராக குடியரசுத் தலைவர் தெரிந்தெடுக்கலாம். அத்தகைய நேர்வில் யாதொரு மாநிலத்தில் அதன் ஆளுநர் தொடர்ந்து பதவியில் இருப்பது அம்மாநிலத்தின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று அம்மாநில சட்ட மன்றம் முடிவு செய்யுமாயின், அது தொடர்பாக அச்சட்ட மன்றம் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றலாம். அத்தீர்மானத்தின் நகல் கிடைக்கப் பெற்றவுடன் குடியரசுத் தலைவர் அந்த ஆளுநரை நீக்க வேண்டும்.

ஆளுநர் பதவி தொடர்ந்திருக்க வேண்டுமென முடிவு செய்யப்படுமாயின், பின்வரும் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

எது தொடர்பாகவும் ஆளுநருக்கு விருப்ப உரிமை இருக்கக்கூடாது. ஆளுநர் அனைத்து விவகாரங்களையும் முதலமைச்சர் அல்லது அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டே செயல்பட வேண்டும்.

மாநிலச் சட்டமன்றத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றவர் என்றவகையில், ஆளுநர் அவர்களின் பணி நிலையான அரசை அமைப்பதேயொழிய அமைச்சரவை அமைப்பதில்லை.

ஆளுநர், சட்டப்பேரவையை அல்லது சட்டமன்றங்களைக் கூட்டும்போது அல்லது ஒத்திவைக்கும்போது மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கிணங்கவே செயல்படவேண்டும்.

சட்டப்பேரவையைக் கலைக்கும்போதும் மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கிணங்கவே செயல்பட வேண்டும்.

முதலமைச்சர் அனுப்பும் பெயர்ப் பட்டியலிலிருந்து ஆளுநர் அவர்களை நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்கப்படாவிட்டால், ஆளுநர் அவர்களை மாநில அமைச்சரவைக்குமிடையே சுமுகமான உறவு இருக்கும்பொருட்டு ஆளுநர் அவர்களை நியமிப்பதற்கு முன்னர் எப்போதும் மாநில அமைச்சரவை கலந்தாலோசிக்கப்படவேண்டும். முதலமைச்சரின் இசைவு பெறப்பட வேண்டும். ஆளுநர் அவர்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கு வழிகாட்டிக் குறிப்புகள் அளிப்பது தகுந்ததல்ல. ஏனெனில் ஆளுநர் அவர்களின் பதவிக்கு இது இழுக்கு கற்பிப்பதாகும். ஆளுநர் அவர்கள் மத்திய அரசின் ஏஜெண்டுமல்ல; மாநிலத்தின் அலங்காரத் தலைவரும் அல்ல. ஆனால் அவர் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே இணைப்புப்பாலமாக விளங்குகிறார்.

நாடாளுமன்ற மக்களாட்சி முறையின் கருத்தையொட்டி, முதலமைச்சர் எம்முறையில் நியமிக்கப்படவேண்டும் என்பதை விரிவாகக் குறிப்பிட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 164ஆம் பிரிவில் பகுதி (1)—க்குப் பின்னர் திட்டவட்டமான விதித்துறை சேர்க்கப்பட வேண்டும். புதிய பகுதி (1A) பின் வருமாறு இருக்க வேண்டும்: —

(1A) (a) ஆளுநா அவர்கள், சட்டப் பேரவையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும்.

(b) சட்டப் பேரவையில் எந்த ஆட்சியும் பெரும்பான்மையாக வரவில்லை என்று ஆளுநர் அவர்களுக்குத் தெரியவந்தால், அவர் முதலமைச்சராக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக சட்டப் பேரவையைத் தானாகவே கூட்டலாம்; அக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவரை முதலமைச்சராக நியமிக்கவேண்டும்.

(c) ஓர் அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குமாறு முதலமைச்சர் ஆளுநர் அவர்களுக்கு அளிக்கும் ஆலோசனையை ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(d) முதலமைச்சர் சட்டப் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்று ஆளுநர் அவர்களுக்கு தோன்றும்போது; அவர் உடனடியாகவும், தாமாகவும் முதலமைச்சர் சட்டமன்ற பேரவையில் நம்பிக்கை வாக்குப் பெற இயலும் வகையில் சட்டப் பேரவையைக் கூட்ட வேண்டும்.

(e) (i) முதலமைச்சர் நம்பிக்கைத் தீர்மானம் பெறத் தவறினால் அல்லது தேவையான வாக்குகளைப் பெறத் தவறினால் முதலமைச்சர் உடனடியாக பதவியிலிருந்து விலக வேண்டும். அவ்வாறு அவர் பதவியிலிருந்து விலகும்போது சட்டப் பேரவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஏதேனும் இருப்பின் ஆளுநர் அவர்கள் தன் விருப்பப்படி அக்கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிக்கவேண்டும்.

(ii) பாரா (i)—ல் குறிப்பிட்டபடி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகத்தவறினால் அல்லது சட்டப் பேரவையில் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஏதும் இல்லாவிட்டால் ஆளுநர் அவர்கள் தன் விருப்பப்படி உடனடியாக சட்டப்பேரவையைக் கூட்ட வேண்டும். சட்டப் பேரவை புதிய முதலமைச்சராக ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆளுநர் அவர்கள் அவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும். அல்லது சட்டப்பேரவையைக் கலைப்பதற்கு சட்டப்பேரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றலாம். இது ஆளுநர் அவர்களைக் கட்டுப்படுத்தும்.

(iii) (d) உட்பகுதியின்கீழ் நம்பிக்கைத் தீர்மானம் பெறுவதற்குரிய நாளிலிருந்து தொடங்கி ஒரு மாத கால அளவிற்குள் பாரா (ii)-ல் குறிப்பிட்டபடி புதிய முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க அல்லது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் தவறினால் மேற்சொன்ன ஒரு மாத கால அளவு முடிவடைவதன்பேரில் சட்டப் பேரவைக் கலைக்கப்பட்டதாக கருதப்படும்.

(f) (e) உட்பகுதியின்கீழ் சட்டப் பேரவை கலைக்கப்பட்டதாக கருதப்படும் போதும் சட்டப் பேரவை தொடங்கப்பட்ட நாளிலிருந்து புதிய சட்டப் பேரவை புதிய முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் நாள் முடியும் வரையுள்ள காலத்தில் (e) உட்பகுதியின்கீழ் சட்டப்பேரவை கலைக்கப்பட்டதாக கருதப்படும் நாளன்று பதவியிலிருந்த முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் காபந்து அமைச்சர் அவையாக தொடர்ந்து பதவியிலிருப்பர்.

எந்த ஒருவரும் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலத்திற்கு/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிக்கு ஆளுநர் அவர்களாக இருக்கக்கூடாது.

153ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை விட்டு விடப்படவேண்டும். மேற்சொன்ன வரம்பு நிபந்தனை நீக்கப்பட்டதன் விளைவாக 158ஆம் பிரிவின் 3 (A) பகுதி விட்டுவிடப்படவேண்டும்.

ஆளுநர் அவர்கள் முதலமைச்சரின் இசைவுடன் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும். இது இயலும் வகையில் 155ஆம் பிரிவு தக்கபடி மாற்றியமைக்கப்படவேண்டும்.

ஆளுநர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில பணிகளை குடியரசுத் தலைவரின் ஏஜெண்டாக ஆற்ற வேண்டும். ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 160ஆம் பிரிவின் வாசகம் ஆளுநர் அவர்களின் பிற பணிகளையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது இப்பிரிவை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் ஆளுநர் அவர்கள் தன் விருப்பப்படிச் செய்யவேண்டிய அலுவல்களையும் அல்லது அவற்றுள் எதையும் தவிர மற்றைய அலுவல்களைச் செய்வதில் அமைச்சரவை அவருக்கு உதவி புரியவும், ஆலோசனை அளிக்கவும் வேண்டும் என்று 163(1) பிரிவு வகை செய்கிறது. இப்பிரிவு 74(1) பிரிவின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். 163(1) பிரிவு பின்வருமாறு மாற்றியமைக்கப் படலாம்:—

'' ஆளுநர் அவர்களுக்கு உதவி செய்யவும் ஆலோசனை அளிக்கவும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை இருக்க வேண்டும். ஆளுநர் அவர்கள் தன் அலுவல்களைப் புரிகையில் அந்த ஆலோசனைக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால், 239(2), 371, 371-A ஆகிய பிரிவுகளின்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அலுவல்களைப் பொறுத்தமட்டில், ஆளுநர் அவர்கள் தன் விருப்பப்படி தன் அலுவல்களைச் செய்ய வேண்டும் ''.

மாநிலத்தில் அமைச்சரவை அரசு முறை திறம்பட செயல்படுவதற்கு 163 (2) பிரிவு உதவுவதாக இல்லை. எனவே இப்பிரிவு விட்டு விடப்படலாம்.

பகுதி IV. நிருவாக உறவுகள்.

மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டளைகள் பிறப்பித்தல்—மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி.

256, 257, 365, 356 ஆகிய பிரிவுகளின்கீழ் மத்திய அரசு நிருவாக அதிகாரத்தைச் செலுத்த இயலுமாதலால், இப்பிரிவுகளைச் செயல்படுத்துவதனால் மாநிலங்களுக்கு ஆக்க பூர்வமான பயனும் கிட்டலாம்; பாதகமான பயனும் கிடைக்கலாம். மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் மாநிலங்களின் அதிகாரங்களை அடக்கி, மாநிலத்தின் சுயாட்சியை அழித்துவிடும் அளவுக்கு இப்பிரிவுகளின் தன்மை இருப்பதால் இப்பிரிவுகள் விட்டு விடப்படலாம். ஏனெனில் கடந்த முப்பதாண்டுகளில் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்திய அனுபவத்திலிருந்து நமக்குத் தெரிய வந்தது என்னவென்றால் இத்தகைய அதிகாரங்கள் அதிக அளவில் அல்லது தவறான வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதும், மாநில சுயாட்சி என்ற கோட்பாடு இதனால் தவிடுபொடியாகி விட்டது என்பதுமேயாகும். 357, 360 ஆகிய பிரிவுகள் நீக்கப்படலாம்.

மாநிலங்கள், பொதுப் பட்டியல் தொடர்பான பொருள்களைக் கவனிக்கும் மத்திய அமைப்புகள்.

மாநிலங்களின் திட்டவட்டமான இசைவு இல்லாமல், மாநிலப் பட்டியலில் மாநில அரசு கவனிக்கும் பொருள்கள் தொடர்பாக வேளாண்மை விலைகுழு, மத்திய நீர்க்குழு, மத்திய மின் அதிகார மன்றம் போன்ற மத்திய அமைப்புகளை ஏற்படுத்த இயலாது.

பன்மாநிலங்களுக்கிடையேயான நீர்த்தகராறுகள்.

பன் மாநிலங்களுக்கிடையேயான நீர்த்தகராறு தொடர்பான எல்லா தகராறுகளும், உச்ச நீதிமன்றம் அமைத்த நிலையான நடுவர் மன்றத்திற்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

அனைத்திந்தியப் பணிகள்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி உட்பட அனைத்திந்தியப் பணிகள் இருக்க வேண்டிய அவசியமில்லை. (i) மாநில அரசின் நோக்கத்திற்காக மாநில அரசுப் பணி, (ii) மத்திய அரசின் நோக்கத்திற்காக மத்திய அரசுப் பணி என்ற இரு பணிகள் இருக்க வேண்டும். மத்திய பணிகளில், மாநிலங்களில் அமைந்துள்ள மத்திய அரசு அலுவலகங்களில் மாநில மக்களுக்கு உரிய பிரதி நிதித்துவம் அளிக்கப்படவேண்டும்.

மத்திய சேம காவல் படை.

மாநில அரசு வேண்டுகோளுக்கிணங்கவும், அதன் விருப்பத்தின் பேரிலும் மட்டுமே மத்திய சேமக் காவல் படையை சம்பந்தப்பட்ட அந்த மாநிலத் திற்கு அனுப்ப வேண்டும்.

மண்டலக் குழுக்கள்.

1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மண்டலக் குழுக்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் நலனுக் கிணங்க, மேற்சொன்ன சட்டத்தின் நோக்கங் களை எய்துவதற்கு ஏற்றவகையில் செயற்படுத்தப் படவேண்டும்.

பன்மாநிலக் குழு.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பன் மாநிலக்குழு அளிக்கும் ஆலோசனைக்கும், அதன் பரிந்துரை களுக்கும், அதனால் எடுக்கப்படும் தீர்மானங்கள் எவற்றிற்கும் பொதுவாக நடைமுறையில் மதிப் பளிக்கப்படுவதில்லை என்பதோடு எந்த ஒரு தரப் பினரையும் அவை கட்டுப்படுத்துவதாகவுமில்லை. எனவே, பன் மாநிலக் குழுவை ஏற்படுத்துவதற் கான, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263 ஆம் பிரிவு முழுவதும் அறவே நீக்கப்படலாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 339 (2), 344 (6) 350-Aஆம் பிரிவுகளின்கீழ் கட்டளைகள் வழங்குதல்

மேற்சொன்ன பிரிவுகள் நீக்கப்பட வேண்டும்.

பகுதி V. நிதித் தொடர்புகள்.

நிதிக் குழு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 280 ஆம் பிரிவின்கீழ் நிதிக்குழு ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் வகையில், அக்குழு மாற்றியமைக்கப்பட வேண் டும். நிதிக்குழு அளிக்கும் பரிந்துரைகள், மத்திய அரசு மாநில அரசுகள் ஆகிய அனைத்தையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். இந்த வகையில் திருத்தங்கள் அரசியலமைப்புச் சட்டத் தில் செய்யப்படவேண்டும்.

இந்த நிதிக்குழு, திட்டஞ்சாரா வருவாய்ப் பற்றாக்குறை பற்றி மட்டுமே பரிசீலிக்கக் கூடாது; ஆனால், நிதி ஏற்றத் தாழ்வுகள் காரணமாக ஏற் படக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாகவும் ஒருங் கிணைந்த கருத்தைத் தெரிவிக்க வேண்டும். மாநிலங்கள், அதிக வருவாய் பெறுபவை, நடுத்தர வருவாய் பெறுபவை, வறிய நிலையிலுள்ளவை என வகைப்படுத்தப்பட வேண்டும். நடுத்தர வரு வாய் பெறும் வகையைச் சேர்ந்த தமிழ்நாடு மாநிலத்திற்கு கூடுதல் மானிய உதவித் தொகை ஒதுக்கப்படவேண்டும். நடுத்தர வருவாய் பெறும் மாநிலங்களில் நிலவும் நபர் வாரி வருவாய் உபரித் தொகை, அதிக வருவாய் பெறும் மாநிலங்களில் நிலவும் நபர் வாரி வருவாயுடன் ஒப்பிடத் தக்கவை ; மேலும், ஏறக்குறைய அதிக வருவாய் பெறும் மாநிலங்களுடன் இணையாகவும் ஒப்பிடக் கூடியவையாகும். மாநிலங்களின் அனைத்து நிதியும் நிதிக்குழுவின் மூலமாகவே பகிர்ந் தளிக்கப்படவேண்டும்.

ஆயத்தீர்வை

மத்திய அரசின் விருப்பத்திற்கிணங்க, பகிர்ந் தளிக்கப்படக்கூடிய அனைத்து வகையான ஆயத் தீர்வைகள், செஸ் வரிகள் ஆகியவை அவை சிறப் பானவை, முறையானவை அல்லது வேறு வகை யானவையாக இருந்தாலும் அவை மத்திய-மாநில அரசுகளுக்கிடையே கண்டிப்பாகப் பகிர்ந்தளிக்கப் பட வேண்டும்.

கூடுதல் ஆயத் தீர்வை மாநில அரசுகளின் இசைவு பெற்றே தொடர்ந்து விதிக்கலாம்.

ஆயத்தீர்வைகள், வரிகள் விதித்தல், அவற்றை வசூலித்தல்.

ஆயத் தீர்வைகள் விதித்து, வசூலித்தல் தொடர் பான அதிகாரம் இந்திய அரசியலமைப்புச் சட்டத் தின் 268ஆம் பிரிவில் மாநில அரசுகளின் நேரடி அதிகாரத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும். வேளாண்மை நிலம் நீங்கலாக ஏனைய சொத் துக்களுக்குரிய எஸ்டேட்டு தீர்வைகள் வேளாண் நிலங்கள் நீங்கலான ஏனைய சொத்துக்கள் பொறுத்தமட்டிலுமான சொத்து வரிகள் ஆகியவை தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத் தின் 269ஆம் பிரிவின்படி மாநில அரசுகளுக்கு அதி காரம் வழங்கலாம். இதைப்போலவே, இர யில்வே, கப்பல், விமானம் மூலம் அனுப்பப் படும் சரக்குகள், அல்லது பயணிகள் மூலம் எடுத்துச் செல்லப்படும் சரக்குகள் ஆகியவற்றிற் கான இறுதிமுனை வரி, அச்சுக்காகிதம் விற் பனை செய்தல் அல்லது வாங்குதல், விளம்பரம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி, ஆகியவை தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தின் 268 ஆம் பிரிவு, மாநில அரசுகளுக்கு அதிகார மளிக்கும் வகையில் திருத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 269ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல வரிகள் விதிக் கப்படுவதில்லை. எனவே, மேற்சொன்ன வகை யிலான குறிப்பிட்ட சில வரிகள் விதிக்கப்படா மலுள்ளதற்குப் பதிலாக, மாநில அரசுகளுக்கு கணிசமான அளவுத் தொகையை மத்திய அரசு அளிக்க வேண்டும். சம்பந்தப் பட்ட மாநிலத் திற்கென வழங்கப்படுவதற்காக வருமான வரியில் ஒரு பகுதித் தொகை வரையறுக்கப்பட்டதைப்

போன்றே கூட்டுநிறுவன வரிகள், வருமான வரிகள் மீதான மேல்வரி ஆகியவற்றின் ஒரு பகுதியும் பகிர்ந்தளிக்கப்படுபவையாக இருக்க வேண்டும்.

மானியங்கள்

சார்பற்ற முறையிலும் பாரபட்சமின்றியும் செயற்படும் நிதிக்குழு அல்லது இதைப்போன்ற சட்டப்படிக்கான ஓர் அமைப்பு, செய்யக்கூடிய பரிந்துரையின்படி, திட்டம் சார்ந்த, திட்டம் சாராத செலவுகளுக்கான மானியத்தொகையை மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும்.

மாநில அரசுகளின் கடனும், கடனளவும்

மாநில அரசுகளின் கடனளவு தொடர்பான பிரச்சினைகள் அனைத்தையும் குறித்து பரிசீலிப்பதற்கென வல்லுநர்கள் குழு ஒன்றை அமைக்கலாம்.

நிவாரண நிதி

இயற்கைச் சீற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய துயரைத் துடைப்பதற்காக, ஒவ்வொரு மாநிலத்திற்காகவும், நிவாரண நிதி ஒன்று இருக்க வேண்டும். மேற் சொன்ன நிதி, நிவார ஏற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடன்கள்

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகையை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பது, தற்போது, கடந்த ஆண்டைவிட 10 சத வீதமளவிற்கு எதேச்சதிகார முறையில் அதிகரிக்கப் பட்டுள்ளது, எனவே, பொது மக்களிடமிருந்து பெறும் கடன் தொகையைச் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கான நியாயமான, கோட்பாடு, வகுக்கப்படவேண்டும். மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் 280 (3) (c) ஆம் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பயன்படுத்த வேண்டும்.

பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகையை பங்கீடு செய்வது தொடர்பாக உரிய கோட்பாடை வகுப்பதற்கான கருத்தை நிதிக்குழு தெரிவிக்க வேண்டும். நிதிக்குழு தெரிவிக்கும் தீர்ப்பின்படி மத்திய, மாநில அரசுகள் நடந்துகொள்ள வேண்டும். இது செயற்படுத்தப் படுவதை, ரிசர்வ் வங்கி தொடர்ந்து கவனித்து வரலாம். இப் பணியை நிறைவேற்றுவதற்காக தனியான கடன் குழு எதுவும் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. பல அமைப்புகள் ஏற்படுத்தப்படுமானால், முரண்பட்டுச் செயற்படும் நிலை ஏற்படலாம்.

பகுதி VI—பொருளாதார சமூக திட்டமிடும் பணி திட்டக் குழுவும் தேசிய வளர்ச்சிக் குழுவும்.

திட்டமிடுதல் தொடர்பாக, பொறுப்பு வகித்து வரும் இருபெரும் அமைப்புக்களான, திட்டக் குழுவும் தேசிய வளர்ச்சிக் குழுவும், அரசியலமைப்புச் சட்டத்தின் 280 ஆம் பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்டு, செயற்படும் நிதித் குழுவைப் போலன்றி, பரிந்துரை செய்யும் அமைப்புக்களாகவே தற்போது செயற்பட்டுவருகின்றன. எனவே, திட்டமிடும் அமைப்புகளில், பின்வரும் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் :—

(1) மத்தியத் திட்டக்குழு ஒன்றை, ஏற்படுத்த நாடாளுமன்றம் சட்டமியற்ற வேண்டும். அக்குழுவின் அமைப்பு, அலுவல்கள், அதிகாரங்கள் ஆகியவற்றை அது தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காக கிடைக்கக்கூடிய நிதிவாயில்களை அக் குழு மதிப்பிட வேண்டும்.

(2) மாநிலத்திட்டக்குழு ஒன்றை ஏற்படுத்த, மாநிலச் சட்டமன்றம் தனியே சட்டமியற்ற வேண்டும். மாநிலங்கள் தொடர்பான விவகாரங்களைப் பொறுத்த வரையில் நிதி ஆதாரங்கள், முன்னுரிமைகள் ஆகியவற்றைக் குறித்து இக் குழு கருத்துத்தெரிவிக்கும்.

(3) மத்தியக் குழுவும் மாநிலக் குழுவும் தயாரிக்கும் திட்டப் பணிகள், தேசிய வளர்ச்சிக் குழுவிடம் பரிசீலனைக்காக அனுப்பப்பட வேண்டும்.

தலைசிறந்த பொருளாதார நிபுணர்கள், அறிவியலறிஞர்கள், நிருவாக வல்லுநர்கள், சமூகவியலாளர்கள், பொறியாளர்கள் அடங்கிய தேசிய வளர்ச்சி மன்றம் ஒன்றினை தேசிய உற்பத்திக் குழு நியமிக்க வேண்டும். இக் குழுவானது குறித்த கால அளவிற்குள் தனது பயன்மிக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும். மேலும் மத்திய, மாநில வாரியங்கள் கருத்துரைத்துள்ள திட்டங்கள் சரியாகப் பொருத்தமுடையனவாயிருக்குமாறு செய்யப்படவேண்டுமென்று இந்த ஆலோசனைக்குழு பரிந்துரை செய்யலாம். இதன் மூலம் மாநில அரசின் முன்னுரிமைத் திட்டங்களை புறக்கணிக்காமல் அர்த்தமுள்ள வகையில் திட்டமிட இயலும்.

எனினும், திட்டக்குழு தொடர்ந்து செயலிட வேண்டுமெனில் அது தேசிய வளர்ச்சி மன்றத்தின் கீழ் ஒரு தன்னாட்சி உரிமைபெற்ற அமைப்பாக அது இருக்க வேண்டும். திட்டக்குழுவானது மாநில அளவில் திட்டமிடுவதை மேற்பார்வையிடுவதாகவும், தேசிய அளவில் முடிவுகள் மேற்கொள்ளும் செயல்முறையினையும் கொண்டிருக்கக்கூடாது. இது ஆலோசனை அமைப்பாகச் செயலிடுவதுதான் மிகுந்த நன்மைபயக்கும்.

இறுதி முடிவெடுக்கும் உரிமையானது தேசிய வளர்ச்சி மன்றம், மத்திய, மாநில அரசுகளிடமே இருக்க வேண்டும்.

பகுதி VII—பல்வகை.

தொழில்கள்.

முதல் பட்டியலின் 52ஆம் பதிவின்படி "தொழில்கள்" என்பது பொது நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் கட்டுப் பாட்டில் உள்ள ஒன்று என கூட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தினால் அறிவிக்கப்பட் டுள்ளது. இது நாடாளுமறத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். இறுதி பதிவினைக் கருத்தில் கொண்டால், மேற்குறிப் பிட்ட 52 ஆம் பதிவின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தின்கீழ் வரும் தொழில் களின்மீது மாநிலச் சட்டமன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது. எனவே, அந்த பதிவிலேயே தொழில் களைக் குறிப்பிடும் வகையில் 52ஆம் பதிவிற்குப் பதிலாக புதிய பதிவு ஒன்றினை அமைக்க வேண் டும். இது தொடர்பாக, திருத்தப்பட்ட மத்திய அரசுப் பட்டியலின் 52ஆம் பதிவினைக் காண்க : எனினும், நாடாளுமன்றத்திற்கு சட்டமியற்ற அதிகாரம் உள்ள தொழில்களைப் பொருத்தமட் டிலும்கூட, இந்திய அரசு தொழில் கொள்கையை வரையும்போது மாநில அரசினையும் முன்னதாகக் கலந்தாலோசிப்பது விரும்பத்தக்கதாகும். விண்ணப்பங்களின் மீது தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க இயலும் வகையில் மாநில அரசுகளும் உரிமம் வழங்கும் உட்குழுவில் இடம் பெற வேண்டும். மாநிலங்களின் பரிந்துரைகளின் அடிப் படையில் இறுதி முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாநிலத்திற்குள் வேறோரிடத்திற்கு உற்பத்தி நடவடிக்கைகளை மாற்றுவதைப் பொறுத்த மட்டில், இந்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என்பது கைவிடப்பட வேண்டும். இதற் கான அனுமதி வழங்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கும் அதிகாரத்தினை மீண்டும், வழங்கி திருத்திய ஆணை ஒன்றினை இந்திய அரசு பிறப்பிக்க வேண்டும்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, ஐ.எப்.சி.ஐ. போன்ற மத்திய நிதி நிறுவனங்களில் பல்வேறு மாநில அரசுகள் சுற்றுமுறை அடிப்படையில் பிரதி நிதித்துவம் பெறுவது குறித்து பரிசீலிக்க வேண்டும் வட்டார வரியங்கள் அமைக்கப்பட்டு அந்த வாரியங்களில் வட்டாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

வர்த்தகம்—வணிகம்.

மத்திய, மாநில அரசு களுக்கிடையே சுமுக மான வர்த்தக-வாணிப உறவுகளை மேம்படுத்தும் வகையில் பின்வரும் நோக்கங்களுக்காக அதிகார மன்றம் ஒன்றினை அமைக்க வேண்டும் :—

(அ) மாநிலங்களுக்கிடையேயான வர்த்தக -வணிகத்தின் மீது விதித்துள்ள கட்டுப் பாடுகள் மீதான அறிக்கையினை ஆய்வு செய்து அவ்வப்போது அறிக்கை வெளியிடுதல்,

(ஆ) வர்த்தக-வணிக வசதிகளை பெருக்கும் நோக்குடன் கட்டுப்பாடுகளை சீரமைக்க அல்லது திருத்தி அமைக்க வழிமுறைகளள பரிந்துரை செய்தல்.

(இ) இந்திய வர்த்தக—தொழில்கள் இணையம் (FICCI) போன்ற தலைமை அமைப்புகள் உட்பட வர்த்தக சபையிடமிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்தல்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 304 (b) பிரிவின் விதித்துறையின் கீழ் குடியரசுத் தலை வரின் முன்அனுமதி தொடர்பான தேவை, மாநிலச் சட்ட மன்றத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள துறையில் நேரடியாகத் தலையிடும்வகையில் அமைந்துள்ளது. எனவே, அரசியல் சட்டத்தின் 304 (b) வரம்பு நிபந்தனை நீக்கப்படவேண்டும்.

வேளாண்மை.

தோட்டக்கலை உட்பட வேளாண்மை, கால்நடை வளர்ப்பு. வன-மீன் துறைகள் மாநில அரசுக்குரிய முக்கியத் துறை களாகக் கருதப்பட வேண்டும்.

வேளாண்மை விளை பொருட்களுக்கு குறைந் தளவு நியாய விலை நிர்ணயித்து செயல்படுத்து வதைப் பொறுத்தமட்டில் முடிவெடுப்பதில் மாநில அரசு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கவேண்டும்.

மாநிலங்களுக்கிடையிலான நதிகள் தேசிய நதி களாக அறிவிக்கப்படவேண்டும்.

உணவு நுகர்பொருள் வழங்கல்.

கொள்முதல்.—(1) மத்திய அரசின் குறுக்கீடின்றி, உபரியாகவுள்ள மாநிலங்களிலிருந்து லெவி நெல், அரிசி ஆகியவற்றைக் கொள்முவதல் செய்ய மாநில அரசு அல்லது அதன் முகவரமைப்புள் அனுமதிக்சப்பட வேண்டும்.

(2) இந்திய ரிசர்வ் வங்கி, இது தொடர் பாக சலுகை வட்டி வீதம் விதிக்க வேண்டும்.

விலைகள்.—கொள்முதல் விலையை வரை யறுப்பது தொடர்பாக மத்திய அரசின் முன் ஒப்பு தல் தேவையில்லை.

உணவு தானியங்களையும் ஏனைய இன்றியமை யாப் பொருள்களையும் பொது விநியோக முறை மூலம் வழங்குதல்.

கல்வி, அறியாமைமயை அகற்றுதல், முதலமைச் சரின் மதிய சத்துணவுத்திட்டம் (குழந்தைகளும் ஒய்வூதியம் பெறும் முதியவர்களும் சுமார் 84 இலட்சம் பேர் உணவு கொள்கின்றனர்). ஆகி யவை தொடர்பான பல திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர் களால் இந் நாட்டில் முதல் முறையாகக் கொண்டு வரப்பட்டவையாகும். எனவே, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம் போன்ற

மக்கள் நலத்திட்டங்கள் தொடர்வதற்காக இன்றியமையாப் பொருள்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட சலுகை விலைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

கோதுமை உருளை அரவை ஆலைகள்.— மாவு அரைவை ஆலைகள் மீது பயனுள்ள வகையில் கட்டுப்பாடு விதிக்கவும், சரியான உற்பத்தி மற்றும் நுகர்வோர்களுக்கு மைதாவும் ரவையும் விநியோகம் செய்வதை உறுதி செய்யவும், மத்திய அரசின் பொதுவான நெறி முறைகளுக்குட்பட்டு, மாவு அரைவை ஆலைகளின் உரிமம் வழங்கும் அதிகாரங்கள் மாநில அரசுகளிடமே மீண்டும் நிலைபெற்றிருப்பது அவசியமாகும்.

பயிறு வகைகள்.—பயறு வகைகள் இருப்பின் மீதான உச்ச வரம்பிலிருந்து விலக்களிக்கும் அதிகாரம் (மத்திய அரசுக்கு எழுதிக் கேட்காமல்) மாநில அரசிடம் இருக்குமானால் வணிகர்களுக்கு அதிக அளவில் பொருள்கள் கிடைப்பதுடன், இருக்கின்ற பயறு வகைகளும் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் அதிக அளவில் கிடைக்கும்.

மண்ணெண்ணெய்.—புதிய மொத்த வணிகர்களை நியமிக்கும் அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் இருக்க வேண்டும்.

கல்வி.

1976ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டம் (42 ஆம் திருத்தம்) நிறைவேற்றும்போது, '' கல்வி '', பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள், '' கல்வியை '' மாநிலப் பட்டியலில் முதற்கண் சரியாக சேர்ந்திருந்ததைப் போலவே, 'கல்வி' மாநில பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மொழி.—இந்திய அரசியலமைப்பின் எட்டாவது விவர அட்டவணையில் ஆங்கிலம் சேர்க்கப்படவேண்டும், எட்டாவது விவர அட்டவணையில் உள்ள மொழிகள் அனைத்தும் மத்திய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு முடிவு எடுக்கப்படும் வரையில், ஆங்கிலம் தொடர்ந்து மத்திய ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலும் தகவல்களைத் தெரிவிப்பது தொடர்பாக ஆங்கிலம் மத்திய அரசின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு.

அமெரிக்காவில் உள்ள அரசுகளுக்கிடையிலான உறவுகள் குறித்த குழு காலப்போக்கில் ஏற்பட்ட சோதனைகளை அது கடந்துநின்றது போன்ற ஒரு நிறுவனம், இந்திய மக்களின் குறிப்பாக, தமிழ் நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவு செய்வது மட்டுமின்றி, மத்திய, மாநிலங்களுக்கிடையில் எப்போதாவது அல்லது மற்றப்படி எழுகின்ற கசப்பான பல பிரச்சினைகளை சரியாகவும் விரைவாகவும் தீர்க்கவும் இது இயலும்.

துணை வினாப்பட்டிகளும் பதில்களும்.

வினா :

1 (i) மேற்சொன்ன பின்னணியைக் கருத்திற் கொண்டு, அதாவது 163ஆம் பிரிவில் விருப்புரிமை அதிகாரம் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை நீக்குவது அல்லது தொடர்ந்து வைத்திருப்பது தொடர்பாக, சட்டப் பேரவையில் கூறப்பட்டவை அனைத்தும், இந்தப் பிரிவின் இந்த விளக்கம் உங்கள் கருத்துப்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலுவல்களைப் பொறுத்த வரையில், நிறைவேற்ற வேண்டிய பொதுத் தன்மை வாய்ந்த விருப்புரிமை அதிகாரம் ஆளுநருக்கு அளிக்கப்பட்டதாகக் கருதலாமா? அப்பிரிவின் (1) பகுதியிலும் (2) பகுதியிலும் உள்ள ''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் அல்லது அதன்கீழ்'' என்ற தொடர் இவ்விளக்கத்தை அளிப்பதாகப் பொருள் கொள்ளலாமா?

(ii) இந்த அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் (திரு. பி. ஆர். அம்பேத்கார், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஏ. கே. அய்யர்) 163ஆம் பிரிவின் (1) பகுதிக்கு அளித்துள்ள விளக்கம்—பொருள் விளக்கம் சரியென்று கொள்ள முடியுமா வேறு வகையில் கூறுவதனால் இப்பிரிவில் ''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ்'' என்ற தொடரின் செயல் நோக்கம், மாநில ஆளுநர் தன் விருப்பம்போல், அரசியலமைப்புச் சட்டத்தின் யாதொரு விதித்துறையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, குறிப்பாக செய்யவேண்டிய குறிப்பிட்ட அத்தகைய அலுவல்களை மட்டுமே குறிக்குமா?

(iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் மேற்சொன்ன பொருள் விளக்கத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதாயின் மாநில ஆளுநருக்கு விருப்புரிமை அதிகாரத்தைக் குறிப்பாக அளிக்கும் அத்தகைய விதித்துறை இன்னதென உங்களால் கண்டறியப்பட்டு, அதன் செயல்நோக்கத்தைக் குறைக்கும் திறனுடைய 163 ஆம் பிரிவுடன் சேர்த்துப் பொருள்கொண்டு படிக்க இயலுமா?

(iv) 163ஆம் பிரிவில் இருமுறை வரக்கூடிய ''இந்த அரசியலமைப்பின் மூலம் அல்லது அதன் கீழ்'' என்ற தொடர் ஆளுநர் தனது அலுவல்களை அல்லது யாதொரு அலுவலைத் தன்விருப்பம் போல் செய்யத் தேவையானவற்றை வெளிப்படையாக அல்லாமல், அவசியமாக்குகிற வகையில் செய்யுமாறு அரசியலமைப்பின் அந்த விதித்துறைகளில் குறிப்பிடுவதாகக் கொள்ளலாமா? ஆமெனில், அந்த விதித்துறைகள் இன்னதென உங்களால் கூற இயலுமா?

(v) முந்தைய வினாவில் காணும் கருத்தை நீங்கள் ஏற்பதானால், ஆளுநர் அவர்கள் சாதாரணமாக அல்லது அசாதாரண சூழ்நிலையில் தன் விருப்பம் போல் தனது அலுவல்களை அல்லது அவற்றில் ஏதாவதொன்றைச் செய்யும் அவசியமான குறிப்புகளை கூறுகிற பின்வரும் அரசியலமைப்புச் சட்ட விதித்துறைகளை மற்றவற்றுடன் சேர்ப்பீர்களா?

(a) இவர்கள் ஆளுநரின் விருப்பத்திற்கிணங்க பதவி வகிப்பதால் முதலமைச்சரை நியமிப்பதற்கும், அமைச்சர்களை விலக்கவும், ஆளுநருக்கு அதிகாரமளிக்கிற 164ஆம் பிரிவு.

(b) அமைச்சரவையின் நிருவாகம் தொடர்பான அனைத்து முடிவுகளும் சட்டமியற்றுவதற்கான அனைத்து கருத்துக்களும் ஆளுநருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதற்கான உரிமையை அளிக்கிறது நிருவாகம், சட்டம் தொடர்பான தகவலைக் கேட்பதற்கும் தனிப்பட்ட ஓர் அமைச்சரால் எடுக்கப்பட்டுள்ள ஒரு முடிவை, அமைச்சரவையின் பரிசீலனைக்காக வைக்கப்பட வேண்டுமென்று கேட்பதற்கும் ஆளுநருக்கு உரிமை அளிக்கிற 167ஆம் பிரிவு.

(c) மாநிலத்தின் சட்டமன்ற அவை அல்லது அவைகளின் கூட்டத்தைக் கூட்டுதல், கூட்டத் தொடரை முடித்துவைத்தல் அல்லது கலைத்தல் அதிகாரத்தை ஆளுநருக்கு அளிக்கிற ,174ஆம் பிரிவு.

(d) சட்டமன்றத்தின் உரையாற்றவும் செய்திகள் அனுப்பவும் ஆளுநருக்கு உரிமை அளிக்கிற 175 ஆம் பிரிவு.

(e) சட்ட முன்வடிவு ஒன்றுக்கு இசைவளிக்க அதற்கு இசைவளிப்பதை நிறுத்தி வைக்க அல்லது அதனை மறு பரிசீலனைக்குத் திருப்பி அனுப்ப அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக அதனை ஒதுக்கி வைக்கும் அதிகாரத்தை ஆளுநருக்கு அளிக்கிற 200ஆம் பிரிவு.

(f) பிரிவு 355, 356 (1) : மாநிலத்தின் அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்க நடைபெறுகிறதா இல்லையா என்பதைக் குடியரசுத் தலைவருக்கு அதாவது மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் அதிகாரத்தை ஆளுநருக்கு அளிக்கின்ற 355, 356 (1) ஆகிய பிரிவுகள்.

(vi) அமைச்சரவை ஒன்று பதவி விலகினாலும் பதவியிலிருக்க மறுத்தாலும் மற்றோர் அமைச்சரவை அமைக்கப்படும்வரை அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சி அதிகார முறையில் அறிவிக்கப்படும்வரை அமைச்சரவை ஒன்றின் அறிவுரையின்றி

ஆளுநர் தன் விருப்பம்போல், பல்வேறு நிருவாக அலுவல்கள் அவரால் நிறைவேற்றப்படும் என்பதை முடிவு செய்ய 163(2) பிரிவின் கீழ் ஆளுநருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா?

பதில் :

பாகம் III ஆளுநரின் பணி என்னும் பகுதியில் ஏற்கெனவே கூறியுள்ள ஆளுநரின் பதவி அவசியமற்றதாகும். குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிற ஆளுநர் பதவி தொன்று தொட்டு நடந்து வருகிற ஒரு மரபாகும். எனவே அப்பதவியை ஒழிக்க வேண்டுமென்பதே தமிழக அரசின் கருத்தாகும். ஆளுநர் பதவி அதற்குரிய பயனையும் மதிப்பையும் இழந்துவிட்டது. ஆளுநர் மத்திய அரசின் முகவரைப் போலவே செயற்பட்டு வருகிறார் என்பது இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிருந்து அறியலாம். எனினும், ஆளுநரின் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமாயின், துணை வினாப்பட்டித் தொடர்பாக பின்வரும் கருத்துக்களை தெரிவிக்கலாம்:

வினா எண் 1-ஐ பொறுத்தவரையில், ஆளுநர் தனது அலுவல்களை நிறைவேற்றுவதில் தனது விருப்ப உரிமையைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏதுமிருக்கக் கூடாது. ஆளுநர் முதலமைச்சரின் அல்லது அமைச்சரவையின் ஆலோசனைக்கிணங்க எல்லாவற்றிலும் நடக்க வேண்டுமென்பது தமிழ் நாடு அரசின் கருத்தாகும். "பாகம் III ஆளுநர் பணி" என்னும் தலைப்பின்கீழ், இவ்வரசால் பரிந்துரைக்கப்பட்டவாறு அரசியலமைப்புச் சட்டத்தின் 74(1) பிரிவின் அடிப்படையில் 163(1) பிரிவு திருத்தப்படவேண்டுமென்று இவ்வரசு கருத்துக் கொண்டுள்ளது.

ஆளுநர் பெயரளவிற்கு ஓர் அலங்காரப் பதுமையே என்று டாக்டர் அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் தெரிவித்துள்ளார். இது போலவே ஆளுநர், நிருவாகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒரு தலைவர் என்றும், உண்மையான நிருவாக அதிகாரங்கள், அமைச்சர்கள் அல்லது அமைச்சரவையிடம் நிலைப்பெற்றுள்ளது என்றும். உச்ச நீதிமன்றம், ராம்ஜாவையா வழக்கிலும் (AIR 1955 SC. 549) தீர்ப்பளித்துள்ளது. ஆளுநரின் அதிகாரங்கள், கடமைகள் தொடர்பாக, "தனது விருப்பத்திற்கிணங்க செயல்படுதல் என்ற தொடர் எங்கேல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம், அவை ஆளுநரின் தனிப்பட்ட பொறுப்புகளை மட்டுமே கூறுகின்றன என்று நீதிபதி ஏ.என்.ரே, தன் சார்பிலும் நீதிபதி பலேகர், மாத்யூ, சந்திரசூட், அழகிரிசாமி ஆகியோர் சார்பிலும் தீர்ப்பளித்ததாக ஷம்ஹீர்சிங் வழக்கில் விளக்கிக் கூறியுள்ளார். அப்பிரிவுகள், 371A(1)(b), 371A(1)(d). 371A(2)(b), 371A(2)(f) பத்தி 18 தற்போது நீக்கப்பட்டுள்ளபோதிலும், ஆறாம் அட்டவணையில் 9(2), 18(3) ஆகிய இரண்டு பத்திகளை நிதிபதி ஏ.என்.ரே எடுத்துக் காட்டியுள்ளார். ஷம்ஹீர்சிங் வழக்கில் ஆளுநரின் விருப்ப அதிகாரங்கள் 200ஆம் பிரிவின்கீழும் 350ஆம் பிரிவின் கீழும் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதில் ஐயமே இல்லை. ஆனால், ஏற்கெனவே கூறியவாறு எல்லாவற்றிலும் ஆளுநர் தன் கடமைகளை நிறைவேற்றுவதில் அமைச்சர் குழுவின் ஆலோசனைப்படி எப்போதும் நடக்க வேண்டியது அவருடைய கடமையாகும் என்பதும், பிரிவு 356 நீக்கப்பட வேண்டும் என்பதும் இவ்வரசின் கருத்தாகும்.

வினா :

2(iv). 1 (IV)ஆம் வினாவில்குறிப்பிட்டுள்ள கருத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டதாகக் கருதி, அரசியலமைப்புச் சட்டத்தின் 163ஆம் பிரிவிலும், மற்ற தொடர்புடைய பிரிவுகளின் கீழும் தனது சொந்த முடிவின் அடிப்படையில், அவர் கோரக்கூடிய விருப்ப அதிகாரத்தைச் சுருக்கிக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா? ஆமெனில், எம்முறையில்? ஆளுநர் அவர்கள் தனது விருப்பம்போல், அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் தனது அலுவல்கள் எதனையும் செய்ய வேண்டுமென்று கருத அனுமானிக்க, முடிவெடுக்க அவருக்கு ஓரளவு அதிகாரமே இருக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 163ஆம் பிரிவையும், பிற சம்பந்தப்பட்ட பிரிவுகளையும் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதன்மூலம் இதனைச் செய்ய இயலுமா?

அல்லது

(ii) ஆளுநரின் இத்தகைய விருப்ப அதிகாரத்தை, விரிவான பரந்த கொள்கைகளை வகுப்பதன் மூலம் முறைப்படுத்த நீங்கள் கருதியுள்ளீர்களா? ஆமெனில், எந்த முறையில்? அதனை, அரசியலமைப்புச் சட்டத்திலேயே சேர்ப்பதன் மூலம் அல்லது அரசியலமைப்புச் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட பிற ஆவணம் எதிலும் சேர்ப்பதன் மூலம் இதனைச் செய்யலாமா?

(iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 159ஆம் பிரிவின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் ஆளுநர் அவர்களின் பதவியேற்பு உறுதிமொழி "இந்திய அரசியலமைப்புச் சட்டம், ஏனைய சட்டங்கள்" ஆகியவற்றை அவர் வைத்து, பாதுகாத்து, பராமரிக்க வேண்டுமென்று, அவரைக் கட்டுப்படுத்துகிறது. எந்தவொரு அமைச்சரவையின் ஆலோசனை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு அல்லது ஏனைய

சட்டங்களுக்கு எதிராக உள்ளது என்று ஆளுநர் அவர்களுக்குத் தோன்றினால், அவர் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்த மேற்கூறிய இப் பிரிவும் 163ஆம் பிரிவும் அவருக்கு அனுமதி யளிக்கின்றனவா ?

பதில் :

ஏற்கனவே தெரிவித்தவாறு, ஆளுநர் அவர்களுக்கு விருப்புரிமையைச் செலுத் தும் அதிகாரமே இருக்கக்கூடாது என்பது இந்த அரசின் கருத்தாக உள்ளதால், ஆளுநர் அவர்களின் விருப்புரிமை அதிகாரத்தை முறைப் படுத்துவதற்கான கோட்பாடுகளை வரையறுக்க வேண்டுமென்ற பிரச்சினைக்கே இடமில்லை.

வினா :

3(i) ஆளுநர் அவர்களின் இசைவைப் பெறுவதற்காக, சட்ட முன்வடிவு ஒன்று அவருக்கு தாக்கல் செய்யப்படும்போது, அமைச்சரவையின் ஆலோசனையின்றி அல்லது அமைச்சரவையின் ஆலோசனைக்கெதிராக அச் சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் பரிசிலனைக்காக அனுப்பிவைக்க 163, 200ஆம் பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள எந்தவொரு மாற்றுவழி முறையையும் தெரிந்தெடுப்பதில் ஆளுநர் அவர்களுக்கு விருப்புரிமை அதிகாரம் உள்ளதா ?

(ii) ஆளுநர் அவர்களின் இசைவைப் பெறு வதற்காக ஒரு சட்ட முன்வடிவு அவரிடம் தாக்கல் செய்யப்படும்போது அச் சட்ட முன் வடிவு—(a) ஐயத்திற்கிடமானதாக அல்லது ஆய்வு செய்ய வேண்டியதற்குரியதாக ; அல்லது

(b) அது, பார்த்த மாத்திரத்திலேயே தனிச்சிறப்புரிமை உடையதாகத் தோன்றுகிறது என்று ; அல்லது

(c) அது நாட்டின் நலனுக்கு எதிராக உள்ளதென்று அல்லது நாட்டின் ஒற்றுமைக்கும், நேர்மைக்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாக உள்ளதென்று, ஆளுநர் அவர்கள் கருதினால், அதனைக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக, அவருக்கு அனுப்பிவைக்க 200ஆம் பிரிவின்கீழ் ஆளுநர் அவர்கள் செலுத் தும் விருப்புரிமை அதிகாரம் ; அவருக்கு நேரடியாக அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களி லிருந்து செலுத்தப்படுகிறதா அல்லது 159, 355, 356ஆம் பிரிவுகளினால் அல்லது அப் பிரிவுகளின்கீழ் அவர் அவ்வாறு செய்யவேண்டு மென்று விதிக்கப்பட்டுள்ள கட்டாயத்தின் பேரில் செலுத்தப்படுகிறதா ?

இது குறித்துசில வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்கள் இணைப்பு 'B'ல் கொடுக்கப் பட்டுள்ளன.

(iii) (i)-ல் கொடுக்கப்பட்டுள்ள வினாவிற் குரிய விடை 'ஆம்' எனில் அத்தகைய விருப் புரிமை அதிகாரம் தடை செய்யப்படாதா ? (i)-ல் கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்குரிய விடை 'இல்லை' யெனில், இந்த விருப்புரிமை அதிகாரத்தைச் செலுத்துவதற்கு, குறிப்பாக மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளைக் குடியரசுத் தலைவரின் பரிசிலனைக்காக அனுப்பிவைப்பதில் இந்த விருப் புரிமை அதிகாரத்தைச் செலுத்துவதற்கு என் னென்ன தனி நடைமுறைக் கட்டுப்பாடுகள்/ கட்டளைச் சட்டங்கள்/காரணங்கள் வரையறுக்கப் பட வேண்டும் ?

(iv) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் சட்டத்தில் அல்லது எந்தவொரு சட்டத்திலும் அத்தகைய தனி நடைமுறைக் கட்டுப்பாடுகளை/கட்டளைச் சட்டங்களை/காரணங்களைச் சுட்டிக்காட்டுவது உகந்ததாயிலாதா ?

(v) ஆளுநர் அவர்களும் குடியரசுத் தலைவர் அவர்களும் தங்களுடைய அதிகாரங்களை எக் கால அளவிற்குள் செலுத்த வேண்டும் என்பது குறித்தும் ; அவ்வாறு அவர்கள் அக்கால அளவிற் குள் அவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்தத் தவறினால், அச் சட்ட முன்வடிவிற்கு அவர்கள் இசைவளித்துவிட்டதாகக் கருதப்படும் என்பதற் கும் 200, 201ஆம் பிரிவுகளில் கால அளவு ஏதும் குறிப்பிடவேண்டுமா ? ஆமெனில், அக் கால அளவுகள் எவ்வளவாக இருக்கவேண்டும் ?

(vi) ஒரு மாநிலத்தின் சட்ட முன்வடிவு ஒன்று அம்மாநிலத்தால் மீண்டும் பரிசிலனை செய் யப்படுவதற்காக, 201ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனையில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, குடியரசுத் தலைவர் அவர்களால், ஆளுநர் அவர்கள் மூலம் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டு அச் சட்ட முன்வடிவை அம் மாநிலச் சட்டமன்றம் திருத்தத்துடனோ அல்லது திருத்தமின்றியோ நிறைவேற்றி மீண்டும் அதனைக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கும்போது, குடியரசுத் தலைவர் அச் சட்ட முன்வடிவிற்குத் தன்னுடைய இசைவை அளிக்கா மல் இருக்கக் கூடாது என்று, 200ஆம் பிரிவின் முதல் வரம்பு நிபந்தனைக்கேற்ப வரையறுக்கப் பட வேண்டாமா ?

பதில் :

அமைச்சரவை எவ்வாறு ஆலோ சனை நல்கியிருந்தபோதிலும், ஆளுநர் அவர்கள் 200ஆம் பிரிவின்கீழ் தனது விருப்புரிமை அதி காரத்தின்படி நடக்கலாமென்றும், அவ்வாறு அத் தகைய விஷயங்களில் தன்னுடைய விருப் புரிமை அதிகாரத்தைச் செலுத்தும்போது, அவர் தனக்கு நேர்மையென்று தெரியும் விதத்தில் தன் னுடைய விருப்புரிமை அதிகாரத்தைச் செலுத்த

வேண்டும் என்றும், ஷம்ஷீர் சிங் வழக்கில் பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் இசை வளிப்பது தொடர்பாகக் குறிப்பிடும் 200ஆம் பிரிவைப் பொறுத்தமட்டில், ஆளுநர் அவர்கள், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரிலேயே எப்போதும் செயல்படவேண்டுமென்றும், அமைச் சரவையின் ஆலோசனைக்கு அவர் கட்டுப் பட்டவராக இருக்க வேண்டுமென்றும், இது தொடர்பாக, அவருக்கு எவ்வித விருப்புரிமை அதிகாரமும் இருக்கக் கூடாதென்றும் தமிழ்நாடு அரசு கருத்து தெரிவித்துள்ளது. உண்மையான நிருவாக அதிகாரம் அமைச்சரவையிடமும், முத லமைச்சரிடமும்தான் உள்ளது. ஆளுநர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பெயரளவில் மட்டும் தலைமையேற்கும் நிருவாகத் தலைவரா வார். ஆளுநர் அவர்களிடம் 200ஆம் பிரிவின்கீழ் விருப்புரிமை அதிகாரம் நிலைப்பெற்றிருப்பதை இந்த அரசு ஏற்கவில்லை. நீதிபதி கிருஷ்ணஐயர் தன் சார்பிலும், நீதிபதி பி, என். பகவதி சார்பி லும் அளித்த தீர்ப்பில் அரசர் இசைவு தொடர் பாக, டி. ஸ்மித்தின் கூற்றிற்கு ஏற்பளித்துள்ளார். அது சம்பந்தமாக, கீழ்க்காணும் பகுதி தொடர் புடையதாக இருக்கும் :—

"அரசர் இசைவளிப்பது சம்பந்தமாக, டி. ஸ்மித்தின் கூற்று, இந்தியாவில் குடியரசுத் தலைவர் அவர்களும், ஆளுநர் அவர்களும் இசைவளிப்பதற்குத் தொடர்புடையதாக உள்ளது என்பதில் எங்களுக்கு ஐயமேதுமில்லை. 'அரசர் ஒரு சட்ட முன்வடிவிற்கு ஏற்பளிக்கவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு அல்லது அச்சட்ட முன்வடிவு மிகவும் வாதத்திற்கிடமானது என்ற காரணத்தை முன்னிட்டு, அரசர் அதற்கு இசை வளிக்க மறுத்தபோதிலும், அத்தகைய மறுப்பு அரசியலமைப்பிற்கு முரண்பட்டதாகும். அரசே அத்தகைய ஆலோசனை நல்கி இருப்பதாயின் ஆனால் இத்தகைய சூழ்நிலை மிகவும் அரிது. ஒரு சட்ட முன்வடிவிற்கு அரசர் தன்னுடைய இசைவை அளிக்காமல் இருப்பது நியாயமாகும். அந்தச் சட்ட முன்வடிவு கட்டாயமாகப் பின்' பற்ற வேண்டிய நடைமுறைகளைப் புறக்கணித்து நிறைவேற்றப்பட்டுள்ளதாயிருப்பின் அரசே அத்தயை சட்ட முன்வடிவுக்கு மறுப்பு அளிக்கு மாறு பரிந்துரைக்கும் நிலை ஏற்படலாம். ஆனால், இத்தகைய சூழ்நிலையில் இச் சட்ட முன்வடிவிற்கு இசைவளிக்கப்பட்டால் எடுக்கப் பட்ட நடவடிக்கையின் செல்திறனை, அரசிய லமைப்புச் சட்டத்தினின்றும் இவ்வாறு விலகிச் செல்வதைப் பாதிக்காது என்று அந்த அரசு கருதினால் அச் சட்ட முன்வடிவிற்கு இசை வளிப்பதே அறிவுடைமையாகும்."

மேற்கூறிய இக்கருத்திற்கிணங்க, 200ஆம் பிரிவின் இரு வரம்பு நிபந்தனைகளும் நீக்கப் பட வேண்டுமென்று அரசு கருத்துத் தெரிவிக் கிறது. இதேபோல், ஒரு சட்ட முன்வடிவு, குடி யரசுத் தலைவர் அவர்களின் இசைவைப் பெறு வதற்காக அனுப்பிவைக்கப்படும்போது, அச் சட்ட முன்வடிவிற்கு இசைவு அளிக்குமாறு, குடியரசுத் தலைவருக்கு இந்திய அரசு ஆலோசனை நல்க வேண்டும். குடியரசுத் தலைவர் தன்னுடைய இசைவை அளிக்காமல் இருப்பதற்கு அவர், எவ்வித விருப்புரிமை அதிகாரத்தையும் கொண் டிருக்கக் கூடாது. இதற்கிணங்க, 201ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை விட்டுவிடப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

254 ஆம் பிரிவைப் பொறுத்தமட்டில் 254 (2) பிரிவில் உள்ள வரம்பு நிபந்தனைக் குப் பதிலாக கீழே வருவன வற்றைச் சேர்க்கலா மென 'சட்டமன்றத் தொடர்புகள்' என்னும் தலைப்பின்கீழ் இந்த அரசு கருத்துத் தெரிவித் துள்ளது.

"ஆனால் மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றிற்குக் கூடுதலாக (சேர்க்கையாக), அச் சட்டத்தைத் திருத்தும் வகையில் அச்சட்டத்தை மாற்றியமைக்கும் வகை யில் அல்லது அச் சட்டத்தை ரத்து செய்யும் வகையில், அச் சட்டம் எப்பொருள் குறித்து இயற்றப்பட்டுள்ளதோ அதே பொருள் குறித்து எந்தவொரு சட்டத்தையும், எந்தவொரு நேரத் திலும் இயற்றுவதற்குரிய அதிகாரத்தை, நாடாளு மன்றம் பெற்றிருக்கக் கூடாது."

வினா:

4 (i) 31-A அல்லது 31-C பிரிவில் குறிப் பிடப்பட்டுள்ளவாறான மாநிலச் சட்ட முன்வடிவு கள் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறு வதற்காக அவருக்கு அனுப்பப்பட்டு அவருடைய இசைவு பெறப்படும் போது, அச்சட்ட முன் வடிவுகள் 14 அல்லது 19ஆம் பிரிவிற்கு முர ணாக உள்ளன என்ற காரணத்தின்பேரில், அவை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலாது. 14 அல்லது 19 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள காரணங்களின் பேரில், ஒரு சட்ட முன்வடிவிற்கெதிராக, நீதிமன்றத்தில் வழக்கு தொடராவண்ணம் செய்வதற்குரிய காப் புரிமையை அச்சட்ட முன்வடிவு குறித்துப் பெற வேண்டிய அவசியமில்லையென்று, மாநில அமைச் சரவை கருதி, அதற்கிணங்க, அச் சட்ட முன் வடிவிற்கு இசைவளிக்குமாறும், குடியரசுத் தலை வரின் இசைவைப் பெறுவதற்காக, அச்சட்ட முன்வடிவை அனுப்பிவைக்க வேண்டாமென் றும், ஆளுநர் அவர்களுக்கு ஆலோசனை நல்கலாம். ஆளுநர் அவர்கள், அத்தகைய சூழ் நிலையில், அமைச்சரவை நல்கிய ஆலோசனை யைப் புறக்கணித்துவிட்டு, அவருடைய விருப் புரிமை அதிகாரத்தைச் செலுத்தி அதனைக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற் காக அனுப்பிவைக்கவேண்டுமா ?

(ii) வர்த்தகம், வணிகம், மாநிலங்களுக்கிடையே வணிகப் போக்குவரத்துத் தொடர்புச் சம்பந்தமாக ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு ஒன்று அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில் ஆளுநர் அவர்களின் இசைவைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டால், அதற்கு ஆளுநர் அவர்கள் தன்னுடைய இசைவை அளிக்காமல் நிறுத்திவைப்பதற்கும், அச் சட்ட முன்வடிவை மாநிலச் சட்டமன்றத்தில் கொண்டு வருவதற்கு 304 (1)ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனையின்கீழ் குடியரசுத் தலைவரின் முன் அனுமதியைப் பெறவேண்டுமென்ற காரணத்தின் பேரில், அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்க ஆளுநர் அவர்கள் தன்னுடைய விருப்புரிமை அதிகாரத்தைச் செலுத்தாதது நியாயமானதா ?

(iii) 304 (b) பிரிவின் வரம்பு நிபந்தனையின்படி குடியரசுத் தலைவர் அவர்களின் இசைவைப் பெற்ற சட்டமுன்வடிவு ஒன்று திருத்தங்களுடன் மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படுகிறது. அத் திருத்தங்கள், வர்த்தகம், வணிகம், மாநிலங்களுக்கிடையே வணிகப் போக்குவரத்துத் தொடர்பு ஆகியவற்றிற்குரிய உரிமையைக் கட்டுப்படுத்துகின்றன என்றும், பொது நலனைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இது நியாயமற்றதாகும் என்றும், ஆளுநர் அவர்கள் கருதுகிறார். ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அத்தகையதொரு சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்பி வைக்க முடியுமா ?

(iv) மாநிலப் பட்டியலில் (பட்டியல்-II) இடம் பெற்றுள்ள எந்தவொரு பொருள் தொடர்பாக மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட முன்வடிவின் உள்ளார்ந்த கொள்கை, மத்தியச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள ஒரு கொள்கையினின்றும் வேறுபடுமானால், ஆளுநர் அந்தச் சட்ட முன்வடிவு, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தை மீறுவதாகத் தோன்றுகிறது என்று காரணங்காட்டி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைக் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்ப வேண்டுமா ?

(v) இத்தகைய நேர்வில், மத்திய அரசின் கொள்கை எந்வொரு மத்தியச் சட்டத்திலும் சேர்க்கப்படாமலிருந்து, மத்திய அரசின் ஒரு நிர்வாக ஆணையை செயல்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்டு வருமானால் அத்தகையதொரு மாநிலச் சட்ட முன்வடிவை (பட்டியல் II-ல் கண்டுள்ள ஒரு பொருள் தொடர்பானது) ஆளுநர், அது மத்தியக் கொள்கையினின்று வேறுபடுகிறது என்று தான் கருதுவதாகக் காரணங்காட்டி, தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்புவது முறையாகுமா ?

(vi) அரசியலைப்புச் சட்டத்தின் 254 வது பிரிவைக் கருத்தில் கொண்டும் பார்க்கையில், மாநிலச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு தற்போது செயலில் உள்ள ஒரு மத்தியச் சட்டத்திற்கு அல்லது நாடாளுமன்றத்தால் சட்டமாக நிறைவேற்றப்படும் தருவாயில் உள்ள ஒரு சட்ட முன்வடிவிற்கு நேர் எதிராக உள்ளது அல்லது முரணாக இருக்கக்கூடும் என்றுதான் கருதுவதாலேயே, ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தச் சட்ட முன்வடிவைக் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்புவது முறையாகுமா ?

(vii) சட்ட முன்வடிவுகளை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்புவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது என்று வைத்துக் கொண்டாலும், மாநிலச் சட்ட முன்வடிவுகளில் கண்டுள்ள பொருள்கள், பொதுப் பட்டியலின் கீழ் (பட்டியல் III) வருபவை என்ற காரணத்திற்காகவே வகைதொகை இல்லாமல் எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்புவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் உள்ளதா ?

(viii) மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு பொருள் குறுத்த ஒரு சட்டமுன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்தின் சில விதித்துறைகளுக்கு அல்லது சில மத்தியச் சட்டங்களுக்கு அல்லது ஒரு மத்தியச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள கொள்கைக்கு முரணாக உள்ளது என்ற காரணத்திற்காக, ஆளுநரால் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்பப்படுமானால், அந்த மாநிலச் சட்ட முன்வடிவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கொள்கையில் கணிசமான மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படக்கூடிய வகையில் அதில் மாற்றங்கள் செய்யுமாறு மாநில அரசை குடியரசுத் தலைவர் கேட்டுக் கொள்வது முறையாகுமா ? அதுபோன்ற சமயங்களில் அத்தகையதொரு சட்ட முன்வடிவைக் குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்புகின்ற மற்றும் மாநில அரசு சில கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்னும் நிபந்தனையின்பேரில் குடியரசுத் தலைவர் அச்சட்டமுன்வடிவிற்கு அனுமதி அளிக்கின்ற நடைமுறை முழுவதும் அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டம் இயற்றுவது தொடர்பான அதிகாரங்களை மத்திய அரசு ஆக்கிரமிப்புச் செய்வது ஆகாதா ?

பதில்

அரசியலமைப்புச் சட்டத்தின் 31-A அல்லது 31-C பிரிவின் பொருள் வரம்பின்கீழ் வருகின்ற எந்தவொரு சட்ட முன்வடிவையுமே குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பத்

தேவையில்லை என்பதே இவ்வரசின் கருத்தாகும். அமைச்சரவை மாநில சட்ட பேரவைக்குக் கட்டுப்பட்டதாகும். எனவே, நிர்வாக அதிகாரம் முழுவதும் மாநிலச் சட்டமன்றத்தையே சாரும். ஒரு சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்ப வேண்டியதில்லை என்று அமைச்சரவை ஆலோசனை கூறியபோதிலும், ஆளுநர் அவ்வாறு அனுப்ப வேண்டும் என்று கருதுகின்ற காரணத்திற்காகவே ஒரு சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்ப ஆளுநருக்கு அதிகாரம் இருக்கக் கூடாது.

அதன்படி அரசியலமைப்புச் சட்டத்தின் 31-A பிரிவின் முதலாவது வரம்பு நிபந்தனையையும் 31-C பிரிவின் வரம்பு நிபந்தனையையும் நீக்க வேண்டியதுமிகமிக அவசியமென்றுதமிழ்நாடு அரசு கருத்துத் தெரிவிக்கிறது. 200-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த வரம்பு நிபந்தனைகள் நீக்கப்படுமேயானால், அரசியல் அமைப்புக் சட்டத்தின் 254-வது பிரிவின் விதித்துறைகளுக்குட்பட்டு மத்திய பட்டியலின்கீழ் வருகின்ற பொருள்களின் நேர்வில் தவிர, குடியரசுத் தலைவரின் இசைவுக்காக எந்த ஒரு சட்ட முன்வடிவையும் அனுப்புகின்ற அங்கீகாரம் ஆளுநருக்கு இருக்காது. இந்தப் பிரிவில் உள்ள விதி முறைகளில் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர் ஆவார். குடியரசுத் தலைவரின் இசைவுக்காக அனுப்பப்படுகின்ற சட்ட முன்வடிவின் நேர்விலும்கூட எந்தவொரு சூழ்நிலையிலும் அனுமதி மறுக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமில்லை. மாநிலச் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதா என்பதைப் பொறுத்தவரையில், மாநில சட்டமன்றமும், மாநில அரசும் எடுத்த முடிவின்மீது மத்திய அரசு தீர்ப்புக்கூற முடியாது என்ற கருத்தினைக் தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

ஒரு சட்ட முன்வடிவு அல்லது ஒரு திருத்தத்தைச் சட்டமன்றத்தில் கொண்டு வருவதற்கு முன்னர் அதற்குக் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று கூறுகின்ற அரசியலமைப்புச் சட்டத்தின் 304 (b) பிரிவின் வரம்பு நிபந்தனையைப் பொறுத்தவரையில், இவ்வரசு, பகுதி VII ''பல்வகை'' என்ற அத்தியாயத்தில் '' வர்த்தகமும் வணிகமும் '' என்ற தலைப்பின்கீழ் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காக அந்த வரம்பு நிபந்தனை நீக்கப்பட வேண்டும் என்று கருதுகிறது, ஒரு சட்ட முன்வடிவு, நாடாளுமன்றத்தால் இயற்றப்பெற்ற ஒரு சட்டத்திற்கு முரணாக இருப்பதுபோல் தோன்றுகிறது என்று தான் கருதுகின்ற காரணத்தினால் ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தச் சட்ட முன்வடிவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்பக் கூடாது.

வினா :

5 (i) ஒரு சட்ட முன்வடிவு, அரசியலமைப்புச் சட்டத்தின் சில விதித்துறைகளுக்கு முரணாக உள்ளது என்ற காரணத்திற்காக அல்லது அது உயர் நீதிமன்றத்தின் நிலையைப் பாதிக்கும் அளவிற்கு அதன் அதிகாரங்களை மீறுவதாக உள்ளது என்று ஆளுநர் கருதுகின்ற காரணத்தினால் குடியரசுத் தலைவரின் இசைவுக்காக அனுப்பி வைக்கப்படும்பொழுது, அந்தச் சட்ட முன்வடிவு, எந்த அளவிற்கு முரணாக அமைந்துள்ளது அல்லது அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக உள்ளது என்பதனை முடிவு செய்வதற்கு மத்திய அரசுக்குத் தான் தகுதி உண்டா ?

(ii) எனவே மத்திய அமைச்சரவை அந்தச் சட்ட முன்வடிவை அரசியலமைப்புச் சட்டத்தின் 143ஆவது பிரிவின்கீழ், உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு விட்டு, அந் நீதிமன்றம் தெரிவிக்கின்ற கருத்துக்கிணங்கச் செயல்படுமாறு, குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூற வேண்டுமா ?

(iii) நேர்விற்கேற்ப, மத்திய அரசு அல்லது உச்ச நீதிமன்றம் சட்ட முன்வடிவு முழுவதையும் பரிசீலனை செய்ய வேண்டுமா ? அல்லது பிரச்சனைக்குரிய விதித்துறைகளை மட்டும் பரிசீலிக்க வேண்டுமா ?

பதில்.

சட்ட முன்வடிவு அரசியலமைப்புக்கு ஏற்றதா இல்லையா என்பது குறித்து அல்லது இச் சட்ட முன்வடிவு உயர் நீதிமன்றத்தின் நிலைமைக்கு ஊறுவிளைவிக்க கூடியதா என்பது குறித்து மாநில அரசுதான் முடிவு செய்ய வேண்டும். இப் பிரச்சினை பற்றி விசாரணை மேற்கொள்ள ஆளுநருக்கோ மத்திய அரசுக்கோ உரிமை கிடையாது. அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடப்பதற்கு ஆளுநர் கடமைப்பட்டவராவார்.

சட்ட முன்வடிவு எதனையும் உச்ச நீதிமன்றத்துக்கு 143ஆவது பிரிவின்கீழ் அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசு குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை நல்கக் கூடாது. சம்பந்தப்பட்ட மாநில அரசு விரும்புகிற நேர்வில் மட்டுமே 143ஆவது பிரிவின்கீழ் உச்ச நீதிமன்றத்துக்கு அவ்வாறு அனுப்ப வேண்டும் மற்றபடி அல்ல.

143ஆவது பிரிவின்கீழ் சட்ட முன்வடிவு முழுவதும் அல்லது சட்ட முன்வடிவின் ஒரு குறிப்பிட்ட விதித்துறை மட்டும் உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று மாநில அரசு கருத்துத் தெரிவிப்பதால், சட்ட முன்வடிவு முழுவதையும் அல்லது மாநில அரசு

விரும்பியவாறு குடியரசுத் தலைவர் அனுப்பியுள்ள விதித்துறைகளை மட்டும் பரிசீலிப்பதற்கு உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

துணை வினா எண். 5: **ஆளுநர் பதவி குடியரசுத் தலைவர் விதிகள் முதலியவை பற்றிய வினாக்கள்**

ஆளுநர்களை நியமித்தல்:-

ஆளுநர்களை நியமனம் செய்யும்போது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு உரிய கவனம் செலுத்தப்படுகிறது. மக்கள் அவையின் தலைவரும், மாநிலங்கள் அவையின் தலைவரும் அடங்கிய ஆலோசனைக் குழு தெரிவித்த பெயர் பட்டியலிலிருந்து ஆளுநர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் இறுதி முடிவு பிரதம மந்திரிதான் எடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நீங்கள் இதற்கு ஒப்புக் கொள்கிறீர்களா ? மக்கள் அவையில் எதிர்க் கட்சித் தலைவர்கள், மாநிலங்கள் அவையில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமா?

1.2. முதலமைச்சரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற வழக்கம் பயனில் இல்லை என்று தெரிகிறது. இந்த வழக்கம் இல்லாததால் திருத்தம் ஒன்றின்மூலம் அரசியலமைப்புச் சட்டத்திலேயே சேர்ந்து விடுவதால் இவ்வாறு முதலமைச்சரைக் கலந்தாலோசிப்பதைச் சட்டப் படியாக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ?

1.3. அரசியல் வாதிகள், ஒய்வு பெற்ற சிவில்/பாதுகாப்பு பணியாளர்களிடையேயிருந்து ஆளுநர்களை தெரிந்தெடுப்பது பற்றி உங்கள் கருத்து என்ன ?

பதில் :

ஏற்கெனவே தெரிவித்தவாறு, பகுதி III-ஆளுநர் பதவி தேவையற்றது என்றும், குடியரசுத் தலைவர் நியமித்த ஆளுநர் பதவி கடந்த கால வரலாறுதான் என்றும் எனவே அதனை நீக்கிவிட வேண்டும் என்றும் அரசு கருத்து கொண்டுள்ளது ஆளுநர் பதவி பயனில்லாமல் போய்விட்டது. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் அண்மையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து பார்த்தால் மத்திய அரசின் ஏஜெண்டாகத்தான் ஆளுநர் செயல்பட்டு வருகிறார். எனினும், ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமானால் துணை வினாக்கள் தொடர்பாக பின்வரும் குறிப்புரைகள் கேட்கப்படுகின்றன.

ஆளுநர் பதவி தொடர்ந்து இருக்க வேண்டுமானால் சட்டமன்றப் பேரவையின் நம்பிக்கையைப் பெற்றுள்ள முதலமைச்சர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ள நான்கு பெயர்கள் கொண்ட பட்டியலிலிருந்து அவரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருத்துத் தெரிவிக்கிறது.

அரசியல்வாதிகள் அல்லது ஒய்வுபெற்ற சிவில்/பாதுகாப்புப் பணியாளர்கள் மட்டும் ஆளுநராகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்பதில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு தெரிவித்த கருத்துக்கள் வருமாறு :—

"சில சமயங்களில் மாகாணத்திலிருந்தே அவர் தெரிந்தெடுக்கப்படலாம். நாம் அதைத் தடுக்கவில்லை. ஆனால், மொத்தத்தில் தலை சிறந்தவர்களிடையேயிருந்து தெரிந்தெடுப்பது விரும்பத் தக்கதாகும். சிலசமயம் அரசியலில் அதிகமாகப் பங்கு கொள்ளாதவர்களும் ஆளுநராக தெரிந்தெடுக்கப்படலாம். அரசியல்வாதிகள் தங்களுடைய நடவடிக்கைகளுக்கே அதிகமாக கவனம் செலுத்துவர். ஆனால் சிறந்த கல்வி அறிஞர்கள் அல்லது பிற துறைகளில் சிறந்த நபர்கள் இருக்கலாம். அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு தந்து அரசின் கொள்கைகளை நிறைவேற்றி எல்லா வகையிலும் உதவுவர். அப்போதுதான் அரசின் கொள்கை நிறைவேற்றப் படலாம். அன்றியும் கட்சிக்கு அப்பாற்பட்ட ஒருவருக்கு அவர் உதவக்கூடும். அதன் மூலம் கட்சியின் ஒரு அங்கமாக அவர் கருதப்படுவதைக் காட்டிலும் அவர் அரசுக்கு உதவுவார். ஏனைய நடைமுறையைவிட அது ஜனநாயக நடைமுறையாகும் என நான் தெரிவித்துக் கொள்கிறேன். பின்னர் சொல்லியது ஜனநாயக நடைமுறையை சுமுகமாக செயலாற்ற விடாது" (C.A.D. Vol. VIII. P. 455) ஆனால், தெரிந்தெடுக்கப்படும் நபர் உயரிய திறமையும், நேர்மையும் பாரபட்சமுள்ள அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கிறாரா என்பதே முக்கியமான பிரச்சினையாகும்.

ஆளுநர் நீக்கம் :

2.1. ஆளுநர் அவர்கள், குடியரசுத் தலைவர் தகுதியெனக் கருதுகின்ற கால அளவு வரையில், அதாவது மத்திய அரசின் அமைச்சரவை ஆளுநர் பதவி வகிக்க அவர் தகுதியுடையவரெனக் கருதுகிற கால அளவு வரையில், பதவி வகிக்கலாம் என்ற கருத்து நிலவுவதால் அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் ஆளுநர் தம் அதிகாரங்களைச் செலுத்தும் விவகாரங்களில் சொந்த கருத்துப்படி செயற்பட தடையாக விளங்குகிறது என்பது ஒரு சாராரின் கருத்தாகும். இந்தக் காரணத்திற்காகவே, குடியரசுத் தலைவருக்குப் பொருந்தக்கூடிய அதே அடிப்படையிலும் காரணங்களின் அடிப்படையிலும், குற்றச் சாட்டும் நடைமுறையைப் பின்பற்றிய பின்னரே ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.2. மாற்றுக் கருத்தாக, ஆளுநரின் நியமனத்தில் ஆலோசனை கூறும் ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்து பிறகுதான் ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உங்களுடைய கருத்துக்கள் யாவை ?

பதில் :

ஒரு மாநிலத்தில் ஆளுநர் தொடர்ந்து பதவியிலிருப்பது மாநிலத்திற்கு உகந்ததாயிராது என்று அமைச்சரவை முடிவு செய்யுமானால் சட்டமன்றப் பேரவை அது குறித்துத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதன் பேரில், குடியரசுத் தலைவர் மேற்சொன்ன தீர்மானத்தின் நகல் தனக்கு வந்து சேர்ந்ததும் ஆளுநரைப் பதவியிலிருந்து விலக்க வேண்டும்.

ஆளுநரின் மாற்றமும் இரண்டாம் முறையாக நியமனம் செய்யப்படுவதும் :

3.1. பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னமேயே பலமுறை வேறொரு மாநிலத்தின் ஆளுநராக ஆளுநர் மாற்றம் செய்யப்படுகிறார். இவ்வாறு செய்வதால் அப்பதவியின் மதிப்பு பாதிக்கப்படுகிறது அல்லது பதவி வகிப்பவர் தனித்துச் செயற்படும் தன்மையைப் அம்மாற்றம் பாதித்துள்ளது என்று நீங்கள் கருதுகிறீரா ?

3.2. ஆளுநர் அவர்கள் அவருடைய பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அதே மாநிலத்திற்கோ வேறொரு மாநிலத்திற்கோ ஆளுநராகப் புதிதாக நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியுடையவரா ?

பதில் :

ஆளுநருக்கு வரையறுக்கப்பட்ட பதிவிக் காலம் என்ற ஓர் அளவு இருக்க வேண்டும். ஆனால், மேலே தெரிவிக்கப்பட்ட முறையில் சட்டமன்றப் பேரவைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தால் அப்பதவிக் காலத்தைக் குடியரசுத் தலைவர் நீக்கி விடலாம்.

புதிதாக ஆளுநரை மீண்டும் ஒருமுறை நியமனம் செய்யக் கூடாது.

ஓய்வூதியமும், ஓய்வுக்குப் பிந்திய நிபந்தனைகளும் :

4.1. ஆளுநர் அவர்கள் தன்னுடைய பதவிக் காலம் முழுவதும் முடிவடைவதின்பேரில், தளர்த்தப்பட்ட ஓய்வூதியத்தைப் பெறத் தகுதியுடையவரா ? பதவி வகிக்கையில் அவருடைய விருப்ப உரிமை அதிகாரத்தை செலுத்துவதில் பரந்த நோக்குடன் செயற்பட இது உதவுமா?

4.2. ஆளுநர் தன்னுடைய பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், மத்திய அரசின் அல்லது மாநில அரசின்கீழ் ஆதாயம் தரும் பதவியை வகிக்கத் தகுதியற்றவராகச் செய்யப்படுவாரா?

4.3. ஆளுநர் அவர்கள், அவருடைய பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், மத்திய அல்லது மாநில அரசில் அமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் அல்லது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட பதவியை வகிக்க பொருத்தமற்றவராகச் செய்யப்படுவாரா ?

பதில் :

ஆளுநர் ஓய்வு பெற்ற பின்னர், தளர்த்திய ஓய்வூதியம் வழங்கப்படலாம்.

ஆளுநர் ஓய்வு பெற்ற பின்னர், மத்திய அரசின்கீழ் அல்லது மாநில அரசின்கீழ் ஊதியம் பெறும் பதவி எதனையும் வகிக்கக் கூடாது. மேலும், மத்திய அல்லது மாநில அரசில் அமைச்சர், இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அல்லது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்ற உறுப்பினர் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட பதவியை வகிக்கக் கூடாது. ஏனெனில், இவையனைத்தும் மத்திய அரசுக்கு உடன்பட்டு அவர் செயற்படுவதற்குத் தூண்டுகோலாக அமையும்.

ஆளுநரின் பங்கும் பதினைந்து நாட்களுக்கொருமுறை அனுப்பப்படும் அறிக்கைகளும்.

5.1. நடப்பு முறையின்படி, ஆளுநர், பதினைந்து நாட்களுக்கொருமுறை அறிக்கை அனுப்புகிறார். மாநில அரசின் அலுவல்களும் நடவடிக்கைகளும் எப்படி நடைபெறுகின்றன என்பது குறித்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஆளுநர் அறிக்கை அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசு எதிர் பார்க்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் 355ஆம் பிரிவின் கீழ் மத்திய அரசுக்கு விதித்துள்ள கடமைகளிலிருந்து இந்நடைமுறைக்கான ஆதாரத்தை விளக்க முடியுமா ? ஆளுநரிடமிருந்து அத்தகைய அறிக்கையைப் பெற வேண்டும் என்பது குறித்து வெளிப் படையான விதித்துறை ஒன்றை அரசியலமைப்புச் சட்டத்தில் இயற்ற நீங்கள் விரும்புகிறீரா ?

5.2 ஆளுநர் அவர்கள் குடியரசுத் தலைவருக்கு பதினைந்து நாட்களுக்கொருமுறை அனுப்பப்படும் அறிக்கையின் சாராம்சத்தையும் நோக்கத்தையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டா? அவர் இவ்வறிக்கையின் நகல் ஒன்றை முதலமைச்சருக்கு அனுப்ப வேண்டுமா ?

5.3 இம்மாநிலத்தில் செய்ய வேண்டிய முக்கியமான மேம்பாடுகள் குறித்து தெரிவிப்பதுடன், முக்கியமான பிரச்சினைகள் எவ்வெவ்வற்றில் மத்திய அரசு மாநில அரசுக்கு உதவக்கூடுமோ அவைபற்றி ஆளுநர் தெரிவிக்க வேண்டுமா ? அத்தகைய பிரச்சினைகளில் ஆளுநரின் — முதலமைச்சரின் பணிகள் யாவை ?

பதில்

பதினைந்து நாளுக்கொருமுறை ஆளுநர் அறிக்கை அனுப்பும் தற்போதைய நடைமுறையை இந்த அரசு ஒப்புக்கொள்ளவில்லை. இந்த அறிக்கையை முதலமைச்சரே அனுப்பலாம்.

இருவார அறிக்கையொன்றினை மத்திய அரசுக்கு முதலமைச்சர் அனுப்பலாமென விரைவு வெளிப்படையான விதிமுறை ஒன்று இயற்றப்படலாம்.

முதலமைச்சரே மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பவேண்டிய நிலையில் அவ்வறிக்கையில் இடம்பெற வேண்டியது என்னவென்பதை அவர் தான் நன்கு தீர்மானிக்க முடியும். ஆளுநர் அறிக்கை அனுப்பக்கூடாது என்ற கருத்துத் தெரிவிக்கப்படுவதால், ஏனைய வினாக்களுக்கு விடையளிக்கும் பிரச்சினைக்கு இடமில்லை.

ஆளுநருக்குள்ள அதிகாரங்கள் :

6. 1. 163 (1)ஆம் பிரிவில் வரையறுத்துள்ளவாறு, எத்தகைய சூழ்நிலைகளில் ஆளுநர் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் ? 159ஆம் பிரிவின்கீழ் தாம் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கிணங்க நடக்கும் பொருட்டு, தம்முடைய அமைச்சரவையின் ஆலோசனையை மீறி தாம் தகுதியெனக் கருதுகிறபடி அதிகாரத்தை செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்படும் இக்கட்டானதோர் சூழ்நிலை ஏற்படக்கூடுமா ?

6. 2. மாநில அரசுச் சட்டம் ஒன்றின்கீழ், ஆளுநர் ஒருவர் பல்கலைக் கழகம் ஒன்றின் வேந்தராக அலுவல் முறையில் நியமிக்கப்பட்டிருக்கும்போது, அவர் தம்முடைய அமைச்சரவையின் ஆலோசனைப்படி நடக்க வேண்டியது அவருடைய கடமையாகும். மாறாக, ஆளுநர் தம்முடைய அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்ட பிறகு தம்முடைய தனிப்பட்ட முடிவின்படி செயல்படலாமா ? வேறுவகையில் சொன்னால், இவ்வாறு செயல்படுவதற்கு அரசியலமைப்பில் அவருக்கு என்ன அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது ?

6.3. (i) முதலமைச்சருக்கு சட்டப் பேரவையில் பெரும்பான்மை இல்லையென ஆளுநர் ஒருவர் மன நிறைவடைந்தால், (a) அமைச்சரவையைக் கலைக்க வேண்டுமா அல்லது (b) குறைந்த பட்ச கால அளவிற்குள் பேரவையில் முதலமைச்சருக்குள்ள பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென அவரை (முதலமைச்சரைக்) கோர வேண்டுமா ?

(ii) நியாயமான கால அளவிற்குள் பேரவையில் தம்முடைய பெரும்பான்மையை நிரூபிக்க முதலமைச்சருக்கு விருப்பமில்லையெனில், ஆளுநர், (a) அமைச்சரவையைக் கலைக்க வேண்டுமா அல்லது (b) அமைச்சரவையின் பெரும்பான்மையைத் தெரிந்துகொள்ளும் ஒரே நோக்கத்திற்காக, சட்டப் பேரவையைக் கூட்ட வேண்டுமா அல்லது (c) குடியரசுத் தலைவர் ஆட்சி பொண்டுவரப்படலாமென மத்திய அரசுக்கு ஆலோசனை கூறலாமா ?

(iii) மேலே (ii) பகுதியில் உள்ளதைப் போன்றதொரு சூழ்நிலையில் ஆளுநர் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரவையைக் கூட்டலாமென 174 (1) பிரிவின்கீழ் வெளிப்படையாக வகை செய்யப்பட வேண்டுமா ?

6.4. முதலமைச்சரோ அமைச்சர் ஒருவரோ தேச விரோத செயல்களில் ஈடுபட்டிருப்பதாக அல்லது ஊக்கமளிப்பதாக அல்லது ஊழல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிய வந்தால், ஆளுநர் அவ்வமைச்சரவையைக் கலைத்து விட்டு, நிலையானதொரு அமைச்சரவையை அமைக்கக் கூடிய மற்றொரு தலைவரைத் தெரிந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடுவது அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதா ? மாற்று ஏற்பாடாக, குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட வேண்டுமென ஆளுநர் பரிந்துரை செய்ய வேண்டுமா ?

6.5. ஆளுநர்கள் சிலருடைய நடவடிக்கைகள் காரணமாகத் தோன்றியுள்ள கருத்து வேறுபாடுகள் காரணமாக ஆளுநர்களுக்கு நெறிமுறை உத்தரவுகள் எவற்றையேனும் குடியரசுத் தலைவர் பிறப்பிக்க வேண்டுமா ? ஆமெனில், இதன் காரணமாக அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுமா?

பதில்

6.1/6.2 :—ஏற்கெனவே கூறியுள்ளதுபோல எவ்விடத்திலும் ஆளுநர் தம்முடைய விருப்ப உரிமையைச் செலுத்தக்கூடாது

பல்கலைக் கழக வேந்தருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரைகூட, அமைச்சரவையின் ஆலோசனைக்கு இணங்கித் தான் அவர் தம்முடைய அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்ற வகையில் அரசியலமைப்புச் சட்டம் குறிப்பாகத் திருத்தப்பட வேண்டும்.

6.3./6.4 :—இவ்வினாவிற்கு, பகுதி III-ன்கீழ் '' ஆளுநர்ப்பணி '' என்ற தலைப்பின்கீழ் பதிலளிக்கப்பட்டுள்ளது. இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ள 164 (1-A) பிரிவு இவ்வினாவிற்குப் பதிலாக அமைந்துள்ளது. முதலமைச்சர் ஒருவர் தேச விரோத அல்லது ஊழல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளாரா அல்லது ஊக்குவிக்கின்றாரா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஆளுநரிடம் இருக்கக்

கூடாது. முதலமைச்சர்தான் உண்மையான நிர்வாகி, அவர்தான் மக்களின் பிரதிநிதி. 356ஆம் பிரிவே விட்டுவிடப்பட வேண்டும் என்று இவ்வரசு கருத்து கொண்டுள்ளதால் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்படும் பிரச்சினைக்கே இடமில்லை.

6.5. ஆளுநருக்குக் குடியரசுத் தலைவர் நெறிமுறை உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமில்லாத ஒன்றாகும். அதனால், இதற்கென அரசிலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் ஆளுநர் செயல்பட வேண்டும்.

சட்டம்-ஒழுங்கு :

7.1. ஒரு மாநிலத்தில் பொது அமைதியின்மை ஏற்பட்டு (உள்நாட்டு கலவரம் சாராதவை), மாநிலக் காவல் துறையால் அதனை அடக்க இயலாது போனால், மத்திய அரசு மாநிலக் காவல் துறைக்கு உதவுவதற்காக அல்லது சட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்புகளுக்கு உதவுவதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தின் 355ஆம் பிரிவின்கீழ் அல்லது பட்டியல் 1-ஐக் சேர்ந்த 2A பதிவின்படி அரசியலமைப்புச் சட்டத்தின் 73ஆம் பிரிவின்கீழ் அதற்குரிய நிருவாக அதிகாரத்தைச் செலுத்த, மத்திய அரசு, தாமாகவே அதன் இராணுவத்தை அனுப்ப அதிகாரம் பெற்றதாகும் இல்லையா ?

7.2. உள் நாட்டுக் கலவரத்திலிருந்து மாநில அரசைப் பாதுகாப்பதற்காக ஒரு மாநிலத்திற்கு மத்திய அரசு அதன் இராணுவத்தை அனுப்பும் நிருவாக அதிகாரத்தைப் பெற்றுள்ளது என்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 355ஆம் பிரிவின்கீழ் வரும் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ? மாறாக பட்டியல் 1-ஐக் சேர்ந்த 2-A பதிவில் வரும் "சிவில் அதிகாரத்திற்குத் துணையாக ஒரு மாநிலத்திற்கு மத்திய அரசு இராணுவத்தை அனுப்பிவைத்தல்" என்ற தொடருக்கு மாநில அரசு கேட்டுக் கொள்வதின் பேரில் மட்டுமே மத்திய அரசு அதன் இராணுவத்தை அனுப்பிவைக்க முடியும் என்பது தான் பொருளாகுமா ?

7.3. 355ஆம் பிரிவின்படி மத்திய அரசுக்கு விதிக்கப்பட்ட கடமை, அதன் நிருவாக அதிகாரத்தின் ஒரு பகுதியாகக் கொள்வதானால், மாநிலத்தில் நிலவும் பொது அமைதியையும் பாதுகாப்பையும் பற்றி மாநில அரசு தகவல் அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசு கேட்க முடியுமா ? அவ்வாறு மாநில அரசு செய்யத் தவறினால், அது, மத்திய அரசின் நிருவாக அதிகாரம் செயற்படுத்துவதை தடுப்பதாகாதா ? மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் 257 (1) பிரிவின் கீழ் பொருத்தமான கட்டளைகளைப் பிறப்பிக்க மத்திய அரசுக்கு நியாயம் உள்ளது ஆகாதா ?

7.4. "வெளி நாட்டுப் படையெடுப்பும்", "உள்நாட்டுக் கலவரம்" என்ற சொல் ஒரு புறமும் "உள்நாட்டுக் கலவரம்", அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு மாநில அரசும் செயல்படுகின்றன என்பதை உறுதிப் படுத்தும்," "மற்றும்" என்ற சொல் மற்றொரு புறமும் வருவதை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒன்றாகச் சேர்த்தோ தனித்தனியாகவோ படிக்கலாம் என்று அரசியல் நிர்ணய சபையில் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் விளக்கமளித்தார், "வெளி நாட்டுப் படையெடுப்பு" அல்லது "உள்நாட்டு கலவரம்" ஏற்படுவதற்கான சந்தர்ப்ப சூழல்கள் ஏற்படலாம் என்பதை இது குறிப்பிடுகிறது. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப, மாநில அரசு செயல்பட முடியாத சூழ்நிலை சம்பந்தபட்டதாக அல்லது சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய நிலையை உண்டாக்குவதாகக் கருத முடியாது. அவ்வாறு "உள் நாட்டு கலவரம்" ஏற்படும் போது அரசியலமைப்புச் சட்டத்தின் 356 (1) ஆம் பிரிவைப் பயன்படுத்த முடியாது என்பது பொருளாகும். அதுவே சரியானதாக இருந்தால், அரசியலமைப்புச் சட்டத்தின் 355 ஆம் பிரிவின் கீழ், மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள கடமையைச் செய்வதற்கு, அந்த அரசுக்கு இயலும் பொருட்டு, அரசிலமைப்புச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கத்தக்க மாற்று நடவடிக்கைகள் அல்லது மாற்று வழிகள் யாவை ?

7.5. மாறாக, அரசியலமைப்புச் சட்டத்தின் 352 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதை நியாயப்படுத்துவதற்கு, இந்தியாவின் அல்லது அதன் ஒரு பகுதியின் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில்" மிக நெருக்கடியான சூழ்நிலை ஏற்படக் கூடிய அளவில் தன்மையில் வெளி நாட்டுப் படையெடுப்புக்கான ஒரு சூழ்நிலை முக்கியமான ஒன்றாக இராது. வெளி நாட்டுப்படையெடுப்பு ஏற்படும் சூழ்நிலையில், அரசியலமைப்புச் சட்டத்தின் 355 ஆம் பிரிவில் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், என்னென்ன மாற்று வழிகள் உள்ளன ?

பதில்

7.1/7.2 :—மாநிலத்தில், உள்நாட்டுக்கலவரம் ஏற்படும் போது, சம்பந்தப்பட்ட மாநில அரசு கேட்டுக் கொண்டால் மட்டுமே, அம்மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பவேண்டும், பட்டியல் 1-ஐச் சேர்ந்த 2ஏ பதிவை நீக்கிவிட வேண்டும் என்று இந்த அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

7.3. மாநிலத்திற்குள் பொது அமைதி, பாதுகாப்பு குறித்த சூழ்நிலையைப் பொறுத்த மட்டில், தகவல்களைக் கேட்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால் அறிக்கையைக் கொடுக்கத் தவறியதாலேயே மத்திய அரசின் நிருவாக அதிகாரம் செயற்படுவது தடைப்பட்டதாகப் பொருள் கொள்ளக்கூடாது. இம்மாநில அரசு, அரசியமலைப்புச் சட்டத்தின் 257 ஆம் பிரிவை நீக்கிவிட வேண்டும் என்று ஏற்கெனவே கருத்துத் தெரிவித்துள்ளது.

7.4.–7.5. மாநிலத்திற்குள்ளே உள்நாட்டு கலவரம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட முதலமைச்சரிடமிருந்து தேவையான தகவலைப் பெறுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு, இது குறித்து முதலமைச்சர் தெரிவிக்கும் கருத்தை மத்திய அரசு ஏற்று அதன்படி செயற்படலாம். ஆனால், எந்த ஒரு சூழ்நிலையிலும், மாநிலத்தில் உள்நாட்டுக் கலவரம் இருப்பதால் அல்லது வெளிநாட்டுப்படை யெடுப்பு நிகழ்வதால் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவரக் கூடாது,

அரசியலமைப்புச் சட்டத்தின் 356ஆம் பிரிவை நீக்கிவிட வேண்டும் என்பது இந்த அரசின் உறுதியான கருத்தாகும். டாக்டர் அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் இப்பிரிவு குறித்து குறிப்பிடுகையில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார் :—

"இது குறித்து பொதுவாக விவாதம் நடைபெற்றுள்ளது. இந்த விவாதத்தில் இந்த பிரிவுகள் அனைத்தும் தவறாகப் பயன்படுத்தக் கூடும் என்று சொல்லப்பட்டுள்ளதால், அரசியல் காரணங்களுக்காக அவை தவறாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை நான் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்த மறுப்புரை அரசியலமைப்பின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருந்தும். இது மாநில அரசுகளை மீறிச் செயற்படும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்குகிறது. உண்மையில், இத்தகைய பிரிவுகளை நடைமுறையில் செயல்படுத்தக் கூடாது என்றும் அவை ஏட்டளவிலேயே இருந்து வரும் என்றும் மதிப்பிற்குரிய நண்பர் குப்தே கூறிய கருத்துக்களுக்கு நான் உடன்படுகிறேன். அவ்வாறு அத்தகைய, பிரிவுகளை நடைமுறையில் செயலுக்குக் கொண்டு வந்தால், போதிய அதிகாரங்களைக் கொண்ட குடியரசுத் தலைவர், மாநில நிருவாகத்தை தாற்காலிகமாக நிறுத்தி வைக்கும் முன், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். அரசியலமைப்பில் சொல்லிய வண்ணமும், கருத்துக்கு இணங்கவும் அலுவல்கள் நடைபெறாத வகையில் ஒரு மாநிலம் தவறிழைதத்து என்று தெரிய வந்தால், அந்த மாநிலத்திற்கு முதற்கண் அவர் செய்யக் கூடிய பணி உரிய எச்சரிக்கை விடுப்பதேயாகும். அந்த எச்சரிக்கையும் உரிய பயனை அளிக்கவில்லையென்றால் அந்த மாநிலத்தைச் சேர்ந்த மக்களே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில், தேர்தல்கள் வைத்துச் கொள்ள ஆணை பிறப்பிக்கலாம். இவ்விரு பரிகாரங்களும் உரிய பயனைத் தரவில்லையென்றால் மட்டுமே, இந்தப் பிரிவை அவர் கடைசியாகப் பயன்படுத்தலாம். இச் சூழலில் மட்டுமே இப்பிரிவை பயன்படுத்தலாம்." (C.A.D. தொகுதி : IX பக்கம் 176–177)

ஆனால், குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இதுவரையில் நடைபெற்றுள்ள அனைத்து நிகழ்ச்சிகளும், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தம் உரையில் சொல்லிய அல்லது கருதிய கருத்துக்களுக்கு நேர்முரணாகவே அமைந்துள்ளன. 356ஆம் பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி அமைப்பு முறைக்கு ஒவ்வாததாக இருப்பதால், அப்பிரிவை நீக்கிவிட வேண்டுமென இவ்வரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது. இவ்வரசின் இக்கருத்து, பாகம் IV-ன் கீழ் "நிருவாக உறவுகள்" என்ற தலைப்பின்கீழ் விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவரின் ஆட்சி

8.1. 356 (1)ஆம் பிரிவில் வரக்கூடிய "அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கிணங்க மாநில அரசு தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது" என்ற தொடர் பரந்த நோக்கிலும், குறுகிய நோக்கிலும் பொருள் விளக்கம் அளிக்கக் கூடிய வகையில் உள்ளது. இதனைப் பரந்த நோக்கில் பார்க்கும்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் யாதொரு விதித்துறையும் மீறப்படும் ஒவ்வொரு இனத்தையும் அத்தகைய மீறலின் ஆயவுத் தன்மை அல்லது மீறப்படுகின்ற அரசியலமைப்புச் சட்ட விதித் துறையின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளலாமல் அத்தகைய மீறல்கள் யாவும் அரசியலமைப்பு முறைமையை செயலிழக்கச் செய்வதாகவே உள்ளதாகக் கருதலாம். குறுகிய நோக்கில் பார்க்கும்போது, அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு மாநிலத்தில் உள்ள அரசியலமைப்புச் சட்டப்படியான நிருவாக அமைப்பு அல்லது அரசியலமைப்புச் சட்ட் முறைப்படியான அரசு உண்மையில் செயலிழந்து விட்டது அல்லது நிலைகுலைந்து விட்டது என்று மட்டுமே பொருள்படும் பாசுவின் "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சுருக்கம்" என்ற நூலில், அதன் ஆசிரியர் பல்வேறு உள்ளார்ந்த கருத்துக்களை ஒருங்கிணைத்துக் கூறியுள்ளார். அவற்றுள் இந்த சொற்றொடருக்கு மேலே தெரிவிக்கப்பட்ட குறுகிய நோக்கிலான பொருள் விளக்கம் கொடுக்கப்பட் வேண்டுமென்ற முடிவிற்கு வருகின்ற வகையில் அரசியல் நிர்ணய சபை விவாதங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் பிரிவின் ஓரத் தலைப்பு

களும் அடங்கும். '' தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாத என்ற தொடர் இயன்ற வகையிலான அனைத்து மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டு ஆனால் அவை தோல்வியுற்றன என்ற பொருளைக் கொடுப்பதாக கருதுகிறீர்காளா? 'cannot be carried on' என்ற சொற்கள், இந்த அதிகாரத்தைக் கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதையும் சூழ்நிலை இவ்வாறு இருக்கும்போது, ஏனைய மாற்று ஏற்பாடுகளைப் பின்பற்றி, அரசியலமைப்புச் சட்டத்தின் வழியிலிருந்து விலகிச் செல்வதை சரி செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது என்பதையும் குறிக்கின்றன. '' அரசியலமைப்புச் சட்டத் தின் விதித் துறைகளுக்கேட்ப என்ற தொடரில் விதித்துறைகள் '' என்று பன்மையில் குறிப்பிட்டுள்ளதையும் ஒரக் குறிப்பு அளிக்கப் பட்டிருப்பதையும் பார்க்கும்போது, இது மாநிலத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி அமைந்த பொறுப்பான அரசு அதன் கடமையை யாற்றத் தவறியது என்ற பொருளைத் தருகின்ற வகையில் கொடுக்கப்பட்டுள்ளது என்ற முடிவைத் தான் வலுப்படுத்துகிறே தவிர ஏனைய மாற்று நடவடிக்கையை மேற்கொண்டு சரி செய்யக் கூடிய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏகதேச மீறல்களைக் உணர்த்துவதாக இல்லை. இந்த பொருள் விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறீர்காளா?

(ஆ) மேலும், 356 (1) ஆம் பிரிவிலுள்ள இத் தொடர் அரசியலமைப்புச் சட்டப்படி அமைந்த ஆட்சி முறை செயலிழக்க அல்லது நிலை குலைந்து போகக் கூடிய ஒரு சூழ்நிலையைக் குறிப்பிடுகிறதா ?

8.2. 356 (1) ஆம் பிரிவின் செயல் வரம்பு எந்த அளவிற்குள்ளது. 355ஆம் பிரிவினால் எந்த அளவுக்கு கட்டுப்படுத்தப்படுகிறது.

பதில்

356 ஆம் பிரிவையே நீங்கிவிட வேண்டுமென இவ்வரசு கருத்து தெரிவித்திருப்பதால், இவ்வினா குறித்து பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.

மாநிலங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு.

9.1. 263 ஆம் பிரிவின்கீழ் பன்-மாநிலக் குழுவை அமைக்கப்படுவது இனி மேலும் தள்ளிப் போடக் கூடாது என்று கருதுகிறீர்களா ? அதன் அமைப்பு முறையும், அலுவல்களும் எவ்வாறு இருக்க வேண்டும்?

9.2. ஆளுநரை நியமித்தல்/அகற்றுதல், 356ஆம் பிரிவின்கீழ் ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சியை அதிகார முறையில் அறிவித்தல், 349 ஆம் பிரிவின்கீழ் சட்டங்களை இயற்றுதல், 1 பட்டியலில் உள்ள அந்த பதிவு களின்கீழ் (அதாவது II அல்லது III ஆம் பட்டியலில் உள்ள பதிவுகளோடு மோதுகிற வகையில் உள்ள பதிவுகள்) சட்டங்கள் இயற்று தல், குடியரசுத் தலைவரின் இசைவுக்காக அனுப்பப்படும் மாநில சட்ட முன்வடிவுகள். எல்லைத் தகராறுகள் முதலிய விவகாரங்கள் குறித்தும் பன்மாநில குழுவுடன் முன்னதாகவே கலந்தாலோசிக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா ?

9.3. கூட்டாக மாநிலங்களின் நலன்களை பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கங்களை எய்து வதில் மண்டலக் குழுக்கள் சிறப்பான முறையில் செயல்படாததற்கான காரணங்கள் யாவை ?

9.4. (அ) தேசிய வளர்ச்சிக் குழு (ஆ) மண்டலக் குழுக்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பன்மாநிலக் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் ?

பதில்

பன்மாநிலக் குழு தொடர்பாகப் பாகம் IV-ன் கீழ் '' நிருவாக —உறவுகள் '' என்ற தலைப்பில் இவ்வரசு அளித்துள்ள கருத்துக்களைக் காண்க.

மண்டலக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட அவைகள் ஊக்குவிக்கப்படலாம்.

மத்திய அரசு உத்தரவுகளுக்கு இணங்கி நடக்கத் தவறுதல்.

10. மாநிலங்கள் இணங்கி பின்பற்றவில்லை யென்கிற மத்திய அரசின் நிருவாக உத்தரவுகள் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்க மத்திய அரசுக்குவெளிப்படையாக நிருவாக அதிகாரத்தை அளித்துள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளின் அதாவது அவசர நிலை பிறப்பிக்கப்பட்டு செயலில் இருக்கும்போது 358, 360 (3) ஆம் பிரிவுகள் அல்லது அத்தகைய அவசர நிலை செயலில் இல்லாதபோது 256, 257, 339 (2) ஆம் பிரிவுகள் ஆகியவற்றின் செயல் வரம்பிற்குள் வந்தால்தான், மாநில அரசு, அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கு இணங்கி நடக்கவில்லையென்று குடியரசுத் தலைவர் 365 ஆம் பிரிவின்கீழ் சட்டப்படி தீர்மானிக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக பின்பற்றப்படாத அல்லது புறக்கணிக்கப்பட்ட உத்தரவுகள், அரசியலமைப்புச் சட்டத்தின் ஏனைய விதித் துறைகளின்கீழ் அதாவது 347, (344 (6), 350A ஆம் பிரிவுகளின்கீழ்) இவை, அந்த விதித்துறைகளில் குறிப்பிட்டுள்ள உத்தரவுகளைப் பிறப்பிக்க மத்திய அரசுக்கு நிருவாக அதிகாரத்தை அளிக்கவில்லை) பிறப்பிக்கப்பட்டிருந்தால், அத்தகைய இனங்களில் 365ஆம் பிரிவை பயன் படுத்த முடியாது. ஏனெனில், அத்தகைய விதித் துறைகளின்கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைப் பின்பற்றி நடக்காததால், ஒரு மாநிலத்தில்

அரசியலமைப்புச் சட்டப்படியான அரசமைப்பு நிலையான வகையிலோ அல்லது கட்டுக் கோப்பான முறையிலோ இல்லாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதில்லை.

இக் கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா ?

பதில் :

மத்திய அரசு தவறாகப் பயன்படுத்தக் கூடிய பிரிவு 356ஆம் பிரிவாகும். இந்த 356ஆம் பிரிவை நீக்கிவிட வேண்டும் என்று இவ்வரசு கருத்துத் தெரிவிக்கிறது. எனவே இவ் வினா குறித்து கருத்தேதும் தெரிவிக்க வேண்டியதில்லை.

துணை வினாப்பட்டி எண். 6: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249ஆம் பிரிவு தொடர்பான வினாக்கள்.

பின்னணி.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249ஆம் பிரிவுக்கு நிகராக மத்திய அரசின் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் விதித்துறை ஏதுமில்லை. அத்தகைய விதித்துறை ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களிலும் இல்லை.

எனினும், இவ்வரைவை தயாரித்த இந்திய அரசியலமைப்புச் சட்ட ஆலோசகர் திரு. பி. என். இராய் 226 ஆம் வரைவுப் பிரிவுக்கு (தற்போது 249ஆம் பிரிவு) ஆதரவாக ஆன்டேரியா அட்டார்னி ஜெனரலுக்கும், கனடா டெம்பரன்ஸ் : பெடரேஷனுக்குமிடையே (1946 AC 193) நடைபெற்ற வழக்கில் பிரிவு கவுன்சில் அளித்த தீர்ப்பிலிருந்து பின்வரும் பகுதிகளை மேற்கோள் காட்டியுள்ளார். "இது தொடர்பான சரியான உரைகல், சட்டமியற்றப்படுவதன் பொருளை நன்கு ஆராய்ந்து பார்ப்பதேயாகும். ஒரு வகையில் பார்த்தால் மாகாண சட்ட மன்றங்களுக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ள பொருள் களைப்பற்றி குறிப்பிடுவதாக இருந்தாலும் மற்றொரு மாநிலம் கலந்து மாகாணத்தின் ஆட்சி வரம்பிற்கு அப்பாற்பட்டு மத்திய ஆட்சியின் வரம்பிற்குள் வரும்தன்மையுடையதாகயிருந்தால், கனடா நாட்டில் அமைதி, ஒழுங்கு, நல்ல அரசு ஆகியவற்றை நிலை நிறுத்துவது தொடர்பானதாகுமென்ற வகையில் டொமினீயன் பார்லிமெண்டின் சட்ட வரம்பிற்குள் வருவதாகும்."

எனினும், தீர்ப்பு முழுவதையும் பரிசீலனை செய்தால், இத்தீர்ப்பு 1877ஆம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்க சட்டத்தின் 91, 92 ஆகிய பிரிவுகள் மூலமாக திட்டவட்டமான விதி எதையும் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகும். மாகாண அல்லது உள்ளாட்சி தொடர்பான சட்டம் ஒன்றை இயற்றுவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று டொமினியன் பார்லிமென்ட் கருதினால் அது தொடர்பாக சட்டமியற்றுவதற்கு அது தகுதி வாய்ந்ததாகும். அவ்வழக்கில், பிரிவு கவுன்சில் " கனடா நாட்டில் அமைதி, ஒழுங்கு நல்ல அரசு நிலவுவதற்காக" சட்டமியற்ற டொமினீயன் பார்லிமென்டின் அதிகாரங்கள் எவை என்பதுபற்றி வரையறுத்தது. ரூசெல்லுக்கும் அரசிக்குமிடையே முன்பு நடைபெற்ற ஒரு வழக்கில் (1882) (7. Ac 829) 1878 ஆம் ஆண்டு கனடா டெம்பரன்ஸ் சட்டம் கனடா நாட்டில் அமைதி, ஒழுங்கு, நல்ல அரசு நிலைபெறுவது தொடர்பானதாலும், இது 1867ஆம் ஆண்டு சட்டத்தின் 92ஆம் பிரிவின் மூலம் மாகாணங்களுக்கு மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்ட பொருள்கள் தொடர்பானது அல்ல என்பதாலும், 1867ஆம் ஆண்டு பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டத்தின் 91ஆம் பிரிவின்கீழ் டொமீனியன் பார்லிமென்டின் சட்டமியற்றும் அதிகாரத்திற்குள் உள்ளது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அடிக்கோடிட்டவை தான் மிக முக்கியமானவையாகும். 1946ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாளன்று தீர்ப்பளிக்கப்பட்ட ஆண்டேரியா அட்டார்னி ஜெனரல் வழக்கில், முன்பு ரூசெல் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு சரியென்று தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்படி, 1878ஆம்ஆண்டு கனடா டெம்பரன்ஸ் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்ட 1927 ஆம் ஆண்டு கனடா டெம்பரன்ஸ் சட்டத்தின் 1, 2, 3 பகுதிகள், டொமீனியன் சட்டங்களுக்குச் சமமாகச் செல்திறன் உடையனவாகும் என்று முடிவு செய்யப்பட்டது.

வரைவு பிரிவு 226க்கு (தற்போதைய 249ஆம் பிரிவுக்கு நிகரானதாகும்) வடிவம் கொடுக்கப்படுகையில், இதனை சட்டப் பேரவையிலும் சட்டப் பேரவைக்கு வெளியிலும் கடுமையாக விமர்ச்சித்தனர். மாகாண சுயாட்சிக்கு இது மரண அடி என்று இந்துஸ்தான் டைம்ஸ் தலையங்கத்தில் எழுதியது. இது, திருத்தம் பற்றிய நடைமுறையையே தவறான வழியில் செலுத்தும் என்றும், எனவே வரைவிலிருந்து இது நீக்கப்படவேண்டுமென்றும் பல சட்டப் பேராசிரியர்கள் கருத்துத் தெரிவித்தனர். பின்னர் சட்டப் பேரவை உறுப்பினர்களும் இதே கருத்தையே தெரிவித்தனர். இவ்விதித்துறை நீக்கப்படவேண்டுமென்று ஜெயப்பிரகாஷ நாராயணனும் விரும்பினார். பம்பாய், கிழக்கு பஞ்சாப் சட்டமன்றங்களும் 1948ஆம் ஆண்டில் இவ்வரைவின் தகுதிகளைக் கருதிப்பார்த்த போது, இது மாகாண உரிமைகளை மீறிநடப்பதாகும் என்று கருதியதால் இதனை நீக்கிவிட ஆதரவு தெரிவித்தன. சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலர் இக்கருத்தையே தெரிவித்தனர். இப்பிரிவை நீக்கி திருத்தம் செய்ய வேண்டும் என இருபதுபேர் கருத்துத் தெவித்தனர். இத்

திருத்தத்திற்கு கே. சந்தானம், எம். ஏ. அய்யங்கார், திருமதி துர்காபாய், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஆச்சாரியா ஜுகல் கிஷோர், மற்றும் ஐந்து முஸ்லீம்கள் ஆகியோரும் ஆதரவு தெரிவித்தனர்.

இப்பிரிவு தனிக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இக்குழு 11–4–1948ஆம் அன்று நடைபெற்ற கூட்டத்தில் இப்பொருள் பற்றி மீண்டும் பரிசிலித்து பின்வருமாறு பரிந்துரைத்தது :—

" (i) தேசிய நலனை முன்னிட்டு மாநிலப் பட்டியலில் கண்டுள்ள பொருள் தொடர்பாக சட்டமியற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரமளிக்கும் தீர்மானத்தை " சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் முன்னரே கலந்தாலோசிக்காமல் " மாநிலங்கள் அவை நிறைவேற்றக் கூடாது ".

" (ii) இந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ள கால அளவு திட்டவட்டமாக தீர்மானத்தில் குறிப்பிடவேண்டும். இக்கால அளவு மூன்றாண்டுகளுக்கு மேற்படக்கூடாது."

"(iii) புதிதாக தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஒரே சமயத்தில் மூன்றாண்டுகளுக்குமேல் கால நீட்டிப்பு அளிக்க இயலும் ".

தனிக்குழுவின் செயற்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி வரைவு பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இந்திய அரசியலமைப்புச் சட்ட ஆலோசகர் முதல் வரைவு பிரிவு சரியென்று மீண்டும் கருத்துத் தெரிவித்தார்.

18–10–1948 அன்று வரைவுக் குழு மீண்டும் வரைவுப் பிரிவை பரிசீலித்து, மாநிலங்களுடன் முன்னரே கலந்தாலோசிக்க வேண்டும் என்று தனிக்குழு கருத்துத் தெரிவித்த அளவுக்கு விதித்துறையைத் தளர்த்த வேண்டிய அவசியமில்லை என்று கருத்துத் தெரிவித்தது. எனவே, இந்நிபந்தனையை நீக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டு, அதன்படி வரைப் பிரிவு திருத்தப்பட்டது.

இப்பிரிவை 13–6–1949 அன்று அரசியல் நிர்ணய சபை பேரவை கருதிப் பார்த்தது. சட்டத்தின் ஆய்வு வரம்பு ஒரு சமயத்தில் ஓராண்டுக்கு மேற்படக்கூடாது என்று டாக்டர் அம்பேத்கார் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

அதன்பின்னரும்கூட படாஸ்கர், அழகேசன், வி. எஸ். சர்வாதே உட்பட பெருபான்மையான உறுப்பினர்கள் இப்பிரிவு மாகாண சுயாட்சியை கேலிக்கூத்தாக்கியது என்று கண்டனம் தெரிவித்து இதனை நீக்குமாறு வேண்டினர். திரு. பி. எம். குப்தா (இவர் பின்னர் இந்தியாவின் அட்டார்னி ஜெனரலாக ஆனார்) பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இப்பிரிவைச் சேர்ப்பதை எதிர்த்தார் :

(i) நாடாளுமன்றத்தின் ஓர் அவை இதனைச் செய்ய இயலாது ;

(ii) மாநிலச் சட்டமன்றமும் இத்தீர்மானத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

(iii) இத்தகைய அதிகாரங்கள் தேவையானவை அல்லது வேண்டியவை என்று உத்தரவாதமளிப்பதற்கு ஏதுமில்லை ;

(iv) நெருக்கடியில்லாத காலங்களில் மத்திய அரசு மாநிலத்தின் அதிகாரங்களில் தலையிடக்கூடாது.

எனினும், இப்பகுதி பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தற்போதுள்ள வடிவில் 249ஆம் பிரிவாகச் சேர்க்கப்பட்டது.

249ஆம் பிரிவு சில சமயங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. மாநிலங்கள் அவை இது தொடர்பான தீர்மானம் ஒன்றை 12—8—1950 அன்று நிறைவேற்றி நாடாளுமன்றம் கள்ள வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பட்டியல் II–ன் 26, 27ஆம் பதிவுகள் தொடர்பாக ஓராண்டு கால அளவுக்கு ஏற்றுக் கொண்டது. பின்னர் இந்த அதிகாரம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டது. மேற்சொன்ன தீர்மானத்தினால் நாடாளுமன்றம் (1) 17—1—1950ஆம் ஆண்டு பொருள்கள் விலைச் சட்டம், (2) 1950ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள் வழங்கல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்டம் ஆகியவற்றை இயற்ற முடிந்தது. பின்னர் (3) 1951ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தில் வெளியேற்றப்பட்டவர்கள் (நலன்) சட்டத்தை நாடாளுமன்றம் இயற்ற இயலும் வகையில் மாநிலங்கள் அவை 249ஆம் பிரிவின்கீழ் மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியது. பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 1954ஆம் ஆண்டு (மூன்றாம் திருத்தச்) சட்டத்தின் மூலம் (b) சமையலுக்குப் பயன்படத் தக்க எண்ணெய் விதைகள், எண்ணெய் உட்பட உணவுப் பொருள்கள் (c) புண்ணாக்கு உட்பட கால்நடைத் தீவனம் (d) அழுத்தப்பட்ட அல்லது அழுத்தப்படாத கச்சா, பருத்தி, பருத்தி விதை (e) கச்சா சணல் ஆகியவை பட்டியல் III–இல் 33ஆம் பதிவுடன் சேர்க்கப்பட்டன. இதற்குப் பட்டியல் II–ன் 26, 27 பதிவுகள் உட்பட்டவையாகும்.

1951க்கு பின்னர், 249ஆம் பிரிவின்கீழ் நாடாளுமன்றம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் எழவில்லை. இவ்வாறாக கடந்த 34 ஆண்டுகளாக இப்பிரிவு தேவையற்று உள்ளது.

சில மாநில அரசுகளும் அரசியல் கட்சிகளும் இப்பிரிவை நீக்கி விடுமாறு வலியுறுத்தி வந்துள்ளன. இராஜமன்னார் குழுவின் பரிந்துரையிலும் (1971) இது குறித்து வலியுறுத்தப் பட்டுள்ளது. ஏனைய மாநிலங்களும் இப்பிரிவை தவறாகப் பயன்படுத்தாதிருக்கும் வகையில் பாதுகாப்புகள் வழங்க அதற்குத் திருத்தம் கொண்டு வரலாம் என்று ஏனையோர் கருத்து தெரிவித்துள்ளனர். மற்றவர்கள் இப்பிரிவு தொடர்ந்திருக்க எதிர்ப்பு எதுவும் தெரிவிக்க வில்லை.

விமர்சனத்திற்கான காரணங்கள்.

பின்வரும் காரணங்களினால் 249ஆம் பிரிவு கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டதாகும்.

(1) ஒரு தீர்மானத்திற்கு ஆதரவாக வந்திருந்த உறுப்பினர்களில் பெரும்பகுதியினராக 2/3 பேரைக் கொண்டு மாநிலங்களவை நிறைவேற்றிய அத்தீர்மானத்திற்கு 22 மாநிலங்களைச் சேர்ந்த 2/3 பகுதியினர் ஆதரவு தெரிவித்து வாக்களித்ததாகக் கருத முடியாது ஏனெனில் மாநிலங்களவையில் அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஏழு மாநிலங்களே அதாவது, உத்திரப்பிரதேசம் (34), பீகார் (32) மகாராஷ்டிரம் (19), ஆந்திரப் பிரதேசம் (18), தமிழ்நாடு (18), மத்திய பிரதேசம் (16), மேற்கு வங்காளம் (16) மற்றும் நியமன தொகுதிகள் (12) உட்பட (எஞ்சியுள்ள 15 மாநிலங்களின் உறுப்பினர்களில் எதிர்த்து வாக்களித்தபோதிலும்) 2/3 பகுதியினரைக் கொண்டு வாக்களிக்க முடியும். இவ்வாறாக 246ஆம் பிரிவிலும், VII—வது விவர அட்டவணையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைப் பிரித்து கொடுப்பதை இது கேலி கூத்தாக்குவது மட்டுமின்றி, 368ஆம் பிரிவின் மூலம் பயன் படுத்தப்பட்டு வந்த இயல்பான திருத்த நடைமுறைகளையும் தவறான வழியில் இட்டுச் செல்வதுடன் நடைமுறைகளையும் சுருக்கி விடுகிறது.

(2) தேசிய அளவில் தற்காலிகமான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லாமல், அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் ஒன்று கொண்டு வருவதன் மூலம், இது தொடர்பாக மாநிலங்களுக்கென்றே உள்ள உரிமைகளை எடுத்துக் கொள்வதற்கான ஒரு ஏற்பாடாகவே இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது, 1950-53-ல் மேற்சொன்ன மூன்று சட்டங்களை இயற்றும்போது இப்பிரிவு பயன்படுத்தப்பட்ட அனுபவம் காட்டுகிறது.

(3) மாநிலப் பட்டியலில் உள்ள ஒருபொருள் முழுவதுமாக குறித்து பரிசீலிப்பதற்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட அம்சம் பற்றி மட்டும் தீர்மானம் வரையிறுக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எதிர் பார்த்தவாறு மேற்படி இனங்களில் மாநிலங்களவை இப்பிரின்கீழ் நிறைவேற்றிய தீர்மானங்கள் எவையும் அமைய வில்லை. (காண்க—பி. சிவாராவ்—இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தயாரித்தல்—தொகுதி IV பக்கம் 261).

(4) கடந்த 31 ஆண்டுகளாக எந்தவொரு இனத்திலும் 249ஆம் பிரிவு பயன்படுத்தப் படாமல் உள்ளது. குறிப்பாக 252ஆம் பிரிவில் ஒரு மாற்று ஏற்பாட்டின் மூலம் இந்த நோக்கம் எய்த முடியும் என்றிருக்கையில் மீண்டும், மீண்டும் இதுபற்றி குறிப்பிடுவது பயனில்லை.

கருத்துக்கள்.

249ஆம் பிரிவை நீக்கிவிட விரும்பாத சிலரின் கருத்து வருமாறு :—

(1) இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் மாநிலப் பட்டியலிலுள்ள ஒரு குறிப்பிட்ட கூறு அல்லது இனம் தொடர்பான பதிவு பற்றி குறிப்பிட வேண்டும் என்ற வகையில் இப்பிரிவு அவ்வாறு திருத்தப்பட வேண்டும், அப்போதுதான் நாடாளுமன்றம், அந்தப் பதிவில் அடங்கும். ஒரு தற்காலிக கால அளவிற்குகூட இப்பிரிவின் கீழ் தீர்மானம் ஒன்று நிறைவேற்றுவதன் மூலம் அந்த பொருள் முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியாது.

(2) 22 மாநிலங்களின் முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள மாநிலங்களுக் கிடையிலான அவையின் முன் ஆலோசனைப் பெறாமல் மாநிலங்களவையில் 249ஆம் பிரிவின் கீழ் தீர்மானம் எதுவும் கொண்டு வரக்கூடாது.

(3) மேலே இனம் (2) தவிர, மாநில அரசுகள் மற்றும் மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றில் குறைந்தது பாதி அளவு எண்ணிக்கையுள்ள மாநில அரசுகள், மாநிலச் சட்டமன்றங்களின் முன் இசைவுப் பெறப்பட வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும்.

(4) தற்போதுள்ள விதித்துறையை பாதிக்காத அளவில் தெரிவிக்கப்படும் கருத்து யாதெனில், 249ஆம் பிரிவில் உள்ள "வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "மாநிலங்களின் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கும் குறையாத மாநிலங்களின் பிரதிநிதிகளாக உள்ள (வந்திருந்து வாக்களிக்கும்) உறுப்பினர்கள்" என்ற சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வினா.

இக்குறிப்பில் மேலே சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்/கருத்துரைகள் ஆலோசனைகள் தொடர்பாக உங்களுடைய கருத்து யாது ?

பதில்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249ஆம் பிரிவு தொடாபான வினாவை பொறுத்தவரையில், '' II பகுதி சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள்'' என்பதில் தெரிவிக்கப் பட்டுள்ள காரணங்ககளுக்காக இப்பிரிவு அறவே விட்டுவிடப்படவேண்டும் என்று இந்த அரசு ஏற்கேனவே கருத்து தெரிவித்துள்ளது. எனவே இந்த வினா பற்றிய பிரச்சினை எதுவும் எழவில்லை.

துணை வினா எண் 7 இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் 252ஆம் பிரிவு தொடர்பான வினாக்கள்.

பின்னணி.

இப்பிரிவு, 1935ஆம் ஆண்டு மத்திய சட்டத்தின் 103ஆம் பிரிவுக்கு நிகரானதாகும். கூட்டாட்சி சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தைத் திருத்த அல்லது ரத்து செய்ய 103ஆம் பிரிவு மாகாண சட்டமன்றங் களுக்கு அதிகாரம் அளித்திருக்கையில், 252ஆம் பிரிவின் (2) பகுதி, மாநிலச் சட்ட மன்றங்களின் இந்த அதிகாரத்தை நீக்கிவிடுகிறது. அத்துடன் அதே நடைமுறையைப் பின்பற்றி 252 பிரிவின் (1) பகுதியின்கீழ் நிறைவேற்றப் பட்ட சட்டம் திருத்தப்பட அல்லது ரத்து செய்யப் பட வகை செய்கிறது. இவ்வாறாக இப்பிரிவின் (1) பகுதியின்கீழ் நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்தை யாதொரு மாநிலச் சட்ட மன்றம் திருத்தம் செய்வதை அல்லது ரத்து செய்வதை (2) பகுதி தடை செய்கிறது.

அரசியல் நிர்ணய சபையில் (2) பகுதி கடுமை யாக குறை கூறி விமர்சிக்கப்பட்டது. இப்பகுதி சட்டமாக்கப்பட்ட பின்னரும்கூட, இது குறித்து அறிஞர்களாலும் அரசியல் கட்சிகளாலும் ஏனை யோர்களாலும் தொடர்ந்து குறை கூறப்பட்டது. அரசியல் நிர்ணய சபைக் கூட்ட விவாதத்தின் போது, (2) பகுதி செயலற்றதாகி விடும் என்றும் எந்த மாநிலமும் விடுபடமுடியாத வகையில் சுருக் குக் கயிற்றில் மாட்டிக் கொள்ள விழையாது என் பதே அதற்குக் காரணம் என்றும் திரு. கே. சந்தா னம் ஒரு கருத்தைத் தெரிவித்தார். நிலைமை இவ்வாறிருக்க, நாடாளு மன்றத்திற்கு அதிகாரத் தைக் கொடுத்து விடலாம். ஆனால், சட்டம் ஒரு முறை நிறைவேற்றப்பட்டு விட்டால் ஒரு பொருள் குறித்து மாநில அரசுக்கு அதிகாரம் இருந்த போதி லும், மாநில அரசு அந்த அதிகாரத்தை பெரும் பாலும் இழந்து விடுகிறது. இது மனநிறைவு அளிப் பதாக இல்லை. ஏனைய விமர்சகர்களைப்போன்றே சீர்வையும் பின்வருமாறு கருத்துத் தெரிவித் 'துள்ளார். மாநில்ச் சட்டமன்றத்தின் அதிகாரம் நிரந்தரமாக பறிக்கப்பட்டு விட்டால் அரசிய லமைப்புப் பிரிவு தனது பயன்பாட்டினை இடிந்து விடும் என்ற நிலையில் இந்திய அரசின் (1935ஆம் ஆண்டு சட்டத்தின் 103ஆம் பிரிவின் மூலக் கருத்தி லிருந்து) இவ்வாறு 'பிறழ்வதற்கான காரணம் அறிந்து கொள்ள இயலாததாகும் ''.

அதற்கு மாறாக, கே. சந்தானம் தீர்க்க தரிசன மாகத் தெரிவித்த அச்ச உணர்வுகள் உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளன. ஏனெனில் 252ஆம் பிரி வின் (1) பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறை யின்படி மத்திய சட்டமன்றம் கூட ஒரு முறை நிறைவேற்றப்பட்ட சட்டத்தை திருத்தவோ அல்லது மாற்றியமைப்பதோ மிகுந்த சிரமமாகும். உத்தேச திருத்தம் குறித்த தங்களது இசைவினை/ கருத்தினை சம்பந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றங் கள் வெளிப்படையாகத்தெரிவிக்காதகாரணத்தால் அல்லது முரண்பாடான நிபந்தனைகளை விதிப் பதால் (1) பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இதனை '' சம்மதமாக '' எடுத்துக் கொள்ள இயலாததால் இந்த இடர்ப்பாடு எழுந்துள்ளது. வேளாண்மை நிலங்களுக்கு 1953ஆம் ஆண்டு எஸ் டேட் தீர்வைச் சட்டத்தை பயன்படுத்தும் வகை யில் இச் சட்டத்தை திருத்தும்போது இதே இடர்ப் பாடு எழுந்தது. எனவே, 1976ஆம் ஆண்டு நகர்ப் புற உச்சவரம்புச் சட்டம் குறித்தும் இதே நிலை உள்ளது. 252ஆம் பிரிவின் விதித் துறைகளைச் செயல்படச் செய்ய பின்வரும் தீர்வுகள் தெரிவிக்கப்பட்டன.

கருத்துரைகள்.

1. சட்டமுன் வடிவைத் தயாரித்து, இப்பிரி வின் (1) பகுதியின் கீழ் மாநிலச் சட்டமன்றங்களின் தீர்மானங்கள் / கருத்துக்களை கேட்பதற்கு முன் னர் மாநிலங்களுக்கிடையேயான மன்றத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

2. (2) பகுதியினை நீக்கிவிட்டு (1) பகுதி யின் கீழ் நிறை வேற்றப்பட்ட சட்டத்தை திருத்த அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரத்தை இந் திய அரசின் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் மீண்டும் வழங்க வேண்டும். ஆனால், பின்குறித்த வாறுள்ள வரம்பு நிபந்தனை ஒன்றுக்கு அது உட் படுத்தப்பட வேண்டும்.

ஆனால், '' மாநிலச் சட்டமன்றம் இவ்வாறு சட்டத்தை திருத்தினால் அல்லது ரத்து செய்தால், குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அவற்றை அனுப்பி அவரது ஒப்புதலைப் பெறும் வரையில் இவ்வாறு சட்டத்தை திருத்தியதற்கு அல்லது ரத்து செய்ததற்கு செயல் வடிவம் கொடுக்கக் கூடாது''.

3. II பட்டியலில் உள்ள ஒரு பொருள் தொடர் பாக 252 (1) பிரிவின் கீழ் இனசைவைப் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டதும்நாடாளுமன்றத்தினல் நிறைவேற்றப்பட்டதுமான எந்த ஒரு சட்டமும் முடிவற்ற கால அளவிற்கு செயலிலிருக்கக் கூடாது. ஆனால், ஒரு குறித்த கால அளவிற்கே, அதாவது மூன்றுண்டு காலத்திற்கும், மூல கால அளவினை விட மிகையாகாத கால அளவிற்கு தேவையேற் படின் அவ்வப்போது மறு ஆய்வு, மறு திருத்தங்

களுக்கு உட்பட்டு 252ஆம் பிரிவின் (1) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அதே நடைமுறைக்கு உட்பட்டு செயலில் இருக்கும்.

வினா :

இக் குறிப்பில் மேற் குறிப்பிட்டுள்ள தொகுக்கப்பட்டுள்ள குறிப்புரைகளின் கருத்துக்கள்/ஆலோசனைகள் குறித்து உள்ள கருத்து யாது ?

பதில் :

252ஆம் பிரிவைப் பொருத்த மட்டில் இப்பிரிவானது நீக்கப் பட வேண்டுமென்ற கருத்தினை இந்த அரசு கொண்டுள்ளது. மாற்று ஏற்பாடாக, இதற்கான அதிகாரத்தை, தனிப்பட்ட ஒன்றாக இல்லாது, மத்திய மாநில அரசு ஒன்றுக் கொன்று பரஸ்பரமாக செயல்படுத்தும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். II பகுதி "சட்டம் இயற்றுவது சம்பந்தப்பட்ட தொடர்புகள்" என்ற தலைப்பின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை காண்க.

துணை வினாப்பட்டி எண் 8:— இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான பல்வகை வினாக்கள் :

1. ஏனைய "கூட்டமைப்புகளில்" காணப்படாத பல்வேறு ஒருமித்த தன்மைகள் இருந்தபோதிலும் நமது அரசியலமைப்புச் சட்டத்தினை "கூட்டாட்சி" என்று அழைக்க இயலுமா?

2. நமது நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்தவும் அடிப்படையானவை என்று நீங்கள் கருதுகின்ற அரசியலமைப்புச் சட்ட விதித் துறைகள்/சிறப்புத் தன்மைகள் யாவை ?

3. (i) வெளிப்படையாக அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 256, 257, 339 (2), 354, 355, 356, 357, 365ஆம் பிரிவுகளின் உட்கிடக்கை மூலமாக மத்திய, மாநில அரசுகளுக்கு ஏற்பட்டுள்ள கடப்பாடுகள் நமது நாட்டின் சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு நியாயமானவையா, தேவையானவையா ?

(ii) இந்த விதித் துறைகள் எளிதில் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்குரியனவா ? ஆமெனில் இதனைத் தவறாகப் பயன்படுத்துவதைக் குறைக்க அரசியலமைப்பு வகையில் அல்லது பிற வகையில் நீங்கள் தெரிவிக்க விழையும் பாதுகாப்பு முறைகள் யாவை ?

4. கடந்த பல ஆண்டுகளாக பட்டியல் 1-ல் உள்ள சில பிரிவுகளின் கீழ் "தேசிய நலன்" அல்லது "பொது நலன்" என்று அறிவித்து, அதன் போர்வையில், மத்திய நாடாளுமன்றம், ஏழாவது விவர அட்டவணையின் II பட்டியலில் உள்ள இது தொடர்பான பதிவுகளின் சாராம்சத்தைப் பாதித்து, முறையற்ற வகையில், மாநில அரசின் சட்டம் இயற்றும் அதிகாரத்தில் குறுக்கீட்டைச் செய்துள்ளதென்று குறை கூறப்பட்டுள்ளது. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ? ஆமெனில், இவ்வாறு குறுக்கீடுகள் ஏற்பட்டதற்கான சில சான்றுகளை நீங்கள் குறிப்பிட இயலுமா? இத்தகைய அறிவிப்புகள் நிரந்தரத் தன்மை வாய்ந்தனவாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது குறித்த காலத்திற்கு ஒரு முறை மறு ஆய்வுக்குட்பட்டு குறிப்பிட்ட காலத்திற்கான தன்மை வாய்ந்தவையாக இருக்கவேண்டுமென விரும்புகிறீர்களா ?

5. (i) 263ஆம் பிரிவின் கீழ் மாநிலங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு என்ற தலைப்பின் கீழ் மாநிலங்களுக்கிடையேயான மன்றம் ஒன்றை பின்வரும் நோக்கங்களுக்காக நியமிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

(அ) மாநிலங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளில் விசாரணை செய்து ஆலோசனை வழங்குதல் அல்லது,

(ஆ) மாநிலங்களுக்கிடையே பொதுவான அக்கறை நிலவும் பொருள் குறித்து ஆய்வு செய்து விவாதித்தல் அல்லது,

(இ) ஒரு குறித்த பொருள் குறித்து பரிந்துரைகள் செய்தல், குறிப்பாக அது குறித்த கொள்கைகளை நன்முறையில் தொகுத்தல், நடவடிக்கை எடுத்தல்.

மேலும் அதன் கடமைகள், அமைப்பு நடைமுறைகள் குறித்து வரையறுக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான மன்றத்தை அமைத்தல், அதன் அமைப்பு முறை, அதன் பங்கு, அதிகாரம் குறித்த உங்களது கருத்துரை யாது ?

(ii) மாநிலங்களுக்கிடையே அல்லது மாநிலங்களுக்கும் மத்திய அரசுகளுக்குமிடையே எழும் பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்து ஆலோசனை வழங்கும் அளவிற்கு 263ஆம் பிரிவின் விதித்துறைகள் பரந்துள்ளதா ? வேறு விதமாகக் கூறினால் 263ஆம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கிடையேயான மன்றம், 131ஆம் பிரிவின் படி உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வேறு வகையில் வருகிற பிரச்சினைகளை விசாரித்து ஆலோசனை வழங்க தகுதியுடையதா ? இச்சூழ்நிலையில், 131ஆம் பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரங்கள் கருத்திற் கொள்ளப்பட்டால், பன்மாநிலக் குழுவின் அலுவல்களும், உச்ச நீதிமன்றத்தின் அலுவல்களும் ஒரே மாதிரியாக இருப்பதுடன் ஒன்றுக்கொன்று முரண்படும் நிலை ஏற்படாதா ?

6. கேசவ நந்தா பாரதி வழக்கில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை/அமைப்பை மாற்றியமைப்பதற்காக அல்லது மாற்றுவதற்காக 368ஆம் பிரிவின் கீழ் நாடாளுமன்றம் திருத்த அதிகாரத்தைச் செலுத்துவதற்குத் தகுதியானதல்ல என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத்தகைய அம்சங்களைக் கண்டறிவதற்கு என்ன முறை உள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? பின் வருபவற்றை அத்தகைய அம்சங்களாக நீங்கள் வகைப்படுத்துவீர்களா?

(1) இந் நாட்டின் ஒற்றுமையும், நேர்மையும்.

(2) தனி உரிமை மக்களாட்சி குடியரசு அமைப்பு.

(3) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டரசு அமைப்புத் தன்மை அல்லது ஓரளவு கூட்டரசு அமைப்புத் தன்மை.

(4) நீதித்துறை ஆய்வு.

(5) சட்டம்.

(6) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒப்புயர்வற்ற தன்மை.

(7) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தோற்றுவாயில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள்.

(8) மதச்சார்பின்மை.

(9) தனி மனிதரின் சுதந்திரம், மதிப்பும்.

(10) வளங்கெழு அரசை உருவாக்குவதற்கான சமூகப் பொருளாதாரக் கோட்பாடு.

(11) பாரபட்சமற்ற, நியாயமான தேர்தல் நடத்தவேண்டும் என்ற கோட்பாடு.

(12) அதிகாரங்களைப் பிரித்தளிக்கும் கோட்பாடு.

(13) அரசின் நாடாளுமன்ற முறை.

7. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையின் கீழும், ஏனைய விதித்துறைகளின் கீழும் சட்ட அதிகாரங்களைப் பிரித்தளிப்பதில் என்ன மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென்று நீங்கள் கருத்துத் தெரிவிக்கிறீர்கள்?

8. பொதுவாக மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பிணக்கு ஏற்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திட்டவட்டமான விதித்துறையை அல்லது அச்சட்டத்தைச் செயல்படுத்துவதிலுள்ள குறைபாடுகளை உங்களால் சுட்டிக் காட்ட இயலுமா? அத்தகைய பிணக்குகள் ஏதேனுமிருப்பின் அவற்றைக் குறைப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு நீங்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறீர்கள்?

9. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 370-ஆம் பிரிவு குறித்து தங்களுடைய கருத்து என்ன?

10. விற்பனை வரி ஒழிக்கப்படவேண்டுமென்றும், அதற்குப் பதிலாக மாநிலங்களுடன் கலந்தாலோசித்து மத்திய அரசு கூடுதல் ஆயத்தீர்வை விதித்து அவற்றை மாநில அரசுகளே வசூலிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்ட கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

பதில்:

(1) நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் கூட்டரசு அமைப்பும்முழுமையான அதிகாரங்களும் கொண்ட ஒன்றாகும் என்று உச்சநீதிமன்றம் சத்பாலுக்கும், பஞ்சாப் மாநிலத்துக்குமிடையே நடைபெற்ற வழக்கில் (1982 I SCC 12) தீர்ப்பளித்துள்ளது. மாநிலத்தில் வேறு ஒரு கட்சி ஆட்சியிலிருந்தால் மத்தியில் உள்ள ஆளும் கட்சி மாநில ஆளும் கட்சி ஆட்சியைக் கவிழ்க்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முழுமையான அதிகாரங்களை மத்திய ஆளும் கட்சி பயன்படுத்துகிறது என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது.

(2) இந்நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது என்ற உறுதியான கருத்தைத் தமிழ்நாடு அரசு கொண்டுள்ளது. அதே நேரத்தில், இந்த அறிக்கையின் முந்தைய பகுதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ், தெரிவிக்கப்பட்ட திருத்தம் மாநில அரசுகள் எந்த மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளனவோ, அந்த மக்களுக்கு அம்மாநில அரசுகள் பணிபுரிய இயலும் வகையில், அதிக அதிகாரங்களை மாநில அரசுகள் பெறுவதற்கு வகை செய்யும்.

(3) இந்த பிரிவுகள் குறித்து பாகம் IV ''நிருவாகத் தொடர்புகள்'' என்னும் தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

(4) ''நாட்டு நலன் அல்லது பொது மக்கள் நலன்'' என்னும் தொடர் தெளிவற்றதாக உள்ளது. மாநிலச் சட்டமன்றங்களுக்கும், மாநில அரசுகளுச்கும் என்றே ஒதுக்கப்பட்டுள்ள சட்டமியற்றுவதற்குரிய அதிகாரத்தையும், நிருவாக அதிகாரத்தையும் ஆக்கிரமிக்க மத்திய அரசும், நாடாளுமன்றமும், இத்தொடரை பயன்படுத்துகின்றன. ஏழாம் விவர அட்டவணையின் பட்டியல் இரண்டில் கொடுக்கப்பட்டுள்ள பதிவுகளில் காணப்படும் அதிகாரத்தை நாடாளுமன்றம் பயன்படுத்துகிறது என்றும், இதன் மூலம் மாநிலச் சட்டமன்றங்களின் சட்டமியற்றுவதற்குரிய அதிகாரத்தை ஆக்கிரமித்து விடுகிறது என்றும் கூறப்படும் கண்டனம் உண்மையானதாகும். இக்கருத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைப்பதற்கு உறுதி செய்யும் வகையிலும், அதே நேரத்தில் மத்திய அரசின் வலிமையைப் பாதிக்காத வகையிலும் அரசியலமைப்புச் சட்டத்தை எவ்வாறு திருத்தியமைக்கலாமென்பது பற்றி, இவ்வறிக்கையின் பல்வேறு பாகங்களில், பல்வேறு தலைப்புகளின்கீழ் விளக்கப்பட்டுள்ளது.

(5) பன்மாநிலக் குழுக்கள் தொடர்பாக, பாகம் IV, 'நிருவாகத் தொடர்புகள்' என்னும் தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுள்ளது.

(6) அரசியலமைப்புச் சட்டத்தின் தனிச் சிறப்பு அடிப்படைக் கூறுகளைப் பொறுத்தமட்டில் பின்வருவனவற்றை தனிச் சிறப்பு அடிப்படைக் கூறுகளாக அங்கீகரிக்கலாம் :—

(1) நாட்டின் ஒற்றுமை. ஒருமைப்பாடு.

(2) தனியுரிமை, மக்களாட்சி, குடியரசு அமைப்பு.

(3) இக்குறிப்பின் முந்தைய பாகத்தில் தெரிவிக்கப்பட்ட மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டரசு அமைப்பு முறை.

(4) அரசியலமைப்புச் சட்டமே தலையானது.

(5) சட்டமன்ற விதிமரபுகளுக்குக் கட்டுப்பட்ட அரசு முறை.

(6) நீதிமன்றத்தால் ஆய்வு செய்யப்படுவதற்கு உரிய தன்மை.

(7) 7-ஆம் விவர அட்டவணையின் கீழ் சட்டமியற்றுவதற்குரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக பாகம்-II 'சட்டமன்றத் தொடர்புகள்' என்னும் தலைப்பின்கீழ், ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுப் பட்டியல், பொதுப் பட்டியல் ஆகியவற்றை எவ்வாறு திருத்தியமைப்பது என்பது குறித்து இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

(8) மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் குறைக்க அல்லது மட்டுப்படுத்த இந்த அரசு பல்வேறு திருத்தங்கள் குறித்து பல்வேறு தலைப்புகளின்கீழ் கருத்துத் தெரிவித்துள்ளது. அவற்றைக் காணலாம்.

(9) 370-ஆம் பிரிவு நீக்கப்படலாம் என்று இவ்வரசு கருதுகிறது.

(10) விற்பனை வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகக் கூடுதல் ஆயத் தீர்வையை மத்திய அரசு மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, விதித்து அந்தக் கூடுதல் ஆயத்தீர்வை தொகையை அம்மாநில அரசுகளே வசூலிக்கலாமா என்பது குறித்து இவ்வரசு உறுதியாகத்தெரிவிக்கும் கருத்து யாதெனில் விற்பனை வரியை நீக்கக் கூடாது என்பதேயாகும். விற்பனை வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகக் கூடுதல் ஆயத் தீர்வையைமத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து விதித்து, அந்த வரித்தொகையை மாநில அரசுகளே வசூலிக்கலாம் என்ற கருத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்கவில்லை, விற்பனை வரி என்பது, மாநிலச்சட்ட மன்றத்தால் இயற்றப்படும் சட்டத்திற்குட்பட்டதாகவே இருக்க வேண்டும். விற்பனை வரியானது, மாநில அரசால் விதிக்கப்பட்டு, மாநில அரசால் வசூலிக்கப்பட வேண்டும்.